பிராணரக்ஷாமிர்தசிந்து என்னும்.

வைத்தியரத்ன சங்கிரஹம்.

மு. பரமசிவம், இ.ஆ.ப.,
ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
ஆணையர்.

தமிழ்நாடு
ஆவணக்காப்பகம்
எழும்பூர்,
சென்னை-600 008.

க.எண். 9195 / ஆறு / 94 நாள் 31.10.94

---

## அனுமதிக்கடிதம்

பொருள்: தமிழ்நாடு ஆவணக்காப்பகம் நூலகம் - "பிராணரக்ஷாமிர்தசிந்து என்னும் வைத்திய ரத்ன சங்கிரகம்" என்னும் நூல் மறுபதிப்பு செய்தல் - அனுமதி வழங்கப்படுகிறது.

பழைய அரிய தமிழ்நூல்களைக் காப்பாற்றி மக்கள் படிக்க வகை செய்யும் வண்ணம், அரிய தமிழ் நூல்கள் மறுபதிப்புத் திட்டம் ஒன்றினை தமிழக அரசு கல்வித்துறை அரசாணை (நிலை) எண். 372 (கல்வி) நாள் 20.4.92ல் வெளியிட்டுள்ளது. அத்திட்டத்தின்படி "பிராண ரக்ஷாமிர்த சிந்து என்னும் வைத்திய ரத்ன சங்கிரகம் (முதல் இரண்டு பாகங்கள் அடங்கியது)" என்னும் நூலை மறுபதிப்பு செய்வதற்காகத் தாங்கள் செய்து கொண்ட மனு ஏற்றுக் கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

ஆணையர்.

பெறுநர்:
லோட்டஸ் பப்ளிஷிங் ஹௌஸ்,
7, என்.ஜி.ஓ. காலனி,
வடபழனி,
சென்னை-26.

# மறுபதிப்பின் முன்னுரை

ஒரு நூற்றாண்டுக்கு முன் வெளியிடப்பட்ட இந்த நூலுக்குப் பிறகு வேறு எத்தனையோ மருத்துவ நூல்கள் வெளிவந்திருக்கலாம். ஆனால் ஒன்றுக்கொன்று மருத்துவச் சரக்குகள் குறைந்தும், செய்முறைகளில் காட்டவேண்டிய அக்கரை, ஈடுபாடு குறைபட்டும் நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டே போனதின் விளைவே சித்த வைத்தியத்தின் பெருமை குன்றியதற்குக் காரணம் எனலாம்.

இந்த நூலை எழுதிய மகான் மிக அருமையாக இதை எழுதித் தயாரித்திருக்கிறார். அவசியமான இடங்களில் எல்லாம் அட்டவணைகளைச் சேர்த்துக் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகம் போல் இதைத் தயாரித்திருக்கும் முறை இந்த மாமேதையின் திறமையை மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறது.

வைத்தியர்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புபவர்கள் ஒவ்வொருவரும் இந்த நூலை நன்கு பயின்று விஷயங்களை மனதில் நிறுத்திக் கொள்வதும், அவ்வப்போது கையேடு போல் திருப்பிப் பார்த்து தங்கள் கவனத்தைச் சரிப்படுத்திக் கொள்வதும் மிகவும் ;ல்லது.

வைத்திய உலகிற்கு ஒரு வழி காட்டி போல் விளக்கக் கூடிய இந்த நூலை வெளியிடுவதில் லோட்டஸ் பப்ளிஷிங் ஹௌஸ் பெருமையடைகிறது. இந்த அரிய செல்வத்தைக் கட்டிக் காப்பாற்றி வைத்திருந்த தமிழக அரசின் ஆவணக் காப்பகத்திற்கும் அதை வெளியிட அனுமதி வழங்கிய ஆணையர் மு. பரமசிவம், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எஸ். பி. ராமச்சந்திரன்,
பதிப்பாசிரியர்.

உ

கடவுள் துணை

# பிராணரக்ஷாமிர்தசிந்து

என்னும்

## வைத்தியரத்ன சங்கிரகம்.

# PRANA RATSHA MIRTHA SINDHU

## MEDICAL TREATISE

தஞ்சாவூர்

டி.எ. இராமபண்டிதர் புத்திரராகிய

ஆயுள்வேதபாஸ்கர

டி.ஆர். மகாதேவ பண்டிதர் அவர்களால்

அநேக சமஸ்கிருத, தமிழ், இங்கிலீஷ், யுனானி வைத்திய கிரந்தங்களைப் பார்வையிட்டு அதிசிலாக்கியமான அனேகவித அவுஷதங்களை சர்வ ஜ்ன உபகாரமாக சொல்லிய இந்நூல் இயற்றப்பட்டது.

TANJORE

தஞ்சை "பூர்ணச்சந்திரோதயம் அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பட்டது.

1895.

*(Registered Copy Right)*

விலை: ரூ. 2-8-0.

# முகவுரை

# PREFACE

இவ்வுலகத்தில் அனுபவிக்கக்கூடிய நன்மைகள் யாவற்றிலும் சரீர சுகமே முதன்மை ஆதலால் மனிதர்களுக்குக்காணும் ரோகங்களுக்கு சிகிச்சை செய்வதில் அவரவர்களின் வாத பித்த சிலோஷ்ம தேகங்களுக்கு அல்லது ரோகங்களுக்கு இங்கிலீஷ், யுனானி அல்லது கர்நாடக அவுஷதங்கள் குணத்தை தருவதால் மேற்படி தேகங்களின் அல்லது ரோகங்களின் லக்ஷணங்களை அறிந்து இம்மூன்றுவித அவுஷதங்களில் எது தகுதியானதோ அதைக்கொடுத்து ரோகங்களை நிவர்த்தி செய்வதற்காகவும், இத்தேசத்தில் இதுவரையிலும் மேற்படி மூன்றுவித அவுஷதங்களைச் சொல்லிய வைத்திய புஸ்தகம் இல்லாக்குறைவை நிவர்த்திசெய்யவேணுமென்ற கருத்தினாலும் இந்தக் காரியத்தில் பிரவேசித்தோம். இம் மூன்றுவித அவுஷதங்களைச் சொல்லிய இப் புஸ்தகம் சாதாரண ஜனங்களுக்கும், வைத்தியர்களுக்கும் அதி உபயோகமாகும் பொருட்டு அநேக சம்ஸ்கிருத, தமிழ், இங்கிலீஷ், யுனானி வைத்திய கிரந்தங்களைக் கொண்டு :

(1) வாத பித்த சிலேஷ்ம ஸ்தானங்கள்.
(2) வாத பித்த சிலேஷ்மங்களின் சுபாவ விருத்தி, க்ஷீணகுணங்கள்
(3) வாத பித்த சிலேஷ்மக் குறிகள்
(4) ரோகங்களை நிச்சயிக்க அஷ்டவித பரீக்ஷைகள்.
(5) நாடியைப் பரீக்ஷிக்கவேண்டிய ஸ்தானங்கள்
(6) நாடி நடையின் காரணங்கள் பிரமாரணங்கள்
(7) நாடியைப் பரீக்ஷிக்கும் விதங்கள்
(8) நாடிகளின் சேர்க்கையால் உண்டாகும் ரோகங்கள்
(9) ஸ்திரி புருஷர்களின் பருவகாலங்கள்
(10) அவுஷதங்களின் அளவு அட்டவணை அளவு பாகங்கள்.
(11) பச்சை தாவரவர்க்கப் பதார்த்தங்கள் குணமாகும் ரோகங்கள்.
(12) அவுஷதங்களை அளக்க அளவுகள், நிறுக்க நிறைகள்.
(13) அவுஷதங்களைச் சாப்பிட நல்ல நாள்கள்.
(14) அவுஷதங்களின் (குணங்களின்படி) பல வகுப்புகள்.
(15) ஆக்ஸிஜென்வாயு, நைட்ரஜன்வாயு, கார்போனிக்வாயு.
(16) ஜலம், குளிர்ந்தஜலம், வெந்நீர், ஆற்றுஜலம், குளத்துஜலம், ஏரிஜலம், கிணற்றுஜலம், ஊற்றுஜலம், பாறைஜலம், சுக்கான்ஜலம், சமுத்திரஜலம் இவைகளின் குணங்கள்.
(17) எரிப்புத்திட்டம், புடத்திட்டம், ஊதுத்திட்டம்.
(18) அவுஷதங்களின் கால நிர்ணயங்கள்.
(19) பத்திய விதங்கள், பத்திய பதார்த்தங்கள்.
(20) தாது, தாவரவர்க்க பதார்த்தங்களின் சுத்திகள்.
(21) பதார்த்தங்களுக்கு சத்துரு பதார்த்தங்கள் (Incompatibles)
(22) அவுஷத பதார்த்தங்களை விஷமிக்கும்படிச் சாப்பிட்டால் அவைகளுக்கு முறிவு அவுஷத பதார்த்தங்கள் (Antidotes)
(23) பச்சை தாவரவர்க்க பதார்த்தங்கள், அவைகளால் குணமாகும் ரோகங்கள்.

(24) இங்கிலீஷ் மருந்து பெயர்களுக்கு தமிழ் பெயர்கள்.
(25) போஜன பதார்த்தங்களால் உண்டாகும் சதை, அனல், கொழுப்பு இவைகள், ஜீரணிக்குங்காலங்கள், இவைகளும்.

## இங்கிலீஷ் அவுஷதங்களாவன

(26) தாவர வர்க்கப்பதார்த்தங்கள் (Vegitable kingdom), இவைகளின் குணங்கள் (Properties), செய்கைகள் (Actions), குணமாக்கும் ரோகங்கள் - உபயோகங்கள் (Uses), அளவுகள் (Doses).
(27) தாதுவர்க்கங்களின் (Metal Proper), உப்புகள், சத்துகள், குணமாகும் ரோகங்கள்.
(28) காரவர்க்கங்களின் (Alkalis), உப்புகள், சத்துகள், குணமாகும் ரோகங்கள்.
(29) மண்ணுவர்க்கங்களின் (Alkaline Earth) உப்புகள், சத்துகள் - குணமாகும் ரோகங்கள்.
(30) கலவை சூர்ணங்கள் (Compound Powders).
(31) வாயைக் கொப்பளிக்க மருந்து சேர்ந்த ஜலம் (Gargles).
(32) நீர்த்தாரை ரணம் குய்யம் இவைகளில் பீச்சாங்குழலாலடிக்க மருந்து சேர்ந்த ஜலம் (Injections).
(33) ஆசனத்திலடிக்க மருந்து சேர்ந்த ஜலம் (Enemata)
(34) மிக்ஸ்சர்கள் (Mixtures) (42) கஷாயங்கள் (Decoctions)
(35) கிலேதங்கள் (Eyelotions) (43) ஒற்றிடங்கள் (Formentations)
(36) லேகியங்கள் (Confections).
(37) மெழுகுகள் (Pill masses) (44) பதவாடைகள் (Poulties)
(38) மாத்திரைகள் (Pills) (45) பாவனத்திரவங்கள் (Tinctures)
(39) பூசத்தயிலங்கள் (Liniments) (46) வெந்நீர்கஷாயங்கள் (Tifusions)
(40) பிளாஸ்திரிகள் (Plasters).
(41) களிம்புகள் (Ointments) (47) ஜெயநீர்கள் (Liquors).
(48) ஷர்பத்துகள் (Syrups) (49) ஸ்பிரிட்கள் (Spirits)
(50) தீநீர்கள் (Distilled waters) (51) தயிலங்கள் (Oils)
(52) தாவரவர்க்க பதார்த்தங்களின் சத்துகள் (Extracts)
(53) திராவகங்கள், இன்னும் அநேகவித அவுஷதங்களும்.

## கர்நாடக, யுனானி அவுஷதங்களாவன

(54) பஸ்மங்கள் (55) செந்தூரங்கள் (56) சூர்ணங்கள்
(57) லேகியங்கள் (58) ரசாயனங்கள் (59) கிருதங்கள்
(60) தயிலங்கள் (61) எண்ணெய்கள் (62) மெழுகுகள்
(63) குழம்புகள் (64) கட்டுகள் (65) மாத்திரைகள்
(66) நஸ்யங்கள் (67) பிளாஸ்திரிகள் (68) ஷர்பத்துகள்
(69) கஷாயங்கள் (70) தூபங்கள் (71) லேபனங்கள்
(72) பேதிமருந்துகள் விரோசனகார்ரி (73) தாதுபுஷ்டிமருந்துகள்
இவைகளும், இன்னும் அநேகவித அவுஷதங்களும்,

(74) பிராந்தி சாராயம் (Brandy). வைன் சாராயம் (Wine), ஆல்கோஹல் சாராயம், ரெக்டிபையிட் ஸ்பிரிட் சாராயம் (Rectified Spirit), புரூவ் ஸ்பிரிட் சாராயம் (Proof Spirit), இவைகளின் விபரங்களும், உபயோகங்களும்.

(75) ஜீவவர்க்க சம்மந்தமான அநேகவித அவுஷதங்களும், வெண் பசும்பால், செம்பசும்பால், கறும்பசும்பால், கபிலைபசும்பால், கறுப்பு மாதர்பால், சிவப்புமாதர் பால், வேசியர்பால், எருமைப்பால், செம்மறியாட்டுப்பால், வெள்ளாட்டுப்பால், குதிரைப்பால், கழுதைப்பால் இவைகளின் குணங்களும், உபயோகங்களும்.

(76) ஆயுள் வேதியர்கள் சிகிச்சை செய்ய ஆரம்பிக்கும் முன் கவனிக்க வேண்டிய சில முக்கியமான விஷயங்களும்,

(77) ஸ்திரீ புருஷர்கள் சரீரசம்பந்தப்படுவதின் நன்மைகளும்,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுரரோகம் | ....64 | அஸ்மரிரோகம். | ...4 | கணரோகம் | ....8 |
| சன்னிரோகம். | ...12 | மேகரோகம். | ....20 | பயித்தியரோகம் | ....6 |
| ரத்தபித்தரோகம். | ....5 | குன்மரோகம் | ....8 | வலி-வலிப்புரோகம் | ....5 |
| வாந்திரோகம் | ....5 | மகோதரரோகம் | ....8 | நேத்திரரோகம் | ....94 |
| தாகரோகம் | ....6 | காமாலைரோகம் | ....13 | தந்தரோகம் | ....31 |
| மூர்ச்சைரோகம் | ....4 | சோகைரோகம் | ....2 | கண்டமாலைரோகம் | ....18 |
| அதிசாரரோகம் | ....6 | சிலேஷ்மரோகம் | ....20 | கிரந்திரோகம் | ....9 |
| பிரமேகரோகம் | ....21 | கிரகணரோகம் | ....11 | பாண்டுரோகம். | ...5 |
| பிரமியரோகம் | ....20 | அஜீர்ணரோகம் | ....6 | குஷ்டரோகம் | ....18 |
| பவுந்திரோகம் | ....15 | கிரிச்சரரோகம் | ....4 | வாதரோகம் | ....80 |
| காசரோகம் | ....5 | மூத்திரரோகம். | ...12 | பித்தரோகம் | ....40 |
| சுவாசரோகம் | ....5 | அண்டரோகம். | ...6 | மலடுரோகம் | ....9 |
| க்ஷயரோகம் | ....5 | சூலைரோகம் | ....18 | மாந்தரோகம் | ....8 |
| மூலரோகம் | ....8 | பிலீகரோகம் | ....4 | அபஸ்மாரரோகம் | ....5 |
| கர்ணரோகம் | ....25 | பீநசரோகம் | ....10 | சிரோரோகம் | ....19 |
| குடல்விருத்திரோகம் | ....7 | ஜிக்வாரோகம் | ....6 | குய்யரோகம் | ....27 |

இவைகளுக்கும், இன்னும் அநேக ரோகங்களுக்கும் அநேகவித அவுஷதங்களையும் ஒன்றாய்த் திரட்டி இந்த ஆயுள் வேதக்கிரந்த வாக்கியார்த்தத்திற்கு பிராண ரக்ஷாமிர்தசிந்து - வைத்தியரத்ன சங்கிரகம் என்னும் பெயரமைந்தது.

இந்நூற்பொருளை யுணர விரும்பும் அறிஞர்கள் யாவரும் இதிலுள்ள குற்றத்தைப்பாராமற் குணத்தையே பாராட்டுவார்களென்று மிகப்பிரார்த்திக்கின்றனன்.

டி.ஆர். மகாதேவபண்டிதர்
கிரந்த கர்த்தா.

# பொருள் அடக்கம்
# CONTENTS

பக்கம்

1-வது அத்தியாயம் - வாத பித்த சிலேஷ்ம ஸ்தானங்கள் - வாத பித்த சிலேஷ்ம குணங்கள் - வாத பித்த சிலேஷ்ம குறிகள் - அஷ்டவித பரிக்ஷைகள் - நாடிபரிக்ஷிக்கும் ஸ்தானங்கள் - நாடி நடக்கும் காரணங்கள் - நாடி பரிக்ஷிக்கும் விதங்கள் - ஒரு மினிட்டுக்கு நாடி நடை பிரமாணம் - நிரோகியாய் இருக்கையில் வாத பித்த சிலேஷ்ம அளவுகள் - நாடிகளின் சேர்க்கையால் உண்டாகும் ரோகம் முதலியவைகள்

2வது அத்தியாயம் - பருவகாலங்களின் வகுப்புகள் - ஸ்திரீ புருஷர்களின் பருவகாலங்கள் - அவுஷதங்களின் அளவு நிர்ணயங்கள் - அவுஷதங்கள் கொடுக்கும் முன் கவனிக்க வேண்டிய 12 விஷயங்கள் - பெரிற துரையின் அளவு அட்டவணை - மருந்துகளின் அளவை பாகித்துக் கொடுக்கும் அட்டவணை - மருந்துகளைச் சாப்பிட நல்ல நாள்கள் ...6

3-வது அத்தியாயம் - நிறைகள் அளவுகள் ...9

4-வது அத்தியாயம் - மருந்துகளின் பல வகுப்புகள் ...10

5-வது அத்தியாயம் - காற்று - நைட்ரஜன் - ஆக்ஸிஜென் கார்போனிக் ஆசிட் ...12

6-வது அத்தியாயம் - குளிர்ந்த ஜலம் - வெந்நீர் - ஆற்றுஜலம் - குளத்து ஜலம் - ஏரிஜலம் - கிணற்றுஜலம் - ஊற்றுஜலம் - பாறைஜலம் - சுக்கான்ஜலம் - சமுத்திரஜலம் இவைகளின் குணங்கள் ...12

7-வது அத்தியாயம் - மருந்துகளின் காலநிர்ணயங்கள் - பத்திய விதிகள் - பத்திய பதார்த்தங்கள் ...14

8-வது அத்தியாயம் - தாது, தாவரவர்க்க பதார்த்தங்களின் சுத்திகள் ...15

9-வது அத்தியாயம் - எரிப்புத்திட்டம் - ஊதுத்திட்டம் - புடத்திட்டம்...19

10-வது அத்தியாயம் - பதார்த்தங்களுக்கு சத்துரு பதார்த்தங்கள் (Incompatibles) ... ... ... ... ... ... ......20

11-வது அத்தியாயம் - பதார்த்தங்களுக்கு முறிவு பதார்த்தங்கள் (Antidotes) ... ... ... ... ... ... ... ...22

12-வது அத்தியாயம் - பச்சைத் தாவரவர்க்க பதார்த்தங்கள் ...25

13-வது அத்தியாயம் - இங்கிலீஷ் மருந்து பெயர்களுக்கு சரியான தமிழ் பெயர்கள் ... ... ... ... ... ... ...39

14-வது அத்தியாயம் - இங்கிலீஷ்-யுனானி-கர்நாடக மருந்துகள் ...39

15-வது அத்தியாயம் - போஜன பதார்த்தங்களாலுண்டாகும் சதை, அனல், கொழுப்பு இவைகளும், ஜீர்ணிக்குங்காலமும் காட்டும் அட்டவணை ...76
16-வது அத்தியாயம் - தாதுவர்க்கங்கள் - காரவர்க்கங்கள் மண்ணுவர்க்கங்கள் முதலியவைகளும், அவைகளின் உப்புகளும் சத்துகளும் ...77
17-வது அத்தியாயம் - கலவைச் சூரணங்கள் ...103
18-வது அத்தியாயம் - ஆண், பெண் சரக்குகள் ...106
19-வது அத்தியாயம் - திராவகங்கள் - ஜெயநீர்கள் - ஈதர்கள் முதலியவைகள் ...107
20-வது அத்தியாயம் - கலவைப்பாவனத் திரவங்கள் (Compound Tinctures) ...116
21-வது அத்தியாயம் - கலவை பூசத்தயிலங்கள் (Compound Liniments) ...118
22-வது அத்தியாயம் - வைன் பாவனத்திரவங்கள் ...119
23-வது அத்தியாயம் - எஸ்ஸென்ஸ்கள் (Essences) ...121
24-வது அத்தியாயம் - தயிலங்கள் (Oils) ...121
25-வது அத்தியாயம் - பாவனத்திரவங்கள் (Tinctures) ...122
26-வது அத்தியாயம் - ஸ்பிரிட்ஸ்கள் (Sprits) ...125
27-வது அத்தியாயம் - தீநீர்கள் (Waters) ...126
28-வது அத்தியாயம் - சாராயங்கள் - வைன்கள் - இவைகளின் உபயோகங்கள் ...127
29-வது அத்தியாயம் - களிம்புகள் (Ointments) ...128
30-வது அத்தியாயம் - சத்துகள் (Extracts) ...130
31-வது அத்தியாயம் - ஜீவவர்க்க சம்மந்தமான பதார்த்தங்கள் ...131
32-வது அத்தியாயம் - ஆயுள் வேதியர்கள் சிகிச்சை செய்ய ஆரம்பிக்கும் முன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் ...135
33-வது அத்தியாயம் - ஸ்திரீ புருஷர்கள் சரீரசம்மந்தப்படுவதால் உண்டாகும் நன்மை முதலியவைகள் ...145
34-வது அத்தியாயம் - நேர்யாளிகளுக்கு கஞ்சிவகைகள் - பலகாரவகைகள் ...148
35-வது அத்தியாயம் - அப்பியங்க ஸ்நானஞ்செய்யும் தயிலங்கள் அப்பியங்க ஸ்நானஞ்செய்யுங் காலம் - சிரசில் தயிலம் ஊறவேண்டிய காலம் - அறைப்பு வகைகள் ...150
36-வது அத்தியாயம் - எண்ணெய்கள் ... ... ... ... ...158
37-வது அத்தியாயம் - சூர்ணங்கள் ... ...165
38-வது அத்தியாயம் - லேகியங்கள் ... ...171
39-வது அத்தியாயம் - கிருதங்கள் ...176

40-வது அத்தியாயம் - பஸ்மங்கள் ... ... ... ... ...179
41-வது அத்தியாயம் - செந்தூரங்கள் ... ... ... ... ...188
42-வது அத்தியாயம் - ஷர்பத்துகள் ... ... ... ... ...197
43-வது அத்தியாயம் - கட்டுகள் ... ... ... ... ... ...198
44-வது அத்தியாயம் - மாத்திரைகள் ... ... ... ... ...201
45-வது அத்தியாயம் - மெழுகுகள் ... ... ... ... ...214
46-வது அத்தியாயம் - குழம்புகள் ... ... ... ... ...217
47-வது அத்தியாயம் - ரசாயனங்கள் ... ... ... ... ...219
48-வது அத்தியாயம் - வடகங்கள் ... ... ... ... ...221
49-வது அத்தியாயம் - பாவனங்கள் ... ... ... ... ...223
50-வது அத்தியாயம் - ஹல்வாக்கள் ... ... ... ... ...225
51-வது அத்தியாயம் - தாதுபுஷ்டி அவுஷதங்கள் ... ... ...226
52-வது அத்தியாயம் - நஸ்யங்கள் ... ... ... ... ...228
53-வது அத்தியாயம் - புகைச்சல்கள் ... ... ... ... ...229
54-வது அத்தியாயம் - விரோஷனகாரிகள் ... ... ... ...230
55-வது அத்தியாயம் - பிளாஸ்திரிகள்... ... ... ... ...235
56-வது அத்தியாயம் - தூபங்கள் ... ... ... ... ...235
57-வது அத்தியாயம் - லேபனங்கள் ... ... ... ... ...237
58-வது அத்தியாயம் - ரோகங்களின் பெயர்கள் - அவைகள் குணமாவதற்கு அவுஷதங்கள் ... ... ... ... ...239

# 22-வது அத்தியாயம்

## வைன்பாவனத் திரவங்கள்

குழந்தைகளுக்கும் நாஜூக ஸ்திரீகளுக்கும் உபயோகமாகிய வைன்பாவனத் திரவங்களின் உபயோகம், செய்முறை, அளவு முதலியவைகள் சொல்லப்படும்.

| வைன் பாவனத்திரவங்கள் செய்யும் பதார்த்தங்களின் பெயர்கள் | பதார்த்தங்களின் அளவு | வைன் சாராயத்தின் அளவு | செய்முறை | வைன்பாவனத் திரவம் ஒரு தடவைக்குக் கொடுக்கும் அளவு | இந்த மருந்துகளால் நிவர்த்தியாகும் ரோகங்களின் பெயர்கள் |
|---|---|---|---|---|---|
| | அவுன்ஸ் | பயிண்ட் | | துளிகள் | |
| காள்சிக்கம் (Colchicum) | 8 | 2 | பதார்த்தங்களை நொறுக்கி வைன் சாராயத்தில் 7 நாள் ஊறவைத்து வடிகட்டிக் கொள்ளவும் | 15-90 | குலைக்கட்டு, கணுவாதம் தீரும் |
| இபிகாகியு ஏனா (Ipecauanha) | 2½ | 2 | | 15-45 | கபத்தை வெளியாக்கும் வியர்வை உண்டாக்கும். |

☞ இவ்விதமாக பதார்த்தங்களின வைன் பாவன திரவங்கள் வேண்டியபோது செய்து கொள்ள

# 23–வது அத்தியாயம

## எஸ்ஸென்ஸ்கள் - Essences

எஸ்ஸென்ஸ்கள் செய்யும் விதங்கள், உபயோகங்கள், அளவுகள் முதலியவைகளை சொல்லப்படும்.

| எஸ்ஸென்ஸ்கள் செய்யும் பதார்த்தங்களின் பெயர்கள் | பதார்த்தங்களின் தயிலம் அளவு | ரெக்டிபயிட் ஸ்பிரிட் சாராயம் அளவு | செய்முறை | எஸ்ஸென்ஸ் ஒரு தடவைக்குக் கொடுக்கும் அளவு | எஸ்ஸென்ஸ்களால் நிவர்த்தியாகும் ரோகங்களின் பெயர்கள் |
|---|---|---|---|---|---|
| | அவுன்ஸ் | அவுன்ஸ் | | துளி | |
| பெப்பர்மென்ட் (Pepperment) | 1 | 9 | பதார்த்தத்தின் தயிலத்தை ரெக்டிபயிட் ஸ்பிரிட் சாராயத்தில் சேர்த்துக் குலுக்கிக் கொள்ளவும். | 20–90 | உஷ்ணம் செய்யும் வாயு தீரும் |
| கெக்விதை (Carraway) | 1 | 9 | | 20–60 | ” |
| சோம்பு (Anise) | 1 | 9 | | 30–40 | வாயு தீரும் |
| சதகுப்பை (Dill) | 1 | 9 | | 20–40 | ” |

☞ இவ்விதமாக பதார்த்தங்களின் எஸ்ஸென்ஸ்கள் வேண்டியபோது செய்து கொள்ளலாம்.

# 24வது அத்தியாயம்

## தயிலங்கள்

### Oils - ஆயில்ஸ்

பதார்த்தங்களிலிருந்து தயிலங்கள் எடுக்கப்படும் விதிகள், உபயோகங்கள், முதலியவைகளைச் சொல்லப்படும்.

| தயிலங்கள் எடுக்கப்படும் பதார்த்தங்களின் பெயர்கள் | தயிலங்கள் எடுக்கப்படும் விதிகள் | தயிலம் சர்க்கரையில் ஒருதடவைக்கு கொடுக்குமளவு துளி | தயிலங்களால் நிவர்த்தியாகும் ரோகங்களின் பெயர்கள் |
|---|---|---|---|
| பெப்பர்மென்ட் (Pepperment) | பூண்டை ஜலத்தில் போட்டு வாலையிலிட்டு தயிலம் இறக்கப்படும். | 2-4 | வாதசூலை, சூலை எரிவுத்தீரும் |
| வாதுமை (Almónd) | பருப்பை செக்கிலிட்டு எடுக்கப்படும். | 0 | மேல்பூச தயிலத்தோடு சேர்க்கப்படும். |
| கருவாப்பட்டை (Cinnamon) | உப்புஜலத்தில் ஊறவைத்து வாலையிலிட்டு எடுக்கப்படும். | 1-3 | வாயுத் தீரும் |
| கிராம்பு (Clove) | வாலையிலிட்டு எடுக்கப்படும். | 2-5 | வாயுத்தீரும் |
| டர்பென்டயின் (Turpentine) | டர்பென்டயினை வாலையிலிட்டு எடுக்கப்படும். | 0 | வாத நோய்க்கு பூசலாம். |
| கொபெயபா (Copaiba) | மரத்திலிருந்து சேகரிக்கப்படும். | 10-30 | வெள்ளை விழுதல் தீரும். |
| நேர்வானம் (Croton) | பருப்பை செக்கிலிட்டு எடுக்கப்படும். | 1-2 | பேதியாகும். |
| லின்ஸிட் (Linseed) | செக்கிலிட்டு எடுக்கப்படும். | | தீப் புண்ணுக்குத் தடவிவரத் தீரும். |
| சாதிக்காய் (Nutmegs) | இதின் தூளை ஜலத்தில் போட்டு வாலையிலிட்டு எடுக்கப்படும். | 1-3 | உச்சாகப்படுத்தும். |

| | | | |
|---|---|---|---|
| அருதா (Rue) | பூவும் காயும் ஜலத்திலிட்டு பட்டிக்கட்டி இறக்கப் படும். | 2–5 | வலி, சூதகக் கட்டுத்தீரும். |
| ஸெவைன் (Savin) | தளிர்களை ஜலத்தில்போ ட்டு வாலையிலிட்டு எடுக்கப் படும். | 2–5 | மூத்திரத்தை விருத்திக்கும், சூ தகத்தை தாரா ளப்படுத்தும். |
| கிச்சிலிப்பூ (Orange Flowers.) | பூவை வாலையிலிட்டு எடு க்கப்படும் | 1–5 | வாதம், வலி (5) தீரும். |
| செக்விதை (Carraway) | விதையை வாலையிலிட்டு எடுக்கப்படும். | 1–10 | வாயு, மந்தம் தீரும். |
| சோம்பு (Anise) | - மேற்படி - | 5–15 | வாயு, வயிற்று வலித்தீரும். |
| பெருஞ்சீரகம் (Fennel) | - மேற்படி - | 1–10 | - மேற்படி - |
| சதகுப்பை (Dill) | - மேற்படி - | 1–5 | - மேற்படி - |

☞ இவ்விதமாய் பதார்த்தங்களின் தயிலங்கள் வேண்டியபோது எடுத்துக்கொள்ளலாம்.

# 25வது அத்தியாயம்

## பாவனத்திரவங்கள்

**Tinetures - டிங்சர்ஸ்**

## இரும்பு பாவனத்திரவம்

**Tincture of Iron - டிங்சர் ஆப் ஐரன்**

*செய்முறை:—* இங்கிலீஷ் புஸ்தகத்தில் பார்வையிடவும்.

*குணம்:—* இது புளிப்பும், துவர்ப்பும் உள்ளது, சிவப்பும் மஞ்சளும் கலந்த நிறமுள்ளது. துவர்ப்பு கற்க வகைகளை சேர்த்தால் கருத்துப் போகும்.

*செய்கை:—* பலகாரி, மூத்திரவரித்தனகாரி, சங்கோஷனகாரி, விரணகாரி

*உபயோகம்:—* இதை ரணத்தின்மேலும், அட்டைக்கடியின் மேலும் தடவரத்தம் நிற்கும். நீர்க்கட்டுக்கு இதை கொஞ்சமாக அடிக்கடிக்கொடுக்க சகுணத்தைத்தரும். சொட்டுமூத்திரம், மதுமூத்திரம் இவைகளும் கருப்பை, மூத்திரப்பை, மூத்திரக்குண்டிகாய் முதலியவைகளிலிருந்து வடிகிற ரத்தத்திற்குங் கொடுக்க இது சிரேஷ்டமான ஔஷதம், அக்கிக்கு மேலே போடலாம்.

*அளவு:— 10 முதல் 30 துளிகொடுக்கலாம்.*

சிலபதார்த்தங்களின் டிஞ்சர்கள் அதாவது பாவனத்திரவங்கள் செய்யும் விதங்கள், அளவுகள் முதலியவைகளை சொல்லப்படும்.

☞ ரோஜனம் (Resin) இனத்தைச் சேர்ந்த பதார்த்தங்கள் ஜலத்தில் கரையாது, சாராயத்தில் கரையும். பிசின் (Gum) இனத்தைச் சேர்ந்த பதார்த்தங்கள் சாராயத்தில் கரையாது, ஜலத்தில் கரையும். ஆகையால் ரோஜனம் அதிகமாயிருக்கிறபதார்த்தங்களை இரட்டித்து வடித்த (Rectified spirit) சாராயத்திலும், ரோஜனம் கொஞ்சமாயிருக்கிற பதார்த்தங்களை புரூப் ஸ்பிரிட் (Proff spirit) சாராயத்திலும் நொறுக்கிப் போட்டு ஏழு நாள் ஊறவைத்து வடிகட்டிக் கொள்ள வேண்டியது. பதார்த்தத்தின் செய்கைகளே டிங்சர்க்கு உண்டு.

| டிங்சர்கள் செய்யும் பதார்த்தங்களின் பெயர்கள் | பதார்த்தங்களின் அளவுகள் | | மேற்சொல்லிய சாராயங்களின் அளவுகள் | டிங்சர்கள் ஒரு தடவைக்கு சாப்பிட வேண்டிய அளவு | | டிங்சர்களால் குணமாகும் ரோகங்களின் பெயர்கள் |
|---|---|---|---|---|---|---|
| | அவு | திராம் | பயின்ட் | திராம் | துளி | |
| அகோனைட் (Aconite) | 15 | 0 | 2 | 0 | 5-7 | பதார்த்தத்தின் செய்கைகள் இதற்கு உண்டு. |
| பெருங்காயம் (Assafoetida) | 5 | 0 | 2 | 1-2 | 0 | மேற்படி குதக ஜன்னி குணமாகும். |
| கலம்பா (calumba) | 3 | 0 | 2 | 1-2 | 0 | பதார்த்தத்தின் செய்கைகளே இதற்கு உண்டு. |
| எரிவண்டு (Cantharides) | ½ | 0 | 2 | 0 | 10-60 | - மேற்படி - |
| காஸ்டொரியம் (Castoreum) | 2½ | 0 | 2 | 1-2 | 0 | - மேற்படி - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சிரெட்டா (Chiretta) | 5 | 0 | 2 | 1-3 | 0 | - மேற்படி - |
| சின்கெரனா (Cinchona) | 8 | 0 | 2 | 1-3 | 0 | - மேற்படி - |
| டிஜிடெலிஸ் (Digitalis) | 4 | 0 | 2 | 0 | 10-40 | - மேற்படி - |
| கடுகுரோகனி (Hellabore) | 5 | ·0 | 20 | 0 | 45-90 | - மேற்படி - |
| குரோசாணி ஓமம் (Hyoscyamus) | 5 | 0 | 2 | ½-2 | 0 | - மேற்படி - |
| ஐயோடைன் (Iodine caustic) | 0 | 5/6 | | | | |
| ஐயோடைட் ஆப் பொடாஸியம் (Iodide of Potassium) | 0 | 1 | 1/20 | 0 | 0 | உள்ளுக்குச் சாப்பிடக்கூடாது. மேலுக்குத் தடவ வீக்கம் கரையும். |
| ஜாலப் (Jalap) | 5 | 0 | 2 | 1-2 | 0 | பதார்த்தத்தின் செய்கைகளே இதற்கு உண்டு. |
| வாளெந்திர பௌளலம் (Mylch) | 3 | 0 | 2 | ½-1 | 0 | - மேற்படி - |
| குவாஷியா (Quassia) | 0 | 10 | 2 | ½-2 | 0 | - மேற்படி - |
| அபினி (Opium) | 3 | 0 | 12 | 0 | 15-45 | மேற்படி எண்ணெயும் இதுவும் சமமாக சேர்த்துக் காதிலிட காதுவலித் தீரும். |
| கரிவெங்காயம் (Squill) | 5 | 0 | 2 | 0 | 10-30 | கபம் நீங்கும் மூத்திரம் விருத்திக்கும். |

இவ்விதமாகவே பதார்த்தங்களின் டிங்சர்கள் வேண்டியபோது சேர்த்துக்கொள்ளலாம்.

# 26-வது அத்தியாயம்.

## ஸ்பிரிட்ஸ்கள்–Spirits.

சில பதார்த்தங்களின் ஸ்பிரிட்ஸ்கள் செய்யும் விதிகளும், நிவர்த்தியாக்கும் ரோகங்களும், கொடுக்கும் அளவுகளும் அடியில் காண்க.

| ஸ்பிரிட்ஸ்கள் செய்யும் பதார்த்தங்களின் பெயர்கள் | பதார்த்தங்களின் தயிலங்கள் (அளவு) திராம் | புருவ் ஸ்பிரிட் சாராயம் (அளவு) பயின்ட்ஸ் | செய்முறை | ஸ்பிரிட் மருந்தை ஒரு தடவைக்குக் கொடுக்கும் அளவு திராம் | ஸ்பிரிட் மருந்துகளால் நிவர்த்தியாகும் ரோகங்களின் பெயர்கள் |
|---|---|---|---|---|---|
| கெக்விதை (Carraway) | 2 | 8 | புருவ் ஸ்பிரிட் சாராயத்தில் பதார்த்தத்தின் தயிலத்தைச் சேர்த்துக் குலுக்கிக் கொள்ளவும் | 1–4 | வாயு தீரும் பசியை உண்டாக்கும் |
| சோம்பு (Anise) | 2 | 8 | | ½–1 | - மேற்படி - |
| பெப்பர்மெண்ட் (Pepperment) | 3 | 8 | | ½–2 | - மேற்படி - |

☞ இவ்விதமாக பதார்த்தங்களின் ஸ்பிரிட்கள் வேண்டியபோது செய்துகொள்ளலாம்.

# 27. வது அத்தியாயம்

## தீநீர்கள்

### Waters - வாட்டர்ஸ்.

சில பதார்த்தங்களின் தீநீர்கள் செய்யும் விதிகளும், நிவர்த்தியாகும் ரோகங்களும் கொடுக்கும் அளவுகளும், அடியில் காண்க.

| வாட்டர்ஸ்கள் அல்லது தீநீர்கள் செய்யும் பதார்த்தங்களின் பெயர்கள் | தீநீர்கள் செய்வதற்கு பதார்த்தங்களின் எஸ்ஸென்ஸ் அளவு அவுன்ஸ் | ஆவிநீர் அளவு பயின்ட் | செய்முறை | தீநீரை ஒருதடவைக்கு கொடுக்கும் அளவு அவுன்ஸ் | தீநீர்களால் நிவர்த்தியாகும் ரோகங்களின் பெயர்கள் |
|---|---|---|---|---|---|
| சோம்பு (Anise) | 1 | 4 | ஆவிநீருடன் | ½-2 | வாயு, அதிசாரம் தீரும். |
| கெக்விதை (Carraway) | 1 | 4 | பதார்த்தத்தின் | 1-4 | வாயு, மந்தம் தீரும் |
| சதகுப்பை (Dill) | 1 | 4 | எஸ்ஸென்ஸை | ½-3 | மந்தம் தீரும் |
| பெப்பர்மெண்ட் (Pepperment) | 1 | 4 | சேர்த்துக் குலுக்கி விடவேண்டியது. | 1-2 | வாதசூலை, குலைஎரிவு தீரும் |
| கர்ப்பூரம் (Camphor) | கர்ப்பூரம் அவுன்ஸ் ¼ | 4 | கர்ப்பூரத்துடன் 40 துளி காரசாராயத்தை விட்டு அரைத்து ஆவிநீரை சேர்த்து வடிகட்டிக் கொள்ளவும். | 2-3 | மருந்துகளோடு சேர்த்து கொடுக்கப்படும். |

☞ இவ்விதமாக பதார்த்தங்களின் தீநீர்கள் வேண்டியபோது செய்துகொள்ளலாம்.

## 28-வது அத்தியாயம்.

சாராயங்களில் பலவிதங்களுண்டு. அவைகளின் பெயர்கள்; குணங்கள் முதலியவைகளை அடியில்சொல்லப்படும்.

### ஆல்கோஹல் - Alcohol.

இந்த சாராயம் சுத்தமாயும், வெள்ளையாயும், வாசனையாயும், காரமாயும், ஜலரூபமாயும் இருக்கும்.

### ரெக்டிபையிட் ஸ்பிரிட் - Rectified Spirit.

இந்த சாராயத்தில் ஆல்கோஹல் 84 பங்கும், ஜலம் 16 பங்கும் இருக்கின்றது. இதனால் தடித்த ரோஜன (குங்கிலியம் -Resin) பதார்த்தங்களை டிங்சர் செய்யப்படும்.

### புரூவ் ஸ்பிரிட் - Proof Spirit

இந்த சாராயத்தில் ஆல்கோஹல் 48 பங்கும், ஜலம் 52 பங்கும் இருக்கின்றது. இதனால் ரோஜனம் (குங்கிலியம்-Resin) கொஞ்சமாய் இருக்கும். பதார்த்தங்களை டிங்சர் செய்யப்படும்.

## பிராந்தி சாராயங்களின் விபரம் (Brandy)

| சாராயங்களின் பெயர்கள் | 100 பங்கு சாராயத்தில் | | சாராயங்களின் செய்கைகள் |
|---|---|---|---|
| | அல் கோஹல் | ஜலம் | |
| ரம் சாராயம் (Rum)<br>விஸ்கி சாராயம் (Whiskey)<br>ஜின் சாராயம் (Gin)<br>சுதேச பிராந்தி (Country Brandy) | 51 முதல் 54 பங்கு | 46 முதல் 49 பங்கு | உஷ்ணம், வியர்வை உண்டாக்கும்<br>மூத்திரத்தை விருத்திக்கும். |

சாராயங்கள் எல்லாம் முதலில் உற்சாகப்படுத்தி பிறகு சோர்வு காணும். கொஞ்சமாய் சாப்பிட்டால் தேகத்துக்கு சவுக்கியம். ஆனால் தொடாமலிருப்பது உத்தமம். பிராந்திக்கு நாடியைத் தீவிரப்படுத்துகிற குணமும், தீபனத்தை உண்டாக்குகிற குணமும் உண்டு. மூர்ச்சை, சுவாசமில்லாமல் பிணம் போல் இருக்குதல் இவைகளுக்கு இருதய ஸ்தானத்தில் பிராந்தியை போட்டுத்தேய்த்தால் குணமாகும். துர்பலருக்கு இதைக்கொடுக்கலாம்.

## ஒயின் சாராயங்களின் விபரம் (Wine)

| ஒயின் சாராயங்களின் பெயர்கள் | அல்கோஹல் அளவு | சாராயங்களின் செய்கைகள் |
|---|---|---|
| போர்ட்வைன்-Port Wine<br>மெடியரா வைன்-Madiara Wine<br>ஷெரெவைன்-Sherry Wine | இம்மூன்றில் அல்கொஹல் அதிகமாய் இருக்கும் | பிராந்தியைப் பார்க்கிலும் வைன் சாராயத்துக்குக் கயப்பு குறைச்சல், வைன் கொடுக்க நாடியைத் தீவிரப்படுத்தி பலத்தை உண்டாக்கும். தேகத்தை போஷிக்காது. ரோகங்களுக்கு கொடுக்கப்படும். |
| கிலெரெட் வைன் (Claret Wine)<br>ஷாம்பென் வைன் (Champagne Wine) | இவ்விரண்டில் அல்கொஹல் கொஞ்சமாய் இருக்கும் | |

## 29-வது அத்தியாயம்.

## களிம்புகள்
### ஆய்ன்ட்மெண்ட் - Ointment.

### கிரியசொட் ஆயின்ட்மெண்ட்.
**Creasote Ointment** - கிரியசொட் ஆயின்ட்மெண்ட்.

*செய்முறை:—* ½ திராம் கிரியஸொட், 1 அவுன்ஸ் பன்றி நெய் இவைகளை சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

*உபயோகம்:—* ரணம், சருமரோகம் இவைகளுக்குத் தடவகுணமாகும்.

### ஐயோடைட் ஆப் லெட் ஆயின்ட்மெண்ட்
**Iodide of Lead Ointment** - ஐயோடைட் ஆப் லேட் ஆயின்ட்மெண்ட்

*செய்முறை:—* 1 அவுன்ஸ் ஐயோடைட் ஆப் லெட், 8 அவுன்ஸ் பன்றிநெய் இவைகளைச் சேர்த்து மஸ்ரித்துக்கொள்ளவும்.

*உபயோகம்:—* கட்டி, மூட்டு வீக்கம் இவைகளுக்கு தடவிவர தீரும்.

## ஐயோடைட் மெர்க்கியூரி ஆய்ன்ட்மெண்ட்

**Iodide of Mercury Ointment** - ஐயோடைட் ஆப் மெர்க்கியுரி ஆய்ன்ட்மென்ட்.

*செய்முறை:—* 2 அவுன்ஸ் வெள்ளைமெழுகு, 6 அவுன்ஸ் பன்றிநெய் இவைகளை சேர்த்து உருக்கி அத்துடன் ஐயோடைட் ஆப் மெர்க்கியுரி 1 அவுன்ஸ் சேர்த்து மிஸ்ரித்துக் கொள்ளவும்.

*உபயோகம்:—* மேகரணங்களுக்கு துணியின் மேல் தடவிப்போட குணமாகும்.

## ஐயோடின் ஆய்ன்ட்மெண்ட்

**Iodine Ointment** - ஐயோடின் ஆய்ன்ட்மெண்ட்

*செய்முறை:—* ½ திராம் ஐயோடின், 1 திராம் ஐயோடைட் ஆப் பொட்டாஸியம், இவைகளுடன் 1 திராம் ரெக்டிபைட் ஸ்பிரிட் சாராயத்தைச் சேர்த்து அரைத்து, பிறகு 2 அவுன்ஸ் பன்றிநெய்யைச் சேர்த்து மிஸ்ரித்துக்கொள்ளவும்.

*உபயோகம்:—* இதை புரைக்குழல், கண்டமாலை இனத்தைச்சேர்ந்த கட்டிகள் இவைகளின்மேல் தடவிவர குணமாகும்.

## ஸெவைன் ஆய்ன்ட்மெண்ட்

**Savine Ointment** - ஸெவைன் ஆய்ன்ட்மெண்ட்

*செய்முறை:—* 12 அவுன்ஸ் பன்றிநெய்யுடன் 3 அவுன்ஸ் வெள்ளை மெழுகைச் சேர்த்து உருக்கி அதில் 6 அவுன்ஸ் ஸெவைன் இலை தூளைச் சேர்த்து நார்த்துணியில் வடிகட்டிக் கொள்ளவும்.

*உபயோகம்:—* பிளிஸ்டர் செய்த ரணத்தின்மேல் இதை துணியில் தடவிப்போட ரணம் ஆராது.

## இளகிய ரசக்களிம்பு

**Blue Ointment** - பிளூ ஆய்ன்ட்மெண்ட்

*செய்முறை:—* ரசம் 12 அவுன்ஸ், பன்றிநெய் 11½ அவுன்ஸ், ஆட்டுக்கொழுப்பு ½ அவுன்ஸ் இவைகளில் ரசத்தை கல்வத்திலிட்டு அத்துடன் ஆட்டுக்கொழுப்பும் கொஞ்சம் பன்றிநெய்யும் சேர்த்து ரசத்தின் அணுக்கள் கண்களுக்குப் படாமல் போகிறவரையில் அரைத்து பிறகு மீதியிருக்கிற பன்றிநெய்யையும் சேர்த்து மிஸ்ரித்துக்கொள்ளவும்.

*உபயோகம்:—* இதை மேகரணம், மேகக்கட்டிகள், இவைகளுக்குத் தடவிவர குணமாகும்.

## கந்தக கலவைக்களிம்பு

*செய்முறை:—* கந்தகம் 2 அவுன்ஸ், வெடியுப்பு 20 கிறேன்ஸ், ஒயிட் ஆலிபோர் (White Hellebore) 5 திராம், இளகிய சவுகாரம் 2 அவுன்ஸ், பன்றி நெய் 6 அவுன்ஸ் இவைகளை மிஸ்ரித்துக்கொள்ளவும்.

*செய்கை-உபயோகம்:—* உஷ்ணகாரி — ஆறாத சிரங்குகளுக்கும், எச்சிற்றழும்புக்கும் போட குணமாகும்.

# 30-வது அத்தியாயம்.

## சத்துகள்

## Extract - எகிஸ்டிராக்ட்

சிலபதார்த்தங்களின் சத்துகள் எடுக்கும் விதிகளும், உபயோகங்களும் அடியில் காண்க.

| சத்து எடுக்கும் பதார்த்தங்களின் பெயர்கள். | சத்து எடுக்கும் விதங்கள் | ஒரு தடவைக்கு சத்து கொடுக்கும் அளவு | இந்த மருந்தால் நிவர்த்தியாகும் ரோகங்களின் பெயர்கள் |
|---|---|---|---|
| | | கிறேன் | |
| ஆகோனைட் (Aconite) | இலையின் சாற்றை வடிகட்டாமல் சுண்டக்காய்ச்சிக் கொள்ளவும். | 1-2 | கீல்வாதம், இருதய ரோகம். |
| கால்சிகம் (Colchicum) | ஒரு பவுண்ட் பச்சை கிழங்கை நொறுக்கி ஒரு அவுன்ஸ் அஸிடிக் ஆசிட் கொஞ்சங் கொஞ்சமாக சேர்த்து எடுத்த சாற்றைசுண்டக்காய்ச்சிகொள்ளவும் | 1-3 | கீல்வாதம், முடக்குவாதம். |
| பெல்லடொனா (Belledona) | ஆகோனைட் சத்து செய்வது போல் செய்துகொள்க. | ½-1 | பெல்லடொனா நிவர்த்தியாக்கும் ரோகங்கள். |
| கும்மட்டிக்காய் (Colocynth) | இதின் சாற்றைசுண்டக் காய்ச்சிக் கொள்ளவும். | 5-20 | விரேஷணகாரிகளோடு சேர்த்துக் கொடுக்கப்படும். |
| கோனியம் (Conium) | இலையின் சாற்றைச் சுண்ட காய்ச்சிக் கொள்ளவும். | 5-3 | கீல்வாதம், நரம்புவேதனை. |
| ஐயாஸியாமஸ் (Hyoscyamus) | - மேற்படி - | 5-30 | இசுவு, இருமல் வாதநோய். |

இவ்விதமாக பதார்த்தங்களிலிருந்து சத்துக்கள் வேண்டியபோது எடுத்துக்கொள்ளலாம்.

## *31*-வது அத்தியாயம்.

ஜீவவர்க்க சம்மந்தமான பதார்த்தங்களும் அவைகளின் குணம், செய்கை, முதலியவைகளும் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

## பால்களின் விபரம் (Milk)

| பால்களின் பெயர்கள் | பால்களின் உபயோகங்கள் |
|---|---|
| வெண்பசும்பால் | பித்தரோகங்கள் (40) தீரும். |
| செம்பசும்பால் | வாதரோகங்கள் (80) தீரும். |
| கறும்பசும்பால் | சிலேஷ்மரோகங்கள் (90) தீரும். |
| கபிலை பசும்பால் | திரிதோஷங்கள் தீரும். |
| கறுப்புமாதர்பால் | நேத்திரரோகங்கள் (மாத்திரம்) தீரும். |
| சிவப்புமாதர்பால் | வாதபித்தசிலேஷ்ம ரோகங்கள் தீரும். |
| வேசியர்பால் | பற்பலரோகங்கள் உண்டாகும். |
| எருமைபால் | - மேற்படி - |
| செம்மறியாட்டுப்பால் | - மேற்படி - |
| வெள்ளாட்டுப்பால் | ஜாடராக்கினி வர்த்தனகாரி, சுவாசம், காசம், வாதவீக்கம், முதலியவைகள் தீரும். தீபனத்தை உண்டாக்கும். |
| குதிரைப்பால் | தாருட்டியக்காரி, சுக்கிலத்தை விருத்திக்கும், புணர்ச்சியில் வல்லமை உண்டாக்கும். |
| கழுதைப்பால் | சீழ், பிரமேகம், கரப்பான், சிரங்கு, புண், வாதம் தீரும். |

## காஸ்டோரியம்

**Costoreum - காஸ்டோரியம்.**

குணம்:— இது பீவர் (Beaver) ஜெந்துவிலிருந்து எடுக்கப்படும். கஸ்தூரியைப்போல ஒத்த ஓர்வித பதார்த்தம்.

*செய்கை:—* அங்காகர்சனநாசகாரி, ருதுவர்த்தனகாரி, லகுஉஷ்ணகாரி.

*உபயோகம்:—* நரம்பைப்பற்றி வருகிற வலி (5), சூதகஜன்னி முதலியவைகளுக்குக் கொடுக்க இது வெகுத்தகுதியான அவுஷதம்.

*அளவு:—* 10 முதல் 20 கிறேன்ஸ் அனுபானத்தில் கொடுக்கவும்.

## கஸ்தூரி

**Musk** - மஸ்க்

*குணம்:—* மானைப்போல் ஒரு ஆண்மிருகத்திலிருந்து கஸ்தூரி எடுக்கப்படும். கஸ்தூரி இருக்கிறப்பை அண்டவட்டிவாயும் முன் புறத்தில் ரோமங்களும் உண்டு. கஸ்தூரி மிருதுவாயும், சிவப்புங் கருப்புங் கலந்த நிறமாயும், வாசனையாயும் இருக்கும்.

*செய்கை:—* அங்காகர்சன நாசகாரி, உஷ்ணகாரி.

*உபயோகம்:—* இதை வலி (5), ரணசன்னி, சூதக சன்னி, நாய்க்கடி சன்னி, வாந்திபேதி, சுரம், மாந்தம், முதலிய பற்பல வியாதிகளுக்கு கொடுக்க தவராமல் வியாதிகளை நிவர்த்தியாக்கும்.

*அளவு:—* 1 முதல் 5 கிறேன்ஸ் அனுபானத்தில்க் கொடுக்கலாம்

## முட்டை

**Egg** - எக்

*குணம்:—* கோழிமுட்டையானது சகலருக்கும் தெரிந்த பதார்த்தம். முட்டையின் ஓட்டுக்குள் வெள்ளைக்கரு, மஞ்சள்கரு என 2 வித பதார்த்தங்களுண்டு. வெள்ளைக்கரு ஜலத்தில் கரையும்; மஞ்சள்க்கரு தடித்த எண்ணெய்போல் இருக்கும்.

*செய்கை-உபயோகம்:—* பதார்த்தங்களின் அழுக்கை நீக்கவும், எரிச்சலை தணிக்கவும் வெள்ளைக் கருவை உபயோகிக்கப்படும். மஞ்சள் கருவை டி, பால், எண்ணெய் இவைகளில் எதிலாவது சேர்த்துக்கொடுக்க தேகத்தை போஷிக்கும். இதை எரித்தால் எண்ணெய் ஜனிக்கும். இதற்கு அண்டத்தயிலம் என்று பெயர். இந்த தையிலத்துடன் குங்குமப்பூ, கொரோசனை சேர்த்து குழந்தைகளின் மாந்தம், வலிப்பு இவைகளுக்குக் கொடுக்க குணமாகும்.

## மீன் எண்ணெய்

**Cod-liver-oil** - காட் லிவர் ஆயில்.

*குணம்:—* இந்த எண்ணெயானது கறுப்பும் மஞ்சளுங் கலந்த நிறமாயும், தெளிவாயும், ஒரு வித வாசனையாயும், கொஞ்சம்

குமட்டலாயும் இருக்கும், எண்ணெய்ச் சத்துகள் இதில் இருப்பதும் தவிர கொஞ்சம் ஐயோடைன், புரோமின் முதலிய உப்புகள் இருக்கின்றன. இந்த எண்ணெயானது காட் (Cod) என்கிற மீனின் ஈரலிலிருந்து எடுக்கப்படும்.

*செய்கை-உபயோகம்:—* துர் பலம், க்ஷயம், அதிசாரம், கண்டமாலை, அக்கினி மந்தம், சரும ரோகங்கள், மூட்டு நோய், சூலைக்கட்டு, முதலிய பற்பல கொடிய ரோகங்களுக்கு இது சஞ்சீவி. இதை தேகத்தில் ரத்தத்தை விருத்தியாக்கவும் பசியை நன்றாய் உண்டாக்கவும் கொடுக்கப்படும். மேற்கண்ட ரோகங்களில் தேகம் சுட்கித்து மெலிந்து இருக்கிறபோது இதைக் கொடுத்தால் நோயாளி ஸ்தூலித்து சவுக்கியம் உண்டாவதற்கு யாதொரு சந்தேகமில்லை. இதை நாள்ப்படச் சாப்பிடவேண்டியது. இதை சரும ரோகத்துக்கும், கீல்களின் வீக்கத்துக்கும் மேலுக்குப் பூசிவர குணமாகும்.

*அளவு:—* 2 முதல் 8 திராம் பெரியவர்களுக்கும், 1 முதல் 2 திராம் குழந்தைகளுக்கும் பால், காபி, டி, ஒயின் முதலியவைகளில்க் கொடுக்கலாம், குறைந்த அளவில் ஆரம்பித்து படிப்படியாய் அதிகரித்துக் கொள்ளவும்.

## தேன்

**Honey** - ஹனி

*குணம்:—* தேனிகள் புஷ்பங்களிலிருக்கிற மதுவை உண்டு, தேன் கூட்டில் சேர்த்து வைக்கிற பதார்த்தத்துக்கு தேன் என்று பெயர்.

*செய்கை-உபயோகம்:—* இது தேகத்தை போஷிக்கும், இருமலைத் தவிர்க்கும், மலத்தை கழிக்கும். இதை வாயைக் கொப்பளிக்கிற ஜலத்துடன் சேர்த்து உபயோகிக்கலாம்.

## எரிவண்டு

**Cantharidis** - கெந்தாரிடிஸ்

*குணம்:—* இந்த வண்டில் பல சாதிகள் உண்டு.

*செய்கை:—* உஷ்ணகாரி, மூத்திரவர்த்தனகாரி, ஸோனகாரி, கொடிய நஞ்சு.

*உபயோகம்:—* இதை கொஞ்சமாகக் கொடுக்க மூத்திரத்தை விருத்திக்கும். நாள்பட்ட வெள்ளை, தந்திமேகம், மூத்திரப்பை ரோகம், நீர்க்கட்டு, எலும்புருக்கி, குஷ்டம், சொறி, சிரங்கு, கக்கு இருமல், முதலிய பற்பல பயங்கரமான வியாதிகளுக்குக் கொடுக்க குணமாகும். இதை அடிக்கடியாவது அதிகமாயாவது உள்ளுக்குச் சாப்பிட்டால் நீர்

அடைப்பு உண்டாக்கிக் கொன்று விடும். நோயுள்ள இடத்தில் இதை போட்டால் கொப்பளித்து உடனே நோய் தணியும். இதற்கு மூத்திர உருப்புகளை கெடுதி செய்கிற குணம் உண்டு.

*அளவு:—* இதற்கு பதில் எரிவண்டுப்பாவனத்திரவம் கொடுக்கப்படும்.

## மான்கொம்பு

**Hart's Horn - ஹார்ட்ஸ் ஹாரன்**

*உபயோகம்:—* இதை அஸ்தி காங்கை, கண்ணோவு, கை கால் எரிவு இவைகளுக்கு பஸ்மமாக்கிக் கொடுக்கலாம்.

## யானை நகம்.

*உபயோகம்:—* இதை கத்தியால் சீவி வேப்பெண்ணெயில்ப் போட்டு காய்ச்சி வடித்த எண்ணெயில் ஒரு விராகனிடை வீதம் தினம் 2 தடவைச் சாப்பிட்டுவர காசம், சுவாசம், இரைப்பு முதலியவைகள் தீரும்.

## அட்டை

**Leech - லீச்**

*குணம்:—* அட்டையில் அநேக சாதிகள் உண்டு.

*செய்கை-உபயோகம்:—* ரத்தம் கட்டிக்கொண்டு இருக்கிற இடத்தில் (தாபன ரோகம்) அட்டையைக் கடிக்கவிட்டால் அவ்விடத்திலிருக்கிற ரத்தத்தை உறுஞ்சிவிடும். அக்கி கண்ட இடத்தில் இதை கடிக்க விடக்கூடாது. இது கடித்த இடத்தில் கரித்துணி, அயத்திரவகம், காடிக்காரம், முதலிய துவர்ப்பு மருந்துகளை போட்டு நிறுத்த வேண்டியது. சிலவேளை கடித்த இடத்தைத் தைக்கவேண்டியதாயும் நேரிடும்.

## கொரோசனை

*உபயோகம்:—* இது பசு அல்லது எருதின் பித்தப்பையிலுள்ள ஒரு விதக் கல்லு. 2-3 புளியங்கொட்டை அளவாக ஒரு பையிலிருக்கும். இதில் கொஞ்சம் எடுத்து வெற்றிலைச் சாற்றிலாவது அல்லது முலைப்பாலிலாவது கொடுக்க குழந்தைகளின் மாந்தம், சுரம், ஜலுப்பு குணமாகும்.

## முசுறு முட்டை

*உபயோகம்:—* வரி (5), வாதம், இசிவு, ஜன்னி, கர்ணரோகம் இவைகளுக்கு இதை உபயோகிக்கப்படும்.

## மயில் இறகு

*உபயோகம்:—* இதன் சாம்பலை தேனில் கலந்து கொடுக்க வாந்தி விக்கல் குணமாகும்.

## புனுகு சட்டம்.

உபயோகம்:— வாதம், பித்தம் இவைகள் தீரும்.

## சவ்வாது

உபயோகம்:— சிரஸ்தாபரோகம், வாதம், கபம், ஜல பீனிசம் இவைகளுக்கு இதை உபயோகிக்கப்படும்.

## நீர்ப் பஞ்சு

**Sponge - ஸ்பன்ஜ்**

உபயோகம்:— இது ஓர் வித பாசி. இதை சிறு துண்டுகளாக்கி மெழுகைக் காய்ச்சி அதில் துவைத்தாவது, அல்லது நூலால் சுற்றியாவது ரணத்தின் புரை வாயில் வைத்தால் துவாரத்தை பெரிதாக்கும். இதை சுட்டு சூர்ணித்து ½ முதல் 1 திராம் வரையில் தேனில் கலந்து கழுத்தில் காணும் புரைக்குழல், கண்டமாலை, இவைகளுக்கு உள்ளுக்கு கொடுக்க குணமாகும்.

# 32-வது அத்தியாயம்.

ஆயுள்வேதியர்கள் சிகிக்ஷை செய்ய ஆரம்பிக்கும் முன் இதினடியில்க் கண்டிருக்கிற சில முக்கியமான விஷயங்களை விசேஷமாய் கவனித்து ஆராய்ந்து சிகிக்ஷைகள் செய்வார்களாகில் ரோகிகள் நிரோகிகள் ஆவதற்கு சந்தேகமில்லை.

1. நஞ்சுள்ள பதார்த்தங்கள் வைத்திருக்கும் ஏனங்களும் நஞ்சு என்று துண்டு கடுதாசிகளில் எழுதி ஒட்டி தனிப்பட வைக்கவேண்டியது.

2. மருந்துகளில் சிலது வெளிச்சம் பட்டால் கெட்டுப்போகும். அவைகளை நீல நிறமுடைய சீசாவிலாவது, வெள்ளை சீசாவுக்கு நீலக் கடுதாசியை அதைச்சுற்றிலும் வொட்டியாவது போட்டுவைக்க வேண்டியது.

3. சில மருந்துகள் காற்றுப்பட்டால் கெட்டுப்போகும். அவைகளை கற்கார்க்கு சீசாவில்போட்டுவைக்கவேண்டியது.

4. ஆயுள் வேதியர்கள் முதலில் அஷ்டவித பரிக்ஷைகளாலும், ரோகம் உண்டான ஆதிகாரணங்களாலும், ரோகம் இன்னதென்று அறிந்து கொண்டு பிறகு ரோகிகளின் வயது முதலிய (12) விஷயங்களை அனுசரித்து அவர்களுக்குத் தகுந்த மருந்துகளை நிதானித்தறிந்து

அவைகளின் அளவுகளை புஸ்தகத்தில் கண்டறிந்து நோயாளிகளின் இஷ்டப்படி தகுந்த அனுபானங்களில் கொடுக்க வேண்டியது. தினந்தோரும் மலம், மூத்திரம், பசி இவைகளைக் சிறமப்படுத்தி சிகிக்ஷைகள் செய்ய வேண்டியது.

5. நோயாளிப் படுத்திருக்கும் இடத்தில் தூபங்களைப் போட்டு அவ்விடத்திலுள்ள நாற்றங்களை நீக்கிவிடவேண்டியது. நோயாளியின் மெத்தை முதலானப் படுக்கைகளை தினந்தோரும் உதரி வேறுஇடத்தில் போடவேண்டியது. அன்றியும் நோயாளி தினம் சுத்தமான வஸ்திரங்களைத் தரித்துக் கொள்ளவேண்டியது. சுத்தமானதும், காற்றுள்ளதும், நாற்றமில்லாததும், ஈரமில்லாததுமான இடத்தில் நோயாளியின் படுக்கை போடவேண்டியது. நோயாளி சாப்பிடக் கூடாத பதார்த்தங்களைப் படுக்கைக்கு சமீபம் வைக்கலாகாது. அன்றியும் சமீபத்திலிருந்துக் கொண்டு நோயாளிக்கு இஷ்டமில்லாத விஷயங்களை சொல்லுதல், கூச்சலிடுதல், அழுதல் முதலியவைகள் கூடாது.

6. கர்ப்பஸ்திரீகள், பால்கொடுக்கும் ஸ்திரிகள், இவர்களுக்கு மாதாந்திர ருது காணுதல் அரிது. பிரவிடை ஆகாத சிறு பெண்களுக்கு ருதுவர்த்தனகாரிகளைக் கொடுக்கக்கூடாது. கருப்பை பருபக்குவமானால் ஒழிய சுரோணிதம் வெளிப்படாது. இவைகளைக் கொடுத்தால் மோசங்கள் சம்பவிக்கும். ஒரு மருந்து குணத்தைக் காட்டாவிட்டால் அந்த இனத்தில் சேர்ந்த மற்றொரு மருந்து குணத்தைத் தரும். இதை ஒன்றோடொன்று சேர்த்துக் கொடுக்க விசேஷிக்கும். கருப்பையில் காணும் ரணரோகத்துக்கு ருதுவர்த்தனகாரிகள் கொடுக்கக்கூடாது.

7. கபத்தை விருத்தியாக்கி வெளிப்படுத்த கபஹரகாரிகளைக் கொடுக்க வேண்டியது. பலஹீனருக்கு குமட்டலையுடைய கபஹரகாரிகளைக் கொடுக்கக்கூடாது. வமனகாரிகளாலும், அதிக ஜலம் சாப்பிடுவதாலும், உஷ்ணம் மிதமாக வைத்திருப்பதாலும், கபஹரகாரிகளின் குணத்தை விசேஷிக்கும். தாபனம் கண்டிருக்கும் போது கபஹரகாரிகளைக் கொடுக்கலாகாது. விரேசனகாரிகள், மூத்திரவர்த்தனகாரிகள், அபினிசேர்ந்த மருந்துகள் இவைகளைக் கொடுப்பதால் கபஹரகாரிகளின் குணத்தை குறைக்கும்.

8. சிறு குழந்தைகளுக்கு நித்திராகாரிகளைக் கொடுக்கக் கூடாது. ரத்த புஷ்டியுள்ளவர்களுக்கு இது சீக்கிறத்தில் குணத்தைத்தரும். புருஷர்களைப் பார்க்கிலும் ஸ்திரீகளுக்கு இதை குறைந்த அளவில்

கொடுக்கவேண்டும். அதிக கபம் வெளிப்படும் இருமலுக்கும், மூளையில் ரத்தம் கட்டினதற்கும், நீடித்த இருதய ரோகத்திற்கும், நித்திராகாரிகளை ஜாக்கிறதையாய்க் கொடுக்கவேண்டியது. நாசூக சரீரத்தையுடையவர்களுக்கு கொஞ்சம் அளவில் ஆரம்பித்து நாளுக்குநாள் அதிகரித்துக் கொள்ளவும். கர்ப்பஸ்திரீகளுக்கு இதைக் கொடுத்தால் பிண்டத்திற்கு மோசம் நேரிடும். மேல்சொல்லிய கபரோகங்களுக்கு இதைக் கொடுத்தால் கபம் உள்ளுக்கு அடைப்பட்டு மூச்சடைப்புகாணும். இது அளவுக்கு அதிகமானால் விஷமிக்கும்.

9. நீடித்த ரோகங்களுக்கு வியதாபேதகாரிகள் கொடுக்கும்போது நோயாளிகள் பத்தியம், ஸ்நானபானம் முதலியவைகளில் ஜாக்கிறதையாய் இருக்கவேண்டியது. அப்படிக்கு இல்லாவிட்டால் மருந்துச் சாப்பிட்டும் பிரயோஜனமில்லை. இவைகளைச் சாப்பிட்டால் வெளிக்கு யாதொன்றும் காட்டாமல் உள்ளேயே வியாபித்து குணத்தைக் காட்டும்.

10. வேதனா சாந்தகாரிகள் மஜ்ஜ நரம்புகளிலும், மூளையிலும் வியாபித்து நித்திரையை உண்டாக்குவதால் நோவுடைய ரோகங்களுக்கு எல்லாம் கொடுக்கப்படும்.

11. ஆம்லநாசகாரிகள் நாசூகசரீர முடையவர்களுக்குக் கொடுக்கக் கொழுப்பைக் கரைத்து தேகத்தை இளைக்கச்செய்யும். ஆகையால் அவர்களுக்கு காரணமில்லாமல் கொடுக்கலாகாது. இவைகளை அஜாக்கிரதையாயாவது, அதிகமாயாவது, நாள் படவாவது சாப்பிட்டால் கெடுதிசெய்யும். இவைகள் போஜனம் செய்து 2 அல்லது 3 மணிநேரம் சென்ற பிறகுச் சாப்பிட வேண்டியது.

12. கிருமிநாசகாரிகள் தனியாகக் கொடுக்காமல் ஒன்றோடொன்று சேர்த்துக் கொடுப்பது நல்லது. இவைகளைச்சாப்பிட்டு மறுநாள் சிற்றாமணக்கெண்ணையை பேதிக்குச் சாப்பிட வேண்டியது.

13. நஞ்சுண்டோருக்கு விஷநாசகாரிகள் உடனே கொடுக்கவேண்டியது.

14. நேத்திரரோகிகளை வெளிச்சமுள்ள இடத்தில் வைக்கலாகாது.

15. செவிரோகிகளை சப்தமில்லாத இடத்தில் வைக்கவேண்டும்.

16. நுரை ஈரல் ரோகிகளை பேசவொட்டாமல் செய்யவேண்டும்.

17. சிரோரோகிகளை உட்கார வைக்க வேண்டியது.

18. கைகால் தாபனரோகிகளை படுக்க வைக்கவேண்டியது.

19. நரம்புகளுக்கு பலத்தை உண்டாக்கி வலிரோகங்கள் (5) நீக்குகிற அங்காகர்சன நாசகாரிகள் வலி நின்றிருக்கும் காலத்தில் கொடுக்க

வலியை வரவொட்டாமல் செய்யும். இவைகளை நாள்படக் கொடுக்க வேண்டியது. பித்த உருப்புகளில் கெடுதிகளால் உண்டாகும் வலிகளுக்கு ரசம் சேர்ந்த மருந்துகளையும், வயிற்றில் அதிபுளிப்பால் உண்டாகும் வலிரோகங்களுக்கு க்ஷாரங்களையும், வயிற்றில் கிருமிகளால்*காணும் வலிகளுக்கு கிருமிநாசகாரிகளையும் கொடுக்க குணமாகும். வலிரோகத்தில் தாபனம் கண்டால் அடிக்கடி வலிகள் காணும். அப்போது பயங்கரமாய் இருக்கும். வலிரோகத்தில் மலம், மூத்திரம் தீபனம் இவைகளை கவனித்துக் கிரமப்படுத்தவேண்டும்.

20. அதிசாரம், ரத்தப்பெருக்கு முதலியவைகளில் தாபனம் கண்டிருக்கும்போது ஸங்கோஷனகாரிகளைக் கொடுக்கக்கூடாது.

21. துவக்ஸபோடகாரிகள் நரம்புகளில் நீர் சென்று உண்டான வீக்கத்தின்பேரில் போட்டு நீரை வற்றச் செய்து வீக்கத்தைக் கரைக்கவும் சரீரத்துக்குள் இருக்கும் தாபனத்தை வெளியாக்கவும், தேகத்தை உஷ்ணிக்கவும், ஓர் இடத்திலுள்ள கெட்டநீரை வேறொருயிடத்தில் கொண்டுவரவும் மேலுக்கு உபயோகப் படுத்தப்படும். ஸ்தனம், அண்டகோசம், முதலிய மிருதுவான இடங்களிலும் தாபனம் கண்டிருக்கும் போதும், சிறுகுழந்தைகளுக்கும் (பிளிஸ்டர்) புண்ணாக்கக்கூடாது. எரிவண்டு பிளாஸ்திரிபோட்டு 6 அல்லது 12 மணி நேரம்வைத்து பிறகு எடுத்து பொல்டிஸ்கட்ட கொப்பளிக்கும். கர்ப்ப ஸ்திரீகளுக்கு ஸ்தனம், மார்பு இவைகளில் புண்ணாக்கக்கூடாது. இவைகளை உபயோகித்து வருகையில் கிரிச்சரம் கண்டால் அதை நீக்கி மெழுகுக் களிம்பைப் போட கொப்பளமாகும். அதிகமாய் ஜலம் சாப்பிட்டால் நீர். எரிவு குணப்படும். பிளிஸ்டர் செய்த இடத்தை ஆறாமல் வைத்து இருக்கவேண்டியபோது ஸேவைன் ஆயின்ட்மேன்ட் போட வேண்டியது. நரம்பைப் பற்றிய வியாதிகளுக்கு முள்ளந் தண்டின் பேரிலும்; உன்மாதரோகத்துக்கு பிடரியிலும், சூதகசூலை, ஸ்திரீகளின் மேகம், குழந்தைகளின் சொட்டு மூத்திரம் இவைகளுக்கு திரிகஸ் தானத்திலும், காது வலிக்கு காதுக்கு பின் புறத்திலும், சந்திக சிலேஷ்ம் ரோகத்துக்கு மூட்டின் பேரிலும் நேத்திர ரோகத்துக்கு புருவத்தின் மேல்புரம், கன்னப்பொறி, பிடரி, காதின் பின்பக்கம் இவைகளிலும், வாந்தி ரோகத்துக்கு அநாகஸ்தானத்திலும் பிளிஸ்டர் செய்தால் ரோகங்கள் குணமாகும். குழந்தைகளுக்கு பிளிஸ்டர் பிளாஸ்திரியின் பேரில் எண்ணையை தடவி நோயுள்ள இடத்தில் போட்டு அந்த இடம் சிவந்த உடனே எடுத்துவிட்டு சூடான போல்டிஸ் கட்ட சீக்கிரத்தில் கொப்பளிக்கும். அந்த இடத்தை ஆற்ற மீன் கொழுப்பு சேர்ந்த இளகிய களிம்பை அல்லது தேங்காய் எண்ணெயைப் போடலாம்.

26. குறைந்த மூத்திரத்தை சுவாபீக அளவுக்குக் கொண்டுவரவும், சுரத்தில் தாபனத்தை நீக்கவும், தேகத்தில் ஊறிய நீரை வற்றச் செய்யவும், சாத்தின் விஷ நீரை வெளியாக்கவும் மூத்திர வர்த்தனகாரிகள் கொடுக்கவேண்டியது. குளிர்ச்சியான இடத்தில் இருக்குதல், அடிக்கடி ஜலம் சாப்பிடுதல் இவைகளால் அவைகளின் குணத்தை அதிகப்படுத்தும்.

27. பூர்ண கர்ப்பமுள்ள ஸ்திரீ, சதை அண்டவாதம், இருதய நோய், அசதி சன்னி, அதி பல ஹீனம், இவைகளுக்கு வமனகாரிகள் கொடுக்கக்கூடாது. நஞ்சு, ஜீர்ணிக்காத போஜனம், இவைகளை இரைப்பையிலிருந்து வெளியாக்கவும், கபத்தை தாராளமாய் வெளியாக்கவும், வமனகாரிகளைக் கொடுக்கவேண்டியது. குழந்தைகளுக்கு வமனகாரிகள் கொடுக்க இபிகாக்குயுஏனா தகுதியானது. வாந்திக்கு அடிக்கடி கொடுக்கக் கூடாது; கொடுத்தால் தேகம் கெடும்.

28. ரத்தத்தின் பசையை உறையச் செய்யவும், ரத்த நரம்புகளை சுருங்கச் செய்யவும், ரத்தத்தை நிறுத்தவும் ரத்தஸ்தம்பனகாரிகள் உபயோகிக்க வேண்டியது.

29. தேகத்துக்கு பலத்தை உண்டாக்கவும், சீர்ண சத்தியை உண்டாக்கவும் தாருட்டிய காரிகள் கொடுக்க வேணும். அயச்சம் பந்ததாருட்டியகாரிகள் ரத்தத்திலிருக்கிற அயத்தை விருத்தி செய்து மாமிஸ தாதுவின் பலத்தை அதிகப்படுத்தும். பாண்டு, சோகை, பலஹீனம், அஜீர்ணம், சுரம் முதலிய ரோகங்களுக்கு தாருட்டியகாரிகள் கொடுக்கவேண்டும். ஆனால் தாபனரோகம், அதிதூல ரோகம் இவைகளுக்கு அவைகளை நீக்கி வைக்கவும்.

30. பாஷாணம் அல்லது பாஷாண சம்பந்த மருந்துகளை போஜனம் செய்து 1-2 மணி நேரம் சென்றுச் சாப்பிடவேண்டும். வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது. இதைச் சாப்பிடுகையில் தினவு, வாய் ரணம், சூடு, இருமல், நீர்க்கட்டு, சிவப்புநிற மூத்திரம் இவைகள் கண்டால் உடனே மருந்தை நிறுத்தவும். இதைக் கொடுப்பதற்கு முன் துர்மலத்தைப் போக்க பேதிக்குக் கொடுக்க வேண்டியது. இதைச் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது 10-15 நாளுக்கு ஒரு தடவை 2-3 நாள் நிறுத்தி வைத்து பேதிக்கு சாப்பிட்டால் மருந்தின் குணத்தை விசேஷிக்கும். இதைச் சாப்பிடும்போது வாந்தி குமட்டல்,

இவைகள் கண்டால் அபினிப்பாவனத்திரவத்தை சேர்த்துக் கொடுக்க துர்குணத்தை நீக்கும். குழந்தைகளுக்கு இதைக் கொடுக்கக்கூடாது. இதைச் சாப்பிட்டுக்கொண்டு வருகையில் நோயாளிகளின் கண்கள் சிவந்தாவது, தினவுவாவது அல்லது ரெப்பைகள் தடித்தாவது இருக்கிறதாவென்று தினந்தோறும் பார்க்கவேண்டும். அப்படிக்கு இருக்குமாகில் மருந்தை நிறுத்தவேண்டியது.

31. அயமருந்துகள் பாண்டுரோகத்துக்குக் கொடுக்க ரத்தம் ஊறும். அயத்தை நாள்பட சாப்பிடுகையில் 15 நாளுக்கு ஒரு தடவை விட்டு பேதிக்குச் சாப்பிட்டு துர்மலத்தை நீக்குவது மருந்தின் குணத்தை அதிகரிக்கும். இதைச் சாப்பிடுகையில் புளிப்புள்ள பதார்த்தங்களைச் சாப்பிடக்கூடாது. அயத்துக்குண்டான துர்குணத்தை நீக்க கோனியம், குரோசாணி ஓமம், இவைகளில் எதிலாகிலும் சேர்த்துக் கொடுக்கவேண்டியது. கண்டமாலைக்கு ஐயோடைன் சேர்ந்த அயமருந்துகள் கொடுக்கத் தகுதியானது. அயமருந்தில் ஒன்று ஒத்துக்கொள்ளாவிட்டால் வேறொரு சாந்தமானதைக் கொடுக்கவேண்டியது. அதிதூல ரோகம், தாபன ரோகம் இவைகளுக்கு இதைக் கொடுக்கக்கூடாது.

32. பிரசவ காலத்தில் கருப்பை பொறுத்துப் பொறுத்து சுருங்கும்போது அதின் முகமும் கொஞ்சங்கொஞ்சமாய் மலரும். அப்பொழுது குழந்தையின் சிரசும் கொஞ்சங்கொஞ்சமாய் உதயமாகும். இந்த தருணத்தில் பிரசவவேதனை மந்தப்பட்டால் அந்த வாயுவை அதிகரித்து கருப்பையை சுருங்கச் செய்ய பிரசவகாரிகள் கொடுக்கவேண்டியது.

33. ஸ்திரீகளுக்கு பிரசவவேதனை ஆரம்பித்தஉடனே குழந்தைகர்ப்பத்தில் சரியானயிடத்தில் இருப்பதையும் இல்லாததையும் அறிந்துகொள்வதற்காக படுக்கையின்மேல் ஸ்திரியை வலதுபக்கமாய்ப் படுக்கவைக்காமல் இடது பக்கமாய்ப் படுக்கவைத்து வயிற்றின்மேல் கால்களை மடித்துக்கொள்ளச் சொல்லி, ஆமணக்கெண்ணெயில் வலது கையின் 2வது விரலை நனைத்துக்கொண்டு பின்பக்கமாய் யோனிக்குள் நுழைத்தால் குழந்தையின் முன்பாகந் தெரிந்துகொள்ளலாம். பிரசவமாவதற்கு நேரஞ்செல்லுமென்று தோன்றினால் ஸ்திரியை உட்கார வைத்து, காபித்தண்ணீர், கஞ்சி பால் கொடுக்கவும். ஸ்திரீயை அடிக்கடி பரீட்சிக்கக்கூடாது. குழந்தையின் தலை வெளியில் வந்தவுடனே அம்பட்ட மருந்துவச்சிகள் தாங்கள் வெறுமனே உட்கார்ந்திருக்கக்கூடாது, உட்கார்ந்திருந்தால் மதிக்கமாட்டார்கள் என்று அறிவில்லாமல் நினைத்து குழந்தையின் தலையைப் பிடித்து இழுத்து அபாயமான

காரியங்களைச் செய்வார்கள். ஆகையால் இப்பேர்ப்பட்ட மருத்துவச்சிகளை தரவிக்கக்கூடாது.

34. ஸ்திரிகள் பிரசவிக்கும் காலத்தில் மருத்துவஞ் செய்யப்போகும் வைத்தியர் அடியில்க்கண்ட ஆயுதங்களும், அவுஷதங்களும் கொண்டுபோகவேண்டியது.

## ஆயுதங்கள்

| | ஆயுதங்களின் பெயர்கள் | ஆயுதங்களின் உபயோகங்கள் |
|---|---|---|
| 1. | ரப்பர் அல்லது வெள்ளி சவாக்கு | பெண் குழந்தைகளுக்கு நீரை வெளியாக்க உபயோகிக்கலாம். |
| 2. | ஸ்தேதஸ் கோபு Stethoscope | கர்ப்பத்தில் குழந்தைகளுக்கு உயிர் உண்டு அல்லது இல்லை என்று அறிவதற்கும் இரட்டைப் பிள்ளை இருக்கிறதா வென்று அறிவதற்கும்உபயோகிக்கலாம். |
| 3. | குறடு | குழந்தை குறுக்காய்ப் போய்விட்டால் உபயோகிக்கலாம். |
| 4. | கத்திரி Scissors | குழந்தையின் வயிற்றுக்கொடியை கத்தரிக்க உபயோகிக்கலாம். |

☞ ரப்பர் பீச்சாங்குழல் (Indian rubber syringe) ஒன்று கையிலிருப்பது நல்லது.

### அவுஷதங்கள்

1. எர்கட்டுசத்து (Extract Ergot)
2. குளோரொபாரம் (Chloroform)
3. அபினிப்பாவனத்திரவம் (Tincture opium)
4. பரிமலநவக்ஷாரமது (Spiritus Ammonia Aromaticus)

இந்த மருந்துகளில் ஒவ்வொன்றிலும் ஒரு அவுன்ஸுக்கு குறைவில்லாமல் இருக்கவும்.

35. ஸ்திரிகளுக்குக் காணும் சூதகஜன்னிக்கு சிகிச்சை செய்வதில் முதலில் சீமை இந்துப்பு (Epson Salt) பேதிக்குக் கொடுத்து வாத பித்தசம்பந்தமான கெட்ட நீரை வெளியாக்கி அபினி சம்மந்தமான அவுஷதங்களைக் கொடுத்து மேலுக்கும், பொஷ்க்காயக் கசாயத்தை ஒற்றிடம் கொடுத்து வயிற்றுவலியை நிற்கச் செய்யவும். சுவேதகாரிகளைக் கொடுத்து சுரத்தை நீக்கவும், உஷ்ணத்தை தணிக்கவுஞ் செய்ய வேண்டியது.

35. ஸ்திரிகளுக்கு ரஜஸ்வலான காலத்தில் காணும் வலி (சூட்டு வலி)களுக்கு அபினி சம்பந்தமான அவுஷதங்கள், கர்ப்பூர சம்பந்தமான அவுஷதங்கள் முதலிய சிலாக்கியமான அவுஷதங்களைக் கொடுப்

பதுந்தவிர ஒரு தொட்டியில் தீநீர்விட்டு அரைவரையில் தினம் 2 தடவை ½ மணிநேரம் வரையில் உட்காரவைத்தால் நோவு குணமாகும்.

37. உதிரப்பெருக்கு அதாவது திரவம் (சிவந்த ஜலம்) அதி விசேஷமாயாவது, சுபாவத்திற்குக் குறைவாவது அல்லது ஸ்நானமானபிறகு நெடுநாளாவது வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும். இந்த சமயத்தில் நாடி தீவிரமாய் நடந்தால் 2 கிறேன்ஸ் சுத்திசெய்த வெடியுப்பை ஜலத்தில் கரைத்து 1 மணி அல்லது 1½ 2 மணிக்கு ஒரு தடவை கொடுக்கவும். அதி மெதுவாய் நடந்தால் விளாவின கந்தகத் திராவத்தில் 2-4 துளி ஜலத்தில் கொடுக்கவும். மருதீட்டு வருமுன் படிகார ஜலத்தை யோனியிலடிக்கலாம். கைகால் குளிர்ந்தால் கர்ப்பூரத்தைலத்தைத் தடவித் தேய்த்து சூட்டை உண்டாக்கவும். அன்றியும் மணல், உப்பு இவைகளை வறுத்து ஒற்றிடம் கொடுக்கவும். இத்தருணத்தில் ரோகியைப் படுக்கையில்தான் வைக்கவேண்டும்.

38. சில கர்ப ஸ்திரிகள் 2 மாதங்காலம் வரையில் தினம் காலை, மாலை, வாந்தி செய்வார்கள். இதற்கு மருந்து அவசியமில்லை. சில கர்ப ஸ்திரீகள் பிரசவமாகிற வரையிலும் எதையும் வயிற்றில் தங்காமல் வாந்தி செய்வார்கள். இப்பேர்ப்பட்ட ஸ்திரீகளுக்கு அவசியமாய் மருந்து கொடுக்கவேண்டியது. ஆகையால் இங்குலுவின் (Ingluvin) 1-1½ கிறேன்ஸ் கொடுக்க வாந்தி நிற்கும். இதை கால் அல்லது அரை மண்டலம் கொடுக்கவேண்டியது.

39. பிரசவ வேதனை, ஆரம்பித்த பிறகு சிற்றாமணக்கெண்ணெயைக் கொடுத்தாவது, அல்லது பீச்சாங்குழலால் அடித்தாவது மலத்தை இறங்கச் செய்வது உத்தமம். இப்படிச் செய்வதால் குழந்தை மலத்தால் தடைப்படாமல் சுகப்பிரசவமாகும்.

40. கர்ப ஸ்திரியின் மூத்திரத்தைக் காய்ச்சிப் பார்க்க வெண்மையான மஷ்டு விசேஷமாய் அடியில் தங்கினால் அந்த ஸ்திரியின் கால்கள், தேகம் இவைகள் வீங்கும்; அன்றியும் சுரம், தலைவலி முதலியவைகள் காணும். இத்தருணத்தில் செவ்வையாய் பேதியாகும்படி பேதிமருந்தைக் கொடுத்து, மறுநாள் அயப்பாவனத்திரவம் 15-20 துளி, ஒரு அவுன்ஸ் ஜலத்தில் சேர்த்து தினம் 3-4 தடவை கொடுக்கவும். அன்றியும் ஜின் (Gin) சாராயத்தை தேகத்திற்குத் தக்கபடி அளவை ஏர்ப்படுத்தி ஜலத்தில் சேர்த்துக் கொடுத்தால் குணத்தைத் தரும்.

41. சில பூரண கர்பஸ்திரியின் கர்பாசயம் மூத்திரப்பையின்மேல் விழுந்து மூத்திரத்துவாரம் தடைப்பட்டு மூத்திரம் இறங்காமல் வயிறு உப்பும்.

இத்தருணத்தில் சிலாக்கினால் தூக்கி மூத்திரத்தை வெளியாக்கவேண்டியது.

42. முலைப்பால் குடிக்கும் குழந்தையின் மாந்தம், சுரம் முதலிய ரோகங்களை சிக்கிஷை செய்வதில் குழந்தைக்கு பால் கொடுக்கும் ஸ்திரியை தகுந்த பத்தியத்தில் வைத்தாலொழிய குழந்தையின் ரோகம் நிவர்த்தியாகாது. குழந்தையையும் பத்தியத்தில் வைப்பது நல்லது.

43. லேகியம், கிருதம் முதலிய அவுஷதங்களை பீங்கான் அல்லது, கிளாஸ், வெள்ளிப்பாத்திரம், தங்கப்பாத்திரம் இவைகளில் போட்டு மேல் காகிதம் முதலியவைகளால் மூடிவைத்துக்கொள்ளவேண்டியது. இங்கிலீஷ், கர்நாடக, யுனானி அவுஷதங்களில் ஜலரூபமான அல்லது எண்ணெ சம்பந்தமான அவுஷதங்களை பீங்கான் அல்லது கிளாஸில் போட்டு உள்ளுக்குச் சாப்பிட வேண்டியது. வெள்ளி, தங்கபாத்திரங்களும் உபயோகிக்கலாம். மற்ற பாத்திரங்களை உபயோகிக்கக்கூடாது.

44. பிரசவித்த ஸ்திரிகளின் நாடியை பரிக்ஷிக்கையில் நாடி மெதுவாக நடந்தால் சகுணம். நாடி ஒரு மினிட்டுக்கு 80க்கு மேல் அடித்துக் கொள்ளுதல் துர்குணத்தில் சேர்ந்தது. ஆகையால் நாடி வேகமாய் நடக்கக்கூடாது.

45. பிரசவித்த ஸ்திரிகளுக்கு 3வது நாளில் பால் சுவரும் போது உஷ்ணம் சுபாவத்திற்கு 1-2 டிகிரி மேல்ப்பட்டிருக்கும். இதை 1-2 தினத்தில் சாந்தமாகும்.

46. பிரசவித்த ஸ்திரிகளுக்கு நாடி தீவிரமாயும், உஷ்ணம் 100 டிகிரிக்கு மேல்பட்டு இருந்தால் ஒருவேளை பிராண அபாயம் நேரிடுமென்று நினைக்கவேண்டியது.

47. குழந்தைகள் சுரத்தாலாவது, கபரோகத்தாலாவது, சரும ரோகத்தாலாவது, வேறு எவ்விதமான ரோகத்தாலாவது, தேகம் சுட்கித்து மெலிந்து இருக்கிற தருணத்தில் மீன் எண்ணையை (Codliver oil) 1-2 விராகனிடைதினம் 2-3 தடவை காபி, ஒயின், டி, பால் இவைகளில் எதிலாகிலும் குழந்தையின் இஷ்டப்படி சேர்த்து 4-6 மண்டலம் வரையில் கொடுக்க குழந்தையின் தேகம் ஸ்தூலிக்கும், ரத்த விருத்தியாகும், தீபனம் உண்டாக்கும். இந்த மருந்தின் குணம் உடனே தெரியாது. நாள்ப்பட சாப்பிட்டால் தேகத்தில் ஊறி ரத்தத்தை சுத்தியாக்கி எப்பொழுதும் நிரோகியாய் இருக்கச் செய்யும்.

## 33-வது அத்தியாயம்.

## ஸ்திரி புருஷர்கள் சரீர சம்பந்தப்படுவதால் உண்டாகும் நன்மை, தீமை முதலியவைகளை இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

* நல்ல காற்றும், நல்ல ஜலமுள்ள சுத்தமான இடத்தில் பால்லியமுதல் வாசஞ்செய்துக் கொண்டிருக்கின்ற அதி சுகுமாரமான ஸ்திரீகள் தேக உழைப்பு கூடியமட்டும் எடுத்துக் கொள்ளுவதால் அவர்களின் அங்கக்கட்டுகள் பலத்தை அடையும். இந்த ஸ்திரீகள் எவ்வன பருவத்தில் கடினமான வேலைகள் செய்தபோதிலும் தேகத்தில் கஷ்டமாக தோன்றாது; அன்றியும் இந்த ஸ்திரீகளுக்கு பிரசவகாலத்திலுண்டாகும் பிரசவவேதனையை ஒரு வேதனையில் சேர்ந்ததாக இராது.

ஸ்திரிகள் 12 முதல் 16 வயதுக்குள் ருது ஆவார்கள். ருது என்பது கர்ப்பத்திலிருந்து வெளிப்படுகிற சிவந்த ஜலம் (திரவம்). இது 28 நாளைக்கு ஒரு தடவை ஸ்திரிகளுக்குக் காணும். இவ்விதமாக 40-45 வயது வரையில்தான் காணும்; பிறகு நின்று போகும். சில ஸ்திரிகள் ருது ஆகாமலே இருப்பார்கள். அவர்களுக்கு பலத்தையும் தேகபுஷ்டியையுமுண்டாக்கி, சௌக்கியப்படுத்துவதால் கருப்பையில் திரவம் (சிவந்த ஜலம்) உண்டாகி ருது ஆவார்கள். ஸ்திரிகளுக்குக்காணும் முதல் ருது முதல், ருது நிற்குங் காலமாகிய 40-45 வயது வரையிலும் புருஷர்கள் ஸ்திரிபோகம் செய்யலாம். ஆனால், பதிவிரதை, குருபத்தினி, எஜமான் பத்தினி, தூர ஸ்திரி, விதவை, தன் வயதுக்கு மேல்பட்ட வயதுள்ள ஸ்திரி, துயரமும் அச்சமுமுள்ள ஸ்திரி, ரோகஸ்திரி இவர்களோடு போகித்தால் தரித்திரமும், ரோகங்களும் உண்டாகும்.

16 வயதுள்ள ஸ்திரியும் 25 வயதுள்ள புருஷனும் சரிரமுழுவதும் மறைப்பில்லாமல் ஆசைவொன்றாகி அன்போடு வாரத்திற்கு ஒருதினம் இராக்காலத்தில் புணர்வதால் உண்டாகும் குழந்தைகளின் தேகம் திடமாக யிருக்கும், வியாதிகள் அணுகாது. அன்றியும் தாய், தந்தைகளின் தேகம் வெகு திடமாய் இருக்கும். மாதாந்த ருதுகண்ட முதல் 12 நாள்கள் வரையில் கருப்பைத் துவாரமானது இராக்காலத்தில் தாமரைப் பூவைப்போல் மூடிக்கொள்ளாமல் இருக்கும்; ஆனால் முதல் 3 நாள்களில் கருப்பையின்

---

* சில நாகூக ஸ்திரிகள் பால்யம் முதற்கொண்டு தேக உளைப்பில்லாமலிருப்பதால் பிரசவகாலத்தில் வேதனையை சகிக்காமல் மோசமடைகிறார்கள்.

முகத்துவாரமாகிய யோனித் துவாரம் அதிகமாய்த் திறந்திருப்பதால் சுக்கிலம் அதிகமாய் செல்லுகிறது. அப்பொழுது சுக்கிலமும் சுரோணிதமும் சமமாகத் திரண்டு அலிப்பிள்ளைகளாக பிறக்கிறது. இந்த காரணத்தினால்தான் முதல் 3 நாள்கள் அசுத்தம் சேரக்கூடாதென்றும், மற்ற 9 நாள்களில் இரட்டித்த, நாள்களில் சேர்ந்தால் ஆணாகவும், ஒற்றைப்பட்ட நாள்களில் சேர்ந்தால் பெண்ணாகவும் பிண்டோற்பத்தி உண்டாகும். இந்த பிண்டமானது 2 தரைகளால் மூடப்பட்டு கர்ப்பஜலத்தில் மிதந்துகொண்டு, நாளுக்கு நாள் விருத்தியை அடைந்து, 290 நாள்களான உடனே பிரசவ வேதனையை மேல் வயிற்றில் ஆரம்பித்து அடிவயிற்றில் போய் பரவும். அது முதலில் அற்பமாய் ஆரம்பித்து பிறகு மேல் மேல் அதிகரித்து, குழந்தை வெளிக்கு வந்து விழும். குழந்தை பிறந்து 20–25 நிமிஷத்தில் மாயை விழுந்துவிடும்.

## பிண்டம் விருத்தி அடைவதும், கருத்தரித்த மாதக் கிரமமாய்த் தோன்றும் குறிகளும் இதின் அடியில் சொல்லப்படும்.

| மாதம் | பிண்டம் விருத்தி அடைவதின் விவரம். | கருத்தரித்தால் கிரமமாய்த் தோன்றும் குறிகள். |
|---|---|---|
| 1. | எறும்பு அளவு | வாயில் ஜலம் ஊறும், வாந்தியாகும், சாப்பாடு செல்லாது. |
| 2. | 2 அங்குலம் அளவு | மேற்கண்ட குறிகளுடன், முலைக்காம்பு கருத்திருக்கும், ஸ்தனங்களில் நோய், கட்டி, பச்சைநரம்புகளின் தடிப்பு, இவைகள் காணும். |
| 3. | கால், கை, மூக்கு, கண், காது இவைகள் ஏற்படும் | வயிறும், ஸ்தனங்களும் பெருக்கும் முலைக்காம்பை நசுக்கினால் பால்வரும் ஸ்டெதஸ்கோபு (Stethos cope) அடி வயிற்றின் மேல் வைத்து காது வைத்துக் கேட்டால் பிண்டத்துக்கு போகும் ரத்தத்தின் சத்தம் கேட்கும். |
| 4. | ஆண், பெண்குறிகள், வாய் ஆசனம், நகம் இவைகள் ஏற்படும் | பிண்டம் அசைகிறது தாய்க்கு தெரியும். ஸ்டெதஸ்கோபு (Stethos cope) தொப்புள் சமீபத்தில் வைத்துக் கேட்டால் சிசுவின் மார்பு துடிப்பது கேட்கும். அது ஒருமினிட்டுக்கு 130–150 தடவை துடிக்கும். |

| | | |
|---|---|---|
| 5. | பிண்டம் திரும்பும், மயிர் முளைக்கும் | அடிவயிறு பெரிதாகி முன்னுக்கு வந்திருக்கும் மர்மஸ்தானத்தில் விரலால் மேலே தூக்கினால் கீழேயிருக்கும் சிசு கர்ப்ப ஜலத்தின்மேல் கிளம்பி அங்குலத்திற்கு தென்படும். |
| 6. | இமைகள் மூடியிருக்கும் | சுருக்கொடியில் ரத்தம் பரவுகிறதைக் கேட்கும். |
| 7. | இமைகள் கொஞ்சம் திரந்திருக்கும் | அடிவயிறு பெருதாகி 2-3 விரற்கடை தொப்புள் முன் வந்திருக்கும். |
| 8. | இமைகள் செவ்வையாய் திரந்திருக்கும் | மர்மஸ்தானத்தில் விரலால் பரீக்ஷிக்க சிசுவின் தலை தென்படும். அன்றியும் கையை கர்ப்பத்தின்மேல் வைத்தால் சிசு திரும்புகிறது தெரியும். |
| 9. | பூர்த்தியாயிருக்கு | 4வது மாதம் முதல் 8வது மாதம் வரை காணப்பட்ட குறிகள் எல்லாம் செவ்வையாய்த் தெரியும். |
| 10. | பூர்த்தியாயிருக்கு | மர்மஸ்தானத்திலிருந்து வெள்ளை நிறமுள்ள பிசின்போல் திரவம் வந்து கொண்டிருக்கும். இந்த மாதம் ஆரம்பத்தில் ஸ்திரீகள் பிரசவிப்பார்கள். |

## 34-வது அத்தியாயம்.

ரோகிகளுக்கு தகுதியான ஆகாரமாகிய கஞ்சி வகைகள் முதலியவைகளின் பெயர்களும், செய்முறைகளும் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

### கஞ்சிகள்

| கஞ்சிகளின் பெயர்கள் | கஞ்சிகள் செய்யும் விதிகள் | கஞ்சிகளின் உபயோகங்கள் |
|---|---|---|
| கோதுமை நொய் (ரவா) கஞ்சி (Wheat Flour) | கோதுமை நொய் ஜலத்தில் போட்டு நொய்யை கரையும் வரையில் காய்ச்சி பசும்பால் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடலாம். | கபரோகம், வாத ரோகம், சன்னி பாதசுரம், ஜலதோஷம் இவைகளுக்கு கொடுக்கலாம். |
| எவா கஞ்சி | எவா அரிசியை ஜலத்தில் போட்டு அரிசி கரைந்துபோகும் வரையில் காய்ச்சி வடித்து பால் சர்க்கரை ஏலரிசித்தூள் சேர்த்துச்சாப்பிடவும் | கபரோகத்துக்கும் தேகம் சுட்கித்து மெலிந்திருக்கிறவர்களுக்கும் கொடுக்கலாம். |
| பச்சரிசி கஞ்சி | பச்சரிசியை ஜலத்தில்போட்டு மேல்சொல்லியபடி கஞ்சியாக்கி வடித்து பால் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடவும் | பித்த எரிவு, பத்தியினம் சுக்கில நஷ்டம் இவைகளுக்கு கொடுக்கலாம். |
| நெற்பொரி கஞ்சி | மேல்சொல்லியபடி செய்து சாப்பிடவும் | பயித்திய ரோகிக்கு கொடுக்கலாம். |
| கொள்ளு கஞ்சி Horse gram Gunjee | கொள்ளு, பாசிப்பயிறு சமமாக சேர்த்து மேல் சொல்லியபடி செய்து சாப்பிடவும் | தீபனத்தையும், 10 யானைக்கு உள்ளபலத்தை உண்டாக்கும். |
| சிறுபயிறு கஞ்சி | சிறுபயிறும் பச்சரிசியும் சமமாக சேர்த்து மேல் சொல்லியபடி | பித்தரோகி களுக்கு கொடுக்கலாம். |
| புனற்பாகம் | வடித்த அன்னத்தை ஜலத்தில் போட்டு அன்னங்கரையும் வரை காய்ச்சி வடித்து தேவையான உப்பை சேர்த்துக் கொடுக்கவும். | வாதபித்த சிலேஷ்ம ரோகங்களுக்கும், சகல சுரங்களுக்குங் கொடுக்கலாம் |

| | | |
|---|---|---|
| பார்லி அரிசி கஞ்சி (Barley water) | 2 1/2 அவுன்ஸ் பார்லி அரிசியை ஜலமிட்டு நன்றாய்க் கழுவி 1/2 பயிண்ட் ஜலத்தில் போட்டு கொஞ்சம் கொதிக்கவைத்து,அந்த நீரை இறுத்துவிட்டு, 3 1/2 பயிண்ட் கொதிக்கிற ஜலத்தைவிட்டு 2 பயின்ட் ஆகும்படி சுண்டக்காய்சி வடித்துக் கொடுக்கவும். | சினிக்தகாரி - பிரமேகம், சுரங்களில் காணும் தாகம், இருமல் இவைகளுக்கு கொடுக்கலாம். |
| அரோரூட் மாவு கஞ்சி (Arrow root gunjee) | ஒருகரண்டி மாவை கொஞ்சம் ஜலத்தில் கரைத்து பிறகு ஒரு பயிண்ட் ஜலத்தைச் சேர்த்து காய்ச்சிக் கொடுக்கவும். பால் சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்கலாம். | பாலர்களுக்கும், குழந்தைகளுக்கும் ஆகாரமாக கொடுக்க இது வெகு தகுதியானது. |
| கார்ன் பிலோர் கஞ்சி (Corn flour gunjee) | மேற்சொல்லியபடி செய்து கொடுக்கவும் | சீதபேதிக்கு கொடுக்க குணமாகும். |
| ஜவ்வரிசி கஞ்சி (Sago gunjee) | ஜவ்வரிசியை ஜலத்தில் போட்டு அரிசிகரைந்து போகும் வரையில் காய்ச்சிக் கொடுக்கவும். பால் சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்கலாம். | நோயாளிகளுக்கு இது வெகு நல்ல ஆகாரம் |

## அன்னங்கள், பலகாரங்கள்

| அன்னங்களின், பலகாரங்களின் பெயர்கள் | அடியில்கண்ட ரோகங்களை உடையவர்கள் சாப்பிடலாம். |
|---|---|
| சர்க்கரைப் பொங்கல் | அரோசிகம், வாந்தி திரும், பத்தியத்துக்கு உதவாது. |
| பால் பொங்கல் | வாதம், பித்தம், ரத்தபித்தம் திரும். |
| பருப்புப்பொங்கல் | வீரிய விருத்தியாக்கும், பித்தம் தீரும். |
| புளியோதனம் | அரோசிகம் திரும், பத்தியத்துக்கு உதவாது. |
| மிளகோதனம் | தீபனகாரி - குடல்வாயு, இரைச்சல், பித்தம், கபம் திரும். |
| எள்ளோதனம் | பயித்தியம் திரும். பலம் உண்டாகும். |
| ததியோதனம் | உட்சூடு, பித்தரோகம் திரும். |

| | |
|---|---|
| உளுந்தோதனம் | பித்தம், சிலேஷ்மம் வாதம் தீரும். |
| சர்க்கரான்னம் | வீரியவர்த்தனகாரி, உஷ்ணசாந்தகாரி |
| உளுந்தின் வடை | வாதரோகம் தீரும். |
| தோசை | பித்தம் வாதசிலேஷ்மம் தீரும். |
| இட்டலி | பித்தம் தீரும். |
| முறுக்கு | வாதம் தீரும். |
| தேன் குழல் | மந்தம், தாகம், வாயு உண்டாகும். |
| அதிரசம் | கப பித்தரோகிகளுக்கு உதவாது. |
| பிட்டு | ஸ்திரிகளின் உதிரப்பெருக்கு தீரும். |
| மோதகம் | வாதம், அக்கினிமந்தம், கபம் தீரும். |
| கோதுமை ரொட்டி | பலம், தீபனம், மோகம் உண்டாகும். |
| உளுந்துமாவின் அப்பளம் | ஆமம், கபம், தீரும். |
| சோற்றப்பளம் | திரிதோஷம் தீரும். |
| பழஞ்சோறு | இரவில் பூட்டிய அன்னத்தை அந்நீராகாரத்துடன் சூரியோதய காலத்தில் அருந்த உதராக்கினி, சுக்கிலவிருத்தி, தேஜசு உண்டாகும். |
| கம்புச்சாதம் | இருமல், இரைப்பு தீரும். |
| திணைச்சாதம் | வீரிய வர்த்தனகாரி, பித்தரோகம் வாத ரோகம் தீரும். |
| சாமைச்சாதம் | வாதம், க்ஷயம், சிலேஷ்மம், வீக்கம் தீரும். |
| வரகுச்சாதம் | கபரோகம், சருமரோகம், பித்தரோகம் தீரும். |
| சோளச்சாதம் | சருமரோகம் தீரும், மருந்தை முறித்துவிடும். |
| காடைக்கண்ணிச்சாதம் | கபவாதரோகம் தீரும். |

## 35-வது அத்தியாயம்.
## தயிலங்கள்

சகலபுவன கர்த்தாவானவர் ஆயுள்வேதத்தை பார்வதி தேவியாருக்கு அனுக்கிரகஞ்செய்ய, அந்த பார்வதிதேவியார் நந்தி தேவியாருக்கு அருளிச்செய்ய, அவர் தேவர், முனிவர், சித்தபுருஷர் இவர்களுக்கு உபதேசித்தருளினார்.

அநேக கிரந்தங்களைப் பார்வையிட்டு எளிதில் செய்யக் கூடியதுமான அநேக நல்ல தயிலங்களை சர்வஜன உபகாரமாக இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். அவைகளில் சிலது உள்ளங்காலில் தேய்த்தால் நேத்திர ரோகங்கள் (94)ம் கண்களுக்குக் கட்டினால் கர்ணரோகங்கள் (25)ம் செவிகளிலிட்டால் சிரஸ்தாப ரோகமும், சிரசில் தேய்த்து ஸ்நானஞ்செய்தால் தேகத்திலுள்ள சகலவித ரோகங்களும் குணமாகும். ஆகையால் தயிலங்களை விதிகளின் படி தேய்த்து ஸ்நானஞ்செய்து வருகின்றவர்கள் எப்பொழுதும் நிரோகிகளாகவே இருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

**தைலங்கள் தேய்த்துக்கொள்ளும் போது சிரசில் தயிலம் ஊறவேண்டிய காலமும், ஸ்நானஞ் செய்யும் காலமுங்காண்க**

| ஸ்நானஞ்செய்யும் மாதங்களின் பெயர்கள் | தைலம் ஊறவேண்டிய நாழிகைகள் | உதயமுதல் இவ்வளவு நாழிகைகள் ஸ்நானஞ் செய்ய வேண்டியதென்பது. |
|---|---|---|
| சித்திரை | 1 | 5 |
| வைகாசி | 1 | 5 |
| ஆனி | 1 | 8 |
| ஆடி | 1 | 8 |
| ஆவணி | 1 | 4 |
| புரட்டாசி | 3 | 4 |
| ஐப்பசி | 3 | 4 |
| கார்த்திகை | 3 | 4 |
| மார்கழி | 2 | 2 |
| தை | 2 | 2 |
| மாசி | 3 | 3 |
| பங்குனி | 3 | 3 |

**அப்பியங்க ஸ்நானத்தின் இன்மைகளும், அரைப்பு வகைகளும் காண்க**

| தயிலம் முதலியவைகளின் பெயர்கள் | அப்பியங்க ஸ்நானத்தின் இன்மைகள் | அரைப்பு பதார்த்தங்கள் | அப்பியங்க ஸ்நானஞ்செய்யவேண்டிய வாரங்கள் | |
|---|---|---|---|---|
| | | | புருஷர்கள் | ஸ்திரீகள் |
| நல்லெண்ணெய் | பஞ்சேந்திரியங்களின் தெளிவு, ரோம வளர்ச்சி, நற்றொளி பலம் உண்டாகும். | மணிப்புங்கின் காய்கள் | | |
| தயிலம் | - மேற்படி - | சீயக்காய், ஈங்கைப்பட்டை, | புதன்கிழமை | செவ்வாய் கிழமை |
| பசும்நெய் | இசிவு, பயித்தியம், ரத்தபித்தம் மூர்ச்சை, மூளைக்கபம் குணமாகும். | பச்சைப் பயிறு. | சனிக்கிழமை | வெள்ளிக் கிழமை |

☞ உசிலந்தூள், இலுப்பைப் புண்ணாக்கு இவ்விரண்டும் ரணம், வரக்ஷீ இவைகளுக்கு உபயோகிக்க வேண்டியது.

## முக்கூட்டுத் தயிலம் (எண்ணெய்)

| தேக லட்சணம் | நெய் பங்கு | நல்லெண் ணெய் பங்கு | ஆமணக்கு எண்ணெய் பங்கு | செய்யும் விதம் | ரோக நிவர்த்தி |
|---|---|---|---|---|---|
| வாத தேகத்துக்கு | 3 | 2 | 3 | இவ்விதமாய் சேர்த்து காய்ச்சி முழுகிவரவும். | திரிதோஷத் தால்வரும் ஜலசம்மந்த மான ரோகங்கள் |
| பித்த தேகத்துக்கு | 3 | 1 | 2 | | |
| சிலேஷ்ம தேகத்துக்கு | 2 | 3 | 1 | | |

## ஐங்கூட்டுத்தயிலம் (எண்ணெய்)

புங்கு, ஆமணக்கு, எள்ளு, வேம்பு, புன்னை, இவைகளின் எண்ணெய்கள் வகைக்குப் படி 1 சேர்த்து காய்ச்சி உடம்பில் பூசிவர இசிவு, சந்நி, வாதம், மஹாவாதம், கபரோகம் குணமாகும்.

## மகா சந்தனாதித் தயிலம்.

சந்தனத்தூள் பலம் 100, கோரைக்கிழங்கு, நன்னாரிவேர், விலாமிச்சு வேர், வெட்டிவேர், சீந்தில்தண்டு, சிற்றாமுட்டி, பேறாமுட்டி, அமுக்கிறாக் கிழங்கு, பற்படாகம், வகைக்குப் பலம் 20 இவைகளை இடித்து 40 மரக்கால் ஜலத்தில்போட்டு (1/16) பதினாரிலொன்றாகும்படி எரித்து வடித்தக் கசாயத்தில் பொன்னாங்காணிச்சாறு, செவ்விளநீர்ஜலம், வகைக்குப் படி 10, கர்பூரவல்லி, தாழை விழுது, சிறுகீரை, வல்லாரை, பொடுதலை, பொற்றலைக்கரிப்பான்,. சிறுசின்னி, நெல்லிக்காய், இவைகளின் சாறு, பசுவின் நெய், வகைக்குப் படி 5, நெல்லெண்ணெய் படி 15, பசும்பால் படி 20, வெள்ளாட்டுப்பால், தயிர்த் தண்ணீர் வகைக்குப் படி 10, இவைகளைச் சேர்த்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்விமுள்ளி, கஸ்தூரிமஞ்சள், ஏலம், பூஞ்சாந்துப்பட்டை, கிளியூரம் பட்டை, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, பச்சையிலை, பூலாங்கிழங்கு, செவ்வள்ளிக்கொடி, சண்பகப்பூ, செங்கழுநீர்கிழங்கு, சீரகம், கருஞ்சீரகம், கோஷ்டம், அக்கிராக்காரம், மந்திஷ்டிவேர், பலகைமஞ்சள், மூத்தகாசு, வலம்புரிக்காய், வகைக்குப் பலம் 2½, இவைகளை பசும்பாலால் அரைத்து கரைத்து எரித்து வடித்து அதில் புனுகு, கோரோசனை, குங்குமப்பூ, வகைக்கு விராகனிடை 5, பொடித்துப்போட்டு கால்மண்டலம் நெல்லுக்குள்

வைத்தெடுத்து ஸ்நானம் செய்துவர கை, கால், எரிவு, பிரமேகம் (21), க்ஷயம் (4) கிரந்தி (9) கண்டமாலை (18) குஷ்டம் (18) நீரிழிவு, நீர் சிறுப்பு. கண்ணெரிவு, கண்புகைச்சல், பிரமியம், கற்றாழை நாற்றம், அஸ்திசுரம், அஸ்திவெட்டை, பித்தமயக்கம், புண், புரை, புழுவெட்டு, சொறி, சிரங்கு, குணமாகும்.

## மஹா வில்வாதித்தயிலம்

வில்வவேர், சீந்திற்கொடி, விலாமிச்சவேர், வாழைக்கிழங்கு, கோரைக் கிழங்கு வகைக்குப் பலம் 4 இடித்து 16 படி ஜலத்தில் போட்டு எரித்து எட்டிலொரு பாகமாக்கினக் கசாயத்தில், கொம்பரக்குச் சேர் 1 அரைதூணி ஜலத் தில்போட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சின கசாயமும், 2½ படி நல்லெண்ணெயும், 2½ படி பசுவின் நெய்யும், சேர்த்து, அதில் மர மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், அதிமதுரம், கோஷ்டம், சீரகம், கருஞ்சீரகம், சந்தனம், கிளியூரம்பட்டை, பூஞ்சாந்துப்பட்டை, செவ்வள்ளிக் கிழங்கு, பச்சை யிலை, லவங்கப்பட்டை, பூலாங்கிழங்கு, ஏலம் வகைக்கு பலம் ½ இவைகளை பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து அரைமண்டலம் நெல்லுக்குள்வைத்து எடுத்து ஸ்நானம் செய்துவர மேகம் (20), பித்தம் (40), குன்மம் (8), சிரோரோகம் (19) முதலிய அநேககொடிய ரோகங்கள் தீரும்.

## ராஜாங்க கொம்பரக்குத்தயிலம்

கொம்பரக்கு பலம் 100, நாலு கலம் ஜலத்தில் பொடித்துப் போட்டு எரித்து எட்டிலொன்றாக்கின கசாயத்தில் பசும்பால் படி 60, தயிர்த் தண்ணீர் படி 12, புளித்தகாடி படி 24, இவைகளைச் சேர்த்து அதில் கோஷ்டம், ஜடாமாஞ்சில், லவங்கப்பட்டை, சதகுப்பை, கடுகு ரோகிணி, கிளியூரம்பட்டை, பூஞ்சாந்துப்பட்டை, பச்சையிலை, பூலாக்கிழங்கு, செவ்வரளிக்கிழங்கு, லவங்கபத்திரி, கஸ்தூரி மஞ்சள், அதிமதுரம், சந்தனம், சீரகம், கருஞ்சீரகம், ஏலம் வகைக்கு, விராகனிடை 24 இவைகளை பசும் பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து நெல்லுக்குள் அரைமண்டலம் வைத்து எடுத்து ஸ்நானஞ்செய்துவர சுரம் (64) காசம் (5), பாண்டு (5), சூலை (18), பித்தவெட்டை, தலைமயக்கம் வாய்ஊரல், வெட்டை, தேகவெளுப்பு முதலிய பற்பல கடூரரோகங்கள் குணமாகும்

## மஹா மருகாமலத் தயிலம்.

மிருகாமலம், பொன்னாங்காணி, குமரி, சிறுக்கீரை, இவைகளின் சாறு. பசும்பால் வகைக்குப்படி 4, செவ்விளநீர் ஜலம் படி 16, நல்லெண்ணெய்

படி 6, இவைகளைச் சேர்த்து, அதில் ஏலம், கோஷ்டம், அதிமதுரம், பூலாக்கிழங்கு, பச்சியிலை, குரோசாணி ஓமம், கஸ்தூரிமஞ்சள், ஜடாமாஞ்சில், ஜாதிப்பத்திரி, ஜாதிக்காய், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், பூஞ்சாந்துப்பட்டை, சோம்பு, வால்மிளகு வகைக்கு விராகனிடை 6 இவைகளை பசும்பாலால் அரைத்து கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்துவர நேத்திராகாசம் (5), நேத்திரரோகங்கள் (94) அந்திமாலை, பித்தவெட்டை, பித்தவாயு, அஸ்திவெட்டை, மயக்கம், தேக எரிவு, கை கால் எரிவு, உஷ்ணரோகங்கள் முதலிய அநேக பலமான ரோகங்கள் குணமாகும்.

## மஹா அசுவகெந்தி பலாலாக்ஷாத் தயிலம்

அசுவகெந்திக் கிழங்கு, சிற்றாமுட்டிவேர், வகைக்குப் பலம் 15, வெள்ளெருக்குவேர், நன்னாரிவேர், சீந்திற்கொடி, விலாமிச்சுவேர், கோரைக்கிழங்கு, நெய்க்கட்டிவேர், அவுரிவேர், நார்த்தைவேர், துளசிவேர், வெட்டிவேர், அகிற்க்கட்டை, தேவதாரக்கட்டை வகைக்குப் பலம் 4, தூணிஜலத்தில் போட்டு எரித்து (1/16) பதினாறிலொன்றாக்கின கசாயத்தில், நல்லெண்ணெய், பசும்பால், தயிர்த்தண்ணீர், வகைக்கு சேர் 5, நெல்லி வற்றல், கஸ்தூரிமஞ்சள், அதிமதுரம், கோஷ்டம், ஜடாமாஞ்சில், சீரகம், கருஞ்சீரகம், பூஞ்சாந்துப்பட்டை, சந்தனம், வரலி மஞ்சள், கடுகுரோகிணி, செவ்வள்ளிக்கிழங்கு, பச்சையிலை, பூலாக்கிழங்கு, கிளியூரம்பட்டை, சதகுப்பை, லவங்கப்பட்டை, ஏலம், வகைக்குப் பலம் ½ இவைகளை பசும்பாலால் அரைத்து, கரைத்து, எரித்து, வடித்து, சீசாவில் போட்டு நெல்லுக்குள் அரைமண்டலம் வைத்துஎடுத்து ஸ்நானஞ் செய்துவர மேகம் (20), சூலை (18), சுரம்(64), வாதம் (80), பாண்டு (5), சுவாசம் (5), காசம் (5), பித்தவெட்டை, அக்கினிமாந்தம், கண்புகைச்சல், கை கால்காந்தல், தேக எரிவு, முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும். **பத்தியம் - புளி, புகையிலை, ஸ்திரிபோகம், கசப்புபதார்த்தங்கள் நீக்கவும்.**

## குமரி சஞ்சீவித்தயிலம்.

குமரிச்சாறு, நல்லெண்ணெய், பசும்பால்வகைக்குப் படி 3 சேர்த்து அதில் கடுகுரோகிணி, கஸ்தூரிமஞ்சள், சந்தனம், கிராம்பு, அக்கிறாக்காரம், செவ்வள்ளிக் கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய் நெல்லிவற்றல், கோஷ்டம், ஜடாமாஞ்சில், சீரகம், அதிமதுரம், பூஞ்சாந்துப்பட்டை, ஏலம், பச்சையிலை, பூலாக்கிழங்கு, லவங்கப்பத்திரி,

லவங்கப்பட்டை, சண்பகப்பூ, ஆனைத்திப்பிலி, மந்திஷ்டிக்கிழங்கு, சோம்பு, மஞ்சள், வகைக்குப் பலம் 3/4 பசும்பாலால் அரைத்து, கரைத்து, எரித்து, வடித்து, சீசாவில் போட்டு நெல்லுக்குள் கால்மண்டலம் வைத்து எடுத்து ஸ்நானஞ்செய்து வர மேகம் (20), சுரம் (64), பித்தம் (40), குன்மம் (8), பாண்டு (5), உடல்வெளுப்பு, பித்தவரட்சி முதலிய மஹாகொடிய ரோகங்கள் குணமாகும்.

## மார்த்தாண்ட பயிரவத் தயிலம்

கஞ்சா, வெற்றிலை, பொன்னாங்காணி, கையாந்தகரை இவைகளின் சாறு, நல்லெண்ணெய் வகைக்குப்படி 1, சேர்த்து அதில் வால்மிளகு, சீரகம், அதிமதுரம், மிளகு, வகைக்கு விராகனிடை 4, பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்துவர தடித்த பீநசம், சீறாய் பீநசம், ஒற்றலைவலி குணமாகும்.

## விளாரித் தயிலம்

4 வீசை விளாரி சமூலம் கொண்டுவந்து சிறுத்துண்டுகளாக நொறுக்கி அத்துடன் சிவனார் வேம்பு ½ வீசை நொறுக்கிச் சேர்த்து. ஒரு பெரிய பாண்டத்தில் போட்டு செட்டியால் மூடி சீலை மண் செய்து அடியில் ஒரு சிறு துவாரமிட்டு தரையில் ஒரு குழியை நோண்டி அதில் ஒருசிறு பாத்திரம் வைத்து அதின்மேல் மேற்கூறிய பாண்டத்தின் துவாரம் பாத்திரத்தின் மத்தியில் வரும்படியாக வைத்து மண்ணால் மூடி, அதின்மேல் வரறாகல் புடம் போடத்தயிலம் பாத்திரத்தில் இறங்கும். அதை எடுத்து உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்க, கருங்குஷ்டம், செங்குஷ்டம், குஷ்டம் (18) குணமாகும்.

## குஷ்டநாசத் தயிலம்

வில்வப்பழம் 50, எட்டிவிதை, புங்கம் விதை வகைக்குப்படி 2 இவைகளை பொடித்து ஒரு மண்பாண்டத்தில் போட்டு விளாரித்தயிலம் இறக்கும் விதமாய் இதையும் இறக்கி ½ அல்லது ஒரு விராகனிடை வீதம் தினம் கொடுக்க குஷ்டம் (18) தீரும். மேலுக்கு பூசிவர ரணங்கள் குணமாகும்.

## அமிர்தவல்லித் தயிலம்

நெல்லிக்காய், கற்றாழை, கையாந்தகரை இவைகளின் சாறு, முலைப்பால், வகைக்குப்படி 2, நல்லெண்ணெய்ப்படி 3, இவைகளைச் சேர்த்து அதில் சந்தனம், கோஷ்டம், அதிமதுரம், நன்னாரிவேர், வெட்டிவேர், விலாமிச்சுவேர், வகைக்குப்பலம் 1, பசும்பாலால் அரைத்துக்

கரைத்து, எரித்து, வடித்து ஸ்நானஞ் செய்துவர நேத்திர ரோகங்கள் (94), கர்ணரோகங்கள் (25), சிரோ ரோகங்கள் (19) குணமாகும்.

## சர்வசித்தித் தயிலம்

நல்லெண்ணெய், நெல்லிக்காய்ச்சாறு, கரிப்பான் சாறு வகைக்குப் படி 1, பசும்பால் படி 4, இவைகளைச் சேர்த்து அதில் ஒருபலம் அதிமதுரம், பசும்பாலால் அரைத்துப் போட்டுக்கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்துவர பித்தம் (40), கண்புகைச்சல், கை கால் எரிவு, தேக எரிவு, முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

## ராஜ செம்முள்ளி சஞ்சீவித் தயிலம்

செம்முள்ளி சமுலம் நொறுக்கி 100 பலம் தூக்கி, 4 மரக்கால் ஜலத்தில் போட்டு எரித்து எட்டிலொன்றாக்கின கசாயத்தில் நல்லெண்ணெய் படி 1/2 விட்டு, அதில் கருஞ்சீரகம், கோஷ்டம், கற்றாழை வேர், தக்கோலம் வகைக்கு பலம் 1, ஜலத்தாலரைத்துக் கரைத்து எரித்து பதத்தில் எடுத்துவைத்து ஸ்நானஞ்செய்துவர சுவாசகாசம் (5), கபசம்பந்தமான சகல ரோகங்களும் குணமாகும்.

## நாகேசுரத்தயிலம்

4 படி நல்லெண்ணெயில் பசும்பால் 2 படி, சீராசெங்கழுநீர்க்கிழங்கு, கற்றாழை, நெல்லிக்காய், சீந்தில்கொடி, கரிப்பான், இவைகளின் சாறுவகைக்குப் படி 1 சேர்த்து, அதில் 12 பலம் அதிமதுரத்தை பசும்பாலால் அரைத்துக்,கரைத்து, எரித்து வடித்து ஸ்நானஞ்செய்து வர பித்தம் (40), தலைச்சுற்றல், கண்புகைச்சல், கை கால்எரிவு, அஸ்திச் சூடு தீரும்.

## உலகோத்தமத்தயிலம்.

நல்லெண்ணெயும், பசும்பாலும், பொன்னாங்காணி, முசுமுசுக்கை, நெல்லிக்காய், சீந்திற்கொடி இவைகளின் சாறும் வகைக்குப்படி 4 சேர்த்து, அதில் ஏலம், கிராம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, அதிமதுரம், முத்தகாசு, சந்தனம், ஜடாமாஞ்சில், சண்பகப்பூ, வகைக்குப்பலம் 1 பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்துவர பிரமை, தலைசுற்றல், வாந்தி, தேகளரிவு, விடாதசூடு, கண்புகைச்சல் தீரும்.

## சந்திரகாசத்தயிலம்

நல்லெண்ணெய், பசும்பால், வகைக்குப்படி 1 சேர்த்து அதில் சீரகம், மிளகு, அதிமதுரம், வகைக்குப்பலம் 1, சண்பகமொட்டு பலம் ½ இவை களைப் பசும்பாலால் அரைத்து கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ்

செய்து வர—இருமல், ஈளை, காசம், முதலிய பலமான கபரோகங்கள் குணமாகும்.

## கீழாநெல்லித்தயிலம்

8 வீசை கீழ்க்காய் நெல்லிசமூலம் இடித்து 3 மரக்கால் ஜலத்தில் போட்டு எரித்து ஒரு மரக்காலாக்கின கசாயத்துடன், ஒரு படி நல்லெண்ணெய் சேர்த்து காய்ச்சி பதத்தில் வடித்து, அதில் கற்கண்டு பலம் ½ பொடித்துப் போட்டு ஸ்நானஞ்செய்து வர - ரத்தபித்தம், கிறுகிறுப்பு, கை, கால் எரிவு, உடம்பு வெளுப்பு, கண்புகைச்சல், முதலிய சகல பித்தரோகங்கள் தீரும். பத்தியம்:— புளி தள்ளவும்.

## பொன்னாங்காணித்தயிலம்

பொன்னாங்காணிச்சாறு, பசும்பால், நல்லெண்ணெய், வகைக்குப்படி 1 சேர்த்து அதில் அதிமதுரம், அதிவிடையம், வகைக்குப்பலம் 1 பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்துவர கை, கால் எரிவு, கண் எரிவு, கபால சூலை, தேக எரிவு, தேகவலி, குன்மம், முதலியவைகள் குணமாகும்.

## கையாந்தகரைத் தயிலம்

கையாந்தகரைச் சாறு, நெல்லிக்காய்ச் சாறு, பசும்பால், வகைக்குப் படி 1½, நல்லெண்ணெய் படி 2, இவைகளைச் சேர்த்து அதில் வெட்டிவேர், விலாமிச்சு வேர், அதிமதுரம், கோஷ்டம், ஏலம், கிராம்பு, சண்பகப்பூ, சந்தனம், வகைக்குப் பலம் ½ பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்து வர கண்படலம், கண்காசம் (5) முதலிய நேத்திரரோகங்கள் (94)ம் குணமாகும்.

## முசு முசுக்கைத் தயிலம்

முசு முசுக்கை, கையாந்தகரை, தாழைவிழுது, பொன்னாங்காணி, இவைகளின் சாறு, செவ்விளநீர் ஜலம், முலைப்பால், நெல்லெண்ணெய் வகைக்குப்படி 2 சேர்த்து மூன்றுநாள் வெய்யிலில் வைத்து, பிறகு அதில் கோஷ்டம், செங்கழுநீர்க் கிழங்கு, சந்தனம், அதிமதுரம், விலாமிச்சுவேர், வெட்டிவேர் வகைக்கு விராகனிடை 2, குங்குமப்பூ விராகனிடை ¼, கிராம்பு விராகனிடை 1¼ இவைகளை பசும்பாலால் அரைத்து, சேர்த்து, எரித்து, வடித்து, ஸ்நானஞ்செய்துவர பித்தகாசம், கண்புகைச்சல், கழ்றாழை நாற்றம், பித்தமயக்கம், சொறி, சிரங்கு, கண்ணெரிவு முதலிய அநேக ரோகங்கள் குணமாகும்.

## நெல்லிக்காய்த் தயிலம்

நெல்லிக்காய்ச்சாறு, கையாந்தகரைச்சாறு வகைக்குப் படி 1, பசும்பால், நெல்லெண்ணெய் வகைக்குப்படி ½ இவைகளைச் சேர்த்து அதில் அதிமதுரம் பலம் ½ பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்துவர கண்படலம், கண்காசம் (5) கண்ணெரிவு, கபாலவரட்சி, முதலிய நேத்திரரோகங்கள் (94)ம் குணமாகும்.

## கருஞ்செம்பைத் தயிலம்

2 படி கருஞ்செம்பைச் சாறும், 1 படி முலைப்பாலும், 2 படி நல்லெண்ணெயில் சேர்த்து, அதில் பூண்டு, வசம்பு, வகைக்குப் பலம் 1/2, வால்மிளகு பலம் 1, மிளகு பலம் 2, இவைகளை பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்துவர நேத்திரவாயு குணமாகும்.

## பீநச நாச கணபதித் தயிலம்

இஞ்சிச்சாறுபடி ½, நல்லெண்ணெய் படி ½ பசும்பால் படி ¼, நொச்சிச்சாறு படி ¼ இவைக்ளை சேர்த்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்துவர பீநசரோகம் (18), மண்டையிடி, கபாலசூலை குணமாகும்.

## காளித்தயிலம்

2 சேர் நல்லெண்ணெயில் அதிமதுரம் பலம் 2, மிளகு பலம் ½, இவைகளை பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்துவர நேத்திரத்தில் இறங்கின மேகநீர் குணமாகும்.

## இஞ்சித்தயிலம்

இஞ்சிச்சாறும், நல்லெண்ணெய்யும் சமமாகச் சேர்த்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்துவர கர்ணரோகம் (25), சிரோரோகம் (19) குணமாகும்.

## சீரகத்தயிலம்

1½ சேர் நல்லெண்ணெயை காய்ச்சி, அதில் 2 பலம் நற்சீரகத்தைப் போட்டு, சீரகத்தை உடையும்பதத்தில் வடித்து ஸ்நானஞ்செய்து வர--தலைச்சுற்றல், ஒற்றைத் தலைவலி, சிரோரோகம் (19) குணமாகும்.

# 36-வது அத்தியாயம்

## எண்ணெய்கள்

சர்வாந்தரயாமியாயிருக்கின்ற கடவுளானவர் அனுக்கிரகஞ் செய்திருக்கின்ற எண்ணெய்களில் அநேக நல்ல லகுமுறைகள் சகல

ஜனங்களுக்கும் உபயோகமாகும் பொருட்டு இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். அவைகளை சாப்பிட்டால் குடல் முழுமையும் வியாபித்து ஜீர்ண உறுப்புகளுக்கு வலுவை உண்டாக்கி வாதபித்த சிலேஷ்ம நீர் களை வெளியாக்கி வயிற்றில் யாதொரு வேதனையும் உண்டாக்காமல் பேதியாகும்படி செய்து சிரோரோகங்கள், மேகரோகங்கள், சூலைரோகங்கள், கிரந்தி ரோகங்கள், கபரோகங்கள், அண்டரோகங்கள் முதலிய பற்பல மஹாபயங்கரமான ரோகங்களை அதிசீக்கிரத்தில் நிவர்த்தியாக்கும். விரேசனகாரிகளில் எண்ணெய்கள்தான் மஹா சிலாக்கியமானவைகள். ஆகையால் எண்ணெய்கள் சாப்பிட்டு வருகின்றவர்களுக்கு வியாதிகளே அணுகாது.

## குஷ்டக் குடாரி யெண்ணெய்

புங்கு, புன்னை, தான்றி, அழிஞ்சி இவைகளின் வித்து, மிளகு, கடுக்காய், கார்போகரிசி, இவைகளை சமமாகச் சேர்த்து அமுரியில் 20 நாள் ஊறவைத்து உலர்த்தி ஒரு மண்பாண்டத்தில்போட்டு அகலால் மூடி வலுவாய் சீலைமண் செய்து அந்த பாண்டத்தின் அடியில் ஒரு சிறு துவாரமிட்டு, தரையில் ஒரு குழியைவெட்டி அதில் ஒரு சிறு பாத்திரம் வைத்து அதின் மேல் அந்த பாண்டத்தின் துவாரம் பாத்திரத்தின் மத்தியில் வரும்படியாக வைத்து குழியை மண்ணால்மூடி அதன்மேல் வரறாகல்புடம் போட தயிலம் பாத்திரத்தில் இறங்கும். அதையெடுத்துக்கொண்டு ஒரு விராகனிடை வீதம் வெற்றிலையில் வைத்து 48 நாள் உள்ளுக்குச் சாப்பிட்டு, மேலுக்கும் பூசி வர குஷ்டம் (18), மேகம் (20), வெடிசூலை, கண்டமாலை, பிளவை, ரணம், புற்று, சொறி, தலைப்புழுவெட்டு தீரும். தலைக்கு தடவிவர நரைமயிர்க் கருக்கும். உப்பில்லாப் பத்தியம்.

## காலபயிரவ எண்ணெய்

சுத்திசெய்த சேங்கொட்டை 30, சுத்திசெய்த கந்தகம் விராகனிடை 10, இவைகளைச் சேர்த்து ¼ படி சிற்றாமணக்கெண்ணெயில் போட்டு எரித்து சேங்கொட்டை வெடிக்கும் சமயத்தில் தயிலத்தை வடித்து 2 விராக னிடை ரசமும், 2 விராகனிடை தயிலமும், 2 விராகனிடை ஆவின் நெய்யும் சேர்த்து மிஸ்ரித்து ஆறு பங்குகளாக்கி ஒரு பங்குவிதம் தினம் 2 தடவைச் சாப்பிட்டுவர கண்டமாலை (18), மேகரணம், மேகஊறல், கை, கால் முடக்கு, சூலை (18), தடிப்பு, சொறி, வெள்ளைவிழுதல், குஷ்டம் (18), பெரும்வியாதி, கிரந்தி (5), அரையாப்பு, படர்த்தாமரை, துடைவாளை, லிங்கப்புற்று, யோனிப்புற்று முதலிய அநேக

பயங்கரமான ரோகங்கள் தீரும். பத்தியம்:— உப்பு; புளி; வாயு பதார்த்தங்கள் நீக்கி, பசும் பால், நெய் சேர்த்து சிற்றாமணக்கெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்துவரவும்.

## சந்திரபிரபாவ எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய்; வெங்காயச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, புளியாரைச்சாறு, வல்லாரைச்சாறு, வகைக்குப் படி 1 சேர்த்து, 3 நாள் சூர்யபுடம் வைத்து பிறகு தீபாக்கினியாக எரித்து வடித்து, சீசாவில் போட்டு, அதில் கோரோசனை விராகனிடை ½ சூர்ணித்துப்போட்டு தினம் காலை மாலை 2 விராகனிடை வீதம் சாப்பிட்டுவர மூலச்சூடு, கைகால் எரிவு, சொறி சிரங்கு தீரும். இச்சாபத்தியம்.

## வாதராக்ஷச எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், பசும்நெய், வாதமடக்கி இலைச்சாறு, பிரமி இலைச்சாறு, கழற்சியிலைச்சாறு வகைக்குப்படி 1 சேர்த்து, அதில் முடக்கொத்தான் கொழுந்து, பொடுதலைக்கொழுந்து, வெள்ளைப்பூண்டு வகைக்குப்பலம் 4; திப்பிலி, இந்துப்பு, கருஞ்சீரகம் வகைக்கு விராகனிடை 8; பெருங்காயம் விராகனிடை 4; கழற்சிப்பருப்பு விராகனிடை 12; இவைதளை மேற்படி சாற்றால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து தினம் காலை மாலை 1-2 விராகனிடை கொடுத்து வர குடல்வாதம், அண்டவாதம், முதலிய சகல குடல்ரோகங்களும், அண்ட ரோகங்களும் குணமாகும். இச்சாபத்தியம்.

## வாதகோபநாச எண்ணெய்

வில்வவேர், ஆடாதொடைவேர், கடுக்காய்வேர், வெண்சாரணைவேர், சித்திரமூலவேர். சரக்கொன்றைவேர், வகைக்குப்பலம் 1, இடித்து 12 படி ஆற்றுஜலத்தில் போட்டு எரித்து கால்பங்காக்கின கசாயத்துடன் சிற்றாமணக்கெண்ணெய் படி 3 சேர்த்து அதில் சுத்தி செய்த நேர்வாளப்பருப்பு, சுக்கு. மிளகு, திப்பிலி, இந்துப்பு, வெள்ளைப்பூண்டு, கடுகுரோகணி வகைக்கு விராகனிடை 4, மேற்படி கசாயத்தால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து தினம் காலையில் 2-3 விராகனிடை வீதம் 3-4 தினங்கள் சாப்பிட்டு வர சூலை (18), கைகால் முடக்கு குணமாகும். இச்சாபத்தியம்.

## விழுதி எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய், பசும்நெய், விழுதிச்சாறு வகைக்குப்படி 1, சேர்த்து அதில் சுக்கு. மிளகு, திப்பிலி, வசம்பு, வெங்காயம், கோஷ்டம்,

லவங்கம், ஏலம் வகைக்குப் பலம் ¼ பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ¼ சேர் வீதம் 3 நாள் காலையில் சாப்பிட்டு உப்பில்லாபத்தியமாயிருக்க கர்ப்பவாயு, சூதகவலி, கர்பத்தில் உண்டாகும் புழுக்கள், கர்பசூலை, முதலிய சகல கர்ப ரோகங்களும், இசிவும் குணமாகும். கர்பம் உண்டாகும்.

## கரப்பான் எண்ணெய்

பூவரசம்பட்டை, செங்கந்தாரிப்பட்டை, பூதகரப்பான், கண்டங்கத்திரி, நிலவாகை, வகைக்குப்பலம் 10, நொறுக்கி தூணி ஜலத்தில் போட்டு எரித்து எட்டிலொன்றாக்கின கசாயத்தில் சிற்றாமணக்கெண்ணெய், வெள்ளாட்டுப்பால், வகைக்குப்படி 1 சேர்த்து அதில், மிளகு, கருஞ்சீரகம், கார்கோலம், வெள்ளைப்பூண்டு, வசம்பு, சதக்குப்பை, வலம்புரிக்காய், பறங்கிப்பட்டை வகைக்கு விராகனிடை 2, மேற்படி பாலாலரைத்துக் கரைத்து எரித்து வடித்து 5-10 விராகனிடை வீதம் கொடுத்து வர சகல கரப்பான்களும், ரணங்களும் குணமாகும்.

## மேகத்தெண்ணெய்

கோவைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, வல்லாரைச்சாறு, சிறுசெருப்படைச்சாறு, யானைநெரிஞ்சிச்சாறு, சீந்திற் தண்டுச்சாறு, அரசன் பட்டைச் சாறு, வகைக்குப்படி ½, சிற்றாமணக்கெண்ணெய், நல்லெண்ணெய் வகைக்குப்படி ¾ இவைகள் யெல்லாஞ் சேர்த்து அதில் சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், கற்கடக சிங்கி, சிறுநாகப்பூ, ஏலம், குரோசானி ஓமம், சண்பகப்பூ, காட்டாத்திப்பூ, வகைக்கு விராகனிடை 2 சேர்த்து பசும்பாலால் அரைத்துக் கரைத்து சித்திரமூல வேர்ப்பட்டை பலம் 1 சூர்ணித்துப் போட்டு எரித்து வடித்து சீசாவில் போட்டு, அதில் கற்கண்டு பலம் 2 பொடித்துச் சேர்த்து 5 விராகனிடை வீதம் தினம் சாப்பிட்டுவர ஒரு மண்டலத்திற்குள் மேகம் (20), ரணம், கிரந்தி, லிங்கபுற்று, யோனிப்புற்று, வெடிசூலை, மேகவூறல், சொறி, சிரங்கு, சிழ்ரத்த பிரமியங்கள் முதலிய கொடியரோகங்கள் குணமாகும். இச்சாபத்தியம்.

## கணத்தெண்ணெய்

கர்ப்பூரவள்ளி, புளியாரை, கோவை, வெங்காயம், கற்றாழை, கையாந்தகரை, பொன்னாங்காணி இவைகளின் சாறு வகைக்குப் படி ½, பசும்பால் படி 2, சிற்றாமணக்கெண்ணெய் படி 2, இவைகளைச் சேர்த்து அதில் லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சீரகம், கருஞ்சீரகம், வெந்தியம், கோஷ்டம், அக்கிராகாரம், மாசிக்காய், கர்கடகசிங்கி, சாதிக்காய், சாதிப்பத்திரி, வெள்ளைப்பூண்டு வகைக்கு விராகனிடை 2, சேர்த்து பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து வெள்ளைச் சீசாவில்

போட்டு அதில் கோரோசனை, குங்குமப்பூ, சாதிக்காய், வகைக்கு விராகனிடை 2 சூர்ணித்துப்போட்டு 2-5 விராகனிடை வீதம் தினம் கொடுத்துவர கண் சுரம், மாந்தம், உப்பிசம், சிரங்கு, ரணம், கர்ப்பவெட்டை, பாண்டு, வெளுத்த தேகம், நீரிழிவு, விடாதசூடு, கை கால் எரிவு, முதலிய கொடிய ரோகங்கள் குணமாகும். இச்சாபத்தியம்.

## வேம்பாடம் பட்டை எண்ணெய்

2 படி சிற்றாமணக்கெண்ணெயில், வேம்பாடம் பட்டை, பெருமரத்துப்பட்டை, பூதகரப்பான்பட்டை, செங்கத்தாரிப்பட்டை, கழற்சிவேர், கண்டங்கத்திரி வேர், நன்னாரிவேர், வேலிப்பருத்திவேர், கிரந்தநாயகம், சுக்கு, திப்பிலி, கடுக்காய் வகைக்கு விரா. 4, பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து சீசாவில் போட்டுவைத்துக் கொண்டு 2 விரா. வீதம் தினம் 2 தடவை சாப்பிட்டுவர வாய், நாக்கு, தொண்டை இவைகளிலுண்டாகும் புற்று, வாய்கிரந்தி, வாய் நாற்றம், நாக்கு வெடிப்பு, ஜிக்வாரோகம் 6 உதடுவெடிப்பு, உதடுரோகம் (11), நாக்குக்கொப்பளம், பல்லெயிறுக்கட்டிச் சீழ்வடிதல் முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும். பத்தியம் வாயுபதார்த்தங்களை நீக்கவும்.

## முடக்கொத்தான் எண்ணெய்.

முடக்கொத்தான்சாறு, இலைக்கள்ளியை வாட்டிப்பிழிந்தசாறு, வகைக்குப்படி 1½, சிற்றாமணக்கெண்ணெய் படி 3 இவைகளைச் சேர்த்து அதில் கழற்சிப்பருப்பு, தேவதாரம், இந்துப்பு, திப்பிலி, பெருங்காயம், கடுகுரோகணி, கொடிவேலி வேர், சிவதைவேர், வெள்ளைக்காக்கணம் வேர், சித்தரத்தை, சதக்குப்பை வகைக்குப் பலம் 2, சுத்திசெய்த நேர்வாளம் பருப்பு 40; வெள்ளைப்பூண்டு பலம் 8; இவைகளை மைபோல்ரைத்துக் கரைத்து எரித்து வடித்து 2 விரா. வீதம் சாப்பிட்டுவர குடல்வாதம், அண்டவாதம் முதலிய சகல குடல்ரோகங்களும், அண்டரோகங்களும் குணமாகும். உப்பில்லாப் பத்தியம்.

## ஸ்ரீதேவி எண்ணெய்

உத்தாமணி, வெள்ளைச்சாரணை, முடக்கத்தான், சித்திரமூலம், வெண்சிவதை, இவைகளின் வேர் வகைக்குப் பலம் 25, சதுரக் கள்ளி, திருகுக்கள்ளி இவைகளின் வேர் வகைக்குப் பலம் 50, இவைகளை யெல்லாம் சிதைத்து 4 மரக்கால் ஆற்று ஜலத்தில் கரைத்து எரித்து ½ மரக்காலாக்கின கசாயத்தில் செவ்வள்ளிக் கொடி, கடுகு, திப்பிலிமூலம், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகணி, விழாவரிசி, நிலவேம்பு, செவ்வியம், கடுக்காய்ப்பிஞ்சி, கர்கடகசிங்கி, யானைத்திப்பிலி, ஓமம், வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், இந்துப்பு, காய்ச்சுலவணம்,

வகைக்குப்பலம் ½, இவைகளை சூர்ணித்து தேங்காய்ப்பாலால் அரைத்துக்கரைத்து நல்லெண்ணெய், தேங்காய்ப்பால் வகைக்கு அரை மரக்கால்விட்டு மிஸ்ரித்து எரித்து வடித்து, கால்மண்டலம் நெற்புடம் வைத்து எடுத்து, ஒரு விரா. வீதம் தினம் காலையில் சாப்பிட்டுவர சூதகஜன்னி, சூதகவாயு, சூதகவலி, சூதகசூலைமுதலிய சூதகசம்பந்தமான சகல கடூர ரோகங்கள், மூர்ச்சைரோகம் (4), வித்திரதி (6), குன்மம் (8), உன்மாதரோகம் (6) குணமாகும். **பத்தியம்:—** கடூர ரோகங்களுக்கு உப்பில்லாபத்தியமும், அற்பரோகங்களுக்கு இச்சாபத்தியமுமாக இருக்கவும்.

## பாலை எண்ணெய்

இரு வீசை பாலை மரத்துப்பட்டையை இடித்து ஒரு தூணி ஆற்று ஜலத்தில் போட்டு கமலாக்கினியாய் எரித்து எட்டிலொரு பாகமாக்கின கசாயத்தில் நல்லெண்ணெய் படி 1 சேர்த்து அதில் சுரபுன்னைப்பூ, சிறுநாகப் பூ, ஏலம், சேங்கொட்டை, நாணற்றாது, சடாமாஞ்சில், வெட்டிவேர், சிறுகாஞ்சொறிவேர், கச்சோலம், லவங்கப்பட்டை, கிரந்திதகரம், தூணியங்கங் கம்பிப்பிசின், சாதிக்காய், சுக்கு, புலிநகம், தேவதாரம், அகில்கட்டை, ஸ்ரீவச்சகம், குங்குமப்பூ, வண்ணக்குங்குலு, குங்குல், வகைக்கு விராகனிடை 2 சேர்த்து, பசும்பாலாலரைத்துக் கரைத்து எரித்து வடித்து 2 விராகனிடை வீதம், தினம் உள்ளுக்குச் சாப்பிட்டு இரண்டு நாளைக்கு ஒருதரம் ஸ்நானஞ் செய்துவர ஒட்டுகின்ற வாத மேகரோகம், தேகம் கைகால் எரிவு, முதலிய அனேக பலமான ரோகங்கல் குணமாகும். இச்சாபத்தியம்.

## எண்ணெய் உருண்டை

கடுக்காய், வெள்ளைப்பூண்டு வகைக்கு விராகனிடை 2, கழற்சிப் பருப்பு விராகனிடை 4, ஒட்டடை விராகனிடை 8 இவைகளை ஜலமிட்டு அரைத்து சிறு கொட்டைப்பாக்களவு வேப்பெண்ணெயில் கொடுக்க வலிப்பு தீரும்.

## நெய்க்கொட்டான் பழத்தெண்ணெய்

வசம்பு, வெள்ளைப்பூண்டு, நெய்க்கொட்டான் பழம், மயில் இறகின் சாம்பல் வகைக்குப் பலம் ½ ஜலத்தாலரைத்து அரைப்படி வேப்பெண் ணெயில் கரைத்து எரித்து வடித்து 2-3 விராகனிடை வீதம் தினம் உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் தடவி வர குழந்தைகளுக்குக் காணும் குமரகண்ட வலிப்பு தீரும்.

## வெங்காய எண்ணெய்

வெங்காயம் பலம் 1, வெந்தியம் பலம் அரை இவ்விரண்டுமரைத்து எட்டு தடவை ஜலத்தால் அலம்பி எடுத்துக் கற்றாழைச்சாறு படி அரை,

சிற்றாமணக்கெண்ணெய் படி 1 இவ்விரண்டும் சேர்த்து அதில் கரைத்து எரித்து வடித்து 4-5 விராகனிடை வீதம் தினம் கொடுத்துவர கணரோகம் (18), மூளைச்சூடு, தேக எரிவு, முதலிய உஷ்ண ரோகங்கள் குணமாகும்.

## வெந்திய எண்ணெய்.

ஒரு கற்றாழையை இரண்டாகப் பிளந்து அதில் வெந்தியம் பலம் 1 வைத்து மூடி நூலால் சுற்றிலும் கட்டி மூன்று நாள் வைத்து பிறகு எடுத்து கற்றாழைச் சாற்றால் மைபோலரைத்து ஒரு சேர் சிற்றாமணக்கெண்ணெயில் கரைத்து தீபாக்கினியாக எரித்து வடித்து ஒரு சுத்தமான சீசாவில் போட்டு, அதில் மிளகு, காசா ஏலம், கற்கண்டு வகைக்கு பலம் ½ சூர்ணித்துப் போட்டு மிஸ்ரித்து சிறு குழந்தைக்கு நாக்கில் தடவிவருவதாலும், பெரியவர்களுக்கு ஒரு விராகனிடை வீதம் கொடுத்து வருவதாலும் கணம்(18), தேக எரிவு, கை கால் எரிவு, முதலிய பற்பல பலமான உஷ்ண ரோகங்கள் குணமாகும்.

## புளியாரை எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெயும், கையாந்தகரை, எலும்மிச்சம் பழம், புளியாரை, வல்லாரை இவைகளின் சாறும் வகைக்கு படி 1 சேர்த்து எரித்து வடித்து அதில் கோரோசனை விராகனிடை ½ சூர்ணித்து போட்டு தினம் காலை, மாலை 3 விராகனிடை வீதம் கொடுக்க மூலச்சூடு, தேக எரிவு, கணச்சூடு, தேக காங்கை முதலிய சகல உஷ்ண ரோகங்கள் குணமாகும்.

## வெங்கடேச எண்ணெய்

ஒரு சேர் சிற்றாமணக்கெண்ணெயில் ½ பலம் திரிமென்சன்பட்டைச் சூர்ணத்தைச் சேர்த்து ரவியில் ஒரு நாள் வைத்து 8 விராகனிடை வீதம் 2 நாளுக்கு ஒரு தடவைச் சாப்பிட்டு மேலுக்கும் தடவிவர மேகஊறல், கடி, சொறி முதலியவைகள் தீரும். பத்தியம் புளி, வாயுபதார்த்தங்கள் தள்ளவும்.

# 37-வது அத்தியாயம்.

## சூர்ணங்கள்

நம்மைப்படைத்த கடவுளானவர் சகல ரோகங்களையும் போக்கி தேகத்தை காப்பாற்றும் பொருட்டு அனுக்கிரகஞ்செய்திருக்கின்ற சூர்ணங்களில் அநேக சிரேஷ்டமானதும், எளிதில் செய்யக்கூடியதுமான சூர்ணங்களை அநேக கிரந்தங்களைப் பார்வையிட்டு, சர்வஜன உபகாரமாக

இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். நோயாளிகள் சூர்ணரூபமாய் இருக்கின்ற அவுஷதங்களைச் சாப்பிட்டால் அவர்களின் ரோகங்கள் படிப்படியாய் குணமாகுமென்பதற்குச் சந்தேகமில்லை.

## ஆனந்தரசவினோதச் சூர்ணம்

வறுத்த செங்கொட்டை பலம் 5, எட்டிவிதை பலம் 1, கோடிவேலி வேர்ப்பட்டை பலம் 1½, பறங்கிப்பட்டை பலம் 4, ரசம், கந்தகம் வகைக்குப் பலம்1, அரிதாளம் பலம் 2 இவைகளைச் சுத்திசெய்து சேர்த்து சூர்ணித்து இரக்கி குன்றிமணியிடை சூர்ணத்தில் ஒரு துளி குஷ்டக்குடாரி தயிலத்தைச் சேர்ததுக் கொடுக்க வெங்குஷ்டம், கருங்குஷ்ட்டம், கிரந்தி, புண், அரையாப்பு, மூலம் முதலிய அநேக கொடியரோகங்கள் குணமாகும்.

## லவணச் சூர்ணம்

பூநீர், கறியுப்பு, வகைக்கு படி 2, வெடியுப்பு படி 1, இவைகளைத் தனித்தனியாய் ஜலத்தில் கரைத்து வைத்து மறுநாள் தெளிவை எடுத்து ஒன்றாக்கி அதில் 8 விராகனிடை பெருங்காயத்தைச் சேர்த்து உப்பைக்கட்டும் வரையில் எரித்து சூர்ணித்து கற்கார்க்கு சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு தினம் காலையில் நீராகாரத்தில் விராகனிடை 1 போட்டுச் சாப்பிட்டுவர வயிறு பொருமல், குன்மம், வயிற்றுவலி, வயிற்றுக்குத்தல். உப்புசம், முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

## கலிங்காதிச் சூர்ணம்

வரிக்கும்மட்டிக்காய் சாறு, எருமை மோர், கறிஉப்பு, வகைக்குபடி 2 சேர்த்து அதில் சுக்கு, குரோசாணி ஓமம், வெடியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, சவுட்டுப்பு, வகைக்கு விராகனிடை 2 போட்டு சுண்டக்காய்ச்சி எடுத்து சூர்ணித்து கற்கார்க்கு சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு தினம் விராகனிடை 1 வீதம் நீராகாரத்தில் காலையில் சாப்பிட்டுவர குன்மம், வயிற்றுவலி, அஜீர்ணம், பொருமல், விக்கல் முதலிய பற்பல கடூர ரோகங்கள் குணமாகும்.

## இராஜகேசரிச் சூர்ணம்

அதிமதுரம், ஏலம், கிராம்பு, சுக்கு, திப்பிலி, லவங்கப்பட்டை, தும்பராஷ்டகம், மாசிக்காய், வால்மிளகு, வகைக்குப் பலம் ¼; சாதிக்காய்த்தூள் பலம் ¼; கஸ்தூரி விராகனிடை 1 இவைகளை வெவ்வேறாகச் சூர்ணித்து ஒன்றாகச் சேர்த்து அதில் ½ விராகனிடை வீதம் தினம் 2-3 தடவை வெற்றிலைச் சாற்றிலாவது, தேனிலாவது கொடுக்க காசம் (5), சுவாசம் (5), க்ஷயம் (4), சிலேஷ்மம் (20), இருமல், சகல கபரோகங்கள் குணமாகும்.

## * சாமுதரச் சூர்ணம்

இந்துப்பு, எவக்ஷாரம், ஓமம், கடுக்காய், திப்பிலி, இஞ்சி, பெருங்காயம், வாய்விள்ங்கம், கல்லுப்பு, சமமாக சேர்த்துச் சூர்ணித்து போஜனஞ் செய்யும்போது முதல் அன்னத்தில் 3 விராகனிடை சூர்ணத்தையும், 5 விராகனிடை பசுவின் நெய்யுஞ்சேர்த்துச் சாப்பிட்டுவர வயிற்றுப்பல், வாயு, குன்மம் (8), வயிற்றுவலி, அஜீர்ணம், வாதம் (80), கிரகணி (11), மூலம் (8), பாண்டு (5), மகோதரம் (8) முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

## அமிர்தவல்லிச் சூர்ணம்

லவங்கப்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கிராம்பு, சித்தரத்தை, அதிமதுரம், அதிவிடையம், அக்கிராகாரம் வகைக்கு விராகனிடை 5 உலர்த்தி சூர்ணித்து வஸ்திரகாயம் செய்து கற்காற்கு சீசாவில் போட்டுவைத்துக் கொண்டு, அதில் கொஞ்சம் எடுத்து தேனில் கலந்து நாக்கில் தடவிவர நாக்கில் ஜலம் ஊறும். இத்துடன் வெங்காரம் சேர்த்துக் கொடுக்க நீர் இறங்கும், விரேசனகாரிகள் சேர்த்துக்கொடுக்க மலம் உதைக்கும், கண்டா அவுஷதத்தில் இதைச்சேர்த்துக் கொடுக்க, அதன் குணம் விசேஷிக்கும். கஸ்தூரி, குங்குமப்பூ, ரசபஸ்பம் இம்மூன்றும் சேர்த்துச் சூர்ணித்து அத்துடன் இதை சேர்த்துக்கொடுக்க சன்னி, சயித்தியம் தீரும்.

## குன்ம குடாரிச் சூர்ணம்

வரிக்குமட்டிக்காய்ச்சாறு எருமைமோர், கறிஉப்பு வகைக்குப்படி 2 சேர்த்து, அதில் வெடிஉப்பு, இந்துப்பு, வளையலுப்பு, சவுட்டுப்பு, வகைக்கு விராகனிடை 2 போட்டு சுண்டக்காய்ச்சி சூர்ணித்து 5 துளி பெப்பெர்மிட்டு தைலத்தைவிட்டு மிஸ்ரித்து ஒரு கல்கார்க்கு சீசாவில் போட்டு தினம் ஒரு விராகனிடை வீதம் நீராகாரத்தில் கொடுக்க குன்மம் (8)ம் தீரும்.

## ராஜ அமிர்த சஞ்சீவிச் சூர்ணம்

ஏலம், கிராம்பி, சாதிக்காய், சாதிபத்திரி, வால்மிளகு, கசகசா, மாசிக்காய், தாளிசப்பத்திரி வகைக்குப் பலம் 1 சூர்ணித்து, சீனி, சீந்திற் சாக்கரை, வகைக்குப்பலம் 6, அத்துடன் சேர்த்து திரிக்கடி சூர்ணத்தில்

ரசபஸ்மம் வைத்து, பசும் நெய்யில் தினம் 2 தடவைச் சாப்பிட்டுவர, மேகநீர், மூலச்சூடு, பிரமேகம், பிரமியம், வெட்டை, அஸ்திச்சுரம், மேகஊறல், கைகால் எரிவு, பித்தம் தீரும்.

## ராஜ ஏலாதிச் சூர்ணம்

ஏலம் விராகனிடை 64, சுக்கு விராகனிடை 32, கூகைநீர் விராகனிடை 16, தாளிசப்பத்திரி விராகனிடை 8, சிறுநாகப்பூ விராகனிடை 4, மிளகு விராகனிடை 2, கிராம்பு விராகனிடை 1, இவைகளை உலர்த்திச் சூர்ணித்து அத்துடன் சீனி சேர் 1½ சேர்த்து தினம் திரிக்கடிவிதம் அந்தி சந்தி சாப்பிட்டுவர ரணம், மேகஊறல், அரிகிரந்தி, வாயுகிரந்தி, பித்தம் (40), வர்தம் (80), பெரும்பாடு, எலும்புருக்கி, சொறிசிரங்கு முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

## மஹா தாளிசப்பத்திரிச் சூர்ணம்

தாளிசப்பத்திரி பலம் 5, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, வால்மிளகு, லவங்கப்பட்டை, வாய்விளங்கம், மல்லி, சீரகம், திப்பிலி, கோஷ்டம், அக்கிறாக்காரம், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், சடாமாஞ்சில், சோம்பு வகைக்குப் பலம் ½ இளவறுப்பாய் வறுத்து, சூர்ணித்து அத்துடன் 10 பலம் சீனியைச் சேர்த்து தினம் 2 தடவை திரிக்கடி விதம் சாப்பிட்டுவர, காசம் (5), க்ஷயம் (4), பித்தபாண்டு, பித்தவெட்டை, ஈளை, அஸ்திசுரம், அஸ்திவெட்டை, தாகம், கை கால் எரிவு, கிரகணி, வீக்கம், பொருமல், சுரம் முதலிய அநேக பலமான ரோகங்கள் குணமாகும்.

## மஹா அசுவகந்திச் சூர்ணம்

லவங்கம் பலம் 1, சிருநாகப்பூ பலம் 2, காசாஏலம் பலம் 4, நற்சீரகம் பலம் 8, திப்பிலி பலம் 16, சுக்கு பலம் 32, சுத்திசெய்த அமுக்கிறாக்கிழங்கு பலம் 64 இவைகளை இளவறுப்பாக வறுத்துச் சூர்ணித்து சீனாகற்கண்டுப் பொடி சேர் 7 சேர்த்து திரிக்கடிவிதம் பசும்பாலிலாவது, நெய்யிலாவதுச் சாப்பிட்டுவர மேகம் (18), சுவாசம் (5), காசம் (5), பாண்டு (5), குன்மம் (8), அஸ்திசுரம், முதலிய கொடிய ரோகங்கள் குணமாகும். ரத்த விருத்தியாகும்.

## திரிநேத்திரச் சூர்ணம்

சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்குப்பலம் 1 இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்து பொற்றலைகையாந்தகரையை ஆவிநீரில் போட்டு 2 நிமிஷம் மூடிவைத்து பிறகு எடுத்து அரைத்து ஒரு படிச்சாறு எடுத்து அதில் மேற்படி சூர்ணத்தைக் கரைத்து அரைத்து பில்லை தட்டி உலர்த்தி சூர்ணித்து அதற்கு

அதற்கு இரட்டிப்பு கற்கண்டு பொடியைச் சேர்த்து திரிக்கடிவீதம் தினம் காலை மாலைச் சாப்பிட்டுவர பித்தம் (40), பித்தவாயு, உஷ்ணவாயு, அக்கினிமந்தம் முதலிய கொடிய ரோகங்களெல்லாம் குணமாகும், தாதுபுஷ்டியும், ரத்த விருத்தியும் உண்டாகும்.

## மஹாதூதுளைச் சூர்ணம்

தூதுளைப்பழம், சிவகரந்தைபழம், கண்டங்கத்திரிப்பழம் வகைக்குப் பலம் (5), கோரோசனை விராகனிடை 1 இவைகளை உலர்த்திச் சூர்ணித்து அத்துடன் தாளிசபத்திரி பலம் 3, சிற்றரத்தை பலம் 1, மிளகு பலம் 1, இவைகளை இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்துச் சேர்த்து திரிக்கடிவீதம் நெய்யிலாவது, சர்க்கரையிலாவது கொடுக்க மகா பயங்கரமான சகலவித கபரோகங்களும் குணமாகும்.

## லகுதூதுளைச் சூர்ணம்

தூதுளை, திப்பிலி, முருங்கப்பட்டை, சீனி வகைக்குப் பலம் 2, உலர்த்திச் சூர்ணித்து தினம் 2 தடவை 3 விராகனிடை வீதம் பசும் வெண்ணெயில் கொடுக்க ஈளை, இருமல் சகலபலமான கபரோகங்கள் குணமாகும்.

## சொர்னானந்தச் சூர்ணம்

நறுக்கி உலர்த்தின இஞ்சி பலம் 4, அதிமதுரம் பலம் 3, திப்பிலி பலம் 2½ இவைகளைச் சூர்ணித்து வஸ்திரகாயஞ் செய்து அத்துடன் ஒரு சேர் கற்கண்டு பொடியைச் சேர்த்து தினம் திரிக்கடிவிதம் சாப்பிட்டுவர வயிற்றுவலி, பொருமல், அக்கினிமந்தம், முதலிய மகா உபத்திரவதை உண்டாக்குகிற ரோகங்களெல்லாம் குணமாகும்.

## பயிரவச் சூர்ணம்

இந்துப்பு பலம் 1, சீரகம் பலம் 2, ஓமம் பலம் 3, சுக்கு பலம் 4, திப்பிலி பலம் 5, மிளகு பலம் 6, விதை நீக்கின கடுக்காய் பலம் 20, சூர்ணித்து வஸ்திரகாயஞ்செய்து சீனிபலம் 40 சேர்த்து தினம் அந்திசந்தி திரிக்கடிவிதம் சாப்பிட்டுவர அக்கினிமந்தரோகம், வயிற்றுவலி, வயிறுஉப்பல், குன்மம், அஜீர்ணம், மலக்கட்டு முதலிய கொடிய ரோகங்கள் குணமாகும்.

## செண்முகச் சூர்ணம்.

மிளகு, திப்பிலி, சீரகம், இந்துப்பு இவைகளின் தூள் வகைக்குப் பலம் 1, பெருங்காயம் பலம் 1/8, கறியபிலைத்தூள் பலம் ½ இவைகளைச் சேர்த்து ஒரு விராகனிடை வீதம் முதல் அன்னத்தின்மேல் போட்டு நெய்யைக் காய்ச்சி விட்டுச் சாப்பிட அஜீர்ணம், வயிற்றுக்கடுப்பு, அக்கினி மந்தம், குன்மம், வாயுமுதலிய கடுரரோகங்கள் குணமாகும்.

## அக்கினிச் சூர்ணம்

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், லவங்கம் வகைக்கு பலம் 1 இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்து ஒரு விராகனிடைவீதம் தினம் 2 தடவை நெய்யிலாவது,

சீனியிலாவது கொடுத்துவர அக்கினிமந்தம், வயிற்றுவலி, குன்மம், வாதம் முதலிய கொடிய ரோகங்கள் குணமாகும்.

## ராஜ லவணச் சூர்ணம்.

காந்தம், கறிஉப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, பெருங்காயம், வகைக்குப்பலம் 2 சூர்ணித்து 3 படி பசும்பாலில் போட்டு சுண்டக் காய்ச்சி சூர்ணித்து தினம் திரிக்கடிவிதம் வெந்நீரில் கொடுக்க குன்மம் (8), வாயு, அஜீர்ணம், வயிற்றுவலி முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

## லவணச் சூர்ணம்

பூநீர், கறிஉப்பு, வகைக்குப்படி 2, வெடியுப்பு படி 1, இவைகளைத் தனித்தனியாய் ஜலத்தில் கரைத்து வைத்து, மறுநாள் தெளிவை எடுத்து ஒன்றாகச் சேர்த்து அதில் 8 விராகனிடை பெருங்காயத்தைச் சேர்த்து சுண்டயெரித்து சூர்ணித்து கற்கார்க்கு சீசாவில் போட்டுவைத்துக் கொண்டு தினம் காலையில் நீராகாரத்தில் ஒரு விராகனிடைபோட்டுச் சாப்பிட்டுவர வயிறுபொருமல், குன்மம், உதரரோகம், மலக்கட்டு, வயிற்றுவலி, அஜீர்ணம் முதலிய அநேக கடூரரோகங்கள் குணமாகும்.

## பஞ்சமுகச் சூர்ணம்.

சுக்கு, மிளகு, ஓமம், நிலவாகை சமூலம், வாய்விளங்கம் வகைக்கு சேர் 1 ரவியிலுலர்த்தி சூர்ணித்து அத்துடன் சீனி ஒருவீசை சேர்த்து திரிக்கடிவீதம் சாப்பிட்டுவர பொருமல், வாயு, உஷ்ணம், பித்தம், கபம், வாந்தி முதலிய மகாஉபத்திரவத்தைக் தருகின்ற ரோகங்கள் எல்லாம் குணமாகும்.

## கட்டுவாதிச் சூர்ணம்

மாம்பருப்பு, நெல்லிக்காய், மாதுளம்பழத்தோல், கறிவேப்பிலை, சுண்டக்காய், வெந்தியம், இவைகளை உலர்த்தி சூர்ணித்து ஒரு விராகனிடை வீதம் எருமைத்தயிரில் கொடுக்க அதிசாரம் (6), சீதபேதி, கிரகணி (11) குணமாகும்.

## பித்தராஜாங்கச் சூர்ணம்

கொத்தமல்லிவிதை பலம் 6, சதக்குப்பை, சீரகம், அதிமதுரம், கிராம்பு, கருஞ்சீரகம், கருவாப்பட்டை வகைக்குப் பலம் 1 இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்து அத்துடன் கற்கண்டு பலம் 6, பொடித்துச் சேர்த்து திரிக்கடி வீதம் தினம் காலையில் கொடுக்க, பித்தவாயு, பித்தவெட்டை, பித்தவாந்தி, அஜீர்ணம், வாய்ஊறல், முதலிய பித்தரோகங்கள் எல்லாம் குணமாகும்.

## பறங்கிப்பட்டைச் சூர்ணம்

நீர்வெட்டிமுத்து, பறங்கிப்பட்டை, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, திப்பிலி, ஓமம், திப்பிலிமூலம் வகைக்குப் பலம் 1, அமுக்கிராவேர் பலம் 4, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்கு விராகனிடை 1, இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்து சீனிபலம் 6, சேர்த்து திரிக்கடிவீதம் தேனில் கொள்ள மேகசூலை, மேகஊறல், மேககாங்கை, மேகத்தடிப்பு, மேகவாயுமுதலிய கடூரரோகங்கள் குணமாகும். பத்தியம் புளி, உப்புத்தள்ளவும்.

## திப்பிலிச் சூர்ணம்

திப்பிலி, உலர்ந்த குப்பைமேனி, இவைகளின் சூர்ணம் வகைக்கு சேர் 1, சேர்த்து திரிக்கடிவீதம் பசு நெய்யில் கொடுக்க பவுத்திரம் (15), குணமாகும்.

## பலகாரிச்சூர்ணம்

கலம்பாவேர் சூர்ணம், அயச்செந்தூரம், சுக்குத்தூள் வகைக்குப் பலம் 2, ரேவல்சின்னித்தூள் பலம் 1, இவைகளைச் சேர்த்து ½ விராகனிடை வீதம், தினம் 2-3 தடவைக் கொடுக்க ரத்தம் ஊறும், பலம் வரும், பாண்டு (5) குணமாகும்.

## பித்தஹரச் சூர்ணம்

இஞ்சி, வில்வவேர், சுக்கு, ஏலம், நெல்லிவற்றல், அதிமதுரம் வகைக்குப் பலம் 1 உலர்த்திச் சூர்ணித்து, அத்துடன் சீரகத்தூள், நெற்பொறித் தூள் வகைக்குப் பலம் 6, சீனி பலம் 3, இவைகளைச் சேர்த்து, தினம் 2 தடவை 3 விராகனிடை வீதம் பசும் நெய்யில் சாப்பிட பித்தஞ்சமனமாகும்.

## இஞ்சிச் சூர்ணம்

தோலை நீக்கிநறுக்கின இஞ்சி சேர் 4, சீரகம் சேர் 1 இவைகளை, எலுமிச்சம்பழச்சாறு, கரிப்பான்சாறு, புளியாரைச்சாறு, கரும்புச்சாறு, இவைகளில் ஒவ்வொன்றிலும் ஊறவைத்து நிழலில் உலர்த்தி அத்துடன் ½ பலம் மிளகையும், ¼ பலம் கிராம்பையும், சேர்த்துச் சூர்ணித்து தேவையான சீனியும் நெய்யும் சேர்த்து தினம் 2 தடவை பாக்களவுச் சாப்பிட்டுவர பித்தவாயு, பித்தகாங்கை, அரோசிகம், அன்னத்துவேசம், குன்மம் முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

## தாதுபுஷ்டிச் சூர்ணம்.

சுத்திசெய்த சாதிக்காய் சேர் 1, நீர்முள்ளிவிதை சேர் 2, இஸ்கோல் விதை சேர் 2, சீனாகற்கண்டு சேர் 6, இவைகளையெல்லாம் சூர்ணித்துச் சேர்த்து திரிக்கடி வீதம் தினம் 2 தடவைச் சாப்பிட்டுவர தாதுபுஷ்டி உண்டாகும், பலம் வரும்.

# 38-வது அத்தியாயம்.
# லேகியங்கள்

பரிபூரணமாக நிரைந்திருக்கின்ற கடவுளானவர் ரோகங்களைப் போக்கி சரிரத்தை காப்பாற்றும் பொருட்டு அனுகிறகஞ் செய்திருக்கின்ற லேகியங்களில் சாதாரண ஜனங்களும், வைத்தியர்களும் செய்யக்கூடியதுமானதும், பலமான ரோகங்களை எளிதில் குணமாக்க வல்லமையுள்ளதுமான அநேக வித நல்ல லேகியங்கள், அவுஷத கிரந்தங்களைப் பார்வையிட்டு இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். லேகியங்கள் சூர்ணங்களைப் பார்க்கிலும் வெகுவல்லமையுள்ளது. ஏனெனில் லேகியத்தில் செந்தூரம் அல்லது பஸ்மம் வைத்துச் சாப்பிடவேண்டியது. இப்படிச் சாப்பிடுவதால், செந்தூரம், பஸ்மம் இவைகளின் செய்கைகள் லேகியத்தின் செய்கையுடன் சேர்ந்து அதிவிசேஷமான குணத்தை உண்டாக்கி ரோகிகளின் வியாதிகளை அதிசீக்கிரத்தில் நிவர்த்திக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## ராஜ மார்த்தாண்ட லேகியம்

ஏலம், கிராம்பு, பெருங்காயம், திப்பிலி, திப்பிலிமூலம், சாதிக்காய், சிறுதேக்கு, முத்தகாசு வகைக்கு விராகனிடை 2, சீரகம், கருஞ்சீரகம், சிறுநாகப்பூ வகைக்கு விராகனிடை 3, கூகைநீர் விராகனிடை 4, இவைகளை உலர்த்தி சூர்ணித்து, சங்கம்வேர் சேர் 1¼, கண்டங்கத்திரி வேர், செவ்வியம் வகைக்குப் பலம் 5, சிற்றாமுட்டி, இருவேலி, கொடிவேலி, சீந்தில், வில்வம், நிலப்பனை இவைகளின் வேர், திப்பிலிமூலம் வகைக்குப் பலம் 2½ இவைகளை இடித்து ஒரு மரக்கால் ஜலத்தில் போட்டுக் காய்ச்சி 1/8 மரக்காலாக்கின கசாயத்தில் சீனி சேர் 1½ சேர்த்து பாகு செய்து, அதில் மேற்படி சூர்ணத்தையும், 2 பலம் சுக்குச் சூர்ணத்தையும், 2 பலம் மிளகுச் சூர்ணத்தையும் போட்டு, நெய் பலம் 4, தேன் பலம் 4 சேர்த்துக் கிண்டி, லேகியமாக்கி தினம் 2 தடவை பாக்களவு 48 நாள்ச் சாப்பிட, கபரோகம் (96), வாதரோகம் (80), குன்மம் (8), விக்கல் (5), பீநசம் (18), சன்னி (13), சுரம் (64), உப்பிசம், செரியாமை, நெஞ்சி எரிவு, பித்தம் (40), வாந்தி (5), அக்கினிமந்தம் முதலிய மஹாகொடிய ரோகங்கள் குணமாகும்.

## ராஜ வில்வாதி லேகியம்

பட்டைநீக்கின வில்வவேர் சேர் 3, இடித்து 4 மரக்கால் ஜலத்தில் போட்டு எரித்து ஒரு மரக்காலாக்கினக் கசாயத்தில், நாலு பலம் சீனியைக் கரைத்து பாகுசெய்து, அதில் ஏலம், கிராம்பு, சுக்கு, தாளிசப்பத்திரி,

சிறுநாகப்பூ, வகைக்கு விராகனிடை 5, சாதிக்காய், லவங்கப்பட்டை, வகைக்கு விராகனிடை 2 1/2, திப்பிலி, செவ்வியம், மிளகு வகைக்குப் பலம் 4 இவைகளை உலர்த்திச் சூர்ணித்து போட்டு, தேன் பலம் 2½, நெய் பலம் 2½ விட்டு லேகியமாக்கி தினம் 2 தடவை பாக்களவுச் சாப்பிட்டுவர குன்மம் (8), காசம் (5), கிரகணி (11), அதிசாரம் (6), சுரம் (64), வாந்தி (5), பித்தம் (40), இருமல், ஈளை, விக்கல் (5), நெஞ்செரிவு, தேகஎரிவு, நீர்கட்டு, விஷபாண்டு, உப்பிசம், மலக்கட்டு முதலிய மஹா பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

## மஹாகூழ்ப்பாண்டலேகியம்

பெரும் பூசனிக்காய்ச்சாறு படி 6, எலுமிச்சம்பழச்சாறு, தாழைவிழுதுச்சாறு, தென்னம்பூச்சாறு வகைக்குப்படி 1½, பசும்பால் படி 3, இவைகளைச் சேர்த்து அதில் 2 சேர் சீனியைப் போட்டு பாகு செய்து அதில் அதிமதுரம், தாளிசப்பத்தி, சீரகம், கோஷ்டம், மல்லி, மாசிக்காய், மிளகு, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, வகைக்கு விராகனிடை 15, உலர்த்திச் சூர்ணித்துப்போட்டு, நெய்படி ¾, தேன் படி ¾, விட்டு லேகியமாக்கி தினம் 2 தடவை, 5 விராகனிடை வீதம் சாப்பிட்டுவர அஸ்திசுரம், அஸ்திவெட்டை, சோகை (9), காமாலை (13), பிரமியம் (20), நீர்சுருக்கு, உஷ்ணரோகங்கள், வெள்ளைவிழுதல், முதலிய பலமான ரோகங்கள் தீரும், விந்தூறும், தேகம் புஷ்டிக்கும், **பத்தியம்:**— புளி, புகையிலை, ஸ்திரீபோகம் நீக்கவும்.

## ராஜ சிந்தாதி லேகியம்

புளித்தமோர் படி 3, நாலுமாதத்திய காடி படி 3, இவைகளைச் சேர்த்து அதில் 2 சேர் இடித்த புளிஇலை, 1½ சேர் துருப்பிடித்த இரும்பு இவைகளைப் போட்டு எரித்து எட்டில் ஒரு பாகமாகும்படி காய்ச்சி, வடித்து, அத்துடன் தென்னம்பூ, இஞ்சி, எலுமிச்சம்பழம், சிறுகீரை, சிறுசெருப்படை, நெஞ்சி, கீழ்க்காய்நெல்லி, இவைகளின்சாறு வகைக்குப்படி ¼, கையாந்தகரைச்சாறு படி ½, பசும்பால் படி 1, இவைகளைச் சேர்த்து, அதில் 3 பலம் சீனியைக் கரைத்து பாகுசெய்து, அதில் ஏலம், கிராம்பு, லவங்கப்பட்டை, தாளிசப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், ஓமம், கோஷ்டம், சடாமாஞ்சில், சீரகம், வால்மிளகு, ஆனைத்திப்பிலி வகைக்குப்பலம் ¼ இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்துச் சேர்த்து தேன்படி ¼, நெய் படி ¼ விட்டுக் கிண்டி லேகியமாக்கி தினம் பாக்களவு அந்தி சந்திச் சாப்பிட்டுவர பித்த வெட்டை, பாண்டு (5), அக்கினிமந்தம், பொருமல், வாயு, கிரகணி (11), சோகை (9), தேக இளைப்பு, தேக வெளுப்பு, முதலிய கடூரமான ரோகங்கள் குணமாகும்.

## மஹாதூதுளை லேகியம்

தூதுளம்பூ பலம் 6, முருங்கப்பூ பலம் 6, சதாவேரிக்கிழங்கு பலம் 4½, நன்னாரிவேர் பலம் 3, நெரிஞ்சிமுள் பலம் 1½ நிலப்பனைக் கிழங்கு பலம் 1½ இவைகளைச் சூர்ணித்து ஒரு படி ஆவின் பாலில் 2 சேர் சீனியைப் போட்டுக் காய்ச்சி பாகுசெய்து அதில் மேற்படி சூர்ணத்தைப் போட்டு நெய் படி ¾, தேன் படி 3/8 விட்டுக் கிண்டி லேகியமாக்கி தினம் 2 தடவை பாக்களவு கொடுக்க மேகம் (20), பிரமியம் (20), பிரமேகம் (21), எலும்புருக்கி முதலிய மஹா பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

## ராஜ அமிர்தசஞ்சீவி லேகியம்

5 படி பசும்பாலும், 5 படி இளநீர்ஜலமும், தாழைவிழுது, வல்லாரை கொடுப்பை, சிற்றாமுட்டி, சிறுபுள்ளடி, வகைக்குசேர் 1¼ இடித்து 20 மரக்கால் ஜலத்தில் போட்டு எரித்து ஒருபடியாக்கின கசாயமும் ஒன்றாகச் சேர்த்து, அதில் மேல் தோல் நீக்கின 2½ சேர் இஞ்சியை மைபோல அரைத்துக் கரைத்து மறுபடியும் எரித்து ஒருபடியாக வற்றவைத்து அத்துடன் சீனி சேர் 2, கற்கண்டு சேர் 2, சேர்த்து பாகு செய்து அதில் கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், வால் மிளகு, கோஷ்டம், சீரகம், கருஞ்சீரகம், அக்கிறாகாரம், சிவதை வேர், ஓமம், நறுக்கு மூலம், சுக்கு, மிளகு, திப்பிலி, அரத்தை, ஜாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி, அதிவிடையம் வகைக்கு விரா.10 இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்து வில்வப்பூ, சுத்திசெய்த பறங்கிப்பட்டை, வகைக்குப் பலம் 4, பேரிச்சம்பழம், அன்னபேதி, பெருங்காயம், திராட்சப் பழம், கூகை நீர், வகைக்குப்பலம் 1, பச்சைக்கர்ப்பூரம், கோரோசனை, குங்குமப்பூ, கஸ்தூரி, அபினி வகைக்கு விராகனிடை 1 இவைகளின் சூர்ணத்தையும், தேற்றாவிதை பலம் 1 பசும்பாலில் ஊறவைத்து அரைத்து அதையும், சீந்திற் சர்க்கரை பலம் 8, நெய் சேர் 2 இவைகளையும் போட்டுக் கிண்டி பதத்திலிறக்கி, தேன் சேர் 2 விட்டுப் பிசைந்து ஒரு தகரடப்பாவில் வைத்துக்கொண்டு தினம் பாக்கு அளவு சாப்பிட்டுவர மேகம் (20) அஸ்திசுரம், அஸ்திகாங்கை, சீத ரத்தம் விழுதல், காமாலை (13), வாயு, பாண்டு, சோகை (9), கிரகணி (11) முதலிய சகல கடூரரோகங்கள் குணமாகும்.

## தக்ஷிணாமுஹூர்த்தி லேகியம்

ஒரு பலம் சேங்கொட்டை நொறுக்கி ஒரு படி பசும்நெய்யில் போட்டுக்காய்ச்சி வடித்து அதில் அமுக்கிறாவேர், சங்கம்வேர், மூக்கிரட்டிவேர், கொடிவேலிவேர், இவைகளின் சூர்ணம் வகைக்கு பலம் 2, கோதுமைமாவுப்படி கால், சீனி பலம் 5 சேர்த்து செவ்வையாய்

மிஸ்திரித்து தினம் காலையில் பாக்களவு பத்துநாள் சாப்பிட சூலை (18) குணமாகும். பத்தியம் உப்பில்லாமை.

## வச்சிரவல்லி லேகியம்

சித்தரத்தை, திப்பிலி, தாளிசப்பத்திரி, அக்கிராகாரம் வகைக்குப்படி 2, கண்டங்கத்திரி வேர் பலம் 3, இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்து 1¼ சேர் சீனியை ¼ படி பாலிலிட்டுப் பாகுசெய்து அதில் மேற்படி சூர்ணத்தைப்போட்டு நெய், தேன் வகைக்குப்படி ¼ விட்டு லேகியமாக்கி பாக்களவு தினம் 2 தடவைச் சாப்பிட்டுவர ஈளை, இருமல் சகல கபரோகங்களும் தீரும்.

## அருணாசல லேகியம்

பறங்கிப்பட்டை, சங்கம்வேர், அமுக்கிறாகிழங்கு, சித்திரமூலம்வேர் பட்டை, வகைக்குப்பலம் 6, ஏலம், சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்குப்பலம் 1 இவைகளைச் சூர்ணித்து, 16 பலம் சீனியுடன் தேவையான பசும்பாலையும் சேர்த்து பாகுசெய்து அதில் மேற்படி சூர்ணத்தையும், தேன் பலம் 5, நெய் பலம் 15 சேர்த்து லேகியமாக்கி தினம் 2 தடவை பாக்கு அளவு சாப்பிட்டு வர மேகவாயு, மேகசூலை, மேகஊறல், மேகதடிப்பு, மேககாங்கை, முதலிய சகல மேகரோகங்கள் தீரும்.

## தாதுபுஷ்டி லேகியம்

நீர்முள்ளி விதை பலம் 4, எள்ளு பலம் 1, கடலைமாவு பலம் 2, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, வகைக்கு விராகனிடை 1, புரசன் பிசின் விராகனிடை 3, நிலைக்கடம்பு விராகனிடை 2, இவைகளைச் சூர்ணித்து ஒரு முற்றின தேங்காயில் செலுத்தி வாயை மூடி 3 விரற்கடை கனத்தில் அதற்கு சாணியால் கவசஞ்செய்து புடம் போட்டு தேங்காய் வெடித்தவுடனே எடுத்து அதிலுள்ள மருந்தையும், 5 பலம் வெல்லமும், சேர்த்து லேகியமாக்கி தினம் 2 தடவை பாக்களவு சாப்பிட்டுவர வீரிய விர்த்தியுண்டாகும், இடுப்பு வலி தீரும். இது வெகு நல்ல மருந்து.

## கந்த லேகியம்

சுத்தி செய்த ஒரு பலம் கந்தகத்தை உருக்கி வெள்ளை அம்மான்பச்சை யரசிச்சாற்றில் வார்த்து எடுத்துச் சூர்ணித்து அத்துடன் சமமாக கற்கண்டு பொடியைச் சேர்த்து, பிறகு 20 ரஸ்தாளி பழச்சாறு, தேன் சேர் ¼, நெய் சேர் ¼, இவைகளில் சேர்த்து லேகியபதமாக வரும்வரையில் சூர்யபுடம் வைத்து கழற்சிக்காய் அளவு தினம் 2 தடவைச் சாப்பிட்டுவர, மேகவாயு, மேகரணம், மேகஊறல், மேகக்கரப்பான், மேககிரந்தி முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும். இச்சாபத்தியம்.

## பூர்ணாதிலேகியம்.

சுத்தி செய்த கஞ்சா, லவங்கப்பத்திரி, சிறுலவங்கப்பட்டை, கசகசா, சோம்பு, ஏலம், தும்பராஷ்டகம், சிறுநாகப்பூ, சீரகம், அதிமதுரம், சுக்கு, திப்பிலி, தாளிசப்பத்திரி, கிராம்பு, வகைக்கு பலம் 5, சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்குப் பலம் 2½, மிளகு, தேன்வகைக்குப் பலம் 10, நெய் பலம் 20, சர்க்கரைசேர் 15, எலுமிச்சம்பழம் அல்லது புளிப்பு நார்த்தம்பழ ரசம் படி ¾. சூர்ணிக்கிற பதார்த்தங்களை இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்து, பழச்சாற்றில் சர்க்கரை சேர்த்து பாகுசெய்து அதில் மேற்படி சூர்ணத்தைப் போட்டுக்கிளறி தேனையும், நெய்யையும் விட்டு மறுபடியும் கிளறி ஒரு வாயகன்ற ஜாடியில் போட்டு மூடிவைத்துக்கொண்டு பெரியவர்களுக்கு பாக்களவும், சிறியவர்களுக்கு குன்றிமணிஅளவும் கொடுக்க மாந்தம், அஜீர்ணம் உஷ்ணபேதி, வயிற்றிரைச்சல், மந்தம், பசியில்லாமை முதலிய பற்பல ரோகங்கள் குணமாகும், தாதுபுஷ்டியுண்டாகும்.

குழந்தைகளுக்குக் கொடுப்பதரிது.

## பூர்ணசந்திரோதய லேகியம்

ஒருசேர் மேல் தோல் நீக்கிய இஞ்சியை கத்தியால் பில்லைகளாக்கி பசும் நெய்யில் பொன்நிறமாய் வறுத்துச் சூர்ணித்து; அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, கோஷ்டம், அதிமதுரம், சீரகம், மல்லி, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, வால்மிளகு, கிராம்பு, வகைக்கு விரா. 5 இவைகளை இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்துச் சேர்த்து வைத்துக்கொண்டு, ஒரு சேர் சீனாகற்கண்டை பசும்பாலில் போட்டு பாகுசெய்து அதில் மேற்படி சூர்ணத்தை போட்டு, தேன் சேர் ¼, நெய் சேர் 1 விட்டுக் கிண்டி செவ்வையாய் மிஸ்ரித்து பதத்தில் இறக்கி ஒரு பீங்கான் அல்லது தகரடப்பாவில் போட்டு வைத்துக்கொண்டு தினம் 2 தடவை பாக்களவுச் சாப்பிட்டுவர உஷ்ணவாயு, அஜீர்ணம், அக்கினிமந்தம், வயிற்றுவலி, குன்மம், காசம் முதலிய பற்பல ரோகங்கள் குணமாகும்.

## கதலி லேகியம்.

100 ரஸ்தாளிபழத்துடன் பெரும் உமியைச் சேர்த்துப் பிசைந்து இளநீர் ஜலம்போல் வருவதை எடுத்து அத்துடன் சீரகம் பலம் 1, கசகசா பலம் 1, இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்தப் பொடியையும் சீனி சேர் 1, சாதிக்காய் தூள், சாதிப்பத்திரித் தூள், வகைக்குப் பலம் ½, இவைகளையும் சேர்த்து 15 நாள் சூரியபுடம் போட்டு லேகியபதத்தில் எடுத்துவைத்துக்கொண்டு 5 விரா. வீதம்

தின்ம் 2 தடவைச் சாப்பிட்டுவர உஷ்ணவாயு, பித்தவாயு, அரோசகம், அன்னத்துவேசம் குணமாகும்.

## கண்டத்திப்பிலி லேகியம்

சுக்கு, கண்டத்திப்பிலி வகைக்குப்பலம் 1, ஓமம் பலம் 2 இவைகளைச் சூர்ணித்து, 4 பலம் பனைவெல்லத்தை ஜலத்தில் போட்டு பாகுசெய்து அதில் சேர்த்து நெய் பலம் 1, விட்டு லேகியமாக்கி தினம் பாக்களவு 2 தடவைச் சாப்பிட்டுவர வாயு, அஜீர்ணம், மந்தாக்கினி, மலபந்தம் குணமாகும்.

## இஞ்சி லேகியம்.

இஞ்சி, கண்டங்கத்திரி, நெரிஞ்சி, முள்ளங்கி, எலுமிச்சம்பழம் இவைகளின் சாறு வகைக்குப்படி ½, பசும்பால்படி 1/4, இவைகளைச் சேர்த்து அத்துடன் 4 பலம் சீனியைக் கரைத்து பாகுசெய்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கிராம்பு, சீரகம், வாய்விளங்கம், தாளிசப்பத்திரி வகைக்கு விராகனிடை 5 சூர்ணித்துப்போட்டு, தேன் படி 1/4, நெய் படி 1/4, விட்டு லேகியமாக்கி தினம் 2 தடவை பாக்களவு 48 நாள் சாப்பிட்டுவர, வாந்தி (5), சூலை (18), வாதம் (80), பித்தம் (40), இசிவு, குன்மம் (8), அரோசகம், பொருமல், கடுப்பு, மயக்கம், கபாலக்குத்து, பித்த எரிவு, அன்னத்துவேஷம் தீரும். இச்சாபத்தியம்.

# 39-வது அத்தியாயம

பரமயோகிகள் சேருவற்குரிய பொருளுமாயிருக்கின்ற கடவுளானவர் ஜனங்களின் ரோகங்களை குணமாக்கும்பொருட்டு அனுக்கிரகஞ்செய்திருக்கின்ற கிருதங்களில் சர்வரோகங்களை நிவர்த்திசெய்ய மஹா வல்லமையுள்ள அநேக சிலாக்கியமான கிருதங்களை பற்பல வைத்திய கிரந்தங்களைக் கொண்டு இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

## நட்சத்திரமாணிக்கக்கிருதம்

தேங்காய்ப்பால், பொடுதலைச்சாறு வகைக்குப் படி 2 சேர்த்து, அதில் 16 படி ஆற்று ஜலத்தை எட்டிலொன்றாகும்படி காய்ச்சி சேர்த்து எரித்து நெய்யை வடித்து ஒரு விராகனிடை வீதம் தினம் காலை மாலை கொடுத்து வர - கருநாக்குச்சூலை, மேல்வாய்ப்புண், உண்ணாக்கை அரிக்கும் கிரந்தி, பல்லிறை அரித்துத்தின்னும் கிரந்தி, நாக்கு அரிப்பு, நாக்குப்புண் முதலிய மஹா கொடிய ரோகங்கள் குணமாகும்.

## மஹா புளியாரைகிருதம்

புளியாரைச் சாறு படி 2, பசும்நெய், தயிர்தண்ணீர், வெள்ளாட்டுப்பால் வகைக்குப் படி ½ இவைகளைச் சேர்த்து அதில் சுக்கு,மிளகு, திப்பிலி, வில்வப்பிஞ்சி, வாலுழுவை அரிசி, காட்டாத்திப்பூ, கோரைக்கிழங்கு, சீரகம், அதிவிடையம், இலவம்பிசின், மல்லி, நெய்தற்கிழங்கு, விலாமிச்சவேர், சிற்றாமுட்டி, ஓமம், இஞ்சி, பொன்முசட்டை, கண்டத்திப்பிலி, மாதுளம்பிஞ்சி வகைக்கு விராகனிடை 2½, ஜலத்தால் அரைத்துக் கரைத்து எரித்துப் பாத்திரத்தில் இறக்கி, தினம் 2 தடவை ஒரு விராகனிடை வீதம் கொடுத்துவர குன்மம் (8), கிரகணி (11), வயிற்றுவலி, சுரம், கபம், அரோசிகம், சோகை (9), பிலீகம் (4), விவர்வியாதி, மூலம் (8), அகக்கட்டிகள், கிருமிரோகம், முதலிய கடூரரோகங்கள் குணமாகும். பலம், தேஜசு, தீபனம் இவைகள் உண்டாகும்.

## மஹா கூழ்ப்பாண்டகிருதம்.

பெரும்பூசனிக்காய்ச்சாறு படி 1, செவ்விளநீர்ஜலம், குமரிச்சாறு, தென்னம்பூச்சாறு, தாழை விழுதுச்சாறு வகைக்குப்படி ½, பசும்பால், நெய் வகைக்குப் படி 1, இவைகளைச் சேர்த்து, அதில், குரோசாணி ஓமம், மல்லி, கற்கடகசிங்கி, காட்டார்த்திப்பூ, சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், வால்மிளகு, சீரகம், ஏலம் வகைக்கு விராகனிடை 1½ பசும்பாலால் அரைத்து, கரைத்து, எரித்து வடித்து ஒருபலம் கற்கண்டை பொடித்துப்போட்டு வைத்துக்கொண்டு 2 விராகனிடை கிருதத்தில் கொஞ்சம் அப்பிரேக செந்தூரத்தை வைத்துக் கொடுக்க மேகம் (20), பிரமேகம் (21), காமாலை (13), கிரகணி (11), பித்தம் (40), உஷ்ணம், கைகால் எரிவு, நீர்குத்து, அஸ்திவெட்டை, அஸ்திகாங்கை, எலும்புருக்கி முதலிய பயங்கரமான ரோகங்கள் அதிசீக்கிரத்தில் குணமாகும்.

## திரிலோச்சன கிருதம்.

பெரும்பூசனிக்காய், நெல்லிக்காய், குழிமிட்டான் கிழங்கு, கரும்பு இவைகளின் சாறு வகைக்குப் படி ½, சதாவேரிக்கிழங்குச்சாறு குருணி 5, நெய்படி 2, இவைகளைச் சேர்த்து அதில் இந்துப்பு, ஓமம், சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, கோஷ்டம், சந்தனம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், வெட்பாலையரிசி, மல்லி, ஏலம், கிராம்பு, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, சீரகம், விளாமிச்சுவேர், கூகைநீர், அதிமதுரம், திராக்ஷை, பேரிச்சங்காய், வகைக்கு விராகனிடை 1½, அரைத்து கரைத்து எரித்து வடித்து 1 கரண்டி வீதம் தினம் 2 தடவை சாப்பிட்டுவர கிரிச்சரம்,

நீர்க்கடுப்பு, எலும்புருக்கி, மேகசுரம், கைகால் எரிவு தீரும். தாதுவிருத்தி, தேகபுஷ்டி உண்டாகும்.

## மஹா வல்லாரை கிருதம்.

வல்லாரை, பொடுதலை, பொன்னாங்காணி இவைகளின் சாறு படி 2, எலுமிச்சம்பழச்சாறு படி 2, ஆவின்பால், நெய் வகைக்குப் படி 4, இவைகளைச்சேர்த்து அதில் அதிமதுரம், ஏலம், கிராம்பு, வால்மிளகு, சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், கடுக்காய்ப்பூ, வகைக்கு விராகனிடை 4, மேற்படி பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து அதில் 4 பலம் கற்கண்டு பொடியைச் சேர்தத்து தினம் 3 விராகனிடை கிருதத்தில் கொஞ்சம் ரசபஸ்மம் சேர்த்துக் கொடுக்க மேகம் (20), கிரந்தி (9), பிரமியம் (20), குஷ்டம் (18), மேகசூலை, சொறி, சிரங்கு, நாபிநோய், யோனிப்புற்று, நீர்க்கடுப்பு முதலிய மகாகொடிய ரோகங்கள் குணமாகும்.

## மஹா தூதுளை கிருதம்

தூதுளைச்சமூலம் பலம் 100, கண்டங்கத்திரி, கறிமுள்ளிவேர், வகைக்குப் பலம் 50 இவைகளை இடித்து 80 படி ஜலத்தில்போட்டு எரித்து 10 படியாக்கின கசாயத்தில் பசும் நெய், பால் வகைக்குப் படி 5, இஞ்சிச் சாறு படி 1¼ சேர்த்து, அதில் சிருநாகப்பூ, நன்னாரிவேர், கொடிவேலி வேர், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், கோஷ்டம், தாளிசபத்திரி, வகைக்கு விராகனிடை 5, செவ்வல்லிக்கொடி, சடாமாஞ்சில், சிறுகாஞ்சொறிவேர், ஆடாதோடைவேர், அதிமதுரம், சீரகம், தேற்றாவிதை, வகைக்குப் பலம் 1¼ கண்டங்கத்திரி வேர், முசுமுசுக்கைவேர் வகைக்குப் பலம் 2½ மேற்படி பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து அதில் தேன் படி ½ கற்கண்டு பலம் 5 சேர்த்து தினம் 2 தடவை 2 விராகனிடை வீதம் கொடுக்க ஈளை, இருமல், சுவாசம் (5), காசம் (5), பொருமல், இரைப்பு, முதலிய கடுரரோகங்களெல்லாம் தீரும்.

## மரத்துவெள்ளை நவநீதம்

நல்லெண்ணெய், கருநெச்சிச்சாறு, பசும்பால், எலுமிச்சம்பழச்சாறு வகைக்குச் சேர் ¼, சேர்த்துக்காய்ச்சி வடித்து அதில் மரத்துவெள்ளை பலம் 1½, கல்நார் பலம் 1, கர்பூரசலாசத்து பலம் 1 இவைகளைச்சூர்ணித்துச் சேர்த்து மறுபடியும் எரித்து (ஜலத்தில் ஒரு துளிபோட, அது முழுகிப்போகும் பதத்தில்) இறக்கி ஒரு செட்டியில் ஜலத்தைவைத்துக் கொண்டு அதில் ஊற்றிக் கசக்கி ஜலத்தை நீக்கவும். இவ்விதமாய் 4-5 தடவைச்செய்து அத்துடன் எருமை வெண்ணெய் சேர் ½, சேர்த்து ஜலத்தில் போட்டுக் கசக்கி ஜலத்தை நீக்கி, மறுபடியும் புது ஜலத்தைச் சேர்த்துக் கசக்கவும்.

இவ்விதமாக 24 தடவைக் கசக்கி எடுத்து தினம் 2 தடவை பாக்களவு கற்கண்டுப்பொடியில் சாப்பிட உஷ்ணம், வயிற்றிலுள்ள ரணம், நீர் எரிவு, நீர் அடைப்பு, நீர்த்தாரைப்புண் முதலியவைகள் குணமாகும். இதை தினம் புது ஜலத்தில் போட்டுவைக்க வேண்டியது.

## பேர்ச்செங்காய் கிருதம்.

கிராம்பு, சீரகம், மிளகு, திப்பிலி வகைக்குப் பலம் ½, சாதிக்காய் கசகசா வகைக்குப் பலம் ¼, இவைகளைச் சூர்ணித்து ஒரு பலம் கொட்டைநீக்கின பேர்ச்செங்காயில் செலுத்தி அவைகளை ஒரு சேர் பசும் நெய்யில் போட்டு, தேன் சேர் 3/8 விட்டு காய்ச்சி எடுத்து தினம் ஒரு பேர்ச்செங்காய் வீதம் சாப்பிட்டுவர உஷ்ணவாயு, பித்தவாயு, அக்கினிமந்தம், அன்னத்துவேஷம், பாண்டு, சோபை, முதலியவைகள் குணமாகும். ரத்தத்தை விருத்திக்கும்.

## பொன்னாங்காணி கிருதம்.

பொன்னாங்காணி, பொற்றலைகையாந்தகரை, எலுமிச்சம்பழம் இவைகளின் சாறு, பசும் நெய், பசும் பால், வகைக்குப் படி 2 சேர்த்து, அதில் அதிமதுரம் பலம் 4 பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஒரு சீசாவில் போட்டு, அதில் சாதிக்காய், சாதிப்பத்திரி, கோரோசனை, கற்கண்டு வகைக்கு விரா. 2 சூர்ணித்துப் போட்டு தினம் காலை மாலை 2 விரா. வீதம் கொடுக்க மூலச்சூடு, உஷ்ணரோகங்கள், கைகால் எரிவு, தேகஎரிவு, மேகம், வாய்நாற்றம், பிரமியங்கள் (20) குணமாகும். கண்கள் குளிர்ச்சியாகும்.

## புளியாரைக் கிருதம்

புளியாரை, வள்ளிக்கிழங்கு, பொன்னாங்காணி இவைகளின்சாறு வகைக்குப்படி 2, செவ்விளநீர் ஜலம் படி 4, ஆவின் நெய், ஆவின்பால், வகைக்குப் படி 10, இவைகளைச் சேர்த்து, அதில் சீரகம், மாசிக்காய், அதிமதுரம் வகைக்கு விரா. 8, பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஒரு சீசாவில் போட்டு, அதில் ஏலம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி வகைக்கு விரா. 4, கற்கண்டு பலம் 2, இவைகளைச் சூர்ணித்துபோட்டு தினம் 2 தடவை 3 விரா. வீதம் கொடுக்க பித்தவாயு, பித்தவெட்டை, பித்தஎரிவு, பித்தமயக்கம், நீர்சுருக்கு, வாந்தி, அரோசகம் குணமாகும்.

# 40-வது அத்தியாயம்
## பஸ்மங்கள்

யுனானி, கர்நாடக அவுஷதங்களில் பஸ்மங்கள் மஹாசிரேஷ்டமான மருந்தாகவும், அதிவிசேஷகுணத்தையுடையதாகவும் இருக்கின்றபடியால்

அநேக கிரந்தங்களைக் கொண்டு எல்லோரும் எளிதில் செய்யக்கூடியவைகளாயும், மஹா வல்லமை பொருந்திய வைகளாயும் இருக்கின்ற அநேக நல்ல பஸ்மங்களை இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். வியாதிஸ்தர்கள் அவைகளை செய்துச் சாப்பிடுவார்களாகில் அவர்களின் ரோகங்கள் உடனே பஸ்மமாகும் என்பதற்குச் சந்தேகமில்லை.

## மஹாரஜத பஸ்மம்

1. * அரிதாளம் பலம் 1, கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து சுத்திசெய்த வெள்ளித் தகடு பலம் 3க்கு கவசமிட்டு சீலைமண் செய்து 30 எருவில் புடம்போடவும். இவ்விதமாகவே 14 புடம் போட்டு எடுத்து பார்க்க மஹா வெண்மையான பஸ்மமாயிருக்கும். இதை அனுபானத்திலிட மேகம், பிரமேகம், கிரிச்சரம், மூத்திரரோகம், அஸ்திசுரம் முதலிய அநேக பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

2. சுத்திசெய்த வெள்ளியைத் தகடு தட்டி, ரசபஸ்மம், வங்கபஸ்மம், நாக பஸ்மம் இம்மூன்றையும் கூட்டி உமிழ்நீர்யிட்டு மை போலரைத்து வெள்ளிக்குச் சமயிடைச்சேர்த்து ரவியில் உலர்த்தி சீலைமண்செய்து, சுண்ணாம்புக்குள் வைத்து வராகப் புடம் போட்டு எடுத்துப்பார்க்க பஸ்மமாயிருக்கும்; அதில் ஒரு குன்றிமணியிடை தேனிலிட கல்லடைப்பு, சதையடைப்பு, கிரிச்சரம், காசம், இரைப்பு, லிங்கப்புற்று, யோனிப்புற்று, கிரந்தி, மேகம், முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

## மஹா தாம்பிர பஸ்மம்

அண்டத்தோல் பலம் 2, வீரம், பூநீர், சீனாகாரம், வெங்காரம், நவக்ஷாரம், பூரம், வெடிஉப்பு வகைக்கு விரா. 2, ஒரு படி எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி, பத்து பலம் நாகூர்செல்லியை குகையில்போட்டு உருக்கி அதன் முகத்தில் ஒவ்வொரு பில்லையை கொடுத்து, மறுபடியும் உருக்கி 2 படி எலுமிச்சம் பழச்சாறும் ½ படி முலைப்பாலும் சேர்த்து ஒவ்வொரு துளியாகவிட்டு

சுருக்குக்கொடுத்து, தாளகம் பலம்2, வெங்காரம், நவக்ஷாரம் வகைக்குப் பலம் 5, இவைகள் மூன்றும் கல்வத்திலிட்டு, திருகக்கள்ளிப்பால் படி 2, பூநீர், பூரம், வெடியுப்பு சீனாகாரம் நவக்ஷாரம், வீரம், கல்லுப்பு வகைக்கு விரா.2, இவைகள் எட்டும், மூன்று நாள் சேர்த்துவைத்து, அதின் ஜலத்தால் 3 நாள் அரைத்து பில்லைத் தட்டி உலர்த்தி முதலில் கொடுத்தபடி ஒவ்வொரு வில்லயாக உருக்கின முகத்தில் கொடுக்க வெங்கலம்போலாகும். இந்த தாம்பிரம், ரசம், வீரம், கர்பூரம், வெள்ளூரம் வகைக்கு பலம் 4, வெள்ளைப்பாஷாணம் பலம் 1, இவைகள் ஆறும் வெள்ளெருக்கம் பாலால் 8 ஜாமம் அரைத்து, பில்லை தட்டி உலர்த்தி ஒரு சிறு கலயத்தில் போட்டு ஒரு ஓட்டால் வாயைமூடி எழுசீலை மண் வலுவாய்ச் செய்து கஜபுடம் போட பஸ்மமாகும். அதில் ¼-1 குன்றிமணியிடை தகுந்த அனுபானத்திலிட மேகம் (20), குஷ்டம் (18), பிரமேகம் (21), க்ஷயம் (4), சூலை (18), பவுத்திரம் (15), குன்மம் (8), வாதம் (80), பித்தம் (40), சிலேஷ்மம் (20), கபரோகங்கள் (96) முதலிய மஹா பயங்கரமான ரோகங்கள் குணமாகும். பத்தியம்:— அன்னமும் பசும்பாலும் சாப்பிடவும்.

## *மஹா வங்க பஸ்மம்

மனோசிலை வெற்றிலைச்சாற்றால் அரைத்து அதற்கு சமமாக சுத்தி செய்த ஈயத்தகடுகளுக்கு கவசமிட்டு ஓட்டிலிட்டு மேல் ஓட்டால் மூடி சிலை மண் செய்யது கஜபுடம் போடவும். இவ்விதமாகவே 32 புடங்கள் போட்டு எடுத்துப்பார்க்க வெகு வெண்மையான பஸ்மமாயிருக்கும். இதை அனுபானத்திலிட மூர்ச்சை, அபஸ்மாரம், கபரோகம், அதிசாரம், கிரகணி, பேதி, முதலிய அநேக பலமான ரோகங்கள் குணமாகும்.

## மஹா கருவங்க பஸ்மம்

சுத்திசெய்த 3 சேர் காரீயத்தை உருக்கி, 8 சேர் சங்க இலைச்சாற்றில் 21 தடவை வார்த்து, பிறகு அதை ஒரு கம்பியர்க்கி கத்தியால் சீவினபொர்டியை தாமரை இலைச்சாற்றால் 4 ஜாமம் அரைத்து, கல்வத்தோடு ரவியில் வைத்து உலர்த்தி, பிறகு அதை ஒரு செட்டியில்போட்டு ஆகாசதாமரையிலையை கொஞ்சங்கொஞ்சமாகப் போட்டுவறுக்க ஈயத்தை பொடியாக்கிவிடும். அந்தப் பொடியும் அதற்குச் சரியான யிடை கோழிக்குஞ்சு பொரித்த முட்டையின் உள்தோலை நீக்கி மேலோட்டைச் சேர்த்துச் சூர்ணித்து ஒரு குகையில்போட்டு ஓட்டால் வாயைமூடி 7 சீலைமண் வலுவாய்ச்செய்து உலர்த்தி உலையில்வைத்து துருத்தியால் 3-4 மூட்டம்போட்டு குகையை உருகுஞ் சமயத்தில் எடுத்து

ஆற்றி, குகையை உடைத்துப் பார்க்க பஸ்மமாயிருக்கும். அகல் ½-1 குன்றிமணியிடை நெய்யில் தினம் காலை மாலை 3-4 நாள் கொடுத்து பிறகு 10 நாள். பொறுத்து 3–4 நாள் கொடுக்க மூர்ச்சை (4), அபஸ்மாரம் (4), பயித்தியம் (6) முதலிய மஹாகொடியரோகங்கள் குணமாகும்.

## மஹா ரச பஸ்மம்

ஒரு மண்பாண்டத்தில் 1 பலம் கந்தகத்தைப் போட்டு காடாக்கினியாய் எரித்து கந்தகம் உருகும் சமயத்தில் 7 பலம் ரசத்தைவிட்டு தூளாவி கொண்டிருந்தால் ரசம் கந்தகத்துடன் கலந்து, கறுத்துத்தூளாகிவிடும்; பிறகு வேறொருபாண்டத்தில் பாதிக்குச் செங்கல் பொடியைப்போட்டு அதின்மேல் 8 ஆழாக்கு கறிஉப்பைக்கொட்டி, அதின்மேல் ரசகந்தியை வைத்து வேறொருபாண்டத்தால் மூடி பொருத்துவாய்க்குக் களிமண்தடவி ஏழுசீலை மண் வலுவாய்ச் செய்து காடாக்கினியாய் நாலுஜாமம் எரித்துக் குளிரவைத்து உடைத்துப்பார்த்தால் மேல் பாண்டத்தில் ரசபஸ்மம் பதங்கித்திருக்கும். அதை எடுத்து ½, பணவிடைவீதம் அனுபானத்திலிட சுரம் (64), மாந்தம் (8), காசம் (5), சன்னி (13), நேத்திரரோகம் (94), அதிசாரம் (6), மேகம் (20) முதலிய பற்பல கடூரரோகங்கள் குணமாகும்.

## * மஹா சுவர்ண பஸ்மம்

தங்கத்தை சுத்திசெய்து அரத்தால் ராவினபொடி பங்கு 1, சுத்தி செய்த ரசம் பங்கு 2, சேர்த்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து அதற்கு சரியிடை நெல்லிக்காய் கந்தகத்தை சூர்ணித்து அதில் கொஞ்சம் எடுத்து தங்கரசக் கலவையில் சேர்த்து பில்லையாக்கி உலர்த்தி பாக்கி கந்தகத்தில் பாதியை ஓட்டிலிட்டு அதன்மேல் மேற்படி பில்லையை வைத்து அதன்மேல் பாக்கி பாதி கந்தகத்தை போட்டு ஓட்டடால் மூடி சீலைமண் செய்து 30 எருவில் புடம் போடவும். இவ்விதமாகவே 14 புடம் போட மஹா திவ்வியமான பஸ்மமாகும். ஒவ்வொரு புடத்திலும் கந்தகத்தை மேல் சொல்லியபடி சேர்த்துவரவும், இதில் ¼ குன்றிமணியிடை அனுபானத்தில்கொடுக்க புத்தி, வித்தை, ஸ்மரணம், இம்மூன்றையும் வெகு விசாலப் படுத்தும் , விஷபாதைத் தீரும்.

## சுவர்ண ரஜத பஸ்மம்

உப்பிலாங் கொடிஇலையை, 3 பலம் ஜெரிகை வெள்ளித்தகடுகளுக்கும், 5 பலம் தங்கத்தகடுகளுக்கும் கவசமிட்டு சீலைமண் செய்து வரராகல் புடம்போட பஸ்மமாகும். அவைகளை மிஸ்ரித்து ஒரு குன்றிமணியிடை அனுபானத்திலிட மேகம் (20), சுரம் (64), அதிகாரம் (6), மாந்தம், தாது நஷ்டம் முதலிய மஹா கொடிய ரோகங்கள் குணமாகும்.

## சுவர்ண பஸ்மம்

சுத்திசெய்த தங்கப்பொடியை கல்வத்திலிட்டு சித்திரப்பாலாடைச் சாற்றால் 4 ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி கடம்பிலையை அரைத்து அதற்குக் கவசமிட்டு, ஓட்டிலிட்டு மூடி 9 சீலைமண்செய்து கஜபுடம் போட பஸ்மமாகும். இதை அனுபானத்திலிட வெண்குஷ்டம், செங்குஷ்டம் கருங்குஷ்டம், குஷ்டம் (18) முதலிய பலமான ரோகங்கள் குணமாகும். கிராம்பைச் சூர்ணித்து பசும் வெண்ணெயில் சேர்த்து அதில் ஒரு குன்றிமணி இடை பஸ்மம் வைத்து உட்கொண்டு பாலும் அன்னமும் சாப்பிட தேகம் பலக்கும்,. விந்து ஊறும், தாதுகட்டும்.

## வீரபஸ்மம்

அமுரி நாலுபடியும், பூநீர் ஒரு படியும் சேர்த்து ஒரு செட்டியிலிட்டு துணியால் அதன் வாயைக் கட்டி அதன்மேல் வீரம் பலம் ½, வைத்து மூடி சீலைமண் செய்து நீர்வற்றும் வரையில் தீபாக்கினியாய் எரித்து எடுத்து கிரந்தி நாயகச்சாற்றால் 3 நாள் அரைத்து பில்லைசெய்து உலர்த்தி மேற்படி இலையை அரைத்து குகை செய்து அதில் வைத்து மூடி ஒரு செட்டியில் மணல் கொட்டி அதின் மேல் இதை வைத்து ஒரு ஜாமம் தீபாக்கினியாக எரிக்க பஸ்மமாகும். அதில் அரிசிடை அனுபானத்திலிட ஜன்னி (18), தோஷம், கபரோகங்கள் (96), வாதம் (80), முதலிய கடூர ரோகங்கள் குணமாகும்.

## அப்பிரக பஸ்மம்

சுத்திசெய்த அப்பிரக பொடியை கல்வத்திலிட்டு குமிளம்பட்டைச் சாற்றால் 4 ஜாமம் அரைத்து பில்லைதட்டி உலர்த்தி வரராகல் புடம்போட்டு எடுத்து; இப்படியே ஆலம்பாலில் அரைத்து 2 புடங்களும், எலுமிச்சம் பழச்சாற்றால் ஒரு புடமும் போட்டு எடுத்து அனுபானத்திலிட க்ஷயம் (4), மேகம் (20), கிரிச்சாரம் (4), பிரமேகம் (21), மேகவாயு, கிரகணி (11), சன்னி (13), அஸ்திச்சுரம், அஸ்திவெட்டை, கைகால் எரிவு முதலிய மஹா பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

## தாளக பஸ்மம்

இரண்டு பலம் சுத்திசெய்த தாளகத்தை வாழைக்கிழங்குக்குள் வைத்து மூடி எட்டு சீலைமண் வலுவாய்ச் செய்து உலர்த்தி வரராகல் புடம்போட்டாலும் சரி, அல்லது மூக்கரைச்சாரணைசமூலம் 2 நார்த்தங்காய் அளவு அரைத்து அதன் மத்தியில் தாளகக்கட்டியை வைத்து மூடி ஒரு வாய் அகன்ற கலயத்தில் வைத்து அகலால் மூடி எட்டு சீலைமண் வலுவாய் செய்து 12 மணி நேரம் தீபாக்கினியாக எரித்தாலும் சரி, அது பஸ்மமாகும். அதில் ½ முதல் 2 குன்றிமணியிடை அனுபானத்தில் கொடுக்க க்ஷயம் (4), கிரந்தி (9), சூலை (18) சுரம் (64), குஷ்டம் (18), மேகம் (20) முதலிய பற்பல கடூரரோகங்கள் குணமாகும்.

## லகு தாம்பிர பஸ்மம்

8வது அத்தியாயத்தில் சொல்லியபடி தாம்பிரத்தை சுத்திசெய்து அரத்தால் ராவின பொடியை ஒரு புது சிறு வாணாவில் போட்டு தீபாக்கினியாக எரித்து ஒரு படி புளியாரைச்சாற்றால் சுருக்குக்கொடுக்க பஸ்மமாகும். அதை 1½ அரிசியிடை நெய்யில் 2 நாளைக்கு ஒருதரம் சாப்பிட மேகம் (20), கிரந்தி (9), சூலை (18) முதலிய கடூரரோகங்கள் குணமாகும். வெள்ளை மேகத்திற்கு இதைப்பத்துபோட தீரும். கருமேகத்திற்கு ஆட்டுப்பாலில் கலந்து வேறுயிடத்தில் படாமல் தடவிவர தீரும். பத்தியம் வென்னீர் ஸ்நானம் செய்யவும். தயிர், மோர் தள்ளவும்.

## கர்ப்பூரசலாசத்து பஸ்மம்

1. சுத்திசெய்த கர்பூரசலாசத்தை சிறுசெருப்படைச்சாற்றால் 4 ஜாமம் அரைத்து பில்லைதட்டி உலர்த்தி ஒரு கலயத்தில் வைத்து ஓட்டால் மூடி 5 சீலைமண் செய்து வரராகல் புடம்போடவும். இவ்விதமாக மூன்றுபுடம் போட பஸ்மமாகும். அதில் ¼ விரா. வீதம் பசுவின் நெய்யில் கொடுக்க நீர்க்கடுப்பு; தேக எரிவு, பித்தவெட்டை தீரும். இத்துடன் வெங்காரத்தைச் சேர்த்து ஜலத்தில் கொடுக்க கல்லடைப்பு, நீர் அடைப்பு சதையடைப்பு, நீர் எரிவு முதலியவைகள் குணமாகும்.

2. சுத்தி செய்த கர்பூரசலாசத்துக்கு துத்தியிலையை அரைத்துக் கவசமிட்டு வரராகல் புடம்போட்டு எடுத்து ¼ விரா. வீதம் பசுவின் வெண்ணெயிலிட உஷ்ணரோகங்கள், பித்தவெட்டை முதலியவைகள் குணமாகும்.

## நாக பஸ்மம்

ஒருசேர் நாகத்தைக் குகையில் உருக்கி கீழ்க்காய்நெல்லிச்சமூலத்தின் சூர்ணம் சேர் 1 அதில் தூவிக்கிளர பஸ்மம் போலாகும். அத்துடன் சரி இடை ரசம் சேர்த்து பனைமட்டைச் சாற்றாலரைத்து பில்லை செய்து

உலர்த்தி குக்குடம் புடம்போடச் சுத்த பஸ்மமாகும். அதில் 2-4 கிறேன்ஸ் வெண்ணெயிலாவது அல்லது வேறு அனுபானத்திலாவது கொடுக்க குன்மம் (8), மூலமூளை, வயிற்றுக்கடுப்பு, கைகால் ஊறல், வெள்ளை, வெட்டை, மூலம் முதலியவைகள் குணமாகும்.

## பிரவாள பஸ்மம்

ஒரு பலம் பிரவாளத்தை வெள்ளை எருக்கம் பாலாலரைத்து குக்குட புடம் போட பஸ்மமாகும். அதில் 3கிறேன்ஸ் வீதம் தினம் அனுபானத் திலிட சுவாசம் (5), காசம் (5), இருமல் முதலிய கபரோகங்கள் (96) குணமாகும்.

## * ராஜலோக நாத ரசபஸ்பம்

ரசம், கந்தகம் வகைக்கு பலம் 1 சுத்திசெய்து கல்வத்திலிட்டு அரைத்து 4 பல்ம் பலகறை (கவடி)யில் செலுத்தி பிறகு வெங்காரம் பலம் 1 பசும்பாலால் அரைத்து மேற்படி பலகறையின் வாயில் அடைத்து, பிறகு சங்குவை துண்டுகளாக்கி பசும்பாலில் வேகவைத்து சுத்திசெய்து 8 பலம் தூக்கி, சுண்ணாம்பைப்பூசின ஓட்டில் சங்கு துண்டுகளில் பாதிபோட்டு அதின் மத்தியில் மேற்படி பலகறை வைத்து அதின்மேல் பாக்கிபாதி சங்குத்துண்டுகளை போட்டு சுண்ணாம்புப் பூசின ஓட்டால் மூடி சீலைமண் செய்து கஜபுடம் போட ஓட்டிலுள்ளவைகள் எல்லாம் பஸ்மமாகும். அவைகளை எடுத்து மிஸ்ரித்து 6 குன்றிமணி இடை 29 மிளகின் சூர்ணத்தில் சேர்த்து வாதம் (80) க்கு நெய்யிலும், பித்த (40)க்கு வெண்ணெயிலும், கபரோகம் (96)க்கு தேனிலும் கொடுக்க அதிசாரம், க்ஷயம், கிரகணி, அக்கினிமந்தம், இருமல், சுவாசம், குன்மம் முதலிய மஹா பயங்கரமான ரோகங்கள் குணமாகும். **பத்தியம்:—** புளிப்பு தள்ளி, நெய், பால், சேர்த்துக் கொள்ளவும்.

## சிங்கி பஸ்மம்

குப்பைமேனியிலையை அரைத்து மான் கொம்புக்குக் கவசமிட்டு குக்குடபுடம்போட பஸ்மமாகும். இதுவும் பிரவாள பஸ்மமும் சமமாகச்சேர்த்து 4 கிறேன்ஸ் வீதம் தினம் 2 தடவை அனுபானத்திலிட இருமல், சுவாசம் (5), காசம் (5), க்ஷயம் (4) முதலிய கபரோகங்கள் (96) குணமாகும்.

## ரஜத பஸ்மம்

ஜெரிகை உருக்கின வெள்ளியை அரத்தால் ராவி பொடியாக்கி குன்றிமணியிலைச் சாற்றால் 4 ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து வரராகல் புடம்போட்டு எடுத்து மறுபடியும் கல்வத்திலிட்டு அம்மான் பச்சரிசிச் சாற்றால் 2 ஜாமம் அரைத்து முன்போல இரண்டு புடம் போட்டு எடுத்துப்பார்க்க பஸ்மமாயிருக்கும். அதில் ½ பணவிடை வீதம் அனுபானத்திலிட மேகம் (20), பிரமேகம் (21), மூத்திரரோகம் (12), கிரிச்சரம் (4), அஸ்தி சுரம் முதலிய கடூர ரோகங்கள் குணமாகும். பசி உண்டாகும்.

## ரஸபஸ்மம்

ரசம் பலம் 2, கல்வத்திலிட்டு அதில் ஆடுதீண்டாப்பாளை இலைச்சாறு, பொன்னாவரை இலைச்சாறு, குப்பைமேனி இலைச்சாறு, இம்மூன்றும் சமமாக சேர்த்துவைத்துக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக விட்டு 4 சாமம் அரைத்து ஓட்டிலிட்டு 7 சீலைமண் வலுவாய்ச் செய்து குக்குட புடம்போட பஸ்மமாகும். அதில் ½-1 குன்றிமணி இடை அனுபானத்திலிட மேகம் (20) வாயு, சன்னி (13), வாதம் (80), முதலிய அநேக கடூரரோகங்கள் குணமாகும்.

## கல்நார் பஸ்மம்

1. கல் சுண்ணாம்புத் தண்ணீரில் கல்நார் பலம் 2 போட்டு இரண்டு நாள் ஊறவைத்து எடுத்து பொடுதலையை அரைத்து அதற்கு கவசமிட்டு குக்குட புடம்போட பஸ்மமாகும். அதில் ¼ விரா. வீதம் அனுபானத்திலிட கபரோகங்கள், மேகக்காங்கை முதலியவைகள் தீரும். தந்த சுத்தி செய்துவர தந்தம் இறுகும்.

2. சுத்திசெய்த கல்நாரை துண்டுகளாக்கி ஒரு சிறு கலத்தில் போட்டு அதற்கு கீழும் மேலும் எருக்கம் வேர்த்தூளைப் போட்டு மூடி, சீலைமண் செய்து வரராகல் புடம்போட்டு எடுத்து, கொங்கிலவம்பட்டைக் கசாயத்தால் ஒவ்வொரு ஜாமம் அரைத்து இரண்டு புடம்போட்டு எடுத்துப் பார்க்க பஸ்மமாகும். அதில் ¼ விரா. வீதம் அனுபானத்திலிட மேற்படி ரோகங்களெல்லாம் குணமாகும்.

## பவள பஸ்மம்

1. சுத்திசெய்த பவளத்தை தேள்கொடுக்கிலையாவது, கீழ்க்காய் நெல்லியாவது அல்லது இலந்தையிலையாவது அரைத்து குகை செய்து அதில் வைத்து மூடி 9 சீலைமண் செய்து உலர்த்தி வரராகல் புடம்போட பஸ்மமாகும். ¼ விரா. அனுபானத்திலிட பித்தம் (40), கண்புகைச்சல், ஈளை, இருமல், உப்பிசம், சுரம் (64), க்ஷயம் (4), காசம் (5), நீர்க்கடுப்பு முதலியவைகள் குணமாகும்.

2. சுத்திசெய்த பவளம் பலம்1, கர்பூரசலாசத்து பலம்1, இவைகளைக் கல்வத்திலிட்டு பிரண்டைச்சாற்றால் 3சாமம் அரைத்து முன்போலப்புடம் போட்டு எடுத்து பணவிடை வீதம் பசுவின் வெண்ணெயிலிட மேகம் (20), அஸ்திமேகம், மதுமேகம், எலும்புருக்கி முதலிய கடூரமேகங்களும், தேனிலிட குன்மம் (8), மேகஊறல் முதலியவைகளும் தீரும்.

## வெள்ளீய பஸ்பம்

வெள்ளீயம் சேர்1, ஒரு இரும்பு சட்டியில் போட்டு வேறு 3 பாத்திரங்களில் ஒவ்வொன்றிலும் 4சேர் நல்லெண்ணெய்யை விட்டு மேற்படி ஈயத்தை உருக்கி ஒவ்வொரு பாத்திரத்திலும் 7தடவை வார்க்கவும். இவ்விதமாகவே இலுப்புநெய், எலுமிச்சம்பழச்சாறு, காடி, புளித்த மோர், கோ மூத்திரம் இவைகளில் ஒவ்வொன்றிலும் 21தடவை உருக்கிவார்க்கவும். பழச்சாறு முதலிய ஜலசம்பந்தமானவைகள் மாத்திரம் கல்லுரலில் போட்டு அதன்மேல் திருகையை வைத்து, அதன் சிறுதுவாரத்தில் மேற்படி ஈயத்தை உருக்கிவார்க்கவேணும். இப்படிக்குச் செய்யாவிடில் ஈயத்தைப் பறக்கும். இவ்விதமாய் சுத்தி செய்த ஈயத்தை வெங்காயத்தோல்போல் லேசாக அடித்து சிறு துண்டுகளாக்கி 2முழ அகலமும், 3-4 முழு நீளமுள்ள ஒரு துணியைப்பறப்பி அதன்மேல் வெண்ணொச்சி இலையையும், பூவும் சேர்ந்தச் சூர்ணத்தைப் போடடு அதில் மேற்படி ஈயத்தகட்டை ஒன்றின்மேலொன்று படாமல் பரப்பித்திரியைப் போலச்சுற்றி காற்றில்லாதயிடத்தில் இருபக்கமும் கொளுத்திவிட்டு ஆறினபிறகு பார்த்தால் தகடுகள் பொறியாயிருக்கும். அவைகளை மாத்திரம் எடுத்து சூர்ணிக்க பஸ்மமாகும். அதில் ஒரு குன்றிமணியிடை சீரகமும், கற்கண்டும், நெய்யும் சேர்ந்த சூர்ணத்தில் கால்மண்டலம் கொடுக்க கபரோகம், வெள்ளை, வயிற்றுக் கடுப்பு முதலியவைகள் குணமாகும். இத்துடன் காந்த செந்தூரத்தைச் சேர்த்துக்கொடுக்க அதிசாரம், கிரகணி, பேதி, முதலியவைகள் குணமாகும்.

## உருக்கு பஸ்மம்

சுத்திசெய்த உருக்கைத் தகடுகளாக்கி ஆகாசகருடக்கிழங்கில் பொதிந்து சீலைமண் செய்து வரராகல் புடம்போட பஸ்மமாகும். அதில் பணவிடை அனுபானத்திலிட தேகபலமும், நரைதிரை மாறுதலும் உண்டாகும்.

## அய பஸ்மம்

சுத்திசெய்த அரப்பொடியை குப்பைமேனிச்சாற்றால் 2ஜாமம் அரைத்து உலர்த்தி முந்திரி மரத்தின் ஒரு சிறு கட்டையை துளைத்து அதிலிட்டு மேற்றபடி மரத்தின் சக்கையால் மூடி சீலைமண் செய்து கஜபுடம் போட பஸ்மமாகும். இதில் ½-1 விராகனிடை அனுபானத்திலிட,

பித்தவெட்டை, பாண்டு, சோகை (9) முதலியவைகள் குணமாகும். தேகம் இறுகும், விந்து ஊறும், தாதுகட்டும்.

## துரிசு பஸ்மம்

துரிசு விரா.3, வெடியுப்பு விரா.2, இவைகளை குப்பைமேனி இலைச்சாற்றால் அரைத்து பில்லை தட்டி ஒரு ஓட்டிலிட்டு சீலைமண்செய்து குக்குட புடம்போட பஸ்மமாகும். இதில் ½ முதல் 2 குன்றிமணியிடை வீதம் அனுபானத்திலிட வயிற்றுவலி கபரோகங்கள் (96) தீரும்.

2. துருசியை கவுதும்பைச்சாற்றில் ஊறவைத்து உலர்த்தி கல்வத்திலிட்டு மேற்படி சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி மேற்படி இலையை அரைத்து கவசமிட்டு 9 சீலைமண் செய்து கவுதாரிபுடம் போட்டு எடுத்து கருஊமத்தை இலைச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து உலர்த்தி மேற்படி இலையை அரைத்துக் கவசமிட்டு முன்போல் புடம்போட பஸ்மமாகும். அதில் 1-2 குன்றிமணியிடை வீதம் தகுந்த அனுபானத்திலிட ஜன்னி (13), தோஷம், சுரம் (64), குன்மம் (8), பக்கவாயு, சோகை (9), பாண்டு (5), பித்தம் (40), ஈளை, காசம் (5), இரைப்பு, பெருவயிறு, காமாலை (13), முதலிய பற்பல கடூர ரோகங்கள் குணமாகும்.

## கதலிபஸ்மம்

ஈசுவரமூலி வேரை ரஸ்தாளிப்பழத்தின் மத்தியில் வைத்தாவது அல்லது ரஸ்தாளிப் பழத்தைக்கீறி பிரண்டையிலையை மத்தியிலும், மேலுங்கீழும் வைத்தாவது சீலைமண் செய்து குக்குடம் புடம் போட பஸ்மமாகும். அதில் ஒரு விராகனிடை வீதம் அனுபானத்திலிட உஷ்ணவாயு, வயிற்றுவலி தீரும்.

## லவணபஸ்மம்

இந்துப்பு, பொட்டிலுப்பு, வெங்காரம், சீனாகாரம் வகைகக்குப்பலம் 1, கர்பூரசலாசத்து பலம் 4, இவைகளை சுத்திசெய்து குப்பைமேனிச் சாற்றால் ஒருநாள் அரைத்து பில்லைதட்டி ஒரு சிறு கலயத்தில் வைத்து வாயைமூடி 7 சீலைமண்செய்து கஜபுடம்போட பஸ்மமாகும். அதில் 2-3 பணவிடைவீதம் தேனில் கொடுத்துவர அஜீர்ணம், வாயு, மந்தாக்கினி, குன்மம் முதலியவைகள் தீரும். தீபனம் உண்டாகும்.

# 41-வது அத்தியாயம்

## செந்தூரங்கள்

சச்சிதானந்த ஸ்வரூபராய் இருக்கின்ற கடவுளானவர் சர்வ ரோகங்கள் நிவர்த்தியாகும் பொருட்டு அனுக்கிரகஞ் செய்திருக்கின்ற

செந்தூரங்களில் சாதாரண ஜனங்களும், வைத்தியர்களும் எளிதில் செய்யக்கூடியதுமான உத்கிருஷ்டமுள்ளவைகளை இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். இவைகளை தகுந்த அனுபானத்தில் சாப்பிட்டுவருகின்ற நோயாளிகள் வெகு சீக்கிரத்தில் நிரோகிகளாவதற்குச் சந்தேகமில்லை.

## நமசிவாய செந்தூரம்.

வீரம், பூரம், தாளகம், ரசம், லிங்கம் வகைக்குப்பலம் 4, காந்தம் பலம் 1 இவைகளைச் சுத்திசெய்து அத்துடன் அதிவிடையம் ஒரு பலம் சேர்த்து, கல்வத்திலிட்டு கரு ஊமத்தையிலைச் சாற்றால் 4 சாமம் அரைத்து பில்லைதட்டி உலர்த்தி சட்டியில்போட்டு மேல் சட்டி மூடி ஏழு சீலைமண் வெகு வலுவாய் செய்து தீபாக்கினியாய் 4 சாமம் எரித்து எடுக்கவும். இவ்விதமாகவே கற்றாழைச்சாற்றால் அரைத்து இரண்டுதடவை எரிக்க செந்தூரமாகும். அதில் அரிசியிடை தினம் 2 தடவை அனுபானத்தில் 3 நாள் கொடுக்க சன்னி (13), சுரம் (64), குணமாகும். அரைமண்டலம் கொடுக்க யோனிப்புற்று, மேகரணம், லிங்கப்புற்று, பவுத்திரம் (15), காசம் (5), வாதம் (80), முதலிய மஹாபயங்கரமான ரோகங்களும் குணமாகும்.

## க்ஷடாக்ஷர செந்தூரம்.

ரசம், மனோசிலை, அரிதாரம், காந்தம், கெந்தகம், நர்வி இவ்வாறும் சுத்திசெய்து சமமான யிடை சேர்த்து சிறுசெருப்படைச்சாற்றால் 3 நாள் அரைத்து உலர்த்தி, சீலைமண் வலுவாய் செய்த காசிக்குப்பியின் ½ பாகம் இந்த மருந்தைபோட்டு பாக்கி ½ பாகத்துக்கு சிறு செருப்படைசாறும் நிலத்தாமரை வேர்த்தூளும் போட்டு வாயைமூடி, 10 சீலைமண் வெகுவலுவாய் செய்து உலர்த்தி ஒரு சட்டியில் மணலைப்போட்டு அதன்மேல் குப்பியைவைத்து குப்பி மறையும்படி மணலைபோட்டு தீபாக்கினியாய் 3 நாள் எரித்து எடுத்துப்பார்க்க செந்தூரமாயிருக்கும். அதில் ½ குன்றிமணியிடை அனுபானத்திலிட வலி (5), கிரந்தி (9), குஷ்டம் (18), ரணம், நரை திரை மூப்பு, வாய் ஊறல், வாய்ப்புற்று, பிளவை முதலிய மஹா கடூரரோகங்கள் குணமாகும்.

## வீரபத்திர சிந்தாமணி

மனோசிலை பலம் 1, லிங்கம் பலம் 2, ரசம் பலம் 4, கெந்தகம் பலம் 5 இவைகளைச் சுத்திசெய்து கரிப்பான், முருங்கைப்பூ, பிச்சிப்பூ, மாதுளம்பூ இவைகளின் சாற்றால் வகைக்கு 8 சாமம் அரைத்து உலர்த்தி சூர்ணித்து, 8 சீலைமண் செய்த காசிக்குப்பியில் போட்டு பளப்பக்கல்லால் வாயைமூடி சீலை மண் வலுவாய் செய்து ஒரு சட்டியில் 5 விரற்கடை மணலைக்கொட்டி அதன்மேல் குப்பியைவைத்து அதன் கழுத்துவரையில்

மணலைப்போட்டு தீபாக்கினியாய் 2 ஜாமமும், கமலாக்கினியாய் 2 ஜாமமும்காடாக்கினியாய் 2 ஜாமமும் எரித்து ஆற்றி உடைத்துப்பார்க்க செந்தூரமாயிருக்கும். அதில் ஒரு குன்றிமணியிடை மருட்கிழங்கின் தூளில் 20 நாள் கொடுக்க மூலம் (9) தீரும். பறங்கிப்பட்டைத் தூளில் 20 நாள் கொடுக்க மேகம்(20), மேகரணம் முதலியவைகள் தீரும். வெருகங்கிழங்கு, விளாம்பெருக்கு சமமாகச்சேர்த்து குழித்தயிலமிறக்கி அதில் ரசகர்ப்பூரமும் இதுவும் சேர்த்துக் கொடுக்க குஷ்டம் (18), குரைநோய், கபாலகுஷ்டம், விஷக்கடி, சொறி, சிறங்கு, தீரும். பிரண்டை சூர்ணத்தில் கொடுக்க குன்மம் (8), வாயு தீரும். தாமரைப்பூச்சாற்றில் 20 நாள் கொடுக்க சுரம் (64), உஷ்ணரோகம் தீரும். வெற்றிலைச்சாற்றில் கொடுக்க சுரம் (64), அஸ்திசுரம், தீரும்; வில்வாதிலேகியத்தில் கொடுக்க, காசம் (5), மாந்தம், ஈளை, இருமல் குன்மம் (8), காமாலை (13), தீரும்.

## பஞ்சாக்ஷர செந்தூரம்

தங்கப்பொடி பலம் 4, அரிதாரம் பலம் 6, மனோசிலை பலம் 7, ரசம் பலம் 8, கந்தகம் பலம் 12, இவ்வைந்தும் சுத்திசெய்து கல்வத்திலிட்டு மாதுளம் பூச்சாற்றால் 4 நாள் அரைத்து உலர்த்தி காசி குப்பியில் போட்டு ஏழுசீலைமண் வலுவாய் செய்து ஒரு சட்டியில் 5 விரற்கடை உயரம் மணலைக்கொட்டி அதன்மேல் குப்பியை வைத்து மணலால் மூடி 4 நாள் கமலாக்கினியாய் எரிக்க செந்தூரமாகும். அதில் ¼ குன்றிமணியிடை அனுபானத்தில் ½ மண்டலம் கொடுக்க சுவாசம் (5), காசம் (5), க்ஷயம் (4), குன்மம் (8), சுரம் (64), இருமல் முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

## உலகோத்தம செந்தூரம்

வெள்ளைப்பாஷாணம், மனோசிலை, அரிதாரம், ரசகர்ப்பூரம், லிங்கம், காந்தம், கந்தகம், இவ்வேழும் சுத்திசெய்து வகைக்கு விரா.3, கல்வத்திலிட்டு குப்பைமேனி, வெற்றிலை, பருத்தி, வெள்ளெருக்கம், துளசி, வேலிப்பருத்தி, பொடுதலை இவ்வேழு சாற்றால் வகைக்கு ஒரு நாள் அரைத்து பில்லைத்தட்டி நிழலில் உலர்த்தி வெற்றிலையால் கவசமிட்டு ஒரு சட்டியில் வைத்து மேல் சட்டி மூடி ஏழு சீலைமண் வலுவாய்செய்து உலர்த்தி தீபாக்கினியாய் ஒரு நாள் எரித்து எடுத்துப்பார்க்க மேற்சட்டியில் செந்தூரம் பற்றியிருக்கும். அதை எடுத்து ¼ குன்றிமணியிடை அனுபானத்திலிட சூலை (18), சன்னி (13), மேகம் (20), வெண்குஷ்டம், சுரம் (64), வாதம் (80), கிரகணி (11), குன்மம் (8), பிளவை, கண்டமாலை (18), அண்டவாதம், வலிப்பு (5), பவுத்திரம் (15), காசம் (5), கிரந்தி (9), புற்று, குரைநோய், பெருநோய், கரப்பான், தேமல், கன்னப்புற்று, அரையாப்பு, கபாலசூலை முதலிய அநேக மஹா பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

## ருத்திர செந்தூரம்

வீரம், பூரம், லிங்கம், ரசம், வகைக்கு விரா.6, அரப்பொடி விரா.3, இவ்வைந்தும் சுத்திசெய்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் 3 சாமம் அரைத்து வில்லை தட்டி ஒரு சிறு கலயத்தில் வைத்து அகலால் மூடி 10 சீலைமண் வலுவாய் செய்து வரராகல் புடம்போட்டு எடுத்து, இவ்விதமாகவே இஞ்சிச்சாற்றாலும், பொற்றலைகையாந்தகரைச் சாற்றாலும், தனித்தனியே ஒவ்வொரு புடம் போட்டு எடுத்து அத்துடன் ரசசெந்தூரம் அல்லது பஸ்மம் விரா.6 சேர்த்து மிஸ்ரித்து ஒரு சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு ½ குன்றிமணியிடை அனுபானத்திலிட மேகம் (20), சன்னி (13), சூலை (18), குஷ்டம் (18), சுரம் (64) முதலிய அநேக மஹா கடூர ரோகங்கள் குணமாகும்.

## சுவர்ண செந்தூரம்

சுத்திசெய்த் தங்கம் விராகனிடை 5, சுத்திசெய்த ரசம் பலம் 4, சுத்திசெய்த கந்தகம் சேர் 1, கல்வத்திலிட்டு ½ நாள் செம்பரத்தம்பூச் சாற்றாலும், 1 நாள் குமரிவேர் சாற்றாலும் அரைத்து நிழலில் உலர்த்தி காசிக்குப்பியிலிட்டு பளப்பக்கல்லால் வாயைமூடி, 7 சீலைமண் வலுவாய் செய்து உலர்த்தி, வீரபத்திர சிந்தாமணியை செய்யும் விதமாக இதையும் செய்து ¼ குன்றிமணியிடை வீதம் தகுந்த அனுபானத்திலிட நீரிழிவு, இருமல், காசம் (5), சன்னி (13), மகோதரம் (8), க்ஷயம் (4), குன்மம் (8), மூலம் (8), வலி (5), வாதம் (80) பித்தம் (40), கிரகணி (11), பெரும்பாடு, பிரமேகம் (21), சூலை (18), குஷ்டம் (18), கிரந்தி (9), உட்சுரம் முதலிய மகா கொடிய ரோகங்கள் அதி சீக்கிரத்தில் குணமாகும்.

## ரசபயிரவ செந்தூரம்

ரசம், லிங்கம், நாவி, கந்தகம், சீனாக்காரம் இவ்வைந்தும் சுத்திசெய்து வகைக்கு விரா. 5 சேர்த்து கல்வத்திலிட்டு கொடிவேலி வேரின் கசாயத்தால் ஒருநாள் அரைத்து உலர்த்திக் காசிக்குப்பியில் போட்டு வாயைமூடி சீலைமண்செய்து ஒரு சட்டியில் 3 விரற்கடை மணல் கொட்டி அதன்மேல் மேற்படி குப்பியைவைத்து அதை மணலால் மூடி கமலாக்கினியாய் 2 ஜாமம் எரித்து சூர்ணித்து ஒரு குன்றிமணியிடை வீதம் அனுபானத்தில் கொடுக்க பித்தசுரம், சன்னிபாதசுரம், சிலேஷ்மசுரம் முதலிய சகல சுரங்களும் குணமாகும்.

## திரிவிக்கிரம ரச செந்தூரம்

ரசம், வெள்ளைப்பாஷாணம், அரிதாரம் இம்மூன்றும் சுத்திசெய்து வகைக்கு விரா.15, சேர்த்து கல்வத்திலிட்டு கையாந்தகரைச் சாற்றால் 4 ஜாமம் அரைத்து நிழலில் உலர்த்தி காசிக்குப்பியில் போட்டு வாயைமூடி,

7 சீலைமண் வலுவாய் செய்து ஒரு சட்டியில் ஆறு விரற்கடை மணலை கொட்டி அதன்மேல் குப்பியை வைத்து மணலால் மூடி தீபாக்கினியாய் 4 சாமம் எரித்து எடுத்துச் சூர்ணித்து ஒரு சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு ½ குன்றிமணியிடை, நொச்சிச்சாற்றில் கொடுக்க சன்னிபாதசுரம் (13), சுவாசம் (5), காசம் (5), க்ஷயம் (4) முதலிய கடுர ரோகங்கள் குணமாகும்.

## ஏகாதசருத்திர செந்தூரம்

லிங்கம் பலம்1, ரச செந்தூரம் பலம்1, வீரம் பலம் ½ இளைகளைச் சுத்தி செய்து முதலில் லிங்கத்தைக் கல்வத்திலிட்டு சூர்ணித்து பிறகு ரச செந்தூரம் சேர்த்து அரைத்து பிறகு வீரத்தைச் சேர்த்து அரைத்து எல்லாம் சேர்ந்து வந்தவுடனே காடிக்காரம் பலம் 1/8 சேர்த்து 4 ஜாமம் அரைக்கவும். இப்படி அரைக்கையில் ஈரங்கண்டால் 2 நாழிகை ரவியில்வைத்து அரைத்துக்கொள்ள செந்தூரமாகும். அதை ஒரு சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு ½ முதல் 1 அல்லது 1½ நெல்லிடை ரோகத்தின் பலாபலங்களை அறிந்து தேனில் கொடுக்கவும். இந்த செந்தூரம் காடிக்காரத்தைச் சேர்க்காமலும் செய்துகொள்ளலாம். இதைக் கொடுக்க, சூதக வாயு, சூதகக்கட்டு, சூதக சன்னி, சுரம், சந்நிபாத சுரம், திரிதோஷ சுரம் முதலிய மஹா கடுர ரோகங்கள் குணமாகும்.

## நாராயண மண்டூர செந்தூரம்

அரப்பொடி, மண்டூரம், காந்தம், சங்கு, கடல் நுரை, கந்தகம் கல்நார், வெங்காரம், நவச்சாரம் இவைகளை சுத்திசெய்து வகைக்குப் பலம் 1 கல்வத்திலிட்டு கற்றாழைச்சாற்றால் ஒரு நாள் அரைத்து சூர்யபுடம் போட செந்தூரமாகும். அதில் ஒரு பணவிடை அனுபானத்திலிட அக்கினிமந்தம், வாயு, பாண்டு (5), சோகை (5), முதலியவைகள் தீரும். ரத்தவிருத்தியாகும்.

## திரிமூர்த்தி செந்தூரம்

க்ந்தகம், ரசம், நவக்ஷாரம் வகைக்குப்பலம் 1, சுத்திசெய்து முருங்கப்பூச்சாற்றால் ஒரு நாள் அரைத்து நிழலில் உலர்த்தி காசிக்குப்பியில் போட்டு மாவக்கல்லால் வாயைமூடி 7 சீலைமண் செய்து சட்டியில் 3 விரல்கடை உயரம் உப்பைப் போட்டு அதன்மேல் குப்பியைவைத்து அதைச்சுற்றிலும் உப்பைக்கொட்டி அதன்மேல் மணலால் மூடி வேறுசெட்டியால் வாயைமூடி 7 சீலைமண் செய்து கமலாக்கினியாய் 2 நாள் எரிக்க செந்தூரமாகும். அதில் குன்றிமணியிடை அனுபானத்திலிட குன்மம் (8), சூலை (18), கை கால் இழுத்துக்கொள்ளல், ரணம் முதலிய மஹா கடுரரோகங்கள் குணமாகும்.

## திரிலோக செந்தூரம்

காந்தம், கிட்டான், அரப்பொடி இவைகளைச் சுத்திசெய்து வகைக்கு 3 பலம் சேர்த்து ஆவாரை, கரிப்பான், எலுமிச்சம்பழம் இவைகளின் ஒவ்வொரு சாற்றிலும் தனித் தனியாய் ஒவ்வொரு ஜாமம் அரைத்து ஒவ்வொன்றிலும் 5 வரராகல் புடம்போட்டு பணிவிடைவீதம் அனுபானத்திலிட சோபை (5), பாண்டு (5), முதலியவைகள் தீரும். ரத்தம் ஊறும்.

## ராஜ அப்பிரக செந்தூரம்

சுத்திசெய்த அப்பிரகப்பொடி பலம் 2, முள்ளங்கிக்கிழங்குச் சாற்றால் 4 ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி கஜபுடம் போடவும். இவ்விதமாய் மேற்படி சாற்றாலும், நாவல், ஆல், அரசு, அத்தி இவைகளின் பட்டைகளை சமமாகச் சேர்த்துக்காய்ச்சின கசாயத்தாலும், கொடிவேலிவேர் கசாயத்திலும், எலுமிச்சம்பழம், கவுதும்பை, கரந்தை, சிறுசெருப்படை, கரிப்பான், முருங்கைப்பூ இவைகளின் சாற்றாலும் வகைக்கு 10 வரராகல் புடம்போட செந்தூரமாகும்; அதில் 2 பணவிடை அனுபானத்திலிட கபரோகங்கள் (96), மேகம் (20), கிரகணி (11), கிரிச்சரம் (4), பிரமேகம் (21), கைகால் எரிவு, அஸ்திசுரம், அஸ்திவெட்டை, மேகவாயு, சன்னி (13), முதலிய மஹா பயங்கரமான ரோகங்களும் குணமாகும்.

## ரச வீர செந்தூரம்

வீரம் விரா. 4, ரசம் விரா. 4, அரப்பொடி விரா. 5, நவக்ஷாரம் விரா. 1, இவைகளைச் சுத்திசெய்து கல்வத்திலிட்டு ஒரு சாமம் சூர்ணித்து ஒரு புதுசட்டியில் போட்டு தீபாக்கினியாய் எரித்து தென்னமீர்க்குகளால் துளவி வறுக்கவும். இவ்விதமாய் 3 தடவை அரைத்து வறுக்க செந்தூரமாகும். எரிக்கும்போது அதன் புகை கண்களிலும் வாயிலும் போகாமல் ஜாக்கிரதையாய் இருக்கவும். இதில் ½ குன்றிமணியிடை சன்னி 13க்கு சீனியிலும், மகாவாத முதலிய அநேக பலமான ரோகங்களுக்கு வெல்லத்திலும் கொடுக்க குணமாகும்.

## அயச் செந்தூரம்

(1) அரப்பொடி பலம் 3, கந்தகம் பலம் 9, இவைகளைச் சுத்திசெய்து கற்சுண்ணாம்புத் தெளிவு ஜலத்தில்போட்டு 8 நாள் வெயிலில் வைத்து உலர்த்தி பிறகு ஒரு சட்டியில் போட்டு மேல்சட்டிமூடி ஏழுசீலைமண் செய்து உலர்த்தி 3 சாமம், கமலாக்கினியாய் எரிக்க செந்தூரமாகும். அதில் 2-5 பணவிடை அனுபானத்திலிட பாண்டு (5), காமாலை (13), சோகை (5), கிரகணி (11), சூலை (18), மேகம் (20), தீரும்.

(2) அரப்பொடி பலம் 4, கந்தகம் பலம் 4, கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் 4 சாமம் அரைத்து உலர்த்தி ஒரு

இரும்புபாணாவில் போட்டு ஒரு ஜாமம் கொல்லம்பட்டரையில் வைத்து வறுத்து எடுக்க செந்தூரமாகும். அத்துடன் ஒரு பலம் கட்டின லிங்கத்தை சேர்த்து சூர்ணித்து ஒரு பணவிடை வீதம் கொடுத்துவர ரத்தவிருத்தியும், தாதுபுஷ்டியும் உண்டாகும். பாண்டு (5), சோகை (5), முதலியவைகள் குணமாகும்.

(3). சுத்திசெய்த அரப்பொடியை நாட்டுக்காட்டாமணக்கு பாலில் நாள் ஊறவைத்து உலர்த்தி கல்வத்திலிட்டு மேற்படி பாலால் ஒரு நாள் அரைத்து பில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு 5 சீலைமண் செய்து கஜபுடம் போடவும். இப்படியே மேற்படி பாலால் 11 புடமும், நாவற்பட்டை, மருதம் பட்டை, கற்றாழை சமூலம் சமமாகச் சேர்த்து எடுத்த சாற்றில் அரைமண்டலம் ஊறவைத்து அரைத்து 64 புடமும், சீந்தில்தண்டும், பொற்றிலைக் கரிப்பானும் சமமாகச் சேர்த்து எடுத்த சாற்றால் அரைத்து 25 புடமும் போட்டு எடுத்துப்பார்க்க வெகு நல்ல செந்தூரமாயிருக்கும். இதில் பணவிடை பித்ததேகிக்கு நெய்யிலும், வாததேகிக்கு தேனிலும் கொடுக்க சோகை (5), பாண்டு (5), தேகவீக்கம், தேகவெளுப்பு, குடல்வாதம், நேத்திர ரோகங்கள் (94), குணமாகும். தேகம் பொன்போல் நிறமும், தேஜெசும், பலமும் உண்டாகும். சுக்கு, மிளகு திப்பிலி இம்மூன்றும் சேர்ந்த சூரணத்தில் கொடுக்க பக்கவாயு, பெருவயிறு தீரும். வேளைச்சாற்றில் கொடுக்க கபரோகங்கள் (96), குன்மம் (8), முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

## அயக்காந்த செந்தூரம்

அயம் சேர்.1, காந்தம் சேர். 1, இவைகளை அரத்தால் ராவி, சுத்திசெய்து, அத்துடன் கந்தகம், லிங்கம், வகைக்குச்சேர் 2, ரசம், வெங்காரம் வகைக்குப் பலம் 2, முப்பு விரா. 8 சேர்த்து கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழம், பொற்றலைக் கரிப்பான் இவைகளின் சாற்றால் தனித்தனியே 4 ஜாமம் அரைத்து பில்லைதட்டி உலர்த்தி வரராகல் புடம் போட செந்தூரமாகும். அதில் ஒரு பணவிடை வீதம் அனுபானத்திலிட பாண்டு (5), கிரகணி (11), பித்தம் (40), வாதம் (80), அக்கினிமந்தம், வாயு குணமாகும். தாதுபுஷ்டி யுண்டாகும், தேக வெளுப்பு தீரும்.

## மண்டூர செந்தூரம்

மண்டூரம் பலம் 10, லிங்கம், ரசம், கந்தகம், முப்பு, வெங்காரம் வகைக்கு பலம் 1, இவைகளைச் சுத்திசெய்து கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழம், சிறுசெறுப்படை, செம்பை, கரிப்பான் இவைகளின் சாற்றால் தனித்தனியே ஒரு ஜாமம் அரைத்து வகைக்கு வரராகல் புடம் 10 போட்டு, அரசம்பட்டைச்சாற்றால் மேற்படி புடம் 5 போட்டு எடுக்க செந்தூரமாகும். இதில் 2 பணவிடை வீதம் அனுபானத்திலிட பாண்டு (5), பித்தம் (40), காமாலை (13), சிலேஷ்மம் (20), தேகவெளுப்பு குணமாகும்.

## உருக்கு செந்தூரம்

எட்டிக்கொட்டை இலைச்சாறும், வெள்ளாட்டு மூத்திரமும் சமமாகச் சேர்த்து, அதில் எகுவை சிவக்கக்காய்ச்சி 21 தடவைத் தோய்க்க வெட்டையாகும். அதை சூர்ணித்து மேற்படி சாற்றில் 10 நாள் ஊறவைத்து எடுக்க மெழுகுபோலிருக்கும். அதை மேற்படி சாற்றால் அரைத்து 20 வரரர்கல் புடம்போட செந்தூரமாகும். இதன் குணம் சுவர்ண செந்தூரத்துக்கும் மேலானது. இதில் பணவிடை வீதம் அனுபானத்திலிட தேகம் பலக்கும் நரைத்திரை மாறும்.

## தாம்பிர செந்தூரம்

பஸ்மம்' அத்தியாயத்தில் சொல்லிய தாம்பிர பஸ்மத்தை பொற்றலைக் கரிப்பான் சாற்றால் அரைத்து புடம்போட செந்தூரமாகும். பஸ்மம் குணமாக்கும் ரோகங்களை செந்தூரமும் குணமாக்கும்.

## சுயமக்கினி

மனோசீலை பலம் 1, ரசம் பலம் 2, கந்தகம் பலம் 4, காந்தம் பலம் 8, அரைப்பொடி பலம் 16, இவைகளைச் சுத்திசெய்து கற்றாழைச்சாற்றால் ஒரு நாள் அரைத்து வில்லை செய்து பீங்கானில் வைத்து சூரியபுடம்போட செந்தூரமாகும். அதில் குன்றிமணியிடை இஞ்சிச்சாற்றில் கொடுக்க உள்மூலம், பித்தபாண்டு, கிரகணி, சோகை முதலியவைகள் தீரும்.

## வீர செந்தூரம்

(1) கந்தமும், அயமும் சமமாகச் சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்து கட்டின வீரத்துக்குக் கவசமிட்டு அதன்மேல் உப்பை அரைத்து கவசமிட்டு உலர்த்தி ஒரு சட்டியில் 3 விரற்கடை மணலைக் கொட்டி அதன் மேல் மேற்படி வீரத்தை வைத்து மணலால் மூடி கமலாக்கினியாய் ஒரு ஜாமம் எரித்து எடுக்க செந்தூரமாகும். அதில் அரிசியிடை வீதம் அனுபானத்திலிட சன்னி (13), வாதம் (80), மேகம் (20), தோஷம் முதலிய சகல கடூர ரோகங்களும் குணமாகும்.

(2) ஒரு பலம் சுத்தி செய்த வீரத்தை பொடித்து ஒரு சட்டியில் போட்டுப் பறப்பி அதன்மேல் சட்டியால் மூடி ஏழுசீலைமண் வலுவாய்ச் செய்து அடுப்பிலேற்றி தீபாக்கினியாய் நாலு ஜாமம் எரித்து எடுத்துப்பார்க்க மேல் சட்டியில் பதங்கித்திருக்கிற வீரப்பதங்கத்தை எடுத்து முன்போலவே சட்டியில் பறப்பு சீலைமண்செய்து எரித்து எடுத்துப்பார்க்க மறுபடியும் பதங்கித்திருக்கிற வீரப்பதங்கத்தை 3-4 தடவை இவ்விதமாகப் பதங்கித்தெடுக்க அதிதுல்லிய சிவந்த நிறமுள்ள செந்தூரமாகும். அதில் ஒரு அரிசியிடை, வீதம், அனுபானத்திலிட ஜன்னி (13), கபரோகங்கள் (96), மேகம் (20), சுவாசம் (5), காசம் (5),

கண்டமாலை (18), முதலிய அநேகவித பயங்கர ரோகங்கள் நிவர்த்தியாகும்.

* வீரசுத்தி—நாகம், ரசம் இவ்விரண்டும் சமமாக கல்வத்திலிட்டு அதற்குச் சமமாக கந்தகம், பொரிகாரம் சேர்த்து முலைப்பாலால் அரைத்து வீரத்துக்குக் கவசமிட்டு ரவியில் உலர்த்தி அதன்மேல் உப்பும் சுண்ணாம்பும் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து துணியில் தடவி சீலை மண் செய்வது போல் இதனால் செய்து குக்குடம் புடம்போட வெகுநல்ல சுத்தியாகும்.

## லிங்க செந்தூரம்

சுத்திசெய்த ஒரு உலாந்தா லிங்கக்கட்டிக்கு மருதாணி இலையை மைப்போலரைத்து 2 விரற்கனமாய்க் கவசமிட்டு ஒரு சிறு கலயத்தில் வைத்து ஓட்டால்மூடி ஏழு சீலைமண் செய்து கவுதாரிப்புடம் போட்டு எடுக்க செந்தூரமாகும். அதில் மணவிடை அனுபானத்திலிட வாதம் (80), சுரம் (64), சன்னி (13), தோஷம் முதலியவைகள் தீரும்.

## ரச செந்தூரம்

ரசம் பலம் 1, கந்தகம் பலம் 1, இவைகளைச் சுத்திசெய்து கல்வத்திலிட்டு கருந்துளசிச் சாற்றால் 2 நாள் அரைத்து உலர்த்திக் காசிக் குப்பியில் போட்டு வாய்மூடி ஏழு சீலைமண் செய்து ஒரு பெரிய சட்டியில் ஆறு விரற்கடை மணல் போட்டு அதன்மேல் குப்பியை வைத்து மணலால் மூடி அடுப்பிலேற்றி, தீபாக்கினியாயும், கமலாக்கினியாயும், காடாக்கினியாயும், ஒவ்வொரு நாள் எரித்து ஆற்றி குப்பியை உடைத்துப் பார்க்க மாதுளம் பூ நிறம்போல் செந்தூரமாயிருக்கும். அதில் ஒரு குன்றிமணியிடை வீதம் அனுபானத்திலிட சன்னி (13), வாதம் (80), சுரம் (64), சூலை (18), முதலிய கடூர ரோகங்கள் குணமாகும்.

## கல்லுப்பு செந்தூரம்

1. ஒரு சேர் கல்லுப்பை பொடுதலை, ஆகாசதாமரை, கையாந்தகரை, எலுமிச்சம்பழம், இவைகளின் சாற்றால் தனித் தனியே ஒரு ஜாமம் அரைத்து ஒவ்வொன்றிலும் ஒரு கவுதாரி புடம்போட்டு எடுத்து அரை விராகனிடை வீதம் அனுபானத்திலிட அக்கினி மந்தம், அஜீர்ணம், பேதி, வயிற்றுவலி, குன்மம், குணமாகும்.

2. ஒரு சேர் கல்லுப்பை துத்தியிலைச் சாற்றாலரைத்து 10 கவுதாரி புடம் போட்டு ½ விராகனிடை வீதம் இஞ்சிச்சாற்றில் கொடுக்க சகல வாயு, குன்மம், அஜீர்ணம், உதரரோகம், குணமாகும்.

# 42-வது அத்தியாயம்

அநேக யுனானி கிரந்தங்களைப் பார்வையிட்டு ஸ்திரிபோகத்தால் உண்டாகும் உஷ்ணத்தைத் தணிக்கவும், மேகஊறல் முதலான மேகரோகங்களைப் போக்கவும், தேகத்தில் ரத்தம் ஊறவும், கைகால் எரிவு முதலிய பலமான ரோகங்களை குணமாக்கவும் மஹா வல்லமையுள்ள அநேக நல்ல ஷர்பத்துகளை இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

## மேககுலாந்தக ஷர்பத்து

நன்னாரிவேர் வீசை 1, பறங்கிப்பட்டை சேர்.2, இவைகள் பொடித்து இருதூணி ஜலத்தில் போட்டுக்காய்ச்சி ஒரு குருணியாக்கி வடித்த கசாயத்தில் இரண்டு வீசை சீனியைப் போட்டு தேனைப்போல் தடிப்பான பதத்தில் காய்ச்சி சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு தினம் ஒரு பலம் அல்லது ஒரு அவுன்ஸ் வீதம் 2 தடவைச் சாப்பிட்டுவர மேக காங்கை, மேகஊறல், நீர்க்கட்டு, சூலைக்கட்டு, ஸ்திரிபோகத்தால் உண்டாகிற உஷ்ணம் குணமாகும். இத்துடன் ஐயோடைட் ஆப் போடாஸியம் கொஞ்சம் சேர்த்தாவது அல்லது வீரபத்திர சிந்தாமணி ½ குன்றிமணியிடை சேர்த்தாவது சாப்பிட்டுவர சகல மேகங்களும் குணமாகும்.

## கூழ்ப்பாண்ட ஷர்பத்து

பெரும்பூசனிக்காய்ச் சாறு படி 20, வெள்ளை சுக்கை ஜலத்தால் அரைத்து எடுத்துச் சாறு படி 1, இவைகளைச் சேர்த்துக் காய்ச்சி 2 படியாக வற்ற வைத்து அதில் சீனி வீசை 2, போட்டு தேன்பதத்தில்க் காய்ச்சி சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு தினம் 2 தடவை ஒரு அவுன்ஸ் வீதம் சாப்பிட்டுவர மேகம், பிரமியம், உஷ்ணம், கை,கால் எரிவு, அஸ்திகாங்கை, அஸ்திவெட்டை, நீர் அடைப்பு தீரும்.

## மாதுளம்பழ ஷர்பத்து

மாதுளம் பழச்சாறு படி 1, சீனி சேர் 8, பந்நீர் சேர் 1, இவைகளைச் சேர்த்து தேன் பதத்தில் காய்ச்சி சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு சாப்பிட்டுவர பித்தம் (40) குணமாகும்.

## இஞ்சி ஷர்பத்து

இஞ்சிச் சாறுபடி ½, இரண்டுநாழிகை வைத்து தெளிவை எடுத்து அத்துடன் சீனி வீசை 1, சேர்த்து தேன் பதத்தில் காய்ச்சி சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு தினம் 1/2 அவுன்ஸ் வீதம் ஜலத்தில் சாப்பிட்டுவர பசி உண்டாகும்.

## திராக்ஷப்ப்ழ ஷர்பத்து

திராக்ஷப்பழச்சாறு படி 1, பன்னீர் சேர் ¼, சீனாகற்க்கண்டு தூள் சேர் 8 இவைகளைச் சேர்த்து தேன் பதத்தில் காய்ச்சி சீசாவில் போட்டு

வைத்துக்கொண்டு தினம் 2 தடவை ஒரு அவுன்ஸ் வீதம் சாப்பிட்டு வர பித்தகாங்கை, கை, கால் எரிவு முதலியவைகள் தீரும். ரத்தவிருத்தியாகும்.

## சந்தன ஷர்பத்து

வாசனையுள்ள மலாகா சந்தனத்தூள் பலம் 40, நாலுபடி ஜலத்தில் போட்டு ஒருநாள் ஊறவைத்துக் காய்ச்சி ஒரு படியாக்கி வடித்து அதில் கற்கண்டு தூள் சேர் 5, பன்னீர் சேர் 1, இவைகள் சேர்த்து தேன் பதத்தில் காய்ச்சி சீசாவில் போட்டுவைத்துக் கொண்டு தினம் 2 தடவை 1/2 அவுன்ஸ் வீதம் ஜலத்தில் சாப்பிட பிரமேகங்கள் (21), மூலச்சூடு தீரும்.

## நன்னாரி ஷர்பத்து

ஒரு வீசை நொறுக்கின நன்னாரி வேரை, 2 தூணி ஜலத்தில் போட்டு எரித்து 2 படியாக்கி வடித்து 2 வீதை சீனியை சேர்த்து தேன்பதத்தில் காய்ச்சி சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு தினம் 2 தடவை ஒரு அவுன்ஸ் வீதம் ஜலத்தில் சாப்பிட்டுவர நீர்க்கட்டு, மேககாங்கை, பிரமேகம், மேகநீர், கை கால் எரிவு, ஸ்திரிபோக உஷ்ணம் இவைகள் தீரும்.

# 43-வது அத்தியாம்

## கட்டுகள்

புஷ்பரசங்களாலும், பால்வகைகளாலும், மூலிகைகளாலும், செய்நீர்களாலும், தயிலங்களாலும் சுருக்குக் கொடுத்துக் கெட்டியாக்கின பதார்த்தங்களுக்கு கட்டுகள் என்று பெயர். அநேகக் கிரந்தங்களை சோதித்து நல்ல முறைகளாகவும் எளிதில் செய்யக்கூடியதுமானக் கட்டு வகைகளை எல்லாருக்கும் உபயோகமாகும் பொருட்டு இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். அவைகளை வயதுக்குத் தக்கபடி அளவு நிதானித்து உரைத்து அனுபானங்களில் சாப்பிட்டு வருகின்றவர்களின் தீராத ரோகங்கள், அதாவது வாதபித்த சிலேஷ்மநீர்களால் பலத்தை அடைந்து கட்டுகளைப் போல் உருதியாய் நிலைப்பெற்ற ரோகங்கள் யெல்லாம் அதிசீக்கிரத்தில் குணமாகு மென்பதற்குச் சந்தேகமில்லை.

## தாளகக்கட்டு

(1) சுத்திசெய்த ஒரு பலம் தாளகத்துக்கு சிவகரந்தை சாறு, கரிப்பான் சாறு வகைக்குப்படி 1, சுருக்குக் கொடுத்து உலர்த்தி, கறி உப்பை வெடிப்பு அடங்க வறுத்து எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து மூன்று புடம்போட்ட

15 விராகனிடை க்றிஉப்பை சிறுநீர்விட்டு அரைத்துதாளகத்துக்கு கவசமிட்டு அதன்மேல் ஒரு விரற்கடை கனத்தில் கற்சுண்ணாம்பை கவசமிட்டு உலர்த்தி ஏழு சீலைமண் செய்து 15 எருவில் புடம்போட கட்டும், இதை அனுபானத்திலிட ஈளை, காசம், உளைமாந்தம், சுரம், முதலிய கடூர ரோகங்கள் தீரும்.

(2) வெங்காரம், எவக்ஷாரம், வகைக்குப் பலம் 2, சீனாக்காரம், வெடியுப்பு வகைக்கு பலம் 4, இவைகளைச் சேர்த்து அதில் 9 விரா, ஒரு இரும்பு பானாவில் போட்டு எரிக்க உருகி பொங்கும்போது அதில் சுத்திசெய்த ஒரு பலம் தாளகக் கட்டியை போட்டு, துளாவி, எடுத்து பாக்கி விரா.3, அரைத்து அதற்கு கவசமிட்டு உலர்த்தி கல்சுண்ணாம்பு நீறும், பூ நீறும், சேர்த்து அரைத்து துணியில் தடவி அதற்கு ஏழு சீலைமண் செய்வதுபோல் செய்து காடை புடம் போட்டு எடுத்து அனுபானத்திலிட குளிர்சுரம், காசம், ஈளை முதலிய பற்பல கொடிய ரோகங்கள் தீரும்.

## லிங்கக்கட்டு

(1) ஒரு பலம் லிங்கத்தை ஒரு சட்டியில் போட்டு எரிக்கையில் கொக்குமந்தாரைப்பூச்சாற்றால் 4 சாமம் சுருக்குக் கொடுத்து எடுத்து மேற்படி பூவை அரைத்து அதற்கு கவசமிட்டு 4 படி மரக்கரியை கொட்டி அதன்மேல் லிங்கத்தை வைத்து அதன்மேல் 8 படி கரியை போட்டு தீயாக்கி, ஆற்றி எடுத்து குன்றிமணியிடை அனுபானத்திலிட சகலவித நாள்ப்பட்ட ரோகங்களும் தீரும்.

(2) 8 பலம் லிங்கத்தை ஒரு சட்டியில் போட்டு எலுமிச்சம்பழச்சாறு, முலைப்பால், தைவேளைச்சாறு, வெடியுப்பு ஜெயநீர் இவைகளால் வகைக்கு ஒரு சாமம் சுருக்குக்கொடுத்து எடுத்து 8 விராகனிடை தங்க ரேக்கைச் சுற்றி; பிறகு வெடியுப்பு, நவக்ஷாரம், சீனாகாரம், வெங்காரம் வகைக்குப் பலம் 8 வெண் கருவாலாட்டி கவசமிட்டு உலர்த்தி குகையில் வைத்து ஓட்டால் மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி, 3 கூடை உமியைக் கொட்டி அதன் மத்தியில் இதைவைத்து தீப்போட்டு எரித்து ஆற்றி எடுக்க உருகி மணியாகிருக்கும். குன்றிமணியிடை அனுபானத்திலிட சகல தீராத ரோகங்கள் தீரும்.

(3) ஒரு பலம் லிங்கத்தை கல்வத்திலிட்டு சிவகரந்தைச் சாற்றால் ஒரு சாமம் அரைத்து பில்லைதட்டி உலர்த்தி நத்தை கிளிஞ்சலில் வைத்து மூடி, கற்சுன்னாம்பை ஜலமிட்டு அரைத்து அதற்கு கவசமிட்டு பிறகு துணியில் தடவி சீலைமண் செய்வது போல்செய்து அதன் மேலும் கவசமிட்டு உலர்த்தி குக்குடபுடம் போட்டு எடுத்து பார்க்க பில்லை அப்படியே இருக்கும். குன்றிமணியிடை அனுபானத்திலிட சகல கொடிய ரோகங்களும் தீரும்.

(4) லிங்கத்தை சட்டியிலிட்டு சிவக்கரந்தைச் சாறு, செவ்வெளநீர் ஜலம், கோவைச்சாறு, அறுகம்புல்லுச்சாறு, வேப்பம் பழச்சாறு இவைகளில் எதிலாகிலும் சுருக்குக் கொடுக்கக் கட்டும். குன்றிமணியிடை சகல பலமான ரோகங்களுக்கும் கொடுக்கலாம்.

(5) நத்தைசூரி இலையை அரைத்து லிங்கத்துக்கு கவசமிட்டு, சீலை மண் செய்து, மேல் உலர்ந்தவுடனே குக்குடம் புடம் போட்டு எடுக்க வைத்தபடியே இருக்கும். குன்றிமணியிடை அனுபானத்திலிட சன்னி, வாயு முதலிய சகல கடூர ரோகங்களும் தீரும்.

## வீரக்கட்டு

ரசம், நாகம் வகைக்கு பலம் 5 சேர்த்து அரைத்து பிறகு பொரிகாரம், கந்தகம் வகைக்கு பலம் 5, சேர்த்து முலைப்பாலால் ஆட்டி வீரத்துக்கு கவசஞ்செய்து ரவியிலுலர்த்தி அதன் மேல் கற்சுண்ணாம்பும் உப்பும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து துணியில் தடவி சீலைமண் செய்வதுபோல செய்து குக்குடபுடம் போட்க்கட்டும். இவ்விதமாகவே லிங்கத்தையும் கட்டலாம். இந்தக்கட்டின் வீரத்தை ¼ முதல் ஒரு நெல்லிடை வரையில் தேனில் உரைத்து அனுபானத்துடன் கொடுக்க மேகம் (20), சுவாசம் (5), காசம் (5), சிலேஷ்மம் (20), வாதம் (80), கண்டமாலை (18), சன்னி (13) முதலிய கடூரரோகங்கள் தீரும்.

## ரசகர்ப்பூரக் கட்டு

(1) ரசகர்ப்பூரம் விராகனிடை 5 ஒரு பாணாவிலிட்டு எரித்து நாட்டுக் காட்டாமணக்கு பால் படி ½ அதற்கு சுருக்குக் கொடுக்க உருகிக்கட்டும். வாய் பிடிக்காது, அனுபானத்தில் ஒரு பணவிடை கொடுக்க வாதம் (80), சுரம் (64), சூலை (18), மேகம் (20) முதலிய பற்பல பலமான ரோகங்கள் தீரும்.

(2) வெடியுப்பு பலம் ½, சீனாக்காரம் பலம் ½ இவைகளைப் பொடித்து ஒரு சிறு பானாவில் கொஞ்சம் பொடி போட்டு அதின் மேல் ரசகர்ப்பூரம் விராகனிடை 2 வைத்து அதின் பேரில் திரிகடி பொடியை போட்டு சிறு தீயிட்டு எரித்து ஒரு மூங்கிக் குச்சியால் அந்த மருந்தை பிரட்டிக்கொண்டே பொடியை கொஞ்சம் கொஞ்சமாயிடவும். இப்படிச் செய்வதில் ரசகர்ப்பூரம் உருகிக் கட்டியாயிருக்கும். ஒரு பணவிடை அனுபானத்திலிட வாயு, மேகம் (20), குஷ்டம் (18), வாதம் (80), முதலிய தீராத ரோகங்களும் குணமாகும்.

(3) ஒரு பலம் ரசகர்ப்பூரத்தை கொக்கு மந்தாரைப்பூச்சாற்றால் சாமம் சுருக்குக் கொடுத்து பின்பு மேற்படி பூவை அரைத்து அதற்கு கவசமிட்டு ஒரு கூடை உமிக்குள் வைத்து தீயிட்டு எரித்து ஆறின பிறகு

எடுத்து ஒரு பணவிடை கொடுக்க சகல கடூர ரோகங்கள் தீரும். இவ்விதமாக லிங்கத்தையும் கட்டிக் கொள்ளலாம்.

## பாஷாணக்கட்டு

ஒரு பலம் வெள்ளைப் பாஷாணத்தை ஒரு பானாவில் போட்டு எரித்து ஒரு மூங்கில் குச்சிக்கு சிறு துணியைக் கட்டி, கொக்கு மந்தாரைப் பூச்சாற்றில் தோய்த்து மேற்படி பாஷாணத்துக்கு 4 சாமம் சுருக்கு கொடுத்து எடுத்து மேற்படி பூவை அரைத்து அதற்கு கவசமிட்டு 2 கூடை உமிக்குள் வைத்து தீயிட்டு எரித்து ஆறின பிறகு எடுத்து அரிசி இடை அனுபானத்தில் உரைத்துக்கொடுக்க சுரம் (64), சன்னி (13), தோஷம் முதலிய கடூர ரோகங்கள் குணமாகும்.

# 44-வது அத்தியாயம்.

## மாத்திரைகள்

சச்சிதானந்த சொரூபராகிய சகல புவன கர்த்தாவானவர் பயங்கர மான ரோகங்களை அதிசீக்கிரத்தில் குணமாக்கும் பொருட்டு அனுக்கிரகஞ் செய்திருக்கின்ற அவுஷதங்களில் மஹா சிரேஷ்டமானதும்; எளிதில் செய்யக் கூடியதுமான மாத்திரைகள் சர்வஜன உபகாரமாக இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

## *அஜீர்ண கண்டக ரச மாத்திரை

சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த வச்சநாவி, சுத்திசெய்த கந்தகம் வகைக்குப் பலம் 1, மிளகு பலம் 3, இவைகளை கல்வத்திலிட்டு கண்டங்கத்திரி பழச்சாற்றால் அரைத்து உலர்த்தவும். இவ்விதமாக மேற்படி சாற்றால் 21 தடவை அரைத்து உலர்த்தி 3 குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் கொடுத்து வர அஜீர்ண ரோகங்கள் (6), பேதி இவைகள் அதிசீக்கிரத்தில் குணமாகும்.

## பிரமானந்த பயிரவ மாத்திரை

மனோசீலை, கல்நார், தாளகம், பூரம், வகைக்கு விரா.5, சுத்திசெய்து அத்துடன் அக்கிராகாரம் விரா. 5, சேர்த்து கல்வத்திலிட்டுக் கொடிக்கள்

ளிப்பாலால் 3 ஜாமம் அரைத்து உலர்த்தி ஒரு குகையில் போட்டு மூடி 9 சீலைமண்செய்து குக்குடப்புடம் போட்டு எடுத்து, பசும்பால், கொடிகள்ளிப்பால், எலுமிச்சம்பழச்சாறு, கற்றாழைச்சாறு, கரிப்பான்சாறு இவைகளில் முறையே ஒவ்வொரு ஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் சர்க்கரையில் தினம் காலை மாலை ஒரு மண்டலம் கொடுக்க மூல மூளை அற்றுப்போகும். மூலரோகம் (8) குணமாகும்.

## திரிலோக ரக்ஷாமணி மாத்திரை

லிங்கம், தாளகம், மனோசீலை, வெங்காரம், கருநாவி, வகைக்கு பலம் 2 சுத்திசெய்து, அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்குப் பலம் 2 சேர்த்து கல்வத்திலிட்டு இஞ்சிச் சாற்றால் 4 ஜாமமரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி தினம் 2 தடவை ஒரு மாத்திரை வீதம் சித்தரத்தைச்சாறு, இஞ்சிச்சாறு, முலைப்பால், இவைகளில் எதிலாகிலும் கொடுக்க க்ஷயம் (4), சுவாசம் (5), காசம் (5), ஈளை, மந்தார காசம், சுரம் (64) முதலிய கடுரரோகங்கள் குணமாகும்.

## காலமேகராஜாங்க மாத்திரை

ரசம், அரிதாரம், மனோசிலை, இவைகள் வகைக்குப் பலம் 2 சுத்திசெய்து அத்துடன் தேற்றாவிதை, வெள்ளைகுங்கிலியம், விளாம்பிசின், வகைக்கு பலம் 2 சேர்த்து சூர்ணித்து ஒரு துணியில் போட்டு முடிந்து பச்சரிசிக் கழுநீரில் 3 நாள் ஊறவைத்து எடுத்து கல்வத்தில் போட்டு காடியை விட்டு ஒரு ஜாமமரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி தினம் 1-2 மாத்திரை காலை மாலை மோரிலாவது, தேனிலாவது 48 நாள் கொடுக்க மேகம் (20)ம், நீர்முள்ளிவிதை, முள்ளிவிதை, முதலிய அனுபானத்திலிட பிரமேகம் (21)ம், மேகஊறல், மேகத்தடிப்பு, மேககாங்கை, மேகரணம், முதலிய மேக சம்பந்தமான சகல ரோகங்களும் குணமாகும்.

## மேககுலாந்தக மாத்திரை

சுத்திசெய்த அப்பிரேகப்பொடி பலம் 3, சுத்திசெய்த காரீயம், சுத்தி செய்த வெள்ளீயம் வகைக்கு பலம் 1 இவைகளைச் சேர்த்து உருக்கி எடுத்து, அதற்கு ¼ பங்கு சுத்திசெய்த ரசமும், ரசத்துக்கு இரட்டிப்பு கந்தகமும் சேர்த்து தைவேளைச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து உலர்த்தி காசி குப்பியில் போட்டு வாய் மூடி 9 சீலைமண் செய்து ஒரு சட்டியில் 3 விரற்கடை மணலைக்கொட்டி அதன்மேல் குப்பியைவைத்து, பிறகு மணலால் மூடி ஒரு ஜாமம் கமலாக்கினியாய் எரித்து எடுத்து அதற்கு சமமாய் கந்தகத்தைச் சேர்த்து கரிசாலைச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து பில்லைத் தட்டி வராக புடம்போட்டு சிவக்காவிட்டால் அதை

சிவப்பாகிறவரையில் கந்தகத்தைச் சேர்த்து மேற்படி சாற்றாலரைத்து மேற்படி புடம் போடவும். சிவந்த பிறகு அதற்குபாதி யிடை கட்டின லிங்கத்தைச் சேர்த்து முலைப்பாலால் அரைத்து சிறுபயிறு அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் தினம் 2 தடவைக் கொடுக்க பிரமேகம் (21), நீரிழிவு, பிரமியம் (20), மேக ஊறல், மேகம் (20) குணமாகும்.

## திரிலோகசூடாமணி மாத்திரை

சுத்திசெய்த கௌரிப்பாஷாணம், சுத்திசெய்த ரசகர்ப்பூரம், சுத்தி செய்த கஞ்சா, கோரைக்கிழங்கு, வெடியுப்பு, கர்க்கடகசிங்கி, அதிமதுரம், அக்கிரகாரம் இவைகள் வகைக்கு 7 விராகனிடை சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் ஒரு ஜாமமும், இஞ்சிச் சாற்றால் 4 ஜாமமும், முலைப்பாலால் 2 ஜாமமும், அரைத்து சிறுப்பயிறு அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி ½ முதல் 1 மாத்திரை தேனிலிட ஜன்னி (13), விஷஜன்னி, தோஷம், வாதம் (80) முதலிய சகல கடூர ரோகங்கள் தீரும்.

## * ராஜ கஜகேஸரி மாத்திரை

சுத்திசெய்த கந்தகம் பலம் 2, சுத்திசெய்த ரசம் பலம் 1 இவ்விரண்டும் கல்வத்திலிட்டு ஒரு ஜாமம் அரைத்து, 3 பலம் சுத்திசெய்த தாம்பிரத்தால் குடுக்கைசெய்து அதில் நிரப்பி, குடுக்கின் வாயை தாம்பிரத்தால் மூடி; 1 கலயத்தில் பாதிக்கு உப்பைக் கொட்டி அதன்மேல் இந்த குடுக்கையை வைத்து அதில் உப்பை நிறைய போட்டு மேல் கலயம் மூடி ஏழு சீலைமண் வலுவாய் செய்து கஜபுடம் போட்டு எடுத்து சூர்ணித்து வெற்றிலை சாற்றால் அரைத்து மாத்திரைகளாக்கி 1-2 குன்றிமணியிடை வீதம் கொடுத்து, உடனே சுக்கு, காயம், மிளகு, திப்பிலி, வசம்பு இவைகளின் சூர்ணத்தில் 1 விரா. ஜலத்தில் கரைத்துக் கொடுக்க மஹா உபத்திரவத்தை தருகின்ற சகல சூலைரோகங்கள் அதிசீக்கிரத்தில் குணமாகும்.

## சந்திரோதய மாத்திரை

சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம், சுத்திசெய்த ரசம், வகைக்கு பலம் 1, கல்வத்திலிட்டு கொடிவேலி வேர் கஷாயத்தால் 5 ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி வச்சிரக் குகையில் போட்டு வாய் மூடி 9 சீலைமண் செய்து உலர்ந்த தரையில் ஒரு குழியாக்கி அதில்

பாதி மணலை போட்டு குகையை வைத்து மணலால் குழியை மூடி அதன்மேல் வராக புடம்போட்டு எடுத்து, அத்துடன் கால்பங்கு சுத்திசெய்த கருநாவியும் சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு 2 பலமும் சேர்த்து நெருஞ்சி, சின்னியிலை, முள்ளியிலை, இவைகளின் சாற்றால் தனித்தனியே ஒரு ஜாமம் அரைத்து சிறுப்பயிறு அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி ஒரு மாத்திரை அனுபானத்திலிட சந்நிபாதசுரம் (13), விஷசுரம், தோஷம், வாதம் (80) முதலிய கடூரரோகங்கள் குணமாகும்.

## அர்த்தநாரீஸ்வரன் மாத்திரை

சுத்திசெய்த தாளகம், சுத்திசெய்த நேள்வாளப்பருப்பு, காவிக்கல் இவைகள் வகைக்கு விராகனிடை 10 சேர்த்து கல்வத்திலிட்டு, கவுத்தும்பை, நல்லத்தும்பை, பெருந்தும்பை, இவைகளின் சாற்றால் வகைக்கு ஒரு ஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை, குளிர் சுரத்துக்கு மோரை முறித்தத் தண்ணீரிலும், அதிசாரசுரத்துக்கு சுக்குக்கசாயத்திலும், பழயசுரத்துக்கு பேய்ப்புடலும், சுக்கும் சேர்ந்த கசாயத்திலும்; சிலேஷ்ம சுரத்துக்கும் இருமலுக்கும் தேன்கலந்த திப்பிலித்தூளிலும்; தாபசுரத்துக்கு வில்வவேரும் சுக்கும் சேர்ந்தக் கசாயத்திலும்; அஸ்திசுரத்துக்கு பசும் நெய்யிலும்; வாதசுரத்துக்கு வாதமடக்கிக் கசாயத்திலும் கொடுக்க குணமாகும். **பத்தியம்:—** புளி, உப்பு, தள்ளவும். பேதி அதிகமானால், மா, ஆல், இலுப்பை இவைகளின் கொழுந்தை ஜலத்திலிட்டு காய்ச்சிக் கொடுக்க பேதியை நீற்கும்.

## * பயிரவவடி மாத்திரை

சாதிப்பத்திரி, சன்ன லவங்கப்பட்டை, அக்கிரக்காரம், திப்பிலி, கிராம்பு, சுக்கு, கட்டின லிங்கம், சுத்திசெய்த கருநாவி, இவைகளை சமமாக சேர்த்து கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாறு, இஞ்சிச்சாறு, இவைகளால் வகைக்கு ஒரு ஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் அனுபானத்திலிட இருமல், வாயு, அதிசாரம், குன்மம் முதலியவைகள் குணமாகும்.

## இராஜ சங்குவடி மாத்திரை

திருகக்கள்ளி, எருக்கம், புளி, நாயுருவி, வாழை, ஆமணக்கு, புரசன் இவைகளின் சமூலத்தை தனித்தனியே உலர்த்தி எரித்து சாம்பலாக்கி

ஜலத்தில் கரைத்து வடித்து எரிக்க உப்பைக்கட்டும். அந்த உப்புகள் வகைக்குப் பலம் 4, கல்லுப்பு, இந்துப்பு, செவுட்டுப்பு, வளயலுப்பு, வெடியுப்பு, வகைக்கு பலம் 4, எவக்ஷாரம், வெங்காரம், சத்திக்ஷாரம், சவுக்காரம், வகைக்கு பலம் 1¼ இவைகளை, 4 பலம் வெள்ளை சங்குத் துண்டுகளை நெருப்பில் காய்ச்சி 8 சேர் எலுமிச்சம்பழச் சாற்றில் தோய்த்து, இவ்விதமாய் சங்கத்துண்டுகள் பஸ்மமாகிக் கரைந்துவிடும் வரையில் காய்ச்சி, தோய்த்து அதில் மேற்படி உப்புகளை எல்லாம் சேர்த்து அத்துடன் சுக்கு பலம் 12, மிளகு பலம் 8 திப்பிலி பலம் 4, வறுத்த பெருங்காயம், கண்டத் திப்பிலி; சித்திரமூலம், ஓமம், சீரகம், சாதிக்காய், கிராம்பு, வகைக்கு பலம் 2, ரசம், கந்தகம், கருநாவி, வெங்காரம், மனோசிலை வகைக்குப் பலம் 1, இவைகளில் சுத்திசெய்ய வேண்டிய வைகளைச் சுத்திசெய்து சூர்ணித்துச் சேர்த்து அரைத்து பிறகு புளியாரைச்சாறு சேர் 2, விட்டுஅரைத்து உளுந்து அளவாக மாத்திரை களாக்கி தினம் 2 தடவை ஒரு மாத்திரை வீதம் கொடுக்க அஜீர்ணம், குன்மம், அக்கினிமாந்தம், மகோதரம், உதர ரோகங்கள் குணமாகும்.

## மஹா காலாக்கினி மாத்திரை

ரசபஸ்மம் (Calomel), சுத்திசெய்த வெங்காரம், சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த அரிதாரம், சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, பெருங்காயம், கடுகு, இந்துப்பு, திப்பிலி, கருஞ்சீரகம், வகைக்கு விராகனிடை 9 சேர்த்துக் கல்வத்தில் போட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் 2 ஜாமமரைத்து மிளகு அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரைவீதம் அடியில் கண்ட அனுபானத்தில் கொடுக்க ரோகங்கள் நிவர்த்தியாகும்.

| அடியில் கண்ட அனுபானத்தில் ஒரு மாத்திரைக் கொடுக்கவும் | மாத்திரைச் சாப்பிடுவதால் நிவர்த்தி யாகும் ரோகங்கள் |
|---|---|
| சுக்குகசாயம் | சுரம் (64) |
| சுக்கு மிளகு கசாயம் | குளிர் சுரம் |
| வெள்ளைவெங்காயச்சாறு | பாண்டு (5), மகோதரம், சோபை(5), வீக்கம். |
| இஞ்சிச்சாறு | சன்னி (13) |
| கடுக்காய் கசாயம் | இருமல் |
| எருமை நெய் | ரத்தமூலம் |

## பானு பிரகாச மாத்திரை

ரசபஸ்மம், ரசசெந்தூரம், வெங்காரம், லிங்கம், சுக்கு, கடுகுரோகணி, குரோசாணிஓமம், கோஷ்டம் வகைக்கு பலம் 1, நேர்வாளப்பருப்பு பலம் 16 இவைகளை சுத்திசெய்து கல்வத்திலிட்டு விளாம்பிசின் ஜலத்தால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி 1-2 மாத்திரைக் கொடுக்க வாத, பித்த, சிலேஷ்ம ரோகங்களை கண்டித்து செவ்வையாய் பேதியாகும். பேதி அதிகமானால் புளித்தமோரும் அன்னமும் சாப்பிடவும். அன்றியும் சுரம் (64), சன்னி (13), வாதம் (30), பித்தம் (40), கபசம்பந்தமான ரோகங்கள் முதலிய அநேக கடூரரோகங்களுக்கு குறைந்த அளவில் கொடுக்க ரோகங்கள் குணமாகும்.

## பயிரவ மாத்திரை

கருநாவி, லிங்கம், அரிதாரம், ரசகர்ப்பூரம், கந்தகம், நேர்வாளப்பருப்பு இவைகளை சுத்திசெய்து வகைக்கு விராகனிடை 9 சேர்த்து கல்வத்திலிட்டு சூர்ணித்து அத்துடன் ரசபஸ்மம், ரச செந்தூரம், சுக்கு, மிளகு திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, கிராம்பு, ஏலம், சாதிப்பத்திரி வகைக்கு பலம் 1, சேர்த்து முலைப்பாலால் 2 ஜாமமும், வேப்பங் கொட்டை, கற்றாழை, கொன்றைப்பூ, இவைகளின் சாற்றால் முறையே 3 ஜாமம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை முலைப்பாலிலாவது, தேனிலாவதுக் கொடுக்க சந்நிபாதசுரம் (13), சுரம் (64), தோஷம், வாதம் (80), பித்தம் (40), சிலேஷ்மம் (20) முதலிய அநேக பலமானரோகங்கள் குணமாகும்.

## * சூர்யாவர்த்தன மாத்திரை

சுத்திசெய்த ரசம் பலம் 1, சுத்திசெய்த கந்தகம் பலம் ½ இவ்விரண்டும் கற்றாழைச்சாற்றால் 1 ஜாமம் அரைத்து 1½ பலம் சுத்தி செய்த தாம்பிரத்தகடுகளுக்கு கவசமிட்டு ஓட்டில் வைத்து மேல் ஓட்டால் மூடி சீலைமண் வலுவாகசெய்து காடாக்கினியாய் 1 நாள் எரித்து எடுத்து சூர்ணித்து அத்துடன் சுக்குத்தூளும் பெருங்காயமும் வகைக்கு விரா. 2 சேர்த்து மாத்திரைகளாக்கி 2 குன்றிமணியிடை கொடுக்க சுவாசம் (5) குணமாகும்.

## ஆனந்த பயிரவ மாத்திரை

மனோசிலை, ரசம், கந்தகம், கருநாவி, லிங்கம், வெங்காரம், வகைக்கு பலம் 1, சுத்திசெய்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை முலைப்பாலில் கொடுக்க சந்நிபாதசுரம் (13), சுரம் (64), வாதம் (80) கபரோகங்கள் முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

## சுரபூபதி மாத்திரை

மனோசிலை, தாளகம், லிங்கம் வகைக்கு விரா.2, சுத்திசெய்து கறிக்கரணை, அல்லது காட்டுக்கறிணைக் கிழங்கை நோண்டி அதில் வைத்து மூடி சீலைமண் செய்து உலர்த்தி 2 படி உமிக்குள் வைத்து புடம் போட்டு எடுத்து வேலிப்பருத்திச் சாற்றால் 8 சாமம் அரைத்து சிறு பயிறு அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரைவீதம் கொடுத்துவர சுரம் (64), வாதம் (80), கபரோகங்கள் குணமாகும். பத்தியம் - புளி, உப்பு தள்ளவும்.

## அஜாஷ்டக மாத்திரை

சீரகம், மிளகு, சுக்கு, திப்பிலி, வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், இந்துப்பு, சுத்திசெய்த கந்தகம் வகைக்குப் பலம் 2 கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் 4 ஜாமம் அரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் 2 தடவை ஒரு மாத்திரை வீதம் சாப்பிட்டுவர அக்கினிமந்தம், பித்தவாயு, சூதகவாயு, உஷ்ணவாயு, கிரகணி, குன்மம், உதரரோகம், வாந்திபேதி குணமாகும்.

## ஹிங்காஷ்டக மாத்திரை

பெருங்காயம், இந்துப்பு, திப்பிலி வகைக்கு பலம் 5, ஓமம், சீரகம் வகைக்கு பலம் 2, கருஞ்சீரகம் பலம் 6, மிளகு பலம் 9, சுக்கு பலம் 7 இவைகளை உலர்த்தி சூர்ணித்து எலுமிச்சம்பழச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் காலையில் ஒரு மாத்திரை வீதம் சாப்பிட்டுவர அக்கினிமாந்தம், குன்மம், வாயு, பித்தம், கிரகணி குணமாகும்.

## போஜனகுடாரி மாத்திரை

சுக்கு, பெருங்காயம், வகைக்கு பலம் 1, இஞ்சி, இந்துப்பு வகைக்கு பலம் 2, சீரகம், மிளகு வகைக்கு பலம் 3, இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றால் 2 ஜாமம் அரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் காலையில் ஒரு மாத்திரை சாப்பிட்டுவர அக்கினிமந்தம், குன்மம், வயிற்றுவலி, வாயு, பித்தவாயு, சூதகவாயு, கிரகணி முதலியவைகள் குணமாகும்.

## லிம்பாஷ்டக மாத்திரை

வேப்பம்பூ விரா. 10, பெருங்காயம் விரா. 1, மிளகு, சுக்கு கொத்தமல்லி விதை, கறியப்பிலை வகைக்கு விரா.2, இந்துப்பு விரா. 2½, போனவருஷத்திய புளி விரா.4 இவைகளில் வேப்பம்பூவை நெய்யால் வறுத்து சூர்ணித்து பிறகு எல்லாம் ஒன்றாக்கி தேவையான ஜலத்தைவிட்டு மைபோல் அரைத்து கழற்சிக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் 2 தடவை ஒரு மாத்திரை வீதஞ்சாப்பிட்டுவர, பித்தம், வாயு, அரோசிகம், அஜீர்ணம் மலபந்தம் குணமாகும்.

## சுவர்ணமணி மாத்திரை

8 படி ஜலத்தில் புரசன் பிசின், சாதிக்காய், சிறுப்பூனைக்காலிவிதை, சாலாமிசிரி, நிலைக்கடம்பு, நீர்முள்ளிவிதை, கோஷ்டம், அமுக்கிராக் கிழங்கு வாதுமைப்பருப்பு வகைக்கு பலம் 3 சூர்ணித்துப்போட்டு காய்ச்சி 2 படியாக்கி, அதை மறுபடியும் எரித்து இளகியபதத்தில் இறக்கி கல்வத்திலிட்டு முத்து, அப்பிரகசெந்தூரம், ரஜதபஸ்மம், பவளபஸ்மம், மண்டூரசெந்தூரம் வகைக்கு விரா. 1 சேர்த்து மைபோலரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி கொஞ்சம் ஈரமிருக்கையில் மாத்திரை ஒன்றுக்கு 1/8 சுவர்ணரேக்கை கவசமிட்டு சுவர்ணமணிபோல மாத்திரைகளை உருட்டி உலர்த்தி 1–2 மாத்திரைகளை சாப்பிட்டு உடனே 2 சேர் பசும்பாலைக் காய்ச்சி ஒரு சேராக்கிச் சாப்பிட்டுவர ரத்தம் ஊறும், விந்துகட்டும், தாதுபுஷ்டி உண்டாகும். பத்தியம் – அதிக புளிப்பு, காரம், புகை நீக்கவும்.

## ராஜ ஹ்ரஸபொடலி மாத்திரை

சங்குபஸ்மம் செய்வது போல் பலகறைகளை பஸ்மமாக்கி ஒரு பலம் தூக்கி அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, சுத்திசெய்த நாவி, சுத்திசெய்த கந்தகம், சுத்திசெய்த ரசம், பொறித்த வெங்காரம், வகைக்குப் பலம் 1 சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து மாத்திரைகளாக்கி 1-2 குன்றிமணியிடை வீதம் மிளகு தூளும் நெய்யும் சேர்த்து அதில் வைத்துக் கொடுக்க கிரகணி (11) குணமாகும்.

## அஜமோதாஷ்டக மாத்திரை

ஓமம், பெருங்காயம், சித்திரமூலம், கோஷ்டம், வசம்பு, சிறுதேக்கு, இந்துப்பு, ஏலரிசி, வகைக்கு விராகனிடை 5 இவைகளை சூர்ணித்து

ஜலத்தால் மைபோலரைத்து கழற்ச்சிக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் 2 தடவை ஒரு மாத்திரை வீதம் ஜலத்தில் கொடுத்துவர வயிற்று உப்பல், குன்மக்கட்டி, குன்மம் (8), வாந்தி, அஜீர்ணம் முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

## ரச மாத்திரை

சுத்திசெய்த ரசம், கந்தகம், வெங்காரம், சுக்கு வகைக்கு விரா. 5, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விரா. 15, இவைகளில் ரசமும் கந்தகமும் கல்வத்திலிட்டு அரைத்து பிறகு மற்ற சரக்குகளைப் போட்டு மைபோல் ஜலத்தால் அரைத்து கடுகு அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை ஜலத்திலிட ஊதுமாந்தம், வாதம், பொருமல், முதலிய பல ரோகங்கள் குணமாகும். பெரியவர்களுக்கு 5–10 மாத்திரைகள் கொடுக்க வாதம், சுரம், வாயு, முதலியவைகள் குணமாகும்.

## சித்தாநந்தபயிரவ மாத்திரை

கட்டின லிங்கம், சுத்திசெய்த கருநாவி, சுத்திசெய்த வெங்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம் வகைக்கு பலம் 1, கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி ஒரு மாத்திரை இஞ்சிச்சாறு, முலைப்பால் எதிலாகிலும் கொடுக்க சன்னி (13), வாதம் (80), குணமாகும். தேனிலிட தோஷம் தீரும்.

## ரசாநந்தபயிரவ மாத்திரை

கட்டின லிங்கம் பலம் 4, சுத்திசெய்த வெங்காரம் பலம் 8, சுத்திசெய்த கருநாவி பலம் 12, திப்பிலி பலம் 12 இவைகளை கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றால் நாலுஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி ஒரு மாத்திரை அனுபானத்திலிட சந்நிபாதரோகம் (13), வாதம் (80) முதலிய கொடிய ரோகங்கள் குணமாகும்.

## வாத ராக்ஷச மாத்திரை

ரசம், கந்தகம், காந்தம், அப்பிரேகம் வகைக்கு ஒருபலம் சுத்தி செய்து அத்துடன் தாம்பிர பஸ்மம் பலம் 1 சேர்த்து கல்வத்திலிட்டு வெள்ளைச் சாரணைச் சாற்றால் 4 ஜாமம் அரைத்து பிறகு சீந்திற்கொடிக் கசாயத்தால் 4 ஜாமமும், கொடிவேலிவேர்க் கசாயம், துளசிச்சாறு, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி இவைகள் சேர்ந்த கசாயம் இவைகளால் தனித்தனி 2 ஜாமமும் அரைத்து பில்லை செய்து வெள்ளைச்சாரணை இலையை அரைத்து அதற்கு 3 விரற்கடை கனமாய் கவசமிட்டு அந்த கவசம் கருகும் படி புடம் போட்டு எடுத்து சித்திரமூலகசாயத்தால் 4 ஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை அனுபானத்திலிட சன்னி (13), தோஷம், வாதம் (80) முதலிய கடூர ரோகங்கள் குணமாகும்.

## லகுசங்குவடி மாத்திரை

புளிசமூலம் (இலை, பட்டை, வேர்முதலியவைகள்) உலர்த்தி எரித்து சாம்பலை ஜலத்தில் கரைத்து வடித்து எரித்து எடுத்த உப்பு பலம் 5, கல்லுப்பு, இந்துப்பு, சௌட்டுப்பு, வளயலுப்பு, வெடியுப்பு வகைக்கு பலம் 1, ஐந்து பலம் வெள்ளைச் சங்கு துண்டுகளை எலுமிச்சம்பழச்சாற்றில் போட்டு, செங்கு கையால் தூளாகிறவரையில் காய்ச்சி, பிறகு ரசம் பலம் 2, கந்தகம் பலம் 2, லிங்கம் பலம் 5 இவைகளை சுத்திசெய்து சேர்த்து எல்லாம் கல்வத்திலிட்டு, மேற்படி சாற்றால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை அனுபானத்தில் கொடுக்க கிரகணி (11), குன்மம் (8), அக்கினிமந்தம், அஜீர்ணம், வாயு, உதரரோகம் குணமாகும்.

## சுவர்ண கோரோசன மாத்திரை

தங்கரேக்கு, முத்து, பவளபஸ்பம், ரசசெந்தூரம், சுத்திசெய்தரச கர்ப்பூரம், பச்சைக்கர்ப்பூரம், அப்பிரகசெந்தூரம், கோரோசனை, குங்குமப்பூ, ஏலம், கிராம்பு, சாதிக்காய், கோஷ்டம், அக்கிராகாரம், இவைகள் வகைக்கு விராகனிடை 1 சேர்த்து கல்வத்திலிட்டு வெற்றிலைச் சாறு, சந்தணக்கசாயம், சண்பகப்பூ கசாயம், இவைகளால் தனித்தனியே 3 ஜாமம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி ஒரு மாத்திரை வீதம் தகுந்த அனுபானத்தில் கொடுக்க சுரம் (64), சன்னி (13), காசம் (5), சுவாசம் (5), வலிப்பு (5), இசிவு, இருமல், ஜலுப்பு முதலிய பற்பல கடூரரோகங்கள் குணமாகும். இதை குழந்தைகளுக்கு ½ மாத்திரை வீதம் கொடுக்கலாம்.

## அப்பிரக கோரோசன மாத்திரை

அப்பிரக செந்தூரம், ரசசெந்தூரம், ரசகர்ப்பூரம், கோரோசனை, பச்சைக்கர்ப்பூரம், குங்குமப்பூ, ஏலம், கிராம்பு, சாதிக்காய், கோஷ்டம், அக்கிராகாரம், வகைக்கு பலம் 1, கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாறு, சந்தணக்கசாயம், சண்பகப்பூகசாயம், இவைகளால் தனித்தனியாய் 3 ஜாமம் அரைத்து சிறுபயிறு அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரைவீதம் குழந்தைகளுக்கு அனுபானத்திலிட சுரம், கபம், ஜன்னி, வாதம், இசிவு, ஜலுப்பு முதலிய பற்பல பலமான ரோகங்கள் குணமாகும்.

## கோரோசன மாத்திரை (லகுமுறை)

கோரோசனை, குங்குமப்பூ, சுத்திசெய்த கர்ப்பூரம், பச்சைக்கர்ப்பூரம், ஏலம், கிராம்பு, கோஷ்டம், அக்கிராகாரம், ரசபஸ்மம் வகைக்கு விராகனிடை 1 கல்வத்திலிட்டு சந்தனக்கசாயத்தால் மைபோலரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் அனுபானத்தில் கொடுக்க குழந்தையின் சுரம், ஜலுப்பு, மாந்தம் முதலியவைகள் தீரும்.

## கஸ்தூரி மாத்திரை

கஸ்தூரி விராகனிடை 1, குங்குமப்பூ விராகனிடை 3, சுக்கு விராகனிடை 4, கிராம்பு, சாதிக்காய், கோஷ்டம், அக்கிராகாரம், வகைக்கு விராகனிடை 2, இவைகளை கல்வத்திலிட்டு முலைப்பாலால் மைபோலரைத்து கடுகு அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி 1 மாத்திரை முலைப்பாலில் கொடுக்க குழந்தையின் மாந்தம், சுரம், சன்னி, வலிப்பு, இசிவு, கபரோகங்கள் முதலிய கடூரரோகங்கள் குணமாகும். பெரியவருக்கு 4-6 மாத்திரை கொடுக்கலாம்.

## லிங்க மாத்திரை

கட்டினலிங்கம் விராகனிடை 8, மிளகு, திப்பிலி விராகனிடை 2, கல்வத்திலிட்டு முலைப்பாலாலரைத்து உளுந்து அளவாக மாத்திரைகள் செய்து ஒரு மாத்திரை அனுபானத்திலிட சுரம், வாதம், குடல்வாயு, அபானவாயு, குணமாகும்.

## ரசலிங்க பேதி மாத்திரை

ரசபஸ்மம், சுத்திசெய்த லிங்கம், சுத்திசெய்த வெங்காரம் வகைக்குப் பலம் 2, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு பலம் 8, ஆமணக்குப் பருப்பு பலம் 4, இவைகளை கல்வத்திலிட்டு விளாம்பிசின் ஜலத்தால் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி 1-2 மாத்திரை கொடுக்க சுரம், வாதம், குடல்வாயு, முதலியவைகள் குணமாகும்.

## ரசகர்ப்பூர மாத்திரை

சுத்திசெய்த ரசகர்ப்பூரம் அழிஞ்சி வேர்ப்பட்டை, கொடிவேலி வேர்ப்பட்டை, வகைக்கு விராகனிடை 5, சுத்தி செய்த நேர்வாளப்பருப்பு விராகனிடை 20 இவைகளை கல்வத்தில்போட்டு முலைப்பால், கையாந்தகரைச்சாறு இவைகளால் வகைக்கு ஒரு ஜாமம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை தேனிலிட சகல சுரமும், வாதம் (80)ம் தீரும்.

## தாளக மாத்திரை

தாளகம், ரசம், கந்தகம், கருநாவி வகைக்கு விராகனிடை 1, சுத்தி செய்து அத்துடன் கடுகுரோகணி, சுக்கு, திப்பிலி வகைக்கு விராகனிடை 5 சேர்த்து, கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் மைபோல அரைத்து சிறுப்பயிறு அளவாக மாத்திரைகளாக்கி 1-2 மாத்திரை தினம் 2 தடவை கொடுக்க சகல சுரமும் குணமாகும்.

## ரசலிங்க மாத்திரை

ரசபஸ்மம், கட்டினலிங்கம், பச்சைகர்ப்பூரம், சாதிக்காய், சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு இவைகள் வகைக்கு விராகனிடை 1 சேர்த்து கல்வத்திலிட்டு கற்றாழைச்சாற்றால் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி 2-3 மாத்திரை அனுபானத்தில் கொடுக்க சக்ல சுரங்கள் உடனே குணமாகும்.

## மனோசிலை மாத்திரை

சுத்திசெய்த மனோசிலை, சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம் வகைக்கு விரா.1 சேர்த்து கல்வத்தில்போட்டு துளசிச்சாறு, வெள்ளாட்டு மூத்திரம் இவைகளால் வகைக்கு ஒரு ஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வெந்நீரில் மூன்றாம் நான்காம்முறை சுரத்துக்கும், குப்பை மேனிச்சாற்றில் சன்னிக்கும், ஜலத்தில் வாயுவுக்கும், கொடுக்க குணமாகும்.

## பாஷாண மாத்திரை

வெள்ளைப்பாஷாணம், கௌரிப்பாஷாணம், ரசம் வகைக்கு விரா. ½ சுத்திசெய்து அத்துடன் மிளகு விரா.10 சேர்த்து கல்வத்திலிட்டு மிளகு கஷாயம், கருஊமத்தையிலைச்சாறு, கொம்புப்பாகல் இலைச்சாறு இவைகளால் வகைக்கு ஒரு ஜாமம் அரைத்து சிறு பயிறு அளவு மாத்திரைகளாக்கி மோர், காடி இவைகளில் எதிலாகிலும் ஒரு மாத்திரை கொடுக்க சுரம் (64), குணமாகும். பத்தியம் – புளி, உப்பு தள்ளவும்.

## சுரகுடாரி மாத்திரை

கழற்சிப்பருப்பு 200 கிறேன்ஸ், மிளகு 80 கிறேன்ஸ், பெருங்காயம் 40 கிறேன்ஸ், இவைகளை கல்வத்திலிட்டு தேன் சேர்த்து அரைத்து 30 மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் தினம் 2 தடவைக்கொடுக்க குளிர் சுரம் குணமாகும்.

## லகுகட்டுவாங்க மாத்திரை

கொடிகுறுஞ்சாயிலை தூள் விரா. 4, விளாம்பிசின் விரா. 20, அபினி விரா. ½ இவைகள் கல்வத்திலிட்டு அரைத்து 50 மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரைவீதம் கொடுத்துவர பேதி, சீதபேதி, இருமல், கக்குவான், அதிசார பேதி குணமாகும்.

## லிங்கபேதி மாத்திரை

கட்டினலிங்கம், ஏலம், சண்பகப்பூ, கடுகுரோகிணி, கோஷ்டம், வகைக்கு விரா.3, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விரா.15 இவைகளை கல்வத்திலிட்டு விளாம்பிசின் ஜலத்தால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி

உலர்த்தி ஒரு மாத்திரை கொடுக்க செவ்வையாய் பேதியாகும். பேதி அதிகமானால் புளித்தமோரும் அன்னமும் சாப்பிட பேதி நிற்கும்.

## பாலசுரஹர மாத்திரை

குங்குமப்பூ விரா.10, கிராம்பு, ஏலம், ஜாதிக்காய், சந்தணம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், கடுகுரோகிணி, தேவதாரம், வகைக்கு விரா.5 இவைகளை கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றாலும், கண்டங்கத்திரி பழச்சாற்றாலும் வகைக்கு 2 ஜாமம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் அனு பானத்தில் கொடுக்க குளிர்ச்சுரம் சன்னி, சுரம் குணமாகும்.

## பாலசஞ்சீவி மாத்திரை

கோரோசனை, வெங்காரம், கடுகுரோகிணி, சுக்கு, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு வகைக்கு விரா. 7 சேர்த்து கல்வத்திலிட்டு முலைப் பாலால் அரைத்து கடுகு அளவாக மாத்திரைகளாக்கி 1-2 மாத்திரை அனுபானத்தில் கொடுக்க சகல. சுரம், மாந்தம் முதலிய பற்பல ரோகங்கள் குணமாகும்.

## பாலசுரகுடாரி மாத்திரை

கோரோசனை பலம் 6, பெருஞ்சீரகம், கருஞ்சீரகம், அதிமதுரம், கோஷ்டம், இந்துப்பு, இலுப்பைப்பருப்பு, சாஸ்திரபேதி, வகைக்கு பலம் 2 கல்வத்திலிட்டு, குமரிச்சாறு, முலைப்பால் இவைகளால் வகைக்கு 2 ஜாமம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் முலைப்பாலில் கொடுத்துவர சகல சுரங்கள் குணமாகும்.

## பாலவிநோதசஞ்சீவி மாத்திரை

சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு பலம் 1, பச்சைக்கர்ப்பூரம், சுக்கு, சாதிக்காய், கருவாப்பட்டை, வகைக்குபலம் 1, இவைகளை கல்வத்திலிட்டு கற்றாழைச்சாற்றால் மைபோல் அரைத்து கடுகு அளவாக மாத்திரை களாக்கி 1-2 மாத்திரை அனுபானத்திலிட குழந்தைகளுக்கு காணும் சுரம் மாந்தம் முதலியவைகள் குணமாகும்.

## காக்கனான்வேர் பேதி மாத்திரை

வெள்ளைக்காக்கனான்வேர், திப்பிலி வகைக்கு விரா.2, சுக்கு, மிளகு வகைக்கு விரா.3, விளாம்பிசின் விரா.2, இவைகளை கல்வத்திலிட்டு ஜலத்தால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை ஜலத்தில் கொடுக்க பேதி நன்றாய் ஆகும். குழந்தைகளுக்கு ½ மாத்திரை கொடுக்கவும்.

## பாலசுரவிஷஹர மாத்திரை

கருவாப்பட்டையும், நிழலில் உலர்த்தின ஆடுதீண்டாப்பாளை வேர்ப்பட்டையும் வகைக்கு விரா. 10 சேர்த்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து கடுகு அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை அனுபானத்தில் கொடுக்க குழந்தையின் சுரம், விஷம், முதலியவைகள் குணமாகும்.

## ஆதிசேஷவிஷஹர மாத்திரை

கோடகசாலையிலை பிடி 2, எருக்கம்பழுப்பு பிடி 2, மிளகு பலம் 1 இவைகளை கல்வத்திலிட்டு மை போல் அரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி ஒரு மாத்திரை 1-2 மணிக்கு ஒரு தடவைக் கொடுக்க நல்லபாம்பு விஷக்கடி, பூறான், ஜலமண்டலி, முதலியவைகளின் விஷக்கடிகள் தீரும். எலி, தேள் இவைகளின் விஷக்கடிகளுக்கு இதை கொடுக்கக்கூடாது.

## உதய்ாதித்திய மாத்திரை

சுத்திசெய்த ரசம் பலம் 1, சுத்திசெய்த கந்தகம் பலம் 2, கல்வத்திலிட்டு கற்றாழைச்சாற்றால் ஒரு நாள் அரைத்து ஒரு கலயத்தில் வைத்து அந்த மொத்தையின் பேரில் 2 பலம் சுத்திசெய்த தாம்பிரத்தை கிண்ணியாக்கி கவிழ்த்து கிண்ணியின் சந்துவாயில் எருவின் சாம்பலைப்போட்டு அதன் மேல் சாணியும் ஜலமுஞ்சேர்த்துப் போட்டு கிண்ணத்தை மறைத்து பிறகு அந்த கலயத்தை அடுப்பின்மேல் வைத்து காடாக்கினியாய் 2 ஜாமம் எரித்து எடுத்து கல்வத்திலிட்டு கருஅத்தி, சித்திரமூலம், கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, முருங்கைக் காயின் உள்பசை, வாய்விளங்கம், சிவதைவேர் இவைகளின் கசாயங்களால் தனித்தனியே ஒவ்வொரு நாள் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் பசும்பாலிலாவது அல்லது கடுக்காய், தானிக்காய் நெல்லிவற்றல் இவைகளை சேர்த்து காய்ச்சின கசாயத்திலாவது கொடுத்துவர வெண்குஷ்டம், விசாசிகாரோகம் குணமாகும். வெண்குஷ்டரோகி இதை சாப்பிட்டால் 4 வது அல்லது 7வது நாளில் தேகத்தில் சிரங்குகள் காணும். அப்போது குன்றிமணி விதையும் சித்திமூலமும் சூர்ணித்து ஜலத்தில் கரைத்து உடம்பில் பூசிக்கொள்வதாலும், அல்லது மனோசிலை, நாயுருவியின் சாம்பல் இவைகளை ஜலத்தில் கரைத்து உடம்பில் பூசிக்கொள்வதாலும் குணமாகும்.

# 45-வது அத்தியாயம்

## மெழுகுகள்

இங்கிலீஷ் யுனானி, கர்நாடக வைத்திய கிரந்தங்களைப் பார்வையிட்டு அடிக்கடி உபயோகமுள்ளதும் கொடிய ரோகங்களை எளிதில் குணமாக்க மஹாவல்லமையுள்ளதுமான மெழுகுகளை இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். இந்த மெழுகுகளை அளவின்படிச் சாப்பிட்டு வருகின்ற நோயாளிகளின் ரோகங்கள் மெழுகு உருகிப் போவது போல ரோகங்களும் உருகிப்போகும். அதாவது அதிசீக்கிரத்தில் குணமாகும்.

## லிங்கமெழுகு

(1) லிங்கம் பலம் 4, பூரம் பலம் 2, வெங்காரம் பலம் 1½ இவைகளை சுத்திசெய்து வேளைஇலைச்சாற்றால் ஒரு சாமம் அரைத்து,

ஆமணக்குப்பருப்பு பலம் 4 சேர்த்து அரைத்து குன்றிமணி அளவுக்கொடுக்க சன்னி (13), தோசம், சுவாசம், முதலிய தீராதரோகங்கள் தீரும்.

(2) லிங்கம் பலம் 4, பூரம் பலம் 4, வெங்காரம் பலம் 2, நேர்வாளப் பருப்பு பலம் 1 இவைகளை சுத்திசெய்து அத்துடன் சுக்கு, குரோசாணி ஓமம், வகைக்கு விரா. 4 சேர்த்து வெற்றிலைச்சாற்றால் ஒரு சாமம் அரைத்து, தேன்விட்டு ஒரு சாமம் அரைத்து உளுந்து அளவு கொடுக்க சுரம், சன்னி, வாதம், சூலை, முதலிய பற்பல கொடியரோகங்கள் குணமாகும்.

## அயம்மெழுகு

(1) ஒரு சட்டியில் மூன்று வருஷஞ்சென்ற புளி சேர் 2, கிளாப்பழச்சாறு படி 1, இவைகளைச் சேர்த்து அதில் அயக்கட்டி பலம் 1, போட்டு மேல் சட்டியை மூடி சீலைமண் செய்து காற்றில்லாத இடத்தில் அசையாமல் உரியில் வைக்கவும். ஒரு மண்டலஞ்சென்று எடுத்துப்பார்க்க மெழுகுபோலிருக்கும். அதில் ஒரு மிளகு அளவுக்கொடுத்துவர தேகவெளுப்பு, சோகை (9), பாண்டு (5), காமாலை (13) பித்தவெட்டை குணமாகும். ரத்தம் ஊறும்.

(2) ஒரு பலம் சுத்திசெய்த அரப்பொடியை கல்வத்திலிட்டு இன்புராசமூலம் இடித்து எடுத்தசாறு படி 1/4 விட்டு ரவியில் வைத்து உலர்த்தி பின்பு புளிப்பு மாதுளைச்சாறு விட்டு 4 சாமம் அரைத்து உலர்த்தி தேவையான தேன்விட்டு மெழுகுப்பதத்தில் ஒரு சாமம் அரைத்து எடுத்து தினம் குன்றிமணி அளவுக்கொடுத்துவர பித்தவெட்டை, சோகை, பாண்டு முதலியவைகள் தீரும்.

## ரசமெழுகு

4 பலம் பசும் வெண்ணெயும், 3 பலம் கந்தகமும் சேர்த்து மைபோல் அரைத்து துணியில் தடவி திரியாக்கி கொளுத்தி சுடர் தயிலம் இறக்கி கல்வத்திலிட்டு ஒரு பலம் ரசம் சேர்த்து, ரசம் கண்களுக்கு தோன்றாதவரையில் அரைத்து எடுத்து ஒரு குன்றிமணியிடை வெல்லத்தில் வைத்துக் கொடுக்க 3 நாள்களில் வாதம், சூலை முதலியவைகள் குணமாகும். சங்கங்குப்பிச்சாற்றில் கொடுக்க கிரந்தி, அரையாப்பு, பவுத்திரம் தீரும். சிறு செருப்படைச்சாற்றில் கொடுக்க சிரங்கு, சொறி, தீரும்.

## ரசலிங்கமெழுகு

ரசகர்ப்பூரம், லிங்கம், சமமாக சேர்த்து கல்வத்திலிட்டு முலைப்பாலால் ஒரு சாமமும், எலுமிச்சம்பழச்சாற்றால் ஒரு சாமமும், தேனால் ஒரு சாமமும் அரைத்து ஒரு இரும்புக்கரண்டியில்போட்டு மேற்படி சாறு கொஞ்சம் விட்டு தீபத்தின் மேல்பிடிக்க உருகி மெழுகாகும்.

அதில் பணவிடை பனைவெல்லத்தில் வைத்துக்கொடுக்க சூதகவலி, வயிற்றுவலி, வாயு, முதலியவைகள் குணமாகும்.

## பாஷாணமெழுகு

ஒரு பானையில் 4 படி மூத்திரமும், 1 படி பூ நீரையும் விட்டு ஒரு பலம் வெள்ளைப்பாஷாணத்தை துணியால் முடிந்து பானைக்குள் தொங்கும்படிக் கட்டி, பானையின் வாய்மூடி சீலைமண் செய்து அடுப்பில் ஏற்றி ஒரு சாமம் கமலாக்கினியாய் எரித்து, எடுத்து அதற்கு ஒரு புட்டி போர்ட்டுவைன் சாராயத்தால் சுருக்குக்கொடுத்து பின்பு பிராயம்பட்டைத்தயிலத்தால் மெழுகுஆகும் வரையில் சுருக்குக்கொடுத்து அரிசியிடை அனுபானத்திலிட, சன்னி, சுரம், தோஷம், முதலிய கொடியரோகங்கள் குணமாகும்.

## தாம்பிர மெழுகு

சுத்திசெய்த தாம்பிரத்தகடுகள் சேர் ½ கந்தகம் சேர் 1, இவைகளில் கந்தகத்தை சூர்ணித்து ஒரு பீங்கானில் கொஞ்சமிட்டு அதின்மேல் ஒரு தகட்டைவைத்து அதின்மேல் கந்தகத்தை போட்டு தகட்டைவைக்கவும். இவ்விதமாய் எல்லாத்தகடுகளையும் வைத்து, எலுமிச்சம்பழச்சாறு, மேல்தகட்டின் மேல் ½, விரற்கடை வரும்படியாக விட்டு ரவியில் வைத்து மறுநாளும் மேற்படி சாற்றைவிட்டு ரவியில்வைக்கவும். இவ்விதமாய் 20 நாள் வைக்க மெழுகுபோலிருக்கும் அதை எடுத்து ஒரு வாய் அகல கற்கார்க்குசீசாவில் போட்டு வைத்துக்கொண்டு 1 முதல் 4 கிறேன்ஸ் கொடுத்துவர மேகத்தடிப்பு, கருமேகம், குஷ்டம், மேகப்புடை, மேகரணம் முதலிய அநேக கொடிய ரோகங்கள் குணமாகும்.

## (இங்கிலீஷ்) - ரசமெழுகு
## Blue Pill - பிளூபில்

*செய்முறை:—* ½ அவுன்ஸ் சுத்திசெய்த ரசத்துடன், 6 திராம் குல் சேர்த்து ரசம் கண்ணுக்கு தெரியாமல் போகிறவரையில் அரைத்திட்டு திராம் அதிமதுரத்தூள் சேர்த்து இடித்துக்கொள்ள வேண்டியது. மாத்திரை கடுதாசியின் மேல் தேய்த்தால் ரசம் கண்களுக்கு அகப்படக் கூடாது.

*செய்கை:—* வியதாபேதகாரி, விரேசனகாரி

*உபயோகம்:—* இத்துடன் இபிகாகியூ ஏனா சேர்த்துக்கொடுக்க அஜீர்ணம் குணமாகும். இதில் 5 கிறேன்ஸ் இரவில் சாப்பிட்டு காலையில் நிலாவாரை கசாயம் சாப்பிட பேதியாகி பித்தநீரை வெளிப்படுத்தும். இது திரிதோஷம், கொருக்கை முதலிய வியாதிகளுக்குக் கொடுக்கத் தகுதியானது.

## வீரமெழுகு

*(1)* கட்டின வீரம் விரா. 1, கட்டின லிங்கம் விரா. 2, ஒரு சட்டியில்போட்டு செஞ்நெருஞ்சிச்சாற்றால் 3 சாமம் சுருக்குக் கொடுத்து சூர்ணித்து, அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்கு விரா. 2, சூர்ணித்து சேர்த்து தேன்விட்டு 2 சாமம் அரைத்து எடுத்து உளுந்து, அளவில் கொடுத்து வர சன்னி (13), வாதம் (80), சுரம் (64), சூலை (18), மேகம் (20), குஷ்டம் (18) முதலிய பற்பல கடூரரோகங்கள் குணமாகும்.

(2) கட்டின வீரம் பலம் 1 கல்வத்திலிட்டு பிரமதண்டுச்சாற்றால் 4 சாமம் அரைத்து, சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்கு பலம் 2 சூர்ணித்து சேர்த்து தேன்விட்டு ஒரு சாமம் அரைத்து உளுந்து அளவு கொடுக்க மேல் சொல்லிய ரோகங்கள் தீரும்.

# 46-வது அத்தியாயம்

## குழம்புகள்

யுனானி, கர்நாடக கிரந்தங்களிலிருந்து கடூரரோகங்களை அதிசீக்கிரத்தில் நிவர்த்தியாக்க மஹா வல்லமைபொருந்திய குழம்புகள் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். அளவின்படி இவைகளைச் சாப்பிட்டால் நன்றாய் விரேசனமாகி பலமான ரோகங்களைப் போக்கும்.

## குமட்டிக்காய் குழம்பு

(1) 50 வறி குமட்டிக்காயின் சாறு, இலைக்கள்ளிப்பால் படி 1, கல்லுப்பு படி 1, வெடியுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, சுக்கு, திப்பிலி, பெருங்காயம் வகைக்கு பலம் 1, இவைகளை சேர்த்துக் காய்ச்சி, மெழுகு பதத்தில் எடுத்து ஒரு விராகனிடை வீதம் கொடுக்க உதரரோகம், சூதகக்கட்டு, சூதகவலி முதலியவைகள் தீரும். மலம் இறங்கும்.

(2) குமட்டிக்காய்ச் சாறு படி 2, இந்துப்பு, வெங்காரம், கடுகுரோகிணி, சீரகம், வால்மிளகு, வகைக்கு பலம் 1/2, பெருங்காயம் பலம் 2, இவைகளை சேர்த்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் எடுத்து ஒரு குன்றிமணி அளவு கொடுக்க குன்மம் (8), சூலை (18), வாதம் (80), கைகால் முடக்கு, குணமாகும், விரேசனமாகும்.

## லிங்கக் குழம்பு

(1) கட்டினலிங்கம், சுத்திசெய்த வெங்காரம் வகைக்குப் பலம் 1, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, இந்துப்பு, வகைக்குப் பலம் 2, ஆமணக்குப்

பருப்பு பலம் 4, இவைகளைச் சேர்த்து மைபோல் அரைத்து குன்றிமணி இடை அனுபானத்திலிட விரேசனமாகி மகோதரம், வாதம், குன்மக்கட்டி முதலியவைகள் தீரும்.

(2) கட்டின லிங்கம் பலம் 1, வெங்காரம் பலம் 2, நேர்வாளப்பருப்பு பலம் 4, இவைகள் சுத்திசெய்து அத்துடன் ஆமணக்குப்பருப்பு பலம் 8, முப்பு பலம் 1, இவைகளெல்லாம் கல்வத்திலிட்டு மைபோலரைத்து ஒரு குன்றிமணி அளவுகொடுக்க விரேசனமாகி சுரம், மகோதரம், குன்மம், வாதம், முதலியவைகள் குணமாகும்.

## அகஸ்தியர் குழம்பு

மனோசிலை, அரிதாரம், கருநாவி, ரசம், வெங்காரம் இவ்வைந்தும் சுத்திசெய்து வகைக்கு விராகனிடை 2½, சேர்த்து அத்துடன் கடுகு ரோகிணி, கருஞ்சீரகம், திப்பிலி, பெருங்காயம், இந்துப்பு வகைக்கு விராகனிடை 2½, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனிடை 25, நாட்டுக்காட்டாமணக்கின் பருப்பு விரா. 12½ இவை களைச்சேர்த்து அரைத்து பீங்கான் டப்பாவில் போட்டு வைத்துகொண்டு ½ பணவிடைவீதம் அடியில் கண்ட அனுபானங்களில் கொடுக்க அடியில் கண்ட ரோகங்கள் தீரும்.

| அனுபானங்கள் | நிவர்த்தியாகும் ரோகங்கள் |
|---|---|
| இஞ்சிச்சாறு | குளிர்சுரம், வாதசுரம், சன்னி, அண்டவாதம், மூலவாயு. |
| சங்கங்குப்பிச்சாறு அல்லது இளநீர் ஜலம் | நீர்க்கடுப்பு, நீர்சுருக்கு, கல்லடைப்பு |
| வெங்காயச்சாறு | தேள்கொட்டல். |
| அகத்தியிலைச்சாறு | மகோதரம், வெட்டை |
| நொச்சியிலைச்சாறு | வாதசுரம் |
| வெற்றிலைச்சாறு | விஷம் |
| கடுக்காய் அல்லது கொத்தமல்லிக் கஷாயம் | பித்தசுரம் |
| திப்பிலிக்கசாயம் | சிலேஷ்மசுரம் |
| விலாமிச்சுவேர்க்கசாயம் | பித்தவெட்டை |
| கடுக்காய்த்தூள் | இருமல் |
| சாதிக்காய்த்தூள் | அதிசாரசுரம் |
| பசுநெய் | ரத்தமூலம் |
| தேங்காய்ப்பால் | வாதம் |
| பசும்பால் | பாண்டு, பித்தம் |
| செம்மறியாட்டுப்பால் | திரளாதபெண்ணுக்கு 9 நாள் |
| வெள்ளைப்பூண்டுத் தயிலம் | சன்னி (13) |
| ஆமணக்கெண்ணெய் | வாயு |
| வெள்ளாட்டுத்தயிர் | சூதகவாயு. |

கீர்த்தியைப் பெற்ற நஸ்யங்களை இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். இவைகள் சாமான்னியமானவைகளல்ல.

## லங்கேசுவர ரசநஸ்யம்

ரசம், மனோசிலை, கந்தகம், சுக்கு, திப்பிலி, அக்கிராகாரம், வெண்நாவி, கருநாவி, வெங்காரம் வகைக்கு விரா. 1, மிளகு விரா.9, இவைகளில் ரசமும் கந்தகமும் கல்வத்திலிட்டு அரைத்து பிறகு கொஞ்சம் மிளகும் மற்ற சரக்குகளும் போட்டு அரைத்து நீல நிறமாக தோன்றினவுடனே பாக்கி மிளகை போட்டு 4 ஜாமம் அரைத்து ஒரு சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு கொஞ்சம் எடுத்து நஸ்யமிட சன்னி, தோஷம், மண்டைசிலேஷ்மம் முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

## சர்வேசுவர ரசநஸ்யம்

ரசம், கந்தகம், நாவி, மனோசிலை, வெங்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, இவைகளை சமமாக சேர்த்து, கல்வத்திலிட்டு 4 ஜாமம், அரைத்து ஒரு சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு கொஞ்சம் எடுத்து நஸ்யமிட சன்னி மயக்கம், மண்டைகபம் முதலிய பற்பல கொடிய ரோகங்கள் குணமாகும்.

## * காலபைரவ நஸ்யம்

ஒரு துணியை மூட்டைப்பூச்சிகளின் ரத்தத்தில் நனைத்து உலர்த்தி ஒரு கற்கார்க்கு சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு 4 வித அபஸ்மார ரோகங்களுக்கு, கழுதை மூத்திரத்தில் நனைத்து 3 நாள் நஸ்யமிட நாள் பட்ட ரோகமாயிருந்தபோதிலும் குணமாகும்.

# 53-வது அத்தியாயம்

## புகைச்சல்கள்

### கந்தகப்புகைச்சல் - Sulphur vapour bath.

மூங்கிற்பத்தைகளால் கோழிகூடுபோல் ஒரு கூடுசெய்து சிரசு நுழையும்படி ஒரு துவாரம் மேல்பக்கத்தில் வைத்து, மெழுகு துணியால்

ப்க்குவமாய் மூடி அதில், சிரசு வெளியில் இருக்கும்படி நோயாளியை உட்காரவைத்து, புகை வெளிப்படாமல் இருக்க கழுத்திருக்கிற இடத்தில் துணியாலடைத்து, கந்தகத்தை ஒரு சிறு தட்டில் போட்டு நெருப்பின்மேல் வைத்து கூண்டுக்குள் வைக்க, கந்தகம் புகைந்து சரீரமெங்கும் படும். 10 -15 நிமிஷம் வரையில் நோயாளியை வைத்திருந்து பிறகு வெளிப்படுத்திவிட வேண்டியது. இந்த சிகிச்சை சருமரோகங்கள், கீல்வாத ரோகம் இவை களுக்குச் செய்தால் வெகு நன்மை செய்யும்.

## ரசப்புகைச்சல்-Fumigation

மேல் சொல்லியபடி ஒரு கூடு செய்து அந்தக்கூட்டில் நோயாளியின் தலை வெளியிலிருக்கும்படி உட்காரவைத்து 1 அல்லது 2 திராம் பிளாக் ஆக்ஸைட் ஆப் மெர்க்குரி (Black Oxide of Mercury) என்னும் ரஸபஸ்மத்தை இரும்புத் தட்டில் போட்டுச் சுடவைத்தால், அதிலிருந்து புகை எழும்பி தேகமெங்கும் படும்; அந்தப்புகையை ஆக்கிராணித்தால் சீக்கிரத்தில் வாயைப்பிடிக்கும், விரணம் முதலியவைகளுக்கு ரசப்புகை போட்டால் வெகு நன்மை செய்யும்.

# 54-வது அத்தியாயம்

## விரேசனகாரிகள்

அநேக ரோகங்கள் மலபந்தத்தால் உண்டாகுவதால் மலத்தை கிரமப்படுத்த மஹாசிரேஷ்டமான அவுஷதங்களாகிய மாத்திரைகள், சூர்ணங்கள், லவணங்கள், குழம்புகள், எண்ணெய்கள் முதலிய அநேக வித ரூபங்களாக இருக்கின்ற விரேசனகாரிகள் சகலஜனங்களுக்கு அதி உபயோகமாகும் பொருட்டு இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். அவைகளை சாப்பிட்டால் வாதபித்தசிலேஷ்ம கெட்டநீர்களை வெளியாக்கி ஆரோக்கிய ஸ்திதியில் வைக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

*மாத்திரைகள் :--*

(1) ரசபஸ்மம் பலம் 1, சுத்திசெய்த லிங்கம் பலம் 2, சுத்திசெய்த வெங்காரம் பலம் 3, சுக்கு பலம் 4, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு பலம் 5, இவைகளை கல்வத்திலிட்டு குரோசாணி ஓமம் கஷாயத்தால் மைபோலரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை கொடுக்க நன்றாய் பேதியாகும். பேதி அதிகமானால் மோரும் அன்னமும் சேர்த்துச் சாப்பிடவும்.

(2) சுக்கு பலம் 1, ரோஜாமொட்டு பலம் 2, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு பலம் 3 இவைகள் கல்வத்திலிட்டு சந்தனக்கட்டை, சண்பகப்பூ இவைகளின் கசாயத்தால் ஒரு ஜாமம் அரைத்து குன்றிமணி அளவில் மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரைக்கொடுக்க செவ்வையாய் பேதியாகும்.

(3) சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு பலம் 5, சுத்திசெய்த லிங்கம், சுத்தி செய்த வெங்காரம், ரசபஸமம், ரசசெந்தூரம் வகைக்கு பலம் ½. சுக்கு பலம் 2, மிளகு பலம் 1, திப்பிலி பலம் ½ இவைகள் எல்லாம் கல்வத்திலிட்டு விளாம்பிசின் ஜலத்தால் மைபோலரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரைக்கொடுக்க வாதம், பித்தம், சிலேஷ்மம் இவைகளைக் கண்டித்து செவ்வையாய் பேதியாகும்.

(4) லிங்கபேதி மாத்திரை
(5) காக்கணான்வேர் பேதிமாத்திரை
(6) ரசலிங்கபேதி மாத்திரை
(7) பானுபிரகாச மாத்திரை
(8) ரசமாத்திரை

} இவைகளில் எதைச் செய்து கொடுத்தபோதிலும் வாத பித்த சிலேஷ்ம ரோகங்களை கண்டித்து செவ்வையாய் பேதியாகும். செய்முறை இந்தப்புஸ்தகத்தில் காண்க.

**சூர்ணங்கள் :-**

(1) ¼ பலம் உலர்ந்த ரோஜாமொட்டுகள் நெய்யில் வறுத்து சூர்ணித்து அதற்கு சமமாக சர்க்கரைச் சேர்த்துச் சாப்பிட தண்ணீர் தண்ணீராய் பேதியாகும்.

(2) கலவை ஜாலப் சூர்ணம்
(3) கலவை ஸ்காமொனிச்சூர்ணம்
(4) கலவை ரூபார்ப் சூர்ணம்

} இவைகளை புஸ்தகத்தில் பார்வையிட்டு செய்து கொடுக்கப் பேதியாகும்.

**உப்புகள் :-**

(1) எப்சன் ஸால்ட்
(2) ரோசல் ஸால்ட்
(3) பாஸ்பேட் ஆப் ஸோடா

} இவைகளில் எதையாகிலும் அளவை புஸ்தகத்தில் பார்வையிட்டு அனுபானத்தில் கொடுக்க செவ்வையாய் பேதியாகும்

**எண்ணெய்கள் :-**

(1) நேர்வாள எண்ணெய் } ½ - 1 துளி சர்க்கரையில் அவசியமாய் இருந்தால் கொடுக்கலாம். அதிகமாய் பேதியாகும்.

(2) சிற்றாமணக்கெண்ணெய் } கசாயம் முதலிய அனுபானத்தில் கொடுக்க பேதி செவ்வையாய் ஆகும்.

(3) கணத்தெண்ணெய் } இப்புஸ்தகத்தில் பார்வையிட்டு செய்து கொடுக்க பேதியாகும்.

குழம்புகள்:

(1) கும்மட்டிக்காய்க் குழம்பு
(2) லிங்கக்குழம்பு

} இவைகளில் எதையாகிலும் இப்புஸ்தகத்தில் பார்வையிட்டு செய்து கொடுக்க பேதியாகும்.

மிக்ஸர்கள் (Mixtures):-

(1) பைசல்பேட் ஆப் பொட்டாஸ், கார்போனேட் ஆப் சோடா வகைக்கு ஒரு திராம், வெவ்வேறாக 2 அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து சேர்க்க பொங்கும் போதுச் சாப்பிடவும். மலத்தை உதைக்கும், உஷ்ணத்தைத் தணிக்கும் (Dr. Barker)

(2) மாக்னிஷியா கார்போனெட் 40 கிறேன்ஸ், ரேவல் சின்னி (Rhubarb) 15 கிறேன்ஸ், சுக்குத் தூள் 5 கிறேன்ஸ், இவைகளைச் சேர்த்துக்கொடுக்க மலம் இறங்கும்.

(3) ரோஜாப்பூக்கஷாயம் 5½ அவுன்ஸ், எப்ஸன் ஸால்ட் 6 திராம், எலுமிச்சம்பழப் பாணிதம் ½ அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து 4-8 திராம் கொடுக்க மலம் இறங்கும்.

(4) சீமை இந்துப்பு (Epson Salt) 6 திராம், மேனா 2 திராம், வெந்நீர் 1½ அவுன்ஸ் இவைகளைச் சேர்த்துக்கொடுக்க செவ்வையாய் பேதியாகும்.

துவையல்கள் :-

சரக்கொன்றைப்புளி, மொளகாய், உப்பு, புளி, இஞ்சி, பெருங்காயம் இவைகளைச் சேர்த்து துவையல் செய்து இராச்சாப்பாட்டுடன் 1-2 கொட்டைப்பாக்களவு சாப்பிட காலையில் மலம் தாராளமாயிறங்கும்.

லேகியங்கள் :-

(1) கடுக்காய் பிஞ்சி, சூரத்துக்கடுக்காய், சூரத்துக் கறுப்புஉப்பு, சுக்கு, சோம்பு, தான்றிக்காய், நெல்லிவற்றல் வகைக்கு பலம் 1, கடுக்காய் நிலாவாரை வகைக்கு பலம் 2, கொத்தமல்லி விதை பலம் 3, இவைகளை சூர்ணித்து வஸ்திரகாயஞ்செய்து அத்துடன் தேன் தேவையானது சேர்த்து லேகியமாக்கி 1-3 கொட்டைப்பாக்களவு படுக்கைக்கு போகுமுன் தினம் சாப்பிட காலையில் மலம் தாராளமாய் இறங்கும்.

(2) சிற்றாமணக்கெண்ணெய் படி 1 இதில் பேயன்வாழைப்பழம் 30, கற்கண்டுத்தூள், சீரகத்தூள் வகைக்கு சேர் ½ சேர்த்து ஒரு பீங்கானில் போட்டு வெய்யிலில் 8 நாள் வைத்து லேகியபதமாக்கி காலையில் 2-4 பாக்களவு சாப்பிட்டுவர மலம் இறங்கும். உஷ்ணம் போகும்.

இன்னும் அநேக மருந்துகள் 14-வது, 16-வது அத்தியாயங்களில் காண்க.

# 55-வது அத்தியாயம்

## பிளாஸ்திரிகள்.

இங்கிலீஷ், யுனானி, கர்நாடக கிரந்தங்களில் சொல்லிய பிளாஸ்திரிகளில் மேகரணம், தீப்பட்டரணம், ஆறாதரணம், கத்திக்காயம், முதலிய பற்பல ரணங்களை ஆற்றவும், மேககட்டிகள், வாயுகட்டிகள் முதலியவைகளைக் கரைக்கவும் கைகண்ட பிளாஸ்திரிகளை இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

## ஈயப்பிளாஸ்திரி - (கர்நாடக முறை)

ஈயச்செந்தூரம் பலம் 1, ரசகர்ப்பூரம் விரா ½, மிருதார்சிங்கு விரா ½, முத்துவெள்ளை விரா 1, நல்லெண்ணெய் சேர் ¼, இவைகளைச் சேர்த்து கறுப்பு நிறம் வரும் பதத்தில் காய்ச்சி எடுத்து ஒரு தகரடப்பாவில் போட்டுவைத்துக்கொண்டு கொஞ்சம் எடுத்து துணியில் தடவிப்போட ரணம் ஆறும்.

## ரசப்பிளாஸ்திரி - Mercury Plaster

ஒரு அவுன்ஸ் ஆலிவ் எண்ணெயில் கந்தகம் 64 கிறேன்ஸ் சேர்த்து அரைத்து பிறகு 24 அவுன்ஸ் ரசத்தைச் சேர்த்து, ரசஅணுக்கள் கண்களுக்குத் தெரியாமல் போகிறவரையில் அரைத்து அத்துடன் 8 பவுண்டு மிருதார்சிங்கு பிளாஸ்திரியை சிறு தீயிட்டு உருக்கி கொஞ்சம் கொஞ்சமாய் சேர்த்துக் கொள்ளவேண்டியது.

செய்கை:- உஷ்ணகாரி, சோபநாசகாரி.

உபயோகம்:- இதை துணி அல்லது தோலின்மேல் தடவி கட்டிகள் தடிப்புகள், வீக்கங்கள் இவைகளுக்கு போடக்கரைத்துவிடும்.

## மிருதார்சிங்கு பிளாஸ்திரி - Lead Plaster

ஒரு பவுண்டு மிருதார்சிங்குத் தூளை, 8 பைன்ட் ஆலிவ் எண்ணெய், 2 பைன்ட் ஜலம் இவைகளுடன் சேர்த்து சிறு தீயிட்டு எரித்து இடைவிடாமல் துழவிக்கொண்டே இருக்கவும். பிளாஸ்திரி பதத்துக்கு வரும்வரையில் ஜலம் சுண்டிப்போனால் தீநீரை கொஞ்சம் சேர்த்துக் கொள்ளவேண்டியது.

உபயோகம்:- இதை கத்திவெட்டு காயத்தின் இரண்டு பிரிவுகள் சேர்க்கவும், கட்டிகளை கரைக்கவும் உபயோகிக்கப்படும்.

## ஸ்டிகிங் பிளாஸ்திரி - Sticking Plaster

3 பவுன்ட் மிருதார்சிங்கு பிளாஸ்திரியை உருக்கி, அத்துடன் ½ பவுன்ட், ரோஜனத்தையும் உருக்கி சேர்த்துக் கொள்ளவேண்டியது.

உபயோகம்:- இது சருமத்தை உஷ்ணிப்பதால் சில வியாதிகளுக்கு உபயோகிக்கலாகாது. இதை துணியில் தடவி காயங்கள், கட்டிகள், ரணம் இவைகளுக்கு போடப்படும்.

## ஐயோடைட் ஆப் போட்டாஷியம் பிளாஸ்திரி Iodide of Pottassium Plaster

3 அவுன்ஸ் சாம்பிறாணியும், 3 திராம் மெழுகும் சேர்த்து உருக்கி அதில் 1/2, அவுன்ஸ் ஐயோடைட் ஆப் பொட்டாஷியத்தை 1 திராம் ஆலிவ் எண்ணெயில் அரைத்து சேர்த்து அனலை விட்டிறக்கி குளிருகிற வரையில்' துழாவவேண்டியது.

உபயோகம்:- இதை துணியில் தடவி வீக்கம், கட்டிகள் இவைகளுக்கு போடக்கரையும்.

## கால்பேனம் பிளாஸ்திரி – Galbanum Plaster

4 அவுன்ஸ் கால்பேனம், 4 திராம் டர்பன்டையின் இவைகளைச் சேர்த்து உருக்கி அத்துடன் 12 திராம் குந்திரகம் பிசின், 18 அவுன்ஸ் மிருதார்சிங்குப் பிளாஸ்திரி இவைகளை முதலில் சிறு தீயால் உருக்கி சேர்த்துக்கொள்ளவும்.

உபயோகம்:- இதை துணியில் தடவிக் கட்டிகளுக்குப்போட கட்டிகள் கரையும்.

## மடல்துத்தச்செந்தூரப் பிளாஸ்திரி Calamine Plaster

15 அவுன்ஸ் மெழுகை உருக்கி, 2 பையின்ட் ஆலிவ் எண்ணெயைச் சேர்த்து காய்ச்சி தீயை விட்டிறக்கி இறுகிபோகிற பதத்தில் 15 அவுன்ஸ் மடல்துத்தச் செந்தூரத்தைச் சேர்த்து குளிர்ச்சியாகிற வரையில் விடாமல் துழவ வேண்டியது.

உபயோகம்:- இதை துணியில் தடவி அக்கினி ரணம், தோலெரிவு, ரணங்கள் முதலியவைகளுக்குப் போட குணமாகும்.

## எரிவண்டுப் பிளாஸ்திரி - Cantharidis Plaster

12 அவுன்ஸ் பன்றிநெய், 15 அவுன்ஸ் மெழுகு, 15 அவுன்ஸ் ஆட்டுக் கொழுப்பு, இவைகளை சேர்த்து உருக்கி, 6 அவுன்ஸ் ரோஜனத்தை

முன்னதாகவே உருக்கி சேர்த்து நெருப்பை விட்டு இறக்கி உறைந்துபோக ஆரம்பிக்கிற தருணத்தில் 2 பவுண்டு எரிவண்டுச் சூரணத்தைப் போட்டு மிஸ்ரித்துக் கொள்ள வேண்டியது.

**உபயோகம்–** இதை கொப்புளம் எழுப்பி புண்ணாக்க உபயோகிக்கப்படும். சிலவேளை புண்ணாக்கவேண்டிய இடத்தில் கடுகை அரைத்துப் போட்டு பிறகு இதைப் போடவேண்டியதாய் இருக்கும்.

---

## 56-வது அத்தியாயம்

## தூபங்கள்

நோயாளிகள் படுத்திருக்கும் அறை முதலிய இடங்களிலுள்ள நாற்றங்களை வெளியாக்க தூபங்கள் போடப்படும். சூர்ண ரூபமாயும் வத்திரூபமாயும் இருக்கின்றவைகள் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

☞ இந்த தூபங்கள் சுவாமிகளுக்கும், சுபகாரியங்களுக்கும் அதி விசேஷமாய் உபயோகப்படுத்தி வருகிறார்கள்.

### கோஹலாப்பூர் தேசத்திய தசாங்குச் சூர்ணம்.

அகிற்கட்டை, மலாகா சந்தனக்கட்டை, தேவதாருக்கட்டை, அனாசிப்பூ, சன்னலவங்கப்பட்டை, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, உலர்ந்த மருக்கொழுந்து, வெட்டிவேர், கல்பாசி, கர்பூரம், கார்போகரிசி, கோரைக்கிழங்கு, சாம்பிராணி, மட்டிப்பால், மகிளம்பூ, கருவாப்பட்டை, பச்சைஇலை, பூசாந்திப்பட்டை, கிளியூரம்பட்டை, பலகைமஞ்சள், பூலாக்கிழங்கு, சடாமாஞ்சி, தாளிசப்பத்திரி, லவங்கப்பத்திரி, கோஷ்டம், சித்தரத்தை, அதிமதுரம், லவங்கப்பட்டை, பிசின்பட்டை, தேன், பசுவின் நெய், சோம்பு, நன்னாரிவேர், விலாமிச்சுவேர், சிறுநாகப்பூ, நிரயாசிப்பால், குகிலு, சண்பகமொக்கு, இவைகள் எல்லாம் சமமாக சூர்ணித்து ஒரு ஜாடியில் போட்டு வைத்துக் கொண்டு நோயாளி படுக்கையின் இடத்தில் நெருப்பின் மேல் போடப் புகைந்து நாற்றத்தைப் போக்கும். இதனை தசாங்கு சுவாமிகளுக்கும் விசேஷமாய் உபயோகப்படுத்திவருகிறார்கள்.

### பண்டரிப்பூர் தேசத்திய தசாங்குச் சூர்ணம்

பூலாக்கிழங்கு, தேவதாரக்கட்டை, அகிற்கட்டை, அகருக்கட்டை, கருங்குங்கிலியம், தாளிசப்பத்திரி, நன்னாரிவேர், சாம்பிராணி, வகைக்குப்

பலம் 2, மலாகா சந்தனக்கட்டை பலம் 6, பூஞ்சாந்துப்பட்டை பலம் 3, கிளியூரம்பட்டை, கோஷ்டம், பச்சை இலை, வகைக்கு பலம் 1½, கொம்பரக்கு, கல்பாசி, சண்பகமொக்கு, மட்டிப்பால், அனாசிப்பூ, குகிலு, நிரயாசிப்பால், வெட்டிவேர், விலாமிச்சுவேர், லவங்கப்பத்திரி, சடாமாஞ்சி, சாதிக்காய் வகைக்கு பலம் 1, உலர்ந்த மருக்கொழுந்து, சிறுநாகப்பூ, கிராம்பு, வகைக்கு பலம் ¾, சித்தரத்தை, கோரைக்கிழங்கு, மஞ்சள், ஏலம், கஸ்தூரிமஞ்சள், சோம்பு, வகைக்கு பலம் ½, தேன் பலம் 1, வெல்லசர்க்கரை பலம் 2, பசும்நெய் பலம் 2, இவைகள் எல்லாம் சூர்ணித்து மேற்படி நெய்யில் கலந்து ஜாடியில் போட்டு வைத்துக்கொண்டு மேல் சொல்லியபடி உபயோகப் படுத்திக்கொள்ளவும்.

## காசிதேசத்திய தசாங்குச் சூர்ணம்

பூலாக்கிழங்கு பலம் 1½, அகிற்கட்டை, தேவதாருக்கட்டை, மலாக்கா சந்தனக்கட்டை, கருங்குங்கிலியம், வகைக்கு பலம் 2, கிளியூரம் பட்டை, மட்டிப்பால், நிரயாசிப்பால், பெருஞ்சீரகம், சமுத்திராபச்சை, வகைக்கு பலம் 1, கோஷ்டம், ஏலம், சிறுநாகப்பூ, சன்னலவங்கப்பட்டை, தாளிசப்பத்திரி, சடாமாஞ்சில், கஸ்தூரி மஞ்சள், மருக்கொழுந்து, சண்பகமொக்கு, சித்தரத்தை, மல்லி, விலாமிச்சுவேர், நன்னாரிவேர், அனாசிப்பூ, நாகணம், புனுகுச்சட்டம், வெட்டிவேர், வகைக்குப் பலம் ½, பசும்நெய் பலம் 2, இவைகளில் நாகணம், அனாசிப்பூ, சிறுநாகப்பூ, சண்பகப்பூ, பெருஞ்சீரகம், இவைகள் நெய்யால் கொஞ்சம் வறுத்து சூர்ணித்து அத்துடன் மற்றசரக்குளை உலர்த்தி சூர்ணித்து சேர்த்து மேற்படி நெய்யில் மிஸ்ரித்து ஜாடியில் போட்டு வைத்துக் கொண்டு மேல் சொல்லியபடி உபயோகித்துக் கொள்க.

## லக்னோ தேசத்திய தூபவத்தி

1. பூஞ்சாந்திப்பட்டை, லவங்கம், மலாக்கா சந்தனம், நிரயாசிப் பால் வகைக்கு பலம் 1½, மட்டிப்பால் பலம் 2, சாம்பிராணி, அகருக்கட்டை வகைக்கு பலம் 3, கல்பாசி, லவங்கப்பட்டை, கோஷ்டம், சடாமாஞ்சில், வெட்டிவேர், தேவதாருக்கட்டை, கற்கண்டு, தேன் வகைக்குப் பலம் 1, தாளிசப்பத்திரி, சன்னலவங்கப்பட்டை, அகிற்கட்டை வகைக்குபலம் ¾, கிளியூரம்பட்டை, ல்வங்கப்பத்திரி, நன்னாரிவேர், விலாமிச்சுவேர், அதிமதுரம், சிறுநாகப்பூ, வகைக்குப்பலம் ½, பச்சையிலை, சித்தரத்தை, மல்லி, வகைக்குப்பலம் ¼ இவைகள் எல்லாம் பொடித்து அரைத்துக் கொண்டு, மறுபடியும் இரண்டாந்தடவை அரைக்கையில் பிசின் பட்டை பலம் 1 சேர்த்து அரைத்துக்கொள்க. பிறகு அத்துடன் புனுகுச்சட்டம், பூலாக்கிழங்கு, பூர்ஜப்பத்திரி, கௌலம் வகைக்கு விராகனிடை 1, கூகைநீர்

விராகனிடை ½, பச்சைக்கர்ப்பூரம், கஸ்தூரி வகைக்கு விராகனிடை 1/8, இவைகளை மைபோலரைத்துச் சேர்த்து மிஸ்ரித்துக் கொண்டு, பிசின்பட்டை ஒரு பாத்திரத்தில் ஊறவைத்து அந்த ஜலத்தை மூங்கிலின் சீவின குச்சிகளுக்குத் தடவி பின்பு அரைத்த மொத்தையில் கொஞ்சம் கொஞ்சமாக அப்பி பலகையின்மேல் உருட்டி வத்திகளாக்கி உலர்த்தி கொளுத்திவைக்க நாற்றத்தைப் போக்கும்.

2. மலாகா சந்தனக்கட்டை பலம் 5, சாம்பிராணி பலம் 2½, வெல்லசர்க்கரை பலம் 2½, பூஞ்சாந்திப்பட்டை, கோஷ்டம், கற்கண்டு, சடாமாஞ்சில், விளாம்பிசின் வகைக்கு பலம் 2, காரப்போகரிசி,பலம் 1¾, தேன், மட்டிப்பால், நிரயாசிப்பால், வகைக்குப் பலம் 1¼, தாளிசப்பத்திரி, விலாமிச்சுவேர், கிளியூரம்பட்டை, கஸ்தூரி மஞ்சள், சிறுநாகப்பூ, அகிற்கட்டை, தேவதாருக்கட்டை, பூலாக்கிழங்கு, நன்னாரிவேர், பச்சையிலை, லவங்கப்பட்டை, வெட்டிவேர், சண்பகமொக்கு, கோரைக்கிழங்கு, வகைக்கு பலம் 1, கிராம்பு பலம் ¾, சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம் வகைக்குப் பலம் ½ இவைகளை எல்லாம் சூர்ணித்து மேல் சொல்லியபடி செய்துகொள்க. வத்திகளைக் கொளுத்திவைக்க நாற்றத்தைப் போக்கும்.

இந்த வத்திகள் சுவாமிகளுக்கும் அதி விசேஷமாய் உபயோகித்து வருகிறார்கள்.

## 57-வது அத்தியாயம்

## லேபனங்கள்

சில மனிதர்களின் தேகத்தில் கற்றாழை நாற்றம், கருவாடு நாற்றம் வீசுவதால், உள்ளுக்கு மருந்துகளைச் சாப்பிடுவதுந் தவிர மேலுக்கு லேபனஞ்செய்வதில் சகுணத்தைத் தருவதால் அவைகள் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

### புதுக்கோட்டை சந்தனபில்லை

1. தாளிசப்பத்திரி பலம் 32, பூலாக்கிழங்கு பலம் 24, சடாமாஞ்சில், கிளியூரம்பட்டை வகைக்குப்பலம் 16, கோஷ்டம், சோம்பு, வெட்டிவேர், சஹ்ருலம், நாகணம், வகைக்குப்பலம் 8, சாதிக்காய், கருவாப்பட்டை,

* லேபனம் என்பது வாசனைத் திரவியங்களைச் சேர்த்து உண்டான சந்தனம் (இதற்கு சந்தன பில்லைகள் என்று சொல்லப்படும்) ஜலத்தில் கரைத்து உடம்பில் பூசிக்கொள்வதாம்.

சித்தரத்தை, கோரைக்கிழங்கு, வகைக்கு பலம் 5, இவைகளை பொன்நிறமாய் வறுத்து சூர்ணித்து அத்துடன் ஏலம், கிராம்பு, பச்சையிலை, புனுகுச் செக்கை, வகைக்கு பலம் 8, குங்குமப்பூ, கோரோசனை வகைக்கு பலம் 10, பச்சைக் கர்ப்பூரம் பலம் 4, இவைகளை உலர்த்தி சூர்ணித்து சேர்த்து மைபோல் பந்நீரால் அரைத்து அத்துடன் 40 பலம் மலாகா சந்தனக்கட்டை அரைத்து சேர்த்து, பிறகு எல்லாம் சேர்த்து அரைத்து அத்துடன் சவ்வாது விராகனிடை 2 சேர்த்து மிஸ்ரித்து பில்லைகளாக அச்சியால் தட்டி உலர்த்தி ஒரு சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு தினம் 2 தடவை கொஞ்சம் ஜலத்தில் சேர்த்து உடம்பில் பூசிக்கொள்ள கற்றாழை நாற்றம், கருவாடுநாற்றம் குணமாகும். ஸ்திரீபோக விருப்பம் உண்டாகும்.

2. பச்சைகர்ப்பூரம், குங்குமப்பூ, வகைக்கு விராகனிடை ¾, ஏலம் கிராம்பு, சாதிப்பத்திரி, வகைக்கு விராகனிடை ½, சாதிக்காய், விராகனிடை 1, புனுகுச்சட்டம், குலாபு அத்தர், சாம்பிராணித்தயிலம் வகைக்கு விராகனிடை 3, பந்நீர் விராகனிடை 6, நிரயாசிப்பால் விராக னிடை 2, மட்டிப்பால் விராகனிடை 2½, சந்தநாதி அத்தர் விராகனிடை 5, சவ்வாது விராகனிடை ½ மலாகா சந்தனக்கட்டை விராக னிடை 16, இவைகளில் ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, இந்நான்கும் ஜலத்தால் மைபோலரைத்து பிறகு அத்துடன் சந்தனக்கட்டை ஜலத்தால் அரைத்து சேர்த்து, பிறகு மற்றவைகளும் சேர்த்து மைபோல் அரைத்து அச்சியால் பில்லைகளாக்கி உலர்த்தி, கொஞ்சம் ஜலத்தில் கரைத்து உடம்பில் பூசிவர மேற்படி வியாதிகள் தீரும்.

☞ இந்த சந்தன பில்லைகள் சுபகாரியங்களுக்கு அதி விசேஷமாக உபயோகித்து வருகிறார்கள்.

## 58-வது அத்தியாயம்

இது வரையிலும் அவுஷதங்களின் குணங்கள், செய்கைகள் அவைகளால் குணமாகும் ரோகங்கள் முதலிய அநேக விஷயங்களை சொல்லலாயிற்று. இனி ரோகங்களின் வகுப்புகளும், பெயர்களும், அவைகள் குணமாவதற்கு அவுஷதங்களும் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

☞ ரோகங்களின் லக்ஷணங்களால் இன்னரோகம் என்றும், இன்னவகுப்பில் சேர்ந்ததென்றும், இன்ன மருந்தை கொடுத்து

அனுகூலப்படுத்தலாமென்றும் நிச்சயிக்க "ரோகநிர்ணய சாரம்" என்னும் புஸ்தகத்தில் பார்வையிடுக.

## குழந்தைகளின் ரோகங்களுக்கு அவுஷதங்கள்

*சுரமாந்தத்திற்கு:—*

(1) பாலசஞ்சீவி மாத்திரை
(2) கோரோசன மாத்திரை
(3) பாலவிநோத சஞ்சீவி மாத்திரை
(4) கஸ்தூரிமாத்திரை
(5) மஹாரசபஸ்மம்
(6) சுவர்ணரஜத பஸ்மம்
(7) வீரப்பத்திரசிந்தாமணி

இவைகள் இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துகொடுக்க குணமாகும்.

(8) குட்டிவிளா இலை, வெள்ளைப்பூண்டு, அவுரி இலை இவைகளை வகைக்கு 1 அவுன்ஸ் வெதுப்பிக் கசாயஞ்செய்து ஒரு பாலாடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

*ஊதுமாந்தத்திற்கு:-*

(1) வேலிப்பருத்தியிலையை வதக்கி எடுத்தச் சாற்றுடன் சீரகம், கடுகு ரோகிணி சமமாக சேர்த்து அரைத்துப் பிழிந்த சாற்றில் ஒரு பாலடை வீதம் முலைப்பாலில் கொடுக்க குணமாகும்.

(2) ரசமாத்திரை இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துகொடுக்க குணமாகும்.

*விஷமாந்தத்திற்கு:-*

நுணாவேர், நொச்சிவேர், வேளைவேர், ஓமம், பொடுதலை, வெள்ளைப்பூண்டு, வசம்பு, இவைகள் வகைக்கு விராகனிடை 1 நொறுக்கி வெதுப்பி கசாயஞ்செய்து ஒரு பாலடை வீதம் கொடுக்க குணமாகும்.

*நீர்மாந்தத்திற்கு:-*

மூக்கரட்டை, வெங்காயம் இவைகளின் சாறு வகைக்கு படி 1/8, ஆமணக்கெண்ணெய் படி 1/8 சேர்த்துக் காய்ச்சி வடித்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

*பால்மாந்தத்திற்கு:-*

வெள்ளைப்பூண்டு, மிளகு, வசம்பு, இந்துப்பு, பொடுதலைக்காய், இவைகள் வகைக்கு ஒரு திராம் நொறுக்கி வெதுப்பிக் கசாயஞ்செய்து 1 பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

*செரியாமாந்தத்திற்கு:-*

வசம்பு, சடாமாஞ்சில், ஓமம், சுக்கு, மிளகு, வெள்ளைப்பூண்டு, கருஞ்சீரகம், ஆமை ஓடு, இவைகள் சமமாக நொறுக்கி கசாயஞ்செய்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

*சுழிமாந்தத்திற்கு:—*

(1) இண்டின் சாறு, வெங்காயச்சாறு, ஆமணக்கெண்ணெய் வகைக்கு 2 அவுன்ஸ் சேர்த்து எரித்து வடித்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

(2) சுக்கு, கழற்சிப்பருப்பு, மஞ்சள், ஒற்றலைப்பூண்டு, பெருங்காயம் வகைக்கு விராகனிடை 1, சேர்த்து முலைப்பாலால் அரைத்து 1/2 சேர் வேப்பெண்ணெயில் கலந்து எரித்து வடித்து ஒரு விரா. வீதம் முலைப்பாலில் சேர்த்துக் கொடுத்துவர குணமாகும்.

**தலைமாந்தத்திற்கு:-**

வெள்ளறுகு, வெதுப்படக்கி, வேலிப்பருத்தி, பெருந்தும்பை இவைகளின் சாறு வகைக்கு 1 அவுன்ஸ் சேர்த்து அதில் திப்பிலி, வசம்பு, பூண்டு, சதகுப்பை, தேசாவரம், வகைக்கு ஒரு திராம் அரைத்துக்கரைத்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

☞ மேல் சொல்லிய 8 வித மாந்தரோகங்களைத் தவிர வயிறு உப்பினால் உப்பு மாந்தமென்றும், மலங்கட்டினால் கட்டுமாந்தமென்றும், கண் சொருகினால் சொருகிமாந்தமென்றும், வாதமதிகமானால் வாதமாந்த மென்றும் இவ்விதமாக பித்தமாந்தமென்றும், சிலேஷ்மமாந்தமென்றும், இழுப்புமாந்தமென்றும், சந்நிபாத மாந்தமென்றும் பலவாறாக சொல்வார்கள். ஆகையால் ரோகங்களின் லக்ஷணங்களை அறிந்து மருந்துகளை சேர்த்துக் கொடுக்கவேண்டியது.

**மாந்தரோகங்கள் (8)க்கு:-**

(1) ரொசல் சால்ட்டு 10 கிறேன்ஸ், ரேவல்சின்னி 3-7 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து காலையில் மாத்திரம் 15 நாள் ஜலத்தில் கொடுக்க குணமாகும் (Dr. Fordyce)

(2) சீமைச்சுண்ணாம்புக் கலவைச்சூர்ணம் 18 கிறேன்ஸ், வறுத்தகார்பொனேட் சோடா 6 கிறேன்ஸ், விளாம்பிசின் 12 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து 6 பாகமாக்கி 3 மணிக்கு ஒருதரம் ஒரு பாகம் ஜலத்தில் கொடுக்க குணமாகும்.

(3) கிறேபவுடர் 6 முதல் 9 கிறேன்ஸ், கலவை சீமை சுண்ணாம்பு 9 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து 3 பங்காக்கி ஒரு பங்குவீதம் ஜலத்தில் 3 தடவை கொடுக்க குணமாகும்.

(4) வல்லாரை, சீந்தில்தண்டு, கஞ்சாக்கோரை, துளசி, பிரமதண்டு, பழம்பாசி, குட்டிவிளா, வசம்பு, வெள்ளைப்பூண்டு, கடுகுரோகிணி, வகைக்கு விராகனிடை 2 வீதம் பொடித்து 2¼ படி ஆமணக்கெண்ணெயுடன் சேர்த்து எரித்து வடித்து ஒரு பாலடை வீதம் கொடுக்க குணமாகும்.

(5) முருங்கைப்பட்டைச்சாறு படி 2, நல்லெண்ணெய் படி 1, இவைகளைச் சேர்த்து, அதில் வசம்பின் சாம்பல் விராகனிடை 5, வெள்ளைப்பூண்டு விராகனிடை 2, பசும்பாலாலரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஒரு பாலடைவீதம் கொடுக்க குணமாகும்.

மர்ந்தவலிப்புக்கு:-

(1) குப்பைமேனிச்சாறு, முடக்கொத்தான் இலைச்சாறு, மூக்கரச்சாரணை சமூலச்சாறு, வகைக்கு ஒரு அவுன்ஸ், ஆமணக்கெண்ணெய் 1 அவுன்ஸ் சேர்த்து எரித்து வடித்து ஒரு பாலடைவீதம் கொடுத்து வர குணமாகும்.

(2) அப்பிரக கோரோசன மாத்திரை
(3) சுவர்ண கோரோசன மாத்திரை
} இப்புஸ்தகத்தில் சொல்லிய படி இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும்.

குமரகண்டவலிப்புக்கு:-

நெய்கொட்டான் பழத்தெண்ணெய்யை இப்புஸ்தகத்தில் சொல்லிய படி செய்து கொடுக்க குணமாகும்.

வயிற்றுப் பொருமல் மாந்தத்திற்கு:-

(1) குப்பைமேனிவேர்ப் பட்டை பலம் 4, வறுத்த ஓமம் விராகனிடை 2 இவைகள் ½ படி ஜலத்தில் போட்டுக் காய்ச்சி கசாயமாக்கி ஒரு பாலடை வீதம் கொடுக்க குணமாகும்.

(2) ஓமம், வசம்பு வகைக்கு 1 திராம் இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்து வேலிப்பருத்தியிலையை வதக்கி எடுத்தச்சாற்றில் சேர்த்து ஒரு பாலடைவீதம் கொடுக்க குணமாகும்.

கருங்கிரந்திக்கு:-

(1) ஆமணக்கெண்ணெய், கருங்கழுதை லத்திச்சாறு, அவுரிஇலைச்சாறு வகைக்கு படி ¼ சேர்த்து அதில் வசம்பு, வெள்ளைப்பூண்டு வகைக்கு விராகனிடை 2, பொடித்துப்போட்டு எரித்து வடித்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

(2) ஒரு பாலடை கழுதைப் பாலில் 2-3 துளி ஓணான் ரத்தத்தை விட்டு கொடுக்க குணமாகும். கடும்பத்தியமாயிருக்கவும்.

செங்கிரந்திக்கு:-

(1) முருங்கையிலைச்சாற்றை முறித்து ஒரு பாலடைக் கொடுக்க தீரும்.

(2) முலைப்பாலில் கோரோசனையை உரைத்துக் கொடுக்க குணமாகும்.

கிரந்தி 9க்கும்:-

செம்பருத்தி எண்ணெய்:- செம்பருத்திச் சாறு, தேங்காய்ப்பால், ஆமணக்கெண்ணை வகைக்குப் படி 2 சேர்த்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கிராம்பு, சுத்திசெய்த ரசகர்ப்பூரம் வகைக்கு விரா.2 மேற்படி தேங்காய்ப் பாலால் அரைத்துக், கரைத்து, எரித்து, வடித்து

ஒரு விராகனிடை வீதம் கொடுத்துவர குணமாகும். இந்த எண்ணெய் சூலை 18 க்கும் கொடுக்கலாம். நல்லமருந்து.

சுரத்துக்கு:-

(1) கீழ்க்காய்நெல்லிவேர்ச்சாறு, பாதிரிவேர்ச்சாறு வகைக்கு ஒரு திராம், முலைப்பால் 2 திராம் சேர்த்துக் கொடுத்துவர குணமாகும்.

(2) கோரோசனமாத்திரை
(3) சுரபூபதி மாத்திரை
(4) பால சுரஹர மாத்திரை
(5) பாலவிநோத சஞ்சீவி மாத்திரை
(6) பாலசஞ்சீவி மாத்திரை
(7) பாலசுரகுடாரி மாத்திரை
(8) பாலசுர விஷஹரமாத்திரை

மேற்படி மாத்திரைகள் கொடுக்ககுணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

தோஷம் **(9)**க்கு:-

மஞ்சள், வசம்பு, அதிமதுரம், முத்தக்காசு, தேவதாரம், கடுக்காய், வகைக்கு விராகனிடை 4 சூர்ணித்து பொடுதலைச்சாற்றால் அரைத்து பருத்திவிதை அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி ஒரு மாத்திரைவீதம் தேன் அல்லது முலைப்பாலில் உரைத்துக் கொடுக்க குணமாகும்.

கணம் **(8)**க்கு:-

(1) கணத்தெண்ணெய் (2) வெங்காய எண்ணெய் (3) வெந்திய எண்ணெய், இந்த எண்ணெய்கள் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் செய்முறைகள் பார்வையிடவும்.

கணசுரத்துக்கு:-

கணத்தெண்ணெய் கொடுக்க குணமாகும். செய்முறை இப்புந்தகத்தில் காண்க.

அதிசாரத்திற்கு:-

ஒரு சாதிக்காயை துளைத்து 2 கிறேன்ஸ் அபினியை அதில் வைத்து மஞ்சளை அரைத்து அதற்கு கவசமிட்டு புடம் போட்டு வெந்தவுடனே மஞ்சளை நீக்கி முலைப்பாலால் ஒரு மணிநேரமரைத்து கடுகுபிரமாணம் மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி ஒரு மாத்திரை வீதம் முலைப்பாலில் உரைத்துக் கொடுத்துவர குணமாகும். அதிகமாய் கொடுத்தால் மயக்கம் காணும், கெடுதி நேரிடும்.

சீதபேதிக்கு:-

(1) கட்டுவாதிச்சூர்ணம் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

(2) வில்வப்பழத்து ஓடு சதையுடன் உலர்ந்ததை நொறுக்கி ஜலத்தில் போட்டுக் காய்ச்சின கசாயத்தில் ஒரு அவுன்ஸ் வீதம் கொடுத்து வர குணமாகும்.

(3) கார்ன் பிளோர் (Corn flour) கஞ்சியைக் கொடுக்க குணமாகும்.

(4) கைநொ சூர்ணம், 5-10 கிறேன்ஸ் ஜலத்தில் கொடுத்துவர குணமாகும்.

(5) குளொரோடின் (Chlorodyne) 5—10 துளி ஜலத்திலாவது அல்லது காசிக்கட்டிக் கசாயத்திலாவது கொடுக்க குணமாகும்.

கரப்பான் **(18)**க்கு:-

(1) கரப்பான் எண்ணெய், (2) உலகோத்தம செந்தூரம் - இவைகள் கொடுக்க குணமாகும். இப்புத்தகத்தில் செய்முறைகள் காண்க.

சிரங்குக்கு:- சந்தனம், நீர் வெட்டிமுத்து வகைக்கு விராகனிடை 5, ஜலத்தால் அரைத்து பூசிவர குணமாகும்.

கால்க்கடுவானுக்கும், மண்டைக்கடுவானுக்கும்:-

(1) ஆமணக்கெண்ணெய்படி ¼ ல் வெங்காயம், வசம்பு, இலுப்பைப் பட்டை, சதுரக்கள்ளிப்பட்டை, பாலப்பட்டை, வகைக்கு விராகனிடை 5 ஜலத்தால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஒரு பாலடை வீதம் 2 நாள் கொடுக்க குணமாகும்.

(2) செம்மரத்தை ஜலத்தால் உரைத்து தடவிவர குணமாகும்.

(3) கோவைக்கொடியை துண்டுகளாக்கி ஒவ்வொரு துண்டின் துவாரத்தில் ஊதினால் வரும் பாலை பூசிவர குணமாகும்.

குளிர் சுரத்துக்கு:-

பாலசுரஹரமாத்திரையை இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துக் கொடுக்க குணமாகும்.

சன்னிக்கும், மாந்தவலிப்புக்கும்:-

(1) பாலசுரஹரமாத்திரை, (2) கஸ்தூரிமாத்திரை (3) சுவர்ண கோரோசனமாத்திரை, (4) அப்பிரேககோரோசன மாத்திரை இவைகள் இப்புஸ்தகத்தில் பார்வையிட்டு செய்துகொடுக்க குணமாகும்.

இசிவுக்கு:-

(1) சுவர்ணகோரோசன மாத்திரை (2) அப்பிரேக கோரோசன மாத்திரை (3) மகாரசபஸ்மம் (4) கஸ்தூரிமாத்திரை இவைகள் கொடுக்க குணமாகும். இப்புத்தகத்தில் பார்வையிட்டு செய்துக் கொடுக்கவும்.

வயிறுஉப்பல், மந்தத்துக்கு:-

உப்பை வறுத்துக்கொட்டின ஒரு சட்டியில் 5 விரா. வேளைப்பூவை போட்டு வறுத்து சிவக்கும்போது 2½ விரா. ஓமத்தைச் சேர்த்து வறுத்து ஜலம் சேர் ½ விட்டுக்காய்ச்சி ¼, சேர் ஆக்கி, அதில் ¼ விரா பெருங்காயத்தைச் சேர்த்து 2-3 பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

வயிற்றுப்பலுக்கு:-

நுணாயிலை ஒருபிடி, ஓமம், மிளகு, சுக்கு, வேப்பிலை வகைக்கு விரா.2, இவைகளில் நுணாயிலையும் வேப்பிலையும் ஒரு சட்டியில் போட்டு வறுத்து சிவக்கும்போது மற்றவைகள் பொடித்துப்போட்டு ஒரு சேர் ஜலமிட்டுக்காய்ச்சி ¼ சேராக்கி அதில் 4 பாலடை வீதம் கொடுத்துவரத் தீரும்.

தொப்புள்புண்ணுக்கு:-

வறுத்த சீனாகாரத்தை தூளாக்கி மேல் போட்டுவர குணமாகும்.

இருமலுக்கும். ரத்தவிருத்திக்கும்:-

¼ படி கோதுமையை ஒரு படி ஜலத்தில் ஒரு நாள் ஊறவைத்து மைபோல் அரைத்து அந்த ஜலத்தில் கரைத்து வடித்துக்காய்ச்சி ¼ சேராக்கி சர்க்கரை (சீனி) சேர் 1, சேர்த்து சுண்டக்காய்ச்சி புன்னைக்காய் அளவு தினம் 2 தடவைக் கொடுத்துவர குணமாகும்.

கபரோகங்களுக்கு:-

அப்பிரேக கோரோசன மாத்திரை இப்புத்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

வயிற்றில் எண்ணெய் தங்கினால்:-

(1) வெந்தியமும் ஜலமும் சேர்த்து கசாயமிட்டு கொடுக்க குணமாகும்.
(2) ஆவாரை வேரும் ஜலமும் சேர்த்து கசாயமிட்டு கொடுக்கத் தீரும்.
(3) ஆமணக்கு வேரும் ஜலமும் சேர்த்து கசாயமிட்டு கொடுக்கத் தீரும்.
(4) நாயுருவி வேரும், ஜலமும் சேர்த்து கசாயமிட்டு கொடுக்கத் தீரும்.

சாம்பல், மண் சாப்பிட்டால்:-

(1) கத்திரிக்காய் சாற்றில் பெருங்காயத்தைச் சேர்த்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர தீரும்.
(2) முள்ளங்கிச்சாற்றில் பெருங்காயத்தைச் சேர்த்துக் கொடுக்கத் தீரும்.
(3) எருமைச்சாணியை ஒரு துணியில்போட்டு பிழிந்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவரத் தீரும்.

பால் உண்ணாவிடில்:-

அதிமதுரத்தை முலைப்பாலால் உரைத்து முலைக்காம்புக்குத்தடவி வாயில் வைத்துக் குடிக்கச்செய்ய பால் குடிக்கும்.

குடித்தபாலை கக்கினால்:-

வெள்ளைப்பூண்டும் ஓமமும் வெதுப்பி கசாயஞ்செய்துக் கொடுத்துவர குணமாகும்.

**வாந்தியை நிற்க:-**

நன்னாரிவேர்ப்பட்டைச் சாற்றில் மயில் இறகு சாம்பல் அல்லது மிளகு, வசம்பு, இவைகளின் சாம்பலை சேர்த்துக் கொடுக்க குணமாகும்.

**ஜலுப்புக்கு:-**

(1) தூதுளைச்சாறு ஒரு பாலடை உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.
(2) துளசிஇலைச் சாறு ஒரு பாலடை உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.
(3) வெற்றிலைச் சாற்றில் குங்குமம் சேர்த்துக் கொதிக்கவைத்து மூக்கு, புருவம் முதலிய இடங்களில் பற்றுப்போட குணமாகும்.
(4) சாதிக்காயை ஜலத்தில் உரைத்து சுடவைத்துப்பற்றுப்போட குணமாகும்.
(5) கோரோசன மாத்திரைக் கொடுக்க குணமாகும்.

**பேதியை நிற்க:-**

மரமஞ்சள், கடுக்காய்ப்பூ, அதிவிடையம், சிறுநாகப்பூ, போஸ்தக்காய், வகைக்கு பலம் 1, சடாமாஞ்சில் பலம் ¼ இவைகளைச் சூர்ணித்து ¼ படி கொதிக்கும் ஜலத்தில் போட்டு 2-3 மணிநேரம் ஊறவைத்து வடித்து 2 பாலடைவீதம் 5-6 மணிநேரத்துக்கு ஒரு தடவை கொடுத்துவர தீரும்.

**பேதி உண்டாக:-**

(1) நாட்டுக்காட்டாமணக்குச் சாறு ஒரு பாலடை கொடுக்க மலங்கழியும்.
(2) ரஸபஸ்மம் 1-2 கிறேன்ஸ் தேனில் கொடுத்து அதின்மேல் வெற்றிலைச் சாற்றில் கோரோசனை உரைத்துக் கொடுக்க மலங்கழியும்.
(3) சிற்றாமணக்கெண்ணெயும் முலைப்பாலும் சமமாக சேர்த்து மிஸ்ரித்துக் கொடுக்க மலம் இறங்கும்.

**பேதி, வாந்தி, வயிற்றுவலி, அஜீர்ணம், மாந்தம் இவைகளுக்கு:-**

ஓமத் தீநீர் (Omum water) ஓமத்தயிலம் (Omum oil) - 2 வீசை ஓமத்தை மெல்லிய துணியில் முடித்து அடியில் படாமல் வாலையில் தொங்கவைத்து 6 படி ஜலம் விட்டு எரித்து 4 படியாக்கி வடித்துக் கொள்ளவும். தீநீரின் மேல் தயிலம் மிதக்கும் கோழி இறகால் அதைசேகரித்துக் கொள்ளவும். ½ முதல் 1 அவுன்ஸ் ஓமத்தீநீரை ½-1 அவுன்ஸ் ஜலத்தில் சேர்த்துக் கொடுக்கவும்; அல்லது 1 முதல் 2 துளி ஓமத்தயிலத்தை சர்க்கரையில் சேர்த்து கொடுக்க குணமாகும்.

**கக்குவானுக்கு:-**

(1) லகுகட்டுவாங்கமாத்திரை
(2) வியாக்கிரியாதி ரசாயனம்
} இவைகளை இப்புஸ்தகத்தில் சொல்லிய படி செய்து கொடுக்க குணமாகும்.

(3) முள்ளு எலிச்சதை, வெளவால்சதை, நத்தைசதை, வேங்கைப்புலியின் கண்டத்தோல் இவைகளில் எதையாகிலும் பசும் நெய்யில் போட்டுக் காய்ச்சி வடித்த நெய் 3-4 விராகனிடை வீதம் கொடுத்து வர குணமாகும்.

(4) மிளகு, மயிலிறகு இவைகளின் சாம்பலை சமமாகச் சேர்த்து ½ விராகனிடை வீதம் பசும்நெய்யில் கொடுக்க குணமாகும்.

*வாய்ரணத்துக்கு:-*

(1) 20 கிறேன்ஸ் படிகாரத்தூள், 1 அவுன்ஸ் தேன் இவைகளைச் சேர்த்து காலை மாலை குழந்தையின் வாய் ரணத்துக்குத் தடவிவர குணமாகும்.

(2) பசும் நெய்யில் கோரோசனை உரைத்து வாய் ரணத்துக்குத் தடவி வர குணமாகும்.

*நீர்க்கட்டுக்கு:-*

வெங்காரத்தைப் பொறித்து 1 முதல் 5 கிறேன்ஸ் (வயதுக்குத் தக்கபடி) முலைப்பாலில் கொடுக்க குணமாகும்.

*நீர்அண்டத்திற்கு:-*

லைகர் அமோனிய அசிடேடிஸ் 2 அவுன்ஸ், நவக்ஷாரம் 1 திராம், ஜலம் 4 அவுன்ஸ், இவைகளைச் சேர்த்து அதில் துணியை நனைத்து மடித்து நீர் அண்டத்தின்மேல் போட்டு அடிக்கடி அதின் மேல் இந்த மருந்தைப் போட்டு ஈரம் கார்க்க குணமாகும் (Mr. Bransby Cooper)

*அண்டவீக்கத்திற்கு:-*

(1) நவக்ஷாரம் 1 அவுன்ஸ், இரட்டித்து வடித்த சாராயம் 1 அவுன்ஸ், ஜலம் 15 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து அதில் துணியை மடித்து நனைத்து நீர் அண்டம், கட்டி இவைகளின் மேல் போட்டு ஈரங்கார்க்க குணமாகும்.

(2) பத்திரக்காளி எண்ணெய்: ஒரு படி ஆமணக்கெண்ணெயில் கழற்சிப் பருப்பு பலம் 4, வெள்ளைப் பூண்டு பலம் 1, மிளகு, சுக்கு, வகைக்கு பலம் ¼, நொச்சியிலை பலம் ½ இவைகளை பசும்பாலாலரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஒரு பாலடை வீதம் 3 நாள் கொடுக்க குணமாகும்.

(3) சிற்றாமணக்கெண்ணெயும் சிற்றாமணக்கு இலையும் சேர்த்து வதக்கிக் கட்ட குணமாகும்.

(4) கழற்சிப்பருப்பு, சுக்கு, சாரணைவேர், முடக்கொத்தான் வேர் வகைக்கு 1 அவுன்ஸ் பொடித்து 12 அவுன்ஸ் ஜலத்தில் போட்டு 6 அவுன்ஸ் கசாயமாகும்படி எரித்து வடித்து ஒரு பாலடை வீதம் தினம் 2 தடவை கொடுக்க குணமாகும்.

# ஸ்திரீகளுக்குக் காணும் ரோகங்களுக்கு அவுஷதங்கள்

## மலட்டுரோகங்களுக்கு அவுஷதங்கள்

| மலடு வகைகள் | மலடு ரோகங்களின் தொகைகள் | புருஷன் ஸ்திரீயுடன் போகஞ் செய்யுங் காலத்தில் ஸ்திரீக்கு காணும் ரோகங்களின் குறிகள் | ஸ்திரீயின் கருகுழியில் உண்டாயிருக்கும் ரோகங்கள் | ரோகங்களை நிவர்தியாக்க மருந்துகள் |
|---|---|---|---|---|
| பெண் மலடு | 1<br>2<br>3<br>4<br>5<br>6 | தலைநோவு<br>சர்வாங்க நோவு<br>நெஞ்சுவலி<br>முதுகு நோவு<br>கண்டச்சதை நோவு<br>ஏப்பங்காணுதல் | பாசி உண்டாயிருக்கிறது<br>வாயு உண்டாயிருக்கிறது<br>சதை வளர்ந்திருக்கிறது<br>கிருமிகள் உண்டாயிருக்கிறது<br>ரத்தங்கட்டியிருக்கிறது<br>மதத்துக் கொழுப்படைந்திருக்கிறது | இவ்வாறு ரோகங்களுக்கும் விழுதி எண்ணெய் சாப்பிட்டுவர குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க. |
| ஆண் மலடு | 1<br>2<br>3 | விந்து தித்திப்பு இராது<br>விந்து ஜலத்திலிட கரைந்து மிதக்கும்<br>மூத்திரத்தில் நுரைகள் கட்டும் | | இம்மூன்று ரோகங்களுக்கும் இப்புஸ்தகத்தில் சொல்லிய தாதுபுஷ்டி அவுஷதங்களைச் சாப்பிட்டு வர தீரும். |

சூதகக்கட்டுக்கு:-

(1) அயச்செந்தூரம் (English-oxide of Iron) ½ திராம், வாலேந்திர பௌலம் 20 கிறேன்ஸ், சுக்குப் பாணிதம் தேவையானது இவைகளைச் சேர்த்து 18 மாத்திரைகளாக்கி 2–3 மாத்திரை வீதம் அந்தி சந்தி கொடுத்துவர தீரும். (Mr. Savory)

(2) காட்டாமணக்குக் கிழங்கை அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர தீரும்.

(3) குருஞ்சாச்சாறும் பசும்பாலும் வகைக்கு ஒருபடி சேர்த்து ஒரு ஆழாக்கு வீதம் 3 நாள் காலையில் கொடுக்க குணமாகும்.

(4) ஏகாதசிருத்திர செந்தூரம்
(5) குமட்டிக்காய்க் குழம்பு
(6) ஸ்ரீதேவி எண்ணெய்
} இவைகளை செய்துகொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க

**சூதகத்தைக் கிரமமாக உண்டாக்க:-**

வெங்காரத்தூள் 15 கிறேன்ஸ், கிராம்புத் தயிலம் ஒரு துளி, வாலேந்திர பௌலம் 12 கிறேன்ஸ், குங்குமப்பூ 3 கிறேன்ஸ் இவைகளை சேர்த்து அரைத்து தினம் 1 அல்லது 2 தடவை கொடுக்க குணமாகும் (Dr. T.Fuller)

**கர்ப்பவெட்டைக்கு:-**

கணத்தெண்ணெய்க்கொடுக்க குணமாகும், செய்முறை இப்புஸ்தகத்தில் காண்க.

## கர்ப்ப ஸ்திரீகளுக்கு 10. மாதங்களில் வரும் கர்ப்ப வலிக்கு அவுஷதங்கள் அடியில் காண்க

| அடியில் கண்ட மாதங்களில் கர்ப்பம் வலித்தால் | அவுஷதங்கள் |
|---|---|
| 1வது மாதத்தில் | தாமரைப்பூ, சந்தனம், விலாமிச்சுவேர் வகைக்கு விரா. 2 அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுக்க குணமாகும். |
| 2வது மாதத்தில் | தக்கோலமும் தாமரைப்பூவும் வகைக்கு விரா.5 சேர்த்து அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும். |
| 3வது மாதத்தில் | வெந்தாமரைப்பூ, செங்கழுநீர்கிழங்கு வகைக்கு விரா.2 அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும். |
| 4வது மாதத்தில் | நெய்தற்கிழங்கும் நொச்சிவேரும் வகைக்கு விரா.3 அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும். |
| 5வது மாதத்தில் | ஆம்பற் பூவும் விலாமிச்சுவேரும் வகைக்கு விரா.3 அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும். |
| 6வது மாதத்தில் | திப்பிலி, திராக்ஷை, நெய்தற்கிழங்கு வகைக்கு விரா.2 அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும். |
| 7வது மாதத்தில் | விலாமிச்சுவேர், சந்தனம், தக்கோலம் வகைக்கு விரா.1 அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்து வர குணமாகும். |
| 8வது மாதத்தில் | தாமரைப்பூ, நெய்தற்கிழங்கு வகைக்கு விரா.2, அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும். |
| 9வது மாதத்தில் | அரசம்பட்டை, மருதம்பட்டை வகைக்கு விரா.3 அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும். |
| 10வது மாதத்தில் | சர்க்கரையும், இலுப்பைப்பூவும் வகைக்கு விரா.2 அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுத்துவர குணமாகும். |

சூதகவாயு, சூசிகாவாயு இவைகளுக்கு:-

(1) குப்பைமேனி, பொற்றலைக்கரிப்பான், சிறுசிருப்படை, நிலவாகைவேர் இவைகளை உலர்த்தி வகைக்கு விரா.5 சேர்த்து சூர்ணித்து திரிக்கடிவீதம் தேனில் 20 நாள் கொடுக்க குணமாகும்.

(2) ஸ்ரீதேவி எண்ணெய் செய்துகொடுக்க குணமாகும்.

சூதகவாயுவுக்கு:-

(1) ஏகாதசிருத்திர செந்தூரம்

(2) போஜனகுடாரி மாத்திரை

(3) அகஸ்தியர் குழம்பு

(4) ஸ்ரீதேவி எண்ணெய் இவைகள்கொடுக்க குணமாகும். இவைகளின் செய்முறைகள் இந்த புஸ்தகத்தில் காண்க.

சூதகவலிக்கு:-

(1) துத்தியிலை, மிளகு, வெள்ளைப்பூண்டு வகைக்கு பலம் 1, வசம்பு விரா.1 இவைகளை ஜலமிட்டு அரைத்து 3 பங்காக்கி மாதாந்திர ருதுகாலமாகிய 3 நாளைக்கும் காலையில் ஒரு பாகம் கொடுக்க குணமாகும்.

(2) விழுதி எண்ணெய்
(3) ஸ்ரீதேவி எண்ணெய்
(4) ரசலிங்க மெழுகு
(5) கும்மட்டிக்காய்க் குழம்பு
} இவைகளைக் கொடுக்க குணமாகும். இவைகளின் செய்முறைகள் இந்த புஸ்தகத்தில் காண்க

கர்ப்பசூலை (6), சூதகவலி, சூசிகாவாயு இவைகளுக்கு:-

(1) கல்லுப்பு சேர் 4, ரசம் சேர் 1, இவைகளை வில்வயிலைச்சாற்றால் நாலு சாமம் அரைத்து உலர்த்தி குகையிலிட்டு உருக்கி எடுத்து அதை அந்தர தாமரையிலைச் சாற்றால் 4 சாமம் அரைத்து பில்லைத் தட்டி உலர்த்தி வராக புடம்போட்டு எடுத்து ஒரு பணவிடை வீதம் தேனில் காலை மாலை 3 நாள் கொடுக்க குணமாகும்.

(2) ஸ்ரீதேவி எண்ணெய் செய்துகொடுக்க குணமாகும்.

சூதக ஜன்னிக்கு:-

(1) இங்கு நவக்ஷாரமது 5 திராம், கர்ப்பூர ஜலம் 5 அவுன்ஸ், குங்குமப்பூ 1½ கிறேன்ஸ், ஜலம் 3 திராம் இவைகளில் குங்குமப்பூவை ஜலத்தில் அரைத்து பின்பு எல்லாஞ்சேர்த்து தினம் 2 பெரியக் கரண்டிவீதம் கொடுத்துவர குணமாகும்.

(2) ஸ்ரீதேவி எண்ணெய்
(3) ஏகாதசிருத்திரசெந்தூரம்
} இவைகளைக் கொடுக்க குணமாகும். செய்முறை இப்புஸ்தகத்தில் காண்க.

கர்ப்பஸ்திரீக்கு காணும் துவாலைக்கு:-

நெய்தற்கிழங்கு, அதிமதுரம், சந்தனம், நன்னாரிவேர், வெள்ளிலோத்திரம்

வகைக்கு விரா. ½ அரைத்து பச்சரிசி கழுநீரில் கொடுக்க குணமாகும்.

மேற்படி துவாலையால் காணும் தாகம், மூர்ச்சைக்கு:-

அரசு, ஆல், மா, அத்தி இவைகளின் கொழுந்தை வகைக்கு 1 அவுன்ஸ் சேர்த்துக் கசாயம் செய்து ¼ சேர்வீதம் கொடுக்க குணமாகும்.

கர்ப்பஸ்திரீயின் சுரத்துக்கு:-

(1) சிற்றாமுட்டிவேர், பேராமுட்டிவேர், சீந்திற்கொடி, திப்பிலி, சுக்கு, நிலவேம்பு வகைக்கு விரா.1 பொடித்துப்போட்டுக் கசாயம் செய்து ¼ சேர் வீதம் தினம் 2 தடவைக் கொடுத்துவர குணமாகும்.

(2) குவைனா பில்ஸ் (Quina Pills) கொடுக்க குணமாகும். இதன் செய்முறை இந்த புஸ்தகத்தில் காண்க.

கர்ப்பஸ்திரீயின் நீர் சுரப்புக்கு:-

நன்னாரிவேர் அல்லது ரோஜாப்பூ விரா.3 போட்டு கசாயம் செய்துக் கொடுக்க குணமாகும்.

கர்ப்பவாயுக்கு:-

விழுதி எண்ணெய் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

கர்ப்பத்திலுண்டாகும் புழுக்களுக்கு:-

விழுதி எண்ணெய் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

கர்ப்பஸ்திரீயின் கல் அடைப்புக்கு:-

(1) பசும்பாலால் மாதுளம்பழத்து விதையை அரைத்து ஒரு திராம் வீதம் கொடுத்துவர குணமாகும்.

(2) சிவப்பு நெருஞ்சியை முலைப்பாலால் அரைத்து ஒரு திராம் வீதம் கொடுத்துவர குணமாகும்.

முலைக்காம்பு ரணத்துக்கு:-

வெங்காரம் 1 திராம், சாராயம் 4 திராம், ஜலம் 3¼ அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து அதில் துணியை நனைத்து ரணத்தின் மேல் போட குணமாகும்.

முலைக்காம்பு வெடிப்புக்கு:-காசிக்கட்டி பாவனத்திரவம் தடவிவர குணமாகும்.

ஸ்தன்னியகட்டிக்கு:-

நவக்ஷாரம் 1 திராம், பந்நீர் 1 பையின்ட் இவைகளைச் சேர்த்து அதில் துணியை நனைத்து கட்டியின்மேல் போட்டுவர குணமாகும்.

குய்யத்தில் காணுந்தினவுக்கு:-

நவக்ஷார ஜெயநீர் ½ முதல் 1 திராம் ஒரு பையின்ட் ஜலத்தில் கரைத்து குய்யத்தில் அடிக்க குணமாகும்.

*பிரசுதிகாவாயு மந்தப்பட்டல்:-*

ஏர்கோட் 20 முதல் 40 கிறேன்ஸ், வெங்காரம் 10 கிறேன்ஸ், லவங்கப்பட்டை ஜலம் 1½ அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து பிரசுதிகாவாயு மந்தப்பட்டதற்குக் கொடுக்கவும் (Dr. Rigby)

**வயிற்றில் பிள்ளை பிழைத்திருப்பதை அறிய:-**

வயிற்றில் பசும் வெண்ணெய்யைத் தடவ, அது உருகினால் பிழைத்திருக்கிறதென்றும் உருகாவிட்டால் இறந்ததென்று அறிக.

**வயிற்றில் இறந்த பிள்ளைவிழ:-**

(1) நிலக்குமிழம் பட்டையை ஜலத்தால் அரைத்துக் கொடுக்க விழும்.

(2) பிரண்டைவேரும் குருஞ்சாவேரும் வகைக்கு விரா.5 அரைத்து வயிற்றில் பூச விழும்.

(3) உத்தாமணிவேரை விரா ½ அரைத்து பசும்பாலில் கரைத்துக் கொடுக்க விழும்.

**நஞ்சுக்கொடி விழ:-**

கருவேப்பிலை, வேப்பம், முருங்கை இவைகளின் கொழுந்து வகைக்கு 1 அவுன்ஸ் சேர்த்து அத்துடன் ஒரு கடுக்காய் நொறுக்கிச்சேர்த்து ஒரு படி ஜலத்தில் கரைத்து 1/8 படியாக்கிக் கொடுக்கவிழும்.

**பிரசவித்த ஸ்திரீயின் சுவாசத்துக்கு:-**

(1) முருங்கைப்பட்டை, கழற்சிப்பருப்பு, பனைவெல்லம் வகைக்கு விரா.1 சேர்த்து மைப்போல இடித்து பாக்களவு கொடுத்துவர தீரும்.

(2) கழற்சிப்பருப்பு, பனைவெல்லம் வகைக்கு விரா.2 சேர்த்து மைப்போல இடித்து தினம் 2 தடவை ஒரு விரா. வீதம் கொடுத்துவர குணமாகும்.

(3) சந்தனம், அதிமதுரம், கோஷ்டம், சாஸ்திரபேதி, தக்கோலம், முல்லை வேர், கோரைக்கிழங்கு, விலாமிச்சுவேர், வெட்டிவேர், நெல்லிப் பருப்பு, இவைகளை வகைக்கு விரா, 5 சேர்த்து இளநீர் ஜலத்தால் அரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி ஒரு மாத்திரை வீதம் தீநீரில் கரைத்து 12 நாள் கொடுக்கத் தீரும்.

**பிரசவித்தஸ்திரீயின் கீழ்வயிறு, மார்பு, சிரசு இவைகளின் குத்தல், நோவுக்கு:-**

ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை இவ்வாறும் வகைக்கு விரா. 2 சேர்த்து உலர்த்தி சூர்ணித்து 3 விரா. வீதம் வெல்லம் அல்லது கழுநீர் இவைகளிலெதிலாகிலுஞ் சேர்த்து 2 தடவை கொடுக்க குணமாகும்.

*பிரசவித்த ஸ்திரீக்கு 3. வது மாதத்தில் காணும் ஆமாசயஸ்தானத்தின் ருகைஷ்க்கு:-*

அதிவிடையம், சிற்றாமுட்டிவேர், சந்தனக்கட்டை, பற்படாகம், வெட்டிவேர், சீந்தில் தண்டு, பூனைப்புழுக்கம்வேர், கொத்தமல்லி விதை வகைக்குப்பலம் 1 சேர்த்து நாலுபடி ஜலத்தில் போட்டு எரித்து 1 படியாக்கி, 1/8 படி வீதம் அந்தி சந்தி 2 தடவை குணமாகும் வரையில் கொடுத்துவரவும்.

*பிரசவித்த ஸ்திரீயின் மார்பில் பால் சுரக்க:-*

(1) பார்லே அரிசிக் கஞ்சியை கொடுத்துவர பாலுண்டாகும்.

(2) 5 விரா, தோல்நீக்கின வெள்ளைப்பூண்டை 1-2 சேர் பசுவின்பாலில் போட்டு வேகவைத்துக் கடைந்து அத்துடன் ஏலரிசித்தூள் விரா.1, சீனி விரா.5 சேர்த்து பாயசம் போல் செய்து தினம் காலை 6 மணிக்கு கொடுத்து 3-4 மணி நேரம் சென்று போஜனம் செய்து வர பால் உண்டாகும்.

(3) சிற்றாமணக்கு இலையை வதக்கி மார்பில் போட பால்சுரக்கும்.

*பிரசவித்த ஸ்திரீயின் மார்பின் பாலை வறண்டுபோக:-*

(1) மல்லிகைப்பூ அல்லது கோளிகீரை, வைத்துக்கட்ட பால் வறண்டு போகும்.

(2) செம்மரத்தை உரைத்தாவது அல்லது துவரம் பருப்பை உரைத்தாவது, பெல்லிடொனா சத்துவும், கிளிஸரின் எண்ணெயும் சேர்த்தாவது பற்றுப்போட, மார்புவீக்கத்தின் நோய்தீரும், பால் வறண்டு போகும்.

*பிரசவித்த ஸ்திரீயின் வயிற்றுவலிக்கு:-*

அபினிப்பாவனத்திரவம் 15 முதல் 20 துளி ஜலத்தில் கொடுக்க குணமாகும்.

## ☞ சுரங்கள் (64)க்கு அவுஷதங்கள்

இதுவரையிலும் குழந்தைகளுக்கும் ஸ்திரீகளுக்கும் உண்டாகும் ரோகங்களில் சில ரோகங்களுக்கு அவுஷதங்கள் சொல்லலாயிற்று. இனி சொல்லப்படும் அவுஷதங்கள் புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் கொடுக்கலாம்.

*சுரங்கள் 64க்கு:-*

(1) சந்திரோதய மாத்திரை
(2) திரிலோகரக்ஷாமணி மாத்திரை
(3) லிங்கசெந்தூரம்
(4) ரசசெந்தூரம்

(5) பயிரவமாத்திரை
(6) சுரபூபதி மாத்திரை
(7) பானுபிரகாச மாத்திரை
(8) பாஷாண மாத்திரை
(9) ரசலிங்க மாத்திரை
(10) தாளக மாத்திரை
(11) ரசகர்ப்பூர மாத்திரை
(12) லிங்கமாத்திரை
(13) கஸ்தூரி மாத்திரை
(14) சுவர்ணகோரோசன மாத்திரை
(15) அப்பிரககோரோசன மாத்திரை
(16) நமசிவாய செந்தூரம்
(17) வீரபத்திரசிந்தாமணி
(18) பஞ்சாக்ஷர செந்தூரம்
(19) உலகோத்தம செந்தூரம்
(20) ரசபயிரவ செந்தூரம்
(21) ஏகாதசிருத்திர செந்தூரம்
(22) தாளக பஸ்மம்
(23) துருசி பஸ்மம்
(24) பவள பஸ்மம்
(25) மகா ரசபஸ்மம்
(26) ரசகர்ப்பூரக்கட்டு
(27) பாஷாணக்கட்டு
(28) லிங்கமெழுகு
(29) வீரமெழுகு
(30) பாஷாணமெழுகு
(31) லிங்கக்குழம்பு
(32) கும்மட்டிக்காய்க்குழம்பு
(33) ராஜவில்வாதி லேகியம்
(34) ராஜமார்த்தாண்டலேகியம்

இவைகள் இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும். அன்றியும் 14-16-17-19 இந்த அத்தியாயங்களில் சொல்லிய அவுஷதங்களை புத்தியால் ஒன்றோடொன்று சேர்த்து மிக்ஸ்செர் செய்து கொடுப்பதால் அதிசீக்கிரத்தில் குணமாகும்.

**உள்சுரத்துக்கு:-**

(1) லைகர் அமோனிய அசிடெடிஸ் 2 திராம், கர்ப்பூரஜலம் 6 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து 6 மணிக்கொருதரம் 2 அவுன்ஸ் வீதம் கொடுக்க குணமாகும். (Dr. Ainslie)

(2) சாஸ்திரபேதி தூள், சீனி வகைக்கு விரா. 1, பசும்பாலைக்காய்ச்சி அதில் போட்டு காலையில் 5 நாள் கொடுத்துவர குணமாகும்.

**தாபசுரத்துக்கு:-**

(1) இந்த புஸ்தகத்தில் சொல்லிய அர்த்த நாரீஸ்வரன் மாத்திரைக் கொடுக்க குணமாகும்.

(2) நெல்லிவற்றல், வெட்டிவேர், கோஷ்டம், அதிமதுரம், விலாமிச்சு வேர், முத்தக்காசு, சந்தனம், நெற்பொரி வகைக்கு விரா. 2½ சூர்ணித்து ½ படி இளநீர் ஜலத்தில் கரைத்து 1/8 படி ஆகும்படி எரித்த கசாயத்தில் பாதி காலையிலும், பாக்கி பாதி மாலையிலும் கொடுக்க குணமாகும்.

**குளிர்சுரத்துக்கு:-**

(1) அபினி பாவன திராவமும் ஸோப்லினிமேண்டும் சமனிடையாகச் சேர்த்து நடுமுதுகில் தேய்த்தால் குழந்தையின் குளிர்சுரத்தின் குளிர் நிற்கும்.

(2) அபினி பாவன. திரவம் 60 துளி, ஸல்பியுரிக் ஈதர் 1 திராம், கர்ப்பூரஜலம் 1 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து குளிர்வரும் போது கொடுக்க குளிர் நிற்கும்.

(3) மிளகு 40 கிறேன்ஸ், பெருங்காயம் 20 கிறேன்ஸ், கழற்சிப்பருப்பு 100 கிறேன்ஸ், தேன் தேவையானது இவைகளைச் சேர்த்து மைபோலரைத்து 30 மாத்திரைகளாக்கி பெரியவருக்கு 2 மாத்திரையும் சிறியவருக்கு 1 மாத்திரையும் தினம் 2-3 தடவை கொடுத்துவர குணமாகும்.

(4) குவைனா 4 முதல் 20 கிறேன்ஸ் (சுரம் வருவதற்குமுன்) குல்கந்து சேர்த்து மாத்திரை ரூபமாகவாவது அல்லது ஒரு பீங்கானில் போட்டு விளாவின கந்தக திராவகம் 5 துளிவிட்டு மிஸ்ரித்து பின்பு அத்துடன் ஒரு அவுன்ஸ் பெப்பர்மெண்டு ஜலத்தை அல்லது சுத்த ஜலத்தை விட்டு சேர்த்துக்கொடுத்துவர குணமாகும்.

(5) ரசமாத்திரை
(6) அர்த்த நாரீஸ்வரன் மாத்திரை
(7) பாலசுரஹர மாத்திரை
(8) சுரகுடாரி மாத்திரை
(9) தாளகக்கட்டு
(10) அகஸ்தியர் குழம்பு

இவைகளை செய்துகொடுக்க குணமாகும்.

விஷசுரத்துக்கு:-

(1) சர்க்கரைப்பாகு 2 அவுன்ஸ், வெந்நீர் 14 அவுன்ஸ், விளாவின கறிஉப்பு திராவகம் 1 திராம் இவைகளைச் சேர்த்து 1 அவுன்ஸ் முதல் 2 அவுன்ஸ் வீதம் கொடுத்துவர குணமாகும் (Dr. Gregory)

(2) விளாவின கறிஉப்பு திராவகம் 1 திராம், பார்லி அரிசி கஞ்சி 1 பையிண்டு, சர்க்கரை ½ அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து 2 முதல் 4 அவுன்ஸ் வீதம் தினம் 2-3 தடவை கொடுத்துவர குணமாகும்.

(3) நிலவேம்பு, பேய்ப்புடல், ஆடாதோடையீர்க்கு, பேய்ப்பீர்க்கம்வேர், வெட்பாலையரிசி வகைக்கு விரா.2 பொடித்து ½ படி ஜலத்தில் போட்டு எரித்து நாலிலொன்றாக்கின கசாயத்தைக் கொடுத்துவர குணமாகும்.

(4) நிலவேம்பு, பேய்ப்புடல், வேப்பம்பட்டை, சீந்திற்கொடி, சுக்கு, கடுக்காய், வகைக்கு விரா.10, பொடித்து 2 படி ஜலத்தில் போட்டு எரித்து நாலிலொன்றாக்கி ½ சேர் வீதம் கொடுத்து வர குணமாகும்.

பழய சுரத்துக்கு:-

(1) இந்த புஸ்தகத்தில் சொல்லிய அர்த்த நாரீசுவரன் மாத்திரை கொடுக்க குணமாகும்.

(2) பற்படாகம், சிறுதேக்கு, கோஷ்டம், சீந்திற்கொடி, திப்பிலி, ஆடாதோடை, முத்தக்காசு, நிலவேம்பு, சுக்கு, சிறுகாஞ்சோரி வகைக்கு விரா.10 பொடித்து 8 படி ஜலத்திலிட்டு எரித்து ஒரு படியாக்கி 1/10 படிவீதம் கொடுத்துவர குணமாகும்.

அஸ்திசுரத்துக்கு:-

(1) மகா கூழ்பாண்டலேகியம்
(2) ரஸபஸ்மம்
(3) அப்பிரகபஸ்மம்
(4) ராஜ அப்பிரேக செந்தூரம்
(5) வீரபத்திரசிந்தாமணி
(6) அர்த்தநாரீஸ்வரன் மாத்திரை
(7) மகா சந்தநாதித்தயிலம்
(8) ராஜாங்க கொம்பரக்குத் தயிலம்
(9) மகா அசுவகந்திசூர்ணம்
(10) மகாதாளிசப்பத்திரி சூர்ணம்

இவைகளை இப்புத்தகத்தில் சொல்லியபடி செய்துகொடுக்க குணமாகும்.

அசாத்திய சுரத்துக்கு:-

(1) இந்த புஸ்தகத்தில் சொல்லிய அகஸ்தியர் குழம்பு கொடுக்க குணமாகும்.

(2) தேவதாரம், சுக்கு, கொத்தமல்லி, வகைக்கு விரா.10 சேர்த்து பொடித்து ஒருபடி ஜலத்தில் போட்டு எரித்து கால்படியாக்கி, இதில் நாலிலொருபாகம் தினம் 2 தடவைக் கொடுத்து வரத்தீரும்.

அதிசார சுரத்துக்கு:-

(1) அர்த்த நாரீஸ்வரன் மாத்திரை கொடுக்க குணமாகும்.

(2) வில்வப்பழச்சதை, நிலவேம்பு, முத்தக்காசு, மாம்பட்டை, சுக்கு, பெருமரத்துப்பட்டை வகைக்கு விரா. 10, பொடித்து 2 படி ஜலத்திலிட்டு ½ படி ஆகும்படி எரித்து வடித்து 1/16 படி வீதம் கொடுத்துவர குணமாகும்.

நடுக்கல்சுரத்திற்கு:-

(1) சுக்கு, கோஷ்டம், தேவதாரம், கடுக்காய், பற்படாகம், குமிழ்வேர் சிறுதேக்கு, கண்டங்கத்திரி வகைக்கு விரா.5 வீதம் சேர்த்து பொடித்து ஒருபடி ஜலத்தில் போட்டு 1/8 படியாகும்படி எரித்துக் கொடுக்க குணமாகும்.

(2) மிளகு விரா.5, பொடித்து கால்படி ஜலத்திலிட்டு எரித்து 1/16 படியாக்கி கொடுக்க குணமாகும்.

அஜீர்ண சுரத்திற்கு:-

(1) சுக்கு, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், பேராமுட்டி, சிற்றாமுட்டி வகைக்கு விரா.1 பொடித்துப்போட்டு கசாயம் செய்து கொடுக்க குணமாகும்.

(2) ஓமம், வசம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், சங்கம்வேர், சித்திர மூலம், திப்பிலிமூலம், வகைக்கு விரா.1 பொடித்து 2 சேர் ஜலத்தில் போட்டு ½ சேர் ஆகும்படி எரித்துக் கொடுக்க குணமாகும்.

விடாதசுரத்திற்கு:-

மிளகு விரா. ½ அவுரிவேர் விரா.1, இவைகளை அரைத்து தீநீரில் கரைத்து அதில் சுண்ணாம்பு ½ பணவிடை போட்டு மிஸ்ரித்துக் கொடுத்துவர குணமாகும்.

வாதசுரத்திற்கு:-

| | |
|---|---|
| (1) அர்த்த நாரீஸ்வரன் மாத்திரை<br>(2) அகஸ்தியர் குழம்பு | இவைகளைக் கொடுக்க குணமாகும், இந்த புஸ்தகத்தில் காண்க. |

பித்த சுரத்திற்கு:-

(1) சுக்கு, கிராம்பு, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, கொத்துமல்லிவிதை, வகைக்கு விரா. 5 பேய்ப்புடல் விரா. 20 இவைகளைப் பொடித்து ஜலத்திலிட்டுக் கசாயம் செய்து அத்துடன் கொஞ்சம் தேன்விட்டு 2 அவுன்ஸ் வீதம் காலை மாலை கொடுத்துவர குணமாகும்.

| | |
|---|---|
| (2) ரசபயிரவசெந்தூரம்<br>(3) அகஸ்தியர் குழம்பு | இவைகளைக் கொடுக்க குணமாகும். |

சிலேஷ்ம சுரத்திற்கு:-

(1) செம்முள்ளி, சுண்டை, தூதுளை, கண்டங்கத்திரி இவைகளின் வேர்கள், சுக்கு, வகைக்கு விரா.6, பொடித்து 2 படி ஜலத்தில் போட்டு எரித்து ¼ படியாக்கி 1/16 படிவீதம் தினம் 2 தடவை கொஞ்சம் திப்பிலித்தூள் சேர்த்துக் கொடுக்க குணமாகும்.

(2) ரசபயிரவ செந்தூரம். (3) அர்த்த நாரீஸ்வரன் மாத்திரை (4) அகஸ்தியர் குழம்பு இவைகளைக் கொடுக்க குணமாகும்.

திரிதோஷசுரம், விஸ்பொடக சுரம் இவைகளுக்கு:-

லைகர் அமோனியா அசிடெடிஸ் 2 அவுன்ஸ், ஸ்பிரிட் ஈதர் நைட்ரஸ், வைன் ஆண்டிமோனி வகைக்கு 2 திராம், சுத்தஜலம் 4½ அவுன்ஸ் இவைகள் சேர்த்து 1½ அவுன்ஸ் வீதம் தினம் 2-3 தடவைக் கொடுக்க குணமாகும்.

மூன்றாம் நான்காம் முறை சுரத்திற்கு:-

(1) சுரம் வருமுன் 15 முதல் 25 கிறேன்ஸ் குவைனாவில் 5 துளி விளாவின கந்தகத் திராவகத்தை விட்டு 2 அவுன்ஸ் ஜலத்தில் மிஸ்ரித்துக் கொடுக்க குணமாகும்.

(2) இந்த புஸ்தகத்தில் சொல்லிய மனோசிலை மாத்திரைக் கொடுக்க குணமாகும்.

*மாறல் சுரத்திற்கு:-* மேற்படி குவைனா மிக்ஸ்சேர் கொடுக்க குணமாகும்.

*சந்நிபாதசுரம் (சந்நி–13) க்கு:-*

(1) உலகோத்தம செந்தூரம்
(2) ராஜ அப்பிரேக செந்தூரம்
(3) ரசவீர செந்தூரம்
(4) நமசிவாய செந்தூரம்
(5) மகா ரசபஸ்மம்
(6) வீரபஸ்மம்
(7) அப்பிரேக பஸ்மம்
(8) துரிசு பஸ்மம்
(9) வீர செந்தூரம்
(10) ருத்திர செந்தூரம்
(11) லிங்க செந்தூரம்
(12) ரச செந்தூரம்
(13) திரிவிக்கிரம ரச செந்தூரம்
(14) ரசபயிரவ செந்தூரம்
(15) ஏகாதசிருத்திர செந்தூரம்
(16) சுவர்ணகோரோசன மாத்திரை
(17) அப்பிரேககோரோசன மாத்திரை
(18) பயிரவ மாத்திரை
(19) பானுபிரகாச மாத்திரை
(20) கஸ்தூரி மாத்திரை
(21) மனோசிலை மாத்திரை
(22) ஆனந்தபயிரவ மாத்திரை
(23) திரிலோகசூடாமணி மாத்திரை
(24) சந்திரோதய மாத்திரை
(25) சித்தாநந்த பயிரவ மாத்திரை
(26) ரசாநந்தபயிரவ மாத்திரை
(27) வாதராக்ஷச மாத்திரை
(28) லிங்கக்கட்டு
(29) பாஷாணக்கட்டு
(30) வீரக்கட்டு
(31) வீரமெழுகு
(32) லிங்கமெழுகு
(33) பாஷாணமெழுகு
(34) அகஸ்தியர் குழம்பு
(35) லங்கேசுவர ரச நஸ்யம்
(36) சர்வேசுவர ரச நஸ்யம்

இவைகளில் எதைக் கொடுத்தபோதிலும் குணமாகும். இவைகளின் செய்முறைகள் இந்த புஸ்தகத்தில் காண்க.

(37) குளோரெட் ஆப் பொடாஷ் 8 கிறேன்ஸ், கறிஉப்பு 20 கிறேன்ஸ், பைகார்பொனெட் ஆப் சோடா 30 கிறேன்ஸ் இவைகளை சேர்த்து பொடிசெய்து 2-3 மணிக்கு ஒரு தடவை ஜலத்தில் கொடுக்க குணமாகும்.(Dr. Stevens)

*யானைக்கால் சுரத்துக்கு:-*

சீந்திற்கொடி கஷாயத்தை தினம் காலையில் சாப்பிட்டுவர குணமாகும். இதை விடாமல் சாப்பிட்டால் நின்றுவிடும்.

*யானைக்கால் சுரம், குஷ்டம் இவைகளுக்கு:-*

வெள்ளைப் பாஷாணம் 1 கிறேன், மிளகு 30 கிறேன்ஸ், தேன் தேவையானது இவைகளை சேர்த்து 10 மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் 3 தடவை கொடுக்க குணமாகும்.

*யானைக்கால் ரோகம், அதின் சுரம் - பாம்புக்கடி இவைகளுக்கு:-*

வெள்ளைப் பாஷாணம் 6 கிறேன்ஸ், மிளகு 1 திராம், விளாம்பிசின் தேவையானது இவைகளைச் சேர்த்து 90 மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் காலை மாலை கொடுக்க குணமாகும்.

*உஷ்ணசுரத்திற்கு:-*

ஒரு அவுன்ஸ் வில்வவேர் பட்டையை ஒரு பையிண்டு ஜலத்தில் போட்டுக் காய்ச்சி ½ பயிண்டு ஆக்கி 1/8 ஆழாக்கு வீதம் தினம் 1-2 தட்வை கொடுக்க குணமாகும்.

*சுரத்தில் வியர்வை பிறப்பிக்க:-*

(1) நவக்ஷார உப்பு 20 கிறேன்ஸ், எலுமிச்சம்பழச்சாறு 6 திராம், டொலுப்பாணிதம், சாதிக்காய்பாவன திரவம் வகைக்கு ½ திராம், இவைகளைச் சேர்த்துக் கொடுக்கவும்.

(2) லைகர் அமோனியா அசிடெடிஸ் 3 திராம், கர்ப்பூரஜலம் 15 அவுன்ஸ், வெடி உப்பு 4 கிறேன்ஸ், ஆரஞ்சிதோல்பாணிதம் 1 திராம், இவைகளைச் சேர்த்துக் கொடுக்கவும்.

(3) பொட்டாஷ் கார்போனேட் 10 கிறேன்ஸ், கர்ப்பூர ஜலம் 12 திராம், எலுமிச்சம்பழச்சாறு 2 திராம் இவைகளைச் சேர்க்க பொங்கும் போது சாப்பிடவும்.

(4) வெடி உப்பு 20 கிறேன்ஸ், நவக்ஷாரம் 12 கிறேன்ஸ், ஜலம் 3 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து தினம் 2-3 தடவைக் கொடுக்கவும் (Dr. Thomas)

(5) பொட்டிலுப்பு 1½ திராம், வாந்தி உப்பு 1 கிறேன், ரசபஸ்மம், 4 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து ஒரு தடவைக்கு எட்டிலொரு பாகம் 2 மணிக்கொருதரம் கொடுத்து வரவும் (Dr. Dewees)

*சுரத்தில் உஷ்ணம் தணிவதற்கு:-*

(1) நவக்ஷாரம் 1 அவுன்ஸ் இரட்டித்து வடித்த சாராயம் 1 அவுன்ஸ், ஜலம் 15 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து உடம்பின்மேல் துவட்டவும்.

(2) வெடியுப்பு 5 அவுன்ஸ், நவக்ஷாரம் 5 அவுன்ஸ், ஜலம் 16 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து உடம்பின் மேல் துவட்டவும். (Sir. A. Cooper)

*சுரத்தில் தாகம் தணிக்க:-*

(1) வெடியுப்பு 10 கிறேன்ஸ், சர்க்கரை 20 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து ஒரு ஒயின் கிளாஸ் பெப்பர்மெண்டு ஜலத்தில் கரைத்துக் கொடுக்கவும். (D.R., Druitt)

(2) திராக்ஷ உப்பு ½ அவுன்ஸ், சர்க்கரை 4 அவுன்ஸ், எலுமிச்சம்பழ ரசம் ½ அவுன்ஸ், தீநீர் 3 பையிண்டு இவைகளைச் சேர்த்து 1-2 அவுன்ஸ் வீதம் கொடுத்துவரவும்.

(3) குளோரெட் ஆப் பொட்டாஷ் ஒரு திராம், ஜலம் 1 பையிண்டு இவைகளைச் சேர்த்து சன்னி பாத சுரம், விடாத சுரம் இவைகளில் காணும் தாகத்துக்குக்கொடுக்கவும் (Dr. Watson).

## நேத்திர ரோகங்கள் 94-க்கு அவுஷதங்கள்

*நேத்திர ரோகங்கள் **94**க்கு:-*

(1) சிறுகீரை, பூலா, பொன்னாங்காணி,இவைகளின் வேர், துத்தம், துருசி, திப்பிலி, புளியம் பூ இவைகள் வகைக்கு விராகனிடை 5, சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் மைபோலரைத்து நீண்ட மாத்திரைகள் செய்து உலர்த்தி மேற்படி பழச்சாற்றால் உரைத்துக் கண்ணிலிட குணமாகும்.

(2) அமிர்தவல்லித் தயிலம். (3) மகா மிருகாமலத் தயிலம்

(4) அயச்செந்தூரம் இவைகளால் குணமாகும். செய்முறைகள் இப்புஸ்தகத்தில் காண்க. இன்னும் அனேக மருந்துகள் 14வது, 16 வது அத்தியாயங்களில் காணலாம்.

(5) பால் துத்தம் பலம் ½, துரிசு பலம் 1, வெள்ளை சங்கு பலம் 2, இவைகளை கல்வத்தில் போட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் மைபோலரைத்து நீளமாய் கயிறுபோல் மாத்திரைகள் செய்து உலர்த்தி முலைப்பாலில் உரைத்து கண்ணிலிட குணமாகும்.

*கண்புழுவட்டு–துர்மாமிசம்–பூவிழுதல்–ஜலம் வடிதல்–இவைகளுக்கு:–*

ஜெரிகை வெள்ளியை உருக்கி அரத்தால் ராவின பொடி விராகனிடை 10 சுத்திசெய்து, ஜாதிஇலை (பிச்சி இலை) சாற்றால் 4 ஜாமம் அரைத்து பசும் வெண்ணெயில் கலந்து பீங்கானில் வைத்துக் கொண்டு, கண்ணில் மையிடுவதுபோலிட குணமாகும்.

*கண்சிவப்புக்கு:-*

(1) நவக்ஷாரத்தை ஜலத்தில் கரைத்து அதில் அலிஸிவிதை மாவைச் சேர்த்து போல்டிஸ் செய்து கண்களின்மேல் வைத்துக் கட்ட குணமாகும். (Tyrrell)

(2) பிரமதண்டு செடியின் பாலை கண்ணிலிட குணமாகும்.

*கண்ணில் இறங்கும் மேகநீர் போக:-*

காளித் தயிலத்தை இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து ஸ்நானஞ் செய்து வர குணமாகும்.

*கண் எரிவுக்கு:-*

(1) மகா சந்தனாதித் தயிலம்
(2) நெல்லிக்காய் தயிலம்
(3) பொன்னாங்காணித்தயிலம்

} இவைகளை புஸ்தகத்தில் பார்வையிட்டு, ஸ்நானஞ் செய்துவர குணமாகும்.

*அந்திமாலை:-*

(1) மகா மிருகாமலத் தயிலத்தை செய்து ஸ்நானஞ்செய்து வர குணமாகும்.

(2) மிளகை வெள்ளாட்டுப் பித்தப் பையில் கொண்டமட்டும் செலுத்தி ஜலம் வெளியே வராமல் வாயைத் தைத்து நிழலில் தூக்கிக் கட்டி வைத்து மிளகு உலர்ந்த பிறகு ஒரு மிளகை ஜலத்தால் உரைத்து தினம் 2 தடவை கண்ணிலிட குணமாகும். இதை ½-1 மண்டலம் கண்ணிலிட வேண்டியது.

கண்ணோவுக்கு:-

(1) லைகர் அம்மோனிய அஸிடேடிஸ் 2 அவுன்ஸ், அபினி பாவனத்திரவம் 1 திராம், பன்னீர் 6 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து அதில் துணியை மடித்து நனைத்து கண்களின் மேல் போட குணமாகும்.

(2) 3 கிறேன்ஸ் படிகாரத்தை 1 அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து குழந்தையின் கண்ணோவுக்கு தினம் தினம் 4-5 தடவை கண்ணிலிடவும், கண்களைக் கழுவவும், அல்லது துணியை மடித்து நனைத்து கண்களின் மேல் போடவும். பெரியவர்களுக்கு அதிகமாய் சீனா காரத்தை சேர்த்துக்கொண்டு ஜலத்தை கண்ணிலிட குணமாகும்.

(3) போஸ்காயும், துத்தியிலையும் ஓரளவாக ஜலத்தில் போட்டு காய்ச்சி சுடச்சுட ஒற்றடம் கொடுக்க குணமாகும்.

இன்னும் அனேக மருந்துகள் 14-16 அத்தியாயத்தில் காண்க.

கண்குளிர்ச்சிக்கு:-

4 பலம் சிற்றாமணக்கு வேரை அரைத்து 1 படி பசும்பாலில் சேர்த்துக் காய்ச்சி உரைக்குத்தி கடைந்தெடுத்த வெண்ணையை கண்ணிலிட கண்கள் குளிர்ச்சியாகும்.

கண் ரெப்பை வீக்கத்திற்கு:-

(1) பசும்பாலைக்காய்ச்சி சுடச்சுட ஒற்றடம் கொடுக்க குணமாகும்.

(2) மிளகை ஜலத்தால் உரைத்துத் தடவிவர குணமாகும்.

(3) சங்குவை கறுவேப்பிலைச் சாற்றாலுரைத்துத் தடவிவர குணமாகும்.

கண் அமரத்திற்கு:-

துரிசுக்கட்டியை ரெப்பைக்குள் தடவி வர குணமாகும்.

கண்சிவப்பு - பூ இவைகளுக்கு:-

புளியம்விதைத்தோல், தேற்றாவிதை, கடுக்காய்தோல் வகைக்கு விரா. 1 மைபோலரைத்து துணியில் போட்டு முடித்து பசும்பாலில் ஊறவைத்துக் கண்ணில் பிழிந்தால் குணமாகும்.

கண்புகைச்சலுக்கு:-

(1) பவள பஸ்மம்

(2) மகாசந்தனாதித் தயிலம்

(3) மகா அசுவகெந்தி பலாலாக்ஷாதித் தயிலம்

(4) முசுமுசுக்கைத் தயிலம்

இவைகளை இப்புத்தகத்தில் சொல்லியபடி செய்து உபயோகிக்க குணமாகும்.

**கண் வாயுதீர:-**

கருஞ்செம்பை தயிலத்தை செய்து ஸ்நானஞ்செய்து வர குணமாகும்.

**கண்படலம் 7க்கு:-**

(1) கையாந்தகரைத் தயிலம்
(2) நெல்லிக்காய்த் தயிலம்
} இவைகளை ஸ்நானஞ்செய்து வர குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

**கண்காசம் 6க்கு:-**

(1) கையாந்தகரைத் தயிலம்
(2) நெல்லிக்காய்த் தயிலம்
(3) மகாமிருகாமலத்தயிலம்
} இவைகளை இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து ஸ்நானஞ் செய்துவர குணமாகும்.

(4) வெள்ளைப்பூண்டை கோமூத்திரத்தில் அரைத்து இராத்திரியில் படுக்கைக்குப் போகும்போது சிரசின் மேல் 7 நாள் பற்றுப்போட குணமாகும். பெருங்காயத்தை நீக்கி இச்சாபத்தியமாயிருக்கவும்.

(5) சமுத்திரத்தில் உள்ள ஆமையின் ஓட்டை ஜலத்தில் வேகவைத்து, நிழலில் உலர்த்தி, முலைப்பாலால் உரைத்து கண்ணிலிட குணமாகும்.

## கர்ணரோகங்கள் (25)க்கு அவுஷதங்கள்

**கர்ணரோகங்கள் (25)க்கு:-**

(1) 10 விரா. நிலப்பனைக்கிழங்கை அரைத்து 1 படி நல்லெண்ணெயில் சேர்த்து எரித்து, வடித்து ஸ்நானஞ்செய்து வர குணமாகும்.

**முசுறுமுட்டை எண்ணெய்:-**

(2) குக்கில், வசம்பு, பூநாகம், முசுறுமுட்டை, கோழிமுட்டையின் மஞ்சள் கரு, வெள்ளைப்பூண்டு, நண்டிறைச்சி, வகைக்கு விரா.2 சிதைத்து ¼ படி வேப்பெண்ணையில் சேர்த்து எரித்து வடித்து 4-5 துளி காதிலிட குணமாகும்.

**ரசானந்த சஞ்சீவி எண்ணெய்:-**

(3) ரசம், கந்தகம், வெள்ளைப் பாஷாணம், அபினி, அதிமதுரம், வகைக்கு விரா. ½ சூர்ணித்து, நல்லெண்ணெய் சேர். 3, பசும்நெய் பலம் 6 சேர்த்து அதில் கரைத்து எரித்து, வடித்து, 4-5 துளி காதிலிட்டு ஸ்நானஞ்செய்து வர குணமாகும்.

(4) வெங்காயம் விரா.2, வசம்பு விரா.2, மஞ்சள் விரா.4, பொடித்து, 1 படி வேப்பெண்ணெயில் கரைத்து, எரித்து, வடித்து காதிலிட்டு வர குணமாகும்.

(5) அமிர்தவல்லித் தயிலத்தை ஸ்நானஞ்செய்து வர குணமாகும்.

(6) இஞ்சித்தயிலத்தை ஸ்நானஞ்செய்து வர குணமாகும்.
இவைகளின் செய்முறைகள் இந்த புஸ்தகத்தில் காண்க.

(7) சுக்கு, இந்துப்பு, திப்பிலி, கோரைக்கிழங்கு, பெருங்காயம், வசம்பு, வெள்ளைப்பூண்டு, வகைக்கு விரா. 1 சேர்த்து, 8 பலம் எருக்கம் புழுப்புச்சாற்றால் அரைத்து, 8 பலம் நல்லெண்ணெயில் சேர்த்து

எரித்து, மெழுகு பதத்தில் வடித்து ஒரு சீசாவில் போட்டுவைத்துக்கொண்டு 4-5 துளி காதிலிட்டு வர குணமாகும்.

காதில் சீழ் வருதலுக்கு:-

(1) ஒரு சேர் வேப்பெண்ணெயில் வசம்பு, வெள்ளைப்பூண்டு, பெருங்காயம் வகைக்கு விரா. 1 சூர்ணித்துப்போட்டு எரித்து, வடித்து காதிலிட்டுவர குணமாகும்.

(2) ஒரு சேர் வேப்பெண்ணெயில் ¼ சேர். வில்வப்பழச்சதையை போட்டு எரித்து வடித்து காதிலிட்டுவர குணமாகும்.

(3) அபினிப் பாவனத்திரவம் 4 திராம், தேங்காய் எண்ணெய் 4 திராம் இவைகளைச் சேர்த்துக் குலுக்கி காதிலிட்டுவர குணமாகும்.

காதிரைச்சலுக்கு:-

(1) ஐந்து அவுன்ஸ் நல்லெண்ணெயும், 4 அவுன்ஸ் தைவேளைச்சாறும் சேர்த்து எரித்து வடித்து காதிலிட்டுவர குணமாகும்.

(2) முசுமுசுக்கை இலைச்சாறு படி 1/8, நல்லெண்ணெய் படி 1/8 இவைகளைச் சேர்த்து அதில் வெள்ளைப் பூண்டு விரா. 3 மேற்படி சாற்றால் அரைத்து, கரைத்து, எரித்து, வடித்து காதிலிட்டுவர குணமாகும்.

காது மந்தத்திற்கு:-

(1) இஞ்சிச்சாறு ¾ திராம், குதிரை லத்திச்சாறு 1 திராம் இவைகளைச் சேர்த்து 4-5 துளி காதிலிட குணமாகும்.

(2) 2 அவுன்ஸ் புங்கெண்ணெயில், 3 திராம் பன்றி முள்ளைச் சிதைத்துப் போட்டு எரித்து, வடித்து காதிலிட்டு பஞ்சால் அடைத்து 4 நாள் வரையில் காற்றுப்புகாமல் வைத்திருக்கக் குணமாகும்.

காது புழுவிழ:-

முருங்கையிலைச்சாறு 3 அவுன்ஸ், நல்லெண்ணெய் 4 அவுன்ஸ் சேர்த்து எரித்து, வடித்து காதிலிட குணமாகும்.

காது எழுச்சிக்கு:-

ஒரு அவுன்ஸ் நல்லெண்ணெயில் கிலுகிலுப்பை வேர் ½ அவுன்ஸ் அரைத்துப் போட்டு எரித்து, வடித்து 5-6 துளி காதிலிட குணமாகும்.

காது வலிக்கு:-

அபினிப் பாவனத்திரவமும் தேங்காய் எண்ணெயும் சமனிடையாய் சேர்த்து 5-6 துளி காதிலிட குணமாகும்.

## சிரோரோகங்கள் (19)க்கு அவுஷதங்கள்

சிரோரோகங்கள் (19)க்கு:-

(1) மகா வில்வாதித்தயிலம்
(2) அமிர்தவல்லித் தயிலம்
} இவைகளை இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

ஒற்றலை வலிக்கு (ஒரு தலை வலி):-

(1) இஞ்சிச்சாறும், நல்லெண்ணெயும் வகைக்கு 4 அவுன்ஸ் சேர்த்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்து வர குணமாகும்.

(2) மார்த்தாண்ட பயிரவத்தயிலம்
(3) சீரகத்தயிலம்
} இவைகளை ஸ்நானஞ் செய்துவர குணமாகும். செய்முறை இப்புஸ்தகத்தில் காண்க.

(4) வெள்ளைப்பாஷாண ஜெயநீரை 4-5 துளி ஒரு அவுன்ஸ் ஜலத்தில் போட்டு தினம் 3-4 தடவை கொடுக்க குணமாகும்.

(5) கஞ்சா இலைச்சாறு படி 1, நல்லெண்ணெய் படி 1 சேர்த்து எரித்து, வடித்து ஸ்நானஞ்செய்து வர குணமாகும்.

இருபக்கத் தலைவலிக்கு:-

பேய்ப்புடல் சாறும் நல்லெண்ணெயும் வகைக்கு சேர் 1 சேர்த்து எரித்து, வடித்து ஸ்நானஞ்செய்து வர குணமாகும்.

சகல தலைவலிக்கும்:-

மென்தல் (Menthal) யை நெற்றி, புருவம் முதலிய இடங்களில் தேய்த்தால் குணமாகும்.

நீர்கொண்ட மண்டையிடிக்கு:-

கர்ப்பூரம், மிளகு, சதகுப்பை, கடுகு, திப்பிலி, மஞ்சள், மரமஞ்சள் வகைக்கு விரா. 4, இவைகளை குன்றிமணி இலைச்சாற்றால் மைபோலரைத்து மல்லு துணியில் தடவித் திரியாக்கி உலர்த்தி கொளுத்தி, நாசியில் அதன் புகையை இழுக்க குணமாகும்.

கபால வாயு-கபாலவலி-மண்டையிடி-ஒற்றலைவலி இவைகளுக்கு:-

(1) குப்பைமேனிச்சாறு படி 3, நல்லெண்ணெய் படி 4 சேர்த்து, எரித்து, வடித்து ஸ்நானஞ்செய்து வர குணமாகும்.

(2) எருக்கம்வேர் விரா.5, அரிதாரம் விரா.5 இவ்விரண்டும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் மைபோலரைத்து, மல்லுதுணியில் தடவித் திரியாக்கி உலர்த்தி, கொளுத்தி நாசியில் புகை பிடிக்க குணமாகும்.

மண்டை கபத்திற்கு:-

சர்வேசுவர ரஸ நஸ்யம் உபயோகித்தால் குணமாகும்.

மண்டை சிலேஷ்மத்திற்கு:-

வங்கேஸ்வர ரச நஸ்யம் உபயோகித்தால் குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

தலைப்புழு வெட்டுக்கு:-

குஷ்டக்குடாரி எண்ணெய் இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்கக் குணமாகும்.

*மண்டையிடி . கபால சூலைக்கு:-* பீனசநாச கணபதி தயிலத்தை ஸ்நானஞ்செய்தால் குணமாகும். செய்முறை இப்புஸ்தகத்தில் காண்க.

*கபால வரட்சி:-*

நெல்லிக்காய் தயிலத்தை இப்புஸ்தகத்தில் சொல்லியபடி ஸ்நானஞ்செய்து வர குணமாகும்.

*தலைமயக்கம்-தலைசுற்றுதலுக்கு:-*

ராஜாங்க கொம்பரக்குத் தயிலத்தை ஸ்நானஞ்செய்து வர குணமாகும். இப்புஸ்தகத்தில் செய்முறை காண்க.

*கபால சூலைக்கு:-*

உலகோத்தம செந்தூரத்தைக் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் செய்முறை காண்க.

## சுவாச காசம், க்ஷயம், இருமல் முதலிய கப ரோகங்களுக்கு அவுஷதங்கள்

*காசம் முதலிய (96) கபரோகங்களுக்கு:-*

(1) திப்பிலி பலம் 10, மிளகு பலம் 5, சுக்கு பலம் 5, குரோசாணி ஓமம், சோம்பு, சீரகம், தும்பராஷ்டகம், சின்னராஷ்டகம், தாளிசப்பத்திரி, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, லவங்கம், ஏலம், சித்திரமூலம் வகைக்கு பலம் 1 இவைகளை இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்து அத்துடன் சீனி சேர் 4 சேர்த்து தேன் விட்டு பிசைந்து கொட்டைப் பாக்களவு அந்தி சந்தி சாப்பிட்டுவர குணமாகும்.

(2) ராஜஅப்பிரக செந்தூரம்
(3) திப்பிலி ரசாயனம்
(4) சிங்கி பஸ்மம்
(5) ஆயச்செந்தூரம்
(6) ராஜமார்த்தாண்ட லேகியம்
(7) சந்திரகாசத் தயிலம்
(8) வீர பஸ்மம்
(9) வெள்ளி பஸ்மம்

இவைகளை இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

*சிலேஷ்மம் (20)க்கு:-*

(1) மகா தாம்பிரபஸ்மம்
(2) கல்நார் பஸ்மம்
(3) மண்டூரசெந்தூரம்

இவைகளை இந்த புஸ்தகத்தில் பார்வையிட்டு செய்து கொடுக்க குணமாகும்.

*மார்புச் சளிக்கு:-*

நவக்ஷார உப்பு, இபிகாகியு ஏனா, கர்பூரம், வகைக்கு 3 முதல் 4 கிறேன்ஸ் சேர்த்து அனுபானத்தில் கொடுக்க குணமாகும்.

*மார்பு கப நோவுக்கு:-*

வாந்திஉப்பு 1 கிறேன்ஸ், வெடியுப்பு 2 திராம், வாதுமைப்பருப்பு பாகு 12 அவுன்ஸ் கர்ப்பூரப் பாவனத் திரவம் ½ அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து அதிமதுரக் கசாயத்தில் ½ அவுன்ஸ் வீதம் தினம் 6 தடவை கொடுக்க குணமாகும்.

*மார்புச் சளி . மார்பு கப நோவுக்கு:-*

வாதுமைப் பருப்புப்பாகு 12 அவுன்ஸ், வெடியுப்பு 2 திராம், வாந்தி உப்பு 1 கிறேன்ஸ், கலவை கர்ப்பூரத் திரவம் ½ அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து ½ அவுன்ஸ் வீதம் ஒரு மணிக்கு ஒரு தரம் கொடுத்துவர குணமாகும். (Dr. Graves)

*கோழை வெளியாக்க:-*

லைகர் பொட்டாஷ், நரிவெங்காயப் பாவனத்திரவம், வகைக்கு 15 துளி, கலவை கர்ப்பூர பாவனத்திரவம் ½ திராம், கர்ப்பூர ஜலம் 1 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்துக் கொடுக்க குணமாகும். (Dr. C.B. Williams)

*சுவாசகாசத்திற்கு.-*

பொட்டிலுப்பை அதிக ஜலத்தில் கரைத்து அதில் ஒரு தளமான கடுதாசியை தோய்த்து கொஞ்ச நேரம் ஊறவைத்து பின்பு காற்றில் உலர்த்தி, ஒரு சுங்கானில் வைத்துக் கொளுத்தி புகையை உட்கொண்டால் உடனே குணமாகும். (Dr. Waring)

*காசம் **(5)** க்கு:-*

(1) ஒரு விராகனிடை யானையின் நகத்தை கத்தியால் சீவி, ஒரு சேர் வேப்பெண்ணெயைக் காய்ச்சி அதில் போட்டுக் கருகிப்போகாமல் பதத்தில் எடுத்து வடித்து ஒரு விராகனிடை வீதம் கொடுத்து வர குணமாகும்.

(2) ¼ தங்க ரேக்கை போஜனம் செய்யும்போது முதல் அன்னத்தின் மேல் போட்டு நெய்யைக் காய்ச்சி விட்டு பிசைந்து சாப்பிட்டு பிறகு, வழக்கப்படி பத்தியமாய் சாப்பிட்டுவர குணமாகும்.

(3) தாளகக்கட்டு
(4) திப்பிலி ரசாயனம்
(5) பாவனத்திப்பிலி
(6) உலகோத்தம செந்தூரம்
(7) திரிவிக்கிரம ரச செந்தூரம்
(8) ஸ்வர்ணகோரோசன மாத்திரை
(9) திரிலோகரக்ஷாமணி மாத்திரை
(10) பஞ்சாக்ஷர செந்தூரம்
(11) மகா ரஜத பஸ்மம்
(12) மகா ரச பஸ்மம்
(13) பவள பஸ்மம்
(14) துருசி பஸ்மம்
(15) பிரவாள பஸ்மம்
(16) மகா அசுவகெந்தி சூர்ணம்
(17) ராஜாங்க கொம்பரக்குத் தயிலம்.
(18) மகா தாளிசப்பத்திரி சூர்ணம்.

(19) வீரபத்திர சிந்தாமணி
(20) மகா தூதுளைகிருதம்
(21) நமசிவாய செந்தூரம்

இவைகளை இந்த புஸ்தகத்தில் சொல்லிய முறைகளின் படி செய்து உபயோகித்தால் குணமாகும். அன்றியும் 14வது, 16வது அத்தியாயத்தில் சொல்லிய மருந்துகளை மிக்ஸ்சேர் செய்து கொடுக்க குணமாகும்.

*சுவாசம் (5)க்கு:-*

(1) பஞ்சாக்ஷர செந்தூரம்
(2) திரிவிக்கிரம ரச செந்தூரம்
(3) ஸ்வர்ண கோரோசன மாத்திரை
(4) திரிலோக ரக்ஷாமணி மாத்திரை
(5) பிரவாளபஸ்மம்
(6) லிங்க மெழுகு
(7) பாவனத்திப்பிலி
(8) மகாதூதுளைக் கிருதம்.
(9) மகா அசுவகெந்தி சூர்ணம்
(10) சூரியாவர்த்தன மாத்திரை

இவைகளை உபயோகிக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் செய்முறைகள் காண்க.

*ரத்தகாசம்-ரத்தவமனம் இவைகளுக்கு:-*

படிகாரம் 2 கிராம், பசும்பால் 18 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்துக் காய்ச்சி ஆறின பின் 1½ அவுன்ஸ் வீதம் தினம் 3 தடவை கொடுக்க குணமாகும்.

*பித்தகாசத்திற்கு:-*

முசுமுசுக்கைத் தயிலத்தை ஸ்நானஞ்செய்து வர குணமாகும். செய்முறை இப்புஸ்தகத்தில் காண்க.

*மந்தார காசத்திற்கு:-*

திரிலோக ரக்ஷாமணி மாத்திரை கொடுக்க குணமாகும். செய்முறை இப்புஸ்தகத்தில் காண்க.

*ஈளைக்கு:-*

(1) வீரபத்திர சிந்தாமணி
(2) தாளகக் கட்டு
(3) பவள பஸ்மம்
(4) துருசி பஸ்மம்
(5) லகுதூதுளை சூர்ணம்
(6) ராஜ வில்வாதி லேகியம்
(7) வச்சிரவல்லி லேகியம்
(8) மகாதாளிசப்பத்திரி சூர்ணம்

இவைகளைக் கொடுக்க குணமாகும். செய்முறை இப்புஸ்தகத்தில் காண்க. அன்றியும் 14வது, 16வது அத்தியாயத்தில் அனேக மருந்துகள் காணலாம்.

*க்ஷயரோகம் (4)க்கு:-*

(1) காட்லிவர் ஆயில்
(2) திரிலோக ரக்ஷாமணி மாத்திரை
(3) திரிவிக்கிரம ரசசெந்தூரம்
(4) அப்பிரக பஸ்மம்
(5) தாளக பஸ்மம்
(6) மகா தாம்பிர பஸ்மம்

(7) பஞ்சாக்ஷர செந்தூரம்
(8) மகா தாளிசப்பத்திரி சூர்ணம்
(9) பவள பஸ்மம்

இவைகளை இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

இன்னும் அனேக மருந்துகளை 14வது, 16வது அத்தியாயத்தில் காண்க.

*இரைப்புக்கு:-*

(1) துருசி பஸ்மம்
(2) மகாரஜதபஸ்மம்
} இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

(3) 2 கிறேன்ஸ் அபினியை பெரியவருக்குக் கொடுக்க இரைப்பு உடனே நிற்கும்.

*இருமலுக்கு:-*

(1) லைகர் அம்மோனியா அசிடேடிஸ் 1 அவுன்ஸ், வைனம் ஆண்டிமோனி 2 திர்ாம், டோலுப்பாணிதம் 6 திராம், சுத்த ஜலம் 4 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து 1/6 (ஆறில் ஒரு பாகம்) 4 மணிக்கு ஒரு தடவை கொடுத்துவர குணமாகும். (Dr. G. Gregory)

(2) பயிரவ வடிமாத்திரை
(3) லகுகட்டுவாங்க மாத்திரை
(4) சுவர்ண கோரோசனமாத்திரை
(5) பஞ்சாக்ஷர செந்தூரம்
(6) வீரபத்திர சிந்தாமணி
(7) பவள பஸ்மம்
(8) லகுதூதுளைச் சூர்ணம்
(9) மகா தூதுளைச் சூர்ணம்
(10) அகஸ்தியர் குழம்பு
(11) திப்பிலி ரசாயனம்
(12) மகா தூதுளைக்கிருதம்
(13) ராஜ வில்வாதி லேகியம்
(14) வச்சிரவல்லி லேகியம்
(15) இராஜகேசரி சூர்ணம்.

இவைகளில் எதையாகிலும் இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

(16) *ஒரு குமட்டிக்காயை கொண்டுவந்து அதற்கு ஒரு சிறு துவாரம் செய்து அதில் மிளகை செலுத்தி நிழலிலுலர்த்தி எடுத்து மிளகில் ஒரு தடவைக்கு 7 மிளகைச் சூர்ணித்து அத்துடன் தேன், திப்பிலித்தூள் இவைகளைச் சேர்த்து சாப்பிட்டுவர குணமாகும்.

*கபத்திற்கு:-*

வாதுமைப்பருப்புப் பாகு 1 அவுன்ஸ், வைனம் இபிக்காக்கியு ஏனா, 10 துளி கார்பொனேட் ஆப் பொட்டாஷ் 10 கிறேன்ஸ், எலுமிச்சம்பழ ரசம் 3 திராம் இவைகளைச் சேர்க்கையில் பொங்கும்போது சாப்பிட குணமாகும்.

கபத்தை வெளியாக்க:-

வாலேந்திர பௌலம் 6 கிறேன்ஸ், இபிக்காக்கியுஏனா 3 கிறேன்ஸ் பொட்டிலுப்பு ½ திராம், இவைகளைச் சேர்த்து 4 மணிக்கு ஒரு தடவை ¼ பங்கு கொடுக்க கபத்தை வெளிப்படுத்தும். (Dr. Paris)

## கிரகணிரோகங்கள் *(11)*க்கு அவுஷதங்கள்

கிரகணி ***(11)***க்கு:-

*(1)* மாதுளம்பிஞ்சு, சாதிக்காய், சாதிப்பத்திரி, கருவப்பிசின், காந்தம், கல்மதம், லிங்கம், இவ்வேழும் வகைக்கு பலம் ஒன்று சுத்திசெய்து சேர்த்து அத்திப்பாலால் 2 சாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரைவீதம் தினம் 2-3 தடவை வெல்லத்தில் கொடுத்துவர குணமாகும்.

*(2)* லகுசங்குவடி மாத்திரை
*(3)* நாராயண மண்டூர செந்தூரம்
*(4)* அயச்செந்தூரம்
*(5)* அயக்காந்த செந்தூரம்
*(6)* உல்கோத்தம செந்தூரம்
*(7)* சுயமக்கினி
*(8)* அப்பிரக பஸ்மம்
*(9)* வெள்ளீய பஸ்மம்
*(10)* கந்தக ரசாயனம்
*(11)* போஜனகுடாரி மாத்திரை
*(12)* மகாகூழ்பாண்டக்கிருதம்
*(13)* ராஜ அமிர்த சஞ்சீவி லேகியம்
*(14)* ராஜ சிந்தாதி லேகியம்
*(15)* ராஜ வில்வாதி லேகியம்
*(16)* மகாதாளிசப்பத்திரி சூர்ணம்
*(17)* ராஜஹம்ஸபொட்லி மாத்திரை

இவைகளைக் கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் இவைகளின் செய்முறைகள் காண்க.

**வாயு கிரகணி - உஷ்ண பேதிக்கு:-**

100 வருஷம் சென்ற வேப்பமரத்தின் உலர்ந்த பட்டை விரா 100, மிளகு விரா. 50 இவைகளைச் சேர்த்து சூர்ணித்து அத்துடன் சர்க்கரை விரா. 75 சேர்த்து 2. விரா. வீதம் 7 நாள் கொடுக்கக் குணமாகும்.

**வாத-பித்த-சிலேஷ்ம கிரகணிகளுக்கு:-**

ஒரு பலம் சீரகத்தை, ஒரு பலம் கொட்டாங்கரந்தையுடன் சேர்த்து மைபோலரைத்து, சிறு வடைகளாகத் தட்டி நல்லெண்ணெயில் வறுத்துச்சாப்பிட குணமாகும்.

வயிறுகடுப்புக்கு:-

*(1)* வெள்ளீய பஸ்மம்
*(2)* நாக பஸ்மம்
} இவைகளை புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

*(3)* சீரகம், விரா. 1, வெங்காயம், விரா. 2, கர்க்கடக சிங்கி விரா.4, இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்து திரிக்கடி வீதம் எருமைத்தயிரில் கொடுக்கத்தீரும்.

(4) 7 பலம் சீரகத்தை இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்து ஒரு பலம் சீனாக்கற்கண்டு பொடியைச் சேர்த்து 3 விரா. வீதம் பசும் நெய்யில் கொடுக்க குணமாகும்.

(5) ஒரு பலம் ஒரு தலை வெள்ளைப்பூண்டுக்கு கறி உப்பை அரைத்து கவசமிட்டு உமிக்காந்தலில் வெதுப்பி, பருப்பை எடுத்து அரைத்துத் தயிரில் கொடுக்க குணமாகும்.

(6) வெங்காயம் விரா. 1, சீரகம் விரா. ½, கர்க்கடகசிங்கி விரா. ½ இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணித்து எருமைத்தயிரில் கொடுக்கக் குணமாகும்.

மூலக்கடுப்பு-வயிற்றுக்கடுப்பு-ரத்தகிரகணி-சீதகிரகணிக்கு:-

வெந்தியம், நெல்லிவற்றல், சுண்டக்காய் வற்றல், மாம்பருப்பு, கருவேப்பிலை, ஓமம், மாதுளம்பழத்தோல், வகைக்கு விரா.1, இவைகளை இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்து 3 விரா. வீதம் தயிரில் கொடுக்க குணமாகும்.

சகல கழிச்சலுக்கு:-

புளியாரை, வாழைப்பூ, வகைக்கு 4 அவுன்ஸ் சேர்த்து பிட்டம் அவித்துப் பிழிந்தசாற்றில் தேன் 10 துளி விட்டுக்கொடுக்க குணமாகும்.

## அதிசார ரோகங்கள் (6)க்கு அவுஷதங்கள்

அதிசாரம் (6)க்கு:-

(1) லகு கட்டுவாங்க மாத்திரை
(2) பயிரவடி மாத்திரை
(3) மகா ரச பஸ்மம்
(4) சுவர்ண ரஜத பஸ்மம்
(5) வெள்ளீய பஸ்மம்
(6) கந்தக ரசாயனம்
(7) ராஜ வில்வாதி லேகியம்
(8) அமிர்த சஞ்சீவி லேகியம்

இவைகளைக் கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் செய்முறைகள் காண்க.

(9) விளாவின கந்தகத்திராவகம் 2 திராம், சீனி 4 திராம், கலவை ஏலரிசிப் பாவனத்திரவம் 4 திராம், பெப்பர்மெண்டு ஜலம் 6 அவுன்ஸ்இவைகளைச் சேர்த்து 4 மணிக்கு ஒரு தடவை இதில் கால் பங்கு கொடுத்துவரத் தீரும் (Mr. E.Shepherd).

(10) சீமை எண்ணெய் (Olive oil) 1 அவுன்ஸ், ஐயோடின் 20 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து வயிற்றின் மேல் தேய்த்தால் அதிசாரம், குடலைப் பற்றிய ரோகங்கள் குணமாகும். (Mr. M. Diamond).

(11) துருசி 1½ கிறேன்ஸ், அபின் 1½ கிறேன்ஸ், குல்கந்து தேவையானது இவைகளைச் சேர்த்து 3 மாத்திரைகளாக்கி 1 மாத்திரை வீதம்

தினம் 3 தட்டவை கொடுக்க நீடித்த அதிசாரம், ரத்தபேதி, குணமாகும் (Dr.Joy)

(12) கருநாவி, கஞ்சாவித்து, அதிவிடையம், சாதிக்காய், மாங்கொட்டைப் பருப்பு, அபினி வகைக்கு பலம் 1, இவைகளைச் சீந்திற்கொடிச் சாற்றாலரைத்து குன்றிமணி பிரமாணம் மாத்திரைகள் செய்து ஒரு மாத்திரை வீதம் அனுபானத்திலிட குணமாகும்.

(13) ஓமத்தின் அரிசியும், காட்டாத்திப்பூவும், வகைக்கு விரா. 10 சூர்ணித்து திரிக்கடி வீதம் இஞ்சிச்சாற்றில் கொடுக்கக் குணமாகும்.

சுரமில்லாத அதிசாரத்துக்கு:-

காசிக்கட்டி 10 கிறேன்ஸ், கருவாப்பட்டைத் தூள் 10 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து தேனில் கொடுக்க குணமாகும்.

அதிசாரம், சீதபேதி இவைகளுக்கு:-

சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், கடுக்காய்ப்பூ, சீரகம், அதிவிடையம், லவங்கப்பூ, அபினி, வெந்தியம், கசகசா, கோரோசனை, வகைக்கு விரா. 1, முலைப்பாலாலரைத்து உளுந்து பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி, பெரியவர்களுக்கு 2 மாத்திரையும், குழந்தைகளுக்கு ½ முதல் 1 மாத்திரையும் தேனில் கொடுக்க குணமாகும்.

மந்தபேதிக்கு:-

நவக்ஷார உப்பு, 5 கிறேன்ஸ், பெப்பர்மெண்டு ஜலம் 1½ அவுன்ஸ், ரோஜாப்பூ பாணிதம் 1 திராம், இவைகளைச் சேர்த்துக் கொடுக்க குணமாகும்.

அஜீர்ண பேதிக்கு:-

2 விரா. ஓமமும் ஒரு பிடி பிரண்டையும், சேர்த்து அரைத்து ½ படி ஜலத்தில் போட்டு எரித்து 1/8 படியாக்கிக் கொடுக்க குணமாகும்.

## சீதபேதி ரோகத்திற்கு அவுஷதங்கள்

சீதபேதிக்கு:-

(1) டொவாஸ் பவுடரும் காடிக்காரமும் கிரமத்துடன் சேர்த்துக் கொடுக்க குணமாகும்.

(2) சுக்கு பலம் 1, கிராம்பு விரா.1, கண்டத்திப்பிலி விரா. 1, எருமைத் தயிரால் மைபோலரைத்து சுத்தமான சிறு துணிகளில் கொஞ்சங் கொஞ்சமாக வைத்து முடித்து ஒரு சட்டியில் ½ படி எருமை மோர் விட்டு அதில் மேற்படி முடிச்சுகள் எல்லாம் போட்டு எரிக்க

அவைகள் வெந்து மேலே மிதக்கும். அப்போது எடுத்து அத்துடன் 3 விரா. தேனும், 5 விரா. நெய்யும் சேர்த்து பாக்களவு கொடுத்து வர குணமாகும்.

(3) குளோரோடின் (Chlorodyne) 10-15 துளி சுத்த ஜலம் அல்லது காசிக்கட்டி கஷாயத்தில் கொடுக்க குணமாகும்.

(4) ராஜ அமிர்த சஞ்சீவி லேகியம் கொடுக்க சீத ரத்தபேதி குணமாகும்.

(5) கட்டுவாதிச் சூர்ணம் (6) லகு கட்டுவாங்கமாத்திரை இவைகளைக் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

(6) இபிக்காக்கியுஏனா, ரஸ பஸ்மம், அபினி இவைகளை கிரமத்துடன் சேர்த்துக் கொடுக்க குணமாகும்.

(7) 5 விரா. ஜாதிக்காயை சீலைமண் செய்து 2-3 எருவில் புடம் போட்டு எடுத்து நெய்யும் தேனும் சேர்த்து பாசிப் பயிர் பிரமாணம் மாத்திரைகள் செய்து தினம் 2 தடவை ஒரு மாத்திரை வீதம் முலைப்பாலில் கொடுக்க சீதபேதி தீரும். தீபனம் ரத்தவிருத்தி உண்டாகும்.

(8) மாம்பருப்பும், கருவேப்பிலையும் சேர்த்து அரைத்து பிழிந்த சாற்றில் ஒரு திராம் வீதம் 4 மணிக்கு ஒரு தரம் குழந்தைக்குக் கொடுக்க குணமாகும்.

(9) மாசிக்காயை நொறுக்கி நெய்யால் வறுத்து சூர்ணித்து 5-10 கிறேன்ஸ் வீதம் தேனில் குழந்தைக்கு கொடுக்க குணமாகும்.

(10) உலர்ந்த வில்வப்பழத்தை நொறுக்கி ஜலத்திலிட்டு காய்ச்சின கஷாயத்தை கொடுத்துவர குணமாகும்.

(11) காரன் பிளோர் கஞ்சியை குழந்தைகளுக்கு கொடுக்க குணமாகும்.

(12) கைநோ சூர்ணம் குழந்தைகளுக்கும், கைநோ கலவைச் சூர்ணம் பெரியவர்களுக்கும் கொடுக்க குணமாகும்.

(13) கடுக்காய்பூ விரா. 4, வெங்காயம் விரா.4, சீரகம் விரா.1 இவைகளை வெதுப்பி அரைத்து எருமைத் தயிரில் கொடுக்க குணமாகும்.

## பல், நாக்கு, வாய் ரோகங்களுக்கு அவுஷதங்கள்.

உள்நாக்கு வளர்ந்ததற்கு:-

(1) நவக்ஷாரத்தூளை உண்ணாக்கின் பேரில் தடவ உண்ணாக்கு வளர்ந்து காணும் இருமல் குணமாகும் (Dr. Addison)

(2) அயத்திராவகத்தை உண்ணாக்குக்குத் தடவ குணமாகும்.

(3) மிளகுத்தூளைத் தடவ குணமாகும்.

(4) நவக்ஷாரமும், கல்சுண்ணாம்பும் எலுமிச்சம் பழச்சாற்றாலரைத்து உண்ணாக்குக்குத் தடவ குணமாகும்.

**உண்ணாக்கு அரிக்கும் கிரந்திக்கு:-**

நட்க்ஷத்திர மாணிக்க கிருதம் கொடுக்க குணமாகும். செய்முறை இப் புஸ்தகத்தில் காண்க.

**ஈறு ரணத்திற்கு:-**

பந்நீர், தேன் வகைக்கு 1 அவுன்ஸ், விளாவின கறியுப்புத் திராவகம் 1 திராம் இவைகளைச் சேர்த்து தினம் 3-4 தடவை ஈரின் மேல் தடவி வர குணமாகும்.

**கண்ட ரண தாபத்திற்கு:-**

விளாவின பொட்டிலுப்புத் திராவகம் 1¼ திராம், தேன் 2 அவுன்ஸ் பந்நீர் 6 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து அடிக்கடி வாயைக் கொப்பளிக்க குணமாகும்.

**ரசவாடை பிடிப்புக்கு:-**

(1) வெங்காரம் விரா.5, பொடித்து 1½ சேர் ஜலத்தில் கரைத்து தேன் விரா. 5 சேர்த்து வாயை கொப்பளித்துவர குணமாகும்.

(2) கருவேலம் பட்டையை சிதைத்து ஜலத்தில் போட்டுக் காய்ச்சின கசாயத்தால் வாயை கொப்பளிக்க குணமாகும்.

**தொண்டை கரகரப்புக்கு:-**

(1) பசும்பாலில் கொஞ்சம் மஞ்சள் சூர்ணத்தைப் போட்டுக் காய்ச்சிச் சாப்பிட குணமாகும்.

(2) கம்பளியால் செய்த கழுத்துப்பட்டையை கழுத்தைச் சுற்றிக் கட்டுவதினால் குணமாகும்.

(3) முக்காவேளை வேர் விரா. ¼, முசுமுசுக்கை வேர் விரா. 1 இவைகளைப் பொடித்து ¼ படி பசும்பாலில் போட்டுக் காய்ச்சிக் கொடுக்க குணமாகும்.

**சுண்ணாம்பைச் சாப்பிட்டு வாய் ரணமானால்:-**

மஞ்சளை அரைத்து ரணத்தின்மேல் தடவி 5 நிமிஷம் வைத்திருந்து பிறகு வாயை ஜலத்தால் கொப்பளிக்கவும். அவ்விதமாய் தினம் 3-4 தடவை செய்ய குணமாகும்.

**நெஞ்சுரணத்திற்கு:-**

படிக்காரம் 2 திராம் மாசிக்காய் கசாயம் 18 அவுன்ஸ், தேன் 2 திராம் இவைகளைச் சேர்த்து வாய் கொப்பளிக்க குணமாகும்.

**தொண்டைரணம், ரசவாடைபிடிப்பு, எயிறுபுண் இவைகளுக்கு:-**

வாலேந்திர பௌளலப்பாவனத்திரவம் 2-4 திராம், ஜலம் 4 அவுன்ஸ் அல்லது சின்கோனாகசாயம் 4 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து வாயைக் கொப்பளிக்க குணமாகும்.

**தொண்டைப்புற்றுக்கு:-**

வேம்பாடம்பட்டை எண்ணெயைக் கொடுக்க குணமாகும். இப்புத்தகத்தில் காண்க.

**தொண்டைக் கம்மலுக்கும், வாய்ரணத்திற்கும், உள்நாக்கு வளர்ந்ததற்க்கும்:**

ஒரு துண்டு காசிக்கட்டியை வாயில் அடைத்து வைத்தால் குணமாகும்.

**தொண்டைநோவுக்கு:-**

100 கிறேன்ஸ் மொளகாய்த்தூள், 6-8 அவுன்ஸ் ரோசாப்பூ கசாயம் இவைகளைச் சேர்த்து வாயைக் கொப்பளிக்க குணமாகும்.

**வாய்ரணத்திற்கு:-**

(1) படிக்காரம் விராகனிடை 2, ஜலம் சேர் 1, தேன் விராகனிடை 2 இவைகளைச் சேர்த்து வாயைக் கொப்பளிக்க குணமாகும்.

(2) கருவேலம்பட்டை கசாயத்தால் வாயைக் கொப்பளிக்க குணமாகும்.

**சொத்தைப்பல் நோவுக்கு:-**

அபினியாவது அல்லது அதின் பாவனத்திரவமாவது சொத்தைப்பல்லிலிட நோய் தணியும்.

**தந்தவாயுக்கு:-**

(1) ஒரு சிறு கலயத்தில் கறி உப்பு 4 அவுன்ஸ், சேங்கொட்டை 8 அவுன்ஸ் நொறுக்கிப்போட்டு அதன்மேல் ஒரு விரற்கடை உயரம் எருக்கம் பால்விட்டு ஓட்டால்மூடி சீலைமண் செய்து வராக புடம்போட்டு எடுத்துச் சூர்ணித்து தந்தசுத்திசெய்து வர குணமாகும். பற்கள் கருகாது.

(2) எருக்கம்பழுப்பு சேர் 2, மாங்கொட்டைப் பருப்பு, சேங்கொட்டை, கொட்டைப்பாக்கு வகைக்கு 70, கறிஉப்பு படி ¼, இலுப்பை இலை சேர் 12, களிப்பாக்கு பலம் 2½, இவைகளைத் தனித்தனியே கருகிய நிறமாக வறுத்து அத்துடன் காசிக்கட்டி, துரிசு வகைக்குப் பலம் 1¼ சேர்த்து சூர்ணித்து பல் விளக்க குணமாகும்.

**பல்பூச்சிகள் நீங்க:-**

உமிக்காந்தலில் 100 கண்டங்கத்திரிப் பழத்தை கருகிப்போகாமல் சுட்டு பாகல் இலைச்சாற்றால் மைபோல் அரைத்து ஒரு சேர் நல்லெண்ணெயில் கரைத்து 8 நாள் சூரியபுடம் போட்டு எடுத்து பல்லில் பூசிவர நீங்கும்.

**நாக்கில் ஜலம் ஊறி வரட்சிதோஷம் தீர:-**

தங்கம், சுத்திசெய்த வெள்ளி, முத்து, பவளம், ருத்திராக்ஷம், மான் கொம்பு, மயிலிறகுச் சாம்பல் இவைகளை தேன் விட்டு உரைத்து அமிர்தவல்லி

சூர்ணத்தை அத்துடன் சேர்த்து நாக்கில் தடவிவர, ஜலம் ஊறி வரட்சி, தோஷம் குணமாகும். இதற்கு கண்டா அவுஷதமென்று பெயர்.

குரல்நோய்க்கு:-

(1) வீரபத்திர சிந்தாமணி
(2) உலகோத்தம் செந்தூரம்
} இவைகளைக் கொடுக்க குணமாகும். செய்முறைகள் இப்புஸ்தகத்தில் காண்க.

நாக்கு அரிப்புக்கு:-

நட்சத்திர மாணிக்கக்கிருதம் செய்துகொடுக்க குணமாகும்.

நாக்கு கொப்பளத்திற்கு:-

வேம்பாடம்பட்டை எண்ணெய் செய்து கொடுக்க குணமாகும்.

நாக்கு வெடிப்புக்கு:-

வேம்பாடம்பட்டை எண்ணெய் செய்து கொடுக்க குணமாகும்.

நாக்குப்புற்றுக்கு:-

(1) வேம்பாடம்பட்டை எண்ணெய்
(2) நட்சத்திர மாணிக்கக்கிருதம்
} இவைகள் செய்து கொடுக்க குணமாகும்.

வாய்கிரந்திக்கு:-

(1) ராஜ ஏலாதிச் சூர்ணம்
(2) வேம்பாடம்பட்டை எண்ணெய்
} இவைகளை செய்து கொடுக்க குணமாகும்.

வாய்ப்புற்றுக்கு:-

(1) வேம்பாடம்பட்டை எண்ணெய்
(2) க்ஷடாக்ஷர செந்தூரம்
} இவைகளை செய்து கொடுக்க குணமாகும்.

வாய்நாற்றத்திற்கு:-

(1) வேம்பாடம்பட்டை எண்ணெய்
(2) பொன்னாங்காணி கிருதம்
} இவைகளை கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

அரிக்கிரந்திக்கு:-

ராஜ ஏலாதிச்சூர்ணம் செய்துகொடுக்க குணமாகும்.

நெஞ்செரிவுக்கு:-

(1) ராஜ மார்த்தாண்ட லேகியம்
(2) ராஜ வில்வாதிலேகியம்
} இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும்.

உதடுவெடிப்புக்கு:-

வேம்பாடம் பட்டை எண்ணெய்யை செய்து கொடுக்க குணமாகும்.

பல்லெயிறுக்கட்டிச்சீழ் வடிதலுக்கு:-

வேம்பாடம் பட்டை எண்ணெயை செய்து கொடுக்க குணமாகும்.

கருநாக்குசூலைக்கு:- நட்சத்திரமாணிக்கக் கிருதம் செய்து கொடுக்கத்தீரும்.

மேல்வாய்ப்புண்ணுக்கு:-

நட்சத்திரமாணிக்ககிருதம் செய்து கொடுக்க குணமாகும்.

பல்லிமைஉரித்துத்தின்னும் கிரந்திக்கு:-

நட்சத்திரமாணிக்ககிருதம் செய்து கொடுக்க குணமாகும்.

தந்தம் இறுக:-

கல்நார் பஸ்மத்தால் தந்த சுத்திசெய்ய இறுகும்.

உதடுமேகப்புண், நாக்குமேகப்புண் இவைகளுக்கு:-

மயிர்மாணிக்க வேர், வெந்தியம், வெங்காயம் வகைக்கு 8 அவுன்ஸ் சேர்த்து பசும்பாலால் மைபோலரைத்து 40 அவுன்ஸ் சிற்றாமணக் கெண்ணெயில் கரைத்து எரித்து வடித்து தினம் காலையில் ½ அவுன்ஸ் கொடுத்துவர குணமாகும்.

## குய்யரோகங்கள் (27)க்கு அவுஷகங்கள்
## Female Diseases.

குய்யரோகங்கள் 27-க்கு:-

(1) நன்னாரிவேர், அமுக்கிராகிழங்கு, பூமிசர்க்கரைகிழங்கு, சங்குப்பி, வெள்ளறுகு, கொத்தான், நிலவாகை, நிலப்பனைசமூலம், விழுதிவேர், வகைக்கு விராகனிடை 25, நொறுக்கி 4 படி ஜலத்தில் போட்டு ¼ படியாக்கின் கசாயத்தில் பொன்னாங்காணி, குமரி, தாழைவிழுது, அமுக்கிறாயிலை, சிவந்த விழுதி, எலிச்செவிக்கள்ளி, இவைகளின் சாறு, வகைக்குப் படி 1/16, கரிசலாங்கண்ணி, சங்குப்பி, வெங்காயம் இவைகளின் சாறு வகைக்குப் படி ¼, சிற்றாமணக்கெண்ணெய் படி 3/8, இவைகளை விட்டு அதில் புறங்கிப்பட்டை, பிரப்பங்கிழங்கு, சூரத்துக்கடுக்காய் வகைக்குப் பலம் 2, கருஞ்சீரகம், நற்சீரகம், மிளகு, அதிமதுரம், தாளசப்பத்திரி, சோம்பு, வகைக்கு விரா. 2½, இவைகளை மேற்படி சாற்றால் அரைத்து கரைத்து தீபாக்கினியாய் எரித்து வடித்து சுடுகை ஆறுவதற்குமுன் கர்ப்பூரசலாசத்து பஸ்மம், கல்மத பஸ்மம், கல்நார் பஸ்மம், வெங்காரம் பொறித்தச் சூரணம், கடுகுரோகணி சூர்ணம், வகைக்கு விரா. 2½, போட்டு துளாவி தைல கடத்தின் வாயை அகலால் மூடி சீலைமண் செய்து பூமிக்குள் 4 நாள் புதைத்துவைத்து பிறகு எடுத்து ½ பலம் வீதம் காலை மாலை 5 நாள் சாப்பிடவும். அந்த நாள்களில் உப்பில்லாப் பத்தியமாக இருந்து பிறகு 5 நாள் உப்பைவறுத்துக் கூட்டி, 11-வது நாளில் பசுவின் நெய்யை தேய்த்து ஸ்நானஞ்செய்ய குய்ய ரோகங்கள்

(27), மேகம் (20), மேகவாதரோகம், மேகரணங்கள் முதலிய அநேக பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

(2) ரணச்சிகிட்சைகள் செய்வதாலும் குணமாகும்.

## காமாலைரோகங்கள் (13)க்கு அவுஷதங்கள்

காமாலை (13)க்கு:-

(1) மண்டூர செந்தூரம்
(2) அயச்செந்தூரம்
(3) வீரபத்திர சிந்தாமணி
(4) துரிசு பஸ்மம்
(5) மகாகூழ்ப்பாண்ட கிருதம்
(6) ராஜஅமிர்த சஞ்சீவி லேகியம்
(7) மகா கூழ்ப்பாண்ட லேகியம்

இவைகளை இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும். இன்னும் அநேக மருந்துகள் 14 வது, 16 வது அத்தியாயத்தில் காண்க.

மஞ்சட்காமாலைக்கு:-

(1) ரேவல் சின்னி (Rhubarb Powder) 10 கிறேன்ஸ், டார்டரேட் ஆப் பொட்டாஷ் 1 திராம், பரிமள லேகியம் 20 கிறேன்ஸ், பெப்பர் மெண்டு ஜலம் 2 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து 8 மணிக்கு ஒரு தரம் கொடுக்க குணமாகும். (Dr. E.J. Clark)

(2) நாட்டுக்காட்டாமணக்கு இலையை அரைத்து புன்னைக்காயளவு எருமை வெண்ணெயில் தினம் 2 தடவை 3 நாள் கொடுக்க குணமாகும்.

## வாந்திபேதிக்கு அவுஷதங்கள்

(1) விளாவின வெடியுப்புத் திராவகம் 1 திராம், பெப்பர்மெண்டு ஜலம் அல்லது கர்ப்பூர ஜலம் 1 அவுன்ஸ், அபினிப்பாவனத்திரவம் 30 துளி இவைகளைச் சேர்த்து அதில் ¼ பங்கு வீதம் கஞ்சியில் சேர்த்து 3-4 மணிக்கு ஒரு தடவை கொடுக்க குணமாகும். (Mr. Hope).

(2) குளோரெட் ஆப் பொட்டாஷ் 8 கிறேன்ஸ், கறிஉப்பு 20 கிறேன்ஸ், கார்பொனெட் ஆப் சோடா 30 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து ஜலத்தில் கரைத்து 2-3 மணிக்கு ஒரு தடவைக் கொடுக்க வாந்திபேதி, சந்நிபாத சுரம் குணமாகும். (Dr. Stevens).

(3) வங்கஉப்பு 2 கிறேன்ஸ், ரசபஸ்மம் 2 கிறேன்ஸ், கர்ப்பூரம் 1 கிறேன், அபினி 1 கிறேன் இவைகளைச் சேர்த்து ஒரு மாத்திரையாக்கி 2 அல்லது 3 மணிக்கு ஒரு தரம் கொடுக்க குணமாகும். (Dr. Paterson)

## மூத்திரரோகம்-பிரமியம்-பிரமேகம்-கிரிச்சரம்-பவுத்திரம்–அரையாப்பு இவைகளுக்கு அவுஷதங்கள்

*மதுமூத்திரம்:-*

நவக்ஷார உப்பு 5-8 கிறேன்ஸுடன் அபினிபாவனத்திரவம் சேர்த்து நிலவேம்புக் கசாயத்தில் கொடுத்து மாமிசம் கீரைவகை இவைகளின் பத்தியத்தில் வைக்க குணமாகும் (Dr. Barlow).

*நீரிழிவுக்கு:-*

(1) மேககுலாந்தகமாத்திரை
(2) கணத்தெண்ணெய்
(3) மகாசந்தநாதித்தயிலம்

இவைகளைக் கொடுக்க குணமாகும். அன்றியும் 14வது அத்தியாயத்தில் மருந்துகள் விசேஷமாய் காணலாம்.

*நீர்க்கட்டுக்கு:-*

(1) லைகர் பொட்டாஷ் 2 திராம், பொட்டிலுப்பு 2 திராம், ஸ்பிரிட் ஈதர் நைட்ரஸ் 3 திராம், நரிவெங்காயப்பாவனத்திரவம் 6 திராம், வெந்நீர் 6 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து ஒரு பெரிய கரண்டி வீதம் தினம் 3 தடவை ஒரு வைன்கிளாஸ் ஜலத்தில் கொடுக்க மூத்திரத்தை விருத்திக்கும் (Mr. Fergussion).

(2) மேகக்குலாந்தக ஷர்பத்து
(3) கூழ்ப்பாண்டஷர்பத்து
(4) நன்னாரி ஷர்பத்து
(5) ராஜவில்வாதி லேகியம்

இவைகளைக் கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

*நீர்க்கோவைக்கு:-*

அசிடேட் ஆப் பொட்டாஷ் 1 திராம், டிஜிடெலிஸ்ப் பாவனத்திரவம் 8 துளி, எரிவண்டுப்பாவனத்திரவம் 15 துளி, ஸ்பிரிட் ஈதர் நைட்ரஸ் ½ திராம், ஜலம் 1½ அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து தினம் 3 தடவைக் கொடுக்க குணமாகும் (Dr. Budd).

*நீர் ஏற்றம்-மலக்கட்டு-சூதகக்கட்டு இவைகளுக்கு:-*

மக்கியும், திராக்ஷஉப்பும் வயதுக்குத் தக்கபடி சேர்த்துக் கொடுக்க குணமாகும்.

*நீர் ஏற்றத்திற்கு:-*

(1) மக்கி 12 கிறேன்ஸ், கரியபோளம் 30 கிறேன்ஸ், திராக்ஷ உப்பு 36 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து அரைத்து 24 மாத்திரைகளாக்கி 2 மாத்திரைகள் வீதம் தினம் 3 தடவைக் கொடுத்து வர குணமாகும்.

*நீர்சுருக்கிற்கு:-*

(1) மகா கூழ்ப்பாண்டகிருதம்
(2) புளியாரைகிருதம்
(3) மகா கூழ்ப்பாண்ட லேகியம்
(4) அகஸ்தியர் குழம்பு

இவைகளைக் கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

*நீர்எரிவு-நீர்க்கடுப்பு இவைகளுக்கு:-*

*(1) மகா வல்லாரை கிருதம்*
*(2) மரத்து வெள்ளைநவநீதம்*
*(3) பவளபஸ்மம்*
} *இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும்.*

*(4) நெருஞ்சிச்சாறு 1 அவுன்ஸ், இளநீர் ஜலம் 2 அவுன்ஸ், ஸ்பிரிட் ஈதர் நைட்ரஸ் 25 துளி, கற்கண்டுபொடி 2 திராம் இவைகளைச்சேர்த்துச் சாப்பிட்டுவர நீர்எரிவு, நீர்ச்சுருக்கு குணமாகும்.*

*கிரிச்சரம் (4)க்கு:-*

*(1) ராஜ அப்பிரேக செந்தூரம்*
*(2) மகா ரஜதபஸ்மம்*
*(3) அப்பிரேக பஸ்மம்*
} *இவைகளைக் கொடுக்க குணமாகும். அன்றியும் 14வது, 16வது அத்தியாயத்தில் அநேக மருந்துகள் காணலாம்.*

*மாவைக்கரைத்ததுபோல் மூத்திரத்துக்கு:-*

*விளாவின கறிஉப்பு திராவகம் 1 திராம், பார்லி அரிசிக்கஞ்சி 1 பையின்ட், சர்க்கரை ½ அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து 2 முதல் 4 அவுன்ஸ் வீதம் தினம் 3 தடவை கொடுக்க குணமாகும்.*

*அஸ்மரி ரோகத்திற்கு-கல்லடைப்புக்கு:-*

*(1) கார்பொனெட் ஆப் பொட்டாஷ் 1/2 முதல் 1 திராம், விளாம்பிசின் பாகு 1½ அவுன்ஸ், குரோசாணி ஓமம் பாவனத்திரவம் 1 முதல் 1½ திராம் இவைகளைச் சேர்த்துக் கொடுக்க குணமாகும்.*

*(2) மகா ரஜதபஸ்மம்*
*(3) அகஸ்தியர்குழம்பு*
} *இவைகளைக் கொடுக்க குணமாகும். செய்முறை இந்த புஸ்தகத்தில் காண்க.*

*மகோதரத்திற்கு-(பெருவயிறுக்கு):-*

*(1) திராக்ஷஉப்பு ½ திராம், நரிவெங்காயத்தூள் 2 கிறேன்ஸ், சுக்குத்தூள் 4 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து 8 மணிக்கு ஒரு தரம் ஜலத்தில் கொடுக்க குணமாகும்.* (Dr.A.T.Thomson).

*(2) திராக்ஷஉப்பு 1 அவுன்ஸ், பொட்டிலுப்பு 2 திராம், வெங்காரம் 2 திராம், டிஜிடெலிஸ் தூள் 20 கிறேன்ஸ், இவைகளைச் சேர்த்து 12 பாகமாக்கி தினம் 2-3 தடவை ஒவ்வொரு பாகமாக ஜலத்தில் கொடுத்துவர குணமாகும்.* (Dr. Copland).

*(3) அகஸ்தியர் குழம்பு*
*(4) லிங்கக் குழம்பு*
*(5) ராஜஏலாதிச் சூர்ணம்*
*(6) துரிசுபஸ்மம்*
*(7) அயச்செந்தூரம்*
*(8) ஆவாரை லேகியம்*

*இவைகளைக் கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.*

*மூத்திரரோகம் (20)க்கு:-*

*ரஜதபஸ்மம் கொடுக்க குணமாகும்.*

**வெள்ளை விழுதலுக்கு:-**

(1) 1 முதல் 4 திராம் நவக்ஷாரத்தை ஒரு பையிண்டு ஜலத்தில் கரைத்து புருஷருக்கு நீர்த்தாரையிலும், ஸ்திரீகளுக்கு அல்குலிலும் அடிக்கடி அடிக்க குணமாகும் (Dr. Waring).

(2) லைகர் பொட்டாஷ் 3 திராம், விளாம்பிசின் கலவை 2 அவுன்ஸ், வால் மிளகுத்தூள் 1 அவுன்ஸ், சுத்தஜலம் 8½ அவுன்ஸ், ஆரஞ்சிப் பழத்தோல்ப் பாணிதம் 1 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து 3 பெரிய கரண்டிவீதம் தினம் 3 தடவைக் கொடுக்க குணமாகும். (Dr. Thomas).

(3) பொட்டிலுப்பு 1 திராம், கர்ப்பூர ஜலம் ½ திராம், குல்கந்து ½ திராம், இவைகளைச் சேர்த்து 30 மாத்திரைகளாக்கி 2 முதல் 10 மாத்திரை தினம் கொடுக்க குணமாகும். (Guibourt).

(4) கோடகசாலை இலையை அரைத்து ½ அவுன்ஸ் பசும்வெண்ணெயில் பாக்களவுவைத்து தினம் 2-3 தடவைக் கொடுத்துவர குணமாகும்.

(5) காலபயிரவ எண்ணெய்
(6) மகா கூழ்ப்பாண்டகிருதம்
(7) வெள்ளீய பஸ்மம்

} இவைகளைக் கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

**வெட்டைக்கு:-**

(1) அகஸ்தியர் குழம்பு
(2) ராஜ ஏலாதிச் சூர்ணம்

} இவைகளைக் கொடுக்க குணமாகும்.

**பிரமியம் (20)க்கு:-**

(1) மேகத்தெண்ணெய்
(2) பொன்னாங்காணி கிருதம்
(3) மகாசந்தநாதித் தயிலம்
(4) ராஜ ஏலாதிச் சூர்ணம்
(5) மகா கூழ்ப்பாண்ட லேகியம்
(6) மகா தூதுளை லேகியம்
(7) மகா கூழ்ப்பாண்ட கிருதம்
(8) கூழ்ப்பாண்ட ஷர்பத்து

இவைகளைக் கொடுக்க குணமாகும். அன்றியும் 14 வது, 16 வது அத்தியாயத்தில் சொல்லிய மருந்துகளை ரோகங்களுக்குத் தக்கபடி மிக்ஸ்செர் செய்து கொடுக்க குணமாகும்.

**நீர்த்தாரையில் ரத்தம், சீழ்வடிதலுக்கு:-**

(1) பறங்கிப்பட்டை, வெள்ளைக்குங்கிலியம், சர்க்கரை வகைக்கு 1 அவுன்ஸ் சூர்ணித்து பசும் நெய்யில் கலந்து பாக்களவுச் சாப்பிட்டுவர குணமாகும்.

**நீர்த்தாரையில் ரத்தம் வடிதலுக்கு:-**

(1) ஒருதிராம் சர்க்கரையை ஒரு அவுன்ஸ் ஓரிலைத்தாமரைச்சாற்றில் சேர்த்து 10 நாள் கொடுத்துவர குணமாகும்.

**நீர்த்தாரையில் சீழ்வடிதலுக்கு:-**

(1) 4 அவுன்ஸ் நீராகாரத்தில் ஒரு திராம் அதிமதுரத்தைச் சூர்ணித்துப் போட்டுக் கொடுக்க குணமாகும்.

**தந்திமேகம்-வெள்ளை விழுதல் இவைகளுக்கு:-**

பால்துத்தம் 10 கிறேன்ஸ், ஜலம் 8 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து (வீக்கம், நோய் இவைகள் குணமான பிறகு) நீர்த்தாரையில் அடிக்க குணமாகும்.

**எலும்புருக்கி ரோகத்துக்கு:-**

(1) பொட்டிலுப்பு 10 கிறேன்ஸ், படிகாரம் 5 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து தினம் 3 தடவைக் கொடுக்க குணமாகும் (Dr. Dewees).

(2) ராஜ[illegible]லாதிச் சூர்ணம் (3) மகாதூதுளை லேகியம் (4) மகா கூழ்ப்பாண்ட லேகியம் இவைகளைக் கொடுக்க குணமாகும்.

**சதை அடைப்புக்கு:-** மகா ரஜதபஸ்மம் கொடுக்க குணமாகும்.

**பிரமேகம் (21)க்கு:-**

(1) * குமட்டிக்காய்வேர், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், கோரைக்கிழங்கு, கஸ்தூரிமஞ்சள் இவைகள் சமமாகச் சேர்த்து நொறுக்கி கசாயஞ்செய்து அதில் தேன், மஞ்சள்தூள் இவைகளைச் சேர்த்துக் கொடுக்க குணமாகும்.

(2) ராஜ அப்பிரேக செந்தூரம்
(3) மேகக்குலாந்தக மாத்திரை
(4) மகாதூதுளை லேகியம்
(5) மகா தாம்பிர பஸ்மம்
(6) ரஜத பஸ்மம்
(7) அப்பிரேக பஸ்மம்
(8) சந்தன ஷர்பத்து
(9) நன்னாரி ஷர்பத்து
(10) மகா சந்தனாதித் தயிலம்.
(11) மஹா ரஜதபஸ்மம்.

இவைகள் இப்புத்தகத்தில் சொல்லியபடி செய்துகொடுக்க குணமாகும். அன்றியும் 14வது, 16வது அத்தியாயத்தில் அநேக மருந்துகளைக் காண்க.

**யோனிப்புற்றுக்கு:-**

(1) நமசிவாய செந்தூரம்
(2) காலபயிரவ எண்ணெய்
(3) மேகத்தெண்ணெய்
(4) மகா ரஜத பஸ்மம்

இவைகள் செய்துகொடுக்க குணமாகும்.

*லிங்கப்புற்றுக்கு:-*

(1) காலபயிரவ எண்ணெய்
(2) மேகத்தெண்ணெய்.
(3) மகா ரஜத பஸ்மம்

இவைகளைச் செய்துகொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

பவுத்திர ரோகம் **(15)**க்கு:-

(1) உலகோத்தம செந்தூரம்
(2) நமசிவாய செந்தூரம்
(3) மகா தாம்பிர பஸ்மம்
(4) ரச மெழுகு
(5) திப்பிலிச்சூர்ணம்

இவைகளைச் செய்துகொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் செய்முறைகள் காண்க.

## அண்டரோகங்கள் (4)க்கு அவுஷதங்கள்

*சதை அண்டரோகத்துக்கு:-*

வெடி உப்பு 5 அவுன்ஸ், நவக்ஷாரம் 5 அவுன்ஸ், ஜலம் 16 அவுன்ஸ், இவைகளைச் சேர்த்து சதை அண்டத்திற்கு கிலேதமாகபோட குணமாகும்.

*அண்டவீக்கத்திற்கு:-*

குட்டித்தக்காளியிலை சேர் 1, தைவேளையிலை சேர் 1, ஆமணக்கெண்ணெய் சேர் ¼, இவைகளைச் சேர்த்து வதக்கிக் கட்ட குணமாகும்.

*சகலஅண்டவாயுக்கு:-*

**அண்டசுண்ணம்:-** ஒரு கோழிமுட்டைக்கு ஒரு சிறு துவாரஞ்செய்து அதில் குப்பைமேனிச்சாற்றை விட்டு குப்பைமேனி இலையை அரைத்து அதற்கு 3 விரற்கடை கனமாக கவசஞ்செய்து பின்பு சீலைமண் செய்து வராக புடம் போட சுண்ணமாகும். அதை எடுத்து 4-6 கிறேன்ஸ் வீதமாக பசும்நெய்யில் கொடுக்க குணமாகும்.

*அண்டரோகம்(4), குடல்விருத்திரோகம் (7) இவைகளுக்கு:-*

(1) முடக்கொத்தான் எண்ணெய்
(2) அகஸ்தியர் குழம்பு
(3) வாதராக்ஷச எண்ணெய்

இவைகள் கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க

*குடல் வாதத்திற்கு:-*

(1) முடக்கொத்தான் எண்ணெய்
(2) வாதராக்ஷச எண்ணெய்
(3) அயச்செந்தூரம்

இவைகளைக் கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

# சரீரத்தின்மேல் காணுஞ் சொறி, சிரங்கு, கிரந்தி, அரையாப்பு, கண்டமாலை, புண், பிளவை, கட்டி, குஷ்டம் முதலியவைகளுக்கு அவுஷதங்கள்.

சொறி, சிரங்கு முதலிய சருமரோகங்களுக்கு:-

(1) திராக்ஷஉப்பு, சர்க்கரை வகைக்கு 2 திராம், கந்தகப்பதங்கம் 1½ திராம் இவைகளைச் சேர்த்து தினம் 2 தடவைக் கொடுக்க குணமாகும் (Dr. W. Ainslie).

(2) நாகபஸ்மம் 1 திராம், கந்தகப்பதங்கம், அபினிபாவனத்திரவம் வகைக்கு ½ திராம், வாதுமைநெய் 1 அவுன்ஸ், வெண்ணெய் 3 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து வயது சென்றவர்களுக்குக் காணும் சொறி சிரங்குகளுக்குத் தடவிவர குணமாகும். (Alibert).

(3) விளாவின கந்தகத்திராவகம் 2 திராம், பன்றிநெய் 2 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து தடவிவர குணமாகும்.

சிரங்குக்கு:-

(1) வீரபத்திர சிந்தாமணி
(2) மகா வல்லாரைகிருதம்
(3) மகாசந்தநாதித் தயிலம்
(4) கணத்தெண்ணெய்
(5) வெங்கடேச எண்ணெய்
(6) சந்திரப்பிரகாச எண்ணெய்
(7) ராஜ ஏலாதிச் சூர்ணம்

இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும். புஸ்தகத்தில் காண்க.

நமைச்சலுக்கு:-

லைகர் அம்மோனிய அசிடேடிஸ் 2 அவுன்ஸ், விளாவின ஹைட்ரொஸையானிக் ஆசிட் 1 திராம், டிங்சர் டிஜிடெலிஸ் 3 திராம், பந்நீர் 5 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து கிலேதமாக செய்து கிழவர்களுக்கு காணும் நமைச்சலுக்கு தடவிவர குணமாகும். (Dr. A.T. Thomson).

மறு, மூட்டு இவைகளுக்கு:-

(1) மிளகை உரைத்து தடவிவர குணமாகும்.
(2) புனுகு தடவிவர குணமாகும்.
(3) ஐயோடைன் பாவனத் திரவம் தடவிவர குணமாகும்.
(4) மீன் எண்ணெய் தடவிவர குணமாகும்.

அக்கிக்கு:-

(1) சிவப்பு காவிக்கல்லை ஜலத்தாலரைத்துத் தடவிவர குணமாகும்.
(2) நீர்வெட்டிமுத்து விரா.2, மலாக்கா சந்தனம் விரா.4, இவைகளை சேர்த்துத் தடவிவர குணமாகும்.

*எச்சித்தழும்புக்கு:-*

பால்துத்தம் 1 திராம், மீன்கொழுப்புப் பிளாஸ்திரி 1 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து தடவிவர குணமாகும் (Dr.E. Wilson).

*சொறிக்கு:-*

(1) விழுதியெண்ணெய்
(2) ராஜ ஏலாதிச் சூர்ணம்
(3) மகா வல்லாரை கிருதம்
(4) சந்திரபிரகாச எண்ணெய்
(5) மேகத்தெண்ணெய்
(6) ரச மெழுகு
(7) கால பயிரவ எண்ணெய்
(8) மகா சந்தநாதித் தயிலம்

இவைகளை செய்துகொடுக்க குணமாகும்.

*ஆண்குறியின் மேல்காணும் ரணத்திற்கு:-*

ரசபஸ்மம் 1 திராம், கல்சுண்ணாம்பு தெளிவு ஜலம் 1 பையிண்டு இவைகளைச் சேர்த்து அதில் துணியை நனைத்து ரணத்தின்மேல் போட குணமாகும்.

*உள்ளங்கையின் சொறிசிரங்குக்கு:-*

லிங்கம் 2 திராம், டிங்சர் ஓபியம் 2 திராம், கந்தகப்பதங்கம் ½ அவுன்ஸ், நெய் 5 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்துத் தடவிவர, குணமாகும். (Dr.E. Wilson).

*சருமரோகத்துக்கு:-*

கந்தகப் புகைச்சல் கொடுக்க குணமாகும். இப்புத்தகத்தில் காண்க.

*ரணத்திற்கு:-*

(1) ஈயப்பிளாஸ்திரி
(2) ஸ்டிகிங்பிளாஸ்திரி
(3) மடல்துத்தசெந்தூரப் பிளாஸ்திரி

இவைகளைச் செய்துபோட குணமாகும்.

*கடிகளுக்கு:-*

(1) ரசகர்ப்பூரம், கந்தகம், வகைக்கு ஒரு திராம், மர எண்ணெய் 2½ திராம் இவைகளைச் சேர்த்து மைபோலரைத்து மறுபடியும் 2 அவுன்ஸ் மரஎண்ணெயை விட்டு கலந்து கடிகளுக்கு பூசி மறுநாள் வெந்நீர் ஸ்நானமும் பிறகு அப்பியங்க ஸ்நானமுஞ் செய்ய குணமாகும்.

(2) வெங்கடேச எண்ணெய் கொடுக்க குணமாகும்.

*மேகரணத்திற்கு:-*

(1) தாம்பிர செந்தூரம்
(2) ரசப்புகைச்சல்
(3) வீரபத்திர சிந்தாமணி
(4) திரிமூர்த்தி செந்தூரம்
(5) க்ஷடாக்ஷர செந்தூரம்
(6) கந்தகலேகியம்
(7) கணத்தெண்ணெய்
(8) குஷ்டகுடாரி எண்ணெய்
(9) ராஜ ஏலாதிச் சூர்ணம்
(10) மேகத்தெண்ணெய்.

(11) நமசிவாய செந்தூரம் (12) காலபயிரவ எண்ணெய்

இவைகளில் எதையாகிலும் இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

மேகப்புண், மேகப்புரைக்கு:-

(1) மகா சந்தனாதித் தயிலம்
(2) ஆனந்தரசவிநோத சூர்ணம்
(3) திருமூர்த்தி சூர்ணம்

} இவைகள் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

கருமேகத்திற்கு:- தாம்பிரமெழுகு செய்து கொடுக்க குணமாகும்.

அரையாப்புக்கட்டிக்கு:-

(1) உலகோத்தம செந்தூரம்
(2) ஆனந்த ரசவிநோத சூர்ணம்
(3) காலபயிரவ எண்ணெய்
(4) ரச மெழுகு.

} இவைகள் கொடுக்க குணமாகும். இன்னும் அநேக மருந்துகளை 14வது அத்தியாயத்தில் காண்க.

மேகம் **(20)**க்கு:-

(1) பொட்டாஸியம் அயொடைட் ½ திராம், குவாசியா கசாயம் 6 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 தடவை கொடுக்க குணமாகும். (Dr. Hooper).

(2) குளோரெட் ஆப் பொட்டாஷ் 20 கிறேன்ஸ், ஜென்சன் கசாயம் 1½ அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து தினம் 3 தடவை கொடுக்க மேகம், மேகரணம் குணமாகும். (Mr. Sayle).

(3) ராஜ அப்பிரக செந்தூரம்
(4) வீரபத்திர சிந்தாமணி
(5) அயச்செந்தூரம்
(6) உலகோத்தம செந்தூரம்
(7) வீரசெந்தூரம்
(8) ருத்திர செந்தூரம்
(9) லகு தாம்பிர பஸ்மம்
(10) மகாதாம்பிர பஸ்மம்
(11) ரஜத பஸ்மம்
(12) தாளக பஸ்மம்
(13) மேகராஜ சுவர்ண வடகம்
(14) மகா ரஜதபஸ்மம்
(15) இராஜ அமிர்தசஞ்சீவி லேகியம்
(16) மகாதூதுளை லேகியம்
(17) மகா வில்வாதித்தயிலம்
(18) மஹா ரஸபஸ்மம்
(19) சுவர்ண ரஜத பஸ்மம்
(20) வீரக்கட்டு
(21) ரசகர்ப்பூரக்கட்டு
(22) வீரமெழுகு
(23) பறங்கிப்பட்டை ரசாயனம்
(24) மகா கூழ்ப்பாண்ட கிருதம்
(25) பொன்னாங்காணி கிருதம்
(26) மகா வல்லாரை கிருதம்
(27) மேககுலாந்தக ஷர்பத்து
(28) கூழ்ப்பாண்ட ஷர்பத்து
(29) மகா அசுவகெந்தி சூர்ணம்
(30) குஷ்டகுடாரி எண்ணெய்
(31) கருவங்க பஸ்மம்
(32) மேகத்தெண்ணெய்

(33) குமரி சஞ்சீவித்தயிலம்

(34) காலமேக ராஜாங்க மாத்திரை

(35) மகா அசுவகந்தி பலா லாக்ஷாத் தயிலம்

இவைகள் இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும். இன்னும் அநேக மருந்துகள் 14வது, 16வது அத்தியாயங்களில் காண்க.

மேகநீருக்கு:-

(1) ராஜ அமிர்தசஞ்சீவி சூர்ணம்
(2) நன்னாரி ஷர்பத்து

இவைகள் கொடுக்க குணமாகும்.

ஒட்டுமேகத்துக்கு:-

பாலைத்தயிலத்தை உபயோகிக்க குணமாகும்.

மேகசூலைக்கு:-

(1) பரங்கிப்பட்டை சூர்ணம்
(2) மகா வல்லாரைகிருதம்

இவைகள் கொடுக்க குணமாகும்.

மேகத்தடிப்புக்கு:-

(1) காலபயிரவ எண்ணெய்
(2) தாம்பிர மெழுகு

இவைகள் கொடுக்க குணமாகும்.

மேகஊறலுக்கு:-

(1) காலபயிரவ எண்ணெய்
(2) மேகத்தெண்ணெய்
(3) வெங்கடேச எண்ணெய்
(4) ராஜ ஏலாதி சூர்ணம்
(5) ராஜ அமிர்த சஞ்சீவி சூர்ணம்
(6) மேக குலாந்தக ஷர்பத்து

இவைகள் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

புற்றுக்கு:-

(1) குஷ்டக்குடாரி எண்ணெய்
(2) உலகோத்தம செந்தூரம்

இவைகள் கொடுக்க குணமாகும்.

துடைவாளைக்கு:-

காலபயிரவ எண்ணெய் கொடுக்க குணமாகும்.

குதிகால், உள்ளங்கால் வெடிப்புக்கு:-

சேங்கொட்டையின் தயிலத்தை கத்தியால் எடுத்து வெடிப்பில் தடவிவர குணமாகும். இது சிலருக்கு ஏற்றுக்கொள்ளாது.

கட்டிகளுக்கு:-

(1) பொட்லிஸ் கட்டவும்
(2) ரஸப்பிளாஸ்திரி போடவும்
(3) கால்பேனம் பிளாஸ்திரி போடவும்
(4) மிருதார்சிங்கிப் பிளாஸ்திரி போடவும்
(5) ஸ்டிகிங்பிளாஸ்திரி போடவும்.

குணமாகும்.

**கட்டியின் ஆரம்பத்தில்:-**

வெங்காயத்தை நெருப்பில் வெதுப்பி அரைத்துப் போட குணமாகும்.

**கட்டிபோல் தடிப்பு, வீக்கம் இவைகளுக்கு:-**

(1) ரசப்பிளாஸ்திரி
(2) அயோடைட் ஆப் பொட்டாசியம் பிளாஸ்திரி.
} இவைகள் போட கரையும்.

**கன்னப்புற்றுக்கு:-** உலகோத்தம செந்தூரத்தைக் கொடுக்க குணமாகும்.

**புழுவெட்டுக்கு:-**

மகா சந்தநாதித் தயிலத்தை ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

**கிரந்தி (9)க்கு:-**

(1) மகாரஜத பஸ்மம்
(2) உலகோத்தம செந்தூரம்
(3) ரசமெழுகு
(4) க்ஷடாக்ஷர செந்தூரம்
(5) மகாவல்லாரைக்கிருதம்.
(6) ஆனந்த ரசவிநோத சூர்ணம்
(7) மேகத்தெண்ணெய்
(8) காலபயிரவ எண்ணெய்
(9) மகா சந்தநாதித் தயிலம்

இவைகளை உபயோகித்தால் குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

(10) பைகார்பொனெட் ஆப் சோடா 30 கிறேன்ஸ், நவக்ஷார உப்பு 5 கிறேன்ஸ், கலம்பாப்பாவனத் திரவம் 1 திராம், ஜென்சன் கஷாயம் 1½ அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து தினம் 2 தடவை கொடுக்க குணமாகும். (Sir.A. Cooper).

**கிரந்தி சூலைக்கு:-** தாளக பஸ்மம் கொடுக்க குணமாகும்.

**பிளவைக்கு:-**

(1) குஷ்டகுடாரி எண்ணெய்
(2) க்ஷடாக்ஷர செந்தூரம்
(3) உலகோத்தம செந்தூரம்
} இவைகள் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

**அக்கினிரணத்திற்கு:-**

மடல்துத்த செந்தூரப் பிளாஸ்திரியைப் போட குணமாகும்.

**தோல் எரிவுக்கு:-**

மடல்துத்த செந்தூரப் பிளாஸ்திரியைப் போட குணமாகும்.

**கண்டமாலை (18)க்கு:-**

(1) குஷ்டகுடாரி எண்ணெய்
(2) காலபயிரவ எண்ணெய்
(3) மகா சந்தநாதித் தயிலம்
(4) உலகோத்தம செந்தூரம்

இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி இவைகளைச் செய்துகொடுக்க தீரும்.

**சர்வாங்கம் காணும் மருட்கள், கண்டமாலை, குஷ்டம் இவைகளுக்கு:-**

4 சேர் நல்லெண்ணெயும், 150 சவுரிப்பழத்தை பொடித்து 12 படி ஜலத்தில் போட்டு ஒரு படியாகும்படி எரித்து வடித்த கஷாயமும் ஒன்றாக்கி, அதில் 15 விராகனிடை கருஞ்சீரகத்தை மேற்படி கஷாயத்தால் அரைத்துக் கரைத்து, எரித்து வடித்து 8 மண்டலம் ஸ்நானஞ் செய்துவர குணமாகும். **(இச்சாபத்தியம்)** இது வெகு நல்லமருந்து.

குஷ்டம் **(18)**க்கு:-

| | | | |
|---|---|---|---|
| (1) | ருத்திர செந்தூரம் | (9) | தாம்பிரமெழுகு |
| (2) | வீரபத்திர சிந்தாமணி | (10) | கந்தக ரசாயனம் |
| (3) | மகாதாம்பிர பஸ்மம் | (11) | காலபயிரவ எண்ணெய் |
| (4) | தாளகபஸ்மம் | (12) | மகா வல்லாரை கிருதம் |
| (5) | சுவர்ண பஸ்மம் | (13) | குஷ்டகுடாரி எண்ணெய் |
| (6) | உலகோத்தம செந்தூரம் | (14) | விளாரித் தயிலம் |
| (7) | க்ஷடாக்ஷர செந்தூரம் | (15) | குஷ்டநாசத் தயிலம் |
| (8) | ரசகர்ப்பூரக்கட்டு | (16) | மகா சந்தநாதித் தயிலம் |

இவைகளை உபயோகிக்க குணமாகும். செய்முறை இப்புஸ்தகத்தில் காண்க.

கபால குஷ்டத்திற்கு:-

(1) உலகோத்தம செந்தூரம்
(2) வீரபத்திர சிந்தாமணி

இவைகளை கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

கருங் குஷ்டத்திற்கு:-

(1) சுவர்ண பஸ்மம்
(2) ஆனந்த ரசவினோத சூர்ணம்
(3) விளாரித் தயிலம்.

இவைகளைக் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

வெண் குஷ்டத்திற்கு:-

(1) விளாரித் தயிலம்
(2) சுவர்ண பஸ்மம்
(3) ஆனந்த ரசவினோத சூர்ணம்.
(4) உலகோத்தம செந்தூரம்
(5) உதயாதித்திய மாத்திரை

இவைகள் இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

செங் குஷ்டத்திற்கு:-

(1) விளாரித் தயிலம்
(2) சுவர்ண பஸ்மம்
(3) ஆனந்த ரசவினோத சூர்ணம்

இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும்.

## பீநச ரோகங்கள் (18)க்கு அவுஷதங்கள்

பீநசரோகம் **(18)**க்கு:-

(1) வழுக்கையுள்ள இளநீர் ஜலம் நல்லெண்ணெய், பசும்பால், வகைக்கு பையிண்டு 2 ½, சேர்த்து அதில் மஞ்சிஷ்டிக் கிழங்கு, அதிமதுரம்,

சந்தனம், வெட்டிவேர், தாமரை வளையம், கஸ்தூரிமஞ்சள், விலாமிச்சுவேர், ஏலம், தேற்றாங்கொட்டை, சீரகம், கோரைக்கிழங்கு, பச்சிலை, செங்கழுநீர்க் கிழங்கு, பூலாக்கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, சண்பகமொட்டு, குங்கும்ப்பூ, புழுகுச்சட்டம், வகைக்கு 1 திராம், இவைகளில் குங்குமப்பூ, புழுகுச்சட்டம் தவிர மற்றவைகளை மேற்படி பசும்பாலாலரைத்துக் கரைத்து எரித்து வடித்து அதில் மேற்படி குங்குமப்பூவும் புழுகுச்சட்டமும் சூர்ணித்து சேர்த்து சீசாவிலிட்டு 2 நாளுக்கு ஒரு தரம் ஸ்நானஞ் செய்து வர குணமாகும்.

(2) பீநச நாசத் தயிலம்
(3) இராஜமார்த்தாண்ட லேகியம்
} இவைகள் உபயோகித்தால் குணமாகும். செய்முறை இப்புஸ்தகத்தில் காண்க.

*ரத்த பீநசத்திற்கு:-*

படிகாரம் 2 திராம், ஜலம் 6 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து முகரவாவது, அல்லது துணியைத் தோய்த்து நாசியில் வைத்துக்கொள்ளவாவது செய்தால் குணமாகும்.

*சறாய்பீநசம் - தடித்த பீநசம் இவைகளுக்கு:-*

மார்த்தாண்ட பயிரவ தயிலத்தைச் செய்து ஸ்நானஞ்செய்து வர குணமாகும்.

*நீர் பீநசத்திற்கு:-*

பச்சை மஞ்சள், வெற்றிலை, நொச்சி, ஆதண்டை, கரிசாலை, இவைகளின் சாறு வகைக்கு 10 அவுன்ஸ், வெங்காயச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 40 அவுன்ஸ், மிளகு சூர்ணம் 10 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து எரித்து வடித்து ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

## குன்மரோகங்கள் (8)க்கு அவுஷதங்கள்

*குன்மம் (8)க்கு:-*

(1) ராஜ சங்குவடி மாத்திரை
(2) லகு சங்குவடி மாத்திரை
(3) குமட்டிக்காய் குழம்பு
(4) பாவன ஓமம்
(5) லிங்கக் குழம்பு
(6) திரிமூர்த்தி செந்தூரம்
(7) வீரபத்திர சிந்தாமணி
(8) அயச்செந்தூரம்
(9) தாம்பிர பஸ்மம்
(10) லவண சூர்ணம்
(11) மகா அசுவகெந்தி சூர்ணம்
(12) ஸ்ரீ தேவி எண்ணெய்
(13) அயக்காந்த வடகம்
(14) பாவனக் கடுக்காய்
(15) பஞ்சாக்ஷர செந்தூரம்
(16) உலகோத்தம செந்தூரம்
(17) போஜனகுடாரி மாத்திரை
(18) ராஜ மார்த்தாண்ட லேகியம்

(19) துரிசு பஸ்மம்
(20) லவண பஸ்மம்
(21) நாக பஸ்மம்
(22) ராஜ லவண சூர்ணம்
(23) குன்மக்குடாரி சூர்ணம்
(24) கலிங்காதிச் சூர்ணம்.
(25) ராஜ வில்வாதி லேகியம்
(26) இஞ்சி லேகியம்
(27) பொன்னாங்காணித் தயிலம்
(28) குமரி சஞ்சீவித் தயிலம்
(29) மகா வில்வாதித் தயிலம்

இவைகளில், இந்த புஸ்கத்தில் சொல்லியபடி, எதைச் செய்து கொடுத்த போதிலும் குணமாகும். இன்னும் அநேக மருந்துகள் 14வது, 16வது அத்தியாயங்களில் காண்க.

## சூலை ரோகங்கள் (18)க்கு அவுஷதங்கள்

சூலை (18)க்கு:-

(1) உலகோத்தம செந்தூரம்
(2) ருத்திர செந்தூரம்
(3) ரச செந்தூரம்
(4) திரிமூர்த்தி செந்தூரம்
(5) அயச்செந்தூரம்
(6) மகா தாம்பிர பஸ்மம்
(7) ரசகர்ப்பூரக் கட்டு
(8) லிங்க மெழுகு
(9) குமட்டிக்காய்க் குழம்பு
(10) தக்ஷிணாமூர்த்தி லேகியம்
(11) வாதகோப நாஷ எண்ணெய்
(12) காலபயிரவ எண்ணெய்.
(13) மகா அசுவகெந்திபலா லாக்ஷா தயிலம்.
(14) ராஜாங்க கொம்பரக்குத் தயிலம்
(15) ராஜ கஜ கேசரி மாத்திரை.
(16) மேககுலாந்தக ஷர்பத்து

இந்த புஸ்தகத்தில் சொல்லிய இவைகளைச் செய்துக் கொடுக்க குணமாகும் இன்னும் அநேக மருந்துகள் 14-16-17-19 அத்தியாயங்களில் காண்க.

வெடி சூலைக்கு:-

(1) குஷ்டக்குடாரி எண்ணெய்
(2) மேகத்தெண்ணெய்

இவைகளை இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்துக் கொடுக்க குணமாகும்.

கர்ப்பசூலைக்கு:-

விழுதி எண்ணெய் செய்துகொடுக்க குணமாகும்.

## பாண்டுரோகங்கள் (5)க்கு அவுஷதங்கள்

விஷப்பாண்டுக்கு:-

ராஜவில்வாதி லேகியம் செய்துகொடுக்க குணமாகும்.

**கை,கால் ஊறலுக்கு:-**
நாகபஸ்மம் இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

**பித்த பாண்டுக்கு:-**
(1) சுயமக்கினி
(2) மகா தாளிசப்பத்திரிச் சூர்ணம்
இவைகளைக் கொடுக்க குணமாகும்.

**தேகவீக்கத்திற்கு:-**
(1) அயச்செந்தூரம்
(2) துரிசு பஸ்மம்
(3) அயக்காந்த வடகம்
இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

**பாண்டு (5)க்கு:-**
(1) மண்டூர செந்தூரம்
(2) அயமெழுகு
(3) அயக்காந்த செந்தூரம்
(4) அயச்செந்தூரம்
(5) நாராயணமண்டூர செந்தூரம்
(6) திரிலோகசு செந்தூரம்
(7) ராஜ சித்தாதி லேகியம்
(8) அகஸ்தியர் குழம்பு
(9) அயக்காந்த வடகம்
(10) துரிசு பஸ்மம்
(11) அய பஸ்மம்
(12) ராஜ அமிர்தசஞ்சீவி லேகியம்
(13) பலகாரிச் சூர்ணம்
(14) மகா அசுவகெந்திச் சூர்ணம்
(15) கணத்தெண்ணெய்
(16) மகா அசுவகந்தி பலா லாக்ஷா தயிலம்
(17) குமரி சஞ்சீவித்தயிலம்
(18) ராஜாங்க கொம்பரக்குத் தயிலம்

இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும். இன்னும் அநேக மருந்துகள் 14 வது, 16 வது அத்தியாயங்களில் காண்க.

## சோகை ரோகங்கள் (9)க்கு அவுஷதங்கள்

**சோபை - சோகை (9)க்கு:-**
(1) நாராயணமண்டூர செந்தூரம்
(2) அயச்செந்தூரம்
(3) சுயமக்கினி
(4) திரிலோக செந்தூரம்
(5) துரிசு பஸ்மம்
(6) அயபஸ்மம்
(7) ராஜ அமிர்தசஞ்சீவி லேகியம்
(8) ராஜ சிந்தாதி லேகியம்
(9) மகாகூழ்ப்பாண்ட லேகியம்
(10) அய மெழுகு
(11) அயக்காந்த வடகம்

இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி இவைகளை செய்து கொடுக்க குணமாகும். அன்றியும் 14வது அத்தியாயத்தில் அநேகமருந்துகளைக் காண்க.

**தேகவெளுப்புக்கு:-**
(1) மகாராஜாங்க கொம்பரக்குத் தயிலம்
(2) அயச்செந்தூரம்
(3) அயக்காந்த செந்தூரம்
(4) மண்டூர செந்தூரம்.
இந்த புஸ்தகத்தில் சொல்லிய படி இவைகளைச் செய்து கொடுக்கக் குணமாகும்.

## மூலரோகங்கள் (8)க்கு அவுஷதங்கள்

*மூலரோகம் (8)க்கு:-*

(1) நிலவாரை லேகியம் 1 அவுன்ஸ், கந்தக பதங்கம் 4 திராம், திராக்ஷஉப்பு 1½ திராம், சர்க்கரைப்பாகு தேவையானது இவைகளைச் சேர்த்து ஒரு திராம் வீதம் படுக்கைக்குப் போகுங் காலத்தில் சாப்பிட குணமாகும் (Dr.W. Ainslie.)

(2) பிரம்மாநந்த பயிரவ மாத்திரை (4) திரிமூர்த்தி சூர்ணம்
(3) வீரபத்திர சிந்தாமணி (5) ஆனந்த ரசவிநோதச் சூர்ணம்

இவைகள் கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

*(6) அஷ்டமூலநாச லேகியம்:-*

கருணைக்கிழங்கை துண்டுகளாக்கி உலர்த்தி 32 பலம் தூக்கி அத்துடன் சித்திரமூலம் பலம் 16, சுக்கு பலம் 4, மிளகு பலம் 2, சேர்த்து சூர்ணித்து வெல்லம் பலம் 108, சேர்த்து லேகிய ரூபமாக்கி தினம் பாக்களவு சாப்பிட்டுவர மஹா உபத்திரவத்தைத் தருகின்ற மூலரோகம் 8ம் தீரும்.

*ரத்தமூலத்திற்கு:-*

படிக்காரம் ஜலத்தில் கரைத்து அதில் துணியை நனைத்து சுரமில்லாத போது மூலத்தின்மேல் போட ரத்தம் நிற்கும்.

*சீழ்மூலத்திற்கு:-*

ஒரு பலம் நெய்யைக் காய்ச்சி அதில் 2 பலம் வெங்காயத்தைச் சிதைத்துப்போட்டு பதத்தில் எடுத்துச் சாப்பிட்டுவர குணமாகும்.

*உள்மூலத்திற்கு:-* சுயமக்கினியை செய்துகொடுக்க குணமாகும்.

*மூலமுளைக்கு:-*

(1) எருமைத்தயிரால் நீர்பூலா இலையை அரைத்து மேற்படி தயிரில் கரைத்து தினம் 2 தடவை 6 நாள் கொடுக்க குணமாகும்.

(2) பிரமாநந்த பயிரவ மாத்திரை
(3) நாக பஸ்மம்
} இவைகள் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

*மூலம் வெளிப்படுதலுக்கு:-*

கற்றாழைச்சோற்றை அலம்பி ஆசனத்தின்மேல் வைத்துக் கட்ட தீரும்.

மூலச்சூட்டுக்கு:-

(1) ராஜ ஏலாதிச் சூர்ணம்
(2) சந்தன ஷர்பத்து
(3) பொன்னாங்காணி கிருதம்.
(4) சந்திரப்பிரகாச எண்ணெய்
(5) புளியாரை எண்ணெய்

இவைகள் செய்துகொடுக்க குணமாகும்.

## பித்தரோகங்கள் 40க்கு அவுஷதங்கள்

பித்தரோகம் **40**-க்கு:-

(1) அயக்காந்தச் செந்தூரம்
(2) மண்டூர செந்தூரம்
(3) துரிசு பஸ்மம்
(4) பவள பஸ்மம்
(5) மகா தாம்பிர பஸ்மம்
(6) ராஜ வில்வாதி லேகியம்
(7) நாகேசுவரத் தயிலம்
(8) சர்வேசுவரத் தயிலம்
(9) மகா சந்தனாதித் தயிலம்
(10) குமரிசஞ்சீவித் தயிலம்
(11) ராஜ மார்த்தாண்ட லேகியம்
(12) போஜனகுடாரி மாத்திரை
(13) அகஸ்தியர் குழம்பு
(14) செண்முக வடகம்
(15) பாவனக் கடுக்காய்
(16) மகாகூழ்ப்பாண்ட கிருதம்
(17) இஞ்சி லேகியம்
(18) மாதுளம்பழ ஷர்பத்து
(19) திரிநேத்திர சூர்ணம்
(20) பஞ்சமுகச் சூர்ணம்
(21) ராஜ ஏலாதிச் சூர்ணம்
(22) ராஜ அமிர்தசஞ்சீவி சூர்ணம்
(23) ராஜ லோகநாத ரசபஸ்மம்.

இவைகளைச் செய்துகொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

பித்தகாங்கைக்கு:-

திராக்ஷப்பழ ஷர்பத்து செய்து கொடுக்க குணமாகும்.

பித்த எரிவுக்கு:- இஞ்சிலேகியம் செய்து கொடுக்க குணமாகும்.

கைகால் எரிவுக்கு:-

(1) ராஜ அப்பிரேக செந்தூரம்
(2) மகா கூழ்ப்பாண்ட கிருதம்
(3) பொன்னாங்காணி கிருதம்
(4) கூழ்ப்பாண்ட ஷர்பத்து
(5) கீழாநெல்லித் தயிலம்
(6) திராக்ஷ ஷர்பத்து
(7) அப்பிரேக செந்தூரம்
(8) சந்திரப்பிரகாச எண்ணெய்
(9) மகா தாளிசப்பத்திரி சூர்ணம்.
(10) மகா சந்தனாதித் தயிலம்
(11) மகா மிருகாமலத்தயிலம்
(12) மகா அஸ்வகெந்திபலா லாக்ஷா தயிலம்
(13) ராஜ அமிர்தசஞ்சீவி சூர்ணம்
(14) பொன்னாங்காணித் தயிலம்
(15) பாலை எண்ணெய்
(16) வெந்திய எண்ணெய்
(17) நன்னாரிவேர் ஷர்பத்து

இவைகளில் எதையாகிலும் செய்து கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க.

தேக எரிவுக்கு:-

(1) மகா மிருகாமலத் தயிலம்
(2) மகா அசுவகெந்திபலாலாக்ஷாத் தயிலம்
(3) கீழாநெல்லித் தயிலம்
(4) பொன்னாங்காணித் தயிலம்
(5) பாலை எண்ணெய்
(6) வெந்திய எண்ணெய்
(7) ராஜ வில்வாதி லேகியம்
(8) பொன்னாங்காணி கிருதம்

இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும்.

பித்தவாயுக்கு:-

(1) போஜனகுடாரி மாத்திரை
(2) பேரீச்சங்காய் கிருதம்
(3) கதலி லேகியம்
(4) மகா மிருகாமலத் தயிலம்.
(5) இஞ்சி லேகியம்
(6) பித்தராஜாங்கச் சூர்ணம்
(7) திரிநேத்திர சூர்ணம்

இவைகள் செய்து கொடுக்க குணமாகும்.

பித்தவெட்டைக்கு:-

(1) ராஜ சிந்தாதி லேகியம்
(2) புளியாரை கிருதம்
(3) அய பஸ்மம்
(4) அய மெழுகு
(5) அகஸ்தியர் குழம்பு
(6) கர்ப்பூரசலாசத்து பஸ்மம்.
(7) மகா தாளிசப்பத்திரி சூர்ணம்
(8) பித்தராஜாங்கச் சூர்ணம்
(9) மகா அசுவகெந்திபலாலாக்ஷா தயிலம்
(10) மகா மிருகாமலத் தயிலம்
(11) ராஜாங்க கொம்பரக்குத் தயிலம்

இவைகள் செய்து கொடுக்க குணமாகும்.

பித்தசமனத்திற்கு:- பித்தஹர சூர்ணம் செய்து கொடுக்க குணமாகும்.

ரத்தப்பித்தத்திற்கு:-

(1) கீழா நெல்லித்தயிலத்தை செய்து ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.
(2) படிகாரம் 1 திராம், விளாவின கந்தகத்திராவகம் 1 1/2 திராம், சர்க்கரைப்பாகு 4 திராம், ரோஜாப்பூக் கசாயம் 8 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து அதில் ஆறில் ஒரு பங்கு கொடுத்துவர குணமாகும். (Dr. Druitt).

பித்தவரட்சிக்கு:-

குமரிசஞ்சீவித் தயிலத்தை ஸ்நானஞ்செய்துவர குணமாகும்.

பித்தமயக்கத்திற்கு:-

(1) கழுதைப்பாலால் நாயுருவி அரிசியை அரைத்துக் கொடுக்க தீரும்.
(2) மகா சந்தனாதித் தயிலம்
(3) இஞ்சி லேகியம்
(4) புளியாரை கிருதம்
(5) சர்வேசுவர ரசநஸ்யம்

இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும். இன்னும் அநேக மருந்துகளை 14வது, 16வது அத்தியாயங்களில் காண்க.

## வாதரோகங்கள் (80)க்கு அவுஷதங்கள்

*வாதம் (80)க்கு:-*

(1) அப்பிரககோரோசன மாத்திரை
(2) ரச மாத்திரை
(3) லிங்க மாத்திரை
(4) வாதராக்ஷஸ மாத்திரை
(5) நமசிவாய செந்தூரம்
(6) ரசவீர செந்தூரம்
(7) அயக்காந்த செந்தூரம்
(8) உலகோத்தம செந்தூரம்
(9) வீர செந்தூரம்
(10) லிங்க செந்தூரம்
(11) ரச செந்தூரம்
(12) மகா தாம்பிர பஸ்மம்
(13) வீர பஸ்மம்
(14) ஸ்ரீதேவி எண்ணெய்
(15) வீரக்கட்டு
(16) வீர மெழுகு
(17) லிங்க மெழுகு
(18) குமட்டிக்காய்க் குழம்பு
(19) அகஸ்தியர் குழம்பு
(20) திப்பிலி ரசாயனம்
(21) லிங்கக்குழம்பு
(22) பறங்கிப்பட்டை ரசாயனம்
(23) செண்முக வடகம்
(24) சவுபாக்கிய வடகம்
(25) ராஜமார்த்தாண்ட லேகியம்
(26) ரஜா ஏலாதிச் சூர்ணம்
(27) மகா அசுவ கெந்திபலாலாக்ஷா தயிலம்
(28) இஞ்சி லேகியம்
(29) திரிலோகசூடாமணி மாத்திரை
(30) ராஜ லோகநாத ரசபஸ்மம்

இவைகளை இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும். அன்றியும் 14வது, 16வது அத்தியாயங்களில் அநேக மருந்துகளைக் காண்க.

வாத ரோகங்களுக்கு மேல் பூசும் அவுஷதங்கள்:-

(1) கர்ப்பூரத்தயிலம் 4 திராம், கந்தகத்திராவகம் 1½ திராம், ஆலிவ் எண்ணெய் 1½ அவுன்ஸ், இவைகளைச் சேர்த்துத் தேய்த்தால் நோய் குணமாகும். (Mr. Pearson)

(2) நவக்ஷார ஜெயநீர் 2 திராம், சவுக்காரப்பூசத்தயிலம் 1 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து நோயுள்ள இடத்தில் போட்டுத் தேய்த்தால் குணமாகும் (Dr. Druitt).

(3) * வெங்காரம், பெருங்காயம், தேவதாரம், சதகுப்பை, இந்துப்பு, வசம்பு, கடுக்காய் இவைகளை சமமாகச் சேர்த்து சூர்ணித்து எருக்கம் பாலால் மைபோலரைத்துத் தடவிவர நோவு குணமாகும்.

பக்கவாயுக்கு:-

(1) துரிசு பஸ்மம்
(2) அயச்செந்துரம்
} இவைகளைக் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

மேகவாயுக்கு:-

(1) ராஜ அப்பிரக செந்தூரம்
(2) அப்பிரேக் பஸ்மம்
(3) அருணாசல லேகியம்
(4) கந்தக லேகியம்

இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும்.

மூலவாயுக்கு:- அகஸ்தியர் குழம்பைக் கொடுக்க குணமாகும்.

உஷ்ண வாயுக்கு:-

(1) போஜனகுடாரி மாத்திரை
(2) திரிநேத்திரச் சூர்ணம்
(3) கதலி லேகியம்.
(4) பேரீச்சங்காய்க் கிருதம்
(5) பாவன மிளகு.
(6) பாவனத் திப்பிலி

இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும்.

கீல்வாதத்திற்கு:-

ரேவல் சின்னி 6 கிறேன்ஸ், கார்போநெட் ஆப் சோடா 15 கிறேன்ஸ், சலம்பாத்தூள் 4 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து 2 அவுன்ஸ் ஜலத்தில் கொடுக்க குணமாகும்.

சந்நி சிலேஷ்மத்துக்கு:-

(1) நவக்ஷாரம் (Sal Ammoniac) 12 கிறேன்ஸ், ஸின்கோனாக் கசாயம் 1½ அவுன்ஸ், இவைகளைச் சேர்த்து தினம் 2 தடவைக் கொடுக்க குணமாகும். (Dr.H.W. Fuller).

(2) பொட்டிலுப்பு 1 திராம், கார்பொனேட் ஆப் பொட்டாஷ் ½ திராம், கார்பொனெட் ஆப் மாக்னிஷியா ½ திராம், சர்க்கரை 6 திராம், இவைகளை மெத்த ஜலத்தில் சேர்த்து ஒரு தேயிலைக் கரண்டி வீதம் 2 மணிக்கு ஒருதரம் கொடுத்துவர குணமாகும். (Dr. Greiner).

வாயுக்கு:-

(1) வீரபத்திர சிந்தாமணி
(2) கல்லுப்பு செந்தூரம்
(3) நாராயணமண்டூர செந்தூரம்
(4) வீர பஸ்மம்
(5) கதலி பஸ்மம்
(6) லவண பஸ்மம்
(7) லிங்கக்கட்டு
(8) ரசகர்ப்பூரக்கட்டு
(9) மனோசிலை மாத்திரை
(10) போஜனக் குடாரி மாத்திரை
(11) அகஸ்தியர் குழம்பு
(12) வாத ஹர வடகம்
(13) அயக்காந்த வடகம்
(14) ரச பஸ்மம்
(15) கண்டத்திப்பிலி லேகியம்
(16) பாவனக் கடுக்காய்
(17) ராஜஅமிர்த சஞ்சீவி லேகியம்
(18) ராஜ சிந்தாதி லேகியம்
(19) அருணாசல லேகியம்
(20) பஞ்சமுகச் சூர்ணம்.

(21) ரச லிங்க மெழுகு (22) பாவ்ன் ஓமம்

இவைகளை இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும். இன்னும் அனேக மருந்துகள் 14-16-17-19 அத்தியாயங்களில் காணலாம்.

கை, கால் முடக்குக்கு:-

(1) குமட்டிக்காய் குழம்பு
(2) கால பயிரவ எண்ணெய்
(3) திரிமூர்த்தி செந்தூரம்

இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும்.

## அபஸ்மார ரோகங்கள் (4)க்கு அவுஷதங்கள்

அபஸ்மாரம் (4)க்கு:-

(1) மஹா வங்கபஸ்மம்
(2) மகா கருவங்க பஸ்மம்
(3) காலபயிரவ நஸ்யம்

இவைகளை உபயோகித்தால் குணமாகும். இன்னும் அநேக மருந்துகள் 14வது அத்தியாயத்தில் காண்க.

## பயித்திய ரோகங்கள் (6)க்கு அவுஷதங்கள்

பயித்தியரோகம் (6)க்கு:-

(1) மகா கருவங்க பஸ்மம் செய்து கொடுக்க குணமாகும்.
(2) ஸ்ரீ தேவி எண்ணெய் செய்து கொடுக்க குணமாகும்.

பிரமைக்கு:-

(1) உலகோத்தமத் தயிலம்
(2) ஸ்ரீ தேவி எண்ணெய்

இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும்.

## மூர்ச்சை ரோகங்கள் (4)க்கு அவுஷதங்கள்

மூர்ச்சை (4)க்கு:-

(1) மஹா வங்கபஸ்மம்
(2) மகா கருவங்க பஸ்மம்
(3) ஸ்ரீ தேவி எண்ணெய்

இவைகள் செய்துகொடுக்க குணமாகும். செய்முறைகள் இப்புஸ்தகத்தில் காண்க.

## அஜீர்ண ரோகங்கள் (6)க்கு அவுஷதங்கள்

அஜீர்ணரோகம் (6)க்கு:-

(1) சண்முகச்சூர்ணம்
(2) ராஜமார்த்தாண்ட லேகியம்
(3) லவண பஸ்மம்
(4) சண்முக வடகம்
(5) பாவன ஓமம்
(6) அஜீர்ணகண்ட ரசமாத்திரை.

(7) ராஜ சங்குவடி மாத்திரை

இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும். செய்முறை இப்புஸ்தகத்தில் காண்க.

(8) கலம்பாக் கசாயம் 5 அவுன்ஸ், பைகார்பொனெட் ஆப் பொட்டாஷ் 1 திராம், ஜென்சன் கலவைப் பாவனத்திரவம் 3 திராம், இவைகளைச் சேர்த்து 3 பெரிய கரண்டி வீதம் கொடுக்க குணமாகும். (Dr. Babington)

(9) நவக்ஷாரஉப்பு 30 கிறேன்ஸ், கார்பொனெட் ஆப் சோடா 1 திராம், குவாஷியக் கசாயம் 6 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து ஒரு தடவைக்கு ஒரு அவுன்ஸ் கொடுக்க குணமாகும். (Dr. Hooper)

## அக்கினி மந்தரோகத்திற்கு அவுஷதங்கள்

அக்கினிமந்த ரோகத்திற்கு:-

(1) லகு சங்குவடி மாத்திரை
(2) போஜன குடாரி மாத்திரை
(3) லவண பஸ்மம்
(4) அயக்காந்த செந்தூரம்
(5) கல்லுப்பு செந்தூரம்
(6) திரிநேத்திரச் சூர்ணம்
(7) ராஜசிந்தாதி லேகியம்
(8) பேரீச்சங்காய் கிருதம்
(9) நாராயணமண்டூர செந்தூரம்
(10) ராஜமார்த்தாண்ட லேகியம்
(11) கந்தக ரசாயனம்
(12) சென்முக வடகம்
(13) பாவனக் கடுக்காய்
(14) பாவன சீரகம்
(15) பாவன மிளகு
(16) பாவன ஓமம்
(17) பயிரவ எண்ணெய்
(18) அக்கினிச் சூர்ணம்
(19) சென்முகச் சூர்ணம்
(20) மகா அசுவகெந்திபலாலாக்ஷாத் தயிலம்

இவைகளில் எதைச் செய்து கொடுத்தபோதிலும் குணமாகும். இந்த புஸ்தகத்தில் செய்முறைகள் காண்க.

(21) கர்ப்பூர ஜலம் 1½ அவுன்ஸ், பரிமள நவக்ஷாரமது ½ திராம், அபினிப் பாவனத் திரவம் 7 துளி, மாக்னிஷியா கார்பொனெட் 20 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து படுக்கைக்குப் போகும் போது சாப்பிட குணமாகும். (Mr. Brande).

இன்னும் அநேக மருந்துகள் 14வது, 16வது அத்தியாயங்களில் காண்க.

## வாந்தி ரோகங்கள் (5)க்கு அவுஷதங்கள்

வாந்தி (5)க்கு:-

(1) புளியாரைக் கிருதம்
(2) திப்பிலி ரசாயனம்
(3) ராஜமார்த்தாண்ட லேகியம்
(4) பஞ்சமுகச் சூர்ணம்
(5) ராஜ வில்வாதி லேகியம்
(6) இஞ்சி லேகியம்

இவைகளில் எதைச் செய்து கொடுத்த போதிலும் குணமாகும்.

இன்னும் அநேக நல்ல மருந்துகள் 14-16-18-19 இந்த அத்தியாயங்களில் காண்க. செய்முறைகள் இப்புஸ்தகத்தில் காணலாம்.

## தாக ரோகங்கள் (6)க்கு அவுஷதங்கள்

**தாகம் (6)க்கு:-**

(1) மகா தாளிசப்பத்திரி சூர்ணம்
(2) ஆவாரை லேகியம்
} இவைகளைச் செய்து கொடுக்க குணமாகும்.

(3) விளாவின தீ முறுகல் பாஷாணத் திராவகம் 2 திராம், வடித்த கஞ்சியாவது அல்லது பார்லி அரிசி கஞ்சியாவது 2 பையிண்ட் இவைகளைச் சேர்த்துக் கொடுக்க தாகம் தீரும்.

## வித்திரிதிகட்டி 17, பவுத்திரம் 15, அரையாப்பு, ரணம் இவைகளுக்கு

**வித்திரிதிசஞ்சீவி எண்ணெய்:-** பொடுதலை, கோழியாவரை, நிலவாகை, அவுரி, பிரமி, சின்னி, மலைவேம்பு, சங்கங்குப்பி, கழற்சி, வெள்ளருகு, காட்டாமணக்கு இவைகளின் சாறு வகைக்கு படி 1, சிற்றாமணக்கெண்ணெய் படி 8, சேர்த்து, அதில் நீர்வெட்டிமுத்து, நேர்வாளப்பருப்பு, திப்பிலி, மஞ்சள், வசம்பு, கருஞ்சீரகம், கடுகுரோகிணி, காட்டு சீரகம் வகைக்குப் பலம் 4, வெள்ளைப் பூண்டு, கடுக்காய்வகைக்கு சேர் 1, மேற்படி சாற்றால் அரைத்து கரைத்து எரித்து வடித்து 2-4 விரா. வீதம் காலையில் 10 நாள் சாப்பிட விரேசனமாகித் தீரும். பத்தியம் புளி, உப்பு தள்ளவும்.

## பீலிகரோகங்கள் (4)க்கு அவுஷதங்கள்

**பீலிக சொபாரோகத்துக்கு:-**

(1) புரோமைட் ஆப் பொட்டாசியம் 3 கிறேன்ஸ், கர்ப்பூரஜலம் 1 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து தினம் 3 தடவை கொடுக்க குணமாகும். (Dr. Williams).

(2) புளியாரை கிருதம், இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

## விக்கல் ரோகங்கள் (5)க்கு அவுஷதங்கள்

**விக்கல் (5)க்கு:-**

(1) மகாதாளிசப்பத்திரிச் சூர்ணம்
(2) ராஜ மார்த்தாண்ட லேகியம்
} இவைகளைக் கொடுக்க குணமாகும்.

(3) தாமரைப்பருப்பை அரைத்து பாக்களவு வெந்நீரில் கொடுக்க குணமாகும்.

## மசூரிகை ரோகங்கள்-8க்கு அவுஷதங்கள்

### மசூரிகை ரோகங்களின் லட்சணங்கள் முதலியவைகளைக் காண்க.

| மசூரிகை ரோகங்களின் பெயர்கள் | மசூரிகை ரோகங்களின் லட்சணங்கள் | அம்மை காணும் நாள் | அம்மை நீர்கட்டும் நாள் | அம்மை இறங்கும் நாள் | ஸ்நானஞ் செய்யும் நாள் |
|---|---|---|---|---|---|
| கல்லு அம்மை | சங்கங்களி போல் கொப்பளங்கள், வாந்தி, பேதி, கடூர சுரம், இவைகள் காணும். | 3ம் | 7ம் | 10ம் | 11ம் |
| பால் அம்மை | கடூர சுரம், கொப்பளங்கள் இவைகள் காணும் | 3ம் | 7ம் | 9ம் | 15ம் |
| வரகு அம்மை | சர்வாங்கம் வரகு அரிசியைப்போல் கொப்பளங்கள் ரத்தமூத்திரம், கடூரசுரம் இவைகள் காணும் | 3ம் | 7ம் | 11ம் | 13ம் |
| கொள்ளு அம்மை | கொள்ளுபோல் கொப்பளங்கள், வலுப்பு, சுரம், சன்னி இவைகள் காணும் | 3ம் | 7ம் | 13ம் | 16ம் |
| உப்பு அம்மை | சர்வாங்கம் உப்பைப்போலிருக்கும், சுரம் காணும் | 3ம் | 5ம் | 7ம் | 11ம் |
| பாசிப்பயிறு அம்மை | பாசிப்பயிறு அளவாக கொப்பளங்கள், சுரம், பிதற்றல் இவைகள் காணும் | 3ம் | 7ம் | 9ம் | 17ம் |
| வெந்திய அம்மை | வெந்தியம் போல் கொப்பளங்கள், தேகக்குத்தல், சுரம் இவைகள் காணும் | 3ம் | 7ம் | 9ம் | 15ம் |
| உமி அம்மை | உமிபோல் சர்வாங்கம் கொப்பளங்கள், பேதி, வாந்தி, சுரம் இவைகள் காணும் | 3ம் | 7ம் | 9ம் | 10ம் |

மேல் சொல்லிய மசூரிகை ரோகங்கள் 8தவிர வாத மசூரிகை, பித்த மசூரிகை, சிலேஷ்ம மசூரிகை திரிதோஷ மசூரிகை, கடுகு மசூரிகை முதலிய அநேக விதங்களாக சொல்வார்கள்.

**மசூரிகை பூரிக்க:-**

மட்டை நீக்கின இளநீரை தீ நீரில் வேகவைத்து எடுத்து அதிலுள்ள ஜலத்தை ஒரு பீங்கானில் ஊற்றி அதில் 3 விரா. சீரகத்தை அரைத்து சேர்த்துக் கொடுத்துவர பூரிக்கும்.

**மசூரிகை ரோகத்தில் சீதரத்த பேதிக்கு:-**

பசும்பால், நாவற் பட்டை இவ்விரண்டும் சேர்த்து இடித்துப் பிழிந்த சாறு 1 அவுன்ஸ் வீதம் கொடுத்துவரத் தீரும்.

**மசூரிகை ரோகத்தில் தொண்டை கம்மினால்:-**

2 கிறேன்ஸ் கோரோசனை உரைத்து ஒரு அவுன்ஸ் கர்ப்பூர வல்லி ரசத்தில் கொடுத்துவர குணமாகும்.

**மசூரிகை ரோகத்தில் மலம் இறங்க:-**

1-2 அவுன்ஸ் சிற்றாமணக்கெண்ணெயில் வெங்காயம், சீனாக்கற்கண்டு வகைக்கு விரா.3 அரைத்துக் கரைத்துக் கொடுக்க மலம் இறங்கும்.

**மசூரிகை ரோகத்தில் தாகங்கண்டால்:-**

வெந்நீரில் கலைக் கொம்பை ஊற வைத்துக் கழுவி ராவின 10 விராகனிடை சூர்ணத்தை ஆவி எழும்பும்படி காய்ச்சின இரண்டு படி சுத்த ஜலத்தில் போட்டு மூடி ½ மணி நேரஞ் சென்றபிறகு வடித்து கொடுத்துவர தாகம் தீரும்.

**மசூரிகை சுரத்தில் காணும் ரத்தங்கக்குதல், மூத்திர துவாரத்தில் ரத்தம் வருதல் இவைகளுக்கு:-**

தாகத்திற்கு மேல் சொல்லிய ஜலத்தில் 1 படி ஜலம் எடுத்து அதில் கலைக்கொம்பு, நன்னாரிவேர்ப் பட்டை வகைக்கு 1 திராம், பூநாகம் 2திராம் இவைகளைச் செவ்வையாய்க் கழுவி மைபோலரைத்து கரைத்து 2 அவுன்ஸ் வீதம் கொடுத்துவர குணமாகும்.

**மசூரிகைப் புண்கள் ஆற:-**

வரலி மஞ்சளும் வேப்பங் கொழுந்தும் சேர்த்து அரைத்து தடவிவர குணமாகும்.

**மசூரிகை ரோகத்தில் நேத்திரத்தில் பூ விழுந்தால்:-**

நந்தியாவட்டைப்பூ, சீரகம், முருங்கைப்பூ, நெருஞ்சிப்பூ இவைகளை வகைக்கு விரா. 2 சேர்த்து அரைத்து துணியில் முடிந்து கண்ணில் பிழிய குணமாகும்.

**மசூரிகை ரோகத்தால் உண்டாகும் உஷ்ணம் முதலியவைகள் தீர:-**

ஆவாரையிலை பிடி 2 மோர் விட்டு அரைத்து சர்வாங்கத்தில் தேய்த்து ஸ்நானஞ் செய்யத்தீரும்.

## பற்பல ரோகங்களுக்கு அவுஷதங்கள்

*வயிற்றில் புளிப்பை உண்டாக்கி வரும் சகல ரோகங்களுக்கு:-*

லைகர் பொட்டாஷ் ½ திராம், பெப்பர் மெண்டு ஜலம் 7 அவுன்ஸ், ஜென்சன் பாவனத் திரவம் ½ அவுன்ஸ், மாக்னிஷியா 1 திராம் இவைகளைச் சேர்த்து 2 கரண்டி வீதம் தினம் 2-3 தடவைக் கொடுக்க குணமாகும். (Dr. Thomas).

**புளிப்பைக் கண்டித்து பசியை உண்டாக்க:-**

பரிமள நவக்ஷாரமது, லைகர் பொட்டாஷ், ரேவல் சின்னிப் பாவனத்திரவம் வகைக்கு 1 அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து ஒரு சின்னக் கரண்டி வீதம் தினம் 2 தடவை ஜலத்தில் கொடுக்க குணமாகும்.

**பேதியை நிறுத்தி பலத்தை உண்டாக்க:-**

நிலவேம்புக் கசாயம் 7½ அவுன்ஸ், விளாவின வெடியுப்புத் திராவகம் 2 திராம் இவைகளைச் சேர்த்து 1½ அவுன்ஸ் வீதம் தினம் 3 தடவைக் கொடுக்க குணமாகும் (Dr. Druitt).

**தேகத்தின் உஷ்ணம் போக:-**

(1) மரத்து, வெள்ளை நவநீதம்
(2) கூழ்ப்பாண்டகிருதம்
(3) பஞ்சமுகச் சூர்ணம்
(4) மகா கூழ்ப்பாண்ட லேகியம்
(5) கர்ப்பூர சலாசத்து பஸ்மம்
(6) வீரபத்திர சிந்தாமணி
(7) பொன்னாங்காணிக் கிருதம்
(8) பாவன சீரகம்.

இவைகளைக் கொடுக்க குணமாகும், செய்முறை இந்தப் புஸ்தகத்தில் காண்க.

**தந்தரோகம் 31-க்கு:-**

*பிராயம்பட்டைக் களிம்பு:-* பிராயம்பட்டையைக் குழித்தயிலம் இறக்கி அதில் அரப்பொடி, சுக்கு, கடுக்காய் சமமாக சூர்ணித்து சேர்த்துக் களிம்பாக்கி தந்தசுத்திசெய்துவரத் தீரும்.

**வலி (வலிப்பு) 5, பயித்தியம் 6 இவைகளுக்கு:-**

ஒரு படி நல்லெண்ணெயில் மலைவேப்பிலைச்சாறு, வெள்ளாட்டுப்பால்-தயிர்-நெய்-மூத்திரம்-சாணிப்பால் வகைக்கு படி 1, சேர்த்து அதில் மஞ்சள், கஸ்தூரிமஞ்சள், மரமஞ்சள், சுக்கு, மிளகு, திப்பிலி, வாய்விளங்கம், செவ்வியம், கடுகுரோகிணி, திப்பிலிமூலம் வகைக்கு விரா. 2½ சூர்ணித்து சேர்த்து எரித்து வடித்து தினம் காலையில்

2-4 விரா. வீதம் சாப்பிட்டு நஸ்யமும் அப்பியங்கனமும், செய்வதில் நரம்புகளில் ஊறி குணமாகும்.

*வயிற்று வலிக்கு:-*

(1) சொர்னானந்தச் சூர்ணம்
(2) கதலி பஸ்மம்
(3) கல்லுப்பு செந்தூரம்
(4) சண்முக சூர்ணம்
(5) லவண பஸ்மம்
(6) பாவன ஓமம்

இவைகளைக் கொடுக்க குணமாகும் இந்த புஸ்தகத்தில் காண்க.

*வயிறுபொருமலுக்கு:-*

(1) இஞ்சி லேகியம்
(2) ராஜ சிந்தாதி லேகியம்
(3) லவணச் சூர்ணம்
(4) மகாதாளிசப்பத்திரிச் சூர்ணம்
(5) பஞ்சமுக்ச் சூர்ணம்
(6) ரச மாத்திரை

இவைகளை இந்த புஸ்தகத்தில் பார்வையிட்டு செய்து கொடுக்க குணமாகும்.

*வயிறு உப்பிசத்திற்கு:-*

(1) கணத்தெண்ணெய்
(2) ராஜமார்த்தாண்ட லேகியம்
(3) மகா தூதுளை கிருதம்
(4) பவள பஸ்மம்
(5) பாவன ஓமம்

இவைகளை இந்த புஸ்தகத்தில் பார்வையிட்டு செய்து கொடுக்க குணமாகும்.

*அரோசிகத்துக்கு:-*

(1) கதலி லேகியம்
(2) இஞ்சி லேகியம்
(3) புளியாரைக் கிருதம்
(4) பாவனக் கடுக்காய்

இவைகளைக் கொடுக்க குணமாகும். செய்முறை இந்த புஸ்தகத்தில் காண்க.

*அன்னதுவேஷத்துக்கு:-* இஞ்சிலேகியத்தை செய்துகொடுக்க குணமாகும்.

*உள்ளங்கால் குத்தல் - நீர்தங்குதலுக்கு:-*

குளிந்த ஜலத்தில் அபினியைக் கரைத்து உள்ளங்காலுக்குத் தடவி சூட்டைப் பிறப்பிக்கும்படி தேய்த்தால் குணமாகும்.

*பித்தத்தை வாந்திசெய்ய:-*

அழிஞ்சிவேர்ப்பட்டையை அரைத்து பாக்களவு வெந்நீரில் கொடுக்க வாந்தியாகும்.

*ரத்தவமனத்திற்கு:-*

விளாவின கந்தகத்திராவகம் 40 துளி, ரோஜாப்பூக்கசாயம் 10 திராம், சர்க்கரைப்பாகு 1 திராம், இவைகளைச் சேர்த்து 3 மணிக்கு ஒரு தடவைக் கொடுக்க குணமாகும் (Dr. Gregory).

**இருதயம் துடித்து அடித்துக்கொள்ளும் வியாதிக்கு:-**

அன்னபேதி 2 கிறேன்ஸ், மூசாம்பரம் 2 கிறேன்ஸ், கருவாப்பட்டைத் தூள் 4 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து 2 மாத்திரைகளாக்கி பகல் போஜனத்திற்குப் போகும் போதுச் சாப்பிட்வும். இராத்திரியிலும் மருந்து வேண்டியதாக யிருந்தால் சாப்பிடலாம் (Dr. Abercromble)

**தேகத்தில் கற்றாழை நாற்றம், கருவாடு நாற்றம் போக:-**

(1) புதுக்கோட்டை சந்தனபில்லை
(2) மகா சந்தநாதித் தயிலம்
(3) ராஜாங்க கொம்பரக்குத் தயிலம்

இவைகளால் குணமாகும், செய்முறை இந்த புஸ்தகத்தில் காண்க.

**உட்ம்பில் விடாத சூடுக்கு:-**

கணத்தெண்ணெய்யை செய்து கொடுக்க குணமாகும்.

**இசிவுக்கு:-**

(1) சுவர்ண கோரோசன மாத்திரை
(2) அப்பிரேக கோரோசன மாத்திரை
(3) மகா ரசபஸ்மம்

இவைகள் கொடுக்க குணமாகும். இந்த புஸ்தகத்தில் காண்க. இன்னும் அநேக மருந்துகள் 14வது அத்தியாயத்தில் காண்க.

**அஸ்தி வெட்டைக்கு:-**

(1) மகா கூழ்ப்பாண்டக் கிருதம்
(2) கூழ்ப்பாண்ட ஷர்பத்து
(3) அப்பிரேக பஸ்மம்
(4) ராஜ அப்பிரேக செந்தூரம்
(5) மகா சந்தனாதித் தயிலம்
(6) மகா மிருகாமலத் தயிலம்
(7) ராஜ அமிர்தசஞ்சீவிச் சூரணம்
(8) மஹா கூழ்ப்பாண்ட லேகியம்
(9) தாளிசப் பத்திரிச் சூரணம்

இவைகள் கொடுக்க குணமாகும். செய்முறை இந்த புஸ்தகத்தில் காண்க.

**அஸ்தி காங்கைக்கு:-**

(1) மகா கூழ்ப்பாண்ட கிருதம்
(2) கூழ்ப்பாண்ட ஷர்பத்து

இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுத்தால் குணமாகும்.

**மேக காங்கைக்கு:-**

(1) மேக குலாந்தக ஷர்பத்து
(2) நன்னாரி ஷர்பத்து
(3) கல்நார் பஸ்மம்

இவைகளைக் கொடுக்க குணமாகும். இப்புஸ்தகத்தில் காண்க.

**நாபிநோய்க்கு:-** மகா வல்லாரைக் கிருதஞ் செய்து கொடுக்க குணமாகும்.

**வயிற்றிலுள்ள ரணத்திற்கு:-**

மரத்துவெள்ளை நவநீதம் செய்து கொடுக்க குணமாகும்.

**ஸ்திரீ போகத்தில் விருப்பமுண்டாக:-**

ஸ்திரீபோக ரத்தின வடகத்தை கொடுக்க விருப்பமுண்டாகும்.

ஸ்திரீபோகத்தின் உஷ்ணத்திற்கு:-

(1) மேகக்குலாந்தக ஷர்பத்து
(2) நன்னாரி ஷர்பத்து
} இவைகளை இந்த புஸ்தகத்தில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

நோயாளியின் படுக்கைக்கு சமீபத்திலுள்ள நாற்றத்தைப் போக்க:-

(1) கோஹலாப்பூர் தசாங்கு சூர்ணம்
(2) பண்டரிப்பூர் தசாங்கு சூர்ணம்
(3) காசி தசாங்கு சூர்ணம்
(4) லக்நோதேசத்திய தூபவத்திகள்
} இவைகளை உபயோகித்தால் நாற்றத்தை நீக்கும். செய்முறை இந்த புஸ்தகத்தில் காண்க.

ஜலுப்புக்கு:-

(1) அக்கிராண உப்பை அக்கிராணித்தால் குணமாகும்.
(2) சூடத்தை அக்கிராணித்தால் குணமாகும்.
(3) சாம்பிராணித்தயிலம் நெற்றியில் பூசிவர குணமாகும்.
(4) புகையிலைத் தூள் நஸ்யமிட குணமாகும்.

உதர ரோகம் **(8)**க்கு:-

(1) கும்மட்டிக்காய் குழம்பு
(2) கந்தக ரசாயனம்
} இவைகளைக் கொடுக்க குணமாகும். செய்முறை இந்த புஸ்தகத்தில் காண்க.
(3) மகோதரம் ரோகத்திற்குச் சொல்லிய மருந்துகள் கொடுக்க குணமாகும். இன்னும் அநேக மருந்துகள் 14வது, 16வது அத்தியாயங்களில் காஸ.

திரளாத பெண்ணுக்கு:-

பலத்தையும் தேகபுஷ்டியையும் உண்டாகும்படி மருந்துகளைக் கொடுத்து மூசாம்பரஞ்சேர்ந்த மருந்துகளை பேதிக்கு கொடுத்துவர கருப்பையில் திரவம் உண்டாகி ருது ஆவார்கள்.

எகுர்திகண்ட ரோகத்துக்கு:-

ஐயோடைட் ஆப் பொட்டாஷியம், டெராக்ஸியம் (Taraxacum) இவைகளை வயதுக்குத் தக்கபடி அளவை ஏற்படுத்திக் கொடுக்க குணமாகும்.

அதிதூல ரோகத்துக்கு:-

லைகர் பொட்டாஷ் ½ முதல் 1 அல்லது 1½ திராம், வரையில் கொஞ்சங்கொஞ்சமாக அதிகரித்து தினம் 3 தடவை பசும்பாலில் கொடுக்க சிறு வயதில் காணும் அதிதூல ரோகம் குணமாகும்.

வயிற்றில் கிருமிகள் உற்பத்தியாகாமலிருக்க:-

விளாவின கறிஉப்புத் திராவகம் 2 திராம், குவாசியா கசாயம் 7½ அவுன்ஸ், ஆரஞ்சிப்பழத்தோல் பாணிதம் ½ அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து, நாலிலொரு பங்கு வீதம் தினம் 2 தடவைகொடுக்க குணமாகும். (Dr. Paris). இதை பேதிக்கு கொடுத்து பிறகு கொடுக்க வேண்டியது.

# பெயர் அட்டவணை
# INDEX OF MEDICINES


| பெயர் | பக்கம் |
|---|---|
| அகத்தி | 25 |
| அகஸ்தியர் குழம்பு | 218 |
| அகோனைட் | 42 |
| அகோனைட் பாவனத்திரவம் | 123 |
| அகோனைட் சத்து | 130 |
| அக்காரப்பட்டை | 28 |
| அக்கிரகாரம் | 168 |
| அஜமோதாஷ்டக மாத்திரை | 208 |
| அஜாஷ்டக மாத்திரை | 207 |
| அஜீர்ணக்ண்டக ரசமாத்திரை | 201 |
| அஸிடெட் ஆப் பொட்டாஷ் | 80 |
| அஸிடெட் ஆப் சோடா | 86 |
| அசுவகெந்தி | 36 |
| அஷ்டவிதபரிக்ஷைகள் | 2 |
| அஞ்சனக்கல் கலவை பஸ்மம் | 105 |
| அட்டுப்பு | 88 |
| அட்டை | 134 |
| அண்ட சுண்ணம் | 281 |
| அண்டதயிலம் | 132 |
| அதிசிலேஷ்ம நாடி | 5 |
| அதிபித்தநாடி | 5 |
| அதிரசம் | 150 |
| அதிமதுரம் | 49 |
| அதிவாதநாடி | 5 |
| அதிவிடையம் | 71 |
| அந்தரத்தாமரை | 32 |
| அபினி | 43 |
| அபினி உப்பு | 97 |
| அபினி பாவனத்திரவம் | 124 |
| அப்பளகாரம் | 88 |
| அப்பியங்க ஸ்நான விதிகளும் அரைப்புகளும் | 151 |
| அப்பிரகம் | 74 |
| அப்பிரக சுத்தி | 16 |
| அப்பிரக பஸ்மம் | 183 |
| அப்பிரக கோரோசன மாத்திரை | 210 |
| அமிர்தவல்லித்தயிலம் | 155 |
| அமிர்தவல்லிச் சூர்ணம் | 166 |
| அமுக்கிராகிழங்கு | 36 |
| அமுக்கிராசுத்தி | 17 |
| அம்பர் | 40 |
| அம்மான் பச்சரிசி | 34 |
| அயக்காந்தச்செந்தூரம் | 194 |
| அயக்காந்த வடகம் | 223 |
| அயச் செந்தூரம் | 193-89 |
| அய. பஸ்மம் | 187 |
| அய சுத்தி | 17 |
| அரக்கு | 73 |
| அரிசி | 76 |
| அரிவாள் மூக்கு | 35 |
| அருணாசல லேகியம் | 174 |
| அருநெல்லி | 27 |
| அரோரூட்மாவு | 76 |
| அரோரூட் கஞ்சி | 149 |
| அர்த்தநாரீஸ்வரன் மாத்திரை | 204 |
| அலஸிவிதை | 45 |
| அவுரிஇலை | 36 |
| அவுரிவேர் | 37 |
| அவுஷதங்களின் அளவு நிர்ணயங்கள் | 6 |
| அவுஷதங்களின் அளவு அட்டவணை | 7 |
| அவுஷதங்களின் அளவு பாகங்கள் | 8 |
| அவுஷதங்களின் வகுப்புகள் | 10 |
| அவுஷதங்களை கொடுக்கும் முன் கவனிக்கவேண்டிய 12 விஷயங்கள் | 6 |
| அவுஷதங்கள் சாப்பிட நல்ல நாள்கள் | 8 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| அவுஷதங்கள் நிறுக்க நிறைகளும், அளக்க அளவுகளும் | 9 |
| அவுஷதங்கள் பிரயோகிக்கும் கால நிர்ணயங்கள் | 14 |
| அழிஞ்சில் | 28 |
| அறைக்கீரை | 38 |
| அன்னபேதி | 89 |
| ஆகாசத்தாமரை | 32 |
| ஆக்ஸிஜென்காற்று | 12 |
| ஆக்கிராணிக்கிற உப்பு | 81 |
| ஆசிடிக் ஆசிட் | 116 |
| ஆடா தோடை | 35 |
| ஆடுதீண்டாப்பாளை | 32 |
| ஆட்டிறைச்சி | 76 |
| ஆண் பெண் சரக்குகள் | 106 |
| ஆதிசேஷ விஷஹரமாத்திரை | 214 |
| ஆமணக்கிலை | 35 |
| ஆயோடைட் ஆப் மெர்க்குரி | 98 |
| ஆர்ஸினைட் ஆப் குவைனா | 99 |
| ஆலமரம் | 28 |
| ஆல்கொஹல் சாராயம் | 127 |
| ஆவாரை | 26 |
| ஆளி | 28 |
| ஆற்று ஜலம் | 13 |
| ஆனந்த ரச விநோத சூர்ணம் | 165 |
| ஆனந்த பயிரவ மாத்திரை | 207 |
| ஆனைநெருஞ்சி | 33 |
| இங்கிலீஷ், யுனானி, கர்நாடக மருந்துகள் | 39 |
| இங்கிலிஷ் மருந்துகளுக்கு தமிழ் பெயர்கள் | 39 |
| இஞ்சி | 37 |
| இஞ்சித் தயிலம் | 158 |
| இஞ்சி லேகியம் | 176 |
| இஞ்சி ஷர்பத்து | 197 |
| இட்டலி | 150 |
| இந்துப்பு | 88 |
| இபிகாக்கியுஏனா | 55 |
| இபிகாக்கியுஏனா கலவைச் சூர்ணம் | 104 |
| இரும்புப் பாவனத்திரவம் | 122 |
| இலந்தைப்பழம் | 27 |
| இலவம்பிசின் | 26 |
| இலுப்பை | 26 |
| இலேடீரியம் | 70 |
| இன்புறா | 30 |
| இன்பொகல் விதை | 32 |
| ஈயச்செந்தூரம் | 92 |
| ஈயப்பிளாஸ்திரி | 233 |
| உஸ்கி சாராயம் | 96 |
| உதயாதித்திய மாத்திரை | 214 |
| உத்தாமணி | 29 |
| உமிலக்ஷாரம் | 89 |
| உருக்கு செந்தூரம் | 195 |
| உருக்கு செந்தூரபஸ்மம் | 187 |
| உருளைக்கிழங்கு | 76 |
| உலகோத்தம செந்தூரம் | 190 |
| உலகோத்தம செந்தூரத்தயிலம் | 156 |
| உலாந்தாலிங்கம் | 96 |
| உளுந்து | 76 |
| உளுந்தோதனம் | 150 |
| உளுந்தின் வடை | 150 |
| உளுந்தமாவின் அப்பளம் | 150 |
| ஊதுத்திட்டம் | 19 |
| ஊமத்தை | 66 |
| ஊற்றுஜலம் | 13 |
| எஸ்ஸென்ஸ்கள் | 120 |
| எட்டிக்கொட்டை | 59 |
| எட்டிக்கொட்டைக்கு முறிவு | 23 |
| எட்டிக்கொட்டை உப்பு | 100 |
| எண்ணெய் உருண்டை | 163 |
| எரிப்புத்திட்டம் | 19 |
| எரிவண்டு | 133 |
| எரிவண்டு பாவனத்திரவம் | 123 |
| எரிவண்டு பிளாஸ்திரி | 234 |
| எருக்கம் பால் | 26 |
| எருமைப்பால் | 131 |
| எலுமிச்சம்பழம் | 27 |
| எவக்ஷாரம் | 89 |
| எவாகஞ்சி | 148 |
| எவ்வன பருவம் | 6 |
| எள்ளு | 32 |
| எள்ளோதனம் | 149 |
| ஏகாதசி ருத்திரசெந்தூரம் | 192 |
| ஏரி ஜலம் | 13 |
| ஏலரிசி | 75 |
| ஐக்கூட்டுத்தயிலம் | 152 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| ஐயாசியாமஸ்சத்து | 130 |
| ஐயோடைட் ஆப் பொட்டாஷியம் | 81 |
| ஐயோடைட் ஆப் பொட்டாஷியம் முறிவு | 23 |
| ஐயோடைட் ஆப் ஐரன் | 90 |
| ஐயோடைட் ஆப் லெட் ஆயின்ட்மென்ட் | 92 |
| ஐயோடைனுக்கு முறிவு | 23 |
| ஐயோடைன் பாவனத் திரவம் | 124 |
| ஐயோடைன் மெர்க்கியூரி ஆயின்ட்மெண்ட் | 129 |
| ஐயோடைன் ஆயின்ட்மெண்ட் | 129 |
| ஐயோடைட் ஆப் பொட்டாஷியம் பிளாஸ்திரி | 234 |
| ஒயின் சாராயம் | 128 |
| ஓமம் | 75 |
| ஓமத் தீநீர் | 245 |
| ஓமத் தயிலம் | 245 |
| கசகசா | 75 |
| கஸ்தூரி | 132 |
| கஸ்தூரி மாத்திரை | 211 |
| கஞ்சா | 64 |
| கஞ்சா சுத்தி | 17 |
| கஞ்சா முறிவு | 22 |
| கஞ்சாங்கோரை | 32 |
| கடல்நுரை | 74 |
| கடலை | 76 |
| கடலைப்புளிப்பு | 115 |
| கடார நார்த்தங்காய் | 27 |
| கடுக்காய் | 71 |
| கடுகு | 40 |
| கடுகுரோகிணி | 42 |
| கடுகு பாவனத்திரவம் | 124 |
| கட்டுவாதிச் சூர்ணம் | 169 |
| கணத்தெண்ணெய் | 161 |
| கணப்பூண்டின் இலை | 36 |
| கண்டத்திப்பிலி | 36 |
| கண்டத்திப்பிலி லேகியம் | 176 |
| கதலி லேகியம் | 175 |
| கதலி பஸ்மம் | 188 |
| கத்தரி | 36 |
| கந்தகம் | 79 |
| கந்தக ரசாயனம் | 220 |
| கந்தகத் திராவகம் | 107 |
| கந்தகலேகியம் | 174 |
| கந்தகப் புகைச்சல் | 229 |
| கந்தகச் சுத்தி | 16 |
| கந்தக முறிவு | 22 |
| கந்தகக் கலவைக் களிம்பு | 129 |
| கந்தி உப்பு | 88 |
| கம் அமோனியாக் | 53 |
| கம்புச்சாதம் | 150 |
| கரப்பான் எண்ணெய் | 161 |
| கரிசலாங்காணி | 31 |
| கரியசாலை | 37 |
| கரிய பௌலம் | 69 |
| கருஞ்சீரகம் | 73 |
| கருஞ்செம்பை | 37 |
| கருடன்கிழங்கு | 30 |
| கருணைத்தண்டு | 37 |
| கருநொச்சி | 32 |
| கருவாப்பட்டை | 62 |
| கருவாப்பட்டை தயிலம் | 121 |
| கருவேலம் | 25 |
| கர்ப்பூரம் | 62 |
| கர்ப்பூரத் தயிலம் | 67 |
| கர்ப்பூர சுத்தி | 18 |
| கர்ப்பூர தீநீர் | 126 |
| கர்ப்பூர கலவை பூசத்தயிலம் | 118 |
| கர்பூர கலவை பாவனத்திரவம் | 117 |
| கர்ப்பூரசலாசத்து | 74 |
| கர்ப்பூரசலாசத்து சுத்தி | 16 |
| கர்ப்பூரசலாசத்து பஸ்மம் | 184 |
| கர்ப்பூரவள்ளி | 32 |
| கலம்பாவேர் | 43 |
| கலவை ரசப்பூசத்தயிலம் | 118 |
| கலிங்காதிச் சூர்ணம் | 165 |
| கல்நார் | 74 |
| கல்நார் பஸ்மம் | 186 |
| கல்மதம் | 74 |
| கல்லுப்பு | 88 |
| கல்லுப்புச் செந்தூரம் | 190 |
| கழற்ச்சிக்காய் | 29 |
| கழுதைப்பால் | 131 |
| களாக்காய் | 36 |
| கள்ளி | 27 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| கள்ளிமுளையான் | 35 |
| கறிஉப்புத் திராவகம் | 107 |
| கறிஉப்பு திராவகமுறிவு | 22 |
| கறியப்பிலை | 25 |
| கறிமுள்ளி | 36 |
| கற்றாழை | 35 |
| காக்கட்டான் | 32 |
| காக்கட்டான் பேதி மாத்திரை | 213 |
| காஸ்டோரியம் | 131 |
| காஸ்டோரிய பாவனத்திரவம் | 223 |
| காசிக்கட்டி | 48 |
| காடிக்காரம் | 97 |
| காடைக்கண்ணிச்சாதம் | 150 |
| காட்டுமல்லிகை | 29 |
| காட்டாமணக்கு | 35 |
| காட்டாத்திப்பூ | 38 |
| காந்தசுத்தி | 16 |
| காந்தமண் பஸ்மம் | 87 |
| காபிக்கொட்டை | 55 |
| காமாக்ஷிப்புல் | 37 |
| காயப்புட்டித் தயிலம் | 51 |
| காரீயம் | 102 |
| காரிய சுத்தி | 16 |
| கார்போக அரிசி | 72 |
| கார்போனிக் அசிட் | 12 |
| கார்பொனெட் ஆப் சோடா | 84 |
| கார்பொனெட் ஆப் பொட்டாஷ் | 82 |
| கார்ன்பிளோர் கஞ்சி | 148 |
| காலபயிரவஎண்ணெய் | 159 |
| காலபயிரவ நஸ்யம் | 229 |
| காலமேகராஜாங்க மாத்திரை | 202 |
| கால்சிகம் | 69 |
| கால்சிகம் சத்து | 130 |
| கால்பேனம் | 53 |
| கால்பேனம் பிளாஸ்திரி | 234 |
| காவட்டம்புல் | 37 |
| காவிக்கல் | 74 |
| காளித்தயிலம் | 158 |
| காற்று | 12 |
| கானாக்கருணை | 37 |
| கிச்சிலிப்பூத் தயிலம் | 122 |
| கிணற்றுஜலம் | 13 |
| கியான் டர்பன்டைன் | 47 |
| கிராம்பு | 51 |
| கிராம்புத் தயிலம் | 121 |
| கிரியஸோட் | 41 |
| கிரியஸோட் ஆயின்ட்மென்ட் | 128 |
| கிளரெட் வைன் | 128 |
| கிளியூரம் பட்டை | 26 |
| கிரைத்தண்டு | 38 |
| கீழாநெல்லி | 30 |
| கீழாநெல்லித் தயிலம் | 157 |
| குக்கில் | 73 |
| குங்கிலியத் தயிலம் | 48 |
| குதிரைப்பால் | 131 |
| குப்பைமேனி | 31 |
| குமட்டிக்காய் | 35 |
| குமட்டிக்காய் சத்து | 130 |
| குமரி | 35 |
| குமரித்தயிலம் | 154 |
| குரோசாணி ஓமம் | 66 |
| குரோசாணி பாவனத் திரவம் | 124 |
| குவாகம் | 46 |
| குவாசியா | 46 |
| குவாசியா பாவனத்திரவம் | 124 |
| குஷ்டகுடாரி எண்ணெய் | 159 |
| குஷ்டநாசத் தயிலம் | 155 |
| குளத்துஜலம் | 13 |
| குளிர்ந்த ஜலம் | 12 |
| குளிர்ந்த ஜல ஸ்நானம் | 12 |
| குளோரல் ஹைட்ரஸ் | 78 |
| குளோரெட் ஆப் பொட்டாஷ் | 79 |
| குளோரோபார்ம் | 111 |
| குன்மகுடாரிச் சூர்ணம் | 166 |
| குன்றிமணி | 31 |
| கூகைக் கிழங்கு | 30 |
| கூகை நீர் | 72 |
| கூத்தங்குதம்பை | 35 |
| கூழ்ப்பாண்ட ஷர்பத்து | 197 |
| கெக்விதை | 52 |
| கெக்விதை தயிலம் | 122 |
| கெக்விதை ஸ்பிரிட் | 125 |
| கெக்விதை திநீர் | 126 |
| கைநொசூர்ணம் | 70 |
| கைநோ கலவைச்சூர்ணம் | 164 |
| கையாந்தகரை | 31 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| கையாந்தகரை தயிலம் | 157 |
| கொர்ங்கம்பட்டை | 28 |
| கொஸ்ஸோ | 51 |
| கொடிக்குறிஞ்சா | 28 |
| கொடியெலுமிச்சங்காய் | 27 |
| கொடிமுந்திரிப்பழம் | 34 |
| கொடிவேலிவேர் | 29 |
| கொத்தமல்லி | 54-38 |
| கொபயபாத் தயிலம் | 121 |
| கொளுஞ்சிநார்த்தங்காய் | 27 |
| கொள்ளு கஞ்சி | 148 |
| கோதுமை | 76 |
| கோதுமைக் கஞ்சி | 148 |
| கோதுமை ரொட்டி | 150 |
| கோதுமை ஹல்வா | 226 |
| கோரைக்கிழங்கு | 31 |
| கோரோசனை | 134 |
| கோரோசனை மாத்திரை | 210 |
| கோவை | 29 |
| கோழி | 76 |
| கோழிக்கீரை | 38 |
| கோழியாவரை | 29 |
| கோனியம் | 54 |
| கோனியசத்து | 130 |
| கோனியமுறிவு | 23 |
| கோஷ்டம் | 71 |
| சங்கம் வேர் | 37 |
| சடாமாஞ்சில் | 57 |
| சண்பகவேர் | 26 |
| சண்முகசூர்ணம் | 168 |
| சதகுப்பை | 52 |
| சதாபுயிலை | 46-29 |
| சத்திக்ஷாரம் | 88 |
| சத்துருபதார்த்தங்கள் | 20 |
| சந்தனம் | 73 |
| சந்தனப்பில்லை | 237 |
| சந்தன ஷர்பத்து | 198 |
| சந்திரகாசத்தயிலம் | 158 |
| சந்திரபிரபாவ எண்ணெய் | 160 |
| சந்திரோதய மாத்திரை | 203 |
| சமுத்திரஜலம் | 13 |
| சமுத்திரசோஷிவிதை | 73 |
| சம்பூர்ண பருவம் | 6 |
| சரக்கொன்றைப்புளி | 28 |
| சர்க்கரான்னம் | 150 |
| சர்க்கரைப்பொங்கல் | 149 |
| சர்வசித்தித் தயிலம் | 156 |
| சர்வேசுவரநஸ்யம் | 229 |
| சவுக்காரம் | 88 |
| சவுக்கார பூசத்தயிலம் | 118 |
| சவுபாக்கிய வடகம் | 222 |
| சவ்வர்ச்சஉப்பு | 89 |
| சவ்வரிசி | 76 |
| சவ்வாது | 135 |
| சவ்வீரஜெயநீர் | 113 |
| சாதிக்காய் | 61 |
| சாதிக்காய் சுத்தி | 18 |
| சாதிக்காய்த் தயிலம் | 121 |
| சாதிப்பத்திரி | 61 |
| சாமுதரச்சூர்ணம் | 166 |
| சாமைச்சாதம் | 150 |
| சாம்பிராணி | 58 |
| சாம்பிராணி பதங்கம் | 102 |
| சாம்பிராணி கலவை பாவனத்திரவம் | 116 |
| சாரவிதை | 28 |
| சாலாமிசிரி | 75 |
| சிங்கிபஸ்மம் | 185 |
| சித்தரத்தை | 71 |
| சித்தானந்த பயிரவமாத்திரை | 209 |
| சித்திரமூலம் | 29 |
| சிரேட்டா | 60 |
| சிரேட்டா பாவனத்திரவம் | 124 |
| சிலேஷ்மஸ்தானம் | 1 |
| சிலேஷ்மஸ்தான குணங்கள் | 1 |
| சிலேஷ்மஸ்தான சுபாவ அளவு | 3 |
| சிலேஷ்மவாதநாடி | 4 |
| சிலேஷ்மபித்தநாடி | 4 |
| சிறுகுருஞ்சாவேர் | 29 |
| சிறுகாஞ்சொறிவேர் | 29 |
| சிறுகீரை | 38 |
| சிறுதேக்கு | 44 |
| சிறுநாகப்பூ | 72 |
| சிறுநெருஞ்சி | 38 |
| சிறுபயிறுகஞ்சி | 148 |
| சிறுபூனைக்காலி | 29 |
| சிறுவேர் | 30 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| சிற்றாமணக்கெண்ணெய் | 63 |
| சிற்றாமுட்டி | 37 |
| சிற்றுழா | 25 |
| சின்கோனா | 56 |
| சின்கோனா பாவனத்திரவம் | 124 |
| சின்னிக்கிழங்கு | 34 |
| சிந்திற்கிழங்கு | 30 |
| சீமைஅகத்தி | 31 |
| சீமை இந்துப்பு | 77 |
| சீமைக்காடி | 41 |
| சீமைசுண்ணாம்பு | 87 |
| சீமைசுத்தி | 18 |
| சீமை கலவைச்சூர்ணம் | 103 |
| சீமை கலவை ரசபஸ்மம் | 105 |
| சீயக்காய் | 31 |
| சீரகம் | 54 |
| சீரகத்தயிலம் | 158 |
| சீவதை வேர் | 31 |
| சீனாக்காரம் | 78 |
| சுக்கான்ஜலம் | 13 |
| சுக்கு | 75 |
| சுண்ணாம்பு | 86 |
| சுதேசபிராந்தி | 127 |
| சுத்திகள் | 15 |
| சுயமக்கினி | 195 |
| சுரகுடாரிமாத்திரை | 212 |
| சுரபூபதி மாத்திரை | 207 |
| சுருளுப்பட்டை | 31 |
| சுரையிலை | 28 |
| சுவர்ணசுத்தி | 15 |
| சுவர்ணகோரோசன மாத்திரை | 210 |
| சுவர்ணமணி மாத்திரை | 208 |
| சுவர்ண பஸ்மம் | 183 |
| சுவர்ண செந்தூரம் | 191 |
| சுவர்ண ரஜதபஸ்மம் | 183 |
| சூர்யாவர்த்தன மாத்திரை | 206 |
| செங்கத்தாரிப்பட்டை | 31 |
| செங்கழுநீர்க்கிழங்கு | 30 |
| செண்முகச்சூர்ணம் | 168 |
| செண்முகவடகம் | 221 |
| செந்திரா இலை | 39 |
| செந்தாளம் பூ | 38 |
| செந்தொட்டிவேர் | 37 |
| செம்பரத்தம்பூ | 37 |
| செம்பருத்தி எண்ணெய் | 241 |
| செம்மறியாட்டுப்பால் | 131 |
| செவ்வந்திப்பூ | 37 |
| செவ்வல்லிக்கிழங்கு | 30 |
| செவ்வீரம் | 95 |
| செவ்வீரம் முறிவு | 22 |
| சேங்கொட்டை | 73 |
| சேங்கொட்டை சுத்தி | 19 |
| சொர்ணபேதி திராவகம் | 109 |
| சொர்னாநந்தச் சூர்ணம் | 168 |
| சோம்பு | 52 |
| சோம்பு தயிலம் | 122 |
| சோம்பு ஸ்பிரிட் | 125 |
| சோம்பு தீநீர் | 126 |
| சோளச்சாதம் | 150 |
| சோற்றப்பளம் | 150 |
| டர்பென்டயின் | 121 |
| டனோவேன்ஸ ஷொலுஷன் | 121 |
| டார்டரேட் ஆப் பொட்டாஷ் | 80 |
| டார்மென்டில்ல | 50 |
| டிஜிடேலிஸ் | 65 |
| டிஜிடேலிஸ் பாவனத்திரவம் | 124 |
| டிஜிடேலிஸ்க்கு முறிவு | 23 |
| டிரெகெகாந்த் | 50 |
| டெராக்ஸெகம் | 56 |
| தகரை | 31 |
| தக்கொலம் | 72 |
| தங்கபஸ்மம் | 97 |
| தசாங்குச்சூர்ணம் | 235 |
| தக்ஷிணாமூர்த்தி லேகியம் | 173 |
| தண்ணீர்விட்டான்கிழங்கு | 30 |
| ததியோதனம் | 149 |
| தயிலஸ்நானவிதி | 151 |
| தருப்பை | 37 |
| தவசுமுருங்கை | 35 |
| தாதுபுஷ்டி அவுஷதங்கள் | 228 |
| தாதுபுஷ்டி சூர்ணம் | 170 |
| தாதுபுஷ்டி லேகியம் | 174 |
| தாமரை | 30 |
| தாம்பிரபஸ்மம் | 102 |
| தாம்பிரசுத்தி | 18 |
| தாம்பிர மெழுகு | 216 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| தார் | 67 |
| தாளகம் | 96 |
| தாளகக்கட்டு | 198 |
| தாளகமாத்திரை | 211 |
| தாளக பஸ்மம் | 184 |
| தாளக சுத்தி | 16 |
| தான்றிக்காய் | 44 |
| தினைச்சாதம் | 150 |
| திரிநேத்திரச் சூர்ணம் | 167 |
| திப்பிலி | 44 |
| திப்பிலி சூர்ணம் | 170 |
| திப்பிலிமூலம் | 44 |
| திப்பிலிரசாயனம் | 220 |
| திராக்ஷஉப்பு | 80 |
| திராக்ஷப்பழ ஷர்பத்து | 197 |
| திராக்ஷை | 34 |
| திரிமூர்த்திசெந்தூரம் | 192 |
| திரிலோக சூடாமணி மாத்திரை | 203 |
| திரிலோக செந்தூரம் | 193 |
| திரிலோக ரக்ஷாமணி மாத்திரை | 202 |
| திரிவிக்கிரம ரசசெந்தூரம் | 191 |
| திருகுக்கள்ளி | 27 |
| துருநீற்றுப்பச்சை | 32 |
| திமுருகல்பாஷாண விளாவினத் திராவகம் | 110 |
| திமுருகல்பாஷாண விளாவின திராவகம் முறிவு | 22 |
| துத்தி | 35 |
| தும்மட்டிக்காய் | 35 |
| தும்பக்ஷாரம் | 89 |
| தும்பராஷ்டகம் | 71 |
| தும்பை | 36 |
| துரிசு | 91 |
| துரிசு பஸ்மம் | 188 |
| துவர்ப்பு உப்பு | 101 |
| துவரை | 76 |
| துளசி | 37 |
| தூதுளை | 30 |
| தூபவத்தி | 226 |
| தென்னங்குருத்து | 38 |
| தேகத்தில் பலம்வர மருந்துகள் | 226 |
| தேயிலை | 45 |
| தேகபுஷ்டி மருந்துகள் | 238 |
| தேற்றாங்கொட்டை | 28 |
| தேன் | 133 |
| தேன்குழல் | 150 |
| தோசை | 150 |
| நட்சத்திர மாணிக்க கிருதம் | 176 |
| நந்தியாவட்டைப்பூ | 37 |
| நமச்சிவாய செந்தூரம் | 189 |
| நரிவெங்காயம் | 68 |
| நரிவெங்காய பாவனத்திரவம் | 142 |
| நவக்ஷாரம் | 81 |
| நவக்ஷாரஉப்பு | 81 |
| நவக்ஷார ஜெயநீர் | 111 |
| நவக்ஷாரத்துக்கு முறிவு | 22 |
| நவக்ஷார மது | 112 |
| நவக்ஷாரசுத்தி | 18 |
| நறுமுன்னை | 25 |
| நன்னாரிவேர் | 58 |
| நன்னாரிஷர்பத்து | 198 |
| நாகசுத்தி | 17 |
| நாகசுத்தி பஸ்மம் | 184-90 |
| நாகேசுவரத் தயிலம் | 156 |
| நாடிகளின் ஸ்தானம் | 2 |
| நாடிகளின் நடைக்காரணம் | 2 |
| நாடிகள் பரிக்ஷிக்கும் விதம் | 3 |
| நாடிகளின் நடைபிரமாணம் | 3 |
| நாய்க்கடுகு | 73 |
| நாய்வேளை | 33 |
| நாயுருவி | 33 |
| நாராயணமண்டூரசெந்தூரம் | 192 |
| நார்த்தம்பழம் | 27 |
| நாவல் | 27 |
| நாவல்பட்டை | 26 |
| நாவி-அகோனைட் பார்க்கவும் | |
| நாவிசுத்தி | 16 |
| நிலப்பனைக்கிழங்கு | 28 |
| நிலவிளா | 33 |
| நிலாவாரை | 48 |
| நிலாவாரை கலவை பாவனத்திரவம் | 117 |
| நிமிளை பஸ்மம் | 93 |
| நீரடிமுத்து | 73 |
| நீர்முள்ளி | 37 |
| நீர்ப்பஞ்சு | 135 |
| நெய் | 76 |

| பெயர் | பக்கம் | பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| நெய்கொட்டான் பழத் | | பனை | 271 |
| தெண்ணெய் | 163 | பாகல் இலை | 28 |
| நெய்தற்கிழங்கு | 30 | பாஸ்பேட் ஆப் சோடா | 85 |
| நெல்லிக்காய் | 27 | பாதிரிவேர் பூ | 26 |
| நெல்லிக்காய்த் தயிலம் | 158 | பார்லிஅரிசி கஞ்சி | 149 |
| நெல்லிமுள்ளி | 44 | பாலசஞ்சீவி மாத்திரை | 213 |
| நெற்பொறிகஞ்சி | 148 | பாலசுரகுடாரி மாத்திரை | 213 |
| நேர்வாளக்கொட்டை | 62 | பாலசுரவிஷஹரமாத்திரை | 213 |
| நேர்வாள சுத்தி | 18 | பாலவினோத சஞ்சீவி மாத்திரை | 213 |
| நேர்வாளத் தயிலம் | 121 | பாலயப் பருவம் | 6 |
| நைட்ரிக் ஈதர் | 110 | பாலை எண்ணெய் | 163 |
| நைட்ரோஜன் காற்று | 12 | பால் குடிக்கும் பருவம் | 6 |
| பக்கு | 46 | பால் | 131-76 |
| பசிலைக்கீரை | 38 | பால்சொரிக்கீரை | 38 |
| பசுமுன்னை | 25 | பால்சம் ஆப் டோலு | 49 |
| பசுவின்பால் | 131 | பால்சம் ஆப் பிரு | 49 |
| பச்சரிசிக் கஞ்சி | 148 | பால்துத்தம் | 90 |
| பச்சைக்கர்ப்பூரம் | 73 | பால் பொங்கல் | 149 |
| பஞ்சமுகச்சூர்ணம் | 169 | பாவன ஓமம் | 224 |
| பஞ்சாக்ஷர செந்தூரம் | 190 | பாவனக் கடுக்காய் | 223 |
| படிகாரம் | 78 | பாவன சீரகம் | 224 |
| பதார்த்தங்களின் சுத்தி | 15 | பாவன மிளகு | 224 |
| பத்திய பதார்த்தங்கள் | 15 | பாவனத் திப்பிலி | 224 |
| பத்திய விதிகள் | 14 | பாஷாணக்கட்டு | 201 |
| பத்திரகாளி எண்ணெய் | 241 | பாஷாணச்சுத்தி | 16 |
| பயிரவச்சூர்ணம் | 168 | பாஷாண மாத்திரை | 212 |
| பயிரவ மாத்திரை | 206 | பாஷாண மெழுகு | 213 |
| பயிரவ வடி மாத்திரை | 204 | பாறை ஜலம் | 13 |
| பருத்தியிலை | 35 | பானுப்பிரகாச மாத்திரை | 206 |
| பருப்புக்கீரை | 38 | பிசின்பட்டை | 72 |
| பருப்புப்பொங்கல் | 149 | பிடங்குநாரி இலை | 36 |
| பருவகாலங்களின் வகுப்புகள் | 6 | பிடாலுப்பு | 89 |
| பலகறை | 74 | பிட்டு | 150 |
| பலகாரிச்சூர்ணம் | 170 | பித்தத்தின் குணங்கள் | 1 |
| பவளம் | 103 | பித்தத்தின் ஸ்தானம் | 1 |
| பவள பஸ்மம் | 186 | பித்தசிலேஷ்ம நாடி | 4 |
| பவள சுத்தி | 15 | பித்தத்தின் சுபாவ அளவு | 3 |
| பழஞ்சோறு | 150 | பித்தராஜாங்க சூர்ணம் | 169 |
| பறங்கிப்பட்டை | 72 | பித்தவாத நாடி | 4 |
| பறங்கிப்பட்டைச்சூர்ணம் | 170 | பித்தஹர சூர்ணம் | 170 |
| பறங்கிப்பட்டை ரசாயனம் | 220 | பிரமதண்டு | 38 |
| பற்படாகம் | 33 | பிரண்டை | 33 |
| பந்நீர்ப்பூ | 38 | பிரம்மானந்த பயிரவ மாத்திரை | 201 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| பிரவாள பஸ்மம் | 185 |
| பிராந்தி சாராயம் | 127 |
| பீதரோகணி | 71 |
| பீநசநாசகணபதி தயிலம் | 158 |
| பீநசப்புல் | 37 |
| புகையிலை | 69 |
| புங்கம்வேர் | 26 |
| புடத்திட்டம் | 19 |
| புதியனா | 38 |
| புரசன் | 28 |
| புருவ ஸ்பிரிட் சாராயம் | 127 |
| புருஷர் பருவகாலம் | 6 |
| புரோமைட் ஆப் பொட்டாஷியம் | 92 |
| புரோமைட்டுக்கு சத்துரு | 21 |
| புளியம் இலை | 25 |
| புளியாரை | 38 |
| புளியாரை எண்ணெய் | 164 |
| புளியாரை கிருதம் | 179 |
| புளியோதனம் | 149 |
| புனுகுச்சட்டம் | 135 |
| புனர்பாகம் | 149 |
| புன்னை | 28 |
| பூமிச்சர்க்கரைக்கிழங்கு | 36 |
| பூரம் | 103 |
| பூர்ண சந்திரோதய லேகியம் | 175 |
| பூர்ணாதிலேகியம் | 175 |
| பூவரசன் பட்டை | 33 |
| பெப்பர்மெண்டு தயிலம் | 121 |
| பெப்பர்மெண்டு ஸ்பிரிட் | 125 |
| பெப்பர்மெண்டு தீநீர் | 126 |
| பெரியாநங்கை | 37 |
| பெரிரா வேர் | 41 |
| பெருங்காயம் | 53 |
| பெருங்காய பாவனத்திரவம் | 123 |
| பெருங்காஞ்சொறி | 29 |
| பெருஞ்சீரகம் | 52 |
| பெருஞ்சீரகத் தயிலம் | 122 |
| பெரும்பூசனி | 34 |
| பெல்லடொனா இலை | 65 |
| பெல்லடொனாக்கு சத்துரு | 21 |
| பெல்லடொனாவுக்கு முறிவு | 23 |
| பெல்லடொனா சத்து | 130 |
| பெல்லடொனா உப்பு | 101 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| பேய்ப்புடல் | 33 |
| பேரரத்தை | 71 |
| பேரீச்சங்காய் பழம் | 44 |
| பேரீச்சங்காய் கிருதம் | 179 |
| பைகார்பொனெட் ஆப் சோடா | 84 |
| பைகார்பொனெட் ஆப் பொட்டாஷ் | 83 |
| பொட்டிலுப்பு | 77 |
| பொட்டிலுப்புத் திராவகம் | 108 |
| பொட்டிலுப்புத் திராவகத்துக்கு சத்துரு | 20 |
| பொடுதலை | 33 |
| பொற்றல்கையாந்தகரை | 33 |
| பொன்னாங்காணி கிருதம் | 179 |
| பொன்னாங்காணித் தயிலம் | 157 |
| போகவல்லி ஹல்வா | 225 |
| போஸ்தக்காய் | 45 |
| போர்ட்வைன் | 128 |
| போஜன குடாரி மாத்திரை | 207 |
| மஹா அசுவகெந்தி பலாலாக்ஷா தயிலம் | 154 |
| மஹா அசுவகெந்தி சூர்ணம் | 167 |
| மஹா அசுவகெந்தி ரசாயனம் | 219 |
| மஹா கருவங்க பஸ்மம் | 181 |
| மஹா காலாக்கினி மாத்திரை | 205 |
| மஹா கூழ்ப்பாண்ட கிருதம் | 177 |
| மஹா கூழ்ப்பாண்ட லேகியம் | 172 |
| மஹா சந்தநாதித் தயிலம் | 152 |
| மஹா சுவர்ண பஸ்மம் | 182 |
| மஹா தாளசப்பத்திரி சூர்ணம் | 167 |
| மஹா தாம்பிர பஸ்மம் | 180 |
| மஹா தூதுளைக் கிருதம் | 178 |
| மஹா தூதுளைச் சூர்ணம் | 168 |
| மஹா தூதுளை லேகியம் | 173 |
| மஹா புளியாரைக்கிருதம் | 177 |
| மஹா ரஜத பஸ்மம் | 180 |
| மஹா வங்க பஸ்மம் | 181 |
| மஹா வல்லாரை கிருதம் | 178 |
| மக்கி | 45 |
| மஞ்சள் | 75 |
| மடல்துத்தப் பிளாஸ்திரி | 234 |
| மட்டிப்பால் | 70 |
| மணத்தக்காளி | 36 |
| மண்ணெண்ணெய் | 41 |
| மண்டூரம் | 102 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| மண்டூர சுத்தி | 17 |
| மண்டூர செந்தூரம் | 194 |
| மதன சஞ்சீவி ஹல்வா | 225 |
| மதன போகசுவர்ண வடகம் | 222 |
| மந்தாரப்பூ | 38 |
| மயிலிறகு | 134 |
| மரத்துவெள்ளை நவநீதம் | 178 |
| மராட்டி மொக்கு | 34 |
| மரிய இலை | 26 |
| மருதோன்றி வேர் | 38 |
| மலைவேம்பு | 28 |
| மனோசிலை | 95 |
| மனோசிலை மாத்திரை | 45 |
| மாகாளிக்கிழங்கு | 30 |
| மாசிக்காய் | 64 |
| மாசிக்காய் உப்பு | 101 |
| மாசிப்பத்திரி | 56 |
| மாதுளம்பழம் | 27 |
| மாதுளம்பழ ஷர்பத்து | 197 |
| மாம்பிஞ்சின் பருப்பு | 28 |
| மார்த்தாண்ட பயிரவத் தயிலம் | 155 |
| மாவலிங்கப்பட்டை | 26 |
| மான்கொம்பு | 134 |
| மான்கொம்பு சுத்தி | 17 |
| மிருதார்சிங்கு | 92 |
| மிருதார்சிங்கு பிளாஸ்திரி | 233 |
| மிளகரணை வேர் | 33 |
| மிளகு | 63 |
| மிளகுத்தக்காலை | 37 |
| மிளகோதனம் | 149 |
| மீன் | 76 |
| மீன் எண்ணெய் | 132 |
| முக்காவேளை | 37 |
| முக்கூட்டுத்தயிலம் | 152 |
| முசர்காதி இலை | 29 |
| முசுமுசுக்கை | 29 |
| முசுமுசுக்கை தயிலம் | 157 |
| முசுறுமுட்டை | 134 |
| முசுறுமுட்டை எண்ணெய் | 161 |
| முடக்கொத்தான் எண்ணெய் | 162 |
| முட்டை | 132-76 |
| முத்தக்காசு | 31 |
| முத்து | 103 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| முத்துசுத்தி | 16 |
| முத்துச்சிப்பி | 74 |
| முருங்கை | 25 |
| முலைப்பால் | 131 |
| முலைப்பால் உண்ணும்பருவம் | 6 |
| முல்லைப்பூ | 30 |
| முளகாய் | 66 |
| முள்ளங்கி | 36 |
| முள்ளிக்கீரை | 38 |
| முறிவு பதார்த்தங்கள் | 22 |
| முறுக்கு | 150 |
| முன்னைக்கீரை | 38 |
| மூங்கில் இலை | 25 |
| மூசாம்பரம் | 69 |
| மெடியராவைன் | 128 |
| மெருகன் கிழங்கு | 36 |
| மெஜீரியன் | 61 |
| மேகக்குலாந்தக ஷர்பத்து | 197 |
| மேகக்குலாந்தக மாத்திரை | 202 |
| மேகத்தெண்ணெய் | 161 |
| மேகராஜாங்க சுவர்ண வடகம் | 22 |
| மேனா | 58 |
| மோகவல்லி ஹல்வா | 225 |
| மோதகம் | 150 |
| யானை நகம் | 134 |
| யூவா அர்ஸையிலை | 57 |
| ரசகர்ப்பூரம் | 103 |
| ரசகர்ப்பூரக்கட்டு | 200 |
| ரசகர்ப்பூர சுத்தி | 17 |
| ரசகர்ப்பூர மாத்திரை | 211 |
| ரசக்களிம்பு | 129 |
| ரசசுத்தி | 16 |
| ரசசெந்தூரம் | 196 |
| ரச பஸ்மம் | 93-186 |
| ரச பிளாஸ்திரி | 233 |
| ரசப் புகைச்சல் | 230 |
| ரச மெழுகு | 215 |
| ரஜத சுத்தி | 15 |
| ரஜத பஸ்மம் | 96 |
| ரசபயிரவ செந்தூரம் | 191 |
| ரசலிங்க பேதிமாத்திரை | 211 |
| ரசலிங்க மாத்திரை | 212 |
| ரசலிங்க மெழுகு | 215 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| ரசவீர செந்தூரம் | 193 |
| ரசானந்த சஞ்சீவி எண்ணெய் | 161 |
| ரசானந்த பயிரவ மாத்திரை | 209 |
| ரத்தவிருத்தி அவுஷதங்கள் | 227 |
| ரம் சாராயம் | 127 |
| ராஜ அப்பிரக செந்தூரம் | 193 |
| ராஜ அமிர்த சஞ்சீவி சூர்ணம் | 166 |
| ராஜ அமிர்த சஞ்சீவி லேகியம் | 173 |
| ராஜ ஏலாதிச் சூர்ணம் | 167 |
| ராஜ கஜகேஸரி மாத்திரை | 203 |
| ராஜ கேஸரி சூர்ணம் | 165 |
| ராஜ சங்குவடி மாத்திரை | 204 |
| ராஜ சிந்தாதி லேகியம் | 172 |
| ராஜ செம்முள்ளி சஞ்சீவித் தயிலம் | 156 |
| ராஜமார்த்தாண்ட லேகியம் | 171 |
| ராஜ லவணச்சூர்ணம் | 169 |
| ராஜ லோகநாத ரசபஸ்மம் | 185 |
| ராஜ வில்வாதி லேகியம் | 171 |
| ராஜ ஹஸபோடலி மாத்திரை | 208 |
| ராஜாங்க கொம்பரக்குத் தயிலம் | 153 |
| ருத்திர செந்தூரம் | 191 |
| ருத்திராக்ஷம் | 27 |
| ரூமி மஸ்தகி | 47 |
| ரெக்டிபைட் ஸ்பிரிட் சாராயம் | 127 |
| ரேவல் சின்னி கலைவைச் சூர்ணம் | 106 |
| ரேவல் சின்னி பாவனத் திரவம் | 117 |
| ரோசல் ஸால்ட்ஸ் | 86 |
| ரோஜா மொட்டு | 51 |
| லகுகட்டுவாங்க மாத்திரை | 212 |
| லகுசங்குவடி மாத்திரை | 210 |
| லகுதாம்பிர பஸ்மம் | 184 |
| லவங்கப்பத்திரி | 72 |
| லவணச்சூர்ணம் | 165 |
| லவண பஸ்மம் | 188 |
| லிங்கம் | 96 |
| லிங்கக்கட்டு | 199 |
| லிங்கக்குழம்பு | 217 |
| லிங்க செந்தூரம் | 196 |
| லிங்க பேதி மாத்திரை | 212 |
| லிங்க மாத்திரை | 211 |
| லிங்க மெழுகு | 214 |
| லின்சிட் தயிலம் | 221 |
| லிம்பாஷ்டக மாத்திரை | 208 |
| லைகர் அமோனிய அஸிடேடிஸ் | 112 |
| லைகர் குவைனா எமார்பஸ் | 115 |
| லைகர் பொட்டாஷியம் | 113 |
| லைகர் பொட்டாஷியத்திற்கு முறிவு | 22 |
| வங்க உப்பு | 92 |
| வங்க உப்புக்கு முறிவு | 23 |
| வங்க உப்புக்கு சத்துரு | 21 |
| வங்கேசுவர ரச நஸ்யம் | 229 |
| வசம்பு | 41 |
| வச்சிரவல்லி லேகியம் | 174 |
| வட்டத்திப்பிலி | 71 |
| வண்டுகொல்லிவேர் | 31 |
| வரகுச்சாதம் | 150 |
| வலம்புரிக்காய் | 72 |
| வல்லாரை | 34 |
| வளையலுப்பு | 88 |
| வறட்பூலா | 35 |
| வாகை | 26 |
| வாசனைப்பூல் | 37 |
| வாதகோப நாச எண்ணெய் | 160 |
| வாதத்தின் குணங்கள் | 1 |
| வாதத்தின் குறிகள் | 2 |
| வாதத்தின் சுபாவ அளவு | 3 |
| வாதத்தின் ஸ்தானம் | 1 |
| சிலேஷ்ம நாடி | 4 |
| சிலேஷ்ம் பித்த நாடி | 4 |
| சிலேஷ்ம பித்த சிலேஷ்ம நாடி | 5 |
| வாதஹரவடகம் | 221 |
| வாதராக்ஷச எண்ணெய் | 160 |
| வாதராக்ஷச மாத்திரை | 209 |
| வாதுமை சுத்தி | 18 |
| வாதுமைத் தயிலம் | 121 |
| வாதுமை ஹல்வா | 226 |
| வாந்தி உப்பு | 95 |
| வாந்தி உப்புக்கு சத்துரு | 20 |
| வாய்விளங்கம் | 72 |
| வாலுழுவை அரிசி | 73 |
| வாலேந்திர பௌலம் | 47 |
| வாலேந்திர பாவனத் திரவம் | 124 |
| வால்மிளகு | 64 |
| வாழை | 27 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| வியாக்கிரியாதி ரசாயனம் | 219 |
| விரேசனகாரிகள் | 230 |
| விருத்தி பருவம் | 6 |
| வில்வம் | 26 |
| விலாமிச்சுவேர் | 71 |
| விலரியநேட் ஆப் ஜிங்க் | 91 |
| விலரியநேட் ஆப் ஜிங்குக்கு சத்துரு | 21 |
| விழல் அரிசி | 72 |
| விழுதி இலை, வேர் | 36 |
| விழுதி இலை எண்ணெய் | 160 |
| விளாரி | 35 |
| விளாரித்தயிலம் | 155 |
| விளாவின கந்தகத் திராவகம் | 107 |
| விளாவின கறிஉப்பு திராவகம் | 108 |
| விளாவின பொட்டிலுப்பு திராவகம் | 109 |
| விளாவினஹைட்ரோஸையானிக் ஆசிட் | 115 |
| விஷ மூங்கில் இலை | 29 |
| விஷ்ணு கிராந்தி | 34 |
| வீரம் | 95 |
| வீரக் கட்டு | 200 |
| வீர செந்தூரம் | 195 |
| வீர பஸ்மம் | 183 |
| வீர மெழுகு | 217 |
| வீரத்துக்கு சத்துரு | 20 |
| வீரத்துக்கு முறிவு | 23 |
| வெங்கடேச எண்ணெய் | 164 |
| வெங்காரம் | 85 |
| வெங்காயம் | 37 |
| வெங்காய எண்ணெய் | 163 |
| வெடி உப்பு | 77 |
| வெடி உப்பு சுத்தி | 18 |
| வெடி உப்புக்கு முறிவு | 23 |
| வெடி உப்புத் திராவகம் | 108 |
| வெடி உப்புத் திராவகத்துக்கு முறிவு | 22 |
| வெடி உப்புத் திராவகத்துக்கு சத்துரு | 20 |
| வெட்டிவேர் | 34 |
| வெண் அல்லி | 30 |
| வெண்டை | 34 |
| வெண்ணொச்சி | 35 |
| வெதுப்படக்கி | 35 |
| வெந்திய எண்ணெய் | 164 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| வெந்தியக் கீரை | 73 |
| வெந்நீர் | 12 |
| வெப்பாளை அரிசி | 72 |
| வெலிரியனெட் ஆப் குவைனா | 99 |
| வெள்ளரி | 30 |
| வெள்ளாட்டுப்பால் | 131 |
| வெள்ளீயம் | 102 |
| வெள்ளீய சுத்தி | 17 |
| வெள்ளீய பஸ்மம் | 187 |
| வெள்ளைக்கீரை | 38 |
| வெள்ளைக் குங்கிலியம் | 73 |
| வெள்ளைச் சங்கு | 74 |
| வெள்ளைப் பாஷாணம் | 94 |
| வெள்ளைப் பாஷாண ஜெயநீர் | 114 |
| வெள்ளைப் பாஷாணத்துக்கு முறிவு | 23 |
| வெள்ளைப் பூண்டு | 68 |
| வேப்பிலை | 27 |
| வேம்பாடம் பட்டை எண்ணெய் | 162 |
| வேலிப்பருத்தி | 29 |
| வேளை | 37 |
| வைன் இபிகாக்கியு ஏனா | 119 |
| வைன் கால்சியம் | 119 |
| வைன் சாராயம் | 128 |
| ஹம்ஸ பொடலி மாத்திரை | 208 |
| ஹானி பருவம் | 6 |
| ஹிங்காஸ்டக மாத்திரை | 207 |
| ஹைட்ரோ ஸையானிக் ஆசிட் (விளாவின) | 115 |
| ஹைட்ரோ ஸையானிக் ஆசிடுக்கு முறிவு | 24 |
| ஹைடிரா ஜீரி பின் ஐயோடிடம் | 98 |
| ஷின்கோனா | 56 |
| ஷெரே வைன் | 128 |
| ஸ்காமோனி | 60 |
| ஸ்காமோனி கலவைச்சூர்ணம் | 104 |
| ஸ்டிக்கிங் பிளாஸ்திரி | 234 |
| ஸ்டோராக்ஸ் | 58 |
| ஸ்திரீயின் பருவகாலம் | 6 |
| ஸ்திரீபோக ரத்னவடகம் | 222 |
| ஸ்ரீதேவி எண்ணெய் | 162 |
| ஸ்பிரிட் நைட்ரஸ் ஈதர் | 110 |
| ஸல்பேட் ஆப் சோடா | 85 |
| ஸல்பேட் ஆப் குவைனா | 98 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| ஸாண்டோனின் | 100 |
| ஸேவைன் | 68 |
| ஸேவைன் தயிலம் | 122 |
| ஸேவைன் ஆயின்ட்மெண்ட் | 229 |
| ஸைட்ரேட் ஆப் ஐரன் அண்டு குவைனா | 99 |
| ஸைட்ரேட் ஆப் பொட்டாஷ் | 79 |
| ஜலம் | 2 |
| ஜவ்வரிசிக் கஞ்சி | 149 |
| ஜாலப் | 60 |
| ஜாலப் கலவைச் சூர்ணம் | 103 |
| ஜாலப் பாவனத்திரவம் | 124 |
| ஜின் சாராயம் | 127 |
| ஜூனிபர் | 68 |
| ஜென்ஷன் | 59 |
| க்ஷடாக்ஷர செந்தூரம் | 189 |
| க்ஷாம்பென் வைன் | 128 |


**பெயர் அட்டவணை**

**முற்றிற்று.**

# ரோகவர்க்க அட்டவணை
# INDEX OF DISEASES


| பெயர் | பக்கம் |
|---|---|
| அக்கிக்கு | 282 |
| அக்கினி ரணத்துக்கு | 286 |
| அக்கினி மந்த ரோகத்துக்கு | 297 |
| அஸ்தி காங்கைக்கு | 303 |
| அசாத்திய சுரத்துக்கு | 255 |
| அஸ்தி சுரத்துக்கு | 255 |
| அஸ்மரி ரோகம் (4)க்கு | 278 |
| அஸ்திவெட்டைக்கு | 303 |
| அஜீர்ண சுரத்துக்கு | 255 |
| அஜீர்ண பேதிக்கு | 270 |
| அஜீர்ணரோகம் (6)க்கு | 296 |
| அட்டைக் கடிக்கு | 306 |
| அண்ட ரோகம் (4)க்கு | 281 |
| அண்ட வீக்கத்துக்கு | 281 |
| அதிசாரம் (6)க்கு | 69-270 |
| அதிசாரசுரத்துக்கு | 242-255 |
| அதிதூல ரோகத்துக்கு | 304 |
| அந்திமாலைக்கு | 259 |
| அபஸ்மார ரோகம் (4)க்கு | 296 |
| அரிக்கிரந்திக்கு | 274 |
| அரையாப்புக்கு | 298 |
| அரோசிகத்துக்கு | 302 |
| அன்னத்துவேஷத்துக்கு | 302 |
| ஆண்குறியின்மேல் காணும் ரணத்துக்கு | 283 |
| இசிவுக்கு | 303-243 |
| இருதயத் துடிப்புக்கு | 303 |
| இருபக்கத் தலைவலிக்கு | 263 |
| இருமலுக்கு | 244-267 |
| இரைப்புக்கு | 267 |
| ஈளைக்கு | 266 |
| ஈறுரணத்துக்கு | 272 |
| உஷ்ண சுரத்துக்கு | 258 |
| உஷ்ண பேதிக்கு | 268 |
| உஷ்ண வாயுக்கு | 295 |
| உடம்பில் விடாத சூடுக்கு | 303 |
| உதடுமேகப் புண்ணிற்கு | 275 |
| உதடு வெடிப்புக்கு | 274 |
| உதர ரோகம் (8)க்கு | 304 |
| உள் சுரத்துக்கு | 253 |
| உள்நாக்கு அரிக்கும் கிரந்திக்கு | 272 |
| உள்நாக்கு வளர்தலுக்கு | 271-273 |
| உள்மூலத்துக்கு | 291 |
| உள்ளங்கால் வெடிப்புக்கு | 285 |
| உள்ளங்கால் குத்தல் நீர் தங்குதலுக்கு | 302 |
| உள்ளங்கையின் சொறி சிரங்குக்கு | 283 |
| ஊதுமாந்தத்துக்கு | 239 |
| எகுர்திகண்ட ரோகத்துக்கு | 304 |
| எச்சி தழும்புக்கு | 283 |
| எயிறுப் புண்ணுக்கு | 372 |
| எலி விஷக்கடிக்கு | 306 |
| எலும்புருக்கிக்கு | 280 |
| ஒட்டு மேகத்துக்கு | 285 |
| ஒற்றலைவலிக்கு | 263 |
| கக்குவானுக்கு | 245 |
| கடிக்கு | 283 |
| கட்டிக்கு | 285 |
| கட்டியின் ஆரம்பத்தில் | 286 |
| கட்டியைப் போலொத்த தடிப்பு, வீக்கத்துக்கு | 286 |
| கண சுரத்துக்கு | 242 |
| கண ரோகம் (8)க்கு | 242 |
| கணுவாதத்துக்கு | 305 |
| கண் அமரத்துக்கு | 259-260 |
| கண் எரிவுக்கு | 259 |
| கண் காசத்துக்கு | 261 |
| கண் குளிர்ச்சியாக்க | 260 |
| கண் சிவப்புக்கு | 259 |
| கண் நோவுக்கு | 260 |
| கண் படலத்துக்கு | 261 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| கண் புகைச்சலுக்கு | 260 |
| கண் புழுவெட்டுக்கு | 259 |
| கண் பூக்கு | 260 |
| கண் ரெப்பை வீக்கத்துக்கு | 260 |
| கண் வாயுக்கு | 261 |
| கண்டரணத்தாபத்துக்கு | 272 |
| கண்டமாலை (18)க்கு | 286-287 |
| கண்ணில் இறங்கும் மேகநீருக்கு | 259 |
| கண்ணில் ஜலம் வடிதலுக்கு | 259 |
| கண்ணில் துர்மாமிசம் வளர்தலுக்கு | 259 |
| கபத்தை வெளியாக்க | 268 |
| கபரோகத்துக்கு | 244 |
| கபத்துக்கு | 267 |
| கபால குஷ்டத்துக்கு | 287 |
| கபால சூலைக்கு | 264 |
| கபால வரட்சிக்கு | 264 |
| கபால வலிக்கு | 263 |
| கபால வாயுக்கு | 263 |
| கரப்பானுக்கு | 243 |
| கருங்கிரந்திக்கு | 241 |
| கருங்குஷ்டத்துக்கு | 287 |
| கருமேகத்துக்கு | 284 |
| கருநாக்கு சூலைக்கு | 274 |
| கர்ணரோகம் (25)க்கு | 261 |
| கர்ப்பசூலைக்கு | 249-289 |
| கர்ப்பஸ்திரீயின் கல்லடைப்புக்கு | 250 |
| கர்ப்பஸ்திரீயின் சுரத்துக்கு | 250 |
| கர்ப்பஸ்திரீயின் துவாலைக்கு | 249 |
| கர்ப்பஸ்திரீயின் துவாலையின் தாகம், மூர்ச்சைக்கு | 250 |
| கர்ப்பஸ்திரீயின் நீர் சுரப்புக்கு | 250 |
| கர்ப்பஸ்திரீக்கு பத்து மாதத்தில் காணும் வலிக்கு | 248 |
| கர்ப்ப வெட்டைக்கு | 248 |
| கர்ப்பப் புழுக்களுக்கு | 250 |
| கர்ப்ப வாயுக்கு | 250 |
| கல் அடைப்புக்கு | 278 |
| கன்னப் புற்றுக்கு | 286 |
| காசம் (5)க்கு | 265 |
| காசம் முதலிய (96) கப ரோகங்களுக்கு | 264 |
| காதில் சீழ் வடிதலுக்கு | 262 |
| காது இரைச்சலுக்கு | 262 |
| காது எழுச்சிக்கு | 262 |
| காது புழுவிழுதலுக்கு | 262 |
| காது மந்தத்திற்கு | 262 |
| காது வலிக்கு | 262 |
| காமாலை (13)க்கு | 276 |
| காயத்துக்கு | 305 |
| கால்கடுவானுக்கு | 243 |
| கிரகணி (13)க்கு | 268 |
| கிரந்தி (9)க்கு | 286-241 |
| கிரந்திசூலை | 286 |
| கிரிச்சரம் (4)க்கு | 278 |
| கில்வாதத்துக்கு | 295 |
| குஷ்டம் (18)க்கு | 257-287 |
| குடல்வாதத்துக்கு | 281 |
| குடல்விருத்திரோகம் (7)க்கு | 281 |
| குதிக்கால் வெடிப்புக்கு | 285 |
| குதிக்கால் வலிக்கு | 305 |
| குமரகண்ட வலிப்புக்கு | 241 |
| குய்யத்தில் காணும் தினவுக்கு | 250 |
| குய்யரோகம் (27)க்கு | 275 |
| குரல்நோவுக்கு | 274 |
| குலை எரிவுக்கு | 305 |
| குளிர் சுரத்துக்கு | 243-253 |
| குழந்தை சாம்பல் மண் சாப்பிட்டால் | 244 |
| குழந்தையின் அண்ட வீக்கத்துக்கு | 246 |
| குழந்தையின் நீர் அண்டத்துக்கு | 246 |
| குழந்தையின் நீர் கட்டுக்கு | 246 |
| குழந்தை பால் உண்ணாவிடில் | 244 |
| குழந்தைபால் கக்கினால் | 244 |
| குழந்தையின் பேதி நிற்க | 245 |
| குழந்தைக்கு பேதி உண்டாக | 245 |
| குழந்தையின் ஜலுப்பு | 245 |
| குழந்தையின் வாந்தி நிற்க | 245 |
| குழந்தையின் வாய்ரணத்துக்கு | 246 |
| குன்மரோகம் (8)க்கு | 288 |
| கைகால் ஊறலுக்கு | 290 |
| கைகால் எரிவுக்கு | 292 |
| கைகால் முடக்குக்கு | 296 |
| கோழை வெளியாக்க | 265 |
| சகல கிரகணிக்கு | 269 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| சகல தலைவலிக்கு | 263 |
| சதை அடைப்புக்கு | 280 |
| சதை அண்டரோகத்துக்கு | 281 |
| சந்நி சிலேஷ்மத்துக்கு | 295 |
| சந்நி (13)க்கு | 243-257 |
| சன்னி பாதசுரத்துக்கு | 257 |
| சப்பாத்திமுள்கள் தெய்த்தால் | 305 |
| சராய் பீநசத்துக்கு | 288 |
| சருமரோகத்துக்கு | 283 |
| சர்வாங்கம் காணும் மருள்களுக்கு | 287 |
| சிரங்குக்கு | 243-282 |
| சிரோரோகம் (19)க்கு | 262 |
| சிலேஷ்மம் (20)க்கு | 264 |
| சிலேஷ்ம சுரத்துக்கு | 256 |
| சிதக்கிரகணிக்கு | 269 |
| சிதபேதிக்கு | 270-242 |
| சிதமூலத்துக்கு | 291 |
| சுண்ணாம்பு சாப்பிட்டு வாய் ரணமானால் | 272 |
| சுரம் (64)க்கு | 242-252 |
| சுரமாந்தத்திற்கு | 239 |
| சுரமில்லாத அதிசாரத்துக்கு | 270 |
| சுரத்தில் வியர்வை உண்டாக | 258 |
| சுரத்தில் உஷ்ணம் தணிய | 258 |
| சுரத்தில் தாகம் தீர | 258 |
| சுவாச் ரோகம் (5)க்கு | 266 |
| சுவாச காசத்துக்கு | 265 |
| சுழிமாந்தத்துக்கு | 240 |
| சூசிகாவாயுக்கு | 249 |
| சூதகக்கட்டுக்கு | 247-277 |
| சூதக ஜன்னிக்கு | 249 |
| சூதக வலிக்கு | 249 |
| சூதக வாயுக்கு | 249 |
| சூதகத்தை கிரமப்படுத்த | 248 |
| சூலைரோகம் (18)க்கு | 289 |
| செங்கிரந்திக்கு | 241 |
| செங்குஷ்டத்துக்கு | 287 |
| செரியாமாந்தத்துக்கு | 239 |
| சொத்தைப்பல் நோவுக்கு | 273 |
| சொறிக்கு | 283-282 |
| சோகை (சோபை) (9)க்கு | 290 |
| தடித்த பீநசத்துக்கு | 288 |
| தந்தசுத்தி செய்யும் குச்சிகள் | 307 |
| தந்தம் இறுக | 275 |
| தந்த ரோகம் (31)க்கு | 301 |
| தந்தவாயுக்கு | 273 |
| தந்திமேக்த்துக்கு | 230 |
| தலைசுற்றலுக்கு | 264 |
| தலை மயக்கத்துக்கு | 261 |
| தலை புழுவெட்டுக்கு | 263 |
| தலை மயிர் வளர | 305 |
| தலை மாந்த்துக்கு | 240 |
| தலையில் பேன் நாசமடைய | 305 |
| தாகரோகம் (5)க்கு | 298 |
| தாபசுரத்துக்கு | 253 |
| தாம்பூலந்தரிக்கும்போது காணும் நெஞ்சடைப்பு, மார்படைப்புக்கு | 308 |
| திரளாத பெண்ணுக்கு | 304 |
| திரிதோஷ சுரத்துக்கு | 256 |
| துடைவாளைக்கு | 285 |
| தேக எரிவுக்கு | 293 |
| தேகத்தில் உஷ்ணம் போக | 301 |
| தேகத்தில் கற்றாழை நாற்றத்திற்கு | 303 |
| தேக வீக்கத்துக்கு | 290 |
| தேக வெளிப்புக்கு | 290 |
| தேள் கொட்டலுக்கு | 306 |
| தேள், பூரான், பாம்பு விஷக் கடிக்கு | 307 |
| தொண்டை கம்மலுக்கு | 273 |
| தொண்டை கரகரப்புக்கு | 272 |
| தொண்டை நோவுக்கு | 273 |
| தொண்டை புற்றுக்கு | 273 |
| தொண்டை ரணத்துக்கு | 272 |
| தொப்புள் புண்ணுக்கு | 244 |
| தோல் எரிவுக்கு | 236 |
| தோஷம் (9)க்கு | 242 |
| நஞ்சு கொடிவிழ | 251 |
| நடுக்கல் சுரத்துக்கு | 255 |
| நமைச்சலுக்கு | 282 |
| நரம்புப்பிடிப்பிற்கு | 305 |
| நரம்புச்சிலந்திக்கு | 307 |
| நாக்கில் ஜலம் ஊற, வரட்சி தோஷம் தீர | 273 |
| நாக்கு அரிப்புக்கு | 274 |
| நாக்கு கொப்பளத்துக்கு | 274 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| நாக்கு வெடிப்புக்கு | 274 |
| நாக்கு மேகப்புண்ணுக்கு | 275 |
| நாபி நோவுக்கு | 303 |
| நாய் விஷக்கடிக்கு | 306 |
| நீரிழிவுக்கு | 277 |
| நீர் எரிவுக்கு | 278 |
| நீர் ஏற்றத்துக்கு | 277 |
| நீர் கடுப்புக்கு | 278 |
| நீர் கோவைக்கு | 277 |
| நீர் சுருக்குக்கு | 277 |
| நீர் கட்டுக்கு | 277 |
| நீர் கொண்ட மண்டையிடிக்கு | 263 |
| நீர்த்தாரையில் சீழ்வடிதலுக்கு | 280 |
| நீர்த்தாரையில் சீழ், ரத்தம் வடிதலுக்கு | 279 |
| நீர்த்தாரையில் ரத்தம் வடிதலுக்கு | 279 |
| நீர்ப்பீநசத்துக்கு | 288 |
| நீர் மாந்தத்துக்கு | 239 |
| நெஞ்சு எரிவுக்கு | 274 |
| நெஞ்சு ரணத்துக்கு | 272 |
| நேத்திர ரோகங்கள் (94)க்கு | 259 |
| நோயாளியின் சமீபத்தில் உள்ள நாற்றம் போக்க | 304 |
| பக்க வாயுக்கு | 294 |
| பயித்திய ரோகம் (6)க்கு | 296-301 |
| பல் பூச்சி நீங்க | 273 |
| பல்லினை அரித்துத் தின்னும் கிரந்திக்கு | 275 |
| பல்லெயிறுகட்டி சீழ் வடிதலுக்கு | 274 |
| பவுத்திரரோகம் (15)க்கு | 281-298 |
| பழைய சுரத்துக்கு | 254 |
| பாண்டு ரோகம் (5)க்கு | 290 |
| பாம்பு விஷக்கடிக்கு | 257-306 |
| பால் மாந்தத்துக்கு | 239 |
| பித்த எரிவுக்கு | 292 |
| பித்த காங்கைக்கு | 292 |
| பித்த சமனத்துக்கு | 293 |
| பித்த பாண்டுக்கு | 290 |
| பித்த மயக்கத்துக்கு | 293 |
| பித்த ரோகம் (40)க்கு | 292 |
| பித்த வாயுக்கு | 293 |
| பித்த வெட்டைக்கு | 293 |
| பித்தம் வாந்திசெய்ய | 302 |
| பிரசவித்த ஸ்திரீயின் சுவாசத்துக்கு | 251 |
| பிரசவித்த ஸ்திரீயின் மார்பில் பால் சுரக்க | 252 |
| பிரசவித்த ஸ்திரீயின் மார்பில் பால் வரண்டு போக | 252 |
| பிரசவித்த் ஸ்திரீயின் மார்பு, சிரசு, குத்தல் நோவுக்கு | 251 |
| பிரசவித்த ஸ்திரீயின் ருசைஷுக்கு | 252 |
| பிரசவித்த ஸ்திரீயின் வயிற்றுவலிக்கு | 252 |
| பிரசூதிகா வாயு மந்தப்பட்டால் | 251 |
| பிரமியம் (20)க்கு | 279 |
| பிரமேகம் (21)க்கு | 280 |
| பிரமைக்கு | 296 |
| பிளவைக்கு | 286 |
| பீநசரோகம் (18)க்கு | 287 |
| பீலிக ரோகம்(4)க்கு | 298 |
| புழுவெட்டுக்கு | 286 |
| புற்றுக்கு | 285 |
| பெருவயிறுக்கு | 278 |
| பேதியை நிறுத்தி பலம் வர | 301 |
| மகோதரம் (8)க்கு | 278 |
| மசூரிகை ரோகம் (8)க்கு | 299 |
| மசூரிகை பூரிக்க | 300 |
| மசூரிகையில் சீதரத்த பேதிக்கு | 300 |
| மசூரிகையில் தாகம் தீர | 300 |
| மசூரிகையில் தொண்டை கம்மலுக்கு | 300 |
| மசூரிகையில் நீர்த்தாரையில் ரத்தம் வருதலுக்கு | 300 |
| மசூரிகையில் மலம் இறங்க | 300 |
| மசூரிகையில் ரத்தம் கக்குதலுக்கு | 300 |
| மசூரிகையில் கண்ணில் பூவிழுந்தால் | 300 |
| மசூரிகை உஷ்ணம் தீர | 300 |
| மசூரிகை புண் ஆற | 300 |
| மஞ்சட்காமாலைக்கு | 276 |
| மண்டைகடுவானுக்கு | 243 |
| மண்டையிடிக்கு | 263-264 |
| மண்டைகபத்துக்கு | 263 |
| மது மூத்திரத்துக்கு | 277 |
| மந்தபேதிக்கு | 270 |
| மந்தத்துக்கு | 243 |
| மந்தாரகாசத்துக்கு | 266 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| மலக்கட்டுக்கு | 277 |
| மலட்டுரோகம் (7)க்கு | 247 |
| மறுக்கு | 282 |
| மாந்தரோகம் (8)க்கு | 240 |
| மாந்தவலிப்புக்கு | 241-243 |
| மார்பு கபநோவுக்கு | 265 |
| மார்புச் சளிக்கு | 261-265 |
| மாவைக் கரைத்ததுபோல் மூத்திரத்துக்கு | 278 |
| முலைக்காம்பு ரணத்துக்கு | 250 |
| முலைக்காம்பு வெடிப்புக்கு | 250 |
| முள் தைத்தால் | 305 |
| மூத்திரரோகம் (12)க்கு | 278 |
| மூர்ச்சைரோகம் (4)க்கு | 296 |
| மூலச்சூடுக்கு | 292 |
| மூலம் வெளிப்படுதலுக்கு | 291 |
| மூலரோகம் (8)க்கு | 291 |
| மூலவாயுக்கு | 295 |
| மூலமுளைக்கு | 291 |
| மூன்றாம் நான்காம் முறை சுரத்துக்கு | 250 |
| மேகம் (20)க்கு | 284 |
| மேகம் ஊறலுக்கு | 285 |
| மேக காங்கைக்கு | 303 |
| மேக சூலைக்கு | 285 |
| மேகத் தடிப்புக்கு | 285 |
| மேக நீருக்கு | 285 |
| மேகப் புண்ணுக்கு | 284 |
| மேக ரணத்துக்கு | 283 |
| மேக புரைக்கு | 284 |
| மேகவாயுக்கு | 295 |
| மேல்வாய் புண்ணுக்கு | 275 |
| யானைக்கால் சுரத்துக்கு | 257 |
| யோனிப்புற்றுக்கு | 280 |
| ரசவாடைப் பிடிப்புக்கு | 272 |
| ரணத்துக்கு | 283-298 |
| ரத்த பீநசத்துக்கு | 288 |
| ரத்தமண்டலி விஷக்கடிக்கு | 306 |
| ரத்த வமனத்துக்கு | 266-302 |
| வயிறு உப்பிசத்துக்கு | 302 |
| வயிறு கடுப்புக்கு | 268-269 |
| வயிற்றில் கிருமி உண்டாகாமலிருக்க | 304 |
| வயிற்றில் இறந்த பிள்ளை விழ | 251 |
| வயிற்றில் பிள்ளை பிழைத்திருப்பதை அறிய | 251 |
| வயிற்றின் புளிப்பால் வரும் ரோகங்களுக்கு | 301 |
| வயிற்றின் புளிப்பைப் போக்கி பசியை உண்டாக்க | 301 |
| வயிற்றுக்குள் உள்ள ரணம் ஆற | 303 |
| வயிற்று உப்பல் மந்தத்துக்கு | 243 |
| வயிற்று உப்பலுக்கு | 244 |
| வயிற்று வலிக்கு | 302 |
| வயிற்றின் ரணத்துக்கு | 303 |
| வயிற்றின் பொருமலுக்கு | 302-241 |
| வலி (வலிப்பு (5)க்கு) | 301 |
| வாதரோகம் (80)க்கு | 294 |
| வாந்தி,பேதிக்கு | 276 |
| வாந்திரோகம் (5)க்கு | 297 |
| வாய்கிரந்திக்கு | 274 |
| வாய் நாற்றத்துக்கு | 274 |
| வாய்ப்புற்றுக்கு | 274 |
| வாய்ரணத்துக்கு | 273 |
| வாயுக்கு | 295 |
| விக்கல்ரோகம் (5)க்கு | 298 |
| வித்திரிதிக்கட்டி (17)க்கு | 298 |
| வெட்டைக்கு | 279 |
| வெண் குஷ்டத்துக்கு | 287 |
| வெள்ளை விழுதலுக்கு | 279-280 |
| ஸ்தன்னியக் கட்டிக்கு | 250 |
| ஸ்திரீபோக விருப்பம் உண்டாக | 303 |
| ஸ்திரீபோகத்தின் உஷ்ணம் தீர | 304 |
| ஜலுப்புக்கு | 304 |
| க்ஷயரோகம் (4)க்கு | 266 |


## ரோகவர்க்க அட்டவணை

முற்றிற்று.

# இரண்டாம் பாகத்தின்

## பொருளடக்கம் — Contents


| பெயர் | பக்கம். |
|---|---|
| வாதபித்தசிலேஷ்மஸ்தானங்கள் | 328 |
| வாதபித்தசிலேஷ்மகுறிகள் | 328 |
| நாடிகளின் விபரம் | 328 |
| நாடி பரிக்ஷிக்கும் விதம் | 329 |
| பருவங்களின் வகுப்புகள் | 330 |
| மருந்துக்கொடுக்கும் அளவு | 330 |
| அளவுகள் நிறைகள் | 331 |
| தாது தாவரவர்க்கங்களின் சுத்திகள் | 331 |
| எருப்புத்திட்டம், ஊதுதிட்டம், புடதிட்டம் | 335 |
| பூபதிகள் | 336 |
| தயிலங்கள் | 342 |
| எண்ணெய்கள் | 352 |
| சூர்ணங்கள் | 359 |
| லேகியங்கள் | 364 |
| கிருதங்கள் | 373 |
| செந்தூரங்கள் | 380 |
| மாத்திரைகள் | 392 |
| சர்ப்பத்துகள் | 401 |
| மொர்பாக்கள் | 402 |
| குல்கந்துகள் | 404 |
| பஸ்மங்கள் — சுண்ணங்கள் | 405 |
| கட்டுகள் | 420 |
| பலவித அவுஷதங்கள் | 422 |
| இங்கிலீஷ் மருந்துகள் | 431 |

உ

கடவுள் துணை

# பிராண ரக்ஷாமிர்த சிந்து

## இரண்டாவது பாகம்.

### வாத பித்த சிலேஷ்ம ஸ்தானங்கள்.

வாதமானது அனுத்துவரூபமாய் பாதம் முதல் நாபி வரையிலும், பித்தமானது அதி உஷ்ண ரூபமாய் நாபி முதல் கண்டம் வரையிலும் சிலேஷ்மமானது அதி சீதள ரூபமாய் கண்டம் முதல் சிரசு வரையிலும் வியாபிக்கும்.

### வாத பித்த சிலேஷ்ம குறிகள்

மலத்தால் வாத குணமும், மூத்திரத்தால் பித்த குணமும், விந்துவால் சிலேஷ்ம குணமும் அறியவேண்டியது.

### நாடிகளின் விபரம்.

வாத நாடியானது பாம்பு, அட்டை, தவளை, ஓணான் இவைகளின் நடைகள் ,போல் ஓடும்.

பித்த நாடியானது தாரா, மயில், அன்னம் இவைகளின் நடைகள் போல் ஓடும்.

சிலேஷ்ம நாடியானது கோழி, ஊர்க்குருவி, இவைகளின் நடைகள் போல் ஓடும்.

வாத பித்த நாடியானது பாரஞ்சுமந்து நடப்பது போல் நடக்கும்.

வாத சிலேஷ்ம நாடியானது முறிந்த அரணைவால் துடிப்பது போல் நடக்கும்.

பித்த வாத நாடியானது வீணை அடிப்பதுபோல் நடக்கும்.

பித்த சிலேஷ்ம நாடியானது பிள்ளை தொட்டிலில் ஆடுவது போல் நடக்கும்.

சிலேஷ்ம வாத நாடியானது புணர்ச்சி போல் நடக்கும்.

சிலேஷ்ம பித்த நாடியானது வண்டி சக்கரஞ் சுழலுவது போல் நடக்கும்.

அதிவாத நாடியானது வாத நாடி அதிகமாய் நடக்கும்.

அதி பித்த நாடியானது பித்தநாடி அதிகமாய் நடக்கும்.

அதி சிலேஷ்ம நாடியானது சிலேஷ்ம நாடி அதிகமாய் நடக்கும்.

## நாடி பரிக்ஷிக்கும் விதம்

கையின் பெருவிரல் பக்கமாய் ஓடும் நாடியை மணிக்கட்டுக்கு ஒரு அங்குலம் மேலாக மூன்று விரல்களால் அழுத்தியும், தளர்த்தியும், சமமாகவும் மாறிமாறி பரிக்ஷிக்க நாடி நடை அறியலாம். புருஷர்களுக்கு வலதுகையும், ஸ்திரீகளுக்கு இடதுகையும் பரிக்ஷிக்க வேண்டும். ஆனால் இரண்டு கைகளும் பரிக்ஷிப்பது உத்தமம். சரீரத்தில் சிலேஷ்மம் பங்கு 1, பித்தம் பங்கு 2, வாதம் பங்கு 4 இவ்விதமாய் இருக்குமாகில் ரோகமில்லை.

## பருவங்களின் வகுப்புகள்.

| எண் | | பருவங்கள் | வருஷம் முதல் | வருஷம் வரை |
|---|---|---|---|---|
| 1 | பாலயம் | 1. முலைப்பாலுண்ணும் பருவம் | பிறப்பு | 1 |
| | | 2. பால் குடிக்கும் பருவம் | 2 | 2 |
| | | 3. பாலியபருவம் | 3 | 15 |
| 2 | யவ்வனம் | 1. விருத்திபருவம் | 15 | 20 |
| | | 2. யவ்வனம் | 21 | 30 |
| | | 3. சம்பூர்ணபருவம் | 31 | 40 |
| | | 4. க்ஷீண பருவம் | 41 | 70 |
| 3 | விருத்தாப்பியம் | | 71 | 100 |

☞ புருஷர்கள் 25 வயதிலும் ஸ்திரீகள் 16 வயதிலும் பருவகாலத்தை அடைவார்கள்.

## மருந்து கொடுக்கும் அளவு

| வயது ஆரம்பம் முதல் | வயது முடியும் வரையில் | வயதுக்குத் தக்கபடி ஒருதடவைக்கு கொடுக்கும் அளவின் பாகங்கள் |
|---|---|---|
| பிறப்பு | 3 மாதம் | 16ல் ஒரு பாகம் |
| 4வது மாதம் | 1வருஷம் | 12ல் ஒரு பாகம் |
| 2வது வருஷம் | 2வருஷம் | 8ல் ஒரு பாகம் |
| 3வது வருஷம் | 3வருஷம் | 6ல் ஒரு பாகம் |
| 4வது வருஷம் | 4வருஷம் | 4ல் ஒரு பாகம் |
| 5வது வருஷம் | 7வருஷம் | 3ல் ஒரு பாகம் |
| 8வது வருஷம் | 14வருஷம் | 2ல் ஒரு பாகம் |
| 15வது வருஷம் | 20வருஷம் | 3ல் 2 பாகம் |
| 21வது வருஷம் | 60வருஷம் | பூர்ண அளவு |

## அளவுகளையும் நிறைகளையும் காண்க.

| அளவுகள் | நிறைகள் |
|---|---|
| ரசம் ஜலரூபமாயிருந்தாலும் நிறுத்துக் கொள்ள வேண்டியது. | 4 நெல்லிடை - 1 குன்றிமணி |
| | 4 குண்டுமணி - 1 பணயிடை |
| 1½ ஒன்றறைதுளி - 1 மினிம் | 32 குன்றிமணி - 1 விராகனிடை |
| 60 மினிம்ஸ் - 1 ப்ளூட் திராம். | 10 விராகனிடை - 1 பலம் 3 ரூபாயிடை |
| 8 ப்ளூட் திராம் - 1 ப்ளூட் அவுன்ஸ் | |
| 20 ப்ளூட் அவுன்ஸ் - 1 பயிண்ட் | 8 பலம் - 1 சேர் - 24 ரூபாயிடை |
| 4 திராம் - 1 டேபில்ஸ்பூன் | 5 சேர் - 1 வீசை |
| 2 திராம் - 1 டெஸர்ட்ஸ்பூன் | சுமார் ½ குன்றிமணியிடை-1 கிறேன் |
| 1 திராம் - 1 டீஸ் பூன் | 20 கிறேன்ஸ் - 1 ஸ்குருபில் |
| 2 படி - 1 குருணி (மரக்கால்) | 3 ஸ்குருபில் - 1 திராம் |
| 2 மரக்கால் - 1 பதக்கு | 8 திராம் - 1 அவுன்ஸ் |
| 2 பதக்கு - 1 தூணி | 12 அவுன்ஸ் - 1 பவுண்டு |
| 3 தூணி - 1 கலம் | 1 ரூபாய் - 3 திராம்ஸ் |

## தாது, தாவரவர்க்க பதார்த்தங்களின் சுத்திகள்.

**சுவர்ணம்—** தங்கத் தகடுகளுக்கு செம்மண்ணால் லேபனஞ் செய்து பத்து தடவை நெருப்பைப்போல் காய்ச்சினால் சுத்தியாகும்.

**வெள்ளி—** வெள்ளித்தகடுகளைக் காய்ச்சி பழுப்பாகல் கிழங்குச் சாற்றில் 7 தடவை துவைத்தால் சுத்தியாகும்.

**பவளம்—** எலுமிச்சம்பழச் சாற்றில் ஒரு நாள் ஊறவைத்துக் கழுவ சுத்தியாகும்.

**ரசம்—** மஞ்சள் தூளையும் ரசத்தையும் கல்வத்திலிட்டு அரைக்க அரைக்க ரசம் சுத்தியாகும். ஆத்மானந்த ரசத்தில் சொல்லியபடி அவித்து எடுக்க பூர்ணசுத்தியாகும்.

**தாளகம்—** கற்சுண்ணாம்புக்குள் தாளகத்தை வைத்து 20-30 தடவை நீற்றினால் சுத்தியாகும். வேறுமுறை தாளகபஸ்மத்தில் சொல்லியபடி ஜெயநீரிலிட்டு 3 தடவை கொதிக்கவைத்து எடுக்க சுத்தியாகும்.

நேர்வாளம்— ஆமணக்கெண்ணெயில் நேர்வாளத்தைப் போட்டு வறுத்து எடுத்து சுத்தஜலத்தில் 12 மணிநேரம் ஊறவைத்து உடைத்து பருப்பை எடுத்துக் கொள்ளவும். இது வெகு நல்லமுறை.

கர்ப்பூரசலாசத்து— பசும்பாலிலிட்டுக் காய்ச்சி எடுக்க சுத்தியாகும்.

காந்தம்— பொற்றல்கையாந்தகரைச்சாற்றில் 21 தடவை உருக்கி ஊற்ற சுத்தியாகும்.

முத்து— சங்கம்பூச்சாற்றில் 2நாள் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

காரீயம்— நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், எலுமிச்சம்பழச்சாறு இவைகளில் ஒவ்வொன்றிலும் 21தடவை உருக்கி ஊற்றினால் சுத்தியாகும்.

வெள்ளீயம்— காரீயத்தை சுத்திசெய்யும் விதமாய் இதையும் சுத்தி செய்து கொள்ளவும்.

கந்தகம்— ஒரு புது கலயத்தில் 2 சேர் பாலிட்டு சுத்த வஸ்திரத்தினால் வாயைக் கட்டி அதன் மேல் கந்தகத்தை பொடித்துப் போட்டு அதன்மேல் அகலால் மூடி சீலைமண் செய்து கீழும் மேலும் 10 எரு வைத்து புடம் போட கந்தகம் உருகி மணிகளாக பாலில் இறங்கும். அவைகளை ஜலத்தால் அலம்பினால் சுத்தியாகும்.

வேறுமுறை:- கந்தகத்துடன் கொஞ்சம் நெய் சேர்த்து உருக்கி 10 தடவை பசும்பாலிலிட சுத்தியாகும்.

நாவி— எருமை மூத்திரத்தில் ஒரு நாள் ஊறவைத்து பிறகு வேக வைத்து கழுவி உலர்த்தி, பிறகு ஒரு நாள் எலுமிச்சம்பழச்சாற்றில் ஊறவைத்து உலர்த்திக்கொள்ள சுத்தியாகும்.

அயம்— இரும்பின் அரப்பொடியை எலுமிச்சம்பழச்சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

மண்டூரம்— வெள்ளாட்டு நீர், கோமூத்திரம் இவைகளில் 3 நாள் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

நாகம்— இலுப்பை நெய்யில் பத்து தடவை உருக்கி ஊற்ற சுத்தியாகும்.

மான்கொம்பு— மான் கொம்பைக் கத்தியால் சீவி குப்பை மேனிச்சாற்றில் 1 நாள் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

ரசகர்ப்பூரம்— முலைப்பாலில் 10 நாள் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

அமுக்கிராக்கிழங்கு— பசும்பாலில் வேகவைத்து உலர்த்திக் கொள்ள சுத்தியாகும்.

கஞ்சா— இதை ஜலத்தில் 12 மணி ஊறவைத்துக் கசக்கி புது ஜலத்தில் 5 தடவை கழுவவும். இவ்விதமாய் 3 தடவை செய்து உலர்த்திக் கொள்ள சுத்தியாகும்.

அன்னபேதி— நீராகாரத்தில் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

சாதிக்காய்— இதை நாலாக நறுக்கி நெய்யில் வறுத்து எடுக்க சுத்தியாகும்.

தாம்பிரம்— தாம்பிரப்பொடியை நாட்டுக்காட்டாமணக்குப் பாலிலும், புளியாரைச் சாற்றிலும் தனித்தனியே 11 நாள் ஊறவைத்து எடுத்துக் கொள்ள சுத்தியாகும்.

வேறுமுறை— சிற்றாமணக்கு வேர், சிறுதும்பையின் வேர் சமமாய்க் கூட்டி தூள் செய்து வைத்துக்கொண்டு தாம்பிரத்தை உருக்கி அவ்வுருக்குவாயில் மேற்படி பொடியைப் போட்டு ஒருஜாமம் கிண்டி, எருமைச் சாணியும் கொஞ்சம் ஜலமும் சேர்த்துக் கரைத்துக்கொண்டு அதில் ஊற்றவும். இவ்விதமாய் 3 தடவைச் செய்ய சுத்தியாகும்.

வேறுமுறை— நாயுருவி சமூலம் உலர்த்தி சாம்பலாக்கி அதற்கு சமமாக கறியுப்பு இவ்விரண்டும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து அச்சமான தாம்பிரத்தகடுகளுக்கு கவசமிட்டு சீலைமண் செய்து 11 நாள் பூமிக்குள் புதைத்து வைத்து எடுக்க சுத்தியாகும்.

வேறுமுறை:- தாம்பிரத்தை லேசாய் தகடுகள் தட்டி நெருப்பைப் போல் காய்ச்சி கொக்கு மந்தாரையின் சாற்றில் 11 தடவை தோய்த்து எடுக்க சுத்தியாகும்.

வாதுமைப் பருப்பு— சுத்த ஜலத்தில் 1-2 மணி நேரம் ஊறவைத்து மேல் தோலைநீக்க சுத்தியாகும்.

சீமைச் சுண்ணாம்பு (Chalk)— இதை அரைத்து ஜலம் நிறைந்த குடத்தில் கரைத்து வேறொரு பாத்திரத்தில் ஊற்றினால் மிதந்து கொண்டிருக்கும் சன்னப் பொடிகள் அடியில் படியும், அதை எடுத்து உலர்த்திக்கொள்ள சுத்தியாகும்.

சிவதை வேர்— இதை பசும்பாலிட்டு அவித்து எடுக்க சுத்தியாகும்.

சேங்கொட்டை— சேங்கொட்டையின் மூக்கை வெட்டி கல் சுண்ணாம்புக்குள் வைத்து புளித்த தண்ணீர் விட்டு 10 தடவை நீற்றி ஜலத்தினால் கழுவி பிறகு எருமைச்சாணிப் பாலிலும், புளியிலைக் கசாயத்திலும், புரசம் பூக்கசாயத்திலும் தனித்தனியே வேகவைத்து எடுக்க சுத்தியாகும்.

வீரம்— ஒரு தோண்டியில் இளநீரை (ஜலம்) கால் தோண்டி விட்டு அதன் மேல் வீரக் கட்டிகளை பரப்பி அகலால் மூடி சீலைமண் செய்து 15 நிமிடம் சிறு தீயாக எரித்து எடுக்க சுத்தியாகும்.

மனோசிலை— எருமை மூத்திரத்தில் மனோசிலையை துணியில் முடித்துப் போட்டு 3 நாழிகை எரித்து எடுக்க சுத்தியாகும்.

அரிதாரம்— தாளகத்தை சுத்தி செய்வது போல் இதையும் செய்து கொள்க.

*லிங்கம்*— ஒரு பலம் லிங்கம் வாங்கினால் ஒரு பலம் சாம்பிராணியும், ஒரு பலம் கர்ப்பூரமும் சேர்த்து அரைத்து, மேற்படி லிங்கத்துக்குக் கவசமிட்டு துணி சுத்தி எரித்து எடுக்க சுத்தியாகும்.

*வேறு முறை*— ஒரு பலம் சேங்கொட்டையை சிறு துண்டுகளாக நறுக்கி, ஒரு சிறு துணியின் மத்தியில் பாதி போட்டு அதன் மேல் ஒரு பலம் உலாந்தாலிங்கத்தை வைத்து லிங்கத்தை மறையும் படி பாக்கி பாதியைப் போட்டு துணியை முடித்து சீலைமண் செய்து 1-2 எருவில் புடம் போடவும். இவ்விதமாய் 3 தடவை புடம் போட சுத்தியாகும் இதை தூள் செய்து பணவிடை வீதம் • தினம் காலை மாலை அனுபானத்திலிட சூலைக் கட்டு, கை கால் பிடிப்பு, வாதம் (80) தமரவாயு பாரிசவாயு முதலிய சகல வாயு, சன்னி, மேகம், கிரந்தி, அரையாப்பு முதலியவைகள் குணமாகும்.

*கௌரிப்பாஷாணம்*— பன்றிப்பாலில் அவித்தெடுக்க சுத்தியாகும்

*வேறு முறை*— மிளகுக் கசாயத்தில் அவித்தெடுக்க சுத்தியாகும்.

*வெள்ளைப்பாஷாணம்*— ஒரு கலயத்தில் ¼ கலயம் மிளகு கசாயமிட்டு வாயில் துணியைக் கட்டி அதன் மேல் பாஷாணத்தை வைத்து அகலால் வாயைமூடி சீலைமண் செய்து சிறு தீயால் எரித்து எடுக்க சுத்தியாகும்.

*குதிரைப்பல் பாஷாணம்*— உமிழ்நீரில் 3 நாழிகை ஊறப்போட சுத்தியாகும்.

*கல்நார்*— கழுதை மூத்திரத்திலாவது அல்லது கல்சுண்ணாம்பு ஜலத்திலாவுது 3 நாழிகை வேகவைத்து எடுக்க சுத்தியாகும்.

*கெருடக்கல்*— கிளியாய் கட்டி, கற்றாழைச் சாற்றில் 30 நாழிகை காய்ச்சி எடுக்க சுத்தியாகும்.

*சீனாக்காரம்*— பசுவின்பாலில் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

*வெங்காரம்*— எருமைச்சாணியில் சேர்த்து கசக்கி அலம்பிவிட சுத்தியாகும்.

*குக்கில்*— எருமை மோரில் 3 நாழிகை ஊறப்போட சுத்தியாகும்.

*தொட்டிப் பாஷாணம்*— கிளியாய் கட்டி நெல்லில் அவித்தெடுக்க சுத்தியாகும்.

*பால் துத்தம்*— பையன்களின் மூத்திரத்தில் ஒரு வாரமும், பசுவின் பாலில் ½ நாளும் ஊற வைக்க சுத்தியாகும்.

*துருசு*— கவுதும்பைச் சாற்றில் ஒரு நாள் ஊறப்போட்டு எரித்து எடுக்க சுத்தியாகும்.

*அஞ்சனக்கல்*— புளியாரைச்சாற்றில் ஒரு நாள் ஊறப்போட்டு எடுக்க சுத்தியாகும்.

*பொன்னிமிளை*— காடியில் மூன்று நாள் காய்ச்சி எடுக்க சுத்தியாகும்

*கல்மதம்*— சிறு நீரில் ஒரு ஜாமம் ஊறவைத்து எடுக்கச் சுத்தியாகும்.

*பலிப்பாஷாணம்*— கோமூத்திரத்தில் 7 நாள் ஊறப்போட்டால் சுத்தியாகும்.

*உருக்கு*— வெள்ளாட்டின் மூத்திரத்தில் எகுவை சிவக்கக் காய்ச்சி 21 தடவை தோய்க்க சுத்தியாகும்.

*அப்பிரேகம்*— கோவையிலையை அரைத்து அப்பிரேகத் துண்டுகளுக்குக் கவசமிட்டு சீலைமண் செய்து குக்குட புடம் போட சுத்தியாகும்.

*வேறுமுறை*— அப்பிரேகத்தை புளித்தமோரில் 3 நாள் ஊறப்போட்டு பிறகு உரலில் போட்டு பொடியாக்கி ஜலத்தால் அலம்பி நெல்லோடு சேர்த்து வேகவைத்து பிறகு ஜலமிட்டு கலக்கிவிட அடியில் அப்பிரேகப் பொடி தங்கும். அதை எடுத்துக்கொள்ள சுத்தியாகும்.

*சங்கு*— துண்டுகளாக்கி பசுவின் பாலில் வேகவைத்து எடுக்க சுத்தியாகும்.

*மிருதார்சிங்கு*— பனங்கள்ளில் கிளிக்கட்டி எரித்து எடுக்க சுத்தியாகும்.

*மயில்துத்தம்*— பசுவின் வெண்ணெயில் 2 நாளூறவைத்து எடுக்க சுத்தியாகும்.

*சாஸ்திரபேதி*— நார்த்தங்காய்ச் சாற்றிலூறப்போட்டு எடுக்க சுத்தியாகும்.

*எட்டிக்கொட்டை*— நெல்லில் அவித்து சிறுகீரைச்சாற்றிலூறவைத்து பிறகு தேற்றான்கொட்டை ரசத்தில் வேகவைத்து எடுக்கச்சுத்தியாகும்.

*ரசசெந்தூரம்*— உத்தாமணி இலையை அரைத்து அதற்குள் வைத்து குக்குடபுடம் போட்டு எடுக்க சுத்தியாகும்.

## எரிப்பு முதலிய திட்டங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எரிப்புத் | தீபாக்கினி | 1 விறகு | புடதிட்டம் | காடை புடம் | 2 எரு |
| திட்டம் | கமலாக்கினி | 3 விறகு | | கவுதாரிப்புடம் | 3 எரு |
| | காடாக்கினி | 5 விறகு | | குக்குடபுடம் | 10 எரு |
| ஊதுத் | கன்னம் | 1 துருத்தி | | வராகபுடம் | 50 எரு |
| திட்டம் | உருக்கு | 2 துருத்தி | | கெஜபுடம் | 100 எரு |
| | சத்து | 4 துருத்தி | | கனபுடம் | 1000 எரு |

☞ அப்பிரேகப்புடம் என்பது பளிங்கு அப்பிரேகத்தின் மேல் மருந்துகளின் வில்லையைப் பரப்பி அதன்மேல் பளிங்கு அப்பிரேகத்தை வைத்து இரண்டையும் சேர்த்து சந்து வாயில் மாத்திரம் ஒரு விரல்கடை அகலத்தில் சுற்றிவர சீலைமண் 7 தடவை செய்து உலர்த்தி சட்டியில் மணலிட்டு அம்மணலுக்குள் இதை வைத்து எரித்தால் மணல் அப்பிரேக எரிப்பு என்றும் எருக்குள் இதை வைத்து புடம் போட்டால் எரு அப்பிரேக புடம் என்றும் இவ்விதமாக இதை எதில் வைத்து எரிக்கிறோமோ, அல்லது புடம் போடுகிறோமோ அந்த பெயரையுடைய அப்பிரேகப் புடமாகும். மேல் சொல்லிய காடைப்புடம் முதல் கனபுடம் வரையிலும், தீபாக்கினி எரிப்பு முதல் காடாக்கினி எரிப்பு வரையிலும் இதை வைத்தால் அந்த பெயரையுடைய புடமும் எரிப்பும் உள்ளது.

உதாரணம்:—அப்பிரேக காடைப்புடம், அப்பிரேக தீபாக்கினி எரிப்பு, இவைகள் நீங்கலாக சூரியபுடம், உமிபுடம், நெல்புடம், பூமிபுடம், ஜலபுடம், வாயுபுடம் இவ்வாறு புடங்களும் போடப்படும். மருந்தை எதில் வைக்கப்படுகிறதோ அந்த பெயரையுடைய புடமாகும்.

சூரியபுடம் என்பது மருந்தை வெய்யிலில் வைப்பதாம்.

வாயுபுடம் என்பது மருந்தை ஒரு கலயத்திலிட்டு அகலால் மூடி சீலை மண் செய்து அந்த கலயத்தைச் சுற்றிலும் காற்றுப் போகும்படியாய் நெருக்கமாய் சிறு துவாரங்கள் இட்டு கழுத்தில் கயிறு கட்டி ஒரு தோப்பின் மத்தியில் உள்ள மரத்தின் மேல் கட்டி தொங்க விடுவதாம்.

ஜலபுடம் என்பது மருந்தை எதிலாகிலும் போட்டு சீலைமண் செய்து சேற்றுக்குள் புதைத்து வைப்பதாம். இவ்விதமாய் மற்றவையும் அறிந்துகொள்க.

# பூபதிகள்

## ஸ்ரீகைலாசநாத பூபதி.

கௌரிப்பாஷாணம், வெள்ளைப்பாஷாணம், லிங்கம், மனோசிலை, தாளகம், மிருதார்சிங்கு, பூரம், கல்நார் இவ்வெட்டும் சுத்திசெய்து வகைக்கு பலம் 1 தூக்கி அத்துடன் சுத்தி செய்த ரசம் பலம் 8 சேர்த்து குப்பைமேனி, வேலிப்பருத்தி, பொடுதலை இவைகளின் சாற்றால் வகைக்கு 2 ஜாமம் அரைத்து உலர்த்தி நொறுக்கி ஒரு சட்டியில் வெற்றிலை பரப்பி அதன் மேல் மருந்தை வைத்து வெற்றிலையால் மூடி பிறகு மேல் சட்டி மூடி 7 சீலைமண் வலுவாய் செய்து உலர்த்தி கமலாக்கினியாய் 24 மணிநேரம் எரித்து எடுக்க மேல் சட்டியில் பதங்கம் ஏறியிருக்கும். அதை எடுத்து 1 பலம் தூக்கி அத்துடன் சரிகை வெள்ளியை ராவின பொடி பலம் 1, தங்கத்தை ராவின பொடி பலம் 1, சுத்தி செய்த வீரம் பலம் 2

இவைகளைச் சேர்த்து கல்வத்திலிட்டு முலைப்பாலால் 2 ஜாமம் அரைத்து 3 நாள் பனியில் வைத்து அத்துடன் சுத்தி செய்த கந்தகம் பலம் 4 சேர்த்து பொற்றலை கையாந்தகரைச் சாற்றால் 1 ஜாமம் அரைத்து உலர்த்திப் பொடி செய்து காசிக் குப்பியில் போட்டு பளபகல்லால் மூடி குப்பி முழுமையும் 7 சீலைமண் வலுவாய் செய்து உலர்த்தி ஒரு சட்டியில் 5 விரல்கடை மணலைக் கொட்டி அதன்மேல் குப்பியை வைத்து கழுத்து வரை மணலைப் போட்டு கமலாக்கினியாய் 3 ஜாமமும், காடாக்கினியாய் 3 ஜாமமும் எரித்து ஆற்றி உடைத்து செந்தூரத்தை எடுத்துவைத்துக் கொண்டு ½ முதல் 1 குன்றிமணியிடை அனுபானத்தில் கொடுக்க சுரம்(64), சன்னி (13), மூர்ச்சை (4), பிரமேகம் (21), காசம் (5), சுவாசம் (5), க்ஷயம் (5), அபஸ்மாரம் (5), மேகம் (20), குன்மம் (8), மகோதரம் (8), வாதம் (80), பித்தம் (40), சிலேஷ்மம் (20), சூலை (18) குஷ்டம் (18), வலிப்பு (5), கிரந்தி (9), கண்டமாலை (18) முதலியவைகள் குணமாகும்.

## அத்வைத பிர்மானந்த பூபதி

தங்கம் விராகனிடை 1, வெள்ளி விராகனிடை 2½, பாலரசம் விராகனிடை 8, நெல்லிக்காய் கந்தகம் பலம் 1, *தாளக பஸ்மம் பலம் 1, மனோசிலை பலம் ½, ரசசெந்தூரம் பலம் ½, உலாந்தாலிங்கம் பலம் ½, வெள்ளீய பஸ்மம் பலம் 1, நாக பஸ்மம் பலம் ½, கருவங்க பஸ்மம் பலம் ¼, தாம்பிர பஸ்மம் விராகனிடை 2, கருநாவி பலம் 1 இவைகளைக் கல்வத்தில் இட்டு பொற்றலைக்கையாந்தகரைச் சாற்றால் 4 ஜாமமும் கற்றாழைச் சாற்றால் 2 ஜாமமும் பாதிரிப் பூச்சாற்றால் 2 ஜாமமும், வெள்ளெருக்கம் பூச்சாற்றால் 2 ஜாமமும், எலுமிச்சம் பழச்சாற்றில் செம்பரத்தம் பூவைப் போட்டு பிசைந்து வடிகட்டின ரசத்தால் 2 ஜாமமும் அரைத்து உலர்த்தி பொடிசெய்து கைலாச நாத பூபதியில் சொல்லியபடி காசிக் குப்பியில் போட்டு எரித்து எடுத்து உடைத்து மருந்தை எடுத்து 1, 2, குன்றிமணியிடை அனுபானத்தில் கொடுக்க குன்மம் (8), பாண்டு (5), நீர்க்குத்தல், பெரும்வயிறு, மகோதரம், விம்மல், சோகை (5), மேகம் (20), காசம் (5), வாதம் (80), சுரம் (64), சூலை (18), க்ஷயம் (5), வலிப்பு (5), தீரும். வியாதிக்குத் தக்க பத்தியமாம்.

---

* தாளக பஸ்மம், நாக பஸ்மம், தாம்பிர பஸ்மம் முதலிய சகல பஸ்மங்களும், செந்தூரங்களும் செய்யும் முறையை இப்புத்தகத்தில் காணலாம்.

## ஸ்ரீராம பூபதி

தங்கபஸ்மம், நாக பஸ்மம், அயபஸ்மம், காந்த செந்தூரம், தாம்பிர பஸ்மம்; வகைக்கு விராகனிடை 2 சேர்த்து முலைப்பாலால் அரைத்து பிறகு முத்து விராகனிடை 10, வைர பஸ்மம், பவள பஸ்மம், மாணிக்க பஸ்மம், புட்பராக பஸ்மம், பச்சை பஸ்மம் வகைக்கு விராகனிடை ½ சுத்தி செய்த நெல்லிக்காய்க் கந்தகம் விராகனிடை 4, சுத்தி செய்த லிங்கம் விராகனிடை 8, பாலரசம் விராகனிடை 4, சுத்தி செய்த தாளகம் விராகனிடை 1½, மனோசிலை விராகனிடை 1, வெள்ளைப்பாஷாணம் விராகனிடை 1, துருசு விராகனிடை 1, நவக்ஷாரம் விராகனிடை 1, பூரம் விராகனிடை 1, வீரம் விராகனிடை 1, பச்சைக் கர்ப்பூரம் விராகனிடை 1, இவைகளைச் சேர்த்து பொற்றலைக்கையாந்தகரைச் சாற்றால் 1 ஜாமம் அரைத்து பிறகு கோமூத்திரத்தால் 1 ஜாமமும், எலுமிச்சம்பழச்சாற்றால் 1 ஜாமமும், கறியுப்பு ஜலத்தால் 1 ஜாமமும் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு ஓட்டால் மூடி சீலைமண் செய்து 50 எருவில் புடம் போட்டு எடுத்து, அத்துடன் கண்ட இடைக்கு பாதி சுத்திசெய்த லிங்கங்கூட்டி முலைப்பாலால் அரைத்து நீண்ட அல்லது வட்டமாக மாத்திரைகள் செய்து வைத்துக் கொள்க. இதை அரிசியிடை அனுபானத்தில் உரைத்துக் கொடுக்க இறந்த பிணமும் கொஞ்சம் பேசிவிட்டு மரணமடையும். ஈசுவர பூபதியில் சொல்லிய சகல வியாதிகளும், இன்னும் மற்ற வியாதிகளும் குணமாகும். வியாதிகளுக்குத் தக்க பத்தியமாகும்.

## ஈசுவர பூபதி

அப்பிரேக செந்தூரம், கௌரிபாஷாணம், ரசசெந்தூரம், லிங்கசெந்தூரம், வங்க பஸ்மம், அயச்செந்தூரம், கந்தக பஸ்மம், தாம்பிர பஸ்மம், கர்ப்பூரசலாசத்து பஸ்மம், தாளக பஸ்மம், வகைக்கு விராகனிடை 10, பாலரசம் விராகனிடை 50, பூரம் விராகனிடை 25, வீரம் விராகனிடை 12½, எண்ணெய் வெங்காரம் விராகனிடை 1, நேர்வாளப் பருப்பு விராகனிடை 1 , துருசு சுண்ணம் விராகனிடை 1, இவைகளில் சுத்தி செய்யவேண்டியவைகளைச் சுத்தி செய்து கல்வத்திலிட்டு தாளக பஸ்மத்தில் சொல்லிய வெடியுப்பு ஜெயநீரால் 2 ஜாமம் அரைத்து உலர்த்தி, காசிக்குப்பியில் போட்டு பளபக்கல்லால் மூடி சுண்ணாம்புச் சீலை 7 தடவை செய்து உலர்த்தி ஒரு சட்டியில் 4 விரல்கடை கறியுப்பைப் போட்டு அதன் மத்தியில் மேற்படி காசிக்குப்பியை வைத்து கழுத்து வரையில் கறியுப்பைக் கொட்டி, சட்டியை அகலால் மூடி 7 சீலைமண் செய்து தீபாக்கினியாய் 3 ஜாமம் எரித்து எடுத்து சீசாவை உடைத்து மருந்தை எடுத்து குன்றிமணியிடை அனுபானத்தில் கொடுக்க சுரம்(64), சூலை (18), முடக்கு, பாண்டு (5), குஷ்டம் (18) சன்னி (13), வலிப்பு (5), வாதம் (80),

விஷநீர், மேகப்புண், கிரந்தி (9), காசம் (5), சுவாசம் (5), மேகம் (20) முதலிய வியாதிகள் குணமாகும்.

## இராஜ பூபதி

தங்கம், வெள்ளி, தாம்பிரம், காந்தம், இரும்பு, இவ்வைந்தும் சுத்தி செய்து ராவின பொடி வகைக்கு பலம் 1, சுத்தி செய்த கந்தகம் பலம் 2, பாலரசம் பலம் ½, சுத்தி செய்த வீரம் பலம் ¼, முப்பு பலம் 1 இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றால் 4 ஜாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து வராக புடம் போட்டு எடுத்து, பொற்றலைக்கையாந்தகரைச் சாற்றால் 4 ஜாமம் அரைத்து 1 புடமும், சிறு செருப்படைச்சாற்றால் ஒரு புடமும் போட செந்தூரமாகும். சுக்கு, மிளகு, திப்பிலி சேர்ந்த சூரணத்துடன் தேன் சேர்த்து அதில் பணவிடை வைத்துக் கொடுக்க வாதம் (80), பித்தம் (40), சிலேஷ்மம் (20), வாத பித்த சிலேஷ்மத்தால் உண்டாகும் சகல இதர வியாதிகளும் குணமாகும்.

## ஜீவ பூபதி

தங்கப் பொடி, வெள்ளிப்பொடி, நாகபஸ்மம், அயச்செந்தூரம், காந்த செந்தூரம், முத்து, பவளம், பாலரசம், கந்தகம், லிங்கம், மனோசிலை, அரிதாரம், சிங்கி, நாவி இவைகளைச் சுத்தி செய்து வகைக்கு விராகனிடை 5 சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் 4 ஜாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து வராகபுடம் 3 தடவை போட செந்தூரமாகும். இதற்குச் சமமாக சுத்தி செய்த லிங்கங்கூட்டி முலைப்பாலால் 4 ஜாமம் அரைத்து நீளமாக மாத்திரை செய்து இஞ்சிச் சாறும் தேனும் சேர்த்து அதில் குன்றிமணியிடை உரைத்துக் கொடுக்க, சன்னி (13), தோஷம் (9), சகல வாத பித்த சிலேஷ்ம ரோகங்கள் குணமாகும்.

## சுவர்ண பூபதி

தங்க பஸ்மம், வெள்ளி பஸ்மம், தாம்பிர பஸ்மம், வங்க பஸ்மம், அப்பிரேக பஸ்மம், வெங்கல பஸ்மம், பித்தளை பஸ்மம், அயச்செந்தூரம், காந்த செந்தூரம் இவைகளைச் சமமாகச் சேர்த்து கற்றாழைச் சாற்றால் 4 ஜாமம் அரைத்து உலர்த்தி கைலாச நாத பூபதியில் சொல்லியபடி காசிக்குப்பியிலிட்டு எரித்து எடுத்து வைத்துக் கொண்டு, சுக்கு, மிளகு, திப்பிலி இவைகளின் பொடியுடன் தேன் கூட்டி மத்தித்து அதில் பணவிடை வைத்துக் கொடுக்க சன்னி, சுரம், தோஷம், வலிப்பு, இழிப்பு, சூலை, காசம், க்ஷயம், பாண்டு, குன்மம், மேகம், கண்டமாலை முதலிய சகல ரோகங்களும் குணமாகும்.

## விஷ்வ பூபதி

சுத்தி செய்த கந்தகம் பலம் ½ ஒரு சட்டியிலிட்டு உருக்கி அவ்வுருக்கு வாயில் சுத்திசெய்த ரசம் பலம் 4 சேர்த்து வறுத்தால் பஸ்மமாகும். இப்பொழுது பாக்கு போல உடைத்த புது சங்கல் சேர்.1. ஒரு பாண்டத்தில் போட்டு பிறகு மேற்படி பஸ்மத்துடன் கறியுப்பு சேர். ½ சேர்த்து அப்பாண்டத்தில் தூவி மேல் சட்டி கவிழ்த்து 7 சீலைமண் செய்து உலர்த்தி கமலாக்கினியாயும் காடாக்கினியாயும் 4 ஜாமம் எரித்தால் மேல் சட்டியில் பஸ்மம் தங்கியிருக்கும், இந்த பஸ்மம் பலம் 4 கந்தகம் பலம் ½ அரிதாரம் பலம் 1 பொடி செய்து காசிக்குப்பியிலே பாதிபோட்டு 7 சீலைமண் செய்து உலர்த்தி ஒரு சட்டியில் 4 விரற்கடை மணலை போட்டு அதன் மேல் குப்பியை வைத்து கழுத்து வரையில் மணலைக் கொட்டி முன் போல் 4 ஜாமம் எரித்தால் செந்தூரமாகும். இந்த செந்தூரம் பலம் 1, முன் பஸ்மம் பலம் 4, கந்தகம் பலம் ½, அரிதாரம் பலம் ¼, பொடி செய்து முன் போல் காசிக்குப்பியில் போட்டு முன் போல எரித்தால் செந்தூரமாகும். இவ்விதமாக 10 தடவை செய்து உண்டான செந்தூரம் பலம் 4, முன் பஸ்மம் பலம் 4, கந்தகம் பலம் 2, அரிதாரம் பலம் ½, மனோசிலை பலம் ¼, தாளகம் பலம் ¼, கல்வத்தி லிட்டு மாதுளம் பூச்சாற்றால் 4 ஜாமமும், பூவரசம்பூ சாற்றால் 4 சாமமும், தக்காளிப்பழச் சாற்றால் 4 ஜாமமும் பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றால் 2 ஜாமமும் அரைத்து பிறகு அத்துடன் தங்க ரேக்கு பலம் 1 சேர்த்து அரைத்து உலர்த்தி முன் போல் காசிக்குப்பியில் போட்டு சீலைமண் செய்து முன் போல எரித்து எடுத்த செந்தூரத்தில் குன்றிமணி இடை தேனில் கொடுத்துவர ஒரு மண்டலத்தில் வித்தாகும். விந்து கீழ்நோக்காது. தினம் 100 ஸ்திரீகளை போகிக்கலாம். தேகம் வயிரம் போலாகும். அன்றியும் இதை அனுபானத்திலிட சகல வியாதிகள் குணமாகும்.

## சச்சிதானந்த பூபதி

சுத்தி செய்த நிமிளை பலம் 1, உருக்கி உருக்குவாயில்- சுத்தி செய்த கருநாகம் ஒரு பலமும், தங்கம் ஒரு பலமும், சுத்திசெய்த வெள்ளீயம் 2 பலமும், கொடுத்து கல்வத்திலிட்டு சூர்ணிக்க தூளாகும். அத்துடன் வீரம் பலம் 4, சுத்தி செய்த வெள்ளைப் பாஷாணம் பலம் ¼, சுத்தி செய்த ரசம் பலம் 2, சேர்த்து 2 ஜாமம் முலைப்பாலாலரைத்து, மூன்று நாள் பனியில் வைத்து பிறகு 12 பலம் கந்தகத்தைச் சேர்த்து பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றால் 3 ஜாமம் அரைத்து பிறகு மனோசிலை பலம் ¼ சேர்த்து மேற்படி சாற்றால் அரைத்து உலர்த்தி பொடி செய்து சீலை மண் செய்த காசிக் குப்பியிலிட்டு கைலாசநாதபூபதியில் சொல்லியபடி எரித்து சலாகையினாலே கிண்டி பரிக்ஷித்துப் பார்க்க முனையில்

கரகரக்கும் பதத்தில் இறக்கிப் பார்க்க சிவந்த செந்தூரமாயிருக்கும். ஒரு குன்றிமணியிடை பசுவின் பாலில் கொடுக்க கண் விழித்து மூடு முன்னே பிணமும் பேசும். சகல வாத ரோகங்களும், சகல பித்தரோகங்களும் சகல சிலேஷ்மரோகங்களும், சகல மேக ரோகங்களும் குணமாகும்.

## ஆத்மபூபதி

ஒரு பலம் நாகூர்ச்செல்லியை லேசான தகடுகளாகத்தட்டி புளியிலைச் சாற்றில் 3 நாள் ஊறவைத்து பிறகு கொதிக்க வைத்து எடுத்து 2 பலம் நெல்லிக்காய் கந்தகத்தை வெள்ளெருக்கம்பாலால் அரைத்து மேற்படித் தகடுகளுக்கு கவசமிட்டு உலர்த்தி ஒரு அகலில் வைத்து அகலால் மூடி சீலைமண் செய்து (50) எருவில் புடம் போட்டு எடுத்து கண்ட யிடைக்கு சுத்தி செய்த ரசமும், கந்தகமுஞ்சேர்த்து சிறு செருப்படைச் சாற்றால் அரைத்து குகையில் வைத்து சீலைமண் செய்து முன்போல புடம் போட்டு எடுத்து 8ல் ஒரு பாகம் (1/8) கருநாவியும், மிளகுஞ்சேர்த்து கொடிவேலி வேர்ப்பட்டை கஷாயத்தால் 2 ஜாமம் அரைத்து குன்றுமணி அளவாக மாத்திரைகள் செய்து உலர்த்தி ஒரு மாத்திரையை திப்பிலிசூர்ணத்திலிட 13 சன்னியும், கொடிவேலிவேர் கஷாயத்திலிட சூலை 18ம், சுக்கு மிளகு திப்பிலி இம்மூன்றுஞ் சேர்த்து சூர்ணித்து அதிலிட சகல சுரங்களும், தேனிலிட குன்மம் 8ம், பவுத்திரம் (15)ம், மேகப்புண் முதலிய சகல வியாதிகளும் குணமாகும், வியாதிக்குத் தக்க பத்தியமாம்.

## பிரம்ம பூபதி

அரிதாரம் விராகனிடை 3, வீரம் விராகனிடை 2½ கௌரி பாஷாணம் விராகனிடை 2, வெள்ளைப் பாஷாணம் விராகனிடை 1½, உலாந்தாலிங்கம் விராகனிடை 1, இவைகளைச் சுத்தி செய்து கல்வத்திலிட்டு குப்பைமேனி, உத்தாமணி, பொடுதலை இவைகளின் சாற்றால் தனித்தனியே 2 ஜாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து 1 முதல் 2 எருவில் ஒரு சிறு புடம் போட்டு எடுத்து அத்துடன் சுத்தி செய்த வெள்ளிப் பொடி விராகனிடை 2, தங்கரேக்கு விராகனிடை 2 சேர்த்து முலைப்பாலால் 2 ஜாமம் அரைத்து உலர்த்தி காசிக்குப்பியிலிட்டு பளபக்கல்லால் மூடி சீலைமண் செய்து கைலாசநாத பூபதியை எரிக்கும் விதமாய் எரித்து எடுத்து ½ முதல் 1 குன்றிமணி இடை மருந்து சுக்கு, மிளகு, திப்பிலி இவைகளின் சூர்ணத்துடன் தேன் சேர்த்து அதில் வைத்துக் கொடுக்க வாதம் (80), குன்மம் (8), நெஞ்சடைப்பு, பிரம்மை, மூர்ச்சை (5), க்ஷயம் (5), வாந்தி (5), கபம், சுரம் (64), காமாலை, சோகை, விஷபாகம், சன்னி (13), வலிப்பு (5),

சூலை (18), மேகம் (20), மகோதரம் முதலிய அநேக பலமான வியாதிகள் குணமாகும். வேறு அனுபானங்களிலும் கொடுக்கலாம். பத்தியம்-உப்பில்லாப் பத்தியம் இருந்து மறு பத்தியம் இருக்கவேண்டும்.

## ருத்திர பூபதி

தாம்பிரபஸ்மம், வங்கபஸ்மம், நாகபஸ்மம், பித்தளைபஸ்மம், வெண்கலபஸ்மம், தாளகபஸ்மம், காந்தசெந்தூரம், அயசெந்தூரம், மனோசிலை, உலாந்தர்லிங்கம், பாலரசம், நெல்லிக்காய் கந்தகம், வெங்காரம் இப் பதிமூன்றும் வகைக்கு பலம் 1, கௌரிப்பாஷாணம் பலம் ¼ இவைகளில் கடைசியான 5 சரக்குகளை சுத்தி செய்து கொள்ளவும், கல்வத்தில் முதலில் ரசமும் கந்தகமும் போட்டு அரைத்து பிறகு மற்றவைகளைச் சேர்த்து கொஞ்சம் அரைத்துப் பிறகு சுத்தி செய்த நேர்வாளப்பருப்பு பலம் 1, அரிசி திப்பிலி பலம் 1 சேர்த்து கற்றாழைச் சாறு, வெள்ளாட்டுப் பால், வெள்ளெருக்கம் பால், திருகுகள்ளிப்பால், இவைகளால் தனித்தனியே ஒரு ஜாமம் அரைத்து உலர்த்தி காசிக்குப்பியில் இட்டு, பளபக்கல்லால் மூடி சீலைமண் செய்து கைலாசநாத பூபதியை எரிக்கும் விதமாய் எரித்து எடுத்து அத்துடன் சுத்தி செய்த கருநாவி பலம் 1 சேர்த்து வெள்ளெருக்கம் பழுப்பு இலைச் சாற்றால் 1 ஜாமம் அரைத்து வைத்துக் கொண்டு அனுபானத்தில் குன்றிமணியிடை கொடுக்க சன்னி (13), சிலேஷ்ம ரோகங்கள் (96), மூர்ச்சை (4), வலிப்பு (5), திமிர்வாதம், முடக்கு வாதம், பார்சி வாதம், தேக வீக்கம், மகோதரம், பிலீகை, மேகம் (21), சூலை (18), சுரம் (64) முதலிய வாத பித்த சிலேஷ்மங்களாலுண்டாகும் சகல வியாதிகளும் குணமாகும்.

☞ மேல் சொல்லிய பூபதிகள் எல்லாம் செந்தூரமாக வைத்துக்கொண்டு உபயோகிக்கலாம். அல்லது செந்தூரத்தை முலைப்பாலாலரைத்து வட்டமாய் அல்லது நீளமாய் மாத்திரைகளாக்கி உலர்த்தி வைத்துக்கொண்டு அனுபானத்திலுரைத்துக் கொடுக்கலாம்.

# தயிலங்கள்

## பஞ்சரச தயிலம்

சீந்திற்தண்டுச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, கற்றாழைச்சாறு, கையாந்தகரைச்சாறு, கிராசெங்கழுநீர்ச்சாறு வகைக்கு படி ¼,

நல்லெண்ணெய் படி 1¼, பசும்பால் படி ¼ இவைகளைச் சேர்த்து அதில் அதிமதுரம் பலம் 3 அரைத்துப்போட்டு காய்ச்சி வடித்து ஸ்நானஞ்செய்து வர பித்தவாயு, பித்தவெட்டை, பித்த காங்கை, தேக எரிவு, சித்த பிரமை, பித்த மயக்கம், வாந்தி, கை,கால் எரிவு, வரட்சி, தாகம், பித்த சுரம், முதலிய சகல பித்த வியாதிகள் குணமாகும். தேக புஷ்டியாகும். தேக சூடு தணியும்.

## கபாலசூலை நாசத்தயிலம்

100 வருஷத்திய வேப்பமரத்தின் பட்டைச்சாறு படி 2, நல்லெண்ணெய், பசும்நெய் வகைக்குப் படி ½ சேர்த்து காய்ச்சி வடித்து சிரசில் தினம் பதமிட்டு வாரத்துக்கு 2 தடவை ஸ்நானஞ் செய்துவர நெற்றி, கன்னம், கபாலத்தில் மிக இடியும், குத்தலும், வேதனையும் உண்டாகிற கபால சூலை குணமாகும்.

## உஷ்ணஹரதயிலம்

அறுகம்புற்கிழங்கினது தோலையும் கணுக்களையும் நீக்கி 10 பலம் நிறுத்தி இடித்து குருணி ஜலத்திலிட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி வடித்து அத்துடன் நல்லெண்ணெய் படி 1 சேர்த்து அதில் வெட்டிவேர், கார்கோலரிசி, கோஷ்டம் வகைக்கு விராகனிடை 1 மேற்படி கசாயத்தால் அரைத்துக் கரைத்து காய்ச்சி வடித்து எடுத்து ஸ்நானஞ் செய்து வர சிரசில் பித்தம், மண்டையிடி, நீர்எரிவு, ரத்த மூத்திரம், மேககாங்கை, நேத்திர ரோகங்கள், பயித்தியம் பித்தரோகங்கள் குணமாகும்.

## நீரடிமுத்துத் தயிலம்

நீரடிமுத்துவின் பருப்பு, துருசு, துத்தம், நெல்லிக்காய் கந்தகம், லிங்கம், தாளகம் ரசம் வகைக்கு விராகனிடை 1 நெய் சேர் 2 இவைகள் எல்லாம் சேர்த்து அரைத்து வைத்துக்கொண்டு சொறி, சிரங்கு, கரப்பான், மேகப்புண், முதலிய சகல தோலைப்பற்றிய வியாதிகளுக்கு தடவி தேய்த்து விடவும். துர்நீர் வடியும் 3 மணிநேரம் ஊறின பிறகு சீயக்காயை அரைத்து தேய்த்து வெந்நீரில் ஸ்நானஞ் செய்யவும். சொறி, சிரங்கு முதலியவைகள் வேரோடு அற்றுப் போகும்.

## தாமரைத் தயிலம்

தாமரை இலைச்சாறு படி 1, நல்லெண்ணெய் படி 1 சேர்த்துக் காய்ச்சி இறக்கி, அதில் பூலாங்கிழங்கு விராகனிடை 2 பச்சிலை விராகனிடை 2 சூர்ணித்துப் போட்டுக் கிளறி 2 நாழிகைக்குப் பிறகு வடித்து முழுகிவர உஷ்ணம் தணியும். கண் எரிவு, நீர்க் கடுப்பு, மூலச்சூடு தீரும். விந்து ஊறும். தேகம் பொன்போல் மின்னும்.

## மிருதார்சிங்குத் தயிலம்

மிருதார்சிங்கு லிங்கம், தாளகம் மனோசிலை வகைக்கு விராகனிடை 1 பொடிசெய்து 4 பலம் தேங்காய் எண்ணெயில் கலந்து காய்ச்சி வடித்துக் கொள்ளவும். அடியில்தங்கும் மருந்தை கல்வத்திலிட்டு கொஞ்சம் வடித்த எண்ணெய் விட்டு மைபோலரைத்து முன்வடித்த எண்ணெயோடு சேர்த்துக் கலக்கிக் கொண்டு குழந்தை களுக்குக் காணும் கால்க் கடுவான், மண்டைக் கடுவான், சொறி சிரங்கு முதலியவைகளுக்குத் தடவிவர குணமாகும்.

## குமிழம்பழத் தயிலம்

குமிழம்பழச் சாறு படி 1, தேங்காய்ப்பால் படி 1, சேர்த்துக் காய்ச்சி வடித்து தலையில் தடவி வர தலையில் காணும் புழுவெட்டு, மயிர் உதிருதல் குணமாகி மயிர் ஏக நீளமாய் வளரும்.

## பீநசநாசத்தயிலம்

நல்லெண்ணெய், பசுவின் பால், ஜுனீர் (ஜலம்) வகைக்குப் படி 1 சேர்த்து அதில் சந்தனம், தாமரை வளையம், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், கஸ்தூரி மஞ்சள், தேற்றாங்கொட்டை, ஏலம், கோரைக்கிழங்கு, சீரகம், பூலாக்கிழங்கு, பச்சிலை, செங்கழுநீர்க்கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, அதிமதுரம், மஞ்சிட்டிவேர், சண்பக மொட்டு, புனுகுச் சட்டம், குங்குமப் பூ வகைக்கு விராகனிடை 1 சூர்ணித்துச் சேர்த்து கமலாக்கினியாய் எரித்து வடித்து ஸ்நானஞ் செய்து வர ரத்த பீநசம், செறாபீநசம், திரிபீநசம் முதலிய 18 வகை பீநச ரோகங்கள் குணமாகும்.

## பரிமளத் தயிலம்

சந்தனத்தூள், பூலாக்கிழங்கு, பச்சிலை வகைக்கு பலம் 2, வெட்டிவேர், சண்பகமொட்டு, கொழுந்து, கோரைக்கிழங்கு, மகிழம்பூ, ரோஜாமொட்டு வகைக்கு பலம் 1, கிளியூரம்பட்டை, செவ்வல்லிக்கொடி, மஞ்சிஷ்டிக் கிழங்கு பூஞ்சாந்துப்பட்டை வகைக்குப் பலம் ½, சடா மாஞ்சில், விலாமிச்சம் வேர், கல்பாசை, கஸ்தூரி மஞ்சள், ஏலம், நன்னாரி வேர் வகைக்குப் பலம் ¼, கருவாப்பட்டை பலம் 1/3 தாழம்பூ 1 இவைகளில் தாழம்பூ தவிர மற்றவைகளை நிழலில் உலர்த்தி சூர்ணித்து சுத்த ஜலத்தால் மைபோலரைத்து 4 சேர் ஜலத்தில் கரைத்து அத்துடன் நல்லெண்ணெய் சேர் 8 சேர்த்து துளாவி எரித்து, பதத்தில் வடித்து அதில் மேற்படி தாழம்பூ இதழ்களைப் போட்டு மூடி நெல்லுக்குள் 3 நாள் வைத்து எடுத்து தலைக்குத் தடவி சீவிக்கொண்டால் வெகு வாசனையாயும் மயிர் வெகு நீளமாயும் வளரும். கண்களுக்கு வெகு குளிர்ச்சி.

## தூர்வைக் கிழங்குத் தயிலம்

அறுகம்புல் கிழங்கினது தோலையும் கணுக்களையும் நீக்கி 5 வீசை நிறுத்தி இடித்து 4 மரக்கால் ஜலத்திலிட்டு எரித்து பதினாறிலொன்றாக்கி அத்துடன் பசும்பால் படி 2, நல்லெண்ணெய் படி 1 சேர்த்து ஒரு ஜாதி விறகினால் எரித்து வடித்து வைத்துக்கொண்டு ஸ்நானஞ்செய்து வர, வாதரோகம் (80), மூளைச் சூடு, ஆண்குறி எரிவு, வயிறு எரிவு, அழலை, கிரந்தி, மேகம், பித்தரோகம் (40), கபாலச்சூலை, பீநசரோகம் (18), இன்னும் அநேக வியாதிகள் இந்த தயிலத்தால் குணமாகும்.

## லகு சந்தனாதித் தயிலம்

மலாக்கா சந்தனத்தூள் பலம் 10, சீந்தில் தண்டு, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், கோரைக்கிழங்கு, சிற்றாமுட்டி, பேராமுட்டி, அமுக்கிராக்கிழங்கு, நன்னாரிவேர், பற்படாகம் வகைக்கு பலம் 2, இவைகளை இடித்து தூணி ஜலத்திலிட்டு பதினாறிலொன்றாய்க் காய்ச்சி வற்றவைத்து வடித்த கூஷாயத்தில் செவ்விள நீர் ஜலம், பொன்னாங்கண்ணிச் சாறு வகைக்குப் படி 1, சிறுகீரை, பொடுதலை, வல்லாரை, பொற்றலைக்கரிப்பான், சிறு சின்னி, நெல்லிக்காய், தாழை விழுது, கர்ப்பூரவல்லி இவைகளின் சாறு, பசுவின் நெய் வகைக்குப் படி ½ நல்லெண்ணெய் படி 1½, பசுவின் பால் படி 2, வெள்ளாட்டுப் பால், தயிர்த்தண்ணீர் வகைக்குப் படி 1 விட்டு அதில் கஸ்தூரி மஞ்சள், சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், பூஞ்சாந்துப்பட்டை, நெல்லி வற்றல் தானிக்காய், கடுக்காய், கிளியூரம் பட்டை லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, பச்சிலை, பூலாங்கிழங்கு, செவ்வல்லிக்கொடி, சண்பகப் பூ, சந்தனத்தூள், சீரகம், கருஞ்சீரகம், செங்கழுநீர்க்கிழங்கு, கோஷ்டம், அக்கிராகாரம், மஞ்சிஷ்டிவேர், பலகை மஞ்சள், முத்தக்காசு, வலம்புரிக்காய் வகைக்குப் பலம் ¼ பசுவின் பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து அதில் குங்குமப்பூ, கோரோசனை, புனுகு வகைக்கு விராகனிடை ½ பொடித்துப் போட்டு, நெல்லுக்குள் 10 நாள் வைத்து ஸ்நானஞ் செய்து வர நீரிழிவு, பிரமேகம், க்ஷயம், கண் எரிவு, கண் புகைச்சல், கை கால் எரிவு, வெட்டை, கிரந்தி, கற்றாழை நாற்றம், அஸ்தி சுரம், பித்தம், மயக்கம், கண்டமாலை, சூலை, குஷ்டம், புழுவெட்டு முதலிய அனேக வியாதிகள் குணமாகும்.

## மகாகொம்பரக்குத் தயிலம்

கொம்பரக்கு பலம் 16 ஒரு பாண்டத்தில் கிளிக்கட்டித் தொங்கவிட்டு அப்பாண்டத்தில் 16 மரக்கால் ஆற்று ஜலம் விட்டு ஒரே ஜாதி விறகினால் எரித்து எட்டில் ஒன்றாக்கின கசாயத்தில் பசும்பால் படி 2, நல்லெண்ணெய் படி 2 காடி ஜலம், தயிர்த்தண்ணீர் வகைக்குப் படி ½

சேர்த்து அதில் சந்தனத்தூள், கஸ்தூரி மஞ்சள், கோஷ்டம், லவங்கப் பட்டை, லவங்கப்பத்திரி, பச்சிலை, அதிமதுரம், சடாமாஞ்சில், பூலாங் கிழங்கு, கடுகு ரோகிணி, ஏலம், சதகுப்பை, கிளியூரம் பட்டை, பூஞ்சாந்துப் பட்டை, சீரகம், கருஞ்சீரகம், மெருகன் கிழங்கு, செவ்வல்லிக் கொடி வகைக்குப் பலம் ½ மேற்படி பாலால் அரைத்து கரைத்து எரித்து வடித்து ஒரு மாதம் நெல்லுக்குள் வைத்து எடுத்து ஸ்நானம் செய்து வர சுரம் (64), தேகக்கடுப்பு, சந்திராவர்த்தனம், சூர்யாவர்த்தனம், கபாலசூலை, கற்றாழை நாற்றம், தந்தரோகங்கள், சுவாசகாசம், உழலை ரோகம், பாண்டு (5), குளிர் சுரம், புராதன சுரம் முதலியவைகள் குணமாகும்.

## அசுவகந்தி பலாலட்சாத் தயிலம்

அமுக்கிராக் கிழங்கு, சிற்றாமுட்டிவேர், கொம்பரக்கு வகைக்கு பலம் மூன்று நொறுக்கி 8 படி ஜலத்திலிட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சிய கசாயத்தில் தயிர்த்தண்ணீர் படி 3 நல்லெண்ணெய் படி 1 சேர்த்து அதில் அமுக்கிராக்கிழங்கு, குருந்தொட்டிவேர், கொம்பரக்கு, பெரும் குரும்பை, சித்தரத்தை, விலாமிச்சம்வேர், அதிமதுரம், மஞ்சிஷ்டிக் கிழங்கு, சதகுப்பை, கோஷ்டம், பலகை மஞ்சள், சந்தனத்தூள், திப்பிலி மூலம், மிளகு, கடுகுரோகிணி, தேவதாரம், கோரைக்கிழங்கு நன்னாரிவேர் வகைக்கு விராகனிடை 3, பசும்பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்தால் சூதகவாதம், சன்னிபாதம், சகல வாத ரோகங்கள், சகல பித்த ரோகங்கள், சகல கப ரோகங்கள், சகல சுரங்கள், பீநச ரோகம், மேகம், குஷ்டம், சுவாசகாசம், ஆண்குறி எரிவு, தேக எரிவு, கற்றாழை நாற்றம் முத்லிய சகல ரோகங்களும் குணமாகும்.

## சர்வ கபரோகநாசத் தயிலம்

வெண்ணொச்சியிலை, பொற்றல்கையாந்தகரைச் சமூலம், சங்கிலை, வெள்ளைச் சாரணைசமூலம், தேள்கொடியிலை, பேராமுட்டி, கண்டங்கத்திரி சமூலம், ஆடாதொடையிலை, பொடுதலை, கீழ்வாய்நெல்லி, தூதுளை இவைகளின் சாறு வகைக்கு படி ½ சேர்த்து அதில் வெள்ளாட்டுப்பால் படி 2 நல்லெண்ணெய் படி 2 விட்டு பிறகு கடுகு, சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலம், வெள்ளை மிளகு, செவ்வியம், பெருங்காயம், ஓமம், அதிவிடையம், சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, யானைத்திப்பிலி, வெட்பாளையரிசி, பெருமரப்பட்டை, வாய்விளங்கம், கடுகுரோகிணி, கொடிவேலி வேர், பெருங்குரும்பை, வசம்பு வகைக்கு விராகனிடை ½ வெள்ளாட்டுப்பாலால் அரைத்து அதில் கரைத்து காய்ச்சி வடித்து மூன்று விராகனிடை வீதம் உள்ளுக்குச் சாப்பிட்டு ஸ்நானம் செய்து வர காசம் (5), சுவாசம் (5), க்ஷயம் (5) முதலிய சகல கபரோகங்கள் குணமாகும்.

## வாத சம்ஹாரித்தயிலம்

நொச்சியிலை, சதுரக்கள்ளி, தழுதாழை இவைகளின் சாறு, வெள்ளாட்டுப்பால், எருக்கம்பால், ஆமணக்கெண்ணெய் வகைக்குப் படி 1 சேர்த்து அதில் கடுக்காய், வெள்ளை மிளகு, வெள்ளைப் பூண்டு, பெருங்காயம், நெல்லிக்காய் கந்தகம், கோஷ்டம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகு, வகைக்கு விராகனிடை 3 மேற்படி சாறுவிட்டு அரைத்து கரைத்து எரித்து வடித்து வைத்துக்கொண்டு வியாதியுள்ள இடத்தில் தடவிப் பிடித்தால் திமிர் வாதம், முடக்கு வாதம், சந்து சிலேஷ்மவாதம், கீல்வாதம் முதலிய சகலவாத ரோகங்கள் குணமாகும்.

## சச்சிதானந்த தயிலம்

இஞ்சிச்சாறு, முசுமுசுக்கைச் சாறு, கையாந்தகரைச் சாறு, நல்லெண்ணெய், பசும்பால் வகைக்குப் படி 1 சேர்த்து வெட்டிவேர் பலம் ½, சந்தனத்தூள், மிளகு,வகைக்கு பலம் 2½ நிறுத்தி மேற்படி பசும்பாலால் அரைத்துக் கரைத்து காய்ச்சி வடித்து இந்த வடித்த தயிலதத்தில் குங்குமப்பூ, சாம்பிராணி வகைக்கு விராகனிடை 1, சூர்ணித்துப் போட்டு மூடி மூன்று நாள் நெல்லுக்குள் வைத்து எடுத்து ஸ்நானம் செய்து வர தலை நோய் வாதக்குடைச்சல், கர்ண ரோகங்கள் (25) பீநச ரோகங்கள் (18), முகநோய், சகல கபரோகங்கள், தேகக் கடுப்பு, சகல பித்த ரோகங்கள் குணமாகும்.

## கணபதித் தயிலம்

கையாந்தகரைச் சாறு, நெல்லிக்காய்ச் சாறு, நல்லெண்ணெய் வகைக்குப் படி 2, பசும்பால் படி 4 சேர்த்து அதில் சிற்றாமுட்டிவேர், பேராமுட்டிவேர், அதிமதுரம், நாகமல்லி வேர், திராட்சை, சதகுப்பை, கோஷ்டம், சந்தனத்தூள், மஞ்சள், பூலாங்க்கிழங்கு, விலாமிச்சம் வேர், கொத்தமல்லி விதை, முசுமுசுக்கை வேர், சித்தரத்தை, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஏலம் வகைக்கு விராகனிடை 6 இவைகளைப் பால்விட்டு அரைத்து கரைத்து எரித்து வடித்து ஸ்நானம் செய்தால் தேகத்தில் ஒளி உண்டாகும். சகல பித்த ரோகங்கள், சகல நேத்திர ரோகங்கள், சகல சிரோரோகங்கள் குணமாகும்.

## சண்முகத் தயிலம்

கையாந்தகரை, நெல்லிக்காய், ஆலம் விழுது தழுதாழை, தண்ணீர் விட்டான் கிழங்கு, வாழைக்கிழங்கு, இவைகளின் சாறு, நல்லெண்ணெய் வகைக்குப் படி 2, பசும்பால் படி 4 சேர்த்து அதில் நெய்தற்கிழங்கு, அல்லிக் கிழங்கு, சந்தனத்தூள், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், வ்சம்பு,

அதிமதுரம், முசுமுசுக்கை வேர், தாமரைப்பூவிதழ், தூதுளைவேர், மஞ்சிஷ்டிக் கிழங்கு, கோரைக்கிழங்கு, சிறு செண்பகப்பூ, பெருஞ் செண்பகப்பூ, சடாமாஞ்சில், தேவதாரு, நன்னாரிவேர், வேங்கைவயிரம், அமுக்கிராக்கிழங்கு, கோஷ்டம், கர்ப்பூரம், பெருங்குரும்பை, சதகுப்பை, வகைக்குப் பலம் ¼, பசும்பாலிட்டு அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஸ்நானஞ் செய்தாலும், நசியம் செய்தாலும் சிரோரோகங்கள் *(19)* நேத்திரரோகங்கள் *(96)*, கர்ண ரோகங்கள் *(25)*, செவிடு குணமாகும்.

## சாம்பிராணித் தயிலம்

வாயகன்ற ஒரு சட்டியில் 4 பலம் பால் சாம்பிராணியை சிறுக துண்டுகளாக்கிப் போட்டு சுத்தமான தாம்பாளத்தால் அதன் வாயை மூடி மேற்படி தாம்பாளத்தில் குளிர்ந்த ஜலம் போட்டு மேற்படி சட்டியை அடுப்பின் மேல் வைத்து தீபம்போல் சிறு தீயால் எரித்தால் தைலம் பிறந்து தாம்பாளத்தின் அடியில் படிந்திருக்கும். அடிக்கடி ஜலம் வார்த்து வேறு தாம்பாளத்தை மூடி, முன் தாம்பாளத்தில் இருக்கும் தயிலத்தை வழித்துக் கொள்க. இது தலைநோவுக்கு நடவ குணமாகும். அன்றியும் விபூதியுடன் சேர்த்தால் விபூதி வெகு வாசனையாய் இருக்கும். வாசனைத் திரவியங்களுடனும் சேர்க்கலாம். இவ்விதமாக மட்டிப்பால் தைலத்தையும் செய்துகொள்ளலாம்.

## மகாசந்தனாதித் தயிலம்

ஒரு பாண்டத்தில் 12 மரக்கால் ஜலமிட்டு அதில் மணமுள்ள சந்தனக்கட்டையின் தூள் பலம் 12 போட்டு எரித்து 3 படியாகும்படி வற்றவைத்து வடித்து இவ்வாறே வெட்டிவேரையும் காய்ச்சி வடித்து இவ்விரண்டு கசாயங்களும் ஒரு பாத்திரத்தில் சேர்த்து அத்துடன் பொன்னாங்கண்ணி வேர், விலாமிச்சை வேர், ஆவாரை வேர், அமுக்கிராக்கிழங்கு, வில்வவேர், தோன்றிக் கிழங்கு, தாமரைக் கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, கோரைக்கிழங்கு, சிற்றாமுட்டி வேர், ஆலம் விழுது, கற்றாழை வேர், சீந்திற் கிழங்கு, நெய்தற்கிழங்கு, அல்லிக் கிழங்கு, வெற்றிலைக்கொடி வேர் வகைக்குப் பலம் 12 தனித்தனியே இடித்து வேறொரு பாத்திரத்தில் போட்டு 64 படி ஜலம் விட்டு பதினாறி லொன்றாகக் காய்ச்சின கசாயமும் விழுதியிலை, தாளியிலை, கஞ்சா யிலை, கற்றாழை, நொச்சியிலை, பொன்னாங்கண்ணியிலை, முள் முருங்கையிலை, முடக்கற்றான், கையாந்தகரை, வெற்றிலை, இவைகளைத் தனித்தனியே பிழிந்த சாறு வகைக்குப் படி 12, செவ்விளநீர் படி 12, பசுவின் பால் படி 12, நல்லெண்ணெய் படி 12 இவைகளையும் சேர்த்து அத்துடன் சிறுகீரைவேர், செங்கழுநீர்க் கிழங்கு, பொன்னாங்கண்ணி வேர், கோரைக்கிழங்கு, வெட்டிவேர், நெய்தற்கிழங்கு, விலாமிச்சம் வேர்,

சிற்றாமுட்டி வேர், நன்னாரிவேர், ஏலம், கொம்பரக்கு, வெண்சந்தனம், செஞ்சந்தனம், சடாமாஞ்சில், அகிற்கட்டை, சாம்பிராணி, தேவதாருக்கட்டை, பச்சிலை, வங்காளப்பச்சை, சாதிக்காய், சாதிப்பத்திரி, குரோசாணி ஓமம், மஞ்சிஷ்டிவேர், செண்பகமொட்டு, சிறுநாகப்பூ, திராட்சை, பேரீச்சம் பழம், அதிமதுரம், சித்தரத்தை, தாளிசப்பத்திரி, கிரந்திதகரம், செவ்வல்லிக்கொடி, கிராம்பு, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி வகைக்கு விராகனிடை 12 இவைகளை செவ்விளநீரால் அரைத்துக் கரைத்து ஆவாரை விறகினால் எரித்து வடித்து அதில் தாழம்பூவை பரப்பி அதன் மேல் குங்குமப் பூ, கோஷ்டம் , கோரோசனை, நாகணம், சாம்பிராணி, வகைக்கு விராகனிடை 12 அபின் விராகனிடை 6 தூவி அதன் மேல் பச்சைக் கற்பூரம், புனுகு, கஸ்தூரி வகைக்கு விராகனிடை 1 போட்டு வாய்மூடி நெல்லுக்குள் ஒரு மண்டலம் வைத்து எடுத்து ஸ்நானம் செய்து வர சுரம் (64), க்ஷயம் (5), சுவாசம் (5), காசம் (5), மூலம் (8), பகந்தரம், வாதம் (80), மகோதரம் (8), காமாலை (13), உன்மத்தம் (6), சோபை (9), பாண்டு (5), அண்ட விருத்தி, குஷ்டம் (18), சுரோணிதவாதம், குன்மம், மூர்ச்சை இவைகளுமன்றி சிரசு, நெற்றி, கண், நாசி, செவி, மூலம், நா, கழுத்து இவ்விடங்களைப் பற்றி வருகிற ரோகங்களும், இன்னும் பற்பல ரோகங்களும் அதாவது 4448 வியாதிகள் குணமாகும்.

## கடல்நுரைத் தயிலம்

கடல்நுரை விராகனிடை 10, சந்தனம், பிசின் கம்பி, மஞ்சள், கோஷ்டம், பொன் மெழுகு, விலாமிச்சம் வேர், சதகுப்பை, முத்தக்காசு, மஞ்சிட்டிக் கிழங்கு, இலுப்பைப் பூ, கடுகுரோகிணி, பெருங்குரும்பை, வெட்டிவேர் வகைக்கு விராகனிடை 5 இவைகளை பசும்மோர் விட்டு அரைத்து 2 படி நல்லெண்ணெயில் கரைத்து அத்துடன் 12 படி மோர் சேர்த்து காய்ச்சி வடித்து ஸ்நானம் செய்து வர சகலசுரங்கள் உள்சுரம், சதாகாலங் கதகதப்பு, தேகக்கடுப்பு, வாயில் நீர்ஊறல், நாவரட்சி தீரும்.

## தேத்தாங்கொட்டைத் தயிலம்

100 பலம் தேத்தாங்கொட்டையை நன்றாய்ப் பொடி செய்து அத்துடன் ஆற்றுஜலம் படி 16 விட்டு சிறுதீயாக எரித்து எட்டில் ஒரு பங்காக வடித்த கஷாயத்தில் நல்லெண்ணெய் படி ஒன்று விட்டு பிறகு மஞ்சள், கப்புமஞ்சள், கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, சந்தனக்கட்டைத் தூள், வில்வப்பழத் தசை, வெள்ளிலோத்திரம், காய்ச்சுக்கட்டி, விளாம்பழத் தசை, பருத்திக்கொட்டைப் பருப்பு, வெண்குன்றிப்பருப்பு, மாங்கொட்டைப் பருப்பு, கிரந்தி தகரம், வாழைப்பூ,

கர்ப்பூரசிலாசத்து, காந்தக்கல், காவிக்கல், வட்டத்திப்பிலி ஆக 19ம் வகைக்கு விராகனிடை 1 இவைகளில் பொடியாக்கத்தக்க வைகளைப் பொடியாக்கி, பிறகு மற்ற சரக்குகளை, வெண்வேலங் கசாயத்தால் மைபோலரைத்து மேற்படி கசாயத்துடன் சேர்த்து சிறு தீயாய் எரித்து வடித்து சீசாவிலிட்டு, சீலைமண் செய்து நெற்புடத்தில் 9 நாள் வைத்து எடுத்து காலை மாலை ஒவ்வொரு காசிடை வீதம் உள்ளுக்கு கொண்டாலும், மேல் பூசி துவாலையிட்டுப் பிடித்தாலும், வாரத்துக்கு 2 தடவை அப்பியங்கனஞ்செய்தாலும் மேகஅழலை, மேகவெட்டை, மேகநீர், முதலிய பற்பல மேகசம்பந்தமான ரோகங்கள் பெருங்காற்றில் அகப்பட்ட கொசுக்களைப்போலாம்.

## சுரானந்தத் தயிலம்

மாவிலிங்கு இலை, நொச்சியிலை, ஊமத்து இலை, கழற்சி இலை, முருங்கையிலை, ஆமணக்கு இலை, வீழி இலை, இலைக்கள்ளி, சதுரக்கள்ளி, தழுதாழை இவைகளின் சாறு, எட்டிப் பழச்சாறு, நல்லெண்ணெய் வகைக்குப் படி 1, கோமூத்திரம், வெள்ளாட்டு மூத்திரம் வகைக்குப் படி ½, சதுரக்கள்ளிப்பால், எருக்கம்பால், வகைக்குப் படி ¼ இவைகளையெல்லாம் சேர்த்து அதில் எட்டி விதை பலம் 2 ஜலத்தில் ஊறவைத்து, அரைத்து, கரைத்து, எரித்து, வடித்து வலியிருக்கும் இடத்தில் தடவித் தேய்க்க, சகல வாதவலியும் குணமாகும். உள்ளுக்குச் சாப்பிடக்கூடாது.

## விரூபாக்ஷத் தயிலம்

நெல்லிக்காய், பொன்னாங்கண்ணி, முசுமுசுக்கை, சீந்திலிலை இவைகளின் சாறு, பசுவின் பால், நல்லெண்ணை வகைக்குப் படி 1 சேர்த்து, அதில் சந்தனத்தூள், சண்பகப்பூ, முத்தக்காசு, அதிமதுரம், ஏலம், சடாமாஞ்சில், சுக்கு, மிளகு, திப்பிலி, கிராம்பு வகைக்குப் பலம் ¼ பசும்பாலால் அரைத்து, கரைத்து, எரித்து, வடித்து அப்பியங்கன ஸ்நானஞ்செய்து வர பித்த கிறுகிறுப்பு, வாய் நீர் ஊறல், சித்த பிரமை, அரோசிகம், வாந்தி குணமாகும்.

## க்ஷீரஸாகரத் தயிலம்

பொற்றல்கையாந்தகரை, செங்கழுநீர்க் கிழங்கு, நெல்லிக்காய், பொன்னாங்காணி, தாமரைத் தண்டு, முசுமுசுக்கை வல்லாரை, தண்ணீர்விட்டான், சீந்திற்தண்டு, சிறுஅகத்தி இவைகளின் சாறு வகைக்குப் படி 1, நன்னாரி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, விலாமிச்சு, சிறுகாஞ்சோரி, வில்வம், நீர்முள்ளி, தூதுவளை இவைகளின் வேர், வெட்டி வேர், சித்தரத்தை, சந்தனத்தூள், மரமஞ்சள், வகைக்குப்பலம் 5 இவைகளை இடித்து அத்துடன் ஜலம் படி 8 விட்டு காய்ச்சி,

எட்டிலொன்றாக்கி அத்துடன் நல்லெண்ணெய் படி 5, பசும்பால் படி 4 சேர்த்து அதில் குங்குமப் பூ, அதிமதுரம், கோஷ்டம், சிறுநாகப்பூ, சதகுப்பை, தேவதாரம், சீரகம், மிளகு, மஞ்சள் கோரோசனை, லவங்கப்பட்டை, சித்தரத்தை, மரமஞ்சள் வகைக்கு பலம் ½ பசும் பாலாலரைத்து கரைத்து எரித்து வடித்து நாலுநாளைக்கு ஒரு தடவையாக அப்பியங்கன ஸ்நானஞ்செய்து வர மேகம் மேககாங்கை, தேகஎரிவு, தாகம், கண் புகைச்சல், பித்த கிறுகிறுப்பு, மயக்கம், சோம்பல், தலைமயிர் உதிருதல் முதலியவைகள் குணமாகும்.

## ஜேஷ்டராஜ தயிலம்

வில்வவேர் (பட்டை நீக்கி), இழைத்த சீவல், பலம் 20, நன்னாரிவேர் பலம் 10, விலாமிச்சம் வேர், தாழைவிழுது வகைக்கு பலம் 6, வெட்டிவேர், மலாக்கா சந்தனத்தூள், தண்ணீர் விட்டான் கிழங்கு வகைக்கு பலம் 1 இவைகளை இடித்து 20 படி ஜலத்திலிட்டுக் காய்ச்சி 4 படியாக வற்றவைத்து அத்துடன் நல்லெண்ணெய் படி 2 சேர்த்து அதில் மிளகு பலம் 1, முத்தக்காசு, சடாமாஞ்சில் கோஷ்டம் வகைக்கு விராகனிடை 4, சாதிக்காய், வால்மிளகு வகைக்கு விராகனிடை 1 அரைத்துப் போட்டு 2 நாள் வரையில் உமிக்காந்தலில் வைத்திருந்து மூன்றாம்நாள் காய்ச்சி வடித்து 7 நாள் நெற்புடம் வைத்து எடுத்து வாரத்துக்கு 2 தடவை அப்பியங்கன ஸ்நானஞ்செய்து வர மேகவெட்டை, நீரிழிவு, நீரடைப்பு, கல்லடைப்பு, நீர்த்தாரை எரிவு, கிரிச்சரம், மேகக்காந்தல், பித்தம், கண் புகைச்சல், முதலிய அநேக வியாதிகள் குணமாகும். பத்தியம் ஸ்நானஞ்செய்த தினம் புளி, புகை, சையோகம் இவைகளை நீக்கவும்.

## ரதிப்பிரியத் தயிலம்

வேளைசமூலம்சாறு, பசுவின் பால், நல்லெண்ணெய், இஞ்சிச் சாறு வகைக்கு சேர். 1 சேர்த்து அதில் ¼ சேர் பால் சாம்பிராணியை, பசுவின் பால் விட்டு அரைத்து, கரைத்து எரித்து வடித்து அதில் 1/8 தோலா அபினியை கரைத்துவிட்டு 4 நாள் வரை வைத்திருந்து பிறகு தினம் கொஞ்சம் தைலமெடுத்து சிரசில் தேய்த்துவர சிரோரோகங்கள் (19), கபால ரோகங்கள், தலைவலி, பீநச ரோகங்கள், மண்டையிடி, கழுத்துக்குமேல் வரும் சகல வியாதிகள் குணமாகும்.

# எண்ணெய்கள்

## ஆமத்தெண்ணெய்

நொச்சியிலை, முடக்கற்றான், வெண்சாரணை, உத்தாமணி,, பாவட்டை, பொடுதலை, இவைகளின் சாறு, தேங்காய்ப்பால், ஆமணக்கெண்ணெய், வகைக்குப் படி 1 சேர்த்து, அதில் சுக்கு வசம்பு, சீரகம், தேவதாரம், கப்பு மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், வெள்ளைப்பூண்டு, உத்தாமணி வேர், பெருங்காயம், மிளகு, ஆமையின் ஓடு வகைக்கு விராகனிடை 1. தேங்காய்ப்பாலால் அரைத்து கரைத்து காய்ச்சி வடித்து ஒரு சிறு பாலடை வீதம் உதயகாலத்தில் பாலர்களுக்குக் கொடுக்க மாந்த ரோகங்கள் எல்லாம் குணமாகும். அன்றியும் வயிற்றில் உண்டாயிருக்கும் ஆமக்கட்டிகள் நீங்கும்.

## மாந்த எண்ணெய்

ஆமணக்கெண்ணெய், உத்தாமணிச்சாறு வகைக்குப் படி 2 சேர்த்து அதில் கருஞ்சீரகம், வெட்பாளையரிசி, கடுகுரோகிணி, நீரடி முத்துப் பருப்பு, கோஷ்டம் கார்போகிவிதை சண்பகப்பூ, அக்கிராகாரம், வகைக்குப்பலம் ¼, சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு பலம் 2 இவைகளை மேற்படி சாற்றால் அரைத்து, கரைத்து, எரித்து, வடித்து, காலையில் பாலர்களுக்கு முலைப்பாலில் கால் பலம் சேர்த்து கலந்து அனலில் வெதுப்பி குடிப்பிக்க தொண்டையில் கபங்கட்டுதல், பொருமுமாந்தம், நளிர் சுரமாந்தம் முதலிய மாந்த ரோகங்கள் (8)ம் குணமாகும்.

## கஸ்தூரி எண்ணெய்.

ஆமணக்கெண்ணெய் படி 1, வெங்காயச்சாறு படி 2, ஆகாசத்தாமரை இலைச்சாறு படி 1, சேர்த்து அதில் நீரடிமுத்துப்பருப்பு, கார்போகி விதை, கருஞ்சீரகம், சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, வெட்பாலையரிசி, வகைக்கு பலம் ½, வெங்காயச்சாற்றினால் அரைத்து கரைத்து எரித்து வடித்து அதில் ஏலம் விராகனிடை 2 ½, கோரோசனை விராகனிடை 2, கஸ்தூரி விராகனிடை ½, இவைகளைச் சூர்ணித்து போட்டு கலந்து வைத்துக் கொண்டு சிசுமுதல் 10 வயது வரையிலும் கொடுக்கலாம். ஆனால் வயதுக்குத் தக்கபடி 1/8, முதல் ½ பலம் வரையில் காலையில் கொடுக்க வாய்பிதற்றல், மயக்கம், இசிவு, இழுப்பு, சுவாசரோகம், வயிற்றைப்பற்றிய சகலவியாதிகள், கபவாதம், குதாவர்த்தனவாதம், செவ்வாப்புக்கட்டி முதலிய அநேக வியாதிகள் குணமாகும்.

## கந்தகசுடர் எண்ணெய்

கந்தகம், வெடியுப்பு, மனோசீலை, இவைகளைச் சுத்திசெய்து வகைக்கு பலம் 1, நவக்ஷாரம், சுத்தி செய்த வீரம் வகைக்கு பலம் ½, இவைகளை கல்வத்திலிட்டு பசும் நெய் பலம் 4 சேர்த்து அரைத்து, சுடர்த்தயிலம் இறக்கி காலை மாலை 10 நாள் ஓர் பணவிடை வீசம் கொடுக்க குஷ்டம், சொறி, மேகப்புண், கருமேகம், வெண்மேகம், வாதம், க்ஷயம், குன்மம், கிரந்தி, அரையாப்புத் தீரும். வியாதிக்குத்தக்க பத்தியமாம்.

## வச்சிரபீஜ எண்ணெய்

கழற்சிக் கொடியின்வேர்ப்பட்டை பலம் 20, இடித்துப் பாண்டத்திலிட்டு ஜலம் படி 6 விட்டு ஒரு படியாகும்படி காய்ச்சின கசாயத்தில் கழற்சிக்கொடியின் கொழுந்து பலம் 5, கழற்சிப்பருப்பு பலம் 2, அரைத்து கரைத்து ஆமணக்கெண்ணெய் பலம் 40, கூட விட்டு அதில் ஏலம், பறங்கிப்பட்டை, வால்மிளகு, சன்னலவங்கப்பட்டை வகைக்கு பலம் ½, இவைகள் இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்து சேர்த்து ஒரேஜாதி விறகால் எரித்து வடித்து அதில் சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு பலம் ½, சுத்திசெய்த ரசகர்ப்பூரம் பலம் ½, அத்தைலத்தைவிட்டு மைபோல அரைத்து கலந்து வைத்துக் கொள்ளவும். அத்தைலத்தினால் அடிக்குடலில் சுழலுகின்றவாயுவும், பீஜவாயுவும், அதன் வீக்கமும், பாதமுதல் சிரசுவரையில் உள்ள சப்ததாதுக்களை ஒட்டிப்பிறக்கின்ற வீக்கங்களும் குணமாகும். இந்த எண்ணெய் ½, அல்லது ¼, பலம் காலையில் மாத்திரம் 3 நாள் சாப்பிடவும். இச்சாபத்தியம்.

## மெருகுள்ளி எண்ணெய்

தோலை நீக்கி நறுக்கின மெருகன்கிழங்கு, தோலை நீக்கின வெள்ளைப்பூண்டு வகைக்கு பலம் 10 ஆமணக்கெண்ணெய் பலம் 20 இவைகளை ஒரு பாண்டத்திலிட்டு எரித்து அவைகள் சிவந்து மிதக்கும் பக்குவத்தில் வடித்து 3 நாள் சென்றபிறகு காலையில் மாத்திரம் ½, 1, 2, பலமாக தேகபேதங்களை அறிந்து கொடுக்க சந்திக சிலேஷ்மரோகம், மேகத்தினால் கிளைத்துண்டாகின்ற ரணம், மேகவாயுவின் வீக்கம், சகலமேகங்கள் குணமாகும். பத்தியம் - உப்பு, புளி, நீக்கவும்.

## பச்சை ரச எண்ணெய்

வெற்றிலை, பாவட்டை இலை, கோவை இலை, வகைக்கு பலம் 5, கல்லுரலிலிட்டு பாதரசம் பலம் ¼, விட்டு இரும்புப்பூணில்லாத உலக்கைக் கொண்டு மைபோல் இடித்து கடைந்து திரட்டி ஒரு பாத்திரத்தில்

போட்டு ஆமணக்கெண்ணெய் படி 1, ஊற்றி மாறுகப்பையால் ஒன்று பட கரைத்து 3 நாள் சூர்யபுடம் வைத்தெடுத்து கால் பலம் வீதம் (போதுமான நாள் அளவும்) சாப்பிட நூணாக்காய்க்கிரந்தி, மேகப்புண், சிரங்கு, கீற்றாக வெடிக்கிற புண்கள், பாதம், உடம்பு, கை இவைகளிலுண்டாகிற கருமேகம், கசிந்து ஒழுகுகிறமேகம், கண்டமாலை முதலியவைகள் குணமாகும். பத்தியம் உப்பு, புளிப்பு, நீக்கவும்.

## மகா மேகத்தெண்ணெய்

100 வருஷத்திய பூவரசமரத்தின் பட்டை, சங்கங்குப்பி, வல்லாரை, சிறு செருப்படை, கோவை, பொன்னாங்காணி, ஆனைநெரிஞ்சில், சீந்திற்தண்டு இவைகளின் சாறு வகைக்கு படி 1, ஆமணக்கெண்ணெய் படி 2, சேர்த்து அதில் ஜாதிக்காய், ஜாதிபத்திரி, மாசிக்காய், கற்கடகசிங்கி, சண்பகப்பூ, காட்டாத்திப்பூ, சிறுநாகப்பூ, குரோசாணி ஓமம், வகைக்கு விராகனிடை 4, கொடிவேலிவேர்ப்பட்டை பலம் 2, இவைகளை தூளாக்கி பசும்பாலால் அரைத்து, கரைத்து, எரித்து, வடித்து, அதில் கற்கண்டு பலம் 4 பொடித்துப் போட்டு 3 நாள் காலையில் மாத்திரம் ¼ சேர் வீதம் சாப்பிட்டு உப்பில்லா பத்தியமாயிருக்க மேககாங்கை, மேகப்புற்று, மேகசொறி, மேகஊறல், கிரந்தி, மேகப்புண், லிங்கப்புற்று, யோனிப்புற்று, வெடிசூலை, சகல பிரமேகங்கள் குணமாகும்.

## அஷ்டபயிரவ எண்ணெய்

வீரம், பூரம், வெடியுப்பு, கல்லுப்பு, நவச்சாரம், வகைக்கு பலம் 1, கௌரிப்பாஷாணம், மனோசீலை வகைக்கு பலம் 2, தாளகம் பலம் 4, இவைகளை சுத்தி செய்து கோழிமுட்டையின் மஞ்சள் கருவாலாட்டி பில்லைத் தட்டி உலர்த்தி ஒரு சிறு கலயத்தில்போட்டு அடியில் ஒரு சிறு துவாரம் செய்து வாயை அகலால் மூடி சீலை மண்செய்து உலர்த்தி தரையில் ஒரு குழிவெட்டி அதில் ஒரு பாத்திரம்வைத்து, அதன்மேல் பாண்டத்தின் துவாரம் பாத்திரத்தின் மத்தியில் வரும்படியாகவைத்து, பாண்டத்தைச் சுற்றிலும் பாண்டத்தின் மேலும் எரு போட்டு புடம்போட தைலம் பாத்திரத்தில் இறங்கும். அதை எடுத்து வைத்துக்கொண்டு ஒரு பணவிடை வீதம் வெற்றிலையில் கொடுக்க தோஷம், சன்னி, வலிப்பு, இசிவு, சுவாசகாசம், சூலை, சுரம், வாதம், முதலிய சகலவியாதிகள் குணமாகும்.

## கிரகணிநாச எண்ணெய்

பெருமரத்துப்பட்டை பலம் 10 நொறுக்கி 8 படி ஜலத்தில் போட்டு, காய்ச்சி ஒரு படியாக்கி அதில் நல்லெண்ணெய் படி 1, புளியாரைச்சாறு

படி 1, தயிரை வடிகட்டின தண்ணீர் படி 4 சேர்த்து அதில் ஏலம், விலாமிச்சம்வேர், பெருங்காயம், திப்பிலிமூலம், வெட்பாலைப்பட்டை, கழற்சிப்பருப்பு, மரமஞ்சள், கிராம்பு, சுக்கு, அதிவிடயம், கோஷ்டம் கோரைக்கிழங்கு, வில்வப்பழத்தின் சதை, காட்டாத்திப்பூ, பூனைக்காஞ்சோறிவேர், சடாமாஞ்சில், வட்டத்திப்பிலி வகைக்கு விராகனிடை 1 ¼, மேற்படி கசாயத்தால் மைபோலரைத்து கரைத்து, எரித்து, வடித்து, காலை, மாலை 3-4 விராகனிடை வீதம் சாப்பிட்டுவர சகல கிரகணிரோகங்கள் குணமாகும். இச்சாபத்தியம்.

## வீரபத்திர எண்ணெய்

சங்கங்குப்பி, கோழியாவரை, நிலவாகை, பிரமதண்டு, (குடிகெட்டான்பூண்டு), சின்னி, அவுரி, பொடுதலை, வெள்ளறுகு, மலைவேம்பு, கழற்சி, நாட்டுக்காட்டாமணக்கு, இவைகளின்சாறு வகைக்கு படி ¼, சிற்றாமணக்கெண்ணெய் படி 2 இவைகளைச் சேர்த்து அதில் கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், கடுகுரோகிணி, வசம்பு, நீரடிமுத்து, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, காட்டு சீரகம், வகைக்கு விராகனிடை 10, வெள்ளைப்பூண்டு, கடுக்காயின் தோல் வகைக்கு பலம் 2, இவைகளை இடித்து மேற்படி சாற்றால் அரைத்து, கரைத்து, காய்ச்சி, வடித்து 8 நாள் 1/16 - 1/8 சேர் வீதம் காலையில் மாத்திரம் சாப்பிட்டுவர மலவிருத்தியாகி,அரையாப்புக்கட்டி, விப்புருதிக்கட்டி, பவுத்திரம், இவைகளின் புண், சகலமேகம், கிரந்தி, சொறி, சிரங்கு, கை, கால்களின் வெடிப்பு குணமாகும்.

## மகா வேப்பெண்ணெய்

வேப்பெண்ணெய் படி ½, வேலிப்பருத்திச்சாறு, வெள்ளெருக்கம் பழுப்புச்சாறு, குப்பைமேனிச்சாறு வகைக்கு படி ¼, சேர்த்து அதில் நொச்சிப்பட்டை, வெள்ளெருக்கம்பட்டை, முருங்கைப்பட்டை, வகைக்கு படி 1, ஓர்தலைப்பூண்டு, (வெள்ளைப்பூண்டு) பலம் 1, வசம்பு, சித்தரத்தை, வகைக்கு விராகனிடை 1, இவைகளை வேலிப்பருத்திச் சாற்றால் அரைத்து கரைத்து எரித்து, வடித்து, காலை மாலை 2-3 விராகனிடை வீதம் கொடுத்துவர தெற்கத்து கணமாந்தம், சுழிகணமாந்தம், சுவாசகாசம், தொண்டையில் கபங்கட்டுதல் சகலரோகங்களும் குணமாகும்.

## லகு தேங்காய்ப்பூ எண்ணெய்

தேங்காய்ப்பால் படி 2, உத்தாமணிச்சாறு படி 2, சிற்றாமணக் கெண்ணெய் படி ½, இவைகளைச் சேர்த்து அதில் கருஞ்சீரகம், திப்பிலி வகைக்கு விராகனிடை 2 ½, வெள்ளைப்பூண்டு பலம் 4 சுத்திசெய்த

நேர்வாளப்பருப்பு பலம் ½, இவைகளை மேற்படி பாலாலரைத்து, கரைத்து, எரித்து, வடித்து ¼, முதல் ½, பலம் கொடுக்க பாலர்களுக்கு வரும் இசிவு, ஜன்னி, வலிப்பு முதலியவைகள் குணமாகும்.

## லகு வேப்பெண்ணெய்

கல்யாணமுருங்கையின் இலை, ஆடாதோடை இலை, கண்டங்கத்திரி இலை, தூதுளை இலை, நாய்வேளை இலை, வகைக்குப் படி 1, தனித்தனியே சாறு எடுத்து சேர்த்து அதில் வசம்பு விராகனிடை 10, வெள்ளைப்பூண்டு விராகனிடை 10, மேற்படி சாற்றால் அரைத்து, கரைத்து, அத்துடன் வேப்பெண்ணெய் படி ½ சேர்த்து காய்ச்சி, வடித்து, 2-3 விராகனிடைவீதம் கொடுக்க காசம், இரைப்பு, மாந்தம், தொண்டையில் கபங்கட்டுதல், கபரோகம் குணமாகும்.

## மகா தேங்காய்ப்பூ எண்ணெய்

வெள்ளைக்காக்கட்டான்வேர், கொடிவேலிவேர்ப்பட்டை, உத்தாமணிவேர், பெருங்காயம், சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, நவக்ஷாரம், வெங்காரம், வெடியுப்பு, படிகாரம் வகைக்கு விராகனிடை 5, லிங்கம் விராகனிடை 2, பூரம் விராகனிடை 1, இவைகளை ஜலத்தால் அரைத்து ½ படி தேங்காய்ப்பாலில் கரைத்து காய்ச்சி எண்ணெய் எடுத்து 4 முதல் 8 விராகனிடை வீதம் வெந்நீரில் கொடுக்க பேதியாகி சூலை (18), வாதரோகம் (80), குணமாகும்.

## பாஷாண எண்ணெய்

கௌரிப்பாஷாணம், அரிதாரம், மனோசிலை, உலாந்தாலிங்கம், நெல்லிக்காய் கந்தகம் இவைகளைச் சுத்திசெய்து வகைக்கு விராகனிடை 30, சுத்திசெய்த ரசம் விராகனிடை 50, இவைகளில் ரசமும் கந்தகமும் சேர்த்து முதலில் அரைத்து பிறகு மற்றவைகளைச் சேர்த்து, பச்சை மஞ்சள் சாற்றால் 8 நாள் அரைத்து உலர்த்தி காசிக்குப்பியில் ¾ குப்பிப் போட்டு பளப்பக்கல்லால் மூடி, சுண்ணாம்பும், உமிக்கரியும் சேர்த்து ஜலமிட்டு அரைத்து சீலை செய்து, உலர்த்தி, தரையில் குழிவெட்டி ஆட்டு எருவைப் போட்டு அதன் மேல் மணல் 6 விரற்கடை உயரம் போட்டு அதன்மேல் மேற்படி குப்பியை வைத்து அதன்மேல் 6 விரற்கடை மணலைபோட்டு அதன்மேல் மண்ணைப்போட்டு மூடிவிடவும். ஒரு வாரம்சென்று எடுத்துப்பார்த்தால் நீலநிறமான தைலமாயிருக்கும். அதை வடித்து 3 நாள் சூர்யபுடம் வைத்து எடுத்து பணவிடைவீதம் மகோதரத்துக்கு மஞ்சள் சாற்றிலும், மேகத்துக்கு சிறுகீரைச் சாற்றிலும், குரை நோய்க்கு எலுமிச்சம் பழச்சாற்றிலும், குன்மத்துக்கு எருக்கம்வேர் கசாயத்திலும், தாதுபுஷ்டிக்கு சீனியிலும், விஷங்களுக்கு கொடிவேலிவேர் கசாயத்திலும், மற்ற வியாதிகளுக்கு தகுந்த அனுபானங்களில் கொடுக்க குணமாகும்.

## அமிர்த சஞ்சீவி எண்ணெய்

சதுரக்கள்ளிச்சாறு, சதுரக்கள்ளிப்பால், எருக்கிலைச்சாறு, எருக்கம்பால், பிரண்டைச்சாறு, பற்பாடகக்கசாயம், மெருகன் கிழங்கு கசாயம் வகைக்கு படி ¼, நல்லெண்ணெய் படி ½, வெள்ளாட்டுப்பால் படி 2 ¼, இவைகளைச் சேர்த்து அதில் நொறுக்கிய சேங்கொட்டை பலம் 5, சேர்த்து பிறகு சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு பலம் ½, மேற்படி கசாயத்தால் அரைத்து, கரைத்து, தீபாக்கினியாய் எரித்து, வடித்து, இதை சிறுகத்தொட்டு மேலுக்கும் பூசி வெற்றிலையில் தோய்த்து உள்ளுக்குஞ் சாப்பிட வாதம் (80), சந்நிபாதம், சுவாசகாசம் குணமாகும். இன்னும் மற்ற பல வியாதிகளும் குணமாகும்.

## நவப்பாஷாண சுடர் எண்ணெய்

வெள்ளைப்பாஷாணம், கௌரிப்பாஷாணம், வீரம், தாளகம், மனோசீலை, லிங்கம், பூரம், ரசசெந்தூரம், ரசம், இவ்வொன்பதும் சுத்தி செய்து வகைக்கு விராகனிடை 5, சுத்திசெய்த கந்தகம் விராகனிடை 10, இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து வெள்ளைத் துணியில் தடவி திரியாக்கி நிழலில் உலர்த்தி கதிரில் கோர்த்து, வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், புங்கெண்ணெய், ஆமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், இவ்வைந்தும் சமமாய் சேர்த்து அதில் தோய்த்துக் கொளுத்தவும். அதன் சுடர் ஒரு பீங்கானில் விழும்படி செய்து, எரியும் பொழுது மேற்படி எண்ணெய் கொஞ்சங்கொஞ்சமாய்விட்டு சுடர் தைலமிறக்கி தேகமெங்கும் துவாலையிட்டு, 4 துளி முதல் 20 துளிவரையில் பெரிவர்களுக்கு இஞ்சிச்சாற்றில் கொடுக்க சந்துவாதம், முடக்குவாதம், பக்கவாதம் ஓடுவாதம், முதலியவாதம் (80), சன்னி (13), தோஷம் (9) முதலிய சகல ரோகங்கள் குணமாகும். உப்பில்லா பத்தியம்.

## மகா முசுறுமுட்டை எண்ணெய்

வேப்பம்பட்டைக் கசாயம், குமட்டிக்காய்ச்சாறு, சிற்றாமணக் கெண்ணெய் வகைக்கு படி 2, இவைகளைச் சேர்த்து அதில் முடக்கொத்தான் வேர், வெள்ளைச்சாரணைவேர், நீர்முள்ளிவேர், கல்யாணமுருங்கைவேர் கருடக்கிழங்கு, சிவனார்வேம்பு, வெந்தோன்றிகிழங்கு, ஏலம், சீரகம், பெருங்காயம், கருஞ்சீரகம், கடுகுரோகிணி, வகைக்கு பலம் 4, அரைத்து, கரைத்து, முசுறுமுட்டை, கோழிமுட்டைத் தைலம், வகைக்கு பலம் 4, கூடச்சேர்த்து காய்ச்சி, வடித்து 2 விராகனிடை வீதம் குழந்தைகளுக்குக் கொடுக்க சகல சன்னியும், இசிவு முதலியவைகளும் குணமாகும். உப்பில்லா பத்தியம்.

## சூலப்பாணி எண்ணெய்

திருகக்கள்ளிசமூலஞ்சாறு, பேய்கும்மட்டிக்காய்ச்சாறு, விழுதி இலைச்சாறு, கழற்சிஇலைச்சாறு, முடக்கொத்தான்சாறு, பொற்றல் கையாந்தகரைச்சாறு, ஆடாதோடை இலைச்சாறு, அவுரி இலைச்சாறு, வேப்பம்பட்டைச்சாறு, ஆமணக்கெண்ணெய் வகைக்கு சேர் 5, (படி 1), சதுரக்கள்ளி சமூலம்சாறு, எருக்கிலைப்பழுப்புச்சாறு, வெள்ளாட்டு மூத்திரம் வகைக்கு படி ½, இவைகளைச் சேர்த்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், வெங்காரம், காச்சுலவணம், பிடாலலவணம், இந்துப்பு, சார்வச்சாலவணம், கரியுப்பு, நவச்க்ஷாரம், சத்திக்ஷாரம், எவக்ஷாரம், வாய்விளங்கம், கடுகு, கடுகுரோகிணி, ஆனைத்திப்பிலி, திப்பிலிமூலம், மரமஞ்சள், கருஞ்சீரகம் வகைக்கு பலம் 1, மேற்படி சாற்றால் அரைத்து, கரைத்து, எரித்து, வடித்து 10 நாள் நெல்லுக்குள் வைத்து எடுத்து 1/8, முதல் ¼, சேர் வீதம் பெரியோர்களுக்கும், ஒரு சிறு கரண்டி வீதம் குழந்தைகளுக்கும் கொடுக்க ஆமக்கட்டி, குன்மக்கட்டி, பீலிகவீக்கம், சூதகக்கட்டி, சூசிகாவாயு, சூதகசூலை, சகலவாயு, விப்புருதி, சூலை, மகோதரம், தேகவீக்கம், முதலிய அநேக வியாதிகளுக்கு கொடுக்க குணமாகும்.

## மேக சம்ஹாரி எண்ணெய்

சிறு செருப்படை, முசுமுசுக்கை, பொற்றல்கையாந்தகரை, பொன்னாங்காணி, நில்கடம்பு, நுணாயிலை, பிரமியிலை, முடக்கொத்தான், பொடுதலை, வெள்ளருகு, புங்கம் வேர், வெங்காயம், எலுமிச்சம்பழம், இவைகளின் சாறு, வகைக்கு 1/8 படி, ஆமணக் கெண்ணெய் சேர் 8. இவைகளை சேர்த்து காய்ச்சி, வடித்து, கால் சேர் நீராகாரத்தில் ஒரு கரண்டி எண்ணெய் விட்டு காலையில் சாப்பிடவும். இவ்விதமாய் 10 நாள் சாப்பிட மேகம் (20), பிரமேகம் (21), பிரமியம் (20), கண்டமாலை (18), மேகரணம், பவுத்திரம் (15), மூலம் (9), முடக்கு, பிடிப்பு, மேகவாயு, மேகஊறல், மேகப்படலம், கிரந்தி, புண், அண்டவாயு குணமாகும்.

☞ ரோகங்களின் வகுப்புகள் - லக்ஷணங்கள் - காரணங்கள் - சாத்திய அசாத்தியங்கள் - இன்னும் அநேக விஷயங்களை நம்மால் இயற்றப்பட்ட ரோகநிர்ணயசாரம் என்கிற கிரந்தத்தில் காண்க.

## எக்கியபதி எண்ணெய்

கொடிக்கள்ளியை வாட்டிப்பிழிந்த சாறு, சங்கங்குப்பி இலைச்சாறு, நுணாயிலைச்சாறு, பசுவின்பால், ஆமணக்கெண்ணெய் வகைக்கு படி 1, சேர்த்துக் காய்ச்சி வடித்து, ஒரு பலம் எண்ணெயில் அரைக்கால்

விராகனிடை சுத்திசெய்த ரசகர்ப்பூரத்தை உரைத்து காலை மாலை 3 நாள் கொடுத்து பசுவின்பால், வெள்ளாட்டுப்பால், வெந்நீர் கூட்டிக்கொண்டு 7 நாள் உப்பைவறுத்துக் கூட்ட சகல கிரந்திகளும் ரணங்களும், கை, கால் பிடிப்பும் குணமாகும்.

## இரத்தினகர்ப்ப எண்ணெய்

வரிக்கும்மட்டிக்காய்ச் சாறு, வெங்காயச்சாறு, மலைவேப்பிலைச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, ஆமணக்கெண்ணெய் வகைக்குப் படி 1, சேர்த்து காய்ச்சி, வடித்து பருவமாதர்களுக்கு மாதாந்த ருதுகாலமாகிய 3 நாள்களிலும் காலையில் மாத்திரம் ¼ சேர் எண்ணெயை ¼ சேர் நீர்ாகாரத்தில் கலந்து குடிப்பித்து உப்பில்லாப்பத்தியம் வைக்க வந்தியாரோகம் என்கிற மலடுரோகங்களும், சூதகக்கட்டும், மலட்டுப்புழுக்களுந்தீரும்.

☞ ஸ்திரீகளுக்கு சுகப்பிரஸவங்கள் உண்டாகும்படி அநேக அருமையான விஷயங்களை நம்மால் இயற்றப்பட்ட மருத்துவ சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதால் ஒவ்வொருவரும் அவைகளை அனுசரித்து நடக்கவேணுமென்பது நமது கருத்து.

## காலாக்கினித்தைலம் (எண்ணெய்)

தாளகம் பலம் 4, மனோசீலை பலம் 2, கௌரிப்பாஷாணம் பலம் 2, வீரம் பலம் 1, வெடியுப்பு, கல்லுப்பு, நவக்ஷாரம் வகைக்கு பலம் 1, இவைகளைச் சுத்தி செய்து கல்வத்திலிட்டு கோழிமுட்டையின் மஞ்சள் கருவால் 4 ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி தயிலம், இறக்கி வெற்றிலையில் 1 முதல் 5 துள்ளி விட்டுக்கொடுக்க சன்னி (13), வலிப்பு (5), இசிவு, சன்னி வலிப்பு முதலியவைகள் குணமாகும்.

# சூர்ணங்கள்

## கௌரிசங்கரச் சூர்ணம்

சுத்திசெய்த கஞ்சா, ஏலம், சாதிக்காய், கடுக்காய், சுக்கு, வாய்விளங்கம், மிளகு, திப்பிலி, நறுக்குமூலம், மஞ்சள், சாதிப்பத்திரி, கிராம்பு, ஓமம், குரோசாணி ஓமம், சித்தரத்தை, வகைக்கு பலம் 1, இவைகளை இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்து அதற்குப்பாதி எள்ளுச்சூர்ணம் எள்ளுக்குப்பாதி சீனி, இவைகளையெல்லாஞ்சேர்த்து 3

விராகனிடைச்சூர்ணத்தில் ஒரு குன்றிமணி இடை ரசவீரநாக செந்தூரம் வைத்து ஒரு மண்டலம் சாப்பிட சகல மூலரோகங்களும், மூலத்தினாலுண்டாகும் சகலரோகங்களும் குணமாகும். அன்றியும் கிரகணி, குஷ்டம் (18), மேகம் (20) குணமாகும்.

## மகா மேகச் சூர்ணம்

சுத்தி செய்த பரங்கிப்பட்டை பலம் 10, நொறுக்கி சூர்ணித்து வடிகட்டி அத்துடன் சங்கங்குப்பி, சிறு செருப்படை, பூவரசம்பட்டை, வாகைப்பட்டை, பொற்றல்கையாந்தகரை, முசுமுசுக்கை, திருகக்கள்ளி, இவ்வேழின் சாறு வகைக்கு சேர் 2½, சேர்த்து காய்ச்சி, வற்றவைத்து உலர்த்தி சூர்ணித்து ஒரு கலயத்திலிட்டு அதன்மேல் வெள்ளைக் குங்கிலியம், சுத்திசெய்த லிங்கம், சுத்திசெய்த ரசம், வகைக்கு விராகனிடை 1, கல்வத்திலிட்டு சூர்ணித்துப் போட்டு அகலால் மூடி சீலைமண் செய்து ஒரு மணிநேரம் சிறு தீயால் எரித்து ஆறின. பிறகு எடுத்து சூர்ணத்துக்குச் சமமாய் சீனி சேர்த்து 2 விராகனிடை சூர்ணத்தில் கொஞ்சம் கந்தகபஸ்மம் வைத்து காலை மாலை சாப்பிட்டுவர மேக ஊறல், மேகவெட்டை, மேகப்பிடிப்பு, மேகத்தடிப்பு, மேகவாயு, மேகரணம், யோனிப்புற்று, லிங்கப்புற்று, மேகசூலை, முதலிய சகல மேகரோகங்களும் குணமாகும். **பத்தியம்:-** புளி - வாயு பதார்த்தங்கள் தள்ளவும்; விளக்கெண்ணெய் தேய்த்து ஸ்நானஞ்செய்து வரவும்.

## காமேசுவரிச் சூர்ணம்

அரிசித்திப்பிலி பலம் 10, சித்திரமூலவேர்ப்பட்டை, கண்டத்திப்பிலி, சுக்கு, மிளகு, செவ்வியம், வாய்விளங்கம், கடுகு, ஓமம், கருஞ்சீரகம், இந்துப்பு, எட்டாங்காச்சல் வெடியுப்பு, மல்லி, சதகுப்பை, அதிமதுரம், வெட்பாலை அரிசி, சாதிப்பத்திரி, கிராம்பு, தாளிசப்பத்திரி, லவங்கப்பத்திரி, வகைக்கு பலம் 6 இவைகளை வெதுப்பி சூர்ணித்து அதற்குப்பாதி சீனி சேர்த்து திரிகடிப்பிரமாணம் தேனில், காலை, மாலை 10 நாள் சாப்பிட மூலவாயு, மூலம், குன்மம், பயித்தியம், வாயு, அதிவியர்வை, பசியில்லாமை, உதரரோகங்கள் குணமாகும்.

## கணபதிச் சூர்ணம்

கொடிவேலிவேர்ப்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், சிறு தேக்கு, ஆனைத்திப்பிலி, கோஷ்டம், இந்துப்பு, எட்டாங்காச்சல் வெடியுப்பு, வகைக்கு பலம் 1, பெருங்காயம், வசம்பு, சுட்டக்கரி, வகைக்கு பலம் ¼, கடுகு பலம் ½, இவைகளை இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்து அதற்குச்

சமமாய் சீனியைச் சேர்த்து திருகடி வீதம் தேனில் சாப்பிட சகல வாயு, கிரகணி, மேகம், மேகவாயு, குன்மம், பசியில்லாமை, தேகக்கடுப்பு, குணமாகும்.

## இஞ்சிச் சூர்ணம்

இரண்டு சேர் இஞ்சியைக் கொண்டுவந்து மேல்தோலை நீக்கி பில்லைகளாக நறுக்கி நெய்யால் சிவப்பாக வறுத்து சூர்ணித்து சீமை சல்லடையால் வடிகட்டி அத்துடன் சீரகம், மல்லி, அதிமதுரம், ஓமம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, வால்மிளகு, கிராம்பு வகைக்குப் பலம் 1, இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்து வஸ்திரகாயஞ்செய்து சேர்த்து பிறகு சீனி சேர் 3 சேர்த்து மிஸ்ரித்து தினம் காலை மாலை அரை அணா இடை எடுத்து தேன், அல்லது நெய்யில், கலந்து சாப்பிட்டுவர வயிற்றுவலி, கிரகணி, அஜீர்ணம், பித்தவாயு, பசியில்லாமை, குடல்வாயு, அஜீர்ணவாயு, வயிற்றிரைச்சல், குணமாகும்.

## அசுவகந்திச் சூர்ணம்

கிராம்பு விராகனிடை 1, மிளகு விராகனிடை 2, ஏலம் விராகனிடை 4 மல்லி விராகனிடை 8, சீரகம் விராகனிடை 16, சுக்கு விராகனிடை 32, சுத்திசெய்த அமுக்கிராக்கிழங்கு விராகனிடை 64, இவைகளை இடித்து சூர்ணித்து வடிக்கட்டி அத்துடன் சீனி சேர் 1½, சேர்த்து மிஸ்ரித்து தினம் காலை மாலை, திரிகடி வீதம், சாப்பிட்டுவர அஜீர்ணவாயு, வயிற்றுவலி, அரோசகம், பித்தவாதம், உப்பிசம், ஈளை, இருமல், குணமாகும்.

## தாளிசப்பத்திரிச் சூர்ணம்

காம்பு கட்டை இல்லாத தாளிசப்பத்திரி பலம் 5, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், கோஷ்டம், அக்கிராகாரம், ஆனைத்திப்பிலி, சீரகம், மல்லி, வாய்விளங்கம், கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, சடாமாஞ்சில், சோம்பு, வால்மிளகு, லவங்கப்பட்டை, வகைக்கு விராகனிடை 5, சூர்ணித்து அதற்குச் சமமாக சீனி சேர்த்து தினம் காலை மாலை திரிகடி வீதம் சாப்பிட்டுவர க்ஷயம், காசம், ஈளை, அஸ்திசுரம், அஸ்திவெட்டை, தாகம், பித்தவெட்டை, பித்தபாண்டு, கிரகணி, அரோசகம், உப்பிசம், விக்கல், கை, கால் எரிவு, காந்தல், குணமாகும்.

## நட்சத்திரமாணிக்கச் சூர்ணம்

மாசிக்காய்பலம் 1, கடுக்காய்ப்பிஞ்சி பலம் 1, கடுக்காய்ப்பூ பலம் 1/8, இவைகளை தனித்தனியே நெய்யால் வறுத்து, சூர்ணித்து ¼, முதல்

½, விராகனிடை வீதம் காலை மாலை தேனில் 3 நாள் கொடுக்க சீதபேதி, ரத்தபேதி, கழிச்சல், தீரும். இவைகளுக்கு இது சஞ்சீவி.

## பூர்ணானந்தச்சூர்ணம்

கொடிவேலி, கொன்றை, கண்டங்கத்திரி, மாவிலிங்கு, பூதகரப்பன், சங்கம், வெள்ளெருக்கு இவ்வேழின் வேர்ப்பட்டை, தூதுளை சமூலம் வகைக்கு பலம் 2½, இந்துப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, கல்லுப்பு, சுக்கு, காயம் வகைக்கு பலம் ½, இவைகளை இடித்து சூர்ணித்து வடிக்கட்டி தினம் காலை மாலை 2-3 விராகனிடை வீதம் சாப்பிட்டுவர பக்க வாதம், முகவாதம், திமிர்வாதம், நடுக்குவாதம், அண்டவாதம், முடக்குவாதம், சந்துவாதம், தனூர்வாதம் முதலிய சகல வாத ரோகங்கள் குணமாகும்.

## விஷ்வமுகச்சூர்ணம்

கோஷ்டம், அதிமதுரம், மஞ்சிஷ்டிக்கிழங்கு, நெல்லிக்காய்ப் பருப்பு, ஏலம், சடாமாஞ்சில், சுக்கு, மிளகு, திப்பிலி, கண்டத்திப்பிலி, கிராம்பு, தாளிசப்பத்திரி, சீரகம், சிறுநாகப்பூ, மலாக்கா சந்தனத்தூள், வகைக்கு விராகனிடை 5 சூர்ணித்து வடிக்கட்டி அத்துடன் பச்சைக்கற்பூரம் விராகனிடை ½, பொடித்துச் சேர்த்து அதற்குச் சமமாய் சீனி சேர்த்து தினம் காலை மாலை திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுவர, பித்தம், பித்த கிறுகிறுப்பு, சித்தப்பிரமை, வாய்நீர் ஊறல், அரோசகம், வாந்தி, குணமாகும். மூளை சுத்தி செய்யும். இச்சாபத்தியம்.

## சிந்தாமணிச்சூர்ணம்

சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், காயம், வகைக்கு பலம் 1 பொடி செய்து எலுமிச்சம்பழங்களை நாலாய் கீறி அவைகளில் நிரப்பி 3 நாள் வைத்து பிறகு ½ முதல் 1 பழமாக தினம் காலையில் சாப்பிட்டுவர பித்த வாயு, கிறுகிறுப்பு, நெஞ்செரிவு, வாய்நீர் ஊறல், ஒக்காளம், அன்னத்துவேஷம், அரோசகம் முதலியவைகள் குணமாகும்.

## லக்ஷப்பிரதச்சூர்ணம்

மேல் தோல் நீக்கின இஞ்சியை பில்லைகளாக நறுக்கி 20 பலம் தூக்கி கால் படி நெய்யை தெளித்து பொன்னிறமாய் வறுத்துச் சூர்ணித்து அத்துடன் கடுகுரோகிணி, தேசாவரம், சுக்கு, சீரகம், வகைக்கு பலம் ½, ஏலம், மிளகு வகைக்கு பலம் காலரைக்கால், 3/8 லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, நெல்லிவற்றல், வகைக்கு பலம் ¼, சாதிக்காய் அதிமதுரம்,

சிறுநாகப்பூ, லவங்கம், தாளிசப்பத்திரி, கூகைநீர், வகைக்கு பலம் 1/8 இடித்து சூர்ணித்து, வடிக்கட்டி, சேர்த்து, அத்துடன் சீனி பலம் 5 கூட்டி திரிகடிப் பிரமாணம் தினம் காலை மாலை சாப்பிட்டுவர பித்தவாயு, உஷ்ணவாயு, மந்தம், அஜீர்ணம், பசியில்லாமை, அரோசகம் முதலிய அனேக ரோகங்கள் குணமாகும்.

## பீஜபுரிச் சூர்ணம்

பொற்றல்கையாந்தகரை நிழலில் உலர்த்தி சூர்ணஞ்செய்து, வடிகட்டி ஒரு சேர் தூக்கி அத்துடன் சுக்கு, சீரகம், மல்லி, அதிமதுரம், கடுக்காய், மிளகு, கோஷ்டம், ஓமம், கருஞ்சீரகம், சடாமாஞ்சில், கண்டத்திப்பிலி கிராம்பு, தாளிசப்பத்திரி, திப்பிலி, ஏலம், நெல்லிப்பருப்பு, வாய்விளங்கம், மூக்கிரட்டி வேர் வகைக்கு விராகனிடை 5. வெய்யிலில் உலர்த்தி சூர்ணித்து வடிகட்டி சேர்த்து பிறகு சீனி சேர் 1½, சேர்த்து கலந்து திரிகடிப்பிரமாணம் எடுத்து அதில் திரிலோக செந்தூரம் அல்லது மண்டூர செந்தூரம் பணவிடை வைத்து தினம் காலை மாலை 20 நாள் சாப்பிட்டு வர பாண்டு, காமாலை, சோகை, ரத்தக்ஷீணரோகம், பசியில்லாமை, பலஹீனம், முதலியவைகள் குணமாகும். இச்சாபத்தியம்.

## மன்த்திரப்பதிச் சூர்ணம்

சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, சித்தரத்தை, கண்டத்திப்பிலி, கருஞ்சீரகம்,பறங்கிப்பட்டை, அக்கிராகாரம், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், அமுக்கிராக்கிழங்கு, கல்லுப்பு, இந்துப்பு, வகைக்கு விராகனிடை 4, கடுகுரோகிணி, வெங்காரம், ஓமம், வகைக்கு விராகனிடை 2, சுத்தி செய்த கல்மதம், நவக்ஷாரம் வகைக்கு விராகனிடை 1, இவைகளை இடித்து சூர்ணித்து வடிக்கட்டி அதற்கு சமம் இரண்டைச் சூர்ணம் பாதியும், சீனி பாதியும் கலந்து திரிகடிப்பிரமாணம் தேன் நெய் பால் இவைகள் ஒன்றில் கலந்து தினம் காலை மாலை 20 நாள் சாப்பிட்டுவர கபாலவாயு, குன்மம், காசம், கபம், பித்தம், உஷ்ணம், வெட்டை, வெள்ளை விழுதல், அபானவாயு, மூலவாயு முதலியவைகள் குணமாகும். இச்சாபத்தியம்.

## விசுவேசுவரச் சூர்ணம்.

சுத்தி செய்த பறங்கிப்பட்டை, சுத்திசெய்த கந்தகம், வகைக்குப் பலம் 2, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், சாதிக்காய், சாதிப்பத்திரி, சன்னலவங்கப்பட்டை, கிராம்பு, ஏலம், வகைக்கு பலம் ¼, இவைகளைச் சூர்ணித்து வடிகட்டி திரிகடி சூர்ணத்தில் அதாவது 3

விராகனிடை சூர்ணத்தில் ஒரு விராகனி...... திரிலோச்சன செந்தூரத்தை வைத்து அரை மண்டலஞ் சாப்பிட சூலை, வெடிசூலை, வாத பாண்டு, விஷபாண்டு, மூலப்பாண்டு, வாதசூலை, மேகசூலை, லிங்கசூலை, முதலிய அநேக கடுரரோகங்கள் குணமாகும். வியாதிக்குத் தக்க பத்தியமாம்.

## விளாம்பழச் சூர்ணம்

பெரியதும் பழுத்ததும் கருப்புச்சதையுடையதுமான விளாம்பழம் 20, உடைத்து உள்ளிருக்கும் சதையை மாத்திரம் (விரை முதலியவைகளை நீக்கி) எடுத்து வெய்யிலிலுலர்த்தின சூர்ணம் பலம் 8, சீனாகற்கண்டு பலம் 6, மாதுளம்பழத்தோல், வில்வபிஞ்சு, திப்பிலி, வகைக்கு பலம் 3, மிளகு, சீரகம், மல்லி, கண்டத்திப்பிலி, தாளிசப்பத்திரி, சிறு நாகப்பூ, சித்திரமூலப்பட்டை, சுக்கு, வகைக்குப்பபலம் 1, இவைகளைச் சூர்ணித்து தினம் காலை மாலை ஒரு ரூபாயிடை சாப்பிட்டுவர கண்டரோகங்கள், அதிசாரம், க்ஷயம், குன்மம், கிரகணி, முதலியவைகள் குணமாகும்.

# லேகியங்கள்

## சண்டமாருத லேகியம்

கண்டங்கத்திரி, தூதுளை, மிளகுத்தக்காளி, சங்குஇலை, ஆடாதோடை, கருந்துளசி இவைகளின் இலைச்சாறு வகைக்கு படி ¼, ஒரு சட்டியிலிட்டு காய்ச்சி அரைப்படியாக்கி அதில் சீனி பலம் 5, போட்டு பாகு செய்து அதில் கடுக்காய், திப்பிலி, சித்தரத்தை, வகைக்கு பலம் 1, உலர்த்தி சூர்ணித்து போட்டு கிண்டி தேன் படி ¼, நெய் படி மாகாணி விட்டு கிண்டி லேகியமாக்கி நெல்லிக்காய் அளவு காலை மாலை சாப்பிட்டுவர இருமல், காசம், க்ஷயம், மந்தாரகாசம் முதலிய சகல கபரோகங்கள் குணமாகும்.

## குங்குமப்பூ லேகியம்

குங்குமப்பூ, வெள்ளரிப்பழவிதை, சாதிக்காய், கிராம்பு, லவங்கப்பட்டை, காசாஏலம், லவங்கப்பத்திரி, சாதிப்பத்திரி, நீர்முள்ளிவேர், நிலப்பனைக்கிழங்கு, கற்றாழைவேர், கசப்பு நெருஞ்சிவித்து, கொடிமாதுளம் வித்து, ஆனைநெருஞ்சிவித்து, துளசிவித்து, நெல்லிக்காய்வித்து, திப்பிலி, அதிவிடயம், கடுக்காய், சுக்கு, நறுவிலிப்பழம்,

தான்றிக்காய், கூகைநீர், மிளகு, கோதுமைமாவு, வாதுமைப்பருப்பு, கஞ்சா வித்து, அதிமதுரம், சடாமர்ஞ்சில், தேத்தான்கொட்டை, கடுகுரோகிணி, வகைக்கு பலம் 1, ரோஜாமொட்டு பலம் 5, இவைகளை உலர்த்தி சூர்ணித்து, அத்துடன் அப்பிரேகச்செந்தூரம் பலம் ¼, சேர்த்துக் கொள்க; 5 பலம் கற்கண்டுப் பொடியை ¼ படி பசும்பாலிலிட்டு பாகு செய்து அதில் மேற்படி சூர்ணத்தைப் போட்டு பிறகு நெய் படி ¼, விட்டு கிண்டி லேகியமாக்கி தினம் காலை மாலை பாக்களவு, சாப்பிட்டுவர மேகநீர், வெள்ளை, வெட்டை, நீர் அடைப்பு, நீர்க்கடுப்பு, சதைஅடைப்பு, கல்லடைப்பு, மதுமூத்திரம், நீரிழிவு, ரத்தப்பிரமேகம், பெரும்பாடு, குஷ்டம், கிரந்தி, சூலை, கிறுகிறுப்பு, கைகால் எரிவு, கை கால் எரிவு, பித்த வெட்டை, மேகம், அஸ்திசுரம், அரையாப்பு, மலடுரோகம், குணமாகும். தேகத்தில் அழகு தேஜஸு உண்டாகும்.

## சீந்திக்கொடி லேகியம்

சீந்தித்தண்டை சிறு துண்டுகளாக்கி உலர்த்தி சூர்ணித்து வஸ்திரத்தால் வடிகட்டின தூள் பலம் 5, பொற்றல்கையாந்தகரை நிழலில் உலர்த்தி சூர்ணித்து வடிகட்டின தூள் பலம் 5 இவைகளுடன் சாதிக்காய், சாதிப்பத்திரி, மல்லி, சண்பகப்பூ, கடுக்காய்ப்பூ, குங்குமப்பூ, லவங்கப்பூ, சந்தணத்தூள், சுக்கு, ஏலம், வகைக்கு பலம் ¼, உலர்த்தி சூர்ணித்து வடிக்கட்டினதூள் சேர்த்துக்கொள்க. ¼, படி பசும்பாலில் 5பலம், கற்கண்டைப்போட்டு பாகு செய்து அதில் மேற்படி சூர்ணத்தையும் பசும்நெய் படி ¼ம், விட்டு கிண்டி லேகியஞ் செய்து நெல்லிக்காய், அளவு தினம் காலை மாலை சாப்பிட்டுவர, மேகவெட்டை, தேககாங்கை, பீலிகை, குஷ்டம், மேகம், அரையாப்பு, யானைக்கால் சுரம், பீஜவீக்கசுரம், குணமாகும்.

## ராஜ தேத்தாங்கொட்டை லேகியம்

தேத்தாங்கொட்டை சேர் 1, சுத்த ஜலத்தில் ஒரு நாள் ஊற வைத்து கழுவி, மறுநாள் பாக்குவெட்டியால் சிறு துண்டுகளாக்கி பசுவின் பாலில் மூன்று நாள் ஊறவைத்து எடுத்து ஆட்டுக்கல்லிலிட்டு ஆட்டித் திரட்டி அத்துடன் அதன் அளவு பசுவின் வெண்ணெயைச் சேர்த்து பிசைந்து அதற்குச் சமமாக பசுவின் நெய்யைக் காய்ச்சி அதில் வடையாகத் தட்டிப்போட்டு பொன்னிறமாய் வறுத்து எடுத்து சூர்ணித்து அத்துடன் சீரகம் விராகனிடை 2, காசா ஏலம் விராகனிடை 2, சாதிக்காய், சாதிப்பத்திரி, குங்குமப்பூ, கிராம்பு, சிறுநாகப்பூ, தாளிசப்பத்திரி, அதிமதுரம், கருஞ்சீரகம், லவங்கப்பட்டை, சதகுப்பை, சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்கு விராகனிடை 5, சூர்ணித்து வடிக்கட்டின தூளுஞ்சேர்த்துக் கொள்க. பிறகு

6 பலம் சீனியைப் பாகு செய்து அதில் மேற்படி சூர்ணத்தை போட்டு பிறகு மேற்படி காய்ச்சின நெய்யையும் போட்டுக் கிண்டி லேகியமாக்கி தினம் காலை மாலை 48 நாள் பெரிய கொட்டைப் பாக்களவு சாப்பிட்டுவர, வெள்ளை, வெட்டை, நீர் எரிவு, மேககாங்கை நீர் துளித்துளியாய் இறங்குதல், திடீர் என்று நீர் இறங்குதல், குணமாகும். விந்து ஊறும், தாதுபுஷ்டியாகும். உஷ்ணந்தணியும்.

## மகா ஆவாரம்பட்டை லேகியம்

ஆவாரம் வேர்ப்பட்டை பலம் 40, அத்திப்பட்டை, நாவலப்பட்டை, வகைக்கு பலம் 20, இடித்து 60 படி ஜலத்திலிட்டு எட்டில் ஒன்றாக காய்ச்சின கஷாயத்துடன் தென்னங்குறும்பை பலம் 40, நீர்ப்பூலாவேர் பலம் 20, இடித்து 40 படி ஜலத்திலிட்டு காய்ச்சி எட்டில் ஒன்றாக வற்றவைத்து சேர்த்து அத்துடன் இஞ்சிச்சாறு படி ½, முசுமுசுக்கைச்சாறு படி 1, சீனி பலம் 10, சேர்த்து பாகு செய்து அதில் சீரகம், மிளகு, அதிமதுரம், துத்திவேர், வகைக்கு பலம் 2, செங்கழுநீர்க்கிழங்கு, தாமரைக்கிழங்கு, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, சிறுகீரை வேர், பசலி வேர், ஏலம் நெல்லிப் பருப்பு வகைக்கு பலம் 1 ஆவாரை அரிசி பலம் 4, வெள்வேலம்பிசின், விளாம்பிசின் வேப்பம்பிசின், வெள்வேலம்வேர், விலாமிச்சுவேர், அறுகங்கிழங்கு, வகைக்கு பலம் ½, திப்பிலி பலம் 5, உலர்த்தி சூர்ணித்துப் போட்டு அன்றியும், ஆவாரைக் கொழுந்து பலம் 2, ஆவாரைப்பூ பலம் 4, அரைத்து சேர்த்து பிறகு நெய் படி 4, தேன் படி ½, விட்டு கிண்டி லேகியமாக்கி தினம் காலை மாலை நெல்லிக்காய் அளவு 48 நாள் சாப்பிட சகல நீரிழிவு, நீர் எரிவு, பெரும்பாடு, கிரிச்சரம், மேக காங்கை, வெட்டை, வெள்ளை விழுதல், குணமாகும்.

## மேக நாராயண லேகியம்

சுத்தி செய்த சேங்கொட்டை பலம் 3, சுத்தி செய்த பறங்கிப்பட்டை பலம் 3, சுக்கு, மிளகு, ஓமம், குரோசாணி ஓமம், மஞ்சள், மரமஞ்சள், சித்தரத்தை, மல்லி, சித்திரமூலவேர்ப் பட்டை, தேவதாரப் பட்டை, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, சீரகம், கடுக்காய், தானிக்காய், சிறுதேக்கு, கோரோசனை, குங்குமப்பூ, இவைகளில் வறுக்க வேண்டியவைகளை வறுத்து சேங்கொட்டையைத் தவிர, மற்றவைகளைச் சூர்ணித்து அத்துடன் எள்ளு, வெள்ளைப்பூண்டு, பேரீச்சங்காய், வகைக்கு விராகனிடை 5, வெல்லம் பலம் 5, பசுவின் நெய், தேன், வகைக்கு படி 1/8 லும், மேற்படி சேங்கொட்டையுஞ் சேர்த்து கல்லுரலிலிட்டு மெழுகு போல் இடித்து தினம் காலை மாலை கொட்டைப் பாக்களவு எடுத்து அதில் ரசபஸ்மம் அல்லது கந்தகபஸ்மம் பணவிடை வைத்து சாப்பிட்டுவர, சூலை (18), கிரந்தி (9), மேகம் (20), குஷ்டம் (18), அரையாப்பு,

கண்டமாலை (18), மேகப்புண், பவுத்திரம், ருத்திரவாயு, வாதம் (80), முதலியவைகள் குணமாகும். உப்பில்லாப்பத்தியம்.

## மேகராஜாங்க லேகியம்

சங்கங்குப்பிவேர், சங்கம்வேர், நீர்க்குமிழம் வேர் கொடிவேலி வேர்ப் பட்டை, நிலக்குமிழம் வேர், நெருஞ்சி வேர், பூவரசம்பட்டை, சங்கத்தாரிப்பட்டை, நிலப்பனைக்கிழங்கு, அமுக்கிராக்கிழங்கு, இப்பத்தும், வகைக்கு விராகனிடை 10, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கோஷ்டம், சிறு நாகப்பூ, சித்தரத்தை, இஞ்சி, சன்னலவங்கப்பட்டை, கிராம்பு, லவங்கப்பத்திரி, வகைக்கு விராகனிடை 3, சுத்திசெய்த பறங்கிப்பட்டை பலம் 5, இவைகளைச் சூர்ணித்து பத்து பலம் சீனியை பத்துப்பலம் நெய்யிலிட்டு பாகு செய்து அதில் மேற்படி சூர்ணத்தைச் சேர்த்து தேன் படி 1/8, விட்டு கிண்டி லேகியமாக்கி கொட்டைப்பாக்களவு தினம் காலை மாலை சாப்பிட்டுவர சகல மேகவியாதிகள் குணமாகும்.

## குமரி லேகியம்

சோற்றுக் கற்றாழையின் சோறு பலம் 100, பசும்பால் படி 4, இவ்விரண்டையும் சேர்த்து சிறு தீயால் பாலை சுண்டும் வரையில் எரித்து பிறகு வெய்யிலில் உலர்த்தி சூர்ணித்து அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, ஏலம், வால்மிளகு, நிலப்பனைக்கிழங்கு, வெள்ளரிவிதை, தாளிசப்பத்திரி, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, பூனைக் காலிவித்து, நீர்முள்ளிவித்து, வகைக்குப் பலம் 4, சூர்ணித்து வடிக்கட்டி சேர்த்து பிறகு 4 படி பசும்பாலில் 8 சேர் கற்கண்டு போட்டு பாகு செய்து அதில் மேற்படி சூர்ணத்தைப் போட்டு நெய் படி 4, தேன் படி 2 விட்டு கிண்டி லேகியமாக்கி அத்துடன் அயச்செந்தூரம், சுவர்ணபஸ்பம், ரசசெந்தூரம் வகைக்கு விராகனிடை 8 சேர்த்து மிஸ்ரித்து தினம் காலை மாலை புன்னக்காய் அளவு சாப்பிட்டுவர க்ஷயம், இருமல், காசம், குன்மம், அஜீர்ணரோகம், மேகம், மேகச்சூடு அஸ்திசுரம், பித்தரோகங்கள் குணமாகும். தாதுபுஷ்டி உண்டாகும். 100 ஸ்திரீகளைப் போகஞ்செய்ய சக்தி உண்டாகும். அஷ்வனி குமாரியால் இது சொல்லப்பட்டது.

☞ சில கிரந்தங்களில் கற்றாழை வேகவைத்து உலர்த்தி சூர்ணஞ்செய்வதற்கு பதிலாக அதன்சாறு உபயோகிக்கலாமென்று சொல்லியிருக்கின்றது.

## குலாப் லேகியம்

ரோஜாமொட்டு சேர் 1, சுக்கு, சீரகம், ஏலம், கிராம்பு, வகைக்கு பலம் 1, உலர்த்தி சூர்ணித்து வடிகட்டி அத்துடன் குங்குமப்பூ

விராகனிடை ½. பொடித்து சேர்த்துவைத்துக் கொள்க. பிறகு பச்சைமூக்குறட்டை வேர்ச்சாறு, முடக்கொத்தான் இலைச்சாறு, பேதிக்கிழங்குச்சாறு வகைக்கு படி ½, சேர்த்து அத்துடன் கற்கண்டு சேர் 2 சேர்த்து பாகுசெய்து அதில் மேற்படி சூர்ணத்தைப் போட்டு நெய் படி 1/4 விட்டு கிண்டி லேகியமாக்கி இராத்திரி 4 மணிக்கு புன்னக்காய் அளவுச் சாப்பிட விடியல் 6 மணிக்கு மலவிர்த்தி தாராளமாய் ஆகும். மலச்சிக்கலுள்ள தேகத்துக்கு இது நல்ல மருந்து.

## பேரீச்சங்காய் லேகியம்

விதைநீக்கின புது பேரீச்சங்காய் சேர் 5, கல்லுரலிலிட்டு தூள்செய்து, ஒரு இரும்புச்சட்டியில் 8 படி பசும்பாலிட்டு அதில் மேற்படி தூளைப் போட்டு பால் வற்றும்வரையில் காய்ச்சி பிறகு அத்துடன் சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, காசாஏலம், வால்மிளகு, தாளிசப்பத்திரி, சிறுநாகப்பூ, சீரகம், சுக்கு, சித்தரத்தை, வகைக்கு விராகனிடை 3, சூர்ணித்து வடிகட்டி சேர்த்துவைத்துக்கொள்க. பிறகு ஒரு படி பசும்பாலில் 10 சேர். கற்கண்டைப் போட்டு பாகுசெய்து அதில் மேற்படி சூர்ணத்தைப் போட்டு கிண்டி இறக்கும் சமயத்தில் குங்குமப் பூ விராகனிடை 3, கஸ்தூரி பணவிடை 1, சூர்ணித்துப்போட்டு மிஸ்ரித்து வைத்துக்கொண்டு தினம் காலை மாலை புன்னக்காய் அளவு சாப்பிட்டுவர பிரமேகம், மதுமூத்திரம், பாண்டு, குஷ்டம், தினவு முதலியவைகள் குணமாகும். தாதுபுஷ்டியுண்டாகும். அவன் தினம் 100 ஸ்திரீகளைப் போகிப்பான்.

## பூர்ணாதி லேகியம்

சுத்திசெய்த கஞ்சா பலம் 1, மிளகு, சுக்கு, திப்பிலி, ஓமம், சீரகம், குரோசாணி ஓமம், கடுக்காய்ப்பூ, காட்டாத்திப்பூ, சிறுநாகப்பூ, சாதிக்காய், சாதிப்பத்திரி, வால்மிளகு, ஏலம், கிராம்பு, மல்லி, அதிவிடையம் வகைக்கு பலம் 1, இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்து வடிகட்டி வைத்துக்கொள்க. நாவற்பட்டை, அரசுப்பட்டை, அத்திப்பட்டை, ஒதியம்பட்டை, வகைக்கு பலம் 10, நொறுக்கி தூணி ஜலத்திலிட்டு எட்டிலொன்றாக காய்ச்சி அத்துடன் பனைவெல்லம் பலம் 10 சேர்த்து பாகு செய்து அதில் மேற்படி சூர்ணத்தைப் போட்டு நெய் பலம் 6, தேன் பலம் 3, விட்டு கிண்டி லேகியமாக்கி தினம் காலை மாலை சிறுவர்களுக்கு சிறு சுண்டக்காய் அளவும், பெரியோர்களுக்கு கொட்டைப்பாக்களவும் ஒரு மண்டலம் கொடுக்க சூசிகாகிரகணி, பாண்டுகிரகணி, உஷ்ணவாயுவாலுண்டாகும் பேதி, மூலக்கிரகணி, சகலவாயு குணமாகும். பசியும் தாது புஷ்டியுமுண்டாகும்.

## தாதுபுஷ்டி லேகியம்

நன்னாரிவேர் சேர்.1, தண்ணீர் விட்டான் கிழங்கு சேர்.1, பட்டை நீக்கின வில்வவேர் சீவல் சேர் 3, இவைகளை நொறுக்கி 8 படி ஜலத்திலிட்டு காய்ச்சி 2 படியாக்கி அத்துடன் 3 சேர்கற்றாழைச்சாறு, 3 சேர் பூசினிக்காய்ச்சாறு, ½ சேர் காபிக்கொட்டையின் கசாயம், 5 சேர் பசும்பால், 1¼ சேர் பன்னீர் இவைகளைச் சேர்த்து காய்ச்சி கற்கண்டு சேர் 3¾, போட்டு பாகு செய்து அதில் சுக்கு, மிளகு, சித்தரத்தை, கண்டத்திப்பிலி, கிராம்பு, ஏலம், ஓமம், ரோஜாமொட்டு, சப்ஜாவிதை, வகைக்கு பலம் 2, திப்பிலி, சீமை அமுக்கிராக்கிழங்கு, சீரகம், மல்லி, நீர்முள்ளிவிதை, பூனைக்காலிவிதை, தாமரைவிதை, முருங்கைவிதை, அல்லிவிதை, ஆலம்விதை, அரசவிதை, ஆளிவிதை, தேற்றாங்கொட்டை நிலப்பனைக்கிழங்கு, கருவேலம்பிசின், முருங்கைபிசின், சாதிக்காய், சாதிப்பத்திரி, வால்மிளகு, கசகசா, வகைக்கு பலம் 1, இவைகளை சூர்ணித்து வடிக்கட்டின தூளையும் ஒரு சேர் வாதுமைப்பருப்பை ஜலத்தில் ஊறவைத்து மேல்தோல் நீக்கி அத்துடன் குங்குமப்பூ விராகனிடை 1 சேர்த்து மைபோலரைத்த மொத்தையும், நெய் சேர் 2½, தேன் சேர் 1, இவைகளும் போட்டு கிண்டி லேகியபதத்தில் இறக்கி தினம் காலை மாலை புன்னக்காய் அளவில் தங்கரேக்கு அல்லது தங்கபஸ்மம், அரை குன்றிமணி இடை வைத்துச் சாப்பிட்டுவர இரத்தவிருத்தியும், தாதுபுஷ்டியும் உண்டாகி விந்துக்கட்டும் போகமிகும், பத்தியமில்லை.

## வாயுகீலக லேகியம்

சுத்திசெய்த பறங்கிப்பட்டை, சித்திரமூலவேர்ப்பட்டை, சங்கம்வேர், சுத்திசெய்த அமுக்கிராக்கிழங்கு வகைக்கு பலம் 3, சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலம் வகைக்கு பலம் ½, இவைகளை இடித்து சூர்ணித்து ஒரு சட்டியில் அரைப்படி பசுவின் நெய்யும் காற்படித்தேனும், 8 பலம் சீனியுங்கூட்டி காய்ச்சி அதில் மேற்படி சூர்ணத்தைப் போட்டு கிண்டி லேகியஞ்செய்து தினம் காலை மாலை கொட்டைப்பாக்களவு சாப்பிட்டுவர வாதக்கடுப்பு, முடக்குவாதம், மேகவாயு, முதலியவைகள் குணமாகும். பத்தியம் புளி தள்ளவும்.

## கௌரிநந்தன லேகியம்

சங்கம்வேர் பலம் 25, கண்டங்கத்திரி வேர் பலம் 12½, கீழ்க் காய்நெல்லிவேர் பலம் 10, தூதுளைவேர் பலம் 5, இவைகளை இடித்து 8 மரக்கால் ஜலமிட்டு காய்ச்சி எட்டிலொன்றாய் வற்றவைத்து வடிக்கட்டி அதில் சீனி பலம் 10, போட்டு பாகுசெய்து அதில் சித்தரத்தை, திப்பிலி, வகைக்கு பலம் 5, ஏலம், கூகைநீர், கிராம்பு, சீரகம், ஓமம், பெருங்காயம்,

சிறுதேக்கு, கடுக்காய்ப்பூ, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல் வகைக்கு பலம் 1, சூர்ணித்து வஸ்திரகாயஞ்செய்து சேர்த்துக் கிண்டி பிறகு அதில் அயச்செந்தூரம், கடுகுத்தூள், மிளகுத்தூள் வகைக்கு படி 1/8 சுக்குப்பொடி படி ¼, இவைகளைத் தூவிக்கிண்டி தேன், நெய், வகைக்கு படி ¾ சேர்த்துக்கிண்டி லேகியமாக்கி தினம் காலை, மாலை ஒரு கொட்டைப்பாக்களவு ஒரு மண்டலஞ்சாப்பிட ஈளை, இருமல், காசம், க்ஷயம், மந்தாரகாசம், சிலேஷ்மரோகங்கள் (96), உள்ளுருக்கி, சோகை, குணமாகும்.

## ஸ்ரீனிக்கேதன லேகியம்

சுக்கு விராகனிடை 30, சித்தரத்தை விராகனிடை 15, கொத்தமல்லி (விதை) விராகனிடை 7½, மிளகு, செவ்வியம், கண்டத்திப்பிலி, அதிமதுரம், சீரகம், கருஞ்சீரகம், ஏலம், சிறுதேக்கு, கூகை நீர், அமுக்கிராக்கிழங்கு, குரோசாணி ஓமம், வால் மிளகு, தாளிசப்பத்திரி, கடுக்காய் வகைக்கு விராகனிடை 2½, சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, கிராம்பு, வகைக்கு விராகனிடை 1¼, இவைகளை இடித்து பொடி செய்து அத்துடன் தூதுளை, கண்டங்கத்திரி, பொற்றல் கையாந்தகரை இவைகளின் சமூலம், நிழலில் உலர்த்தி சூர்ணித்து வடிக்கட்டின பொடிவகைக்கு படி 1/8, சேர்த்து, அரைப்படி கொம்புத்தேனைக் காய்ச்சி அதில் மேற்படி சூர்ணத்தைப் போட்டு, கிண்டி நெய்படி 1/8, விட்டு லேகியமாக்கி தினம் காலை மாலை ஒரு கொட்டைப்பாக்களவு சாப்பிட்டுவர காசம், க்ஷயம், மந்தாரகாசம், ஈளை, இருமல் முதலிய சகல சிலேஷ்மரோகங்கள் குணமாகும்.

## நந்திப்பிரய லேகியம்

சுத்தி செய்த லிங்கம் விராகனிடை ½, சுத்தி செய்த நெல்லிக்காய் கந்தகம் விராகனிடை ¼, இவைகளைப்பொடி செய்து ஒரு நீர்வற்றின தேங்காய்க்குள் போட்டு பிறகு வீசம்படி கொடிக்கள்ளிப்பாலை விட்டு அடைத்து மூன்று சீலைமண் செய்து 3 நாள் உலர்த்தி 7 எருவில் புடம் போட்டுச் சிரட்டை நீக்கி, தாழைத்தழை முடிச்சியில் வெட்டி இலைகளை நீக்கி முடிச்சியை எடுத்து மேல்த்தோலை சீவி உட்பருப்பை வில்லைகளாக நறுக்கி சற்றுநேரம் வெய்யிலில் காயவைத்து முன் மருந்துக்குப்பாதி சேர்த்து ஒன்றாக இடித்து சற்றுநேரம் வெய்யிலில் வைக்க லேகியமாகும். ஒரு சுண்டக்காயளவு தினம் காலையில் சாப்பிட்டுவர, பேதியாகும். கவுசி, கெண்டை, பெருவயிறு, பாண்டு, பாரிசவாயு, சூதகவாயு, குன்மம், முதலிய அனேக வியாதிகள் குணமாகும். வியாதிக்குத்தக்க பத்தியமாம்.

## கமலநேத்திர லேகியம்

இஞ்சிச்சாறு, நார்த்தம் பழச்சாறு, மூக்கரைச்சாரணை வேர்ச்சாறு, வகைக்கு படி 2, சேர்த்து அதில் சீனி சேர் 3, போட்டு பாகு செய்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், அதிமதுரம், தேசாவரம், மல்லி, கோஷ்டம், சித்தரத்தை, தாளிசப்பத்திரி, திராட்சை, வகைக்கு பலம் ½, அதிவிடையம், அக்கிராகாரம், வால்மிளகு, சிறுநாகப்பூ, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், குரோசாணிஓமம், மலாக்காய் சந்தனத்தூள், கருஞ்சீரகம், வகைக்குப் பலம் 1/4, இவைகளை இடித்து வஸ்திரகாயஞ்செய்துப் போட்டுக் கிண்டி நெய் படி ½, தேன் படி ½, விட்டு கிண்டி லேகியமாக்கி தினம் காலை மாலை புன்னக்காய் அளவு சாப்பிட்டுவர வாந்தி, அரோசிகம், பித்தம், நெஞ்செரிவு, தாபசுரம், வாதம், கிறுகிறுப்பு, தலைநோய், அக்கினிமந்தம், மலக்கட்டு, காந்தல் குணமாகும்.

## மகா வில்வாதி லேகியம்

மேற்றோல் நீக்கின வில்வவேர் சீவல் பலம் 80, சங்கம் வேர், அமுக்கிராவேர், சத்திச்சாரணை வேர், மிளகரணைவேர், விலாமிச்சுவேர், முக்காவேளை வேர், நன்னாரிவேர், மலைவேப்பமரத்தின் வேர், அருகம்வேர், கற்றாழைவேர், தாழைவேர், கீழ்க்காய் நெல்லிவேர், விளாமரத்தின்வேர், வெள்ளறுகம்வேர், நெல்லிமரத்தின்வேர், வேலிப்பருத்திவேர், தூதுளை வேர், குட்டிவிளாவேர், நெரிஞ்சிவேர், சிறுவழுதலைவேர், வகைக்கு பலம் 10 இவைகளில் ஒவ்வொன்றும் தனித்தனியே பஞ்சுபோல் இடித்து 16 படி சுத்தஜலத்திலிட்டு காய்ச்சி வற்றவைத்த கசாயம் படி 4, பொற்றல் கையாந்தகரைச்சாறு, வல்லாரைச்சாறு நெல்லிக்காய்ச்சாறு, புளியாரைச்சாறு, மணத்தக்காளிச் சாறு, மாதுளம்பழச்சாறு, நார்த்தம்பழச்சாறு, தம்மரத்தம்பழச்சாறு, கடாநாரத்தம்பழச்சாறு, இஞ்சிச்சாறு, நீர்முள்ளிச்சாறு, ஆடாதோடைச்சாறு, முசுமுசுக்கைச் சாறு, வகைக்கு படி 1, பசுவின் பால் படி 2, இவைகளை எல்லாம் ஒன்றாய் சேர்த்து அதில் கற்கண்டு பலம் 50, போட்டு காய்ச்சி பாகு செய்து அதில் கிறாம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, வால்மிளகு, குரோசாணி ஓமம், அதிமதுரம், கோஷ்டம், சடாமாஞ்சி, வாலுளுவை அரிசி, தாளிசப்பத்திரி, வாய்விளங்கம், கருஞ்சீரகம், நற்சீரகம், அதிவிடையம், சித்தரத்தை, பேரரத்தை, கடுக்காய்ப்பூ, ஓமம், மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், கண்டத்திப்பிலி, விளாவரிசி, வெட்பாலையரிசி, மல்லி, கூகைநீர், காட்டாத்திப்பூ, சிறுதேக்கு, நிலப்பனைக்கிழங்கு, சந்தணத்தூள், வாதுமைப் பருப்பு, நீர்முள்ளி விதை, வகைக்கு பலம் ¼, இவைகளில் சந்தணத்தூளும்

வாதுமைப் பருப்பும் நீங்கலாக மற்றவைகளை வெதுப்பி சூர்ணித்து வடிக்கட்டி போட்டு அத்துடன் நெய் படி 1, தேன் படி ½, விட்டு கிண்டி லேகியமாக்கி, தினம் காலை மாலை ஒரு கொட்டைப்பாக்களவு எடுத்து அதில் திரிலோகசெந்தூரம் (பிராணரக்ஷாமிர்தசிந்து முதலாவது பாகத்தில் இந்த செந்தூரமுறையை காண்க.) பணவிடை வைத்து ஒரு மண்டலம் சாப்பிட பித்தரோகங்கள் (40), உப்பிசம், உஷ்ணவாயு, கை, கால் எரிவு, காந்தல், அரோசிகம், அன்னத்துவேஷம், வாந்தி, விக்கல், கிறுகிறுப்பு, குலை எரிவு, குன்மம், மேல்மூச்சு, கிரகணி, நீர் ஏற்றம், கழிச்சல், காமாலை, சோகை, பாண்டு, நீரிழிவு, அந்தரவாயு, உதரரோகங்கள் முதலிய அநேக ரோகங்கள் குணமாகும். வியாதிகளுக்கு தக்கபத்தியம்.

## யோகா தீப லேகியம்

மேல். தோல் நீக்கின இஞ்சியை பில்லைகளாக நறுக்கி பத்துபலம் தூக்கி அத்துடன் அரை படி எலுமிச்சம்பழச்சாறும் இரண்டு பலம் இந்துப்புஞ்சேர்த்து 3நாள் ஊறவைத்து உலர்த்தி சூர்ணித்து வடிகட்டி அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், சதகுப்பை, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், மகரப்பூ, அதிமதுரம், அதிவிடையம், மல்லி, ஓமம், கடுக்காய்ப்பூ, தாளிசப்பத்திரி, பொட்டிலுப்பு, கிராம்பு, லவங்கப்பத்திரி, சன்னலவங்கப்பட்டை வகைக்கு பலம் ¼, கோஷ்டம், அக்கிராகாரம், பெருங்காயம், வகைக்கு பலம் 1/8, சுத்தி செய்த பறங்கிப்பட்டை, கொடிவேலிவேர்ப் பட்டை வகைக்கு பலம் 10, இவைகளை வெதுப்பி இடித்து வடிக்கட்டின சூர்ணத்தை சேர்த்து, பிறகு 25 பலம் சீனியை பாகுசெய்து அதில் மேற்படி சூர்ணத்தை எல்லாம் போட்டுக்கிண்டி தேன் சேர் ½, நெய்சேர் 1 விட்டு கிளரி லேகியமாக்கி தினம் காலை, மாலை நெல்லிக்காய் அளவு சாப்பிட்டுவர குன்மம் (8), நெஞ்செரிவு, வாந்தி, குடல்புரட்டல்,. நடுக்கல், கழிச்சல், வயிற்றிரைச்சல், வயிறுஎரிதல், மண்டைக்குத்து, பித்தப்படபடப்பு, வாய்நீர்ஊறல், விலாக்குத்து, ருத்திரவாயு, அஜீர்ணம், அஜீர்ணகழிச்சல், அபானக்கடுப்பு, பொருமல், கை, கால் ஓய்தல் முதலிய அநேகரோகங்கள் குணமாகும். இச்சாபத்தியம்.

## ஓஷாதிபதி லேகியம்

குங்குமப்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, கிராம்பு, ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சாதிக்காய், தாளிசப்பத்திரி, சிறுநாகப்பூ, விலாமிச்சுவேர், ஓமம், சீரகம், குரோசாணி ஓமம்; சித்தரத்தை, சித்திரமூலம், கண்டத்திப்பிலி, பூலாக்கிழங்கு, ஆனைத்திப்பிலி, கருஞ்சீரகம், கூகைநீர்.

திராக்ஷை, சந்தனத்தூள், வால் மிளகு, கோரைக்கிழங்கு, சடாமாஞ்சி, மல்லி, பேரீச்சம்பழம், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், சாதிப்பத்திரி, வெட்டிவேர், நிலப்பனைக்கிழங்கு, அமுக்கிராக்கிழங்கு, நெரிஞ்சி வித்து, நீர்முள்ளிவித்து, பூனைக்காலிவித்து, வகைக்கு விராகனிடை 4, சுத்திசெய்த பறங்கிப்பட்டை பலம் 2, இவைகளைத் தனித்தனியே இடித்து வடிகட்டி ஒன்றாய்க்கலந்து பிட்டவித்து உலர்த்தி, 70 பலம் சீனியை ஆறு படி தண்ணீர் விட்டான் கிழங்கின் சாற்றில் கரைத்து காய்ச்சி பாகுபதத்தில் ஒரு படி பசுவின் நெய்யில் சுத்திசெய்த 4 பலம் நெல்லிக்காய் கந்தகத்தைப் பொடித்துப் போட்டு காய்ச்சி, மேற்படி பாகில் விட்டு கிளரி நீர்வற்றினதின் பேரில் இறக்கி, அதில் மேற்படி சூர்ணத்தைத் தூவிக்கிண்டி தேன் படி 1, விட்டு கிளரி லேகியமாக்கி தினம் காலை மாலை பாக்களவு ஒரு மண்டலம் சாப்பிட்டால் வாதம் (80), பித்தம் (40), கிரிச்சரம் (6), சூலை (18), குன்மம் (8), பாண்டு (5), சோகை (5), க்ஷயம், மேகம் (20), அக்கினிமந்தம் முதலிய அநேக ரோகங்கள் குணமாகும். வியாதிக்குத்தக்க பத்தியம் இருக்கவேண்டியது.

## கிருதங்கள்

### நீலகண்ட கிருதம்

தண்ணீர்விட்டான் கிழங்கு, தாமரைக்கிழங்கு, சிறுகீரை, பொன்னாங்காணி, தூதுளை இவைகளின் சாறு வகைக்கு படி 3, கற்றாழைச்சாறு படி 6, பசும்பால், செவ்விளநீர் வகைக்குபடி 3, பசும்நெய் படி 4, இவைகளைச்சேர்த்து அதில் காசாஏலம், கிராம்பு, சாஸ்திரபேதி, அதிமதுரம், வசவாசி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், சிறுநாகப்பூ, நறும்பிசின் பச்சையிலை, சண்பகப்பூ, கோஷ்டம், சடாமாஞ்சில், மரமஞ்சள், அரைத்த சந்தனம், உறைத்த கலைமான் கொம்பு, மஞ்சிஷ்டிக்கிழங்கு, விலாமிச்சு வேர், நன்னாரிவேர், வெட்டிவேர், கோரைக்கிழங்கு, கோரோசனை, பச்சைக்கர்ப்பூரம், குங்குமப்பூ, புனுகுச்சட்டம், வகைக்கு விராகனிடை 3, அரைத்து கரைத்து காய்ச்சி வடித்து அந்தி சந்தி 2 விராகனிடைவீதம் சாப்பிட்டுவர பித்தவாயு, பித்தவெட்டை, பித்தகாங்கை, தேகஎரிவு, சித்தப்பிரமை, பித்தமயக்கம், வாந்தி, கை, கால் எரிவு, வறட்சி, தாகம், பித்த சுரம், முதலிய சகல பித்தவியாதிகள் குணமாகும். தேகபுஷ்டியாகும், கண்களுக்கு குளிர்ச்சியுண்டாகும்.

### தேத்தாங்கொட்டை கிருதம்

¼ படி தேத்தாங்கொட்டையை ஜலத்தால் கழுவி உலர்த்தி பசும்பாலில் 3 நாள் ஊறவைத்து துண்டுகளாக்கி மேற்படி பாலால்

அரைத்து அரைத்த மொத்தைக்கு சமமாக பசுவின் வெண்ணெயைச் சேர்த்து காய்ச்சினால், மேற்படி மொத்தை பொன்னிறமாகும், அத்துடன் சீரகம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, சிறுநாகப்பூ, தாளிசப்பத்திரி, அதிமதுரம், வாளுலுவை அரிசி, கருஞ்சீரகம், ஏலம், லவங்கப்பட்டை, சதகுப்பை, சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்கு விராகனிடை 5, சூர்ணித்து வடிக்கட்டிபோட்டு கிண்டும்போது 3 பலம் சீனியும் சேர்த்து கிண்டி எடுத்துவைத்துக் கொண்டு பாக்களவு காலை மாலை சாப்பிட்டுவர பித்தவெட்டை, கை, கால் எரிவு, இருமல், தேகக் கதகதப்பு, நீர்க்கடுப்பு, மேககாங்கை, வெட்டைச்சூடு, மூலவியாதி முதலியவைகள் தீரும். வியாதிக்குத் தக்கபத்தியமாம்.

## மேகராஜ கிருதம்

சுத்திசெய்த சேங்கொட்டை பலம் 2½, ஒவ்வொன்றும் இரண்டு இரண்டு துண்டுகளாக்கி 10 பலம் நெய்யில் போட்டு வறுத்து வடித்து எடுத்துக் கொண்டு ரசமும் நெல்லிக்காய் கந்தகமும் வகைக்கு விராகனிடை 1, சுத்திசெய்து கல்வத்திலிட்டு அரைத்து மேற்படி நெய்யில் கலந்து 1 முதல் 2 விராகனிடைவீதம் 7 நாள் கொடுக்க கருங்கிரந்தி, சங்கிரந்தி நூணாக்கிரந்தி, மேகம், மேகப்புண், மேகசூலைக்கட்டு, முதலிய சகலமேகவியாதிகள் குணமாகும்.

## கந்தகக் கிருதம்

சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம் விராகனிடை 50, சுத்திசெய்த அரிதாரம் விராகனிடை 3, சுத்தி செய்த வீரம் விராகனிடை 1, வெடியுப்பு விராகனிடை 10, நவச்சாரம் விராகனிடை 1, இவ்வைந்தும் கல்வத்திலிட்டு 2½, சேர் பசும் நெய்யால் 3 ஜாமம் அரைத்து ஒரு சட்டியிலிட்டு கொஞ்சம் வெதுப்பி நெய்யை வடித்து காலை மாலை 3 நாள் ஒரு விராகனிடை வீதம் எருமைச்சாணியுடன் கொஞ்சம்ஜலம் சேர்த்து வடிகட்டின நீரிலிட க்ஷயந்தீரும். தகுந்த அனுபானத்திலிட சர்வமேகங்களும் குணமாகும்.

## குமரி கிருதம்

சோற்றுக் கற்றாழைச்சாறு படி 6, பொன்னாங்காணி, சிறு கீரை, தண்ணீர்விட்டான் கிழங்கு, தாமரைக் கிழங்கு, தூதுளை, இவைகளின் சாறு, பசும்பால், இளநீர் வகைக்கு படி 3, பசுவின் நெய் படி 4,

இவைகளை எல்லாம் ஒன்றாய் கலந்து அத்துடன் பச்சைக்கர்ப்பூரம், ஏலம், கிராம்பு, சாஸ்திரபேதி, அதிமதுரம், வசவாசி, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய் வற்றல், சிறுநாகப்பூ, நறும்பிசின், பச்சை சண்பகப்பூ, கோஷ்டம், சடாமாஞ்சில், மரமஞ்சள், சந்தனத்தூள், கலைமான் கொம்பு (ஜலத்தால் அரைத்த மொத்தை), மஞ்சிஷ்டிக்கிழங்கு, புனுகுசட்டம், விலாமிச்சுவேர், நன்னாரிவேர், வெட்டிவேர், முத்தக்காசு, கோரோசனை, குங்குமப்பூ, வகைக்கு பலம் 3, அரைத்து சேர்த்து கரைத்து காய்ச்சி வடித்து தினம் காலை மாலை ஒரு கரண்டி வீதம், சாப்பிட்டுவர, பித்தம் (40), கை, கால் எரிவு, உடம்புஎரிவு, வெட்டை, வெள்ளை விழுதல், மேகச்சூடு, மேகம், சகல பித்த ரோகங்கள் குணமாகும்.

## பூவந்திப்பட்டை கிருதம்.

பூவந்திப்பட்டை 100 பலம் இடித்து 16 படி ஜலத்திலிட்டுகாய்ச்சி 2 படியாக வற்றவைத்து அத்துடன் பசுவின் நெய் படி 1, சேர்த்து அதில் கஸ்தூரிமஞ்சள், கடுக்காய், வகைக்கு பலம் 2, வன்னிவேர்ப்பட்டை பலம் 1, இவைகளை அரைத்துப் போட்டு கரைத்து காய்ச்சி வடித்து அதில் கருஞ்சீரகம் பலம் 1, சூர்ணித்து வடிக்கட்டி சேர்த்து தினம் காலை மாலை ஒரு கரண்டி வீதம், சாப்பிட்டுவர, சுவாசம், காசம், சுவாசகாசம், க்ஷயம், சகல க்பரோகங்கள், இருமல் குணமாகும்.

## அரச விதை கிருதம்

10 பலம் அரசவிதையை ஒரு படி பசும்பாலிலிட்டு அரை மணி நேரம் அரைத்து ஒரு படி பசுவின் நெய்யில் கலந்து அத்துடன் கற்றாழையின் சோற்றை 7 தடவை ஜலத்தால் கழுவி பச்சை நெல்லுமியுடன் சேர்த்து இடித்து எடுத்த சாறு படி 4, எலுமிச்சம் பழச்சாறு படி ¼ சேர்த்து காய்ச்சி வடித்து அத்துடன் ஏலம், சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, பறங்கிப்பட்டை, அதிமதுரம், நெருஞ்சிக்காய், ஆனைத்திப்பிலி, திராக்ஷப்பழம், வகைக்கு பலம் 1, சூர்ணித்து வடிக்கட்டின தூளும் சீனி பலம் 32ம் சேர்த்து கிண்டி தினம் காலை மாலை ஒரு ரூபாய் எடை சாப்பிட்டு வர, பிரமியரோகம் (20), வெள்ளைவிழுதல், வெட்டை, நீர்க்கட்டு, நீர்க்கடுப்பு, கிரிச்சரம், மேககாங்கை குணமாகும்.

## வில்வாதி கிருதம்

பட்டை நீக்கின வில்வவேரின் சீவல் பலம் 10, சந்தனக்கட்டையின் சீவல் பலம் 5, இவைகளை பத்துபடி ஜலத்திலிட்டு காய்ச்சி 2 படியாகவற்றவைத்து அத்துடன் ஆடாதோடை, முசுமுசுக்கை இஞ்சி இவைகளின் சாறு வகைக்குபடி ¼, பசுவின் நெய்படி 1, இவைகளைச்

சேர்த்து அத்துடன் அரைபலம் மான்கொம்பை ஜலத்தால் உறைத்த மொத்தை. அதிமதுரம், துத்திவேர் வகைக்கு பலம் ½, தாளிசப்பத்திரி, திப்பிலி, சீரகம், பாதிரிவிதைப்பருப்பு, மிளகு, கோஷ்டம், கிராம்பு, நெல்லிவற்றல், அக்கிராகாரம், சித்தரத்தை, ஏலம் வகைக்கு விராகனிடை 2, கோரோசனை விராகனிடை 1, இவைகளை அரைத்து சேர்த்து காய்ச்சி வடித்து அதில் சீனாகற்கண்டு பலம் 2 பொடி செய்து கலந்து தினம் காலை, மாலை ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர இருமல், விக்கல், சுவாசம், காசம், மேகம், பித்தம், வாந்தி குணமாகும். இரத்தவிர்த்தியாகும்.

## புளியாரை கிருதம்

புளியாரைச்சாறு படி 2, தயிர்வடிக்கட்டின தண்ணீர்படி ½, பசுவின் நெய்படி 1, இவைகளைச் சேர்த்து, அதில் பேரீச்சம்பழம், திராக்ஷை, வெட்பாலையரிசி, அதிவிடையம், முத்தக்காசு, தேசாவரம், அதிமதுரம், கோஷ்டம், சாதிக்காய், செவ்வியம், சீரகம், வட்டத்திப்பிலிவேர், ஓமம், பட்டைநீக்கின வில்வவேரின் சீவல், வகைக்கு விராகனிடை ½ அரைத்து கரைத்து காய்ச்சி வடித்து தினம் காலை மாலை ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர கிரகணி, வயிற்றுக்கடுப்பு, குன்மம், சோகை, வாய்க்கசப்பு, பசியில்லாமை, கை, கால் ஓச்சல், மேகசூடு குணமாகும்.

## பொற்றலை கையாந்தகரை கிருதம்.

பொற்றலை கையாந்தகரை, பொன்னாங்காணி இவைகளின் சாறு, பசுவின் பால், பசுவின் நெய், வகைக்கு படி 2, எலுமிச்சம்பழச்சாறு படி 1, இவைகளைச் சேர்த்து அதில் அதிமதுரம் பலம் 4, பசுவின் பாலாலரைத்து கரைத்து எரித்து வடித்து அதில் சாதிக்காய், சாதிப்பத்திரி, கோரோசனை வகைக்கு விராகனிடை 2, சீனாகற்கண்டு பலம் 1, இவைகளைச் சூர்ணித்து கலந்து தினம் காலை மாலை ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வர, மூலச்சூடு, உஷ்ணம், மேககாங்கை, கை, கால் எரிவு, உடம்பு எரிவு, வாய் நாற்றம், பிரமியம், குணமாகும். கண்கள் குளிர்ச்சியாகும்.

## செங்கழுநீர்க் கிழங்கு கிருதம்

சிரா செங்கழுநீர்க் கிழங்குச்சாறு படி 1, இளநீர், பசுவின் நெய், வகைக்கு படி 2, பசும்பால், வல்லாரைச்சாறு, வகைக்கு படி 4, இவைகளைச் சேர்த்து அதில் அதிமதுரம், கோஷ்டம், பச்சைக்கர்ப்பூரம், கோரோசனை, வகைக்கு விராகனிடை 3, பசுவின் பாலால் அரைத்து சேர்த்து காய்ச்சி வடித்து தினம் காலை மாலை ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர, ஈளை, இருமல், தொண்டைக்கம்மல், உடம்பில் காந்தல், நாவரட்சி குணமாகும்.

## கூழ்ப்பாண்ட கிருதம்

பெரும்பூசினிக்காய்ச் சாறு, நெல்லிக்காய்ச்சாறு, குழிவிட்டான் கிழங்குச்சாறு, கரும்புச்சாறு, வகைக்கு படி ¼, சதாவேரிக் கிழங்குச் சாறு படி 5, பசுவின் நெய் படி 1, இவைகளைச் சேர்த்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், வெட்பாலைஅரிசி, ஏலம், மல்லி, கிராம்பு, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, சீரகம், விலாமிச்சுவேர், அதிமதுரம், கூகைநீர், திராக்ஷை, பேரீச்சம் பழம், இந்துப்பு, ஓமம், சிறுதேக்கு, கோஷ்டம், சந்தனத்தூள், வகைக்கு விராகனிடை 1, அரைத்து கரைத்து காய்ச்சி வடித்து காலை மாலை ஒரு கரண்டி வீதம் கொடுக்க நீர்க்கடுப்பு, நீர்க்குத்தல், பிரமேகம், மேகசுரம், கை கால் எரிவு குணமாகும். தேகபுஷ்டி தாது விர்த்தி உண்டாகும்.

## வியாக்கிராஜின கிருதம்

பசுவின் நெய், பசுவின் மோர், பசுவின் மூத்திரம், கொடிக் கள்ளிப்பால் வகைக்கு படி ¾, இவைகளைச் சேர்த்து அதில் கோஷ்டம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், இந்துப்பு, சீரகம், சவுக்காரம், வகைக்கு விராகனிடை 2, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, பெருங்காயம், வகைக்கு விராகனிடை 4, இவைகளை அரைத்துப் போட்டு காய்ச்சி வடித்து தினம் காலை மாலை 1 முதல் 2 விரா்கனிடை வீதம் பத்து நாள் சாப்பிட பாண்டு, காமாலை, வீக்கம், நீர்க்கோவை, உதரரோகங்கள் குணமாகும். பத்தியம் புளி, உப்பு, வாயுபதார்த்தங்கள் தள்ளவும்.

## இந்திராப்பிரிய கிருதம்

பசுவின் நெய், பசுவின் பால் வகைக்கு படி 1, சதுரக்கள்ளிப்பால் படி ¼, விஷ்ணுகாந்தி, வட்டத்திப்பிலி கொடிவேலி, இவைகளின் சாறு வகைக்கு படி ½, இவைகளை ஒன்றாய்ச் சேர்த்து அதில் வெள்ளைப்பூண்டு, வசம்பு வகைக்கு பலம் ½, அரைத்து கரைத்து காய்ச்சி வடித்து ஒரு விராகனிடை உள்ளுக்கு சாப்பிட்டுமேலிலும் தடவி வர, கண்டமாலை, அரையாப்பு, விப்புருதி, முலைக்குத்து, கட்டிகள் தீரும்.

## அஷ்வினிகுமார கிருதம்.

ஆறு முற்றின தேங்காயைப் பால் பிழிந்து அதில் சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு 200, சுத்திசெய்த ரசகர்ப்பூரம் விராகனிடை 2, சுத்தி செய்த வெள்ளைப் பாஷாணம் விராகனிடை 1, பசுவின் பால், கொடிக்கள்ளிப்பால், வகைக்கு படி ½, இவைகளில் நேர்வாளப்பருப்பு, ரசகர்ப்பூரம், வெள்ளைப்பாஷாணம், இம்மூன்றும் பசும் பாலால் அரைத்த மொத்தையும் மேற்படி கள்ளிப்பாலும் சேர்த்து காய்ச்சி வடித்து காலை மாலை 1 முதல் 2 விராகனிடை கொடுத்துவர *பெரும் வயிறு, மகோதரம், நீராம்பல், பிறநீர்க்கோர்வை, கவுசி, நீராமை, பீலிகை முதலிய உதரரோகங்கள் குணமாகும்.

## ஈசானமவுலி கிருதம்

வெள்ளருக்கஞ்சாறு படி 4, பசுவின் பால் படி 8, பசுவின் நெய் படி 4, இவைகளைச் சேர்த்து அதில் விலாமிச்சுவேர், ஏலம், மஞ்சிஷ்டிக்கிழங்கு, செவ்வியம், செங்கழுநீர்க்கிழங்கு, தாமரைவளையம், முத்தக்காசு, பேரீச்சம் பழம், கோஷ்டம், அதிமதுரம், கிராம்பு, சன்னலவங்கப்பட்டை, நன்னாரிவேர் வகைக்கு விராகனிடை 5, இவைகளை இளநீரால் அரைத்து கரைத்து அத்துடன் சீனிபலம் 1 போட்டு காய்ச்சி வடித்து தினம் காலை மாலை 5 விராகனிடை வீதம் சாப்பிட்டுவர, வாயிலிருந்து ரத்தம்விழுதல், குணமாகும். மூக்கில் நசியமிட மூக்கால் ரத்தம்வடிதலும், காதில் விட்டு அடைக்க காதில் ரத்தம் வடிதலுங்குணமாகும்.

---

* பெரும்வயிறு என்பது:— அன்னம் செல்லாது. மலந்தியும், உடல் வெளுத்து வற்றி கருவிகள் மந்தித்து வயிறு பெருக்கும்.

மகோதரம்:— அக்கினி அதிகரித்து நீர் உண்டாகி உடல் கனத்து வயிற்றில் வாதமும் ஜலமும் கோர்த்து பெருக்கும்.

நீராம்பல்:— தேகம் வெளுத்து வற்றி மார்பின் கீழ்வயிறும் காலும் வீக்கம் உண்டாகும்.

பிறநீர்கோர்வை:— தேகத்தில் அக்கினி அதிகரித்து நீர் கோர்த்து வீக்கம் உண்டாகும்.

கவுசி:— வலதுபக்கத்திலாவது, நடுவயிற்றிலாவது கட்டிபோல் திரண்டு நலிந்து வயிறு ஊதிவலிக்கும்.

நீராமை:— வயிற்றில் ஆமைபோல் கட்டிஉண்டாகி ஊறி உடல்முறுகி அக்கினிசுவாலையாயிருக்கும்.

கெண்டை:— இடதுபக்கத்தில் கட்டிபோல, திரண்டு நலிந்து வயிறு ஊதி வலிக்கும்.

பீலிகம்:— ரோகநிர்ணயசாரத்தில் காண்க.

## மனோமய கிருதம்

பெரும்பூசினிக்காய்ச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, வாழைக் கிழங்குச்சாறு, பசும்பால், இளநீர் (ஜலம்), வகைக்கு படி 2, சிற்றாமுட்டிவேர் பலம் 5 இடித்து 5 படி ஜலத்திலிட்டு காய்ச்சி வற்றவைத்த கசாயம் படி 1, பசுவின் நெய் படி 1, இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் ஏலம், கிராம்பு, அதிமதுரம், இந்துப்பு, திராக்ஷை வகைக்கு பலம் 1/2, அரைத்து கரைத்து காய்ச்சி வடித்து தினம் காலை மாலை ஒரு கரண்டி வீதம் (5 விராகனிடை) சாப்பிட்டுவர இரத்தபிரமியம், சீயப்பிரமியம், எலும்புருக்கி, கிரிச்சரம், சகல உஷ்ண ரோகங்கள் குணமாகும்.

## விஷ்வரூப கிருதம்

முலைப்பால், பசுவின் நெய், வகைக்கு படி 1/8 சேர்த்து அதில் பொன்னாங்காணிவேர், சிறுகீரை வேர், அதிமதுரம், வகைக்கு விராகனிடை 1, ஜலத்தால் அரைத்துப் போட்டு காய்ச்சி வடித்து கண்ணில் விட்டுவர கண் எரிவு குணமாகும். கண் குளிர்ச்சியாகும்.

## சந்திரக்கலா கிருதம்

முடக்கொத்தான் சமூலம் பசும்பால்விட்டு இடித்துப் பிழிந்த சாறு படி ½, பசுவின் நெய் படி 1/8 இவ்விரண்டு சேர்த்து அதில் அதிமதுரம் பலம் ½, பசும்பாலால் அரைத்து போட்டு காய்ச்சி வடித்து கண்ணிற்கட்டிவர படலரோகம், காசரோகம், திமிர்ரோகம், முதலியவைகள் குணமாகும்.

## மிர்த்தின் ஜெய கிருதம்

ஒரு படி பசுவின் நெய்யுடன் 2½ படி சீராசெங்கழுநீர்ச்சாறு சேர்த்து அதில் மஞ்சிஷ்டிக்கிழங்கு, தாமரைக்கிழங்கு, ஏலம், கிராம்பு, கடுகுரோகிணி, கோஷ்டம், நன்னாரிவேர், அதிமதுரம், சந்தனத்தூள் வகைக்கு விராகனிடை ¾, மேற்படி சாற்றால் அரைத்து, கரைத்து, காய்ச்சி, வடித்து தினம் காலை மாலை ஒரு விராகனிடை வீதம் உள்ளுக்கு சாப்பிட்டு மேலுக்கும் தடவி வர சகல சுரங்கள் குணமாகும். கண்கள் குளிர்ச்சியாகும்.

## பீநசநாசகிருதம்

ஒரு படி பசுவின் நெய்யை முருகி சிவக்காமல் காய்ச்சி இறக்கி அதில் குங்குமப்பூ, கோரோசனை, கோஷ்டம், அதிமதுரம்,

கோரைக்கிழங்கு வகைக்கு விராகனிடை 1, கஸ்தூரி, பச்சைக்கர்ப்பூரம் வகைக்கு விராகனிடை 1/8, இவைகளை பொடித்து வஸ்திரகாயஞ்செய்து பொடியைத் தூவி இவைகளின் நிறம் அதில் தோன்றியவுடன் வடிக்கட்டிக்கொண்டு இதை அந்திசந்தி நஸியமிட்டால் இரத்தப்பீநசம், ஜலப்பீநசம், சிராய் பீநசம், முதலிய 18 வித பீநசரோகங்கள் குணமாகும்.

## *நாசிகாரோக நாச கிருதம்

கோஷ்டம், இளம்வில்வக்காய், அரிசித்திப்பிலி, சுக்கு, திராக்ஷை, வகைக்கு விராகனிடை 5, ஜலத்தாலரைத்து 20 விராகனிடை நெய், அல்லது நல்லெண்ணெயில், கலந்து அத்துடன் ஒரு சேர் ஜலம் சேர்த்து காய்ச்சி வடித்து 5, 6 துளி மூக்கிலிட வெகு தும்பல் அடிக்கடி வருவதை குணமாக்கும். தினம் காலை மாலை போடவேண்டும்.

## க்ஷீர கிருதம்

திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், சுக்கு, வகைக்கு பலம் 1, இவைகளை ஜலத்தால் அரைத்து ஒரு கல்சட்டியிலிட்டு அத்துடன் இந்துப்பு பலம் 1, பொடிசெய்து போட்டு பிறகு நெய் 64ரூபாய் இடை போட்டு கலக்கி பிறகு பசும்பால் சேர் 10, ஜலம் சேர் 10, போட்டு காய்ச்சி, வடித்து தினம் காலை மாலை 4, விராகனிடை வீதம் சாப்பிட்டு வர, பீலிகரோகம், அன்னத்துவேசம், அரோசிகம், மந்தாக்கினி, விஷசுரம், குணமாகும்.

# செந்தூரங்கள்

## மகா நீலகண்ட செந்தூரம்

வீரம், பூரம், ரசம், தாளகம், லிங்கம், வகைக்கு பலம் 4, காந்தம் பலம் 1, இவைகளைச் சுத்தி செய்து அத்துடன் அதிவிடயம் பலம் 1, சேர்த்து கருஊமத்தின் இலைச்சாற்றால் 4 ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி ஒரு பெரிய அப்பிரேக தகட்டையின் பேரில் மேற்படி பில்லைகளைப் பரப்பி அதின் மேல் ஒரு பெரிய அப்பிரேகத்தை வைத்துச் சுற்றிவர சீலைமண் செய்து ஒரு சிறுபுடம் 1-2 எருவில் போடவும்.

இவ்விதமாகவே ஒரு புடம் கற்றாழைச்சாற்றால் அரைத்து போடவும். இந்த செந்தூரம் கருப்பாகவே இருக்கும். அத்துடன் சுத்திசெய்த லிங்கம் பலம் 1, ரசபஸ்மம் பலம் 1, சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டு ஒரு குன்றிமணி இடை சீனியில் கலந்து காலை, மாலை, கொடுத்துவர, சுரம் (64), சன்னி (13), வாதக்கடுப்பு, காசம் (5), சுவாசம் (5), மேகம் (20), யோனிப்புற்று, மேகரணம், லிங்கப்புற்று, வாதம் (80), சூலை (18), கிரந்தி முதலியவைகள் குணமாகும். வியாதிக்குத் தக்க பத்தியமாம்.

## அருணஜடேசுவர செந்தூரம்

ரசம், மனோசீலை, கந்தகம், வெங்காரம், நாவி, சீனாக்காரம், சங்கு, பவளப்புற்று, வகைக்கு பலம் 1, சுத்தி செய்து எலுமிச்சம்பழச்சாற்றாலும், கற்றாழைச்சாற்றாலும், வகைக்கு ஒரு நாள் அரைத்து பில்லைத் தட்டி உலர்த்தி ஒரு கலயத்திலிட்டு அகலால் மூடி சீலைமண் செய்து ஒரு நாள் எரித்து எடுத்து அத்துடன் தங்கப்பொடி, வெள்ளிப்பொடி, சுத்திசெய்த லிங்கம், பவளம், ருத்திராக்ஷம், முத்து, அக்கிராகாரம், வகைக்கு விராகனிடை 1, சேர்த்து முலைப்பாலாலும், மாதுளம்பூச் சாற்றாலும், கருந்துளசிச் சாற்றாலும், வகைக்கு ஒரு நாள் அரைத்து சிறு வில்லைகளாகத் தட்டி 10 நாள் நெல் புடம் வைத்து எடுத்து அனுபானத்திலிட, சன்னி, தோஷம், ஈளை, காசம், நீரிழிவு, மகோதரம், பாண்டு, அரோசகம், எலும்பு உருக்கி, முகவாதம், தாகம், சூடு, முதலியவைகள் குணமாகும்.

## துத்த செந்தூரம்

துத்தம், காந்தம், அரிதாரம், நிமிளை, எண்ணெய்வெங்காரம், வகைக்கு பலம் 1, நெல்லிக்காய்கந்தகம் பலம் 2, பலகரை பலம் 5, இவைகளைச் சுத்தி செய்து எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து சிறுபில்லைகளாக்கி உலர்த்தி குகையில் வைத்து மேல் மூடி சீலைமண் செய்து 20 எருவில் புடம் போட செந்தூரமாகும். சீனியில் பணவிடைக்கொடுக்க வயிற்றுவலி, கிரகணி, ஜலக்கழிச்சல், பாண்டு குணமாகும். ஜாதிக்காய் பொடியில் கொடுக்க அஜீர்ணக்கழிச்சல் குணமாகும்.

## கைலாசநாத செந்தூரம்

ரசம் பலம் 6, கந்தகம் பலம் 1½, அரிதாரம், மனோசிலை, லிங்கம் வகைக்கு விராகனிடை 8, இவைகளைச் சுத்திசெய்து முதலில், ரசமும் கந்தகமும் கல்வத்திலிட்டு அரைத்து பிறகு மற்றவைகளைப் போட்டு எருக்கம் பால்விட்டு 2 சாமம் அரைத்து, இவ்விதமாகவே தும்பை இலைச்சாறு, சிறுசெருப்படை இலைச்சாறு, பூமாதுளை இலைச்சாறு, செம்முள்ளிச்சாறு, பூமாதுளைப்பூச்சாறு, முருங்கைப்பூச்சாறு, தனித்தனியே

வகைக்கு 2 ஜாமம் அரைத்து உலர்த்தி சீலைமண் செய்த காசிகுப்பியில் ¾ குப்பி போட்டு பளப்பக்கல்லால் மூடி, ஒரு சட்டியில் பாதி மணலைப் போட்டு அதின் மேல் மேற்படி குப்பியை வைத்து கழுத்து வரையில் மணலைப்போட்டு மேல் சட்டிமூடி சீலைமண் செய்து காடாக்கினியாய் 3 நாள் எரித்து. ஆறவிட்டு எடுத்து பணவிடை செந்தூரத்தை தூதுளை, கண்டங்கத்திரி, ஆடாதோடை இவைகளின் சாற்றிலிட ஈளை, மந்தாரகாசம், சுரமாந்தம், சுவாசகாசம், சிலேஷ்மம், சன்னி குணமாகும். திப்பிலியை வறுத்து சூர்ணித்து, தேனும் சேர்த்து அதில் கொடுக்க சூலை, புண், ரணம், குஷ்டம், வண்டுக்கடி, கபாலசூலை, கபாலவரிசைக்ஷ, சொறி, குன்மம், கரப்பான், நெஞ்சிநோய், வாயு குணமாகும். வெள்ளைப்பூண்டு, தைலத்திலிட சன்னி (13), குடல்வாதம், திமிர்வாதம், முடக்குவாதம், குணமாகும். சுக்கு. மிளகு, ஓமம், இவைகளை வெதுப்பி சூர்ணித்து அதில் கொடுக்க பக்ஷவாதம், சன்னிபாதம், முகவாதம், பாரிசவாதம், முதலிய சகலவாதமும் குணமாகும். வியாதிக்குத்தக்க பத்தியமாம்.

## மகா பாஷாண செந்தூரம்

வெள்ளைப்பாஷாணம், வீரம், மனோசீலை, நாகம், கருநாகம், வெள்ளீயம், ரசம், தாளகம், அரிதாரம், சீனாகாரம், நவச்சாரம், மான்கொம்பு, இரும்பைராவினப்பொடி, துருசு, பொன்னிமிளை, துத்தம், சூடம் ஆக 17ம் சுத்திசெய்து வகைக்கு பலம் 1, கல்வத்திலிட்டு வெண்கருவில் வெள்ளை எருக்கம்பால் சேர்த்து, விட்டு 3சாமம் அரைத்து பிறகு முலைப்பாலால் ஒரு சாமமும், பொற்றலைகையாந்தகரைச்சாற்றால் 2 சாமமும் அரைத்து உலர்த்தி, குகையிலிட்டு மேல்மூடி 30 எருவில் புடம்போட்டு எடுத்து சமனாக நெல்லிக்காய் கந்தகம்சேர்த்து பொற்றலைகையாந்தகரைச்சாற்றால் அரைத்து முன்போல புடம்போட்டு எடுக்கவும். குன்றி மணி இடை மருந்தை சர்க்கரையில் சேர்த்து கொடுக்க வெட்டை, சுரம், சிரதோஷம், ஜலதோஷம், கபாலவாயு, மேகசூலை, வலிப்பு, குன்மம், காமாலை, சோகை, பாண்டு, நெஞ்சுவலி, கண்டஎரிவு, புழுவெட்டு. விழிரோகம், முதலியவைகள் குணமாகும்.

## வீரக்கருப்பு

ஒரு பலம் வீரத்துக்கு புளியாரை இலையை அரைத்து கவசஞ்செய்து அனலில் புரட்டி மேல் கவசம் வெடிக்கும்வரையில் புரட்டிக்கொடுக்கவும். வெடித்தவுடனே எடுத்துவைத்துக் கொள்ளவும் ஓர் சட்டியில் 4 விரற்கடை மணலைக்கொட்டி அதன் மத்தியில் ஒரு ஓலையின் சுருள் செய்துவைத்து அச்சுருளில் ஒரு பலம் மிளகை பொடிசெய்து பாதிபோட்டு அதன் மேல் மேற்படி வீரத்தை வைத்து பாக்கி பாதி மிளகின் தூளை அதன் மேல் போட்டு எரிக்கவும், மேற்படி ஓலைக்கு கால்வரிசைத்

தீப்பிடித்தவுடனே நெருப்பை அணைத்துவிடவும். மேற்படி வீரம் ஆறினபிறகு எடுத்து சூர்ணித்து பலத்தவியாதிகளுக்கு தக்கபடி அனுபானத்தில் 1/16 முதல் 1/8, குன்றிமணி இடை கொடுக்க மகாபலமான ரோகங்கள் நிவர்த்தியாகும். வியாதிக்குத் தக்க பத்தியமாம்.

## மகா காடிக்கார செந்தூரம்

இரண்டு பலம் காடிக்காரத்தை பனித்தாங்கிப்பூண்டுச்சாறு விட்டு 2மணி நேரம் அரைத்து பில்லைத்தட்டி காயவைத்துக்கொள்ளவும். குத்துக்காரஞ்சம்பட்டி சமூலம் உலர்த்தி 12 சேர் நிறுத்தி ஒரு பாண்டத்தில் போட்டு மேல் ஓட்டால் மூடி சீலைமண் செய்து 30 எருவில் புடம் போட்டு எடுத்த சாம்பலை ஒரு அகலில் போட்டு அமுக்கி அதன் மேல் மேற்படி பில்லைகளை வைத்து அதன் மேல் சாம்பலைப் போட்டு அமுக்கி அகலால் மூடி சீலைமண் செய்து 10 எருவில் புடம்போட்டு எடுத்து ரச செந்தூரம் கால் பாகம் சேர்த்து அரைத்துக் கொள்ளவும் அரை குன்றிமணி இடை சீனியில்வைத்துச் சாப்பிட கால் வீக்கம், பீஜவீக்கம், வ்ாயு, சுரம் முதலிய அநேக வியாதிகள் குணமாகும். பத்தியம் புளி தள்ளவும்.

## லகு காடிக்கார செந்தூரம்

சுத்திசெய்த லிங்கம் விராகனிடை 8, காடிக்காரம் விராகனிடை 1, ர்சசெந்தூரம் விராகனிடை 1, இம்மூன்றும் சேர்த்து அரைத்து காசிக்குப்பியில் போட்டு பளப்பக்கல்லால் மூடி உளுந்துமாவின் சீலை ஒன்றும் களிமண்ணின் சீலை 2ம் செய்து உலர்த்தி ஓர் பானையில் 3 மரக்கால் நெல்லுபோட்டு அதுக்குள் வைத்து ஜலமிட்டு நெல்லு வேகவைத்து பிறகு மருந்தை எடுத்து சூர்ணித்து ஒரு குன்றிமணி இடை தேனிலிட கண் சொருகுதல், பேதி, உப்பிசம், சுரம், மாந்தம், சன்னி, இசிவு, வாயு குணமாகும். இஞ்சிச்சாறும், தேனும் சேர்த்து அதில் கொடுக்க உதிரசிக்கல், உதிரக்கட்டி, குன்மக்கட்டி குணமாகும்.

## சண்டமாருத செந்தூரம்

வீரம், கந்தகம், வகைக்கு பலம் 2; பூரம் பலம் 4, லிங்கம் பலம் 8, இவைகளைச் சுத்தி செய்து வெள்ளைக்கருவால் ஒரு ஜாமம் அரைத்து, பில்லைத்தட்டி, உலர்த்தி, ஓர் கலயத்தில் ஒரு படி ஜலமிட்டு அதில் மேற்படி பில்லைகளைப் போட்டு ஜலம் வற்றும்வரையில் காய்ச்சி பிறகு பில்லைகளை எடுத்து சூர்ணித்து ½ முதல் ஒரு குன்றிமணி இடை பனைவெல்லத்தில் கொடுக்க ஜன்னி (13), குன்மம் (8), வாதம் (80), பக்கவாயு, கண்டமாலை, பவுத்திரம் தீரும். கொடிவேலிவேர்ப்பட்டையும்

குங்குமப்பூவும் சமமாய்ச் சேர்த்து முலைப்பாலால் அரைத்து அதில் கொடுக்க உதிரசிக்கல் தீரும். வெள்ளைப்பூண்டுத் தயிலமும் வெற்றிலைச்சாறும் கோழிமுட்டைத் தயிலமும் தேனும் சேர்த்து அதில் 3தடவை கொடுக்க குழந்தைகளின் கட்டுமாந்தம், வலிப்பு, வாதகணசுரம், குளிர்சுரம், சன்னி, முசல் வலிப்பு முதலியவைகள் குணமாகும்.

## பட்டுக் கறுப்பு

ரசம் விராகனிடை 16, கந்தகம் விராகனிடை 4, இவைகளைச் சுத்தி செய்து, கந்தகத்தை உருக்கி அதில் ரசம் கொடுத்து தொந்தித்து கல்வத்திலிட்டு வீரம் விராகனிடை 2, லிங்கம் விராகனிடை 4, ரசசெந்தூரம் விராகனிடை 3, பூரம் விராகனிடை 1, காடிக்காரம் விராகனிடை 1, பூநீர் விராகனிடை ½ இவைகளைச் சுத்தி செய்து ஆமணக்கிலைச்சாற்றால் அரைத்து உருட்டி அரை உலர்த்தாய் காயவைத்து அதன்மேல் சுய வெள்ளைப்பட்டுவைச் சுற்றி கொடிவேலி வேர்ப் பட்டையை அரைத்து அதற்கு கவசமிட்டு 2சீலைமண் செய்து உலர்த்தி, தரையில் 4விரற்கடை மணலைப்போட்டு அதன்மேல் இதை வைத்து அதன்மேல் 4 விரற்கடை மணலைப்போட்டு அதன்மேல் பத்து எருவை அடுக்கி புடம் போட்டு எடுத்து சூர்ணித்து ஒரு குன்றிமணி இடை சுக்கு அனுபானத்தில் கொடுக்க சூலை, வாதம், பக்ஷவாதம், உதிரசிக்கல் முதலிய அநேக பலத்த ரோகங்கள் குணமாகும். வியாதிக்குத்தக்க பத்தியமாம்.

## அயச் செந்தூரம்.

அரப்பொடியை எலுமிச்சம்பழச்சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் அதை ஜலத்தால் கழுவி உலர்த்தி ஓர் சட்டியில் போட்டு 4 ஜாமம் எரிக்கும்பொழுது பொற்றலைகையாந்தகரை அல்லது கையாந்தகரைச்சாறு கொஞ்சங்கொஞ்சமாய் விட்டு புரட்டிப் புரட்டி கொடுத்துவர செந்தூரமாகும். பிறகு அதை எடுத்து சூர்ணித்து 2 குன்றிமணி இடை எடுத்து வெண்ணெயில் கொடுத்தவுடனே கருங்குருஞ்சாவும் வெந்தியமும் வெங்காயமும் சேர்ந்த கசாயம், அல்லது வேறு கசாயங்களைக் கொடுக்க கண் கை கால் எரிச்சல், பசியில்லாமை, கணச்சூடு, தேகவீக்கம், இளைப்பு, சோகை, பாண்டு, அன்னத்துவேசம், பித்தமயக்கம், பித்தவாயு, முதலியவைகள் குணமாகும். வியாதிக்குத்தக்க பத்தியமும் அனுபானமுமாம். வேறுமுறை - பெண்குதிரையின் பின் கால்களின் லாடங்களைத்தானே தேய்ந்து விழுந்ததை எடுத்து ராவின பொடி பலம் 8, சிறு களாக்காய் சாற்றில் 3 நாள் ஊறவைத்து எடுத்து மேற்படி சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி ஓட்டிலிட்டு

சீலைமண் செய்து வராகபுடம் போட்டு எடுத்து ஓதியம்பட்டைச் சாற்றால் 2 புடமும், நாவல்பட்டைச் சாற்றால் 1 புடமும் போட வெகு திவ்விய செந்தூரமாகும். இதை அனுபானத்திலிட மேற்படி வியாதிகள் குணமாகும்.

## காந்த செந்தூரம்

8 பலம் சுத்தி செய்த காந்தத்தை ஒரு சிறு துணியில் முடித்து நாவல்பட்டைச்சாற்றில் 3 நாள் ஊறவைத்து பிறகு அந்த சாற்றில் போட்டு ஒரு ஜாமம் எரித்து எடுத்து மேற்படி சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து வராகபுடம் போடவும். இவ்விதமாய் 3 புடம் போட செந்தூரமாகும். இதை அனுபானத்திலிட அயச்செந்தூரத்தில் சொல்லிய வியாதிகள் குணமாகும்.

## அயக்காந்த செந்தூரம்

குதிரையின் லாடத்தாலான அயச்செந்தூரமும், காந்தசெந்தூரமும் சமமாய்ச்சேர்த்து நாவல்பட்டைச் சாற்றால் 3 ஜாமம் அரைத்து பில்லைத் தட்டி ஓட்டிலிட்டு, சீலைமண் செய்து வராகபுடம் போட அயக்காந்த செந்தூரமாகும். அனுபானங்களில் கொடுக்க பாண்டு, சோகை, காமாலை தேகவெளிப்பு, முதலியவைகள் குணமாகும்.

## சுவர்ண அப்பிரேக செந்தூரம்

பளிங்கு அப்பிரேகத்தை காய்ச்சிக் காய்ச்சி கழுதை மூத்திரத்தில் 6 தடவை தோய்த்து எடுத்து கல்வத்திலிட்டு நீராகாரக்காடியில் செம்பரத்தம்பூக்களைப் போட்டு 4 நாள் வைத்து கசக்கி அந்த ஜலத்தால் அரைத்து ஒரு முழம் உயரம் எருவில் 6 புடமும் எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து ஒரு புடமும் போட்டு எடுத்து பத்துக்கு ஒன்று தங்கம் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து ஒரு புடம் போட்டு எடுத்து அனுபானத்தில் ஒரு பணவிடை கொடுக்க க்ஷயம், காசம், நீரிழிவு, கபரோகங்கள் முதலிய கடுரரோகங்கள் குணமாகும்.

## அப்பிரேக செந்தூரம்

ஓர் சட்டியில் கருங்குருவை அரிசியின் கஞ்சியைப் போட்டு அதில் கிருஷ்ண அப்பிரேகம் ஒரு பங்கும் பளிங்கு அப்பிரேகம் இரண்டு பங்கும் சேர்த்து காய்ச்சி எடுத்து அலம்பி உலர்த்தி ஒரு சட்டியில் போட்டு அடுப்பில் ஏற்றி எரிக்கும் பொழுது உலராத கற்றாழையின் வேரைத் துண்டுகளாக்கி கொஞ்சங்கொஞ்சமாக மேற்படி சட்டியில் போட்டு புரட்டிப்புரட்டி கொடுத்து ஒரு ஜாதி விறகால் 4 ஜாமம் எரித்து கல்வத்திலிட்டு நாவல் பட்டைச் சாற்றால் அரைத்து 2 வராகபுடம்

போடவும். இவ்விதமாய் ஆல், அத்தி, அரசு, கொடிவேலி இவைகளின் பட்டைக் கசாயத்தாலும் எலுமிச்சம்பழம், கவுதும்பை, சிவகரந்தை, சிறுசெருப்படை, கரிப்பான், முருங்கைப்பூ, இவைகளின் சாற்றாலும் தனித்தனியே ஒவ்வொன்றிலும் 2 புடம் போட்டு எடுத்து 2 குன்றிமணி இடை வீதம் அனுபானத்தில் கொடுக்க நீரிழிவு, மதுமூத்திரம், க்ஷயம், காசம், மேகம் முதலிய அநேக கடூரரோகங்கள் குணமாகும்.

## வீர செந்தூரம்.

சுத்திசெய்த வீரத்துக்கு கந்தகமும் அரப்பொடியும் சமமாய்ச்சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து கவசமிட்டு அதன் மேல் உப்பை அரைத்து கவசமிட்டு உலர்த்தி, ஓர் சட்டியில் 2 விரற்கடை மணலைப்போட்டு அதின் மேல் வைத்து மணலால் மூடி 2 ஜாமம் கமலாக்கினியாய் எரித்து எடுக்க செந்தூரமாகும். இதை சகல பலத்த வியாதிகளுக்கு கொடுக்கலாம். வாய்பிடிக்காது.

## அயவீர செந்தூரம்

அரப்பொடியை எலுமிச்சம்பழச்சாற்றில் ஒருநாள் ஊறவைத்து மறுநாள் அலம்பி குப்பைமேனிச்சாற்றால் ஒரு நாள் அரைத்து பில்லைத் தட்டி ஓர் வராகபுடம் போட்டு எடுத்து அதற்கு கால் பாகம் சுத்திசெய்த வீரம் சேர்த்து ஒரு சட்டியில் ஒரு பலம் வெடியுப்பைப் போட்டு அத்துடன் ஒரு படி சுத்தஜலமிட்டு கால் படியாக காய்ச்சி தெளிவை எடுத்து அத்தெளிவை ஜலத்தால் அரைத்து பில்லைகளாக்கி உலர்த்தி ஓட்டிலிட்டு 7 சீலைமண் செய்து குக்குடபுடம் போட்டு எடுத்து அத்துடன் வீரத்தின் இடை சுத்திசெய்த லிங்கமும் சுத்திசெய்த ரசசெந்தூரமும் சேர்த்து சூர்ணித்து ஒரு குன்றிமணி இடை அனுபானத்தில் கொடுக்க வாதம் (80), காசம் (5), மேகவாயு, ஜன்னி, இரைப்பு, பாண்டு, சோகை, பித்தவியாதிகள் குணமாகும். வியாதிக்குத் தக்க பத்தியமாம்.

## பூர்ண சந்திரோதய செந்தூரம்.

தங்கரேக்கு விராகனிடை 10, மனோசிலை விராகனிடை 1/8, தாளகம் விராகனிடை ½, லிங்கம் விராகனிடை ½, ரசசெந்தூரம் விராகனிடை ½, பாலரசம் விராகனிடை 2, இவைகளை சுத்திசெய்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றில் செம்பரத்தம்பூக்களைப் போட்டு, ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் பிழிந்த சாற்றைச் சோத்து 3 நாள் அரைத்து, பிறகு பொற்றலைகையாந்தகரைச் 'சாற்றால் 2 நாள் அரைத்து உலர்த்தி காசிகுப்பியில் போட்டு 7 சீலைமண் செய்து, ஒரு சட்டியில் மணலைக்கொட்டி அதன் மத்தியில் இதைவைத்து தீபாக்கினியாய் 8

ஜாமமும் காடாக்கினியாய் 6 ஜாமமும் எரித்து சலாகையால் கிண்டி பார்க்க சலாக்கு முகம் கறுப்புக்கண்டால் பக்குவமென்று அறிந்து தீயை அணைத்து அதை ஆறின பிறகு உடைத்து மருந்தை எடுத்து அத்துடன் ஒரு பலத்துக்கு ஒரு கழஞ்சி கஸ்தூரியும், ஒரு கழஞ்சி கோரோசனையும் சேர்த்து சூர்ணித்து பணவிடை வீதம் தேனில் கொடுக்க சன்னி (13), தோஷம் (7), சிலேஷ்மரோகங்கள் (96), வலிப்பு (5), சுரம் (64), காசம் (8), மேகம் (20) பிரமியங்கள் (20) குணமாகும். கொங்கின்பூ (கருஞ்சுரையின் பூ) சூர்ணத்தில் 3 மண்டலஞ்சாப்பிட்டால் தேகத்தில் தேஜசு லட்சுமிவிலாசம் அறிவு விலாசம் உண்டாகும். விந்து கட்டும். விந்து ஊறும். இச்சாபத்தியம்.

## பஞ்சமுக செந்தூரம்.

வீரம், ரசம், லிங்கம், தாளகம், கந்தகம் இவ்வைந்தும் சுத்தி செய்து வகைக்கு விராகனிடை 3 சேர்த்து நாட்டுக் காட்டாமணக்குச் சாற்றால் 2 ஜாமம் அரைத்து பில்லைத் தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து 3-4 எருவில் புடம்போட்டு எடுத்து சூர்ணித்து, சுக்கு மிளகு திப்பிலி இம்மூன்றும் இளவறுப்பாய் வறுத்து செய்த சூர்ணம், தேன், பசும் வெண்ணெய், கருப்பட்டி இவைகளில் எதிலாகிலும் பணவிடை மருந்தை வைத்துக்கொடுக்க சூலை (18), குஷ்டம் (18), கருமேகம், வெண்குஷ்டம் சகலமேகங்கள், குன்மம் (8), வாதம் (80), வெடிசூலை குணமாகும்.

## இராஜ மண்டூர செந்தூரம்

மண்டூரம் பலம் 1, கந்தகம் பலம் 1, ரசம் பலம் 1, தாளகம் பலம் 1, நவச்சாரம் பலம் 1, வெடியுப்பு பலம் 1, கௌரிப்பாஷாணம், சீனாக்காரம் வகைக்கு பலம் 1, இவ்வெட்டுஞ் சுத்தி செய்து எருக்கம்பாலால் ஒரு ஜாமம் அரைத்து, பிறகு எலுமிச்சம்பழச்சாற்றால் 2 ஜாமம் அரைத்து, குக்குடப்புடம் போடவும். இவ்விதமாய் 10 புடம் போட்டு எடுத்து பணவிடை அனுபானத்தில் கொடுக்க பாண்டு, சோகை, காமாலை முதலியவைகள் குணமாகும்.

## இராஜ கருவங்க செந்தூரம்

கருவங்கம், பவளம், கர்ப்பூர சலாசத்து வகைக்கு பலம் 2, சுத்தி செய்து எலுமிச்சம்பழச்சாற்றால் 4 ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து 50 எருவில் புடம் போட்டு எடுத்து அதற்கு கால். பங்கு நெல்லிக்காய் கந்தகத்தைச் சேர்த்து பொற்றல்கையாந்தகரைச் சாற்றால் 4 ஜாமம் அரைத்து 2புடம் 50 எருவில் போட்டு எடுத்து பணவிடை வீதம் அனுப்பானத்தில் கொடுக்க கழிச்சல், சீதபேதி, ரத்தபேதி, ஆண்குறி எரிவு, லிங்கப்புற்று, சகல மேகங்கள், கர்ப்ப மேகம், மேக ஊறல் குணமாகும். வியாதிக்குத் தக்க பத்தியமாம்.

## நாக செந்தூரம்

சுத்தி செய்த நாகம் பலம் 1 உருக்கி, உருக்குவாயில் ஒரு பலம் மனோசீலை கொடுத்து வெள்ளைக்கொழுஞ்சிவேரால் கிண்ட பஸ்மமாகும் அதை எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து ஒரு வராகபுடம் போட்டு அத்துடன் சுத்திசெய்த வீரம், லிங்கம் வகைக்கு பலம் 1, சுத்திசெய்த ரசம் பலம் ½, சேர்த்து பொற்றலைகையாந்தகரைச் சாற்றால் அரைத்து 2-3 குக்குடபுடங்கள் போட செந்தூரமாகும். ஒரு குன்றிமணி இடை அனுபானத்திலிட மூலம், குன்மம், இசிவு, இழுப்பு முதலிய பலமான வியாதிகள் குணமாகும்.

## பஞ்சாக்ஷேரி செந்தூரம்.

தங்கப்பொடி விராகனிடை 1, வெள்ளிப்பொடி, அயப்பொடி, காந்தப்பொடி வகைக்கு விராகனிடை 8, பாலரசம் விராகனிடை 40, இவைகளைச் சுத்திசெய்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து பில்லைத்தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து கஜபுடம்போட செந்தூரமாகும். ஒரு குன்றிமணி இடை அனுபானத்திலிட க்ஷயம் (5), ஈளை, சிலேஷ்மரோகங்கள் (96), நீர்க்கட்டு, சதை அடைப்பு, கிரந்தி, பிரமியங்கள் (20), வெட்டை, ஆண்குறிசதைதிண்ணுதல், முதலிய அநேக கடூரரோகங்கள் குணமாகும்.

## சட்ரச செந்தூரம்

வெள்ளைப்பாஷாணம் விராகனிடை 1, வீரம் விராகனிடை 2, லிங்கம் விராகனிடை 3, ரசசெந்தூரம் விராகனிடை 4, பூரம் விராகனிடை 5, ரசம் விராகனிடை 6, இவைகளைச் சுத்திசெய்து வைத்துக்கொள்க. சுத்தி செய்த நெல்லிக்காய் கந்தகம் விராகனிடை 10, உருக்கி கல்வத்திலிட்டு அத்துடன் மேற்படி ரசம் மாத்திரம் சேர்த்து அரைத்து, பிற்கு மற்றவைகளையுஞ்சேர்த்து நாட்டுக்காட்டாமணக்குப் பாலால் ஒரு நாள் அரைத்து பில்லைத்தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து ஒரு குக்குடபுடம் (சிறுபுடம்) போட்டு எடுத்து அனுபானத்தில் கொடுக்க சுரம், க்ஷயம், காசம், சன்னி, மூர்ச்சை, அதிசாரம், பவுத்திரம், குஷ்டம், அண்டவாதம், குன்மம், மேகம், சூலை, கிரந்தி, பீலிகம், வலிப்பு, வாதம், அபஸ்மாரம், குய்யரோகம் முதலிய அநேக பலத்த வியாதிகள் குணமாகும்.

## கல்லுப்பு செந்தூரம்

கல்லுப்பை அழுக்குப்போக ஜலத்தால் அலம்பி உலர்த்திக் கொள்க. ஒரு படி கல்லுப்பை பொடி செய்து ஒரு சட்டியில் போட்டு ஆடு தின்னாப்பாளைச்சாறு கொஞ்சங்கொஞ்சமாய் அரைப்படிச்சாறு விடவும்.

இப்படி விடும்போது திராவிக் கொடுக்ககொடுக்க உப்பு கருப்பாய் போகும். அதை எடுத்து மேற்படி சாற்றால் அரைத்து பில்லை தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து 8 எருவில் புடம் போடவும். இவ்விதமாக செந்தூரம் சிவப்பாகும் வரையில் அதாவது 8வது புடத்தில் சிவப்பாகும். ஒவ்வொரு புடத்திலும் எரு குறைத்துக் கொண்டே வரவேண்டும். பணவிடை எடுத்து அனுபானத்திலிட குன்மம், வயிற்றுவலி, சூதகவலி, இருமல், காசம், க்ஷயம், குணமாகும்.

## தாளக செந்தூரம்

சுத்திசெய்த தாளகத்தை ஒரு புது சட்டியில் போட்டு அடுப்பின் மேல் வைத்து எரிக்கவும். எரிக்கும் போது முள் முருங்கை (கல்யாண முருங்கை)யின் கழியால் செந்தூரமாகும்வரையில் கிளறிக்கொடுக்கவும். ஒரு குன்றிமணிஇடை எடுத்து அனுபானத்திலிட மேகம், வெட்டை, பிரமேகம், ரத்தபித்தம், சுரம், காசம், கபரோகங்கள், க்ஷயம் குணமாகும்.

## தாம்பிர செந்தூரம்

ஆடுதின்னாவேரும் வெண்ணொச்சிவேரும் சமமாய் சேர்த்து இடித்து தூள் செய்து வஸ்திரகாயஞ்செய்து கல்வத்திலிட்டு குக்கில்பாலால் (குக்கில் ஜலத்தில் தடிப்பாய் கரைத்துக் கொள்வதுதான்) அரைத்து சுத்திசெய்த தாம்பிரத்தகடுகளுக்கு மேலும் கீழும் தடவி ஓட்டிலிட்டு ஓட்டால் மூடி சீலைமண் செய்து கஜபுடம் போட செந்தூரமாகும். அரைகுன்றிமணி இடை தேனில் கொடுக்க வாதம் (80), சன்னி (13), குன்மம் (8), மேகம் (20), முதலிய அநேக கடூரரோகங்கள் குணமாகும்.

## ரசவீரநாக செந்தூரம்

ஒரு பலம் சுத்திசெய்த நாகத்தை குகையிலிட்டு உருக்கி, உருக்குவாயில் ஒரு பலம் மனோசீலை கொடுத்து வெண் கொழுஞ்சிவேரால் கிண்டவே நீற்றிப்போம். இதை கல்வத்திலிட்டு ஒரு பலம் சுத்திசெய்த ரசமும் ஒரு பலம் சுத்தி செய்த வீரமும் அத்துடன் சேர்த்து முலைப்பாலலாட்டி 3 நாள் பனியில் வைத்து, பிறகு இடைக்கு இரட்டிப்பு சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகஞ்சேர்த்து பொற்றல் கையாந்தகரைச்சாற்றால் அரைத்து பில்லைசெய்து உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண்செய்து குக்குடபுடங்கள் சிவப்பாகும் வரையில் போடவும். இந்த செந்தூரத்தில் குன்றிமணி இடை பனைவெல்லத்தில் வைத்து கொடுக்க சகல மூலரோகங்கள் குணமாகும். கௌரி சங்கரச்சூர்ணத்தில் கொடுக்க வயிற்றில் எரிவு கண்டு சிறுநீர்க்கட்டி தேரைபோல் இழைத்த ரோகத்துக்கும், மூலத்தில் எடுத்தசகல ரோகத்துக்கும் கொடுக்கலாம். பத்தியம் சையோகம், புளி, தாம்பூலமாகாது.

## வங்க செந்தூரம்

சுத்திசெய்த வெள்ளீயம் பலம் 1, உருக்கி அவ்வுருக்குவாயில் ஒரு பலம் சுத்திசெய்த மனோசிலை பொடித்துப் போட்டு இரும்பு கரண்டியால் பிரட்டி கொடுக்க ஈயம் வெட்டையாகும். அதை எடுத்து ஜலத்தால் அலம்பி கல்வத்திலிட்டு அத்துடன் வீரம், கர்ப்பூரசலாசத்து, அரிதாரம் இவைகளைச் சுத்திசெய்து வகைக்கு பலம் 1, சேர்த்து, தக்காளி இலைச் சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து, பிறகு கோழி முட்டையின் மஞ்சள் கருவில் குப்பைமேனிச்சாறு சேர்த்து கலக்கி அதை விட்டு ஒரு ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி ஓட்டிலிட்டு 7 சீலைமண்செய்து வராக புடம் போட செந்தூரமாகும். வெண்ணெயில் குன்றிமணி இடை கொடுக்க சகலமேகம், மேகநீர், பித்த வெட்டை, காந்தல், தலைவலி, பீநசம், குன்மம், ரத்த கிரிச்சரம், சகல கப ரோகங்கள், வித்திரிதி குணமாகும்.

## இராமபாண செந்தூரம்

வீரம், பூரம், ரச செந்தூரம், லிங்கம், நெல்லிக்காய் கந்தகம் வகைக்கு பலம் 1 சுத்தி செய்து முலைப்பாலால் 4 ஜாமம் அரைத்து வெய்யிலில் வைத்தால் செந்தூரமாகும். அனுபானத்திலிட சுரம், வீக்கம், மேகம், ஜன்னி, வாதம், குணமாகும்.

## லிங்க செந்தூரம்

சுத்திசெய்த ஒரு பலம் உலாந்தாலிங்கத்துக்கு கொடிவேலி வேர்ப்பட்டையை அரைத்து கவசமிட்டு, சீலைமண்செய்து 10 எருவில் புடம் போட்டு எடுத்து அரைகுன்றிமணி இடை தேனில் கொடுக்க சுரம், வாதம், பித்தம் தீரும்.

## அஷ்டபயிரவ செந்தூரம்.

லிங்கம், மனோசீலை, அரிதாரம், காந்தம், ரசம், கந்தகம், ரசகர்ப்பூரம், வெள்ளைப்பாஷாணம் இவ்வெட்டும் சுத்திசெய்து வகைக்கு பலம்1 சேர்த்து குப்பைமேனி, வெற்றிலை, பருத்தியிலை, வெள்ளறுக்கு, துளசி, இவைகளின் சாற்றால் தனித்தனியே 4 ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி, ஓர் சட்டியிலிட்டு வெற்றிலையால் மூடி பிறகு மேல் சட்டி மூடி சீலைமண் செய்து 4 ஜாமம் எரித்து எடுத்து குன்றிமணி இடை தேன் அல்லது சீனியில் கொடுக்க சன்னி (13), மேகம் (21), குஷ்டம் (18), சூலை (18), குன்மம் (8), கிரந்தி (9), கை கால் முடக்கு, பிளவை, புற்று, கண்டமாலை, குலை நோய், சகல கரப்பான் வாதம் (80) கன்னப் புற்று பவுத்திரம் (15), கபரோகம் (96), ஜிக்வாரோகம் (6), முதலிய அநேக பலமான ரோகங்கள் குணமாகும்.

## கரியுப்பு செந்தூரம்

ஒரு படி கரியுப்பை எருக்கம்பாலால் ஒரு ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து 15 எருவில் புடம் போட்டு எடுத்து இவ்விதமாகவே திருக்கள்ளிப்பால், தும்பை இலைச்சாறு, கவுதும்பை இலைச்சாறு, மருதம்பட்டைச்சாறு, கற்றாழைச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, பொடுதலை இலைச்சாறு, இவைகளில் ஒவ்வொன்றிலும் ஒரு ஜாமம் தனித்தனியே அரைத்து தனித்தனியே ஒவ்வொரு புடம் போட பஸ்மமாகும். பணவிடை தேனில் கொடுக்க உதரரோகம், சூலை, வீக்கம், குன்மம், வாயு, கிரகணி, வாந்தி, அஜீர்ணந்தீரும்.

## மயிலத்துவஜே செந்தூரம்

சுத்திசெய்த அயப்பொடி பலம் 10, சீனாகாரம், நவக்ஷாரம், வெங்காரசுண்ணம் வகைக்கு பலம் 1, இவைகளை கல்வத்திலிட்டு கோழிமுட்டையின் மஞ்சள் கருவாலாட்டி பில்லைத்தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு ஓட்டால் மூடி சீலைமண் செய்து காடாக்கினியாய் எரித்து எடுத்து அத்துடன் சுத்திசெய்த கந்தகம், ரசம், வீரம், நாகபஸ்மம்சேர்த்து பொற்றலைகையாந்தகரைச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து முன்போல் பில்லைத் தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து குக்குடபுடம் போட்டு எடுத்து அனுபானத்தில் பணவிடை கொடுக்க குஷ்டம், மேகம், பாதரோகம், வெட்டை, புடை மூதலிய வியாதிகள் குணமாகும்.

## துரிசு செந்தூரம்

துரிசு விராகனிடை ஒன்று, உத்தாமணிப்பாலில் போட்டு (துரிசு முழுகும்படி பால்விடவேணும்) சூர்யபுடம் வைத்து எடுத்து உத்தாமணிச் சாற்றால் அரைத்து பில்லைசெய்து உத்தாமணி இலையை அரைத்து அப்பில்லைக்கு கவசமிட்டு சீலைமண் செய்து உலர்த்தி சிறுபுடம்போட செந்தூரமாகும். இதை அனுபானத்திலிட அநேக வியாதிகள் குணமாகும். அன்றியும் கொக்குமந்தாரைப்பூ சாற்றில் சுத்தி செய்த தாம்பிரத்தை (சுத்தி முறையில் காண்க) உருக்கி அவ்வுருக்குவாயில் இதைக் கொடுக்க வாங்கும். வேறுமுறை - துரிசு, கந்தகம், அரப்பொடி, வகைக்கு பலம் 1, வீரம் விராகனிடை 1, இவைகளைச் சுத்திசெய்து எலுமிச்சம் பழச்சாற்றால் 2நாள் அரைத்து பில்லைத் தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து வராக புடம் போடவும். இவ்விதமாய் 3 தடவை புடம் போட செந்தூரமாகும். சுக்கு, மிளகு, திப்பிலி, இவைகளைச் சேர்த்து சூர்ணித்து, ஒரு விராகனிடைச்சூர்ணத்தில் ஒரு குன்றிமணி இடை செந்தூரம் வைத்துக் கொடுக்க குன்மம் (8), கர்ப்ப ரோகங்கள், கிரகணி குணமாகும். இச்சாபத்தியம்.

☞ சாதாரண ஜனங்களுக்கும் சில வைத்தியர்களுக்கும், மனிதர்களின் சரீரத்திலுள்ள பீலிகம், சிறுகுடல், பெருங்குடல், ஈரல், இரைப்பை நாடிகள், நரம்புகள், ஜீர்ணஉறுப்புகள், இரத்த உறுப்புகள் முதலிய சகல உறுப்புகளின் ஆகாரத்தையும் (உருவம்), அவ்வுறுப்புகள் இருக்கும் ஸ்தானத்தையுந் தெரியாது. அவைகளைத் தெரிந்து கொள்ளாமல் வைத்தியம் செய்வது அவ்வளவு உசிதமல்ல. ஆகையால் அவைகளை அவர்கள் நன்றாய் அவகாசப்படும்படியாய் ஒவ்வொரு உருவத்துக்கும் படங்களை ஏற்படுத்தியிருப்பதுடன் அவைகளை விரிவாக சரீரவியவஷேத சாஸ்திரம் என்ற கிரந்தத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அக்கிரந்தம் படித்துப் பார்த்தவர்களுக்கு விஷயங்களைத் தெரிவதுடன் மகா ஆனந்தமுண்டாகும்.

## திரிலோச்சன செந்தூரம்

சுத்திசெய்த இரும்பின் அரப்பொடி, சுத்திசெய்த தாம்பிர அரப்பொடி வகைக்கு பலம் 1, சேர்த்து கற்றாழைச்சாற்றால் அரைத்து பத்து புடமும், கையான்தகரைச்சாற்றால் அரைத்து 3 புடமும், நாவற்பட்டைச்சாற்றால் அரைத்து 3புடமும் போட்டு எடுத்து அத்துடன் சுத்தி செய்த நெல்லிக்காய்கந்தகம், சுத்தி செய்த அரிதாரம் வகைக்கு விராகனிடை 1, சுத்திசெய்த ரசம் விராகனிடை 3 சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றாலும் முருங்கைப்பூச்சாற்றாலும் தனித்தனியே அரைத்து 3புடம் போட்டு வைத்துக்கொண்டு விசுவேசுவரச் சூர்ணத்தில் ஒரு விராகனிடை வைத்து அரைமண்டலம் சாப்பிட சூலை, வெடிசூலை, வாதபாண்டு, விஷபாண்டு, மூலப்பாண்டு, வாதசூலை, மேகசூலை, லிங்கச்சூலை முதலிய அநேக கடூரரோகங்கள் குணமாகும். வியாதிக்குத்தக்க பத்தியமாம்.

## மாத்திரைகள்

## வங்க உப்பு மாத்திரை

வங்க உப்பு (Sugar of lead - சுகர் லேட்) விராகனிடை 10, அபின் விராகனிடை 1, இவ்விரண்டுஞ்சேர்த்து அத்துடன் சுத்தஜலம் கொஞ்சம் விட்டு செவ்வையாய் அரைத்து 140 மாத்திரைகளாக்கி ஒன்று முதல் இரண்டு மாத்திரைகள் புளித்த நீராகாரத்திலாவது அல்லது புளித்த மோரிலாவது, கரைத்துக் காலை மாலை 2-3 நாள் கொடுக்க உதிரப்பெருக்கு குணமாகும்.

## அதிசார மாத்திரை

அபின் விராகனிடை 1, துரிசு விராகனிடை ¼, இவ்விரண்டும் சேர்த்து அத்துடன் சுத்தஜலம் கொஞ்சம் சேர்த்து அரைத்து 60 மாத்திரைகளாக்கி காலையில் ஒரு மாத்திரையும் மாலையில் ஒரு மாத்திரையும் கொடுத்துவர அதிசாரம், ரத்த அதிசாரம் குணமாகும்.

## தாதுபுஷ்டி மாத்திரை

பாலரசம் விராகனிடை 3, சுத்திசெய்த லிங்கம் விராகனிடை 1, இவ்விரண்டும் கல்வத்திலிட்டு அரைத்து பிறகு சுத்திசெய்த எண்ணெய் வெங்காரம், சுத்திசெய்த கஞ்சா, அபின் இவைகள் வகைக்கு பலம் ½, சேர்த்து அரைத்து அத்துடன் கிராம்பு, முருங்கைவித்து, சாதிக்காய், சாதிப்பத்திரி, முத்தக்காசு, பூனைக்காலிவித்து, சாரப்பருப்பு, பூமிசர்க்கரைக்கிழங்கு, வகைக்கு பலம் ½, சூர்ணித்து வஸ்திரகாயஞ்செய்து சேர்த்து ஒரு முற்றல் தேங்காய்க்குள் அடைத்து சாணியால் கவசஞ்செய்து 10-15 எருவில் புடம் போட்டு எடுத்து தேங்காயை உடைத்து முருங்கைப்பூச்சாற்றால் 3 ஜாமம் அரைத்து கழற்சிக்காய் அளவு மாத்திரைகளாக்கி உலர்த்தி வைத்துக்கொண்டு 1-2 மாத்திரைகள் சூர்ணித்து சீனியுடன் சேர்த்து சாப்பிட்டு உடனே பசும்பாலில் கற்கண்டுப் பொடிபோட்டுக் காய்ச்சிச் சாப்பிடவும். இவ்விதமாக காலை மாலை அரை மண்டலம் சாப்பிட்டால் விந்து தம்பனமாகி இடுப்பு விடமாட்டாது. போகம் வெகுநேரமிருக்கும்.

## சண்முக மாத்திரை.

வீரம், பூரம், லிங்கம், ரசம், ரசசெந்தூரம், வகைக்கு விராகனிடை 2, சுத்திசெய்து அத்துடன் பச்சைக்கர்ப்பூரம் விராகனிடை 2, சேர்த்து முலைப்பாலால் 4 ஜாமம் அரைத்து கொத்தமல்லிவிதை அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி தினம் காலை மாலை ஒவ்வொரு மாத்திரையாக கொடுக்க சூலை (18), கிரந்தி (9), தோஷம் (9), சன்னி (13), முதலியவைகள் தீரும்.

## சுவர்ண சிந்தாமணி மாத்திரை

தங்கம், வெள்ளி, முத்து, பவளம், ரசம், லிங்கம், அயச்செந்தூரம், மனோசிலை, நெல்லிக்காய், கந்தகம், அப்பிரேகசெந்தூரம் இவைகளில் சுத்திசெய்ய வேண்டியவைகளை சுத்திசெய்து வகைக்கு விராகனிடை 2 சேர்த்து முலைப்பாலால் 4 ஜாமமும், சித்திரமூலவேர்ப்பட்டையின் கசாயத்தால் 4 ஜாமமும், வெண் எருக்கம்பாலால் 2 ஜாமமும் அரைத்து பலகரையில் அடைத்து வைத்து, பிறகு ஓர் சட்டியில் சாம்பலைப்போட்டு

பரப்பி அதன்மேல் மேற்படி பலகரைகளைப் பரப்பிவைத்து அதன் மேல் சாம்பலைக்கொட்டி அமுக்கி பிறகு வேறு சட்டியால் மூடி 7 சீலைமண் செய்து கஜபுடம் போட்டு எடுத்து கண்ட எடைக்கு சுத்திசெய்த ரசம் சேர்த்து அத்துடன் சுத்திசெய்த நாபி ¾, விராகனிடை சேர்த்து, பிறகு சுக்கு, திப்பிலி, மிளகு, சேர்ந்த கசாயத்தாலும், கடுக்காய், தானிக்காய் நெல்லிமுள்ளிசேர்ந்த கசாயத்தாலும், எருக்கம்பட்டைச் சாற்றாலும், வகைக்கு 2 ஜாமம் அரைத்து கொத்தமல்லிவிதை அளவாக மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி தினம் காலை மாலை ஒவ்வொரு மாத்திரையாக கொடுக்க சன்னி (13), தோஷம், சுரம் (64), காசம் (5), வலிப்பு (5), க்ஷயம் (5), மேகம் (20), வாதம் (80), சிலேஷ்ம ரோகங்கள் (96), முதலிய சகல ரோகங்கள் குணமாகும்.

## குன்ம குடோரி மாத்திரை

பாலரசம், நெல்லிக்காய் கந்தகம், லிங்கம், நாபி, வெங்காரம், சீனா காரம், அரிதாரம், கழற்சிக்காய்ப் பருப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய் தானிக்காய், நெல்லிமுள்ளி, இவைகளில் சுத்திசெய்யவேண்டியவைகளைச் சுத்திசெய்து சமமாய்க் கூட்டி கொடிக்கள்ளிக் கொழுந்தின் சாற்றால் 3 ஜாமம் அரைத்து குன்றிமணி அளவாகமாத்திரைகள் செய்து பசு வெண்ணெயில் தினம் காலை மாலை ஒரு மாத்திரை கொடுக்க குன்மம் (8), வயிற்று வலி, அஜீர்ணம் தீரும்.

## நவமூல நாச மாத்திரை

பூரம், தாளகம், மனோசீலை, சீனாகாரம், கல்நார் இவ்வைந்தும் சுத்திசெய்து வகைக்கு பலம் 1, சேர்த்து கொடிக்கள்ளிப்பாலால் ஒருநாள் அரைத்து எடுத்து, பசும்பால், கொடிக்கள்ளிப்பால், எலுமிச்சம்பழச்சாறு கற்றாழைச்சாறு, கையாந்தகரைச்சாறு இவைகளால் தனித்தனியே 2 ஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி தினம் காலை மாலை 2 முதல் 4 மாத்திரை அனுபானத்தில் கொடுக்க நவமூலமும் குணமாகும்.

## சட்ரச மாத்திரை

சுத்திசெய்த அப்பிரேகப் பொடி பலம் 6, சுத்திசெய்த காரீயம் சுத்திசெய்த வெள்ளீயம் வகைக்கு பலம் 2, இம்மூன்றும் சேர்த்து உருக்கி கண்ட இடைக்கு கால்பங்கு சுத்திசெய்த ரசமும் ரசத்துக்கு இரட்டிப்பு சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகமும் சேர்த்து தைவேளைச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து உலர்த்தி சீலைமண்செய்த காசி குப்பியில் செலுத்தி பளப்பக்கல்லால் மூடி சீலைமண்செய்து, ஒரு சட்டியில் 5 விரற்கடை மணலைக் கொட்டி அதன்மேல் குப்பியை வைத்து அதன் கழுத்துவரையில் மணலைப்போட்டு தீபாக்கினியாய் ஒருஜாமமும்

காடாக்கினியாய் ஒரு ஜாமமும் எரித்து ஆற்றி எடுத்து அந்த இடைக்கு சுத்தி செய்த கந்தகமுஞ் சேர்த்து பொற்றலை கையாந்தகரைச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து பில்லை தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து வராகபுடம் போடவும். இவ்விதமாகவே சிவக்கும் வரையிலும் ஒவ்வொரு புடத்திலும் இடைக்கு சரி கந்தகஞ்சேர்த்து மேற்படி சாற்றால் அரைத்து புடம்போடவேண்டியது. சிவந்தபிறகு கண்ட இடைக்குப்பாதி சுத்திசெய்த லிங்கஞ்சேர்த்து முலைப்பாலால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி தினம் காலை, மாலை ஒரு மாத்திரை, பொன் முசுட்டைவேர், சுக்கு, மிளகு, திப்பிலி, முத்தக்காசு, மூங்கிலரிசி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல் இவைகளைச் சமமாக சேர்த்துக் காய்ச்சின கசாயத்தில் கொடுக்க பிரமேகங்கள் (21), நீரிழிவு குணமாகும்.

## தாதுபுஷ்டி சுவர்ண மாத்திரை.

தங்கபஸ்மம், மதனபூ, அபின், கிராம்பு, சாதிக்காய், மராட்டிமொக்கு, சாம்பிராணி பதங்கம், முருங்கைவித்து, ஆலவித்து, அரசு வித்து, அத்திவித்து, அதிமதுரம், இவைகள் 12-ம் வகைக்கு விராகனிடை 5, சேர்த்து முருங்கைப்பூச்சாற்றால் அரைத்து (5 கிறேன்ஸ் இடையுள்ள மாத்திரைகள் செய்யவும் அல்லது) பெரிய குன்றிமணி அளவு மாத்திரைகளாக்கி தினம் காலை மாலை ஒவ்வொரு மாத்திரைகளாகசாப்பிட்டு உடனே பசும்பாலில் முருங்கைப்பூவைப் போட்டு காய்ச்சி போதுமான பாலைச்சாப்பிட்டு வந்தால், விந்து ஊறி தம்பன சக்தியுண்டாகி தினம் 100 ஸ்திரீகளுடன் போகஞ்செய்தாலும் விந்து விடாது. ஸ்திரீகள் நடுங்குவார்கள். இந்த மாத்திரையைச் சாப்பிட்டால் சிலருக்கு கிறுகிறுப்பு மயக்கம் உண்டாகும். ஆதலால் அவர்கள் குறைந்த அளவில் சாப்பிடவேண்டியது.

## பூர்ண சந்திரோதய மாத்திரை

ரசம், கந்தகம், சீனாக்காரம், சங்கு, மனோசீலை, வெங்காரம், கருநாவி, பவளப்புற்று இவ்வெட்டும் சுத்திசெய்து வகைக்கு பலம் 1 சேர்த்து பசலைச்சாற்றால் ஒரு நாளும், கற்றாழைச்சாற்றால் ஒரு நாளும் அரைத்து பில்லை செய்து உலர்த்தி ஓர் சட்டியில் போட்டு சட்டியால் மூடி சீலைமண் செய்து ஒரு நாள் தீபாக்கினியாய் எரித்து எடுத்து அத்துடன் தங்கப்பொடி விராகனிடை 2, லிங்கம், வெள்ளிப்பொடி, பவளம், நல்லமுத்து, ருத்திராக்ஷம், அக்கிராகாரம், வகைக்கு விராகனிடை 1, சேர்த்து முலைப்பாலால் ஒரு நாளும், மாதுளம்பூச்சாற்றால் ஒரு நாளும், கருந்துளசிச்சாற்றால் 3நாளும் அரைத்து நீண்ட மாத்திரைகளாகச் செய்து உலர்த்தி 20 நாள் நெல்லுக்குள் வைத்து எடுத்து அனுபானத்திலுரைத்துக் கொடுக்க சன்னி (13), தோஷம், நீரிழிவு, ஈளை, அரோசகம், சூலை, மகோதரம், கவுசி, பாண்டு, சகல வாதம் குணமாகும்.

## சந்திரோதய மாத்திரை

தங்கரேக்கு விராகனிடை 1, சுத்தி செய்த ரசம் விராகனிடை 8 சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம் விராகனிடை 16, இவைகளைச் சேர்த்து சிவப்பு பருத்திப்பூவின் சாற்றாலும், கற்றாழைச்சாற்றாலும் வகைக்கு ஒரு ஜாமம் அரைத்து உலர்த்தி சீலைமண் செய்த காசிக்குப்பியில் போட்டு பளப்பக்கல்லால் மூடி சீலைமண் செய்து ஒரு சட்டியில் 5 விரற்கடை மணலைப்போட்டு அதன் மேல் மேற்படி குப்பியை வைத்து பிறகு குப்பியின் கழுத்து வரையிலும் மணலைக்கொட்டி சட்டியால் மூடி சீலை மண் செய்து தீபாக்கினியாய் 3நாள் எரித்து ஆறவிட்டு குப்பியை உடைத்து மருந்தை எடுத்து அத்துடன் சாதிக்காய், பச்சைக்கர்ப்பூரம், கிராம்பு, சமுத்திரசோகை விதை வகைக்கு விராகனிடை 1, கஸ்தூரி 4குன்றிமணி இடை இவைகளை எல்லாஞ்சேர்த்து வெற்றிலைச்சாற்றால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி தினம் காலை மாலை தாம்பூலத்துடன் 1 முதல் 2 மாத்திரைகள் சாப்பிட்டால் தாதுபுஷ்டி உண்டாகி அநேக ஸ்திரீகளை போகிக்க சக்தி உண்டாகும்.

## ராம பாண மாத்திரை

சுத்திசெய்த ரசம் விராகனிடை 1, சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம் விராகனிடை 3, வெங்காரம், மிளகு, வெள்ளைப்பாஷாணம் வகைக்கு 4 குன்றிமணி இடை, சுத்தி செய்த நேர்வாளப்பருப்பு 20 குன்றிமணி இடை இவைகளில் கந்தகமும் ரசமுஞ்சேர்த்து முதலில் அரைத்து பிறகு மற்ற சரக்குகளைச் சேர்த்து புளியின் இலைச்சாற்றால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகள் செய்து தினம் காலை மாலை 1 முதல் 2 மாத்திரை துளசிச்சாற்றில் கொடுக்க விஷசுரம், தினசுரம், 2-நாள், 3-நாள், 4-நாள் முறைசுரங்கள், சீதசுரம், தாகசுரம் குணமாகும். பால் அல்லது தயிர் சாதம் சாப்பிடலாம்.

## மகா சுராங்குச மாத்திரை.

சுத்தி செய்த ரசம், சுத்தி செய்த கந்தகம், சுத்தி செய்த வெள்ளைப் பாஷாணம் வகைக்கு பலம் 1, ஊமத்தை விதை பலம் 3, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு பலம் 12, இவைகளை சுத்த ஜலத்தால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகள் செய்து 1 முதல் 2 மாத்திரை அனுபானத்தில் கொடுக்க சகல முறை சுரங்களும் விஷசுரமும் குணமாகும்.

## மகாரத்வஜெ மாத்திரை

தங்கரேக்கு விராகனிடை 1, சுத்தி செய்த ரசம் விராகனிடை 8, சுத்திசெய்த நெல்லிக்காய், கந்தகம் விராகனிடை 16, இவைகளில் ரசமும்

கந்தகமும் முதலில் அரைத்து பிறகு தங்கரேக்கைச் சேர்த்து சிவப்பு பருத்திப் பூவின் சாற்றாலும், கற்றாழைச்சாற்றாலும் வகைக்கு 3நாள் அரைத்து உலர்த்தி சீலைமண் செய்த காசிக்குப்பியில் போட்டு வாயைப் பளப்பக்கல்லால் மூடி சீலைமண் செய்து, 5 விரற்கடை மணலை ஓர் சட்டியில் போட்டு அதின் மேல் மேற்படி குப்பியை வைத்து பிறகும் குப்பியின் கழுத்து வரையில் மணலைப் போட்டு வேறு சட்டியால் மூடி சீலைமண் செய்து தீபாக்கினியாய் 3நாள் எரித்து ஆறவிட்டு பிறகு குப்பியை உடைத்து மருந்தை எடுத்தது ஒரு பாகமும், பச்சைக்கர்ப்பூரம், கிராம்பு, வால்மிளகு, சாதிக்காய் வகைக்கு 4பாகமும், கஸ்தூரி 48 குன்றிமணி இடையும் சேர்த்து வெற்றிலைச்சாற்றால் அரைத்து, 1½ குன்றிமணி இடையுள்ள மாத்திரைகளாக்கி உலர்த்தி ஒன்று முதல் இரண்டு மாத்திரை தினம் காலை, மாலை சாப்பிட்டு அதன்மேல் பசும் பாலைச்சாப்பிடவும். கோதுமை, உளுந்து முதலிய மஸ்துள்ளவைகளைச் சாப்பிட தாது புஷ்டியுண்டாகும். இதைச் சாப்பிடுவதினால் புத்தியும் ஆயுசும் தேக காந்தியும் விருத்தி அடையும் விந்து ஊறும், தினம் 100 ஸ்திரீகளுடன் போகஞ்செய்ய திராணி உண்டாகும். போகஞ் செய்யுங்காலத்தில் இதைச்சாப்பிட்டால் ஸ்திரீகளுக்கு உண்டாயிருக்கும் கர்வத்தை நிவர்த்தியாக்கும் ஸ்தாவர ஜெங்கம ஜலத்தால் உண்டாகும் விஷங்கள் குணமாகும். ஈசுவரர் மரணத்தை நீக்குவது போல் இந்த மாத்திரை சகல ரோகங்களையும் நீக்கும்.

## பேதி மாத்திரை

சுத்திசெய்த லிங்கம், சுத்தி செய்த வெங்காரம், ரசபஸ்மம், ரச செந்தூரம் இவைகள் வகைக்கு பலம் 1, கல்வத்திலிட்டு விளாம்பிசின் ஜலத்தால் மை போல் அரைத்து அத்துடன் சுக்கு பலம் 2, மிளகு பலம் 1, திப்பிலி பலம் ½, இவைகளின் தூளும், சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு பலம் 10 அம்மியிலிட ஜலத்தால் மைபோல் அரைத்த மொத்தையும் சேர்த்து பிறகு எல்லாஞ்சேர்த்து மிஸ்ரித்து ½ மணிநேரம் பிசின் ஜலத்தால் அரைத்து பெரிய குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி பெரியவர்களுக்கு 2, 3 மாத்திரையும், சிறுவர்களுக்கு 1, 2 மாத்திரையும் கொடுக்க பேதியாகி வாதநீர், பித்தநீர், கபம், மேகநீர், இவைகளை வெளியாக்கும். இந்த மாத்திரைகள் ஆமணக்கெண்ணெயில் கரைத்துக் கொடுக்க வெகு சுக பேதியாகும்.

## சூலை சம்ஹாரி மாத்திரை

சுத்தி செய்த ரசகர்ப்பூரம், ரசசெந்தூரம் வகைக்கு பலம் 1, சுத்தி செய்த நெல்லிக்காய் கந்தகம் விராகனிடை 2, இவைகளை கல்வத்திலிட்டு

சங்கங்குப்பிச் சாற்றினால் 3 ஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்க. சுக்கு விராகனிடை 8, பறங்கிப் பட்டை விராகனிடை 8, நன்னாரிவேர் விராகனிடை 4, கொடிவேலி வேர் விராகனிடை 2 இவைகளை நொறுக்கிப் போட்டு ஜலமிட்டு கசாயம் செய்து வைத்துக் கொள்க. 2 முதல் 3 மாத்திரை காலையில் சாப்பிட்டு உடனே அரை சேர் கசாயஞ் சாப்பிடவும், இவ்விதமாக 4-5, நாள் காலைமாலை சாப்பிட்டுவர மேகப்பிடிப்பு, மேகசூலை, கைகால் முடக்கு, சகல வாதம், வெள்ளை விழுதல், உடம்புகடுப்பு, குடல்வாயு, குணமாகும் மேகவியாதிகளுக்கு உப்பில்லா பத்தியம், மற்றவைகளுக்கு புளி, வாயுபதார்த்தம் நீக்கிவிடவும்.

## குங்குமப்பூ மாத்திரை

குங்குமப்பூ பலம் 1, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம், கடுகுரோகிணி வகைக்கு பலம் ½, இவைகளை கல்வத்திலிட்டு மலாக்காய் சந்தணத்தூள் பலம் ½, தேவதாரக்கட்டையின் தூள் பலம் ½, இவ்விரண்டும் சேர்த்து கசாயஞ்செய்து அந்த கசாயத்தால் ஒரு ஜாமம் அரைத்து பிறகு இஞ்சி சாற்றாலும், கண்டங்கத்திரிப் பழச்சாற்றாலும், வகைக்கு ஒரு ஜாமம் தனித்தனியே அரைத்து சிறுபயிறு அளவாக மாத்திரைகள் செய்து உலர்த்தி அனுபானத்தில் ஒன்று இரண்டு மாத்திரைகள் கொடுக்க குழந்தைகளுக்குக் காணும் குளிர் சுரம், சன்னி சுரம் முதலிய சகல சுரங்களும் குணமாகும்.

## காரூணியரூப மாத்திரை

ரசபதங்கம், பவளபஸ்மம், அப்பிரேக செந்தூரம், அயக்காந்த செந்தூரம் வகைக்கு விராகனிடை 5, வால்மிளகு விராகனிடை 2½, கருவெங்க செந்தூரம் விராகனிடை 1¼, இவைகளைச் சேர்த்து கற்றாழைச் சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து பிறகு அதற்குப்பாதி சுத்தி செய்த கந்தகம், அதற்குப்பாதி சுத்தி செய்த லிங்கம் சேர்த்து கற்றாழைச் சாற்றால் அரைத்து புடம் போடவும். மேற்படி சாற்றால் ஏழு புடம் போட்டு எடுத்து லேகியம் முதலிய அனுபானத்தில் பணவிடை வைத்துச்சாப்பிட்டுவர மேகம் (20), மேகசூலை, வாயு, குஷ்டம், மேகநீரிழிவு குணமாகும். மேகநீரிழிவுக்கு நல்லமருந்து.

## தாதுபுஷ்டி பசுபதி மாத்திரை

சுத்தி செய்த கஞ்சா, அபின், முருங்கைவித்து, சாதிக்காய், முத்தக்காசு, கிராம்பு, பூனைக்காலிவித்து, பூமிசர்க்கரைக்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு,

சமுத்திராச் சோகை விதை, சாதிப்பத்திரி, சாரப்பருப்பு, எண்ணெய். வெங்காரம், வகைக்கு விராகனிடை 5, இவைகளை இடித்து வஸ்திரகாயஞ்செய்த பொடியுடன் சுத்திசெய்த லிங்கம் விராகனிடை 1, வாலை ரசம் விராகனிடை 3 பொடிசெய்து சேர்த்து, பிறகு ஒரு முற்றின தேங்காய்க்குள் போட்டு அடைத்து மூடி சாணியில் பொதிந்து உலர்த்தி சிரட்டை கருகும்படி புடம்போட்டு ஆறவிட்டு எடுத்து சிரட்டை நீக்கி மெழுகுபோல் அரைத்து புளியங்கொட்டை அளவாக மாத்திரைகளாக்கி 1 முதல் 3 மாத்திரை சீனியில் பொதிந்து சாப்பிட்டு பால் சேர் ½, கொள்ள தாதுபுஷ்டி உண்டாகும், தாதுகட்டும், புணர்ந்தால் ஸ்கலிதமாகாது.

## க்ஷமானந்த மாத்திரை

சுத்திசெய்த நெல்லிக்காய்க் கந்தகம், அரிதாரபஸ்மம், வகைக்கு விராகனிடை 30, ரசபஸ்மம் விராகனிடை 5, அப்பிரேகச் செந்தூரம் விராகனிடை 10, காரீயசெந்தூரம் விராகனிடை 15, கர்ப்பூரசலாசத்து பஸ்மம் விராகனிடை 2½, இவைகளை கல்வத்திலிட்டு அரைத்து அத்துடன் பருத்தி விரையின் பருப்பு, தேத்தாங்கொட்டை, வெண்குன்றி மணியின் பருப்பு, புளியவிதையின் மேல் தோல், கடுக்காய்ப்பூ வகைக்கு விராகனிடை 2½, மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், நிலப்பனைக்கிழங்கு, சித்திரமூலம் வேர்ப்பட்டை, வேப்பம்பிசின், வெள்வேலம்பிசின், கருவேலம்பிசின் வகைக்கு விராகனிடை 5, தென்னம்பாளையின் தூள் விராகனிடை 5, சுக்கு, மிளகு, திப்பிலி விராகனிடை 40. இவைகளை எல்லாம் ஒன்றாய் சேர்த்து இடித்து வடிக்கட்டின சூர்ணத்தைச் சேர்த்து ஆவாரை இலைச்சாற்றாலும் இலந்தை இலைச்சாற்றாலும், கொன்றை இலைச்சாற்றாலும் தனித்தனியே மூன்று நாள் அரைத்து தேத்தாங் கொட்டை அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி தினம் காலையில் ஒரு மாத்திரை தேனில் கலந்து சாப்பிட்டு மாலையில் அடியில் சொல்லிய தர்மபிரத கசாயத்தைச் சாப்பிட சகல நீரிழிவு குணமாகும்.

## தர்மபிரத கசாயம்

சுண்டைவேர், நீர்ச்சுண்டி, நீர்ப்பூலாவேர், சூரைவேர், கடலிராஞ்சிவேர், இம்பூரல்வேர், ஆவாரைவேர், பொன்முசுட்டைவேர், வில்வவேர், கோரைக்கிழங்கு, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், தேத்தாங்கொட்டை இவைகளை வகைக்கு விராகனிடை 5, சேர்த்து இடித்து ஒரு சட்டியில் போட்டு ஒருபடி ஜலம்விட்டு வேடுகட்டி 3 ஜாமம் வெய்யிலில் வைத்து பிறகு காய்ச்சி கால்படியாய் வற்றவைத்து வீசம்படி முதல் அரைக்கால்படி வரையில் தேன் விராகனிடை 1 விட்டு சாப்பிட்டுவர சகல நீரிழிவும் குணமாகும்.

## மஹாலய கசாயம்

பொன்முசுட்டைவேர், கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, மூங்கிலரிசி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல் வகைக்கு விராகனிடை 2, இடித்து 2 படி ஜலத்திலிட்டு காய்ச்சி காற்படியாக்கி அதில் ஒரு க்ஷமானந்த மாத்திரையை உறைத்துக்கொடுக்க சீயப்பிரமேகம், மதுப்பிரமேகம், நீலப்பிரமேகம், கள்ளுப்போல் நீரிறங்குகிற பிரமேகம், சதைப் பிரமேகம், அனல் பிரமேகம், வாதப் பிரமேகம், உள்ளுருக்கி, மாங்கிசப்பிரமேகம், முதலிய 21 பிரமேகங்கள் குணமாகும். 21 பிரமேகங்களின் விபரம் ரோகநிர்ணய சாரத்தில் காண்க.

## * சந்திரப்பிரபா மாத்திரை

கடல்நுரை, இந்துப்பு, சங்கு, கோழிமுட்டையின் ஓடு, முருங்கையின் வித்து இவ்வைந்தும் சமமாக சேர்த்து ஜலத்தால் அரைத்து நீண்ட மாத்திரைகள் செய்து உலர்த்திவைத்துக் கொள்க. தினம் காலை மாலை ஜலத்தால் மாத்திரையை உறைத்து கண்ணிலிட பூவிழுதல், சதை வளர்தல், முதலியவைகள் குணமாகும்.

## விருஷபத்வஜெ மாத்திரை

அரிதாரம், ரசகர்ப்பூரம், ரசபஸ்மம், ரசசெந்தூரம், லிங்கம், நெல்லிக்காய் கந்தகம், கருநாவி, இவைகளைச் சுத்திசெய்து வகைக்கு பலம் 1 சேர்த்து அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, கிராம்பு, ஏலம், கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல் வகைக்கு பலம் 1 சூர்ணித்து வஸ்திரகாயஞ்செய்த பொடியைச் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் ஒரு ஜாமமும் முலைப்பாலால் 2 ஜாமமும், கற்றாழைச்சாற்றால் 4 ஜாமமும், கொன்றைப்பூச் சாற்றால் 4 ஜாமமும் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகள் செய்து தேனிலிட சன்னி, தோஷம், சுரம் முதலிய அநேக ரோகங்கள் குணமாகும். வியாதிக்குத் தக்க பத்தியமாம்.

# சர்பத்துகள்

## தமரத்தம்பழ சர்பத்து

பழுத்த தமரத்தம்பழங்கள் 100 இடித்து பிழிந்து எடுத்தச்சாறும். தித்திப்பு மாதுளம்பழங்கள் 100 பிழிந்து எடுத்தச்சாறும், ஓர் பழகின மண் பாத்திரத்திலிட்டு அத்துடன் சூரத்து பன்னீர் படி ½, குங்குமப்பூ விராகனிடை ½, மேற்படி பன்னீரால் அரைத்து சேர்த்து, பிறகு அத்துடன் சீனாக்கற்கண்டு அல்லது சீனி வீசை ஒன்று சேர்த்து காய்ச்சி தேன் பதத்தில் இறக்கி சுத்தமான சீசாவிலிட்டு வைத்துக் கொள்க. தினம் காலை மாலை 5 விராகனிடை வீதம் சாப்பிட்டுவர பித்த வாதரோகம், வாதசிலேஷ்மரோகம், வாந்தி, நேத்திரரோகம், பித்த ரோகம், சிரஸ்தாபரோகம் குணமாகும். தாதுபுஷ்டி உண்டாகும்.

## விளாம்பழ சர்பத்து

கறுப்பு நிறமுள்ள சதையுடையதும் பழுத்ததுமான விளாம்பழங்கள் 30. உடைத்து உள்ளிருக்கும் சதையை ஓர் மண் பாத்திரத்திலிட்டு அத்துடன் சுத்த ஜலம் படி 2 சேர்த்து செவ்வையாய் பிசைந்து காய்ச்சி ஒரு படியாக்கி ரவா சல்லடையால் வடிக்கட்டி அத்துடன் சீனி அல்லது சீனாக்கற்கண்டு வீசை ஒன்று சேர்த்து கொஞ்சங்காய்ச்சி பிறகு அத்துடன் ஏலக்காயின் அரிசி விராகனிடை 1, குங்குமப்பூ விராகனிடை ½, சுத்த ஜலத்தால் அரைத்து சேர்த்து பிறகு தேன் பதத்தில் காய்ச்சி சீசாவில் போட்டு வைத்துக்கொள்க. தினம் காலை மாலை 5 விராகனிடை வீதம் சாப்பிட்டுவர சுவாசம், காசம், சகல கபரோகங்கள், பித்த ரோகங்கள், தாகம், வாந்தி, ஒக்காளம், குணமாகும். பசி உண்டாகும்.

## நன்னாரிவேர் சர்பத்து

நன்னாரிவேர் வீசை 1, கசகசா சேர் 1, சுத்தி செய்த வாதுமை பருப்பு சேர் ½, சீனி வீசை 2, இவைகளில் நன்னாரிவேரை நொறுக்கி இருதூணி ஜலத்திலிட்டு எரித்து 2 படியாக்கி அத்துடன் கசகசாவும் சுத்தி செய்த வாதுமைப் பருப்பும் பசும்பால் விட்டு மைபோல் அரைத்து பசும்பாலில் கரைத்து வடிக்கட்டி சேர்த்து பிறகு சீனி சேர்த்து காய்ச்சி தேன் பதத்தில் பாகு செய்து சீசாவிலிட்டு வைத்துக் கொள்க. ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 2 தடவை சாப்பிட்டுவர நீர்க்கட்டு,

மேககாங்கை, பிரமேகம், மேகம், கை கால் எரிவு, ஸ்திரீ போகத்தாலுண்டாகும் உஷ்ணம் குணமாகும்.

## செம்மரத்தம் பூ சர்பத்து

100 செம்பரத்தம்பூக்களை ஓர் ஜாடியில் போட்டு அதில் ½ படி எலுமிச்சம்பழச்சாற்றைச் சேர்த்து ஒரு நாள் வைத்து பிறகு பிசைந்து பிழிய சாறு வரும். இதை வைத்துக் கொள்க. கெவடி (பலகரை) பலம் ½, சுத்தி செய்து ஒரு பீங்கானில் போட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு வெய்யிலில் ஒரு நாள் வைக்க மேற்படி பலகரை சாற்றுடன் கரைந்து போயிருக்கும். அதை வடிக்கட்டி மேற்படி செம்மரத்தம் பூச்சாற்றுடன் சேர்த்து ஓர் கற்சட்டியில் போட்டு அத்துடன் சீனாக்கற்கண்டு சேர் 2. பொடி செய்து சேர்த்துக் காய்ச்சி பாகு பதத்தில் இறக்கி வைத்துக்கொள்ளவும். தினம் காலை மாலை ஒரு அவுன்ஸ் வீதம் சாப்பிட்டு வர தாது புஷ்டியும், ரத்த விருத்தியும், தேகத்தில் தேஜசும் உண்டாகும். உஷ்ணந்தணியும்.

# மொர்பாக்கள்.

## மாங்காய் மொர்பா

நாரில்லாததும், முற்றினதும், பெரியதும், சிறுகொட்டையுள்ளதுமான பத்து மாங்காய்களை எடுத்து வெந்நீரில் 2½, மணி நேரம்

---

☞ நார்த்தம்பழம், எலுமிச்சம்பழம், மாதுளம்பழம் முதலிய சகல பழங்களின் சர்பத்துகள் செய்யும்பொழுது அந்த அந்த பழங்களின் சாறு படி 1க்கு சீனி அல்லது கற்கண்டு வீசை 2 வீதம் சேர்த்து தேன் பதத்தில் காய்ச்சி அந்த அந்த பழத்தின் சர்பத்துகள் செய்துகொள்ளவும். நன்னாரிவேர், சந்தணம், வில்வவேர் முதலிய வேர்களின் சர்பத்துகள் செய்யும்பொழுது அவைகளை சீவி அல்லது இடித்து ஜலத்திலிட்டுக்காய்ச்சி கசாயமாக்கி அத்துடன் சீனி அல்லது கற்கண்டு சேர்த்து தேன் பதத்தில் காய்ச்சி வைத்துக் கொள்ளவும். இப்படியே ரோஜாபுஷ்பம், ஆவாரம்புஷ்பம் முதலிய புஷ்பங்களின் சர்பத்துகள் செய்து கொள்ளவும். ஆனால் செம்மரத்தம்பூ சர்ப்பத்து செய்யும் முறை வேறு.

ஊறவைத்து எடுத்து துணியால் துடைத்து கத்தியால் மேல்தோலைச் சீவி கொட்டைகளைப் போக்கி சிறுதுண்டுகளாக்கி காற்றாட அரைமணிநேரம் வைத்து பிறகு ஒரு வீசை நெய்யில் போட்டு அரைமணி நேரம் வேகவைத்தாவது அல்லது 4 சேர் பசும்பாலில் 2 சேர் ஜலம் சேர்த்து அதில் போட்டு ஒருமணி நேரம் அடுப்பின் மேல் வைத்து காய்ச்சி இறக்கி ஒரு மணிநேரம் ஆறவைத்து பிறகு ஆறு சேர் சீனாக்கற்கண்டை பாகு செய்து அதில் போட்டு பிறகு முக்கால் விராகனிடை குங்குமப்பூவை மேற்படி பாகுவிட்டு அரைத்துச் சேர்க்கவும். இதை ஒரு வாயகன்ற மண்ஜாடியில் போட்டு 3 மடிப்புள்ள வெள்ளைத் துணியால் வாயைக்கட்டி பிறகு மேல் மூடியால் மூடி 3 சீலைமண் செய்து ஒரு கஜம் ஆழம் குழி தோண்டிப் புதைத்து, 40 நாள் சென்ற பிறகு எடுத்து வாயைத் திறந்து ஒரு மெல்லிய துணியால் மறு படியும் வாயைக்கட்டி ஒரு நாள் காற்றாட வைத்து எடுத்து காலையில் 2-3 துண்டுகளைச் சாப்பிட்டுவர இரத்தவிருத்தியும் தாதுபுஷ்டியும் உண்டாகும்.

## நெல்லிக்காய் மொர்பா.

காயப்படாததும், முற்றினதும், நாரில்லாததும், பெரிய நெல்லிக்காய்கள் 2 படி கொண்டுவந்து ஒவ்வொருகாய் முழுமையும் ஈச்சமுள்ளால் குத்தி வைத்துக்கொள்க. பிறகு கால் படி சுண்ணாம்புக்கல்லில் இரண்டுபடி ஜலம் விட்டு தெளிந்த நீரும் மோரும் சமமாய் கலந்து அதில் மேற்படி நெல்லிக்காய்களைப் போட்டு கால் நாழிகை வேகவைத்து எடுத்து தனி மோரில் போட்டு அலம்பி எடுத்து துணியால் துடைத்து, 7 சேர் சீனியைப் பாகு செய்து அதில்போட்டு அத்துடன் குங்குமப்பூ விராகனிடை அரை, மேற்படி பாகால் அரைத்து சேர்த்து, ஒரு மண் ஜாடியிலிட்டு 3மடிப்புள்ள துணியால் வாயைக் கட்டி 3 நாள் வெய்யிலில் வைத்து பிறகு மேல் மூடியால் மூடி சீலைமண்செய்து, 15 நாள் நெல்லுக்குள் வைத்து எடுத்து வாயைத் திறந்து மெல்லிய துணியால் மறுபடியும் வாயைக் கட்டி ஒரு நாள் காற்றாட வைத்து பிறகு காலை மாலை 1 முதல் 3 நெல்லிக்காய்வீதம் சாப்பிட்டுவர அரோசகம், பித்தம், வாந்தி, மேகச்சூடு, மூலச்சூடு, கை கால் எரிவு குணமாகும்.

## இஞ்சி மொர்பா

5 வீசை தேரினதும், நாரில்லாததுமான இஞ்சியைக் கொண்டுவந்து அதன் தோலை நீக்கி பில்லைகளாக நறுக்கி ஜலத்திலும் மோரிலும் தனித்தனியே 5 நிமிஷம் ஊறப்போட்டு எடுத்து பிறகு இளநீரில் 5 நாழிகை ஊறப்போட்டு எடுத்து காற்றாட கொஞ்சம் உலரவைத்து, (பிறகு

எலுமிச்சம்பழச்சாற்றிலும் 5 நாழிகை ஊறவைக்கலாமென்று சில கிரந்தங்களில் சொல்லியிருக்கின்றது) 10வீசை கற்கண்டுடன் அரை புட்டி பந்நீரும் ஒரு படி ஜலமும் சேர்த்து பாகு செய்து ஒரு மண் ஜாடியிலிட்டு அதில் மேற்படி இஞ்சியின் பில்லைகளைப் போட்டு பிறகு ஏலக்காயின் அரிசி, சாதிக்காய், சாதிப்பத்திரி, குங்குமப்பூ வகைக்கு விராகனிடை 1½, சூர்ணித்துச் சேர்த்து ஜாடியின் வாய்க்கு வெள்ளைத் துணியைக் கட்டி மேல் மூடி சீலை மண் செய்து நெல்லுக்குள் 21 நாள் வைத்து எடுத்து வாயைத் திறந்து மெல்லிய துணியால் வாயைக் கட்டி காற்றாட 2-3 நாழிகை வைத்து பிறகு மூடியால் மூடி வைத்துக்கொள்ளவும். வாரத்துக்கு ஒரு தடவை வெய்யிலில் வைக்கவும். வெள்ளிக்கரண்டி அல்லது மரக்கரண்டியால் எடுத்து 3-4 துண்டுகளை தினம் காலை மாலை சாப்பிட்டுவர அரோசகம், சகல பித்த ரோகங்கள், பசியில்லாமை, அன்னத்துவேசம் குணமாகும்.

# குல்க்கந்துகள்

## ரோஜாப்பூ குல்க்கந்து

1000, ரோஜாப்பூக்களைக் கொண்டுவந்து காம்பு முதலியவைகளை நீக்கி இதழ்களை எடுத்துக்கொண்டு ஓர் வாய் அகன்ற ஜாடியில் போட்டு பிறகு இரண்டு வீசை கற்கண்டுத்தூளைப் போட்டு கலக்கி ஒருநாள் வைத்து, மறுநாள் ½, விராகனிடை குங்குமப்பூவை மேற்படி ரோஜாப்பூவின் கசிந்த ஜலத்தை விட்டு மை போல் அரைத்து சேர்த்து செவ்வையாய் (மரக்கரண்டியால்) கலக்கி ஒரு பெரிய பீங்கானில் போட்டு தூசிப்படாமல் மெல்லிய துணியால் மூடி வெய்யிலில் (லேகியத்தின் பதமாகும் வரையில்) வைத்து எடுத்து ஜாடியிலிட்டு தினம் காலை மாலை வீசம் சேர் வீதம் சாப்பிட்டுவர உஷ்ணம் தணியும். ரத்தவிருத்தி, தாதுவிருத்தி, தேஜசு உண்டாகும்.

## செம்மரத்தம்பூ குல்க்கந்து

100 செம்மரத்தம்பூக்களைக் கொண்டுவந்து, காம்புகளை நீக்கி அத்துடன் ஒரு வீசை கற்கண்டின் தூளைச் சேர்த்து கலக்கி பிறகு குங்குமப்பூ விராகனிடை ½, ஏலக்காயின் அரிசி, விராகனிடை 2, சுத்தி செய்த வாதுமைப் பருப்பு சேர் 1, பொடித்துப்போட்டு கலக்கி பீங்கானில் போட்டு மெல்லிய துணியால் மூடி வெய்யிலில் லேகியபதமாகும்வரையில் வைத்து எடுத்து புன்னக்காய் அளவு காலை மாலை சாப்பிட்டுவர, ரத்த விருத்தி, தாதுவிருத்தி, தேஜசு உண்டாகும்.

## ஆவாரம்பூ குல்க்கந்து

2 மரக்கால் உலராததும் காம்பு முதலியவைகள் இல்லாததுமான ஆவாரம்பூக்களை ஓர் ஜாடியிலிட்டு ஒன்றரைவீசை சீனாக்கற்கண்டை தூள் செய்து அத்துடன் சேர்த்து பிறகு ஏலக்காயின் அரிசி, சாதிக்காய், வால்மிளகு வகைக்கு விராகனிடை 2, குங்குமப்பூ விராகனிடை 1, இவைகளை சூரத்துப் பந்நீர் விட்டு மைபோல் அரைத்து அத்துடன் சேர்த்து கலக்கி ஒரு நாள் மூடிவைத்து பிறகு ஒரு பெரிய பீங்கானிலிட்டு மெல்லிய துணியால் மூடி லேகியபதமாகும் வரையில் வெய்யிலில் வைத்து எடுத்து ஒரு ஜாடியிலிட்டு வைத்துக்கொள்ளவும். வெய்யிலில் வைக்கும்பொழுது தினம் கிளறிக்கொடுக்கவேண்டும். தினம் காலை மாலை 20நாள் பாக்களவு சாப்பிட்டுவர மேகச்சூடு, கை கால் எரிவு, மூலச்சூடு, அஸ்திகாங்கை, மேகம், நீர்எரிவு, வெட்டை, வெள்ளை குணமாகும்.

## முருங்கைப்பூ குல்க்கந்து

3 மரக்கால் முருங்கைப்பூக்களைக் கொண்டு வந்து காம்பு முதலியவைகளை நீக்கி ஒரு ஜாடியிலிட்டு அத்துடன் 2 வீசை சீனாக்கற்கண்டை பொடித்துப்போட்டு கலந்து ஒரு நாள் மூடிவைத்து மறுநாள் ஒரு பீங்கானிலிட்டு அத்துடன் வால் மிளகு, ஏலக்காயின் அரிசி, சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்கு விராகனிடை 2, சூர்ணித்து சேர்த்து கலக்கி அத்துடன் சுத்திசெய்த வாதுமைப் பருப்பு சேர் 1, சேர்த்து லேகியபதமாகும் வரையில் வெய்யிலில் வைத்து எடுத்து ஓர் ஜாடியிலிட்டு வைத்துக்கொண்டு தினம் இரண்டு கொட்டைப்பாக்களவு காலை மாலை சாப்பிட்டுவர தாதுபுஷ்டி உண்டாகும். விந்துகட்டும், ஸ்திரீபோகத்தாலுண்டாகும் உஷ்ணம் தணியும்.

# பஸ்மங்கள் - சுண்ணங்கள்

## வெள்ளி பஸ்மம்

சுத்தி செய்த வெள்ளியை அச்சமாய் தகடுகளாகத்தட்டி ஈணாத வாழைமரத்தடியில் சொருகி வைத்து 15 நாள் சென்ற பிறகு (பார்த்தால் தகடுகளின் மேல் முட்டைகள் கிளம்பியிருக்கும்) எடுத்து குப்பைமேனிச்சாற்றால் அரைத்து பில்லைகளாகத்தட்டி உலர்த்தி ஓர் அகலில்வைத்து அகலால்மூடி சீலைமண் செய்து 15 எருவில் புடம்போட பஸ்மமாகும். குன்றிமணி இடை பசும்வெண்ணெயில் கலந்துகொடுக்க அரையாப்பு, கொருக்கு, கை கால் பிடிப்பு, சகல மேகங்கள் குணமாகும். இச்சாபத்தியம்.

*வேறு முறை:*— செம்முள்ளி அல்லது உப்பிலாங்கொடி இலையை அரைத்து சுத்தி செய்த வெள்ளித்தகடுகளுக்கு கவசஞ்செய்து ஓட்டிலிட்டு சீலைமண் செய்து கஜபுடம் போட பஸ்மமாகும். *வேறுமுறை:*— சுத்தி செய்த வெள்ளியை ராவின பொடியை முள்ளிக்கீரைச்சாற்றால் 3 ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து ஒரு வராகபுடம் போடவும். இவ்விதமாய் சிவப்பு அம்மான் பச்சரிசிச் சாற்றால் அரைத்து ஒரு புடம் போட பஸ்மமாகும். *வேறு முறை:*— ஜெரிகை வெள்ளியை உருக்கி உருக்குவாயில் மகிழம்பூச்சாறு அல்லது மனோசீலையைப் பொடிசெய்து கொடுக்க வெள்ளி வெட்டையாகும். அதை எடுத்து மேற்படி சாற்றால் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்திக் கொள்க. முக்காவேளை வேரை மேற்படி சாற்றால் அரைத்து அப்பில்லைகளுக்கு கவசமிட்டு குகையில் வைத்து சீலைமண் செய்து கஜபுடம்போட பஸ்மமாகும். ஒன்று முதல் இரண்டு குன்றிமணி இடை வெண்ணெயிலாவது தேனிலாவது கொடுக்க காசம், ரத்தகாசம், மந்தாரகாசம், மூலம், மேகம், நீர்சுரப்பு, முதலியவைகள் குணமாகும். *வேறுமுறை:*— ஒரு பலம் சோனாமுகியை ஆலம்பாலால் அரைத்து சுத்தி செய்த வெள்ளித்தகடுகளுக்கு கவசஞ்செய்து ஓட்டிலிட்டு ஓட்டால்மூடி சீலைமண் செய்து வராகபுடம் போடவும். இவ்விதமாய் 14 புடம் போட வெகு திவ்வியமான பஸ்மமாகும். ஒரு குன்றிமணிஇடை காலை மாலை அனுபானத்தில் கொடுக்க மேகம் (20), பிரமேகம் (21), மூத்திரரோகம் (14), கிரிச்சரம் (4), அஸ்தி சுரம் முதலியவைகள் குணமாகும். பசும் வெண்ணெயில் கொடுக்க தாதுபுஷ்டி உண்டாகும்.

## தங்க பஸ்மம்

தங்கப்பொடியை சிவப்பு அம்மான் பச்சரிசி இலைச்சாற்றால் 4 ஜாமம் அரைத்து பில்லைத் தட்டி உலர்த்தி கடம்பு இலையாவது அல்லது உப்பிலாங்கொடி இலையையாவது அரைத்து அப்பில்லைகளுக்கு கவசமிட்டு ஓட்டிலிட்டு சீலைமண் செய்து கஜபுடம் போட பஸ்மமாகும். வேறுமுறை - பனித்தாங்கிப் பூண்டை அரைந்து தங்கங்களுக்கு கவசமிட்டு ஓட்டிலிட்டு சீலைமண் செய்து கஜபுடம் போட பஸ்மமாகும். ஒரு குன்றிமணி இடை எடுத்து அனுபானத்தில் கொடுக்க காசம், சுவாசம், க்ஷயம், ஈளை, கபரோகங்கள், மேகம், சூலை, குன்மம், மகோதரம், வாயு, குஷ்டம், நீராம்பல், நீரிழிவு, வெட்டை, பித்தம், கருமேகம், முதலிய அநேக வியாதிகள் தீரும். வெண்குஷ்டத்துக்கு - சவுரி இலையின் தனிச்சாறு படி 2, எடுத்து ஓர் கல்சட்டியில் போட்டு வெய்யிலில் வைத்து மெழுகுபோல் வரும்போது ஆடாதொடை இலைகளைச் சேர்த்து மெழுகுபோல் அரைத்து அத்துடன் புனுகு பலம் ¼, மேற்படி சுவர்ண பஸ்மம் விராகனிடை 2, சேர்த்து அரைத்து நெல்லிக்காய் போல் உருட்டி இளம்பதமாய் உலர்த்தி சுய

நல்லெண்ணெயில் போட்டு தினம் அந்தி சந்தி ஒவ்வொரு உருண்டையாக 6 மாதம் சாப்பிட்டால் வெண்குஷ்டம் தீரும். மேற்படி மருந்து ஊறும் எண்ணெயால் 8 நாளுக்கு ஒரு தடவை அப்பியங்கன ஸ்நானஞ்செய்து வரவும். பத்தியம்—சையோகமாகாது. வேறுமுறை:— தங்கத்தகடுகளுக்கு எருக்கம் விதையை வாய் நீரால் அரைத்து கவசமிட்டு ஓட்டிலிட்டு சீலைமண் செய்து வராகபுடம் போட்டு எடுத்து நத்தைச்சூரிவிதையை அரைத்து கவசமிட்டு ஓட்டிலிட்டு சீலைமண் செய்து வராக புடம் போட பஸ்மமாகும். மேற்படி வியாதிகள் குணமாகும். வேறுமுறை:— தங்கப்பொடியை உப்பிலாங்கொடி இலைச்சாற்றால் 3ஜாமம் அரைத்து ஓட்டிலிட்டு சீலைமண் செய்து புடம் போடவும். 2-3 புடம் போட திவ்விய பஸ்மமாகும். வேறு முறை:— தங்கம் 16 விராகனிடை உருக்கி, உருக்குவாயில் சுத்தி செய்த வெள்ளீயம் விராகனிடை 1, கொடுக்க வெட்டையாகும். அதைப் பொடிசெய்து எலுமிச்சம் பழச் சாற்றால் அரைத்து மொத்தை செய்துகொள்க. சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம் விராகனிடை 17, பொடிசெய்து பாதி பொடியை ஒரு அகலில் போட்டு அதன் மேல் மேற்படி மொத்தை வைத்து அதன் மேல் பாக்கி பாதி கந்தகப் பொடியைப் போட்டு அகலால் மூடி 7சீலைமண் செய்து தரையில் குழிநோண்டி எருவை அடக்கி அதன் மேல் மேற்படி அகலை வைத்து அதன்மேல் எருவை அடக்கி புடம்போடவும். இவ்விதமாய் 7 தடவை புடம் போட வெகு நல்ல பஸ்மமாகும். ஒவ்வொரு புடத்திலும் மேல் சொல்லியபடி கந்தகத்தைச் சேர்த்து வரவும். (உருக்கு வாயில் மனோசீலையைக் கொடுத்தும் வெட்டை யாக்கலாம்). தங்கபஸ்மத்தில் கால் குன்றிமணி இடை அனுபானத்திலிட புத்தி, ஸ்மரணம், வெண்குஷ்டம், மேகம், குஷ்டம் முதலிய அநேக கொடிய ரோகங்கள் குணமாகும். பசும் வெண்ணெயில் கலந்து சாப்பிட்டு பாலும் அன்னமும் சாப்பிட்டு வர தேகம் பலக்கும், விந்து ஊறும், தாதுகட்டும்.

## மகா தாளக பஸ்மம்

வெடியுப்பு பலம் 10, புளி பலம் 8, இவ்விரண்டும் இடித்து ஓர் சாண் அகலம் அடைத்தட்டி ஒரு ஓட்டிலிட்டு அடுப்பின் மேல் வைத்து எரிக்கவும். எரிக்கும்போது அடுப்பின் சமீபத்திலிருக்கக்கூடாது. ஏனெனில் திடீரென்று தீப்பற்றி கரியாகிவிடும். சமீபத்திலிருந்தால் மோசம் நேரிடும். அப்படி கரியான பிறகு அதை சூர்ணித்து மறுபடியும் வறுக்க பஸ்மமாகும்.

அதை ஒரு பீங்கானில் (China cup) போட்டு மூடிசீலை மண் செய்து சேறு உள்ள இடத்தில் நோண்டி புதைத்து வைக்கவும் 10நாள் அல்லது ஜெய நீராகும் வரையில் ஈரங்காக்க வேண்டும். ஜெயநீரான பிறகு ஒரு பலம் சுத்தி செய்த தாளகத்தை ஓர் சட்டியிலிட்டு அதை முழுகும்படி ஜெயநீரை ஊற்றி காய்ச்சி கொதிக்கும் போது தாளகத்தைப் புரட்டிப் புரட்டிக் கொடுக்கவும். இவ்விதமாய் செய்ய அது கறுத்துப்போகும். அதை எடுத்து ஜலத்தால் அலம்பவும். இவ்விதமாய் 3 தட்வை செய்த பிறகு உலர்த்தி எடுத்து ஜெயநீரால் 2ஜாமம் அரைத்து தட்டையாய் சல்லி அளவுக்கு பில்லைகள் செய்து உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இப்போது முத்து சிப்பிகளை ஓர் எருவின் மேல் பரப்பி அதின் மேல் எரு வைத்து அதன் மேல் முத்துசிப்பிகள் பரப்பி இவ்விதமாக முத்துசிப்பிகளை பரப்பி புடம் போட சுண்ணமாகும். இந்த சுண்ணத்தை ஒரு சிறு அகலில் நிறைய போட்டு அமுக்கி அதன் மேல் மேற்படி தாளகப்பில்லைகளைப் பரப்பி அதன் மேல் வேறொரு அகலால் மூடி சுண்ணம் நிரப்பி வைத்து அமுக்கி சீலைமண் செய்து 5 எருவில் புடம் போடவும். இவ்விதமாய் 6எருவில் ஒரு புடமும் 8 எருவில் ஒரு புடமும் போட்டு எடுத்து சூர்ணித்து ½, குன்றிமணி இடை நெய் பனைவெல்லம் முதலிய அனுபானத்தில் கொடுக்க சுரம், பித்தசுரம், க்ஷயம், சகல கபரோகங்கள் குணமாகும். வேறுமுறை:— ஒரு பலம் சுத்திசெய்த தாளகத்தைச் செம்பருத்தி இலைச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்திக் கொள்ளவும். பூவரசம்பட்டையை கருகலாய்ச்சுட்டு ஒரு கலயத்தில் மேற்படி பூவரசம்பட்டைச் சாம்பலை படி ½ போட்டு அதன் மேல் மேற்படி வில்லைகளை வைத்து அதன் மேலும் சாம்பலைப் போட்டு ஓட்டால் மூடி சீலைமண் செய்து கோழிபுடம்போட பஸ்மமாகும். இதை அனுபானத்தில் கொடுக்க மேற்படி வியாதிகள் குணமாகும். வேறுமுறை:— ஒரு பலம் சுத்தி செய்த தாளகத்துக்கு பிரமதண்டு செடியின் (குடிகெட்டான் பூண்டு) பாலை 10 நாள் தடவி உலர்த்தவும். புளியமரத்துக்கிராணியை எரித்த சாம்பலை ஒரு சட்டியில் ½ படி போட்டு அதன் மேல் மேற்படி தாளகத்தை வைத்துசாம்பலால் மூடி 4 ஜாமம் எரிக்க பஸ்மமாகும். இதை மேற்படி வியாதிகளுக்கு அனுபானத்தில் கொடுக்கவும்.

## அய பஸ்மம்

இரும்பை ராவி சுத்திசெய்த அரப்பொடி பலம் 12, சுத்திசெய்த லிங்கம் பலம் 1, இவைகளை கற்றாழைச் சாற்றால் 2 ஜாமம் அரைத்து வில்லைத் தட்டி ஓட்டிலிட்டு ஓட்டால்மூடி சீலை மண் செய்து வராகபுடம் போடவும். இவ்விதமாய் 7புடம் போட மகா நல்ல பஸ்மமாகும். வேறு முறை - சுத்தி செய்த ரசம் பலம் 1, சுத்தி செய்த

கந்தகம் பலம் 2, இவைகள் இரண்டும் செவ்வையாய் அரைத்து பிறகு சுத்தி செய்த அயப்பொடி பலம் 3, அத்துடன் சேர்த்து கற்றாழைச்சாற்றால் 2ஜாமம் அரைத்து பில்லைகளாக்கி செம்புத்தாம்பாளத்தில் வைத்து அதன் மேல் ஆமணக்கு இலை 2-3 போட்டு வெய்யிலில் 4 நாழிகை வைத்து அந்த பில்லைகள் உஷ்ணமானவுடனே ஒரு அகலால் மூடி நெல்லுக்குள் 3நாள் வைக்கவும். நாலாம் நாள் அதை எடுத்து மைபோல் அரைத்து கொஞ்சம் எடுத்து ஜலத்தில் போட மிதக்குமாகில் சரியான பஸ்மம் முடிந்ததென்று அறிந்துகொள்ளவும். வேறுமுறை:— சுத்தி செய்த அயப்பொடியை வீழிவேர்ச்சாற்றால் 3ஜாமம் அரைத்துபில்லைத் தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து வராகபுடம் போட பஸ்மமாகும். அயச்செந்தூரத்தில் சொல்லியவியாதிகள் தீரும்.

## கல்லுப்பு சுண்ணம்

கல் சுண்ணாம்பை நீற்றி ஒரு சட்டியில் போட்டு அமுக்கி பிறகு கல்லுப்பை ஒவ்வொன்றாய் அச் சுண்ணாம்புக்குள் வைத்து மறையும் படியாய் அதன் மேல் சுண்ணாம்பைப் போட்டு அகலால் மூடி சீலை மண் செய்து வராகபுடம் போட சுண்ணமாகும். இது பலனைக்கொடுக்கும்.

## சவுக்காரச் சுண்ணம்

சவுக்காரக்கட்டியை எலுமிச்சம்பழச்சாற்றில் தோய்த்துத் தோய்த்து வெய்யிலில் 9 நாள் காயப்போட சவுக்காரத்திலுள்ள எண்ணெய் எல்லாம் த்க்கி போகும். பிறகு அதை கல்வத்திலிட்டு அதற்கு சரி எடை சீனாக்காரம், நவச்சாரம், வீரம், பூரம், சேர்த்து காலபயிரவ ஜெயநீரால் அரைத்து வில்லைத் தட்டி வெய்யிலில் உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து புடம் போட்டு எடுக்க சுண்ணமாயிருக்கும். இந்த சுண்ணத்தால் சகல சரக்குகளையும் கட்டலாம். இன்னும் அநேக காரியங்களுக்கு உபயோகப்படும்.

## கர்ப்பூர சுண்ணம்

ஒரு பலம் காய்ந்த நாட்டுக்கர்ப்பூரத்தை கல்வத்திலிட்டு கர்ப்பூரவள்ளி இலைச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து வில்லைத் தட்டி நிழலில் உலர்த்தி ஓட்டிலிட்டு சீலை மண் செய்து கோழிபுடம்போட சுண்ணமாகும். தாம்பூலத்துடன் சாப்பிட்டால் வச்சிர சரீரமாகும். சகல கபரோகங்கள் மலஜலக்கட்டு தீரும்.

---

☞ தங்கம், வெள்ளி, பித்தளை முதலிய சகல தாது பதார்த்தங்களை பஸ்மமாக்க வேணுமாகில் மனோசிலை, கந்தகம் இவ்விரண்டுஞ் சேர்த்து எருக்கம்பாலால் அரைத்து தங்கம் முதல் சகல தாதுபதார்த்தங்களின் தகடுகளுக்கு கவசமிட்டு 12 கஜபுடம் போட பஸ்மமாகும்.

## முத்து சுண்ணம்

ஒரு பலம் நல்லமுத்தை கல்வத்திலிட்டு கோழிமுட்டையின் மஞ்சள் கருவால் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து குக்குடபுடம் போட சுண்ணமாகும். வெற்றிலைக்குத் தடவி தாம்பூலத்தைத் தரித்தால் பல் இறுகும். கபரோகங்கள் (96) தீரும் அன்றியும் பிரமேகங்கள், நீரிழிவு தீரும்.

## லகு வெள்ளீயப் பஸ்மம்

பாலரசம் அல்லது சுத்தி செய்த ரசம் பலம் 1, சுத்தி செய்த வெள்ளீயம் பலம் 1, கல்வத்திலிட்டு தொந்தித்து பிறகு கர்ப்பூரசலாசத்து பலம் 1, அத்துடன் சேர்த்து கல்சுண்ணாம்பு தெளிவு நீரால் ஒரு ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து 30 எருவில் புடம் போட்டு எடுத்து மறுபடியும் மேற்படி நீரால் அரைத்து 2 புடம் 50 எருவில் போட பஸ்மமாகும். மாதுளம்பூ பலம் 2, சீரகம் பலம் 2, உலர்த்தி சூர்ணித்து திரிக்கடி சூர்ணத்தில் பணவிடை பஸ்மம் வைத்து நெய்யில் தினம் 2 வேளை ஒரு மண்டலம் சாப்பிட உள்மூலம், வெளிமூலம், ரத்தமூலம், எலும்புருக்கி, சீழ்மூலம், மேகமூலம், பித்தமூலம், நவமூலமும் குணமாகும். தாதுவிருத்தியாகும், பத்தியம் மொச்சை, பூசணி நீக்கவும். வேறுமுறை:— ஆடுதின்னாப்பாளைவேரும், வெண் தோன்றிக்கிழங்கும், சமமாகச் சேர்த்து அரைத்து சுத்தி செய்த வங்கத்தகடுகளுக்கு கவசமிட்டு ஓட்டிலிட்டு சீலைமண் செய்து கஜபுடம் போட பஸ்மமாகும். அனுபானத்திலிட மேற்படி வியாதிகள் குணமாகும்.

## கந்தக பஸ்மம்

சிறு சின்னி இலையை அரைத்தாவது, புளி நருளை இலையை அரைத்தாவது, மாங்காய் அளவு எடுத்து அதற்குள் சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகத்தை வைத்து சீலைமண் செய்து குக்குடபுடம் போட பஸ்மமாகும். வேறுமுறை:— மரதம்பட்டையை உலர்த்தி எரித்து சாம்பலாக்கி ஒரு கலயத்தில் கால் படி சாம்பலைப் போட்டு அதன்மேல் சுத்தி செய்த நெல்லிக்காய் கந்தகத்தை வைத்து அதன் மேல் மேற்படி சாம்பலை கால்படி போட்டு அகலால் மூடி தீபாக்கினியாய் (சிறு தீ) எரிக்கவும், மருந்திலிருந்து புகை எழும்புமாகில் உடனே இறக்கி ஆறவிட்டு எடுத்து குப்பைமேனிச்சாற்றால் அரைத்து பில்லைத்தட்டி ஒரு சிறு புடம் போட பஸ்மமாகும். வேறுமுறை:— சுத்திசெய்த கந்தகத்தை தாமரைக்கிழங்குச் சாற்றால் அரைத்து பில்லைத்தட்டி ஓர் சிறு தோண்டியில் போட்டு ஓட்டால் மூடி சீலைமண் செய்து பூமியில் பாதி

புதைத்து மேலே எரு அடுக்கி எரிக்க பஸ்மமாகும். வேறு முறை:— சுத்தி செய்த கந்தகத்தை கல்வத்திலிட்டு சங்கம் பழம், முருங்கைப்பூ, மிளகு தக்காளி இவைகளின் சாற்றால் தனித்தனி ஒவ்வொரு நாள் அரைத்து உலர்த்தி காசிக்குப்பியில் அடைத்து சீலைமண் செய்து உலர்த்தி தரையில் ஒரு குழியை நோண்டி அதில் பாதி மணலைப் போட்டு அதன் மேல் மேற்படி குப்பியை வைத்து மணலால் மூடி அதன் மேல் எருவை அடக்கி புடம் போட்டு எடுத்து மேகநாராயண லேகியம் அல்லது மேகத்துக்கு கொடுக்கும் இதர லேகியத்தில் பணவிடை வைத்துக்கொடுக்க மேகநாராயண லேகியத்தில் சொல்லிய ரோகங்கள் குணமாகும். உப்பில்லா பத்தியம்.

## லகு தாம்பிர பஸ்மம்

நீர்மேல் நெருப்பு என்ற மூலிகையும், நேர்வாளப்பருப்புஞ்சேர்த்து அரைத்து சுத்திசெய்த தாம்பிரத் தகடுகளுக்கு கவசமிட்டு சீலை மண் செய்து 30 எருவில் புடம் போட பஸ்மமாகும். வேறுமுறை - சுத்தி செய்த தாம்பிரப்பொடி விராகனிடை 12 சுத்திசெய்த ரசம் விராகனிடை 8, சுத்தி செய்த தாளகம் விராகனிடை 8, இவைகளை வெள்ளெருக்கம்பாலால் ஒரு நாள் அரைத்து பில்லைதட்டி, உலர்த்தி, ஓட்டிலிட்டு சீலைமண் செய்து கஜபுடம் போட்டு எடுத்து பிறகு சத்திச்சாரணை இலைச்சாற்றால் ஒரு நாள் அரைத்து கஜபுடம் போட பஸ்மமாகும். தேனில் கொடுக்க குன்மம், வாதம், கவுசி, கெண்டை, சூலை, மூலம், மகோதரம், மேகம், சுவாசம், காசம், முதலிய சகல ரோகங்களும் குணமாகும். வியாதிக்குத்தக்க பத்தியமாம்.

## துரிசு பஸ்மம்

துரிசு கட்டிக்கு அம்மான்பச்சரிசி இலையை அரைத்து கவசமிட்டு நிழலில் உலர்த்தி விடவும். மறுநாள் மேற்படி கவசம் நீக்கி மறுபடியும் இலையை அரைத்து கவசமிட்டு உலர்த்தி விடவும். இவ்விதமாய் 15 நாள் செய்து பிறகு மறுபடியும் கவசமிட்டு சீலைமண் செய்து சிறுபுடம் போட பஸ்மமாகும். வேறுமுறை:— மேற்படி இலையின் சாற்றால் துரிசுவை ஒரு நாள் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி மேற்படி இலையை அரைத்து கவசமிட்டு சீலைமண் செய்து சிறு புடம் போட பஸ்மமாகும்.

## துரிசு சுண்ணம்

துரிசு, வெள்ளீயம், ரசம் இவைகளை சுத்தி செய்து வகைக்கு விராகனிடை 10, வெடியுப்பு விராகனிடை 30, இவைகளைச் சேர்த்து வாய் நீரால் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து குக்குடபுடம் போட சுண்ணமாகும். சிவந்திருந்தால் மறுபடியும் மேற்படி உப்பைக்கூட்டி அரைத்து குக்குடபுடம் பேரட சுண்ணமாகும். துரிசு பஸ்மமும் இந்த சுண்ணமும் வெகு உபயோகமுள்ளது பலன் கொடுக்கும்.

வேறுமுறை:— சவுக்கார சுண்ணத்தை அமுரியால் அரைத்து துரிசுக் கட்டிக்கு கவசமிட்டு வெய்யிலில் வைக்க சுண்ணமாகும். இதனால் சகல சரக்குகளும் கட்டலாம். அன்றியும் இதர காரியத்துக்கும் உபயோகிக்கலாம். வேறுமுறை:-- பூனையின் மலம் பலம் 1, புறா (பக்ஷி) வின் மலம் பலம் 1, துரிசு பலம் 2, வெங்காரம் விராகனிடை 2, இவைகளை மைபோல் அரைத்து பில்லை செய்து ஓட்டிலிட்டு ஓட்டால் மூடி சீலைமண் செய்து சிறு புடம் போட்டு பிறகு மருந்தை எடுத்து பசும் தயிரால் அரைத்து ஒரு புடமும் தேன் விட்டு அரைத்து ஒரு புடமும் போட சுண்ணமாகும்.

## வங்க பஸ்மம்

ஒரு சட்டியில் சுத்தி செய்த வங்கம் பலம் 10, போட்டு அத்துடன் வெடியுப்பு ஒரு பலம் சேர்த்துக்கிண்ட தவிடுபோலாகும். வட்டத்துத்திவேரை துண்டுகளாக்கி அத்துடன் சேர்த்து வறுக்க பஸ்ம்மாகும். அனுபானத்திலிட மேகம், நீரிழிவு, மேகஊறல், முதலிய அநேக மேகவியாதிகள் குணமாகும்.

## காந்த பஸ்மம்

சிறியாநங்கையுடன் அமுரி சேர்த்து இடித்து சாறு எடுத்து அந்த சாற்றால் சுத்தி செய்த காந்தத்தை 3 நாள் அரைத்து வில்லைத் தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து கஜபுடம் போட பஸ்மமாகும். சுக்கை அரைத்து அதற்குள் பணவிடை பஸ்மம் வைத்து கொடுக்க பாண்டு, கிரகணி, பிரமேகம், மூலம் தீரும்.

## கல்லுப்பு பஸ்மம்

ஒரு சட்டியில் வன்னிமரத்துப்பட்டைத்தூளை பாதிபோட்டு அதன்மேல் கல்லுப்பை வைத்து அதன் மேல் மேற்படி பட்டைத்தூளைப் போட்டு ஓட்டால் மூடி சீலைமண் செய்து 10 எருவில் புடம்போட பஸ்மமாகும். வெல்லத்தில் கொடுக்க பார்சுவாயு, சூலை, மகோதரம், வயிற்றுவலி, குன்மம், வாதம் தீரும். வேறுமுறை - கல்லுப்பு அல்லது கரியுப்பு, கொட்டைக்கரந்தையின் சாற்றால் அரைத்து 5 சிறுபுடம் போட்டு பிறகு சிறுசெருப்படைச் சாற்றால் அரைத்து 5 சிறு புடம் போட பஸ்மமாகும். அனுபானத்திலிட சூதகவலி, குன்மம் முதலியவைகள் தீரும்.

## வெள்ளைப் பாஷாண பஸ்மம்

மண்டை ஓட்டை உலையில் வைத்து ஊதி சுண்ணமாக்கி குகை செய்து அக்குகையில் சுத்தி செய்த வெள்ளைப்பாஷாணத்தை வைத்து அப்பாஷாணத்தின் மேல் வெள்ளெருக்கம் பாலை விட்டு மேற்படி சுண்ணத்தால் மூடி சீலை மண் செய்து குக்குடபுடம் போட பஸ்மமாகும். அதை எடுத்து அதற்குச்சரியான இடை சுத்தி செய்த ரசஞ்சேர்த்து முலைப்பாலால் அரைத்து வில்லைத்தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து குக்குடபுடம் போட வெகு வெண்மையான பஸ்மமாகும். (சுத்திசெய்த வெள்ளீயத்தை உருக்கி அவ்வுருக்கு வாயில் பணவிடை பஸ்மம் போட அது வாங்கும்) மேற்படி பஸ்மம் அரிசி இடை தேனில் கொடுக்க சகல சுரங்களும் குணமாகும். வேறுமுறை:— செங்கலில் பள்ளம் நோண்டி அதில் சுத்திசெய்த வெள்ளைப் பாஷாணத்தை வைத்து செப்புக் கிண்ணி (செம்பால் செய்த கிண்ணி) அதன் மேல் கவிழ்த்து (மூடி) சந்து வாய்க்கு சாம்பிராணியை உருக்கி போட்டு பிடித்துக்கொண்ட பிறகு அடுப்பின் மேல் வைத்து 4 ஜாமம் தீபாக்கினியாய் எரிக்கவும் அப்பொழுது வெள்ளாட்டு மூத்திரத்தை அக்கிண்ணத்தின் பேரில் சொட்டு சொட்டாய் விட்டுக்கொண்டேயிருந்து, பிறகு எடுத்து அனுபானத்தில் அரிசி இடை கொடுக்க சகல சுரங்கள், ஆனைக்கால் வீக்கசுரம் முதலிய அநேக பலத்த வியாதிகள் குணமாகும்.

## நாக பஸ்மம்

சுத்திசெய்த ஒரு பலம் நாகத்தை ஒரு புது சட்டியிலிட்டு உருக்கி 4 விராகனிடை கொடிக்கள்ளிப்பாலை உருக்கு வாயில் கொடுத்து இரும்பு கடப்பாரையால் கிளரக்கிளர வெண்மை நிறமுடைய நுரையாகக் கிளம்பும். இதை எடுத்துக் கொள்ளவும். இந்த பஸ்மத்தை வேலிப் பருத்திச் சாற்றால் 3 ஜாமம் அரைத்து பில்லைத் தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து முழம் புடம்போட வெகு வெண்மையான பஸ்மமாகும். ஒரு குன்றிமணி இடை வெண்ணெயில் கொடுக்க சகலமூலவியாதிகள் குணமாகும். வேறுமுறை:— நாகத்தை சுத்திசெய்து பொடியாக்கி 2 விராகனிடைக்கு 4 குன்றிமணி இடை சுத்திசெய்த வெள்ளிப்பொடியை சேர்த்து கொஞ்சம் சுத்த ஜலமிட்டு சிறு வஸ்திரத்தால் மூடி 8 நாழிகை வைத்து எடுத்து இரும்புக்கரண்டியின் உள்புறம் வேலிப்பருத்தியின் சாறு தடவி உலர்த்தி அதிலிட்டு துருத்தியால் ஊதி உருக்க பஸ்மமாகும். வெண்ணெயில் கொடுக்க வெள்ளைவிழுதல் சகல மூலரோகங்கள் குணமாகும். தாது புஷ்டி உண்டாகும். வேறு முறை:— சுத்தி செய்த நாகத்தை உருக்கி அவ்வுருக்கு வாயில் சிற்றாமணக்கு இலையைக் கசக்கி 5-6 துளி சாறு பிழிய சத்தமிடும். மறுபடியும் 5-6 துளி விட சத்தமடங்கும். துருத்தியை விசையாயூதி மறுபடியும் 5-6 துளி பிழிந்து சிற்றாமணக்கு

வேரால் கிண்டிவர் மல்லிகைப் பூவைப்போல் நீரும், அதை அனுபானத்திலிட வெள்ளை விழுதல், வெட்டை, கபரோகங்கள், குன்மம், மூலம், குணமாகும். தாதுபுஷ்டியாகும். வேறுமுறை:— ஓர் சட்டியில் பாதி உப்பைப் போட்டு அதன் மேல் சுத்தி செய்த நாகத்தகடுகளை பரப்பி அதன்மேல் உப்பைப் போட்டு ஓட்டால் மூடி சீலைமண் செய்து 4 ஜாமம் எரித்து எடுத்துப் பார்க்க பஸ்மமாகியிருக்கும். மேற்படி வியாதிகளுக்குக் கொடுக்க குணமாகும்.

## கருவங்க பஸ்மம்

நாயுருவிசமூலம் துண்டுகளாக்கி நிழலில் உலர்த்தி சூர்ணித்து வைத்துக்கொள்க. சுத்திசெய்தகாரீயத்தை இரும்புவாணாலிலிட்டு உருக்கி, உருக்குவாயில் மேற்படி சூர்ணத்தைத்தூவி தூவிக்கொண்டே துளாவ 1 முதல் 2 ஜாமத்தில் ஈயம் வெட்டையாகும். பிறகும் துளாவிக்கொண்டேயிருக்க பஸ்மமாகும். ஒரு குன்றிமணி இடை அனுபானத்திலிட சகல மேகங்கள், இன்னும் அநேக வியாதிகள் தீரும். வேறுமுறை:— சுத்தி செய்த காரீயத்தை வெங்காயத்தோலைப்போல் அவ்வளவு அச்சத்தகடுகளாக்கி கருநொச்சி இலையை அரைத்து ஒவ்வொரு தகடுகளுக்கும் கவசமிட்டு எல்லாம் ஒன்றின்மேல் ஒன்று வைத்து பிறகு எல்லாஞ்சேர்த்து கவசம் செய்து சீலைமண் செய்து முழம்புடம் போட பஸ்மமாகும். நெய்யில் கொடுக்க மேகம், நீரிழிவு முதலியவைகள் தீரும்.

## மண்டூர பஸ்மம்

சுத்திசெய்த மண்டூரத்தை இரும்பு கடப்பாரையால் இடித்து தூளாக்கி வஸ்திரகாயஞ்செய்து காஞ்சோரிசுணங்கையின் சாற்றால் 3 ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து கஜபுடம் போட பஸ்மமாகும். பணவிடை தேனில் கொடுக்க சோகை, பாண்டு, வீக்கம், க்ஷயம், காசம், முதலியவைகள் குணமாகும்.

## அஞ்சனக்கல் பஸ்மம்

அஞ்சனக்கல்லை, சிறுக்கீரைச்சாற்றால் 3 ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி ஒவ்வொரு பில்லைக்கும் சிறுக்கீரை அரைத்து கவசமிட்டு பிறகு ஓட்டிலிட்டு சீலைமண் செய்து கஜபுடம் போட பஸ்மமாகும், தேனில் குன்றிமணி இடை கொடுக்க மேகம் (20) குணமாகும்.

## பித்தளை பஸ்மம்

சுத்திசெய்த பித்தளையை வெங்காயத்தோலைப்போல் அவ்வளவு அச்சத்தகடுகளாக்கி ஒவ்வொரு தகடுகளுக்கும் காஞ்சொரியின் வேரை

அரைத்து கவசமிட்டு ஓட்டிலிட்டு மூடி சீலைமண் செய்து கஜபுடம் போட பஸ்மமாகும். தேனிலிட குன்மம், கிரகணி, நீர்சுரப்பு, குடல்வாயு, பாரிசவாயு முதலிய அநேக ரோகங்கள் குணமாகும்.

## சீனாகார பஸ்மம்

சங்குச்சுண்ணாம்பினால் குகைசெய்து அதற்குள் சீனாகாரகட்டியை வைத்து மூடி சீலைமண் செய்து குக்குடபுடம்போட பஸ்மமாகும். தேனில் பணவிடை கொடுக்க நீர் எரிவு, ரத்தக்கழிச்சல், சீதபேதி, கல்லடைப்பு தீரும்.

## லிங்க் வெள்ளை பஸ்மம்

சிவமூலிவேர்ப்பட்டை அல்லது சிவகரந்தை இலையை அரைத்து அதற்குள் ஒரு பலம் சுத்திசெய்த உலாந்தாலிங்கத்தை வைத்து ஓட்டிலிட்டு சீலைமண் செய்து 10 எருவில். புடம் போட்டு எடுத்துப் பார்க்க வெள்ளைக்கட்டியாயிருக்கும். அதைத்தூள் செய்து குன்றிமணி இடை தேனில் கொடுக்க சுரம், வாயு முதலியவைகள் குணமாகும். வேறுமுறை:— ஒரு பலம் உலாந்தாலிங்கத்தை 3நாள் முலைப்பாலில் ஊறவைத்து பாலால் அலம்பி பிறகு ஓர் கரு ஊமத்தைக்காயில் துவார மிட்டு அதில் மேற்படி லிங்கத்தைச் செலுத்தி மூடி சீலைமண் செய்து ஒரு முழம் உயரம் உமிக்குள் வைத்து நெருப்பிட்டு மறுநாள் எடுத்துப் பார்க்க வெள்ளையாயிருக்கும். அதைத் தூள் செய்து குன்றிமணி இடை தேனிலிட சுரம், வாயு, ஜலதோஷம் முதலிய அநேக வியாதிகள் தீரும்.

## கர்ப்பூர சலாசத்து பஸ்மம்

கோவை இலையை அரைத்து அதற்குள். சுத்திசெய்த கர்ப்பூரசலா சத்துவை வைத்து மூடி சீலைமண் செய்து சிறுபுடம்போட பஸ்மமாகும். இது நல்லமுறை. நெய்யில் பணவிடை கொடுக்க பித்தவெட்டை உஷ்ண ரோகங்கள், நீர்க்கடுப்பு, தேக எரிவு, கல்லடைப்பு குணமாகும்.

## வீர பஸ்மம்

அப்பைக் கிழங்கை அரைத்து அதுக்குள் சுத்திசெய்த வீரத்தை வைத்து மூடி சீலைமண் செய்து குக்குடபுடம் போட பஸ்மமாகும். தேனில் நெல்லிடை கொடுக்க சூலை, குன்மம், வாயு, சன்னி, குஷ்டம், மேகம் முதலியவைகள் குணமாகும்.

## ஆத்மானந்த ரசம்

ரசம் பலம் 4, பச்சைமஞ்சள் சாற்றால் 2 ஜாமம் அரைதது பிறகு உலர்ந்த மஞ்சள் கசாயத்தால் 2 ஜாமம் அரைத்து அந்த மொத்தை

மஞ்சள் இலைக்குள் வைத்து மூடி பிறகு 3 விரற்கடை கனத்தில் மஞ்சள் இலையைச் சுற்றி பிறகு நூலைச்சுற்றி, ஓர் சட்டியில் அரைப்படி பச்சை மஞ்சள் சாறு விட்டு, சட்டியின் வாயில் துணிக்கட்டி அதன்மேல் இதை வைத்து புட்டு அவிப்பதுபோல அவித்து எடுத்து மறுபடியும் மஞ்சள் சாற்றால் ஒரு ஜாமமும் எலுமிச்சம்பழச்சாற்றால் 1 ஜாமமும் அழிஞ்சி வேர்ச்சாற்றால் ஒரு ஜாமமும் அரைத்து சீனாகாரம் பலம் 4, சேர்த்து பச்சைமஞ்சள் சாற்றால் அரைத்து உலர்த்தி, சீலைமண் செய்த காசிக் குப்பியில் ½ குப்பி மருந்தைப் போட்டு பளப்பக்கல்லால் மூடி கைலாச நாத செந்தூரம் எரிக்கும் விதமாய் 12 ஜாமம் எரிக்கவும். எரிக்கும் போது பொங்கினால் சலாகினால் கிண்டிக்கொடுக்கவும். 12 ஜாமம் எரித்து எடுத்துப்பார்க்க மல்லிகைப்பூப்போலிருக்கும். பணவிடை பஸ்மத்தை அனு பானத்திலிட குன்மம், பயித்தியம், சூலை (18), கிரந்தி (9), குஷ்டம் (18), வெட்டிசூலை, சன்னி, தோஷம், மேகம், சுரம், சூசிகாவாயு, சுவாசகாசம், சகலவாதம் இன்னும் பலமான வியாதிகள் குணமாகும். வியாதிக்குத்தக்க பத்தியமாம்.

## சர்வசித்தி ரசம்.

சுத்திசெய்த ரசம் பலம் 4, சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம் பலம் 2, இவைகளை குப்பைமேனி இலைச்சாற்றாலும் கொடுப்பை இலைச் சாற்றாலும் வகைக்கு ஒரு ஜாமம் அரைத்து உலர்த்தி பிறகு தும்பை இலைச் சாற்றாலும், செம்முள்ளிச்சாற்றாலும் வகைக்கு 8 ஜாமம் அரைத்து உலர்த்தி, சீலைமண் செய்த காசிக்குப்பியில் ¾, குப்பி போட்டு பளப்பக்கல்லால்மூடி சீலைமண் செய்து கைலாசநாத செந்தூரம் எரிக்கும் விதமாய் இதையும் எரித்து 2 நாள் ஆறவிட்டு மருந்தை எடுத்து வைத்துக் கொள்ளவும் சுக்கு, மிளகு, திப்பிலி இம்மூன்றும் கொஞ்சம் வறுத்து சூர்ணித்து அதில் பஸ்மம், பணவிடை வைத்து கொடுக்க குன்மம், சூலை (18), தீரும். தாதுவிர்த்தியாகும். யானைக்குள்ள பலம் வரும். அன்றியும் கிரகணி, மூர்ச்சை, அதிசாரம், பித்தவாயு, நெஞ்சி எரிவு, மேகம், மூலம், குஷ்டம், வெடிசூலை, புண், சொறி, சகல வாத பித்த சிலேஷ்ம ரோகங்கள் தீரும்.

## நரசிம்ஹ ரசம்

ரசம், ரசக்கர்ப்பூரம், ரசசெந்தூரம், உலாந்தாலிங்கம், வீரம் இவ்வைந்தும் சுத்திசெய்து சமமாக சேர்த்து நாட்டுக்காட்டாமணக்குப் பாலால் ஒரு நாள் அரைத்து பில்லை தட்டி அகலிலிட்டு அகலால் மூடி சீலைமண் செய்து, 2 மரக்கால் மணலை தரையில் கொட்டி அதன் மேல் வைத்து மணலால் மூடி 5-6 எருவை அதன்மேல் அடக்கி புடம் போடவும். மருந்து சூடு ஆனால் போதுமானது. மருந்தை ஆறவிட்டு

எடுத்து, கற்றாழைச்சாற்றால், அரைத்து அதே மாதிரியாக ஒரு புடம் போட்டு எடுத்து சூர்ணித்து பணவிடை சீனியில்வைத்து கொடுத்து உடனே தக்க அனுபானத்தில் கொடுக்க சகல ஜன்னி, தோஷம், மேகம் (20), வாதம் (80), சிலேஷ்மம் (20), சுரம் (64), சூலை (18), அரையாப்பு, காசம் முதலிய கடூரரோகங்கள் குணமாகும். வியாதிக்குத் தக்க பத்தியமாம்.

## ரச பதங்கம்

செங்கல்லும் கரியுப்பும் சமமாக சேர்த்து இடித்து பொடிசெய்து பாதி பொடியை ஒரு சட்டியிலிட்டு பிறகு கந்தகம், பற்படாகம், சடாமாஞ்சில், வெள்ளைப்பாஷாணம் வகைக்கு விராகனிடை 2 சேர்த்து வெற்றிலைச்சாற்றால் அரைத்து குகையைச் செய்து மேற்படி சட்டியிலுள்ள பொடியின் மேல்வைத்து அக்குகையில் 2 பலம் சுத்திசெய்த ரசம் விட்டு மேற்படி குகையை அமிழ்த்தி மூடி, பிறகு பாக்கி செங்கலுப்பு பொடியை சட்டியின் கழுத்து வரையில் போட்டு, சட்டியால் மூடி சீலைமண் செய்து அடுப்பின்மேல் வைத்து தீபாக்கினி, கமலாக்கினியாய் ஒரு நாள் (ஆறிப்போகாமல்) இரவும் பகலும் எரித்து எடுத்துப் பார்க்க மேல் சட்டியில் பதங்கம் ஏறி நிற்கும். அதை எடுத்துவைத்துக் கொண்டு அரை குன்றிமணி இடை பனைவெல்லத்திலிட கை கால் குடைச்சல், சகலமேகம், சூலை (18) குணமாகும். பத்தியம் புளி தள்ளவும். வாய்ப் பிடித்தால் கருவாப்பட்டையின் கசாயத்தால் வாயைக்கொப்பளிக்கவும்.

## வைர பஸ்மம்

கொள்ளு, பெருங்காயம், இந்துப்பு, இவைகளைச் சேர்த்து கசாயஞ்செய்து அதில் வைரத்தைப் பழுக்கக் காய்ச்சி, காய்ச்சி 21 தடவை தோய்க்க பஸ்மமாகும். வேறுமுறை - தவளையை (Frog) பிடித்து வெங்கல பாத்திரத்தில் போட, அது பயந்து மூத்திரம் பேயும். அந்த மூத்திரத்தில், வைரத்தை பழுக்கக் காய்ச்சி காய்ச்சி 10 தடவை தோய்த்தால் பஸ்மமாகும்.

## இரச பஸ்மம்

சுத்திசெய்த ரசத்தை வெற்றிலைச்சாற்றால் அரைத்து, ஒரு மலை வெங்காயத்தை (பெரிய வெங்காயம்) கத்தியால் இரண்டாக வெட்டி, பெரிய துண்டில் பள்ளம் நோண்டி அதில் மேற்படி ரசகலவை வைத்து சிறு துண்டால் மூடி சீலைமண் செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு ஓட்டால் மூடி சீலைமண் செய்து சிறுபுடம் போட பஸ்மமாகும். ½ முதல் ஒரு குன்றிமணி இடை தேனில் கொடுக்க சுரம், சூலை, குஷ்டம், வாதம் முதலியவைகள் குணமாகும். வேறுமுறை - சுத்திசெய்த ரசத்தை சிவகரந்தைச்சாற்றால் 3 நாள் அரைத்து பில்லைத்தட்டி நிழலில் உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து குக்குடபுடம்போடவும். மறுபடியும் அரைத்து 2 வது புடம்போட பஸ்மமாகும். பனைவெல்லத்தில் பணவிடை மருந்தை வைத்துக்கொடுக்க மேற்படி வியாதிகள் குணமாகும்.

## ஹேமகர்ப்பபோட்டலிரசம்

தங்கப்பொடி விராகனிடை 4, சுத்திசெய்த ரசம் விராகனிடை 4, கல்வத்திலிட்டு ஒரு ஜாமம் அரைத்து அத்துடன் சுத்திசெய்த கந்தகம் விராகனிடை 48 சேர்த்து ½ ஜாமம் அரைத்து அத்துடன் நல்லமுத்து விராகனிடை 64, சுத்திசெய்த சங்கு விராகனிடை 96, வெங்காரம் விராகனிடை 4, இவைகளைச் சேர்த்து பழுத்த எலுமிச்சம்பழச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து பில்லைத் தட்டி உலர்த்தி ஒரு அகலில் வைத்து அகலால் மூடி சீலைமண் செய்து தரையில் ஒரு முழம் குழி நோண்டி எரு அடுக்கி மேற்படி அகலை வைத்து அதன்மேல் எருவை அடுக்கி கஜபுடம் போட்டு எடுத்து குன்றிமணிஇடை மருந்தையும் 29 மிளகு சூர்ணமும் 2 விராகனிடை, பசும்நெய்யும் (இம்மூன்றும்) சேர்த்துக் கொடுக்கவும். தினம் காலை, மாலை கொடுக்க காசம், க்ஷயம், சுவாசம், வாதம், கபரோகங்கள் கிரகணி, அதிசாரம் குணமாகும்.

## பதிப்பிரிய பஸ்மம்

நாரில்லாத சுக்கு பலம் 2, வேலிப்பருத்திச்சாற்றால் மைப்போல் அரைத்து பில்லைத் தட்டி ஒரு சட்டியில் 2விரற்கனம் கரியுப்பைப்பரப்பி அதன்மேல் மேற்படி பில்லையை வைத்து அதன்மேலும் முன் போல் கரியுப்பைப் பரப்பி ஓட்டால் மூடி சீலைமண்செய்து 5 எருவில் புடம்போட்டு எடுத்து சூர்ணித்து 1,2 விராகனிடை வீதம் தினம் காலை மாலை தேனில் கலந்து சாப்பிட்டுவர வயிற்றுபொருமல், அக்கினிமந்தம், அஜீர்ணம், வாந்தி, புளிப்பு ஏப்பம், அபானவாயுப்பிரிதல் முதலியவைகள் குணமாகும்.

## இராஜதாம்பிர பஸ்மம் (சுண்ணம்)

தாளகமும், கோழிமுட்டையின் ஓடும் சமமாக சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து குன்றிமணிப்போல் உருண்டை செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு, பிறகு சுத்திசெய்த தாம்பிரம் பலம் 1, உருக்கி, அவ்வுருக்குவாயில் மேற்படி உருண்டையில் ஒவ்வொரு உருண்டையாக ஒரு பலம் உருண்டைகொடுக்க வெங்கலம்போலாகும். பிறகு அத்துடன் சுத்திசெய்த வீரம் விராகனிடை 2, பூநீர் விராகனிடை 1, சேர்த்து வெள்ளெருக்கம் பாலால் ஒரு நாள் அரைத்து வில்லைதட்டி ஓட்டிலிட்டு சீலைமண்செய்து கெஜபுடம் போட்டு எடுத்து அத்துடன் சுத்திசெய்த ரசம் விராகனிடை 1 சேர்த்து முலைப்பாலால் 2 ஜாமம் அரைத்து கோழிபுடம்போட தாம்பிர சுண்ணமென்கிற கொடிய பஸ்மமாகும். அதில் குன்றிமணி இடை இஞ்சிச்சாற்றிலாவது, வாழைப்பழத்திலாவது, வேறு அனுபானத்திலாவது கொடுக்க சகல குன்மங்கள், சகல வாதம், சூலை, மகோதரம், மேகம், சகல உதரரோகம், சகல பயங்கரமான ரோகங்கள் குணமாகும். பத்தியம் பாலும் அன்னமும்சாப்பிடவும். இந்த சுண்ணத்தால் பலன் உண்டு.

## ஸ்ரீ காமேசுவரி ரசம்

இரச பஸ்மம் விராகனிடை 30, தங்கபஸ்மம், அப்பிரேகபஸ்மம் வகைக்கு விராகனிடை 10, சுத்திசெய்த மனோசீலை, சுத்திசெய்த நெல்லிக்காய்க் கந்தகம், சுத்திசெய்த அரிதாரம் வகைக்கு விராகனிடை 20, இவைகளை எல்லாஞ்சேர்த்து அரைத்தத்தூளை மஞ்சள் நிறமுள்ள பலகரைகளில் செலுத்தி வெங்காரம் பலம் 3, வெள்ளாட்டுப்பாலால் அரைத்து அப்பலகரைகளின் வாயில் அடைத்து ஒரு சட்டியில் வைத்து அகலால் மூடி சீலைமண் செய்து உலர்த்தி கஜபுடம் போட்டு, ஆறின பிறகுஎடுத்து சூர்ணித்து அதில் 4 குன்றிமணி இடை தினம் காலை மாலை 10 அரிசித் திப்பிலியும், 29 மிளகும் இளவறுப்பாய் வறுத்து சூர்ணித்து தேன் சேர்த்து அதில் வைத்து சாப்பிட்டுவர க்ஷயரோகங்கள் (5), குணமாகும். க்ஷய ரோகங்களுக்கு இது சஞ்சீவி.

## மகா சுயமக்கினி

சுத்திசெய்த ரசம் பலம் 1, சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம் பலம் 2, இவைகள் இரண்டுஞ்சேர்த்து அரைத்து, அத்துடன் சுத்திசெய்த அயப்பொடி (இரும்பை ராவினப்பொடி) பலம் 1, சேர்த்து கற்றாழைச் சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து அந்த மொத்தையை ஒரு தாம்பிரத் தட்டில் வைத்து அதன்மேல் ஆமணக்கிலையை மூடி 4 நாழிகைவைக்க அந்த மொத்தை உஷ்ணித்திருக்கும். பிறகு அதை நெல்லுக்குள் ஒரு இராத்திரி முழுமையும் வைத்து மறுநாள் எடுக்க அது பஸ்மமாயிருக்கும் அதை எடுத்து கற்றாழைச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து வெய்யிலில் வைக்கவும். இப்படி கற்றாழைச்சாற்றால் அரைத்து 7 தடவையும், பொற்றல் கையாந்தகரைச்சாற்றால் அரைத்து 7 தடவையும், வெள்ளைச்சாரணைச் சாற்றால் அரைத்து 7 தடவையும் நெய்ச்சுண்டி இலைச்சாற்றால் அரைத்து 7 தடவையும், சீந்திக்கொடிச்சாற்றால் அரைத்து 7 தடவையும், வெள்ளைநொச்சி இலைச்சாற்றால் அரைத்து 7 தடவையும், கொடிவேலி வேர்ப்பட்டைக் கசாயத்தால் அரைத்து 7 தடவையும் தனித்தனியே சூர்யபுடம் வைத்து எடுத்து அனுபானத்திலிட சுவாசம், காசம், க்ஷயம், இருமல், வாயு, கிரகணி, முதலிய சகல வியாதிகளும் குணமாகும். வியாதிக்குத் தக்க பத்தியமாம்.

# கட்டுகள்

## பாஷாணக் கட்டு

8 படி அமுரி (சிறுநீர்)யில் காரமான பூநீர், கல்சுண்ணாம்பு வகைக்குப்படி 1, சேர்த்து கரைத்து தெளிவை இறுத்து ஓர் பானையிலிட்டு ஒரு பலம் வெள்ளைப்பாஷாணத்தை தொளாந்திரங்கட்டி எரித்துஎடுத்து வைத்துக்கொள்க. பிறகு வெடியுப்புச்சுண்ணம், சீனாக்காரம், நவச்சாரம், வெங்காரம், காரமான பூநீர், சூடம், சிப்பிச்சதை இவைகளை எல்லாஞ்சேர்த்து அரைத்து மேற்படி பாஷாணத்துக்கு கவசஞ்செய்து, பிறகு ஓர் சட்டியில் இரு குறுணி உப்பு அல்லது கல்சுண்ணாம்புப் போட்டு அதற்குள்வைத்து மேல்சட்டி மூடி, சீலைமண்செய்து 4ஜாமம் எரித்து எடுத்து அனுபானத்தில் உரைத்துக்கொடுக்க சன்னி, சுரம், சகல கடூர ரோகங்கள் குணமாகும்.

## பஞ்ச லவணக்கட்டு

[illegible]குவை துண்டுகளாக்கி ஒரு எருவின்பேரில் பரப்பி அதின் மேல் 2,3 எருவை அடக்கி புடம்போட சுண்ணமாகும். அந்த சுண்ணம்

விராகனிடை 30, வெடியுப்பு, நவக்ஷாரம், இந்துப்பு, கரியுப்பு, சவுட்டுப்பு, வகைக்கு விராகனிடை 6, இவைகளைச் சேர்த்து பொடிசெய்து, திருகுகள்ளி கட்டையை நறுக்கி சோற்றை நீக்கி, அதற்குள் அடைத்து அதின்மேல் அந்த சோற்றால் மூடி சீலைமண்செய்து வராகபுடம் போட கம்பியாய் உருகி நிற்கும். அதை எடுத்து பணவிடை அனுபானத்தில் கொடுக்க குன்மம் (8), மகோதரம் (5), வாயு, வயிற்றுவலி, உப்பிசம், அஜீர்ணம், வாந்தி, பீலிகரோகம்(5), சகல உதரரோகங்கள் குணமாகும்.

## ரசக்கட்டு (அபரூபமுறை)

ஒருவாய் அகன்ற குண்டாஞ்சட்டியில் ஜலம் விட்டு, அக்குண்டாஞ்சட்டி மூடும்படியான ஒரு சிறு மண்குடம் வாங்கி அக்குண்டாஞ்சட்டியின்மேல் ஜலத்துக்கு பட்டதும் படாததும் போல் மல்லாக்கவைத்து பிறகு அந்தகுடத்துக்கு மத்தியில் ஒரு அங்குலம் உயரம் குழி மண்ணால் வட்டமாய் 4 விரற்கடை அகலம் ஒரு பாத்தி செய்து அப்பாத்தியின் உள்புறம் சுண்ணாம்பைப்பூசி உலர்த்தி, பிறகு சுத்திசெய்த ரசம் அப்பாத்தியிலிட்டு அதின்மேல் ரசத்துக்கு சமபாகம் நெல்லிக்காய் கந்தகத்தைப் பொடி செய்து போட்டு பிறகு வேறொரு மண்குடம் கவிழ்த்து சந்துவாயிக்கு சாம்பலும் இந்துப்பும் சேர்த்து ஜலத்தால் அரைத்துப்பூசி, சீலைமண் செய்து உலர்த்தி, பாத்திசெய்த குடத்தைச் சுற்றி 6,7 எரு அடுக்கி தீயிடவும். இவ்விதமாக ரசத்தின் மேல் கந்தகப்பொடியைப் போட்டு ஆறுபுடங்கள் போட ரசங்கட்டும். இது சகலகாரியங்களுக்கும் உபயோகமாகும்.

சித்திரபாலாடைச்சாற்றால் சுருக்குக்கொடுக்க ரசம் கட்டும் என்று ஓர் கிரந்தத்தில் சொல்லியிருக்கிறது.

வேறுமுறை:— கல்தாமரை சமூலத்தின் சாறு, சுத்திசெய்த ரசம் விராகனிடை 10, சுத்தி செய்த மனோசீலை விராகனிடை 1, இவைகளில் மனோசீலையை பொடிசெய்து வைத்துக்கொண்டு, ஒரு இரும்புக்கரண்டியில் ரசம்போட்டு நெருப்பின் மேல் பிடித்துக்கொண்டு கொஞ்சங்கொஞ்சமாக மனோசீலையின் பொடியைத்தூவி மேற்படி சாறு கொஞ்சங்கொஞ்சமாய் விட்டு சுருக்கு கொடுக்க ஒரு ஜாமநேரத்தில் ரசம் மணியாகும். இம்மணியால் சகல காரியங்களும் சித்திக்கும்.

## இரசக்கர்ப்பூரக் கட்டு.

ஒருபலம் இரசகர்ப்பூரத்தை வாங்கி முலைப்பாலில் 10 நாள் ஊறவைத்து எடுத்து, ஒரு சட்டியிலிட்டு எரிக்கவும். எரிக்கும்பொழுது 3

ஜாமம் வெள்ளைப்பூண்டுத் தயிலம் 4-5 துளி அதின்மேல் போட்டு புரட்டிக் கொடுத்துக்கொண்டேயிருக்கவும். (வெள்ளைப்பூண்டின் தோலைநீக்கி உரலிலிட்டு இடித்து எடுத்து அத்துடன் நெல்லின் பெரு உமியை கொஞ்சஞ்சேர்த்து துணியிலிட்டு பிழிந்து தைலம் எடுத்துக்கொள்க). ஓர் சட்டியில் வெடியுப்பு பலம் 2 பரப்பி அதன்மேல் மேற்படி சுருக்குக் கொடுத்தகட்டியை வைத்து அது மறையும் படி வெடி உப்பைப்போட்டு அதன்மேல் ஐந்து கோழிமுட்டை உடைத்து மஞ்சள் கருவைப்போட்டு அடுப்பின்மேல் வைத்து கமலாக்கினியாய் எரிக்க பொங்கி உருகி கெட்டியாகும். ஆறின பிறகு எடுத்து மேல் உப்பை நீக்கி அனுபானத்திலிட சுரம், சந்நிபாதசுரம், நாவரட்சி, மலவாதம், சன்னி (13), வாதம் (80) குணமாகும்.

## தாளகக் கட்டு

ஒரு பலம் சுத்திசெய்த தாளகத்தை ரேக்குப்போல் லேசாக கிழித்து வைத்துகொள்க. கிளிஞ்சியில் அப்பிரேகம்வைத்து அதின்மேல் மேற்படி தாளகத்தை வைத்து பறட்டைக்கீரை சாற்றைவிட்டு அதன்மேல் அப்பிரேகம் வைத்து கிளிஞ்சியால் மூடி சீலைமண் செய்து வைத்துக்கொள்க. 10 எருவை அடுக்கி தீமூட்டி புகை ஆறின உடனே குறட்டால் மேல் எருவை நீக்கி கிளிஞ்சிகளை அதின் நடுவில் வைத்து நெருப்பு எருவால் மூடிவிடவும். சற்று நேரமான பிறகு கிளிஞ்சி.யை நீக்கிப்பார்க்க உருகி கெம்பு (Ruby) போலிருக்குமாகில் எடுத்து ஆறின பின் அப்பிரேகத்தை நீக்கி அனுபானத்தில் உரைத்துக்கொடுக்க சகல சுரங்கள், சகல கபரோகங்கள் இன்னும் அநேக வியாதிகள் குணமாகும்.

# பலவித அவுஷதங்கள்

## முப்பு

தை, மாசி, பங்குனிமாதங்களில் விளைகின்ற காரமான பூநீரை சுத்தஜலத்தில் கரைத்து தெளிவை எடுத்து சீசாவில்விட்டு வைத்துக்கொள்க. எட்டாங்காச்சல் வெடியுப்பு பலம் 4, கல்வத்திலிட்டு மேற்படி சீசாவிலுள்ள தெளிவைவிட்டு ஒரு ஜாமம் அரைத்து உலர்த்தி பிறகு அத்துடன் சீனாகாரம் இந்துப்பு வகைக்கு பலம் 2, சத்தியுப்பு பலம் 8 சேர்த்து கோழிமுட்டையின் வெள்ளைக்கருவில் எருக்கம்பால் விட்டு நன்றாய்க் குழப்பி வைத்துக்கொண்டு கொஞ்சங்கொஞ்சமாய் விட்டு ஒரு ஜாமம் அரைத்து, பிறகு கர்ப்பூரம் விராகனிடை 1, சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் 2ஜாமம் அரைத்து பில்லைத் தட்டி உலர்த்தி,

கல் சுண்ணாம்பினால் கனத்த குகை செய்து அதற்குள் வைத்து சுண்ணாம்பினால் மூடி, சுண்ணாம்புச்சீலைசெய்து உலர்த்தி ஒரு சட்டியில் 5விரற்கடை மணலைப்போட்டு அதன்மேல் குகையைவைத்து அதன்மேல் மணலைக்கொட்டி சட்டியால் மூடி சீலைமண்செய்து அரைமணி நேரம் தீபாக்கினியாய் எரித்து, பிறகு எடுத்து 10 எருக்குள் இந்த குகையைவைத்து புடம் போட்டு எடுத்துப்பார்க்க வெளுத்து நீற்றியிருக்கும். இந்த முப்புவினால் சகல சரக்குகளும் கட்டலாம். வேறுமுறை:— பூநீர்விளையும் மாதங்களாகிய தை, மாசி, பங்குனி இந்த மாதங்களில் காரமான பூ நீரை எடுத்து சுத்தஜலத்தில் கரைத்து தெளிவை இறுத்து வெய்யிலில் வைக்க சுத்தியாகும். இப்படியே கறியுப்புஞ் சுத்திசெய்து கொண்டு பசுவின் மூத்திரத்தில் (கோமூத்திரம்) பூநீரும், சுத்திசெய்த கறியுப்பும் பாறையுப்பும் சமமாய் சேர்த்து காய்ச்சி வற்றவைக்க உப்பாகும். அந்த உப்பை சுத்த ஜலத்தால் மேல் மேலாக கழுவி உலர்த்தி கோழி முட்டையின் வெள்ளைக்கருவால் மெழுகுபோல் அரைத்து சல்லி அளவாக பில்லைகளாக்கி ஓட்டிலிட்டு ஓட்டால் மூடி சீலைமண்செய்து உலையில் வைத்து ஊத சுண்ணமாகும். அதை பீங்கானிலிட்டு சுத்தஜலமிட்டு ஒரு மண்டலம் வைத்திருக்க உப்பு விளைந்திருக்கும். அதை எடுத்து மூன்றில் ஒரு பங்கு பச்சைக்கர்ப்பூரம் சேர்த்து வெண்கருவால் 2 ஜாமம் அரைத்து வில்லைத்தட்டி ஓட்டிலிட்டு சீலைமண்செய்து 5 எருவில் புடம் போட்டு எடுத்து அத்துடன் வீரம், பூரம், புனுகு, குருவண்டு, நாவி வகைக்கு விராகனிடை 1 சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் 2 ஜாமம் அரைத்து வில்லைத்தட்டி ஓட்டிலிட்டு ஓட்டால்மூடி சீலைமண்செய்து கோழிப்புடம் போட்டு எடுத்து அதில் ஒருவிராகனிடை எடுத்து வெள்ளீயத்தகடுகளுக்கு பூசி பிறகு ஆகாசதாமரை இலையை அரைத்து அதற்கு கவசமிட்டு புடம்போட சுண்ணமாகும். இச்சுண்ணத்தால் சகல சரக்குகளையும் கட்டலாம். வேறுமுறை:— மாசி, பங்குனியில் விளையும் பூநீரை எடுத்து ஒரு பானையில் 4படி போட்டு, அத்துடன் கறியுப்பு படி 2, கற்சுண்ணாம்பு படி 2 கோமூத்திரம் படி 8, சேர்த்து பிறகு நல்லெண்ணெய் படி ½, சேர்த்து கலக்கி தெளிவை எடுத்து காய்ச்சி உப்பாக்கி, அத்துடன் கோமூத்திரம் படி 8 சேர்த்து காய்ச்சினால் உப்பாகும். இவ்விதமாய் 10 தடவை கோமூத்திரம் சேர்த்து காய்ச்சினால் குழம்புபோலாகும். எருவின் சாம்பலைப் பரப்பி அதன்மேல் சல்லாத்துணியை விரித்துப்போட்டு அதன்மேல் மேற்படி குழம்பை ஊற்றி உலரவைக்கவும். பிறகு நெல்லை ஜலத்தில் நனைத்து ஒரு பானையில் போட்டு அதன்மேல் மல்லிகையின் இலைகளை பரப்பி அதன்மேல் மேற்படி உப்பை வைத்து அதன்மேல் மல்லிகையின் இலைகளைப் பரப்பி அதன் மேல்மேற்படி நெல்லைப்போட்டு பானையின் வாயை மூடி சீலைமண் செய்து அடுப்பின்மேல் வைத்து நெல்லு வேகும்வரையில் எரித்து, பிறகு அந்த

உப்பை எடுத்து வைத்துக்கொள்க. பிறகு வீரம், பூரம், பச்சைக்கர்ப்பூரம், பூநீர், வகைக்கு விராகனிடை 3, சேர்த்து பொடி செய்து, மாமிசத்துடன் இருக்கிற சிப்பி 100, கொண்டுவந்து ஒவ்வொன்றின் ஓடு கொஞ்சந்திறந்து அதற்குள் கொஞ்சம் பொடியைப் போட்டு ஓர் சட்டியில் பரப்பி வைக்க ஜெயநீர் இறங்கும். இந்த ஜெயநீர் விட்டு மேற்படி உப்பை 3 ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி ஓர் சட்டியில் மண்டை ஓடு (தலை ஓடு) நொறுக்கிப்போட்டு அதன்மேல் மேற்படி பில்லைகளை வைத்து அதன்மேல் மேற்படி மண்டை ஓடு போட்டு சட்டியால் மூடி சீலைமண் செய்து 10 எருவில் புடம் போடவும். இவ்விதமாய் 5 தடவை புடம்போட சுண்ணமாகும். இந்த சுண்ணத்தால் சகல சரக்குகளையும் கட்டலாம். வேறுமுறை:— தை மாசி பங்குனி மாதங்களில் விளையும் பூநீரை ஜலத்தில் கரைத்து தெளிவை இறுத்து வெய்யிலில் வைக்க உப்புக்கட்டும். அதை எடுத்து பலம் 16 தூக்கி அத்துடன், கர்ப்பூரம், சீனாகாரம், எட்டாங்காச்சல், வெடியுப்பு, வகைக்கு பலம் 4, வீரம், பச்சைக்கர்ப்பூரம் வகைக்குப் பலம் 2, வெள்ளைப்பாஷாணம், துரிசு வகைக்கு பலம் 1, இவைகளை கோழிமுட்டையின் வெள்ளைக்கருவில் எருக்கம்பால் விட்டு பிசைந்து வைத்து அதன் தெளிந்த நீரால் ஒரு ஜாமம் அரைத்து பிறகு பனியில் 3 நாள் வைத்து எடுத்து பிறகு மேற்படி தெளிந்த நீரால் ½ மணி நேரம் அரைத்து பில்லைத் தட்டி உலர்த்தி வைத்துக்கொள்க. வீரம், பச்சைக்கர்ப்பூரம், கர்ப்பூரம் சமமாய் சேர்த்து வாய்நீரால் அரைத்து பிறகு அதை போதுமான வாய்நீர்விட்டு குழம்பாகசெய்து வைத்துக்கொள்க. ஓர் சட்டியின் உள்புறத்தில் கல்சுண்ணாம்பைப்பூசி, பூநீர் கொஞ்சந்தெளித்து அதன்மேல் மேற்படி பில்லைகளைப் பரப்பி எரிக்கவும். எரிக்கும்போது மேற்படி வாய்நீர் குழம்பால் பில்லைகள் சிவப்பர்கும் வரையில் பில்லைகளுக்கு சுருக்குக் கொடுக்கவும். பிறகு ஓர் சட்டியில் பூநீரை தெளித்து அதின்மேல் மேற்படி சிவந்த பில்லைகளை வைத்து அதன்மேல் பூநீரைத் தெளித்து மேல் சட்டிமூடி சீலைமண் செய்து காடாக்கினியாய் 3 ஜாமம் எரித்து எடுத்து வைத்துக்கொள்க. இது தான் குரு. சகல சரக்குகளையுங் கட்டலாம். பலனைக்கொடுக்கும்.

## பாலரசம் இறக்கும் விதம்

ஒடுக்கமான கழுத்துள்ள 2 புதுமண்தோண்டிகளைக் கொண்டுவந்து அவைகளில் ஒன்றுக்கு உட்புறத்தில் கல்யாணமுருங்கை இலையை (முள்முருங்கை) அரைத்து அத்துடன் வாழைமட்டைச்சாறு சேர்த்து கலந்து தடவி உலர்த்தவும். 7 தடவை தடவி உலர்த்தி பிறகு உலர்ந்த கொடிவேலி வேரை அல்லது நன்னாரிவேரை நொறுக்கி மற்றொரு தோண்டியில் 5 விரற்கடை உயரம் போட்டு அதின் மேல் ஒரு சேர் சுத்திசெய்த உலாந்தலிங்கத்தைப் பொடிசெய்து போட்டு அதின் மேல் மேற்படி வேர்த்

தூளைப்போட்டு மேற்படி சாறு பூசின தோண்டியை இத்தோண்டி யின்மேல் கவிழ்த்து 2 வாய்களும் ஒன்றாய் சேர்த்து 7 சீலைமண் செய்து 4 ஜாமம் காடாக் கினியாக எரிக்க மேற்படி லிங்கத்திலுள்ள ரசம்மேல் தோண்டிக்குள் போய் அடைந்துவிடும். எரிக்கும்போது மேல்தோண்டியில் சூடு ஏராமலிருக்க, அதன்மேல் ஈரத்துணியை மடித்துப்போட்டு ஜலம் கொஞ்சம், கொஞ்சமாய் விட்டு ஈரங்காக்க வேண்டும். 4 ஜாமமானபிறகு அதை திறந்து பன்றிமயிரால் ரசத்தை எடுத்துக்கொள்ளலாம். இந்த ரசத்தான் பாலரசம்.

## பச்சைக்கர்ப்பூரஞ்செய்யும் விதம்

ஈரமில்லாத நாட்டுக்கர்ப்பூரம் பலம் 1, எட்டாங்காச்சல், வெடியுப்பு பலம் 1/4, உவருப்பு பலம் ½ இம்மூன்றும் சந்தன அத்தர் (Sandal Oil) விட்டு மைப்போல் அரைத்து பிறகு ஏலக்காயின் அரிசி, புனுகு, கஸ்தூரி வகைக்கு விராகனிடை ½, சேர்த்து சந்தன அத்தர் போதுமானதை விட்டு அரைத்து பிட்டுப்போல் பிசிரிக்கொண்டு ஓர் சுத்தமான குப்பியில் பாதிக்குப்பி போட்டு வேறொரு குப்பியை இந்த குப்பியின் வாயின் மேல் கவிழ்த்து இரண்டு வாயும் ஒன்றாய் புணரும்படி செய்து நூலால் கட்டி சீலைமண் செய்து ஒரு சட்டியில் 4 விரற்கடை மணலைப்போட்டு அதன்மேல் அந்த குப்பியைவைத்து அடிக்குப்பி மறையும்படி மணலைப்போட்டு சட்டியால்மூடி வாயிக்கு சீலைமண்செய்து தீபாக்கினியாய் (தீபம்போல்) ஒரு ஜாமம் எரித்து இறக்கி ஆறவைத்து எடுத்துப்பார்க்க மேல் குப்பியில் தாமரைப் பூவாசனை யுடைய சிறுதகடுகளாயிருக்கும். அதை எடுத்துக்கொள்க. இது பிரபுக்களுக்கு யோக்கியமான பச்சைக்கர்ப்பூரமாம். நீர்க்கடுப்பு, கல்லடைப்பு, சகலபித்தரோகங்கள் இவைகளுக்கு இதைக் கொடுக்க குணமாகும்.

## சாம்பிராணி பதங்கம் இறக்கும் விதம்.

ஒரு சேர் பாற்சாம்பிராணியை தூள் செய்து ஒரு வாய் அகன்ற தோண்டியில் போட்டு, தளமான காகிதத்தை (கடுதாசி) கோபுரம் போல் குல்லாய் செய்து தலைக்கீழாய் தோண்டியின் வாயில் ஒட்டி, பிறகு தோண்டிவாயை அகலால் மூடி சீலைமண்செய்து உலர்த்தி அடுப்பின் மேல் ஏற்றி 2 நாழிகை தீபாக்கினியாய் எரித்தால் காகிதத்தின்மேல் பதங்கம் படிந்திருக்கும். ஆறவிட்டு எடுத்துக்கொள்ளவும். அக்கினி அதிக மானால் பதங்கம் கரைந்துபோம். மேற்படி பதங்கம் விராகனிடை 2, கிராம்பு விராகனிடை 3, கோராசனை விராகனிடை 1, வெற்றிலைச் சாற்றால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி 3 நாள் காலை மாலை ஒரு மாத்திரை வீதம் சாப்பிட சூதகவலி, சுரம் தீரும். மிளகுத்தூள் நெய்சேர்த்து அத்துடன் சாப்பிட

சூதகரோகங்கள் குணமாகும். சீனியில் 7 நாள் சாப்பிட சூதகஜன்னி தீரும். தாம்பூலத்துடன் சாப்பிட தாதுபுஷ்டி உண்டாகும்.

## கந்தக் பதங்கம்

மிளகு தக்காளி சமூலம் நிழலில் உலர்த்தி சூர்ணித்து பலம் 5 தூக்கி ஒரு புது சட்டியில் பாதி (2½ பலம்) சூர்ணம் போட்டு அதன்மேல் சுத்தி செய்த நெல்லிக்காய் கந்தகம் பலம் 5 பரப்பி அதன்மேல் பாக்கி பாதி சூர்ணத்தை போட்டு அமுக்கி அதன்மேல் வேறொரு சட்டியை கவிழ்த்து 2வாயும் ஒன்றாய் சேர்த்து 7 சீலைமண் செய்து உலர்த்தி ஒரு ஜாதி விறகால் தீபாக்கினியாய் (தீபம் போல்), எரிக்கவும், எரிக்கும்பொழுது மேல் சட்டியில் சூடு ஏறாமலிருக்க, அதன்மேல் ஈரத்துணியை மடித்துப் போட்டு ஜலம் ஒவ்வொரு சொட்டாக விட்டு ஈரம் காக்கவேண்டும். ஒரு ஜாமம் சென்றபிறகு தீயாற்றி ஆறவிட்டு பன்றி முடியால் சுரண்டி சீசாவில் அடைத்துக்கொள்க. இதை அனுபானத்தில் கொடுக்க மேக ஊறல், மேகப்பிடிப்பு, மேகவீக்கம், மேகரணம், மேகவாயு, மேகதடிப்பு, முதலிய சகல மேகமும் குணமாகும். பத்தியம் புளி, புகையிலை, வாயுபதார்த்தங்கள் நீக்கவும். வாரந்தோறும் பால் மிளகு தேய்த்து ஸ்நானஞ்செய்து வரவும்.

## சண்டமாருதக் குழம்பு

ரசம், லிங்கம், அரிதாரம், மனோசீலை, ரசகர்ப்பூரம், கருநாவி, எண்ணெய் வெங்காரம், கௌரிப்பாஷாணம் வகைக்கு விராகனிடை 2 நேர்வாளப்பருப்பு விராகனிடை 16, இவைகளை சுத்திசெய்து கல்வத்திலிட்டு வால் மிளகு, குரோசாணி ஓமம், கண்டத்திப்பிலி, அரத்தை, கடுக்காய், தானிக்காய், கிராம்பு, கடுகு, சுக்கு, கடுகுரோகிணி, பெருங்காயம், கஸ்தூரி மஞ்சள், திப்பிலி, திப்பிலிமூலம், ஆனைத்திப்பிலி, ஓமம், சிறுநாகப்பூ, இந்துப்பு, வாய்விளங்கம், கோஷ்டம், ஜாதிக்காய், வகைக்கு விராகனிடை 4, மிளகருனைவேர், சித்தரத்தை, அதிமதுரம், மாசிக்காய், சீனாக்காரம் வகைக்கு விராகனிடை 5, இந்த 26 சரக்குகளையும் சேர்த்து செய்த கசாயத்தாலும், 10 விராகனிடை திருகுக்கள்ளிப்பாலாலும், சிவதைவேர், கொடிவேலிவேர் வகைக்கு பலம் 2 சேர்த்து செய்த கசாயத்தாலும் 12 ஜாமம் அரைத்து வைத்துக்கொள்ளவும். 1,2 குன்றிமணி இடை வியாதிக்குத் தக்க அனுபானத்திலிட சுரம், சன்னி, தோஷம், சகலவாதரோகங்கள், சகல கபரோகங்கள், இன்னும் பற்பல ரோகங்கள் குணமாகும். வியாதிகளுக்குத் தக்க பத்தியமாம்.

## வெடியுப்பு ஜெயநீர்

எட்டாங்காச்சல் வெடியுப்பு பலம் 10, சீனாக்காரம் பலம் 2, சூடம் பலம் 2, கடல்நுரை பலம் 2, முத்துசிப்பி பலம் 2, இவைகளை

கல்வத்திலிட்டு பூநீரை அமுரியில் கரைத்து அதன் தெளிவையுடன் கோழிமுட்டையின் கருவைகூட்டி மேற்படி மருந்தை அரைத்து சிறு பில்லைகளாகத்தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண்செய்து முழம்புடம்போட சுண்ணமாகும். அத்துடன் அதற்குப் பாதி நவக்ஷாரம் சேர்த்துப் பொடிசெய்து பீங்கானில் வைத்துக்கொள்க. ஒரு சட்டியில் ஜலமிட்டு அதில் மேற்படி பீங்கான்வைத்து அசையாமல் மேல்சட்டி மூடி சீலைமண்செய்து காற்றில்லாத இடத்தில் குழிவெட்டி ஜலமிட்டு மேற்படி சட்டியைவைத்து மணலால் மூடிவிடவும்.15 நாள் சென்று எடுத்துப் பார்க்க ஜெயநீராகியிருக்கும். அதை சீசாவில் போட்டு வைத்துக்கொள்ளவும். இதினால் சகல சரக்குகளும் கட்டலாம். வேறுமுறை:- வெடியுப்பும், பூநீரும் சமமாய் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து இரும்புவாணாவில் போட்டு கொதிக்க வைக்க சுண்ணமாகும். அதை பீங்கானில் போட்டு வைக்க நீராகும். இது சரக்கு களைக் கட்டும். வேறு முறை:- மகாதாளகபஸ்மத்தில் சொல்லிய ஜெய நீரை செய்து வைத்துக்கொள்க. இது நல்லமுறை, சரக்குகளைக் கட்டலாம்.

## காலபயிரவ ஜெயநீர்

வெடியுப்பு, சீனாக்காரம், வெங்காரம், நவச்சாரம், பூரம், துரிசு இவ்வாறும் சமமாய்க்கூட்டி கல்வத்திலிட்டு அரைத்து ஒரு பீங்கானில் போட்டு வேண்டிய அமுரிவிட்டு கரைத்து பனியில்வைக்கப் பொங்கும். பொங்கிநின்ற பிறகு எடுத்து வைத்துக்கொள்ளவும். இந்த ஜெயநீரால் சகல சரக்குகளையும் கட்டலாம்.

## கோழிமுட்டைத் தயிலமிறக்கும் விதம்

10 கோழிமுட்டைகளை வெந்நீரில்போட வெந்துபோகும். அவைகளை எடுத்து உடைத்து உள்ளிருக்கும் மஞ்சட்கருவை மாத்திரம் எடுத்து இரும்பு சட்டியிலிட்டு அடுப்பின்மேல் வைத்து நிதானமாய் (நெருப்பை) எரித்தால் அது புகைந்து கருகிவரும். அந்த சமயத்தில் சட்டியைச் சாய்த்துப்பிடித்து கருவை மேற்பக்கமாக ஒதுக்கினால் அதிலிருந்து தைலம் கசிந்து கீழ் இறங்கும். அதை கரண்டியால் எடுத்துக்கொள்ளவும். இதை குழந்தையின் மாந்தங்களுக்கு அனுபானத்தில் 10 முதல் 20 துளி கொடுக்கலாம்.

## பாஷாண ஜெயநீர்

ஒரு மண்தோண்டியின் கழுத்துக்குகீழ் எட்டுவிரற்கடை அகலங் கழுத்தைச்சுற்றிவர சுண்டைக்காய் நுழையும்படியான சிறு துவாரங்களை நறுக்கமாய் செய்து அந்த தோண்டியில் 2½ சேர் பன்றிமாமிசத்தைப் போட்டு அதன்மேல் அரை சேர் வெள்ளைப்பாஷாணத்தை பொடித்துப்

பரப்பி பிறகு அப்பாஷாணத்தின் மேல் மறுபடியும் 2 1/2 சேர் பன்றி மாமிசத்தைப் போட்டு அகலால் மூடி 7 சீலைமண் செய்து உலர்த்தி தோண்டியின் கழுத்துக்கு அழுத்தமான கயிற்றைக்கட்டி இலுப்பைத் தோப்பில் இலுப்பை மரங்கள் பூக்குங்கால் ஆரம்பத்தில் மேற்படி கயிறு கட்டின தோண்டியை இலுப்பைத் தோப்பின் மத்தியில் ஓர் இலுப்பை மரத்தின் மேல் வலுவாய் கட்டிவிடவும். இலுப்பைப் பூவுக்கு வரும் வண்டுகள் தோண்டியின் துவாரவழியாய் தோண்டிக்குள் போய்வந்து கொண்டே யிருக்கும். பூக்கும் நாள்சென்றபிறகு எடுத்துப்பார்க்க அந்த தோண்டியில் ஒரு நீண்டபுழு உண்டாயிருக்கும். அதை எடுத்து ஒரு சீசாவில் போட்டு வைத்துக்கொள்ளவும். மறுநாள் அது நீராகிவிடும். இதுதான் பாஷாண ஜெயநீர். இந்த ஜெயநீரால் சரக்குகளை கட்டலாம் பலன் அடையலாம்.

## கஸ்தூரி மெழுகு

கஸ்தூரி விராகனிடை 1, பச்சைக்கர்ப்பூரம், விராகனிடை 2, கோரோசனை, குங்குமப்பூ கிராம்பு, வால்மிளகு வகைக்கு விராகனிடை 4, புனுகு, சவ்வாது வகைக்கு விராகனிடை ¼, ஏலக்காயின் அரிசி, சன்ன லவங்கப்பட்டை வகைக்கு விராகனிடை 8. இவைகளில் சூர்ணிக்கவேண்டியவைகளைச் சூர்ணித்து பிறகு எல்லாம் ஒன்றாய் சேர்த்து கற்பூரவாசனையுடைய வெற்றிலைச்சாற்றாலும் கற்பூரவல்லிச் சாற்றாலும் தூதுளைச் சாற்றாலும் இஞ்சிச்சாற்றாலும் மிளகு கசாயத்தாலும் சித்திரமூல வேர்ப்பட்டைக் கசாயத்தாலும் பொற்றலைகையாந்தகரைச் சாற்றாலும் தனித்தனியே ஒவ்வொரு ஜாமம் அரைத்து நிழலில் உலர்த்தி பிறகு சுத்தமான தேன்விட்டு மெழுகு பதமாய் அரைத்து வைத்துக்கொள்க. ஒரு பயிர் அளவு எடுத்து தேனிலிட சுரம், கபரோகங்கள், ஜன்னி, சீதளம், மாரடைப்பு முதலிய சகலவியாதிகளும் குணமாகும்.

## கந்தக மெழுகு

சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம் விராகனிடை 40. ஒரு அகண்ட இரும்புச்சட்டியில் போட்டு தீபம் போல் எரித்து இரும்புக் குரட்டால் கிண்டி தயிலம் போல உருகிவருகிற சமயத்தில் கொம்புத்தேன் பலம் 2, கொஞ்சம் கொஞ்சமாய் விட்டு கிண்டியபின்பு அதில் சுத்தி செய்த வீரம், சுத்திசெய்த ரசகர்ப்பூரம், சுத்திசெய்த ரசம் வகைக்கு விராகனிடை 12, இவைகளை மைப்போல் சூர்ணித்த தூளையும் 2பலம் தேனையும், கொஞ்சம் கொஞ்சமாய் விட்டு ஓயாமல் கிண்டிக்கொடுத்து மெழுகானதின் பேரில் சிவந்த பதத்தில் ஆற்றி எடுத்துவைத்துக் கொண்டு அதில் புளியங்கொட்டை அளவு எடுத்து பனைவெல்லத்தில் வைத்து புழுங்கரிசி தவிட்டில் புரட்டி தினம் காலை, மாலை 3 நாள் கொடுத்து

புளி உப்பு தள்ளி பசுவின் பால், பச்சைபயிறு, கத்திரிப்பிஞ்சு, துவரை சீனி நெய் சேர்த்து பத்தியம் வைத்து 7ம் நாள் தலைக்கு தண்ணீர் வார்த்து 9ம் நாள் பாலையும் மிளகையும் அரைத்து கொதிக்கவைத்து சிரசில் தேய்த்து ஸ்நானஞ்செய்து, 11ம் நாள் வாததேகமானால் ஆமணக் கெண்ணெய், வேப்பெண்ணெய், பசுவின் நெய் இவைகளை ஓரளவாக சேர்த்து காய்ச்சி தேய்த்து ஸ்நானஞ்செய்விக்கவும். மற்ற தேகத்துக்கு ஆமணக்கெண்ணெய் மட்டும் தேய்த்து ஸ்நானஞ்செய்விக்கவும். பக்ஷவாதம், பார்சுவாதம், தனுர் வாதம், இளம்பிள்ளைவாதம் முதலான வாதம் (80), கிரந்தி (9), சூலை (18), யோனிப்புற்று, லிங்கப்புற்று, குஷ்டம் (18), குரைநோய் மேகப்புண், சொறி, புரை, அண்டவாயு, அண்டசூலை, அந்தரவாயு முதலான சகல வாயு, குன்மம் (8), மேகம் (20), அரையாப்பு (5) முதலிய அனேக கடூரரோகங்கள் குண மாகும். வாய்ப்பிடித்தால் சீனாக்காரஜலம் கொஞ்சம் சாப்பிடவும். கருவேலம்பட்டை கசாயத்தால் வாயைக் கொப்பளிக்கவும். சொற்ப வாயுக்கு பறங்கிப்பட்டை கசாயத்தில் ஒரு குன்றிமணி இடை கொடுக்க குணமாகும்.

## கல்பவிருக்ஷ மெழுகு

தாளகம், ரசம், வெள்ளைப்பாஷாணம், வெண்காரம் வகைக்கு விராகனிடை 5 இவைகளை சுத்திசெய்து எருக்கம்பாலால் 4 ஜாமம் அரைத்து வெள்ளைத்துணியில் முடித்து வைத்துக்கொள்க. ஒரு கலயத்தில் திருகுக்கள்ளிப்பாலை ஒரு சேர்விட்டு மேற்படி துணிமுடிச்சியை தொளர்ந்திரமாய் கட்டி எரித்து எடுத்துப்பார்க்க மெழுகாயிருக்கும். இதில் கடுகு அளவு வீதம் வியாதிகளுக்குக் கொடுக்கலாம். இதினால் பலன் அடையலாம்.

## கரியுப்பு செந்தூரம்

ஒரு படி கரியுப்பை கல்வத்திலிட்டு ஆகாசத்தாமரையிலையின் சாற்றால் 3 ஜாமம் அரைத்து வில்லைத்தட்டி உலர்த்தி 20 எருவில் புடம் போடவும். இவ்விதமாய் சிவப்பாகும் வரையில் அதாவது 11 புடம்போட செந்தூரமாகும். பணவிடை எடுத்து தேனில் கொடுக்க குன்மம் (8), சகல உதரரோகங்கள் குணமாகும்.

## நரைத்தமயிர் கருப்பாக மருந்து

நெல்லிக்காய் பலம் 3, கடுக்காய், தானிக்காய், அரப்பொடி வகைக்கு பலம் 1, மாங்காய் கொட்டைப் பருப்பு பலம் 5 இவைகளை ஜலமிட்டு

அரைத்து ஒரு நாள் முழுமையும் இரும்புவாணாலின் உள்புறத்தில் தடவி வைத்து மறுநாள் எடுத்து மயிர்நரைத்தயிடத்தில் தடவிவர மயிர் கருப்பாகும்.

## மயிர்முளைக்காமலிருக்க மருந்து

சங்குச்சூர்ணம் பலம் 2, அரிதாரம் பலம் 1, மனோசீலை பலம் ½ சவுக்காரம் பலம் 1 இவைகளை ஜலமிட்டு அரைத்து, மயிர் முளைக்காமலிருக்க வேண்டிய இடத்தில் 7 தடவை தடவிவர மயிர் முளைக்கவே மாட்டாது. கத்தரிக்கோலால் மயிரை நீக்கி பிறகு மருந்தை தடவினால் மறுநாள் கத்தியால் சவரஞ்செய்ததுபோல அவ்வளவு வளவளப்பாயிருக்கும்.

## பச்சைக்கர்ப்பூரப் பொடி

பச்சைக்கர்ப்பூரம், துத்தம், துரிசு, சந்தனம், அரிதாரம், பீதரோகணி, இவைகளை சமமாய் சேர்த்து மைப்போல், சூரணித்து எள்ளுப் பிரமாணங்கண்ணில் தூவ சகல நேத்திர ரோகங்களும் குணமாகும்.

## கர்ண ரோக நாசனி

நல்லெண்ணெயும் தைவேளைச் சாறும் சமமாய் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி தினம் 10 துளி காதிலிட காது இரைச்சல் தீரும். வில்வப்பழச் சதையை நல்லெண்ணெயில் போட்டு காய்ச்சி வடித்து தினம் 10 துளி காதிலிட்டுவர காதிற்சீழ்வருதல் தீரும். கார்பாலிக் அசிடில் 5-6 துளியை ஒரு அவுன்ஸ் தேங்காய் எண்ணெயிலிட்டு குலுக்கி தினம் காலை - மாலை 5-6 துளி காதிலிட்டு வர சகல கர்ணரோகங்கள் குணமாகும்.

## தந்தரோக நாசனி

பல் கூச்சல், பல்வலி, சொத்தைப்பல் முதலிய சகல தந்த ரோகங்களுக்கும் கார்பாலிக் ஆசிட் 3 கிறேன்ஸ் விளாம்பிசின் 9 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து அரைத்து சிறுமாத்திரைகளாக்கி ஒரு மாத்திரையை சொத்தைப் பல்லுக்குள் வைத்து விரலால் அமுக்கி பிடித்துக்கொள்ள குணமாகும். இப்படியே மற்ற தந்த வியாதிகளுக்குஞ் செய்யவும்.

# இங்கிலீஷ் மருந்துகள் - English Medicines

*அகேரிகஸ் ஆல்பஸ்:—* (Agaricus Albus) இம்மருந்தின் *குணம்:—* ஐரோப்பாவில் உண்டாகிற செடியின் மேல் வளர்கிற ஓர்வித மாக் காளான் வெள்ளையாயும், இலேசாயும், வாசனையாயும், தித்திப்பாயும், கசப்புமுள்ளது. *செய்கை:—* விரேசனகாரி, ரத்த ஸ்தம்பனகாரி, சங்கோசனகாரி, வமனகாரி, *உபயோகம்:—* மலபந்தம், அதிசாரம், மார் எரிச்சல், இரவில் காணும் வியர்வை, ரத்தகாசம் இவைகளுக்கு இதைக் கொடுக்க குணமாகும். *அளவு:—* தூள் *5-30,* கிரேன்ஸ் கொடுக்கலாம். டிங்சர் *20-60,* மினிம்ஸ் கொடுக்கலாம். இதன் உப்பாகிய Agaric acid *1/16* to *1/6* கிறேன் கொடுக்கலாம்.

*ஆடோனிஸ்:—* (Adonis) இம்மருந்தின் *குணம்:—* தென் ஐரோப்பா தேசத்தில் விளையும் ஓர் செடியின் இலை. *செய்கை:—* பலகாரி *உபயோகம்:—* இருதயரோகம், நீர்க்கோவை இவைகளுக்கு நல்லமருந்து. Bromide of pottassium வும் இதுவும் சேர்த்துக்கொடுக்க காக்கைவலி ரோகங் குணமாகும். *அளவு:— 2-6* கிறேன்ஸ் டிங்சர் *10-30* மினிம்ஸ் கொடுக்கலாம்.

*அபாமார்பைன் ஹைட்ரோகுளோரைட்:—* (Apomorphine Hydrochloride) இம்மருந்தின் *குணம்:—* ஆல்கோஹாலில் கரையும், வாசனை இல்லை, *செய்கை:—* வமனகாரி, கபஹரகாரி, சமனகாரி. *உபயோகம்:* நாள்பட்ட கபம், மாந்தம், நரம்புநோய், ஜலதோஷம், இவைகளுக்கு கொடுக்க நல்ல மருந்து. விஷத்தைச் சாப்பிட்டவர்களுக்கு இந்த மருந்தைக்கொடுக்க விஷம் முறிந்துவிடும். உன்மாதம், விக்கல், காக்கைவலி, சூர்யாவர்த்தனவாதம், சுவாசகாசம், இவைகளுக்குக் கொடுக்க குணத்தைத்தரும் *அளவு:— 1/10* to *1/4* கிரேன் அனுபானத்தில் கொடுக்கவும்.

*அபியால்:—* (Apiol) இம்மருந்தின் *குணம்:—* இது ஓர்சாதி பழத்தினின்று எடுக்கப்படுகின்ற பச்சை நிறமான எண்ணெயைப் போன்ற ஜலபதார்த்தம். *செய்கை:—* ருதுவர்த்தனகாரி. *உபயோகம்:—* சூதகக்கட்டு, சூதகவயிற்றுவலி இவைகளுக்கு இது சஞ்சீவி *அளவு:— 3-5* மினிம்ஸ் அனுபானத்தில் கொடுக்கவும்.

*அரிஸ்டோல்:—* (Aristol) *குணம்:—* இது சிவப்பு ஊதாநிறமுள்ள தூள். ஜலத்தில் கரையாது. ஈதரிலும் எண்ணெயிலும் கரையும். வெளிச்சம்பட்டால் பூதியங்கள் பிரிந்துவிடும். ஆதலால் கருப்பு சீசாவில்போட்டு வைக்கவேண்டும். *செய்கை:—* அழுகுதலைத்தடுக்கும்.

**உபயோகம்:—** ஐடோபாரத்தை விட இது மேலான மருந்து, நஞ்சு பதார்த்தமல்ல, ஆகையால் முகத்தில் காணும் ரணம், கண்மடல் ரணம், மேகரணம், கரப்பான், அக்கினி ரணம், அக்கி, சருமரோகம், பிரமேகம், விப்புருதி, காதில் சீழ்வடிதல் முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்: உள்ளுக்கு சாப்பிடக்கூடாது.

**அலிட்ரிஸ்:—** (Aletris) **குணம்:—** அமெரிக்காவில் விளையும் ஓர் செடியின் வேர், **செய்கை:—** பலகாரி, மூத்திரவர்த்தனகாரி, ஜாடராக்கினி வர்த்தனகாரி, விரேசனகாரி. **உபயோகம்:-** சூதகக்கட்டு, சூதகவயிற்றுவலி, அகாலப்பிரசவம், மலடுரோகம் இவைகளுக்கு இது மகாசிலாக்கியமான மருந்து. **அளவு:—** வேரின்தூள் 10 கிறேன்ஸ் அல்லது இந்த மருந்தின் உப்பாகிய அலிட்ரின் (Aletrin) ½ - 4 கிறேன்ஸ் அனுபானத்தில் கொடுக்கவும். டிங்சர் 1-2 திராம் கொடுக்கலாம்.

**ஆண்டிபெப்ரின்:—** (Antifebrin) **குணம்:—** இது தூளாயும் கொஞ்சம் காரமாயுமிருக்கும். வெந்நீர், ஆல்கோஹால், குளோரோபாரம் இவைகளில் கரையும். **செய்கை:—** முறை வியாதிரோதி, சமனகாரி, அழுகுதலைத் தடுக்கும். **உபயோகம்:—** சுரம், சந்நிபாத சுரம், நரம்புவேதனை, தலைவலி, கபரோகம், காக்கைவலி இவைகளுக்கு இது வெகுநல்லமருந்து. **அளவு:—** 1-3 கிறேன்ஸ் கொடுக்கலாம் Spirit Ether Nitros, Sprit Ammonia Aromatic இவைகளைச் சேர்த்துக் கொடுப்பது நலம்,

**க்லிமன்ஸ் ஸொலுயூஷன்:—** (Clemen's solution) **உபயோகம்:—** மதுமேகத்துக்கும், காக்கைவலிக்கும் இந்த மருந்தில் 5 முதல் 10 துளி ஒரு அவுன்ஸ் சுத்த ஜலத்தில் விட்டு காலையிலும் மாலையிலும் கொடுக்க தவறாமல் குணமாகும்.

**ஆண்டிபைரின்:—** (Antipyrin) **குணம்:—** இது வெள்ளை நிறமாயும், தித்திப்பாயும், கசப்பாயுமிருக்கும். ஜலத்தில் கரையும். கந்தகத்திராவகம் சேர்த்தால் மஞ்சள் நிறமாகும். **செய்கை:—** சுரஹரகாரி, வேதனா சாந்தகாரி, நரம்பின் சமனகாரி, உச்சாககாரி, மலகாரி, ரத்தஸ்தம்பனகாரி, சுவேதகாரி. **உபயோகம்:—** மாரடைப்பு, சுவாசகாசம், நடுக்கல், கபம், குலைஎரிவு, பயித்தியம், வயிற்றுவலி, மூத்திரப்பை வீக்கம், மது மூத்திரம், சூதக வயிற்றுவலி, காக்கைவலி, எல்லாசுரங்கள், எரிகுன்மம், சந்துவாதம், தலை நோய், ஒற்றைத்தலைநோய், சூதகசன்னி, இடுப்புவலி, நரம்புவேதனை, மார் வலி, க்ஷயம், சகலதாபம், கீல்வாதம், சந்நிபாதம் முதலிய அநேக ரோகங்களுக்குக் கொடுக்கலாம். **அளவு:—** 5-20 கிறேன்ஸ் சுத்தஜலத்தில் கொடுக்கலாம்.

*கார்பாலிக் ஆசிட்:—* (Carbolic Acid) *குணம்:—* இது தாரிலிருந்து எடுக்கிற பதார்த்தம். ஊசிக்கம்பிகள் போல் வெளுத்திருக்கும். சூடுபட்டால் எண்ணெய்போலாகும். ஜலத்தில் அற்பமாயும், சாராயம், கிளிஸிரினில் உடனே கரையும். *செய்கை:—* விரணகாரி, உச்சாககாரி, சோணகாரி, பூத நாசினி, அழுகுதலைத்தடுக்கும், ஸ்மிருதிரோதகாரி, கிருமிநாசகாரி, சமன காரி. *உபயோகம்:—* வாந்தியை நிறுத்தவும், க்ஷயம், கபம், வயிற்று பொருமல் முதலியவைகளுக்கும் உள்ளுக்குக் கொடுக்கலாம். 1 அவுன்ஸ் கிளிசிரினில் 30 கிறேன்ஸ் கலந்து தொண்டை ரணத்துக்கு தடவவும். 1 அவுன்ஸ் ஜலத்தில் 2 கிறேன்ஸ் கலந்து வாயை கொப்பளிக்கவும். 1 அவுன்ஸுக்கு 15-30 கிறேன்ஸ் கலந்து ரணங்களுக்கு கிலேதமாகவும் உபயோகிக்கலாம். பிளவை, சொறி, சிரங்கு முதலிய சரும ரோகங்களுக்கு மேலுக்கு போடலாம். *அளவு:—* 1 முதல் 2 கிறேன்ஸ் உள்ளுக்குக் கொடுக்கலாம். சொத்தைப் பல்லுக்கு பிசினுடன் கலந்து பல்லின் மேல் போடலாம்.

*பென்ஜோட் அமோனியா:—* (Benzoate of Ammonia) *குணம்:—* இது பளிங்குப்போலிருக்கும், ஜலத்தில் கரையும், *செய்கை:.* உஷ்ணகாரி, அழுகு தலைத்தடுக்கும், மூத்திரவர்த்தனகாரி, மூத்திரேந்திரிய ரோகநாசகாரி. *உபயோகம்:—* மூத்திரதாபனரோகம், கல்லடைப்பு, சதை அடைப்பு, கிரிச்சினம், நீர்க்கோவை இவைகளுக்கு இது சஞ்சீவி. வெகு நல்லமருந்து. *அளவு:—* 5 முதல் 15 கிறேன்ஸ் வீதம் தினம் 2-3 தடவை ஜலத்தில் கலந்து கொடுக்கலாம்.

*ஸப்நைட்ரேட் ஆப் பிஸ்மத்:—* (Subnitrate of Bismuth) இம்மருந்தின் *குணம்:—* இது பளுவாயும் வெள்ளையாயுமிருக்கும். ஆவிநீர்கலந்த வெடி உப்புத்திராவகத்தில் கரையும். ஜலத்தில் கரையாது. *செய்கை:* சங்கோஷ்ண காரி, சமனகாரி, வியதாபேதகாரி, பலகாரி, அழுகுதலைத் தடுக்கும். *உபயோகம்:—* அஜீர்ணம், இரைப்பையின் தாபம், இரைப்பை இசிவு, குன்மம், நீனிப்பை ரணம் இவைகளுக்கு இது மகா நல்ல மருந்து. அபினி, சோடா இவைகளுடன் சேர்த்து, பேதி, கிரகணி இவைகளுக்கு கொடுக் கலாம். ஸ்திரீ புருஷர்களின் வெள்ளை விழுதலுக்கு ஓர் அவுன்ஸ் ஜலத்தில் 60 கிறேன்ஸ் சேர்த்து பீச்சாங்குழலால் அடிக்கலாம். சரும ரோகங்கள், முலைக்காம்பு வெடிப்பு, உதடு வெடிப்பு, காயம் இவைகளுக்கு மேலேபோடலாம். ஜலதோஷத்துக்கும் நாசிகா துவார தாபனத்திற்கும் நஸ்யமிடலாம். *அளவு:—* 5 முதல் 10 கிறேன்ஸ் வீதம் தினம் 2-3 தடவை கொடுக்கலாம்.

*ரேவல் சின்னி:—* (Rhubarb-ரூபார்ப்) *குணம்:—* இது துவர்ப்புடன் கசப்பாயிருக்கும். ஓர்வித வாசனையுண்டு. இதைச்சாப்பிட்டால் மூத்திரம்

மஞ்சளாயிறங்கும். செய்கை:— ஸங்கோசனகாரி. விரேசனகாரி, ஜாடராவர்த்தனகாரி, பலகாரி, உபயோகம்:- மலபந்தமுடைய குழந்தைகளுக்கும் பாண்டுரோகமுடைய ஸ்திரீகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும் முக்கியமாய் இதைக் கொடுக்கலாம். அதிசார பேதியில் கெட்ட மலத்தை வெளிப்படுத்த இதைக் கொடுக்கலாம். மந்தாக்கினிக்கு தனி அல்லது வேறு மருந்துகளோடு சேர்த்துக் கொடுக்க குணமாகும். அளவு:- தூள் 20-40 கிறேன்ஸ் தேனில் கொடுக்க பேதியாகும். 3-10 கிறேன்ஸ் கொடுக்க பசியை உண்டாக்கும். சத்து (Extract) 3-8 கிறேன்ஸ் தீபன காரியாகும். 10-20 கிறேன்ஸ் விரேசனகாரியாகும்.

பவாசி:— (Bhawachee) குணம்:— இந்தியாவில் அகப்படும் ஓர் வித செடியின் வித்து. செய்கை:— கிருமிநாசகாரி. உபயோகம்:— குஷ்டம், வெண்குஷ்டம், நாள்ப்பட்ட சருமரோகங்கள் இவைகளுக்கு மேலுக்கும் உள்ளுக்கும் உபயோகிக்கலாம். வெண்குஷ்டத்துக்கு உபயோகித்தால் வெள்ளை மறைந்து விடும். அளவு:— இதன் டிங்சர் ½ முதல் 2 திராம் உள்ளுக்கு மாத்திரம் கொடுக்கவும்.

ப்ளாட்டா ஓரியண்டாலிஸ்:— (Blatta Orientalis) குணம்:— ருஷ்யா தேசத்தின் ஓர் செடி. செய்கை:— மூத்திரவர்த்தனகாரி, உபயோகம்:— மகோதரம், நீர்க்கோவை இவைகளுக்கு கொடுக்க மூத்திரம் அதிகமாய் இறங்கும்படி செய்து அம்மூத்திரத்திலிருக்கும் ஆல்பியூமன் (Albumen) என்னும் கெட்ட பதார்த்தத்தை குறைத்துவிடும். அளவு:— மேற்படி செடியின் கசாயம், அல்லது டிங்சர் கொடுக்கலாம். அந்த செடியிலிருந்து எடுக்கப்படும் உப்பாகிய ஆண்டி ஹைட்ரோபின் (Antihydropin) 4 முதல் 5 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

ப்ரோமைடியா:— (Bromidia) குணம்:— இது ஜலரூபமாயிருக்கும். ஓர் திராமில் 15 கிறேன்ஸ் Chloral Hydras, 15 கிறேன்ஸ் Potassium Bromide, ½ gr. Extract Cannabis (கஞ்சாசத்து) ½ gr. Extract Hyosami இருக்கிறது. செய்கை:— நித்திராகாரி. உபயோகம்:— நித்திராபங்கம், நரம்புவேதனை, தலைவலி, வலிப்பு, வயிற்றுவலி இவைகளுக்கு இது வெகு நல்லமருந்து. அளவு:— ஒரு திராம் கொடுக்கலாம்.

க்ரைஸோபானிக் ஆசிட்:— (Chrysophanic Acid) இம்மருந்தின் குணம்:— இது ஆரஞ்சு பழநிறமாயும், தூளாயும் இருக்கும், எண்ணெயில் கரையும், ஜலத்தில் கரையாது. செய்கை:— எரிச்சல் உண்டாகும். உஷ்ணகாரி, உபயோகம்:— இதை வெண்ணெயில் கொஞ்சம் சேர்த்து கரப்பான், படர்தாமரை, கடி முதலியவைகளுக்கு மேலுக்கு 2-3 தடவை தடவி வர குணமாகும்.

*ஸாலிஸிலிக் ஆசிட்:—* (Salicylic Acid) *குணம்:—* இது வெள்ளை யாயும் ஊசிமுனைபோல் பளபளப்பாயுமிருக்கும். வாசனை இல்லை. எரிச்சலைத்தரும். இனிப்போடு காரமுள்ளது. குளிர்ந்த ஜலத்தில் கொஞ்ச மாயும், வெந்நீரில் அதிகமாயும் கரையும். *செய்கை:—* அழுகுதலைத் தடுக்கும். உக்கிரரோக சமனகாரி, சுரஹரகாரி, ரத்தஸ்தம்பனகாரி, உஷ்ண காரி, *உபயோகம்:.* கீல்வாதம், விஷசுரம், எல்லாசுரங்கள், சீதபேதி, வாய்க் கிரந்தி, கபம், நரம்புவேதனை இவைகளுக்கு இது வெகு சிலாக்கியமான மருந்து. Bismuth Subnitrate-ஐ சேர்த்துக் கொடுத்தால் இரைப்பையின் எரிவு தீரும். சருமரோகங்கள், ரணம், சொறி, சிரங்கு இவைகளுக்கு மேலுக்குப் போட குணமாகும். *அளவு:— 5-20* கிறேன்ஸ் கொடுக்கலாம்.

*ஸோடிஸாலி ஸிலாஸ்:—* (Sodii Salicylas) *குணம்:—* இது தித்திப் பாயும் வாசனையற்றதாயுமிருக்கும். ஜலத்தில் கரையும். *செய்கை:—* சுரஹர காரி, அழுகுதலைத் தடுக்கும். *உபயோகம்:—* கீல்வாதம், நுரையீரல்தாபம், மதுமூத்திரம் இவைகளுக்கு கொடுக்க இது வெகு நல்லமருந்து. சுரம், சகலதோஷம், அஜீர்ணபேதி, அக்கினிமந்தம், தலைவலி, மலபந்தம், மூத்திரப்பை வீக்கம் இவைகளுக்கு கொடுக்க குணமாகும். *அளவு:— 10* முதல் *30* கிறேன்ஸ் ஜலத்திலாவது, வேறு அனுபானத்திலாவது கொடுக்கலாம்.

*அல்ஸ்டோனியா கான்ஸ்ட்ரிக்டா:—* (Alstonia constricta) *குணம்:—* இது ஓர் மரத்தின்கட்டை. *செய்கை-உபயோகம்:—* இதற்கு சுரஹரகாரி செய்கையிருப்பதால் குளிர்சுரம், விடாசுரம், முறைசுரம் முதலிய வைகளுக்கு கொடுத்து அனுகூலமாயிருக்கிறது. *அளவு:—* தூள் *5* கிறேன்ஸ் கொடுக்கலாம். Liquid Extract *2* முதல் *5* மினிம்ஸ் கொடுக்கலாம்.

*காக்டஸ் க்ராண்டிப்ளோரா:—* (Cactus grandiflora) *குணம்:—* ஓர் செடியின் புஷ்பம். *செய்கை:—* மூத்திரவர்த்தனகாரி, சமனகாரி. *உபயோகம்:—* மாரடைப்பு, மேல்சுவாசம் முதலிய இருதயரோகங்களுக்கு இது அடுத்த மருந்து. நீர்க்கோவைக்கு நல்ல மருந்து. இந்த புஷ்பத்தினால் செய்யப்படும் (Liquid Extract) தான் விசேஷமாய்க் கொடுக்கப்படுகின்றது. *அளவு:— 5* முதல் *10* துளி வரையில் கொடுக்கலாம்.

*காபீன்:—* (Caffeine) *குணம்:—* இது வெள்ளையாயும், கசப்பாயு மிருக்கும் ஜலத்தில் கரையும். *செய்கை:—* உஷ்ணகாரி, மூத்திர வர்த்தனகாரி, பலகாரி, ஜாடராக்கினிவர்த்தனகாரி. *உபயோகம்:—* இருதய சோர்வு, எல்லாதலைவலிகள், மகோதரம் இவைகளுக்கு இது மகா உயர்ந்த மருந்து. நீர்க்கோவைக்கு அடுத்த மருந்து. சுவாசகாசத்துக்கு திவ்வியமருந்து.

5 கிறேன்ஸ் வீதம் 4 மணிக்கு ஓர் தடவைக் கொடுக்கவும். இராக்காலத்தில் கொடுத்தால் தூக்கம் வராது. அளவு:— 1 முதல் 5 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

காபிடிடிஸ்:-(Coptitdis) குணம்: அஸ்ஸாம்மலையில் விளையும் ஓர் செடியின் வேர். இதன் மேல் மஞ்சள் நிறமாயும் சாப்பிட்டால் கசப்பாயுமிருக்கும். இதன் உப்பு மஞ்சள் நிறமாயிருக்கும். செய்கை:— பலகாரி. உபயோகம்:— பலஹீனம், சுரம் முதலியவைகளால் கைகால் சக்தியில்லாமல் போகுதல், மந்தாக்கினி, அஜீர்ணம், முறைக்காய்ச்சல் இவைகளுக்கு இது நல்லமருந்து. உடனே குணத்தைக்காட்டும். அளவு:— வேரின் தூள் 10-15, கிறேன்ஸ் வீதம் 2-3, தடவைகொடுக்கலாம். டிங்சர் ½ முதல் 2 திராம் கொடுக்கலாம். இதனுடைய உப்பாகிய Coptidis salt ஐயும் கொடுக்கலாம். ஆனால் அளவு குறைவாகக் கொடுக்கவேண்டும்.

காலோபைலின்:— (Caulophyllin) குணம்:— ஓர் செடியின் வேரிலிருந்து எடுக்கப்படும் உப்பு. செய்கை:— பலகாரி, கிருமிநாசகாரி, ருதுவர்த்தனகாரி, மூத்திரவர்த்தனகாரி, சமனகாரி, அங்காகர்சனநாசகாரி, ஸ்வேதகாரி. உபயோகம்:— சூதகசன்னி, சூதகக்கட்டு, அகாலப்பிரசவம் இவைகளுக்கு இந்த மருந்து சஞ்சீவி என்று அனுபோகத்தில் தெரியவருகிறது. அளவு:— 1 முதல் 4 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

கோகேய்ன் ஹைட்ரோகுளோரைட்:— (Cocaine Hydrochloride) குணம்:— இது தூளாயும், கசப்பாயும், கணைப்புள்ளருசியாயும் திமிரோடு கூடியதாயுமிருக்கும். ஜலம் ஆல்கோஹாலில் கரையும். செய்கை: ஸ்மிருதிரோதகாரி. உபயோகம்:— இது மிகவும் உபயோகமுள்ளமருந்து. சந்து வாதம், நரம்புவேதனை, கக்கிருமல், சதையடைப்பு, ஜலதோஷம் முதலியவைகளுக்கு உள்ளுக்குக் கொடுக்கலாம். இந்த மருந்து Chloroform யைப்போல் சஸ்திரவைத்தியத்தில் உணர்ச்சியில்லாமல் செய்து நோவைத் தடுப்பதற்கு உபயோகப்படுத்தலாம். நேத்திரரோகத்திற்கு 100 க்கு 2-4, பங்கு ஸொலுயூஷனாக செய்து உபயோகிக்கலாம்.

கோகோஇலை:— (Coca leaves) குணம்:— இது பச்சை அல்லது சங்கல் மங்கலான நிறமுடையது, வாசனையாயும் கசப்பாயுமிருக்கும். செய்கை:— உச்சாககாரி, வீரியவர்த்தனகாரி, பலகாரி, ஸ்மிருதிரோதகாரி, உதரவாதஹரகாரி, கபஹரகாரி, ருதுவர்த்தனகாரி, அதிகமானால் நஞ்சு, உபயோகம்:— அஜீர்ணம், மேகம், சுவாசகாசம், இந்திரியஸ்கலிதம், புருஷத்தன்மையில்லாமல் போகுதல், பலஹீனம் இவைகளுக்கு கொடுக்கத்

தக்க மருந்து. அளவு:— தூள் ½ முதல் 2 திராம்கொடுக்கலாம். Extract 2 to 10 grs. Liquid Extract ½ to 1 dram கொடுக்கலாம்.

கோடியா:—(Codeia)குணம்:— இது வெள்ளை, மஞ்சள் நிறத் தோடுகூடிய நிறமாயிருக்கும். கொஞ்சம் கசப்புள்ளது. வெந்நீர் ஆல்கோஹாலில் கரையும். செய்கை:— சமனகாரி, நித்திராகாரி. உபயோகம்:— க்ஷயரோகத்தின் இருமலைக்கண்டிக்க இது திவ்விய ஔஷதம். மது மூத்திரத்தின் மதுவைக் குறைக்க இதற்கு அதி வல்லமை உண்டு. பத்தியம்:—அன்னத்துக்குப்பதிலாக கோதுமையைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். அளவு:— ¼ முதல் 2 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

எக்ஸால்ஜின்:— (Exalgen) குணம்:— இது ஊசியைப்போன்ற சிறு கட்டிகளாயும், கொஞ்சம் கசப்பாயுமிருக்கும். சலம், ஆல்கோஹாலில் கரையும். செய்கை:— வேதனாசாந்தகாரி, முறைவியாதிரோதினி, அழுகு தலைத்தடுக்கும். உபயோகம்:— நரம்புவேதனை, பல்நோய், இவைகளை நீக்கும். மதுமூத்திரத்தின் மதுவை எடுத்துவிடும். சலதோசத்துக்கு கொடுக்கலாம். அளவு:— ½ முதல் 1 கிறேன் 24 மணி நேரத்துக்குள் 14 கிறேன்ஸுக்கு அதிகப்படாமல் கொடுக்கலாம்.

காலின் ஸேனியா:— (Collinsania) குணம்:— ஓர் செடியின் வேர். செய்கை:— பலகாரி, மூத்திரவர்த்தனகாரி, சங்கோஷணகாரி, சுவேதகாரி, வியதாபேதகாரி. உபயோகம்:— கல்லடைப்பு, நீர்க்கோவை, ஸ்திரீயின் வெள்ளை, கீல்வாதம், அஜீர்ணம், சுவாசகாசம், மூத்திரப்பைத் தாபனம் இவைகளுக்கு கொடுக்க இது வெகு நல்லமருந்து. அளவு:— இந்த மருந்தின் Liquid Extract 15 முதல் 30 மினிம்ஸ் கொடுக்கலாம்.

லிகுவிட் எக்ஸ்ட்ராக்ட் பிஸ்கிடியா:— (Liquid Extract Piscidia) குணம்:— இது ஓர் மரத்தின் பட்டை. செய்கை:— நித்திராகாரி, வேதனா சாந்தகாரி, சமனகாரி, அங்காகர்சனநாசகாரி. உபயோகம்:— இருமல், சுவாசகாசம், கபம், க்ஷயம், முகக்குடைச்சல், பலஹீனம் இவைகளுக்கு கொடுக்க நல்லமருந்து. பல் நோவுக்கு போட உடனே குணமாகும். நரம்பு பலஹீனத்துக்கு அடுத்த மருந்து அளவு:— 30 முதல் 120 மினிம்ஸ் கொடுக்கலாம்.

லிகுவிட் எக்ஸ்ட்ராக்ட் ஹேமாமலிஸ்:— (Liquid Extract Hamamelis) செய்கை:— ஸங்கோசனகாரி, ரத்தஸ்தம்பனகாரி. உபயோகம்:— மூலவியாதி, ரத்தப்பிரவாகம், அதிசாரம், ஸ்திரீயின் வெள்ளை, ரத்தபீநசம், ரத்தவாந்தி, ரத்தகாசம், பெரும்பாடு, ரத்தம் வடிகிற மூலமுளை இவைகளுக்குக் கொடுக்க தகுதியான மருந்து. ரணம், சுளுக்கு,

க்ரீன்டிலியா:— (Grindelia) குணம்:— இது ஓர் செடியின் இலையும் தண்டுகளும். செய்கை:— அங்காகர்சனநாசகாரி, கபஹரகாரி, மூத்திர வர்த்தனகாரி, உபயோகம்:— சுவாசகாசம், சலதோஷம், சுரம், கபம், கக்கிருமல், கண்டதாபம், ஈளை, மாந்தம், மூத்திரப்பை வீக்கம், இவைகளுக்கு கொடுக்க திவ்விய மருந்து. ஸ்திரீயின் வெள்ளை, நீர் தாரையின் ரோகங்கள் இவைகளுக்கு ஜலத்தில் கலந்து பீச்சாங்குழலால் அடிக்கலாம். தீரணம், ரணம் முதலியவைகளுக்கு மேலுக்கு போடலாம். அளவு:— தூள் 10 முதல் 30 கிறேன்ஸ் கொடுக்கலாம். (Liquid Extract) ½ மணி நேரத்துக்கு ஓர் தடவை குணமாகிறவரையில் 10 முதல் 20 மினிம்ஸ் கொடுக்கலாம்.

ஜெல்ஸிமியம்:— (Gelsemium) குணம்:— இது ஓர் செடியின் வேர். செய்கை:— அங்காகர்சன நாசகாரி, சமனகாரி, சுரஹரகாரி, பலகாரி, ருதுவர்த்தனகாரி, பிரசவகாரி, ரத்தஸ்தம்பனகாரி, நித்திராகாரி, வேதனா சாந்தகாரி, முறை வியாதிரோதி. உபயோகம்:— நரம்புவேதனை, உன்மாதம், விரணசன்னி, சூதகசன்னி, காக்கைவலி, கபம், கக்கிருமல், நுரையீரல் சவ்வின் நோய், மூளைசவ்வின் நோய், நித்திரையில்லாமை, விஷசுரம், எல்லாசுரங்கள், மாந்தசன்னி, இருமல், நுரையீரலில் ரத்தம் கட்டிக் கொள்ளுதல், கிரிச்சனம், சொட்டுமூத்திரம், சர்வாங்கவாதம், கூத்தாடும் சன்னி, மூளைவீக்கம் முதலியவைகளுக்கு கொடுக்க இது மகா சிலாக்கியமான மருந்து. கண்தாரையை சுருங்க உள்ளுக்கும் விரிக்க மேலுக்கும் உபயோகிக்கலாம். இம் மருந்தை அதிகமாய்ச் சாப்பிட்டால் புருவவேதனை, மயக்கம், விரைவில்திமிர்காணும். இதை ஜாக்கிரதையாய் கொடுக்க வேண்டும். அளவு:— வேரின் தூள் 5 முதல் 30 கிறேன்ஸ் கொடுக்கலாம். Liquid Extract 1 முதல் 10 மினிம்ஸ், டிங்சர் 5-15 மினிம்ஸ் கொடுக்கலாம்.

பெர்ரி ரெடகேடம்:— (Ferri Radacatum) குணம்:— இது மிகவும் சன்னமாயிருக்கும். காற்றுப்படவைத்தால் ஆக்ஸிஜென்வாயுவை கிரஹித்து ஆக்ஸைட் ஆகிவிடும். செய்கை:— தாருட்டியகாரி, கெட்டரத்தத்தை சுத்தி செய்யும். உபயோகம்:— ரத்தத்தை சுத்திசெய்து ரத்தத்தை விருத்திசெய்யும். சோகை, பாண்டு, தேகத்தில் இரத்தம் குறைந்திருத்தல், சூதகக்கட்டு, பீலிகதாபனரோகம், குளிர்சுரம் இவைகளுக்கு எடுத்தமருந்து. குழந்தைகளுக்கு கொடுக்க வெகு நல்லமருந்து. அளவு:— 1 முதல் 5 கிறேன்ஸ் தினம் 2-3 தடவை போஜனமானவுடனே கொடுக்கலாம்.

ஐயோடோபாரம்:— (Iodo form) குணம்:— ஐயோடைனிலிருந்து எடுக்கப்படுகிற இந்த உப்பு மஞ்சள் நிறமாயிருக்கும். ஆல்கொஹாலில்

கரையும். *செய்கை:—* பூதிகந்தநாசகாரி, அழுகுதலைத் தடுக்கும். வியதாபேதகாரி. வேதனாசாந்தகாரி *உபயோகம்:—* அழிரணம், அரையாப்பு புண், கொறுக்கு, மேகரணம் இவைகளுக்கு தூளைப்போட குணமாகும். கீல்வாதம், சந்துவாதம், நரம்பு வேதனை, கண்டமாலை, நரம்பு வீக்கம், இவைகளுக்கு உள்ளுக்கு கொடுக்கலாம். *அளவு:—* ½ முதல் 2 கிறேன்ஸ் மாத்திரை, ரூபமாய் கொடுக்கலாம்.

*ஐரிஸ்:—* (Iris) *குணம்:—*இது ஓர் செடி இதிலிருந்து எடுக்கப்படும் உப்புக்கு ஐரிடின் என்று பெயர். *செய்கை:—* விரேசனகாரி, வமனகாரி, மூத்திரவர்த்தனகாரி, வியதாபேதகாரி, *உபயோகம்:—* பித்தரோகம், ஈரல் மரத்துப்போகுதல், அஜீர்ணபேதி, நீர்க்கோவை, கர்ப்பிணியின் வாந்தி இவைகளுக்கு கொடுக்க இது நல்ல மருந்து. *அளவு:—* இதன் உப்பு (Iridin) 1 முதல் 5 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

*லிகுவர் எபிஸ்பாஸ்டிகஸ்:—* (Liquor Epispasticus) *உபயோகம்:—* இதை உள்ளுக்குச் சாப்பிடக்கூடாது. தேகத்தின்மேல் புண்ணாக்க வெகு நல்லமருந்து. வெகு சீக்கிரத்தில் கொப்பளிக்கும். வாயுப்பிடிப்பு, சூலைக்கட்டு, முதலியவைகளுக்கு மேலே தடவ அந்த இடம் கொப்பளித்து வியாதி குணமாகும்.

*லூபுலஸ்:—* (Lupulus) *குணம்:—* இது ஓர் செடியின் நுனிதண்டு. நல்ல வாசனையும், கசப்பும் துவர்ப்புமுடையது. *செய்கை:—* பலகாரி, ஜாடரா வர்த்தனகாரி, சமனகாரி, மூத்திரவர்த்தனகாரி, சொற்ப நித்திராகாரி. *உபயோகம்:—* நித்திராபங்கம், வயிற்றுவலி, சருமவியாதி, சூதக ஜன்னி, குளிர்சுரம், கீல்ப்பிடிப்பு, நீர்த்தாரை எரிச்சல், இந்திரியஸ்கலிதம், நீர்த்தாரையின் நரம்புநோய், சொட்டு மூத்திரம், அஜீர்ணம், பலஹீனம் இவைகளுக்குக் கொடுக்க இது வெகு நல்லமருந்து. *அளவு:—* இதன் சத்து (Extract) 5 முதல் 15 கிறேன்ஸ் அல்லது டிங்சர் (Tincture) ½ முதல் 1 திராம் கொடுக்கலாம்.

*மெதிலால்:—* (Methylal) *குணம்:—* இது எண்ணெயைப் போன்ற எண்ணெய் பதார்த்தம். ஜலத்திலும் ஆல்கொஹாலிலும் கரையும். *செய்கை:—* நித்திராகாரி. *உபயோகம்:—* சித்தப்பிரமை, பயித்தியம் இவைகளுக்கு இது வெகு நல்ல மருந்து. அளவு: 15 முதல் 30 துளி கொடுக்கலாம்.

*மெதிலின் ப்ளு:—* (Methylene Blue) *செய்கை:—* வேதனாசாந்தகாரி, சுரஹரகாரி. *உபயோகம்:—* கீல்வாதம், சந்துவாதம், இடுப்புவலி, எல்லாசுரம், வெள்ளைவிழுதல், மது மூத்திரம் முதலியவைகளுக்கு இதைக் கொடுக்க தவறாமல் குணத்தைக்காட்டும். சுரத்துக்கு 1½ கிறேன்ஸ் வீதம்

தினம் 5 தடவையும், சந்து வாதத்திற்கு 2 கிறேன்ஸ் வீதம் தினம் 2 தடவையும், வெள்ளை விழுதல் மது மூத்திரம் இவைகளுக்கு 3 கிறேன்ஸ் வீதம் தினம் 3 தடவையும் உள்ளுக்குக் கொடுக்கலாம், சரும ரோகங்களுக்கு மேலுக்கு போடலாம். அளவு:— 1 முதல் 4 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

மெந்தால்:— (Menthol, or Pepperment Camphor) குணம்:— இது பெப்பர் மெண்ட் தைலத்திலிருந்து எடுக்கப்படும். இது கர்ப்பூர வாசனையும் பெப்பர்மெண்ட் காரமும் ருசியுள்ளது. ஜலத்தில் அற்பமாயும், சாராயத்தில் அதிகமாயும் கரையும். செய்கை:— உள்ளுக்குக் கொடுக்க உஷ்ணகாரி, உதிரவாதஹரகாரி, இதை மேலுக்கு ஸ்மிருதி ரோதகாரி, நரம்பு வேதனை சாந்தகாரி, உபயோகம்:— இதை சந்து வாதம், தலைவலி, கீல்வாதம், பக்கச்சூலை, பல்நோய், சருமவியாதி இவைகளுக்கு தேய்த்தாலும் சரி அல்லது வெண்ணெய் அல்லது கெரோசின் எண்ணெய் (Kerosine)யுடன் சேர்த்து தடவினாலும் சரி குணமாகும். இதை உள்ளுக்குக் கொடுத்தால் வாயுவை கண்டிக்கும். பசியை உண்டாக்கும். ஒற்றைத் தலைவலி நரம்புவேதனை, சுரம் இவைகள் குணமாகும். அளவு:— ½ முதல் 2 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

ஒஜோனிக் ஈதர்:— (Ozonic Ether) உபயோகம்:—மது மூத்திர ரோகத்திற்கு இது வெகு நல்ல மருந்து. மதுமூத்திரத்திலுள்ள மதுவை எடுத்துவிடும் சக்தி இதற்கு உண்டு. அளவு:— ½ முதல் 1 திராம் கொடுக்கலாம்.

சந்தனத்தைலம்:— (Santali Oleum - ஸாண்டெலி ஓலம்) குணம்:— இது சந்தனக்கட்டையிலிருந்து எடுக்கப்படும் தைலம். வெகு வாசனையுடையது. செய்கை:— மூத்திரவர்த்தனகாரி, உஷ்ணகாரி. உபயோகம்:— வெள்ளைவிழுதல், உட்சூடு, ஸ்திரீகளுக்கு வெள்ளை விழுதல் இவைகளுக்கு 10 முதல் 20 துளி சீனியிலிட்டு கொடுக்கவும். தினம் 2-3 தடவை 3 நாள் கொடுக்க குணமாகும். சிலருக்கு 2 நாளுக்குள் குணங்கண்டதுண்டு.

பெப்ஸின்:— (Pepsin) குணம்:— ஆடு, பன்றி, பசு இவைகளின் இரைப்பையிலிருக்கிற சீதள் உள்ளுறைக் கூறையிலிருந்து எடுக்கப்படுகிற இந்த பதார்த்தம் வெண் மஞ்சள் நிறமாயும் கொஞ்சம் உப்பு கறித்துக் கொண்டிருக்கும். ஜலத்தில் அற்பமாய் கரையும். செய்கை:— சீர்ணகாரி, உபயோகம்:— இதை ஹைட்ரோகுளோரைட் ஆசிட் டைலுடேட் என்னும் திராவகத்துடன் (கறியுப்பு, திராவகத்துடன்) சேர்த்து ஜலதோஷம், வாந்தி, இரைப்பை எரிவு, குன்மம், மந்தாக்கினி, அஜீர்ணம், சீதபேதி, பாண்டு, ரத்தமில்லாமை இவைகளுக்கு உள்ளுக்குக் கொடுக்க தவறாமல் குணமாகும். அளவு:— 5 முதல் 10 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

*பெனாசிடின்:—* (Phenacetin) *குணம்:—* இது வெள்ளையாயும் மினுமினுப்புமாயிருக்கும். ஜலத்தில் கொஞ்சமாயும் வெந்நீரில் சீக்கிரமாயும் கரையும். *செய்கை:—* வேதனாசாந்தகாரி, சுரஹரகாரி, நரம்பின் சமனகாரி, *உபயோகம்:—* எல்லா சுரங்களுக்கும் கொடுக்க இது மகா நல்லமருந்து. தக்ஷணம் கண்டிக்கும். 8 கிறேன்ஸ் கொடுத்தால் உடம்பின் சீத உஷ்ணத்தை தணிக்கும். சன்னிபாத சுரத்துக்கு கொடுத்தால் தக்ஷணம் குணத்தைக் காட்டும். நுரையீரல் தாபம், இன்னும் இதர சுரத்தைப் பற்றிய வியாதிகளுக்கும் கொடுக்கலாம். இதைச் சாப்பிட்டால் குமட்டலை உண்டாக்காது. நரம்பு வேதனையின் குடைச்சலுக்கு 10 கிறேன்ஸ வீதம் கொடுக்கலாம். ஒற்றைத் தலைவலி, கீல்வாதம், பல்நோய், சந்துவாதம் இவைகளுக்கு கொடுக்க தகுதியான மருந்து. இதை Potash Bromide உடன் சேர்த்து கொடுக்க தக்ஷணம் தலைவலி நின்றுவிடும். சுரங்களுக்கு 8 முதல் 12 கிறேன்ஸ் வீதம் 3-4 மணிக்கு ஓர் தடவைக் கொடுக்கலாம். *அளவு:—* 5 முதல் 10 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

*போடோ பைலம்:—* (Podo Phyllum) *குணம்:—* இது ஓர் செடியின் வேர். இதன் உப்புக்கு போடோபைலின் (Podo phyllin) என்று பெயர். இது இருண்ட செங்கன்மங்கலான தூள். சாராயத்தில் கரையும். *செய்கை:—* விரேஷணகாரி. உபயோகம்: 1/8 முதல் 1/4 கிறேன்ஸ் வீதம் மாத்திரைகள் செய்து மலிபந்தம், எகுர்திகண்டரோகம், கீல்வாதம், மேகவியாதிகள், தலைநோய் இவைகளுக்கு கொடுக்க இது நல்லமருந்து, பெல்லடோனா (Belladona) பெப்ஸின் (Pepsin) இவைகளோடும் சேர்த்துக் கொடுக்கலாம். *அளவு:—* 1-2 கிறேன்ஸ் கொடுக்க பேதியாகும். பித்தநீரை கிரமப்படுத்தும். 1/12 முதல் 1/8 கிறேன் வீதம் தினம் 2-3 தடவை கொடுக்க நாள்ப்பட்ட வியாதிகள் குணமாகும்.

*ஸோடிஸாலிஸிலாஸ்:—* (Sodii Salicylas) இது தித்திப்பாயிருக்கும் ஆனால் ரமிக்காது. சலத்தில் கரையும். *செய்கை:—* சுரஹரகாரி, கர்ப்பவாத ஹரகாரி, ரத்தஸ்தம்பனகாரி, உஷ்ணசமனகாரி, அழுகுதலைத்தடுக்கும். *உபயோகம்:—* கீல்வாதம், நுரையீரல்தாபனம், சந்துவாதம், மதுமூத்திரம் இவைகளுக்கு கொடுக்க வெகுதக்க மருந்து. *அளவு:—* 10 முதல் 30 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

*ஸம்பல்:—* (Sumbul) *குணம்:—* இது ஓர் மரத்தின் வேர். *செய்கை:—* உச்சாககாரி, பலகாரி, உதரவாதஹரகாரி, அங்காகர்ஷணநாசகாரி. *உபயோகம்:—* சூதகசன்னி, நாட்பட்ட கபம், அபஸ்மாரரோகம், கிரகணி, திமிர்வாதம், சுவாசகாசம், ஸ்திரீயின் வெள்ளை விழுதல், பலஹீனம், சன்னி பாதசுரம், அதிசாரம், பாண்டு, சூதகவயிற்றுவலி, இவைகளுக்கு

இந்த மருந்து மகா சிரேஷ்டமானது. அளவு:— தூள் 10 முதல் 20 கிறேன்ஸ் அல்லது டிங்சர் ½ முதல் 1 திராம் கொடுக்கலாம்.

ஸல்பியுரேட்டெட் லைம்:— (Sulphurated Lime) குணம்:— இது வெண்மை அல்லது மஞ்சள் நிறமுள்ளது. உபயோகம்:— தேகத்தின் மேல் இதைத்தடவினால் ரோமங்களை நீக்கும். கட்டி, முகப்பரு, பிளவை, சொறி, சிரங்கு முதலியவைகளுக்கு மேலுக்குப் போடகுணமாகும்.

ஸாலிஸின்:— (Salisin) குணம்:— இது ஓர் மரத்தினின்று எடுக்கிற உப்பு, இது வெள்ளையாயும், வழவழப்பாயும், கசப்பாயுமிருக்கும். செய்கை:— சுரஹரகாரி, ஜாடராக்கினி வர்த்தனகாரி, பலகாரி, முறை வியாதி குணகாரி. உபயோகம்:— இது கீல்வாதத்திற்கு எடுத்த மருந்து ஜல தோஷத்துக்கு கொடுக்க தக்ஷணமே குணமறியலாம். அன்றியும் எல்லா சுரங்கள், மந்தாக்கினி, சீதபேதி இவைகளுக்கு கொடுக்க வெகு நல்லமருந்து. கடிகரப்பான் இவைகளுக்கு மேலுக்குப் போடலாம். அளவு:— 5 முதல் 20 கிறேன்ஸ் கொடுக்கலாம்.

லிகுவர் ஸோடியாகுளோரேடியம்:— (Liquor Sodae Chloralae) செய்கை:— உள்ளுக்குக்கொடுத்தால் உஷ்ணகாரி, தாருட்டியகாரி, மேலுக்கு உபயோகித்தால் உஷ்ணகாரி, ஸங்கோஷணகாரி, சூதநாசகாரி. உபயோகம்:— சன்னிபாதசுரம், விஷசுரம், ஸ்பொடக சுரங்கள் இவைகளுக்கு கொடுக்க இது நல்ல மருந்து. வாய்ரணம், ஈறுரணம், காதுரணம், காதிலிருந்து வடிகிற துர்க்கந்த நீர்கள், மேகசொறி, அழிரணம் இவைகளுக்கு இதை உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகித்தால் வெகு சீக்கிரத்தில் குணமாக்கும். முலைக்காம்பு ரணத்திற்கு போடலாம். அளவு:— 10 முதல் 30 துளி கொடுக்கலாம்.

லாக்டியூகா:— (Lactuca) குணம்:—இது ஓர்செடி. கசப்பாயிருக்கும். செய்கை:— அறிபநித்திராகாரி, மலகாரி, சமனகாரி, சுவேதகாரி, உபயோகம்:— பித்தக்கொதிப்பு, ரத்தக்கொதிப்பு, அதிதாகம், இரப்பை எரிவாயு இவைகளுக்கு கொடுக்க வெகுநல்லமருந்து, மகோதரம், நீர்க் கோவை இவைகளுக்கு சீமை நரிவெங்காயத்துடன் சேர்த்துக் கொடுக்க குணமாகும். அன்றியும் இம்மருந்தைச் சாப்பிட்டுவந்தால் வயிற்றி லுண்டாகும் உஷ்ணம் கபாலத்துக்கு ஏறாமல் தடுக்கும். மலத்தையிளக்கும். மூத்திரம் தாராளமாய் இறங்கும். நித்திரையை உண்டாக்கும். ரத்தத்தை சுத்திசெய்யும். சொப்பனஸ்கலிதத்திற்கும் கொடுக்கலாம். அளவு:— தூள் 10 முதல் 30 கிறேன்ஸ் அல்லது Extract (சத்து) 5 முதல் 15 கிறேன்ஸ் அல்லது டிங்சர் (Tincture) 20 முதல் 60 துளி கொடுக்கலாம்.

*பைலோகார்பின்யா நைட்ரேட்:—* (Pilocarpine nitrate) *குணம்:—* இது வெள்ளை நிறமுள்ளது. *செய்கை:—* சுவேதகாரி, திரவகாரி. *உபயோகம்:—* இது நீர்க்கோவை மூத்திரக்குண்டிக் காயதாபனம். தாகம், சுவாச காசம், கபம் இவைகளுக்குக் கொடுக்க நல்லமருந்து. கண் தாரையைச் சுருங்கச் செய்யவும், ரத்தம் வடிதலை நிறுத்தவும் உபயோகிக்கலாம். மதுமூத்திரரோகத்தின் தாகத்தை தணிக்க 1/20 கிறேன்ஸ் வீதம் கொடுக்கலாம். அன்றியும் காமாலை, மேகரோகத்தின் செவிட்டு, சூதக ஜன்னியின் பயித்தியம், ஈளை, கீல்வாதம், மாந்தம், பித்தரோகம் முதலியவைகளுக்குக் கொடுக்க இது தகுதியான மருந்து. சிசுக்களின் வாய், கண், ரெப்பை இவைகளின் வலிப்புக்கு 1/10 கிறேன்ஸ் 8 துளி ஜலத்தில் கரைத்து ஹைபாடர்மிக் சிரின்ஜீ (Hypodermic Syringe) என்னும் ஊசிபோல் முனையுள்ள பீச்சாங்குழலில் விட்டு சதையைக்குத்தி ரத்தத்திலே பிரவேசிக்கும்படி செய்யவேண்டியது. *அளவு:—* 1/20 முதல் ½ கிறேன் வீதம் கொடுக்கலாம்.

*பைலோகார்பின்யா ஹைட்ரோகுளொரிடம்:—* Pilocarpinae Hydrochloridum) *குணம்:—* இது நுட்பமான வெள்ளைக்கட்டிகள். ஜலத்தில் கரையும். *செய்கை:—* சுவேதகாரி, திரவகாரி, *உபயோகம்:—* முறைக்காய்ச்சல், மேகரணம், இவைகளுக்குக் கொடுக்கலாம். விக்கலுக்கு ¼ கிறேன் கொடுத்தால் உடனே நின்றுவிடும். இரவில்காணும் வியர்வையை நிறுத்தவும், நீர்க்கோவை, மதுமூத்திரம் முதலியவைகளை குணமாக்கவும் இதற்கு வெகு வல்லமை உண்டு. *அளவு:—* 1/20 முதல் ½ கிறேன் வீதம் கொடுக்கலாம்.

# குளோரோடைன் - Chlorodyne

## செய்யும் முறை

குளொரோபாரம் (Chloroform) 4 திராம், சல்பரிக்ஈதர் (Sulphric Ether) 90 மினிம்ஸ், பெப்பர்மெண்டுத் தயிலம் (Pepperment oil) 8 துளி, கஞ்சாசத்து (Resin of Indian Hemp) 6 கிறேன்ஸ், மொளகாய்த்தூள் (Capsicum) 2 கிறேன்ஸ் இவைகளைச் சேர்த்து பலதடவை குலுக்கி சில நாள் வைத்திருந்து, பிறகு அபினிஉப்பு (Muriate of Morphia) 16 கிறேன்ஸ் 2 திராம் ஜலத்தில் கலந்து கொஞ்சம்காய்ச்சினால் ஜலத்தோடு கரைந்துவிடும். குளிர்ந்தபிறகு இதை அத்துடன் சேர்த்து பிறகு ஸ்கில்ஸ் ஹைட்ரோசயானிக் அசிட் (Scheele's Hydrocyanic Acid) 65 மினிமும்,